உ

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

ஸ்ரீமான், ஆரணி-குப்புசாமி முதலியார்

அவர்களால் எழுதப்பெற்றது.

சென்னை:

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரவர்களால்

வெளியிடப்பெற்றது.

காபிரைட்] 1948 [விலை ரூ. 2-8-0

PRINTED AT THE
"ANANDA BODHINI PRESS"
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

உ

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கடவுள் வணக்கம்.

ஓதிடு மறைகள் நான்முகன் முதலோ
    ருணர்வதற் கரியனா யன்பர்
கோதிலா வுளத்தி லமர்ந்தருள் பொழியுங்
    குறைவிலாச் சச்சிதா னந்தத்
தாதையாய்த் தமராய்த் தண்ணருள் வெளியிற்
    சராசர மியாவையுங் காட்டி
யாதியு மீறுங் கடந்தவெம் பரம
    னடிமல ரகத்துள்வைத் துய்வாம்.

1-வது அத்தியாயம்.

பூவுலகின்கண் பலவகை யின்பங்களும் நிறைந்து செழிப்புற்று விளங்கும் இந்திரபுரியில் இப்போது நாம் கூறப்புகும் கதை நிகழ்கின்றது. அந்த நகரம் எல்லா விஷயங்களிலும் முதன்மை வாய்ந்தது. உலகிலுள்ள எல்லா ஜாதி மனிதர்களையும் அங்குக் காணலாம். மிக்க நாகரீகமுடையதாகவும், ஜனத்தொகையில் பெருத்ததாகவும், சாமார்த்தியத்தில், அதாவது பலவிதமான சாத்திர ஆராய்ச்சியில் சிறந்ததாகவும் பெருமைபெற்று விளங்கும். எந்த நகரத்திலும், நல்லது தீயது ஆகிய இரண்டிலும் அபூர்வமான பலவித நிகழ்ச்சிகளைக் காணலாம்.

அதுபோல் இந்திரபுரியில் சாத்திர விற்பன்னர்களையும், பண்டிதர்களையும், மிக்க யோக்கியர்களையும் காண்பதோடு மிக்க தந்திர சாமார்த்தியமுடைய கள்ளர்களையும், மனம் நடுங்கும் போக்கிரிகளையும் துஷ்டர்களையும் அயோக்கியர்களையும் காணலாம்.

அத்தகைய நகரில் போலீஸ் ஸ்டேஷன்கள் பல வுண்டு. அவற்றில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் எதிரில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று இருவர் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் நமது துப்பறியும் சிங்கமாகிய ஆனந்தசிங்கின் நண்பனும், துப்பறியும் திறமையில் அவனுக்கு இரண்டாவதாகப் பெயர் பெற்றவனுமாகிய ஜெயசிங் என்பவன்.

அவர்கள் அந்த ஸ்டேஷனைக் கடக்கும்போது ஒரு ஸ்திரீ அதிலிருந்து வெளிவருவதை ஜெயசிங் பார்த்தான். அவன் துப்பறிபவனாதலால் அம்மாதின் முகக் குறியைக் கண்டதும் "இவள் ஏதோ விசேஷ சங்கதிக்காகவே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருப்பாள்" என்று உணர்ந்து அவளை நெருங்கி மரியாதையோடும், அன்போடும் "என்ன அம்மா! ஏன் இங்கு வந்தாய்? உனக்கு வேண்டுவதென்ன?" என்று வினவினான்.

அம்மாது மிக்க எச்சரிக்கையோடு நாற்புறமும் பார்த்து, "எனக்கு வேண்டியது ஒரு சரியான துப்பறியும் ஆள்தான்; அதைப்பற்றி யொன்றும் கூற எனக்குப் பிரியமில்லை. கடந்த இரவு எங்கள் வீட்டிலிருந்து ஒரு பெண் காணமற் போய்விட்டாள்..." என்று கூறி அதற்குமேல் கூறமுடியாமல் தடுமாற்றமுற்றுப் பிறகு கடைசியில் அவளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு ஆள்வேண்டும்" என்றாள்.

ஜேயசிங்:—"ஒரு பெண்ணை காணமற் போய்விட்டாள்? எம்மாதிரிப் பெண்? எங்கள் வீட்டிலிருந்து என்று கூறினையே, யாருடைய வீடு?" என்று வினவினான்.

அம்மாது பதிலளிப்பதன்முன் அவனை யுற்றுநோக்கி, "நீ மிக்க வாலிபனாக விருக்கிறாய். உன்னிலும் சற்று விவகாரம் உணர்ந்தவர்களாக விருந்தால் அவர்களிடம் நான் எதையும் கூற அனுகூலமாகவிருக்கும்" என்றாள்.

அச்சமயம் தெய்வ சங்கல்பமாக ஆனந்தசிங்கே அவ்வழியாக வந்துகொண்டிருந்தான். ஜெயசிங் அவனைக் கண்டதும் மகிழ்ச்சியோடு கூப்பிட்டான். ஆனந்தசிங் சட்டென்று திரும்பித் தன் நண்பன் என்று கண்டதும் துரிதமாக அருகில் வந்து "என்ன? என்ன சங்கதி? இம்மாது யார்?" என்றான்.

அம்மாது ஆனந்தசிங்கைக் கண்டதும் என்ன காரணத்தாலோ அவனிடம் நம்பிக்கை கொண்டாள். ஆனந்தசிங்கைச் சற்று எட்ட அழைத்துச்சென்று குசுகுசு என்று என்னமோ கூறினாள். ஜெயசிங்கிக்கு அது கேட்கவில்லை. ஆனந்தசிங் முதலில் பாராமுகமாய்க் கேட்பவன்போல் காணப்பட்டான். பிறகு திடீலென்று அவன் தேகத்தில் ஒருவித அசைவு உண்டாயிற்று. அதனால் அவன் மனதில் விசேஷக்கிளர்ச்சியுண்டாயிருக்கிறதென்று ஜெயசிங்குக்கு ஏதோ அனுபவத்தால் புலப்பட்டது. "சரி ஆனந்தஸிங்கின் மனதிற்குப் பிடிப்பான ஏதோ விவகாரம் சிக்கியிருக்கிறது. இனி நாம் நழுவிவிடலாம்" என்று ஜெயசிங் எண்ணினான். அச்சமயம் ஸ்டேஷனிலிருந்து போலீஸ் மேல் அதிகாரி வெளியில் வந்து ஜெயசிங்கை விளித்து "ஆனந்தசிங் எங்கே? நான் அழைப்பதாக அவனிடம் கூறு" என்றார்.

அவர் கூறியது ஆனந்தசிங் செவியில் விழுந்தது. அவன் துரிதமாகத் திரும்பி ஸ்டேஷனுக்குள் செல்லும்

போது ஜெயசிங்கை நெருங்கி "நீ ஒரு ஆளை யிட்டுக் கொண்டு இம் மாதின் கூடச் சென்று விஷயங்களை ஆராய்ச்சி செய்; நான் வரவேண்டியது அவசியமாயின் எனக்குச் சொல்லியனுப்பு. நான் இன்னும் இரண்டுமணி நேரம் ஸ்டேஷனில்தா னிருப்பேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஜெயசிங்குக்கு இரண்டாம் முறை கட்டளையிடவேண்டிய அவசியமில்லை. அவன் நாகலிங்கம் என்ற போலீஸ் காரனை யழைத்துக்கொண்டு அம்மாதி னருகிற் சென்று "நீ யார் வீட்டிலிருந்து வந்தாய்? நான் உன் கூட வந்து விஷயங்களை ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்றான். அம்மாது "அவர் அவ்வாறு கூறினரோ" என்று போலீஸ் பிரதம அதிகாரியிடம் பேசிக்கொண்டிருக்கும் ஆனந்த சிங்கைச் சுட்டிக் காட்டிக்கொண்டே வினவினள்.

ஜெயசிங் ஆம் என்றதே அம்மாது "நான் இரண்டாந் தெருவில் ஆறுவது எண்ணுள்ள பூபாலம் பிள்ளையின் வீட்டிலிருந்து வந்தேன்" என்றாள். பூபாலப் பிள்ளை என்ற பிரசித்திபெற்ற பெயரைக் கேட்டதே, ஆனந்த சிங்குக் குண்டான மனக் கிளர்ச்சியின் காரணம் இன்ன தென்று ஜெயசிங்கிக்கு விளங்கிவிட்டது.

அம்மாது இரகசியமாகக் கூறத் தொடங்கி "அங்குள்ள ஒரு பெண், தையல் வேலை செய்துகொண்டிருந்தவள் அதிசயமான விதமாய்க் கடந்த இரவு காணமற் போய்விட்டாள். எனக்கு மிக்க பயங்கரமா யிருக்கிறது. அவள் தன் அறையிலிருந்து கொண்டுபோகப்பட்டிருக்கிறாள். ஆம் அவள் பலவந்தமாய்க் கொண்டுபோகப்பட்டிருக்கிறாள். அவள் சுயேச்சையாய்ச் சென்றவளே யல்ல. அவளைக் கண்டுபிடித்தே தீரவேண்டும். ஆம். நான் என் வயோதிக தசையின் ஆதாரவுக்காகச் சேமித்து வைத்திருக்

கும் காசெல்லாம் அதற்காகச் செலவழித்தாலும் சரி" என்று பிடிவாதத்தோடு மொழிந்தாள்,

அவள் முகத்திலுண்டான விகாரத்தாலும், அவள் காட்டிய அக்கரையாலும் ஜெயசிங் ஒருவிதச் சந்தேகங் கொண்டு "அந்தப் பெண் காணமற்போனதற்காக நீ இவ் வளவு வருத்தப்படுவதைப் பார்த்தால் அவள் உன் சுற்றத் தாளென்று கருதுகிறேன். என்ன உறவு ?" என்று வினவினான்.

அம்மாது "இல்லை. உறவு ஒன்றுமில்லை. ஆனால் மிக்க வேண்டிய சிநேகி. எனக்கு மிக்க அன்பானவள். அவளை யெப்படியேனும் கண்டுபிடித்தே தீரவேண்டும்" என்றாள்.

அதற்குள் அவர்கள் பூபாலம் பிள்ளை வசிக்கும் வீதி யில் நுழைந்தார்கள். "அப்போது இதைப்பற்றி யொரு வருக்கும் கூறலாகாது. நான் அவ்வாறு அவரிடம் கூறி னேன். அவர் இதை இரகசியமாய் வைத்திருப்பதாகக் கூறி னார். இக் காரியத்தை யொருவரு மறியாவண்ணம் நடத்த லாகுமல்லவா?" என்று அம்மாது இரகசியமாய்க் கூறினாள்.

ஜெயசிங் எக்காரியம் என்றதற்கு அவள், 'இப்பெண் ணைக் கண்டுபிடிப்பது' என்றாள். ஜெயஸிங் "இதைப்பற்றிய இன்னும் சில விஷயங்களை யறிந்தபின்பே அதைப் பற்றிக் கூறலாகும். அப் பெண்ணின் பெயரென்ன ? நீ என்ன காரணத்தால் அவள் வீட்டிலிருந்து தன் பிரியத்தால் செல்லவில்லை யென்றும், பலவந்தமாகக் கொண்டுபோகப் பட்டாளென்றும் கருதுகிறாய் ?" என்று வினவினான்.

அம்மாது "ஏன், எல்லாக் காரணங்களாலுந்தான். முதலாவது அவள் அம்மாதிரி நடக்கிறவளல்ல. அந்த அறையின் நிலைமையைநோக்க அப்படித்தான்தெரிகிறது- இல்லை இல்லை. அவர்களெல்லாம் சாளரத்தின் வழியாகவே

வெளிச் சென்றார்கள். பக்கத்து வாயிற்படி வழியாக வீதிக்குச் சென்றார்கள்" என்றாள். ஜெயசிங், "அவர்கள் என்றாயே யாரை?" யென்று கேட்டதற்கு, "அவள் யார் வந்து அவளைக் கொண்டுபோனார்களோ அவர்களைத்தான் கூறுகிறேன்" என்றாள்.

அம் மொழிகளைக் கேட்ட ஜெயசிங் 'பூ' என்றான். அம் மாது, "அவள் கொண்டுபோகப்பட்டாள் என்று நீ நம்பவில்லையோ" என்று கேட்டாள். அவன் "நீ சொன்ன மாதிரியே நடந்ததென்று நான் நம்பவில்லை" என்றான். அம்மாது போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் திக்கை நோக்கித் திரும்பி "அவர் சற்றேனும் சந்தேகங் கொண்டதாகக் காணப்படவில்லை" என்றாள்.

ஜெயசிங் நகைத்துக்கொண்டே "அவள் பலவந்தமாகக் கொண்டுபோகப்பட்டாளென்று நீ அவரிடம் கூறினாயோ?" என்று கேட்டான். அம்மாது "ஆம் கூறினேன். அவர், 'வெகுவாக அப்படியே யிருக்கலாம்' என்று கூறினார். அவர் கூறியது உண்மையே. ஏனெனில் அவள் அறையில் மனிதர் பேசும் சந்தடியை நான் கேட்டேன்" என்றாள்.

ஜெயசிங், எப்போதென்றான். அம் மாது "அப்போது இரவு பனிரண்டரை மணியிருக்கலாம். நான் நித்திரை செய்துகொண்டிருந்தேன். அவள் அறையில் குசுகுசுவென்று பேசிய சந்தடியால் நான் விழித்துக்கொண்டேன்" என்றாள்.

ஜெயசிங்:—"இரு இரு. அவளுடைய அறை யெங்கிருக்கிறது? உன்னறை யெங்கிருக்கிறது? அதைக் கூறு" என்றான்.

அம்மாது "அவள் அறை மூன்றாவது மாடியில் பின் பக்கம் இருக்கிறது. என் அறை அதே மாடியில் முன் பக்

கம் இருக்கிறது'' என்றாள். ஜெயசிங் "நீ யார்? பூபாலம் பிள்ளை வீட்டில் நீ என்னவேலை செய்கிறாய்? யாவும் கூறு'' என்றான். அம்மாது நான் அவ் வீட்டுக் காரியஸ்தியாயிருக்கிறேன்; பூபாலம் பிள்ளை பிரம்மச்சாரி'' என்றாள்.

ஜெயசிங் "இரவு நீ நித்திரை செய்யும்போது அப் பெண்ணினறையில் பேசும் சந்தடி கேட்டா விழித்துக் கொண்டாய்?'' என்றான்.

அம்மாது "ஆம் நான் முதலில் அச் சந்தடி அடுத்த வீட்டிலிருந்து வருகிறதென்று நினைத்தேன். அங்கிருந்து அவ்வாறு சத்தம் பல தடவைகளில் கேட்டிருக்கிறேன். ஆனால் சற்று நேரத்திற்குள் அவள் அறையிலிருந்தே அச் சத்தம் வருகிறதென்று தெரிந்தது. எனக்கு மிக்க வியப்பாய் விட்டது. அவள் மிக்க நல்லவள். இந்நகரில் உள்ள பெண்கள் எல்லாரைக் காட்டிலும் நல்லவள் என்று நான் கூறுவேன். பத்திரம்! நீங்கள் யாரேனும் அவளைப் பற்றி வேறு ஏதேனும் நினைக்கப் போகிறீர்கள்!...'' என்றாள்.

ஜெய்சிங்:—இல்லை யில்லை. நாங்கள் ஒன்றும் கூறவில்லை. அவள் பத்தரை மாற்றுத் தங்கம் என்று கருதுவோம். அப்புறம் கூறு.

அம்மாது:—"நான் என்ன கூறினேன்? ஆ! அவள் அறையில் சந்தடி கேட்டது. நான் மிக்க வியப்படைந்து துரிதமாகச் சென்று அவள் அறையின் வாயிற்படியருகில் நின்றேன். நான் என் கதவை ஆத்திரத்தோடு திறந்த சத்தம் அங்குக் கேட்டதுபோலிருக்கிறது. நான் அங்குச் சென்றபோது நிர்ச்சந்தடியாயிருந்தது. நான் சற்று நேரம் நின்று பிறகு கதவைத் திறக்க முயன்றேன். உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. கூப்பிட்டேன். பதிலில்லை. மறுபடி கூப்பிட்

டேன். அப்போதும் அவள் கதவருகில் வந்து அதைத் திறக்காமலே "என்ன அது?" என்றாள். நான் "இங்கு பேசும் சத்தம் கேட்டுப் பீதியடைந்து விட்டேன்" என்றேன். அவள் "பக்கத்து வீட்டிலுண்டான சந்தடியாகவிருக்கும்" என்றாள். நான் சரிதான் என்று கூறிவிட்டு என் அறைக்குத் திரும்பினேன்.

அதன் பிறகு எவ்விதச் சத்தமுமில்லை. ஆனால் காலையில் அவள் அறையைத் திறந்து பார்த்தபோது அவள் இல்லை. சாளரம் திறந்து கிடந்தது. சச்சரவும் போராட்டமும் நடந்த அடையாளங்கள் எங்குமிருந்தன. நான் தவறாகக் கருதவில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும். நான் இரவு அவள் அறையருகிற் சென்றபோது அங்கு மனிதர் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதும், அவர்கள் அவளைக் கொண்டுபோய் விட்டார்கள் என்பதும் உண்மை" என்றாள்.

ஜெயசிங் இவற்றைக் கேட்டபோது தன் வியப்பை யடக்க அவனால் முடியவில்லை. அவன், "அப்படியாயின் அவளைச் சாளரத்திலிருந்து கீழே போட்டுவிட்டார்களோ?" என்றான். தங்கம்மாள் என்ற அம்மாது "எங்கள் வீட்டின்கட்டிடம் வளர்த்தப்படுகிறது. கட்டிடவேலை நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக் கீழ்க்கட்டு வரையில் ஏணி நாட்டப்பட்டிருக்கிறது. அவ்வழியாய் அவர்கள் அவளைச் சுலபமாகக் கொண்டுபோகலாம்" என்றாள்.

ஜெயசிங் "அப்படியாயினும் அப் பெண் தன் மனச் சம்மதத்தோடேயே அவர்கள்கூடச் சென்றிருக்கவேண்டும்" என்றான். தங்கம்மாள், வீதியில் அவன் தோளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மிக்க மனத்துடிப்போடு "நான் கூறுவதை நீ நம்பமாட்டாயா? நான் கூறுகிறபடி

கள்ளரோ, யாரோ, அத் துஷ்டர்கள் அவளைக் கொண்டு போனது உண்மையாயின், அவள் ஒருபோதும் மனமொப்பிச் சென்றிருக்கவே மாட்டாள். அதனால் அவள் பிராண வேதனை யடைந்திருப்பாள். இதுவரையில் இறந்து போயிராவிடின் அதனால் அவள் இறந்தேபோவாள் என்பது நிச்சயம். நீ பேசுவது இன்னதென்று எனக்கு இப்போது விளங்கவில்லை. ஆம் நீ அவளை யொருபோதும் பார்த்ததில்லை" என்றாள்.

ஜெயசிங், அச்சமயம் தாங்கள் பேசுவதைக் கண்டு வீதியில்செல்லும் ஜனங்கள் தங்களை யுற்றுக்கவனிப்பதைக் கண்டு, அவளைத் துரிதமாய் நடத்திக்கொண்டே "அப் பெண் மிக்க அழகுவாய்ந்தவளோ?" என்று கேட்டான்.

தங்கம் அக் கேள்வியைக் கேட்டதே திடுக்கிட்டு விட்டாள். உடனே "எனக்குத் தெரியாது. சிலர் அவள் அழகுள்ளவள் என்று கருதாமலிருக்கலாகும். அது பார்ப்பவர்களுடைய மன நாட்டத்தைப் பொறுத்தது" என்றாள். அம்மொழிகளைக் கேட்டதே ஜெயசிங் மனதில் ஒருவித அபூர்வ உணர்ச்சி யுண்டாயிற்று. காரணம் அவனுக்கே புலப்படவில்லை. அவள் குரலும் அவள் மனதிற்குள் என்னவோ சிந்தித்துக்கொண்டே பேசுவதுபோன்ற தோற்றமும் அவன் மனதில் ஒருவிதச் சந்தேகத்தை யுண்டாக்கிவிட்டது. அதனால் அவன், "எப்படியாயினும் இவள் விஷயத்தில் சற்று கண்ணோக்கமும், எச்சரிக்கையும் வைத்துக்கொண்டேயிருக்கவேண்டு" மென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு மேலும் அவளை நோக்கி "இச்சங்கதியைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனுக்கு முதலில் நீ வந்து கூறும்படியான சந்தர்ப்பம் எப்படி நேர்ந்தது? பூபாலம் பிள்ளைக்கு இதைப்பற்றி யொன்றும் தெரியாதோ?" என்று கேட்டான்.

அவ்வாறு கேட்டதே அவள் முகம் சற்று கறுத்தது. அவளுடைய மாதிரியில் சற்று மாறுதலுண்டாயிற்று. அவள் "பூபாலம் பிள்ளைக்கு இது தெரியும். அவர் காலைப் போசனம் அருந்தும்போது நான் அவரிடம் இதைப்பற்றிக் கூறினேன். அவர் வேலைக்காரரைப் பற்றிய விஷயங்களில் சற்றும் சிரத்தை யெடுத்துக்கொள்வதில்லை. இத்தகைய விஷயங்களை யெல்லாம் அவர் என் பொறுப்பிலேயே விட்டுவிடுவது வழக்கம்" என்றாள்.

ஜெயசிங்:—அப்படியாயின் நீ போலீஸ் ஸ்டேஷனுக்குச் சங்கதியறிவித்தது அவருக்குத் தெரியாதோ?

தங்கம்மாள் பீதியோடு "இல்லை யில்லை. நீங்கள்மட்டும் தயவுசெய்து இதைப்பற்றி அவரிடம் கூறுமலிருக்க வேண்டும். அவர் அதை யறியவேண்டிய அவசியமில்லை. நான் உங்களைப் பின்பக்க வழியாக வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறேன். பூபாலம் பிள்ளை எந்த விஷயத்திலும் தலையிடும் சுபாவமுடையவரல்ல. மேலும்——" என்றாள்.

ஜெயசிங்:—காலையில் நீ இப்பெண் காணமற் போய்விட்டாள் என்று கூறியபோது பூபாலம் பிள்ளை யென்ன சொன்னர்? அவளுடைய பெயரென்ன?

தங்கம்மாள் :—"அவள் பெயர் இராஜாமணி. பூபாலம் பிள்ளை காலைப் போசனம் செய்துவிட்டு பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கையில் நான் இதைப் பற்றிக் கூறினேன். அவர் நிமிர்ந்து நோக்கி முகத்தைச் சுளித்துக்கொண்டு 'இத்தகைய விஷயங்களைப் பற்றி யெல்லாம் எனக்குத் தொந்தரை கொடாமல் நீ கவனித்துக்கொண்டு போகவேண்டும்' என்றார்" என்று மொழிந்தாள்.

ஜெயசிங், "அதோடு நீ அச்சங்கதியை விட்டு விட்டாயோ?" வென்று கேட்டான். தங்கம்மாள் "ஆமையா; அவரிடம் மறுபடி வார்த்தையாடுவதில் பயனில்லை" என்

றாள். ஜெயசிங், பூபாலப் பிள்ளையைப் பகிரங்க விடங்களில் பார்த்திருக்கிறவரையில் அவன் அதிகமாகப் பேசுகிறவனல்லவென்பது அவனுக்குத் தோன்றியது. இவர்கள் பூபாலப் பிள்ளை வசிக்கும் மாளிகையை நெருங்கியதே ஜெயசிங், தன் கூடவரும் நாகலிங்கத்தை அடுத்த வீட்டண்டை நிறுத்திவிட்டு ஆனந்தசிங் வரவேண்டியது அவசியமாயின் தான் சமிக்கை காட்டுவதாக அவனிடம் கூறி விட்டுத் தங்கம்மாளை நோக்கி "பூபாலப் பிள்ளைக்குத் தெரியாமல் என்னை யெப்படி உள்ளே அழைத்துச் செல்வாய்?" என்று கேட்டான்.

தங்கம்மாள் "ஐயா! தாங்கள் பேசாமல் பின்பக்கம் இருக்கும் படிகளிலேறி என் கூட வாருங்கள். அவர் அதைக் கவனிக்கமாட்டார், பார்த்தாலும் ஒன்றுங் கேட்கமாட்டார்" என்றாள். வீட்டின் பின்புறம் சென்றதும் தங்கம்மாள் தன்னிடமிருந்த ஒரு சாவியால் அங்கிருந்த கதவைத் திறந்து ஜெயசிங்கை, உள்ளே யழைத்துச் சென்றாள்.

2-வது அத்தியாயம்.

தங்கம்மாள் ஜெயசிங்கை யுடனே மூன்றாவது மாடியின் பின் அறைக்கு அழைத்துச் சென்றாள். அவ்வீடு உள்ளே அலங்கரிக்கப்பட்டிருக்கும் மாதிரியைக் கண்டு ஜெயசிங் வியப்படைந்தான். தன் தொழில் முறைமையில் அவன் அனேகம் செல்வவந்தரின் வீடுகளுக்குச் சென்று பார்த்திருக்கிறான். ஆனால் இந்தப் புராதனப் பெருமையுடைய வீட்டின் அலங்காரம்போல் கண்டதில்லை. ஆயினும் அவன் காணாமற்போன பெண் வசித்திருந்த அறைக்குள் சென்றதும் தன் தொழிலைத் தவிர மற்ற எல்லா விஷயங்களையும் மறந்துவிட்டான்.

இராஜாமணி என்ற பெண் போய் விட்டதைப் பற்றித் தங்கம்மாள் எப்படிக் கூறினாலும் அப்பெண் மறைந்து போய்விட்ட விஷயம் மட்டும் ஒரு விசேஷ சமாசாரமாகவே கருதப்படுமென்று ஜெயசிங்குக்குப் புலப்பட்டது. முதலில் அவன் அந்த அறையைக் கவனித்தான். அந்த அறை ஒரு சாதாரணமான தையல்காரி வசிக்கும் அறையாகப் புலப்படவில்லை. அறை மிக்கவிசால மாகவிருந்ததோடு சுவர்கள் முழுமையும் மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவற்றையும் அங்குள்ள சாமான்களையும் கண்ட ஜெயசிங் வியப்படைந்தான். அதைக் கண்ட தங்கம்மாள்,

"இந்த அறை யெப்போதும் தையல் வேலைக்கே யுபயோகிக்கப்பட்டு வந்தது. இராஜாமணி வந்தபோது நான் அவளுக்காக வேறொரு அறை ஆயத்தம்செய்வதைக் காட்டிலும் இதில் ஒரு படுக்கை மட்டும் அமைத்துவிட்டால் போதும் என்று கருதினேன். அவள் மிக்கநேர்த்தியான பெண்ணாதலின் இந்த அறையின் ஒழுங்கைக்கெடுக்கவில்லை" என்றாள்.

ஜெயசிங் யாவும்உற்று நோக்கினான். சில சிறுதொட்டிகளில் இரோஜாமலர்கள் வாடிக் கிடந்தன. ஒருபக்கம் மேஜைமேல் எழுது கருவிகளும், இரண்டு மூன்று புத்தகங்களும் இருந்தன. முக்கியமாக மூன்று விஷயங்கள் அவனுக்குப்புலப்பட்டன. முதலாவது, இரவு அப்பெண் படுக்கையில் சயனித்திருக்கவில்லை யென்று தெரிந்தது. இரண்டாவது, அங்கிருந்த திரைச்சீலை கிழிக்கப்பட்டிருந்தாலும், நாற்காலி கீழே கவிழ்க்கப்பட்டும், அதன் கால்களில் ஒன்று உடைக்கப்பட்டுமிருந்ததாலும், ஏதோ சச்சரவு நடந்ததென்று தெரிந்தது. மூன்றாவது அதிசயமான விஷயம்—அதாவது அறைக்குள் ளிருந்தவர்கள் அங்கிருக்

கும் சாளரத்தின் வழியாகவே வெளிச் சென்றார்கள் என்று தெரிந்தது.

ஜெயசிங் அவற்றை வெளியிட்டு "நீங்கள் காலையில் வந்து பார்த்தபோது அறை பூட்டப்பட்டிருந்ததோ?" என்று கேட்டதற்குத் தங்கம்மாள் "ஆம், என் அறையி லிருந்து இந்த அறைக்கு வரத் தாழ்வாரத்தின் ஓரமாய் ஒரு வழியிருக்கிறது. அவ்வழியாக நாங்கள் காலையில் வந்தபோது கதவின் பின் ஒரு நாற்காலி முட்டுவைக்கப் பட்டிருந்தது. ஆனால் கதவை நெக்கித் தள்ளியபோது அது சுலபமாக விழுந்துவிட்டது" என்றாள்.

அதன்பின் ஜெயசிங் சாளரத்தில் ஏறிப் பார்த்தான். அவ்வழியால் இரவில் சுலபமாகவே வெளிச் செல்லலா மென்பது விளங்கியது. ஏனெனில் புதிதாகக் கட்டப் பட்ட கட்டிடத்தின் மேல்கூரை சாளரத்தின் மட்டத்திற் குச் சரியாகவிருந்தது. அதன்மேலிறங்கிச் சென்று புதுக் கட்டிடத்தின் ஓரத்தில் நாட்டப்பட்டிருக்கும் ஏணி வழி யாக விறங்கி வீதிக்குச் செல்லலாம்.

தங்கம்மாள் "அவள் இச்சாளர வழியாகக் கொண்டு போகப்பட்டாளென்பதை நீ நம்பவில்லையோ?" என்றாள். ஜெயசிங் "இதைவிட மிக்க கஷ்டமான சங்கதிகள் நடந் திருக்கின்றன" என்று கூறிவிட்டுச்சாளரத்தின் வழியாய்க் கூரைமேல் இறங்கப்போனவன் திரும்பித் தங்கம்மாளை நோக்கி "அப் பெண்ணின் உடைகளில் எவையேனும் காணமற் போயினவோ?" என்று வினவினான்.

அம்மாது துரிதமாகச் சென்று அப் பெண்ணின் உடைகள் இருக்கும் அலமாரியைச் சோதித்துப் பார்த்து "ஒன்றும் போகவில்லை. மேல்போர்வை, ஒரு சட்டை... இன்னும்..." என்று தடுமாற்றத்தோடு நின்றாள். ஜெய

சிங், "இன்னும் என்ன?" வென்றான். அம்மாது "சில... சில சில்லறைச் சாமான்கள்" என்றாள்.

அதைக் கேட்டதே ஜெயஸிங் "சில்லறைச் சாமான்களை யெடுத்துச்செல்ல அவகாசம் இருந்தவரையில் அவள் தன் பிரியத்திற்கு அடியோடு மாறாகச் சென்றவளல்ல வென்றே கருதவேண்டும்" என்று கூறிவிட்டு வெறுப்போடு அந்த விவகாரத்தையே யடியோடு விட்டுவிட்டுச் செல்ல நினைத்தான். ஆனால் அச்சமயம் தங்கம்மாள் முகத்திலுண்டான ஒருவித மாறுதலால் நிதானித்தான். அவள் "எனக்கு அது விளங்கவில்லை. ஆயினும் அது விளங்கட்டும் விளங்காமற் போகட்டும். இந்த விஷயம் என்னமோ பிரமாதமானதே. அவளை யெப்படியேனும் கண்டுபிடித்தே தீரவேண்டும்" என்றாள்.

அவள் அவ்வளவு பிடிவாதமாய்க் கூறுவதன் காரணம் என்னவென்றறியவேண்டும் என்று ஜெயசிங் கருதி "அப் பெண் தன் பிரியப்படி சென்றவளாயின் அவளைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று, அவள் சுற்றமல்லாத நீ ஏன் கருதுகிறாய்? உனக்கு அவ்வளவு கவலை உண்டாவானேன்?" என்றான்.

தங்கம்மாள்:—"அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதால் நேரிடும் செலவையெல்லாம் நான் கொடுக்கிறேன் என்று கூறுவதுபோதாதா. இதற்குமேலும் அப்பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்குக் காரணம் வேறு கூறவேண்டுமா? அவள் மிக்க நல்லவள். அதனால் எனக்கு அவள்மேல் மிக்க ஆசையுண்டாயிற்று. அவள் பலவந்தமாகவே கொண்டுபோகப்பட் டிருக்கிறாள். அதனால் அவள்மிக்க மனவேதனையும் சொல்லொணு வியாகுலமுமே அடைந்திருப்பாள். இவை யாவும் நான் உணர்ந்திருப்பதால்தான் என்னிட

முள்ள பணம் முழுமையும் அவசிமாயின் இதற்காகச் செலவழித்து விடுகிறேன் என்று கூறுகிறேன்" என்றாள்.

ஜேயசிங்:—ஆயினும் தன் வீட்டிலிருந்த பெண் காணமற் போனவரையில் பூபாலப் பிள்ளை இவ் விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டியவரல்லவா?

தங்க:—அவர் வேலைக்காரர் விஷயத்தில் அக்கரை காட்டுவதே யில்லை யென்று முன்னமே கூறினேனே.

ஜேயசிங்:—நீ எவ்வளவு காலமாக இவ்வீட்டி லிருந்து வருகிறாய்?

தங்க:—நான் பூபாலப்பிள்ளையின் தந்தை காலத்திலிருந்தே இருக்கிறேன்.

ஜேய:—இந்த இராஜாமணி எவ்வளவு காலமாக இருக்கிறாள்.

தங்க:—சுமார் பதினொரு மாதங்களாக இருக்கிறாள்.

ஜேய:—தென்னாட்டாளா?

தங்க:—இல்லை, மேற்குத் தேசத்தவள். அய்யா! அவள் சாதாரணமான மற்ற பெண்களைப் போன்றவளல்ல.

ஜேய:—அதென்ன நீ கூறுவது? மற்ற பெண்களைப் போலல்ல வென்றால் அவள் எந்த விஷயத்தில் விசேஷமானவள்? கல்வி கற்றவளா? துரைசானி போன்றவளா? என்ன உன் அர்த்தம்?

தங்க:—"என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. கல்விகற்றவள் என்பது சரியே. துரைசானி என்றால் நீ கருதுகிறபடி தடபுடலான துரைசானியல்ல. ஆனால் எங்களுக்குத் தெரியாத அநேக விஷயங்கள் அவளுக்குத் தெரிந்திருக்கின்றன. எனக்குச் சரியாகக் கூறத் தெரியவில்லை. அவளையறிந்தபெண்களைக்

கேட்டால் கூறுவார்கள். வாசிப்பதில் அவளுக்கு மிக்க பிரியம்" என்றாள்.

ஜெயசிங் அவளை முன்னிலும் அதிகமாக உற்று நோக்கி, "இப் பெண்ணை நீ எங்கிருந்து அழைத்து வந்தாய்? இங்கு வருமுன் இவள் எங்கிருந்தாள்?" என்றான்.

தங்க:—எங்கிருந்தாளோ அது எனக்குத் தெரியாது. நான் அவளது முன் விஷயங்களைப் பற்றிக் கேட்கவேயில்லை. அவள் வேலைக்காக என்னிடம் வந்தாள். நல்ல பெண்ணென்று எனக்குப் புலப்பட்டதால் எவ்விதச் சிபாரிசுமின்றியே அவளை என்னிடம் வைத்துக் கொண்டேன்.

ஜெய:—நீ நம்பியபடியே அவள் திருப்தியாக வேலை செய்தாளோ?

தங்க:—ஆகா. பூரண திருப்தியாய்.

ஜெய:—அதிகமாக வெளியில் செல்வதுண்டோ? யாரேனும் சிநேகிதர் அதிகமாக வந்து அவளைக் கண்டு போவதுண்டோ?

தங்க:—"இல்லை. அவள் ஒருபோதும் வெளியில்சென்றதுமில்லை. ஒருவரேனும் அவளை வந்து கண்டு பேசியதுமில்லை" என்றாள்.

இம் மொழிகளைக் கேட்டதே ஜெயசிங் கலக்கமடைந்து விட்டான். ஏனெனில் இதுகாறும் அப் பெண் தனக்கு அறிமுகமான ஆசாமிகள்கூட வேணுமென்றே சென்றாள் எனக் கருதினன், இப்போது இங்கு ஒருவரும் அவளைக் காணவரவில்லை. அவளும் வெளியில் செல்லவில்லையென்று உணர்ந்ததே ஓகோ இதில் நாம் இன்னும் அறியாத மர்மம் ஏதோவிருக்கிறது என்று அவன் மனதிற் பட்டது. அதன்மேல் அவன் அம்மாளைநோக்கி "இதைப் பற்றி இன்னும் சம்பாஷணை யிப்போது வேண்டாம்.

நான் முன்னே இப் பெண் இச் சாளர வழியாகத் தனியே சென்றுளா, யார் கூடவேனும் சென்றுளா என்பதை அறியவேண்டும்," என்று கூறிவிட்டு உடனே சாளர வழியாய்க் கூரைமேல் சென்றான்.

ஜெயசிங் அவ்வாறு செல்லும்போது பின்வருமாறு தனக்குள் சிந்தித்துக்கொண்டே சென்றான்:

"இவ் விவகாரத்தில் ஆனந்தசிங்கைக் கட்டாயம் அழைக்கவேண்டிய அவசியமிருக்கிறதா? இதுவரையில், அப் பெண் ஒரு காதலன் உதவியோடேயே அல்லது வேறுவித உதவியோடே தன் பிரியப்படி எங்கோ ஓடி விட்டாள் என்பது மட்டும்தான் தெரிகிறது. அவளுக்குச் சொல்பக் கெடுதியேனும் சம்பவித்ததாகக் கருத எவ்வித அத்தாட்சியுமில்லை. ஆகையால் போலீஸ் துப்பறியும் இலாகா முழுமையும் கிளறிவிட வேண்டிய அவசியம் இதிலிருப்பதாகப் புலப்படவில்லை. மேலும் இன்னொரு விஷயம்; தங்கம்மாள் இதற்காக ஏதோ பணம் செலவு செய்யப்போகிறாள். அப் பணத்தை அனாவசியமாக ஏன் அதிகப் பங்குகள் போடவேண்டும். ஆயினும் ஆனந்தசிங் அலட்சியம் செய்யப்படக் கூடியவனல்ல. 'அவன் என்னை அழைக்க வேண்டியது அவசியமென்று புலப்பட்டால் நீ அழைத்துச் செல்லும் ஆளிடம் சொல்லியனுப்பு' என்று நம்மிடம் கூறியிருக்கிறான்," என்று இவ்வாறு சிந்தித்துக் கொண்டே கூரையின் ஓரத்தில் சென்றான்.

கூரையிலிருந்து கீழ் இறங்குவது கொஞ்சம் கஷ்டமே. ஆனால் இறங்கிவிட்டால் சுலபமாக வீதியில் நுழைந்து போய் விடலாம். ஒரு ஆடவன் அப்படிச் செய்யலாகும். ஆனால் ஒரு ஸ்திரீ அப்படிச் செய்வது கஷ்டம். இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே ஜெயசிங் அங்கிருந்து

திரும்பும்போது கூரைமேல் ஒன்று கண்டான். உடனே திடுக்கிட்டுக் கலவரத்தோடு நின்று உற்று நோக்கினான். கடைசியில் இது ஒரு கோர சம்பவமான விபரீதமாகவே முடியுமோ வென்று கருதினான். ஏனெனில் அவன் கூரை மேல் கண்டது தோய்ந்துபோன ஒரு பெருந்துளியான இரத்தம். பிறகு சாளரத்தை நெருங்க நெருங்கப் பல இரத்தத் துளிகள் காணப்பட்டன. சாளரத்தின்மேலேயே ஒரு துளி யிருந்தது. அதன் பிறகு பாய்ந்துபோய் அறையி லிருந்த ஜமக்காளத்தில் உற்று நோக்கினான். அங்கும் சில துளிகள் காணப்பட்டன.

ஜெயசிங் உற்றுப் பார்ப்பதைக் கண்ட தங்கம்மாள் "என்ன பார்க்கிறாய்?" என்றாள். ஜெயசிங், "இதென்ன பார்!" என்று அங்கிருந்த இரத்தத் துளிகளைக் காட்டினான். அவற்றைக் கண்டதே தங்கம்மாள் திடுக்கிட்டுப் பிரமித்து "ஓ இதென்ன? இரத்தம், இரத்தம். அந்தோ! அவர்கள் அவனைக் கொன்றுவிட்டார்கள். ஆம்......" என்று தேகம் நடுங்கிக்கொண்டே "இது அவன் இரத்தம் என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டாள். ஜெயசிங் அங்குக் கீழே ஒரு துளியல்ல, பலதுளிகள் விழுந்திருக்கும் இடத்தைக் காட்டி "எல்லா காரணங்களாலும் அவ்வாறே நினைக்கவேண்டி யிருக்கிறது," என்றான்.

அதைக் கேட்டதே அம்மாது மிக்க கலக்கமடைந்து, "இது நான் நினைத்ததைவிட விபரீதமாக விருக்கிறது. நீ என்ன செய்யப்போகிறாய்? நாம் இதற்காக என்ன செய்கிறது?" என்றாள்.

ஜெயஸிங்:—"நான் வேறொரு துப்பறியும் நிபுணரை வரவழைக்கப் போகிறேன்" என்று கூறிவிட்டுச் சாளரத்தினருகிற் சென்று நின்று "உடனே போய்

ஆனந்தஸிங்கை அழைத்துவா" என்று நாகலிங்கத்திற்குச் சமிக்ஞை செய்தான். அதைக் கண்ட தங்கம்மாள், "உன்னோடுகூட வந்தானோ அந்த ஆளா?" என்று கேட்டாள். ஜெயசிங் ஆம் என்று தலையசைத்தான்.

அதைக் கேட்டதே தங்கம்மாள் முகத்தில் ஒருவிதமான பிரகாசம் உண்டாயிற்று. "ஹா! மிக்க சந்தோஷம். அவர் வந்தால் ஏதேனும் செய்வார் என்பது நிச்சயம்" என்றாள்.

அவள் மொழிகளைக் கேட்ட ஜெயசிங் மனதில் சற்று வருத்தமே யுண்டாயிற்று. ஏனெனில் அவள் கூறிய மாதிரியால் "உன்னால் ஒன்றும் முடியாது," என்று தன்னை அகௌரவப்படுத்தியதுபோல் அவனுக்குப் புலப்பட்டது. அதன்பிறகு அவன் இன்னும் தனக்குப் புலப்படாத விஷயங்கள் எவையேனும் இருக்கின்றனவா என்று கவனிக்கத் தொடங்கினான். அப்படி அவனுக்கு முன்னமே புலப்படாதவை அதிகமாக ஒன்றுமில்லை. மறுபடி அவன் பார்த்தபோது, இராஜாமணியின் மேஜையில் கடிதங்கள் ஒன்றும் அகப்படவில்லை. எழுதாத சில கடிதங்களும், எழுது கருவிகளும் மசிப்புட்டி முதலியவைவும், சிதறிக் கிடக்கும் சில சொருகூசிகள் முதலியவைகளுமே இருந்தன.

ஆனால், நாகலிங்கம் சென்று ஆனந்தஸிங்கினிடம் சங்கதியைக் கூறியதே அவன் வந்தது முதல் விஷயங்களெல்லாம் வேறுவிதமாகத் திரும்பிவிட்டன. ஜெயசிங் நாகலிங்கத்தின்மூலம் சங்கதி அனுப்பிய அரைமணி நேரத்திற்குள் ஆனந்தஸிங் அங்கு வந்துவிட்டான்.

அந்தோ! வித்துவக்காய்ச்சல், வேசிக்காய்ச்சல், தொழிற்காய்ச்சல், யாவும் ஒன்றே. ஆனந்தஸிங்கினிடம் ஜெயசிங்குக்கு குருபக்தியிருந்தாலும், கௌரவப் பேயும்,

பணப்பேயும் யாரைவிட்டது? நித்தியா நித்திய விவேக முணர்ந்த ஞானியொருவன் தவிர மற்ற அனைவரும் அந்த மாயை மயக்கில் சிக்கியவர்களே. ஆகையால் ஆனந்த சிங்கே முடிவான சங்கதிகளைக் கண்டு பிடித்துவிட்டால் தங்கம்மாள் இதற்காகச் செலவழிப்பதாகக் கூறிய பண மனைத்தும் அவனே பெற்றுக்கொள்வானல்லவா என்று ஜெயசிங் மன முடைந்துவிட்டான். அதற்குத் தகுந்தாற் போல் ஆனந்தசிங் அங்கு வந்த நேரத்திற்குள் நடந்த விஷயங்கள் முழுமையும் மிக்க தெளிவாய்க் கிரகித்துக் கொண்டான்.

ஆனந்தசிங் யாவும் கேட்டுக்கொண்டதும் இராஜா மணியின் அறையில் அதிக நேரம் நிற்காமல் சட்டென்று கீழிறங்கி வந்து தங்கம்மாளை நோக்கி, "இருக்கட்டும்; அப் பெண் எப்படி யிருப்பவள்? அவள் உருவம், கூந்தல், நிறம், கண், முதலியவை இத்தகையதெனவென்னும் விவரங்களைப் பற்றிக் கூறு," என்று கேட்டான். ஜெயசிங் அவ் விவரங்களைப் பற்றி விசாரிக்கவில்லை யாதலின் அவன் ஒரு வார்த்தையும் கூற முடியவில்லை.

தங்க:—"எனக்கு....நான்....நான் அத்தகைய விஷயங்களைப் பற்றிக் கூறமுடியாது. ஒருவரைப் பார்த்துக் கவனித்து அடையாளங்களை அறிந்து கொள்ளும் சக்தி எனக்கில்லை. அதற்காக இங்கிருக்கும் இன்னொரு பெண்ணைக் கூப்பிட்டு வருகிறேன்," என்று கூறி ஆனந்தசிங்காவது ஜெயசிங்காவது ஏதேனும் கூறு முன் துரிதமாகச் சென்றாள்.

ஆனந்தசிங் அங்கிருந்த ஒரு புஷ்பத் தொட்டியின் அருகிற் சென்று அதை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். சற்று நேரத்திற்குள் தங்கம்மாள் சுறுசுறுப்பான தோற்ற மும், பிரகாசம் பொருந்திய முகமுமுடைய ஒரு பெண்ணை

அழைத்துக்கொண்டு வந்து, "இவள் பொன்னம்மாள். இராஜாமணிக்குப் போஜனம் வட்டிப்பவள் இவள்தான். ஆகையால் அவளைப் பற்றி இவளுக்குத்தான் நன்முகத் தெரியும்," என்று கூறிவிட்டு ஆனந்தசிங்குக்கு இரகசியமாகச் சமிக்கைசெய்து "தங்கள் சகோதரர் புதல்வியைக் கேனும் போய் வேலைக்கு அமர்வதாகக் கூறிக் கொஞ்ச காலத்திற்குமுன் வீட்டிலிருந்து ஓடிவந்து விட்டாளாதலால் அவளைத் தாங்கள் தேடிக்கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற சங்கதியை இவளிடம் கூறித்தான் இவளை அழைத்து வந்தேன்," என்றான்.

ஆனந்தசிங் சங்கதியின் போக்கை அறிந்துகொண்டு "சரிதான் நீ இக்கன்னிகையிடம் இச்சங்கதியைக் கூறி அழைத்து வந்தது நல்லதாயிற்று. இன்றேல் நான் அதை எல்லாம் கூறிக்கொண்டிருக்கவேண்டும்," என்று இயம்பி விட்டு, அப்பெண்ணை நோக்கி "ஏனம்மா! இராஜாமணி என்பவள் எப்படி இருப்பாள்," என்று தான் முன்பு தங்கம்மாளைக் கேட்ட கேள்விகளையே கேட்டான்.

பொன்னம்மாள் என்ற அப்பெண் "ஓ! இராஜாமணி மிக்க அழகு வாய்ந்தவள். அவள் கூந்தல் மேகத்திலும் கருமை வாய்ந்தது. அவள் கண்கள் அதனிலும் கருமை வாய்ந்தவை. ஆனால் அவள் தேகம் மெலிந்த தேகம்?" என்று கூறிக்கொண்டே தன் தேகத்தை நோக்கினாள்.

ஆனந்தசிங் தங்கம்மாளை நோக்கி, "இது சரிதானா?" என்றான். அவள் "ஆம் ஆம். இராஜாமணியின் தேகம் சதைப்பற்றுடையதல்ல. நான் அதைக் கவனித்திருக்கிறேன்," என்று கூறிவிட்டு எதற்காகவோ திடுக்கிட்டவள் போல் சாக்கிரதையடைந்து பொன்னம்மாளை நோக்கி "நீ போகலாம்," என்று சமிக்கை செய்தாள்.

ஆனால் ஆனந்தசிங் தன் சுபாவம்போல் அன்பான மாதிரியாய்ப் பொன்னம்மாளை நோக்கி இனிய மொழிகளால் "சற்று இரு அம்மா! இராஜாமணியின் கண்களும் கறுப்பாக விருக்கின்றன என்று கூறினையல்லவா? அவை உன் கூந்தலைவிடக் கருமையா?" என்று வினவினான்

பொன்னம்மாள்:—"ஆம். ஆம். என் கூந்தலைவிட கறுப்பே" என்றாள்.

ஆனந்தசிங் "ஏதோ உன் கூந்தலைப் பார்ப்போம்," என்று பார்த்துவிட்டு "மிக்க அழகாயிருக்கிறது என்று கூறித் தங்கம்மாளை நோக்கி "ஏனம்மா! உன்னிடம் வேறு பெண்கள் இருக்கிறார்களோ?" என்று கேட்டான்.

தங்கம்மாள், "இரண்டு பேர் இருக்கிறார்கள்," என்றாள். ஆனந்தசிங் அவர்கள் நிறம் எப்படி என்றதற்கு அவள், "அவர்களும் ஏறக்குறையப் பொன்னம்மாள் நிறம் போன்றவர்களே," என்றாள். அம்மொழிகளைக் கேட்ட பின் ஆனந்தசிங் தன் கரத்தைத் தன் மார்பின் மேல் வைத்துத் தடவினான். அவன் இயற்கை நடக்கைகளை உணர்ந்த ஜெயசிங் அவனுக்குத் தன் ஆராய்ச்சியில் ஏதோ திருப்தி உண்டாயிருக்கிறதென்று உணர்ந்தான்.

ஆனந்தசிங் "சரி, இனி வெளிக் கூடத்திற்குச் செல்வோம்," என்றான். மறு விநாடி கதவு திறக்கப்பட்டதும் ஒரு மனிதன் உள்ளே வந்தான்.

3-வது அத்தியாயம்

ஜெயசிங் அறைக்குள் வந்த மனிதனைக் கண்டதும் அவன்தான் வீட்டின் எஜமானனாகிய பூபாலப் பிள்ளை என்று தெரிந்துகொண்டான். பூபாலப் பிள்ளை வெளியில் செல்லப் புறப்பட்டவன்போல் உடை

அணிந்துகொண்டு தன் தலையணியைக் கரத்தில் பிடித்துக் கொண்டு அங்கு வந்தான். அவனைக்கண்டதே இவர்கள் மௌனமாக இருந்தார்கள். தங்கம்மாள் மட்டும் மிக்க குழப்பமடைந்தவளாகக் காணப்பட்டாள்.

பூபாலப் பிள்ளை சற்று கம்பீரமான தோற்றமும், பெருமையும், அடக்கமும் உடையவன். அவன் முகத்தில் உண்டான ஒருவித அருவருப்பான குறியைக்கண்ட ஜெய சிங், "நாம் இங்கு வந்தது இவனுக்குப் பிடிக்கவில்லை," என்றுணர்ந்து சற்று பின்னடைந்து நின்றான். ஆனால் ஆனந்தசிங்கோ முன்னுக்குச் சென்று, "பூபாலப் பிள்ளை அவர்கள் என்று கருதுகிறேன்," என்றான்.

பூபாலப் பிள்ளை கனவிலிருந்து விழித்துக் கொண்ட வன்போல் திடுக்கிட்டு ஆனந்தசிங்கின் புன்னகை பொருந் திய வதனத்தை நோக்கிப் பொறுமையோடு தலை அசைத் தான். ஆனந்தசிங் மிக்க மரியாதையோடு "நான் துப்ப றியும் இலாகாவைச் சேர்ந்தவன். என் பெயர் ஆனந்தசிங் என்று பலர் கூறுவார்கள். கடந்த இரவு தங்கள் வீட்டி லிருந்து ஒருபெண் மிக்க அபூர்வமான விதமாகக் காணமற் போனதாய் எங்களுக்குச் சமாசாரம் எட்டியது. அதற் காக நானும் என் ஆட்களில் ஒருவராகிய இவரும் இதைக் கவனிக்க இங்கு வந்தோம். இனி இதைப் பற்றித் தங்கள் பிரியத்தை எதிர் பார்க்கிறேன்," என்றான். பூபாலப் பிள்ளை வெறுப்புடையவன்போல் முகத்தைச் சுளித்துக் கொண்டு சுற்றிப் பார்த்து, தங்கம்மாளை உற்று நோக்கி, "இது அப்படிப்பட்ட பிரமாதமான விவகாரமென்று நீ கருதுகிறாயா?" என்று கேட்டான். தங்கம்மாள் பேச முடியாமல் ஆம் என்று தலையசைத்தாள்.

பூபாலப்பிள்ளை ஏதோ சந்தேகமுடையவன்போல் தங்கம்மாளைச் சற்று உற்று நோக்கி, "இத்தகையப் பிர

மாதமான விவகாரங்கள் அவசியமென்று நான் நினைக்க வில்லை. அப்பெண் சந்தேகமின்றித் திரும்பி வந்து விடுவாள். அப்படி வராவிட்டால்....'! என்று தன் விரற்சட்டையைக் கழற்றத் தொடங்கினான்.

ஆனந்தசிங் அவ்விரற் சட்டைகளைக் கடைக்கண்ணால் குறிப்பாக நோக்கிக்கொண்டே "இதில் கஷ்டமென்னவெனில் அப்பெண் தனியாய்ப்போகவில்லை. முன்னாடியே உமது வீட்டிற்குள் நுழைந்த சிலர் உதவியாலோ அல்லது அவர்களால் பலவந்தமாகவோ கொண்டுபோகப்பட்டிருக்கிறாள்," என்றான்.

பூபாலப் பிள்ளை இப்போதும் அவ்விஷயத்தில் ஒரு சிரத்தையும் காட்டாமலே, "இது அதிசயமான சந்தர்ப்பமே. நீ கூறுவது உனக்கு நிச்சயமென்று தோன்றினால் அதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிக்கவேண்டியதே. துன்பமடைந்தவர்கள் விஷயத்தில் நீதி நடப்பதற்கு நான் தடை செய்யமாட்டேன். ஆனால்..." என்று தோட்களை அசைத்தான். அச்செய்கை பாராமுகம் அல்லது சந்தேகத்தைக் காட்டியது.

தங்கம்மாள் நடுக்கத்தோடு ஒரு அடி முன் வந்தாள். ஜெயசிங் அவள் ஏதோ கூறப்போகிறாள் என்று கருதினான். ஆனால் அவள் மறுபடி தடுமாற்றத்தோடு பின்னிடைந்து விட்டாள். ஆனந்தசிங் அதைக் கவனிக்கவில்லை. அவன் பூபாலப் பிள்ளையை நோக்கி "அய்யா! தாங்கள் என்னோடு மேல்மாடியிலுள்ள அப்பெண்ணினறைக்கு வந்தால் நான் கூறியவை வெறும் உத்தேசமல்ல என்பதற்குச் சில அத்தாட்சிகளை நான் காட்டுகிறேன்," என்றான்.

பூபாலப்பிள்ளை "ஒரு க்ஷணமும் காணமலே நீ கூறுவதை நம்பிக்கொள்ள நான் ஆயத்தமாக விருக்கிறேன். ஆயினும் திடுக்கிடத் தக்க விஷயம் ஏதேனும் காணக்

கூடியதா யிருந்தால் உடனே உன்னிருப்பின்படிச் செய்ய வேண்டியதே," என்று கூறிவிட்டுத் தங்கம்மாளை நோக்கி "ஏனம்மா! அப்பெண் இருந்த அறை எது?" என்றான்.

தங்கம்மாள் "அப்பெண்ணுக்குமூன்றாவது மாடியின் பின் பக்கமிருக்கும் அறையை நான் விட்டிருந்தேன். அது பெரிய அறை. அதில் நல்ல வெளிச்சமிருந்தது. அது தையல் வேலைக்குச் சரியான விடம். அப்பெண்ணும் மிக்க காணயமானவள்...." என்றதே,

பூபாலப் பிள்ளை இத் தகவல்களெல்லாம் அனாவசியம் என்று கூறுபவன் போல் கை யசைத்துவிட்டு வழி காட்டு என்று படிகளிலேறினான். உடனே தங்கம்மாள் மனதில் ஒருவிதப் பீதி உண்டாய்விட்டது. அவள் "அய்யா! தாங்கள் மேலேறிச் செல்லும் அளவு கஷ்டமெடுத்துக்கொள்ள வேண்டியது அனாவசியமென்று நினைக்கிறேன்," என்று கூறிவிட்டு ஆனந்தசிங்கை நோக்கி,

"அந்தத் திரை கிழிக்கப்பட்டிருப்பதையும், நாற்காலி கவிழ்க்கப்பட்டிருந்ததையும், சாளரம் திறக்கப்பட்டிருந்ததையும் கூறினார்—" என்றாள். அதற்கு ஆனந்தசிங் பூபாலப் பிள்ளையை யழைத்துக்கொண்டு துரிதமாகப் படிகளிலேறிச் சென்றான். தங்கம்மாள் செய்த ஆக்ஷேபனை கட்டாயம் பூபாலப் பிள்ளையை அழைத்துச்சென்று காட்டவே வேண்டும் என்ற தீர்மானத்தை அவன் மனதிலுண்டாக்கி விட்டது. ஏனெனில் நாமறியாத ஏதோ மர்மம் இதிலிருக்கிறதென்று அவன் மனதிற்குப் புலப்பட்டது.

தங்கம்மாள் அடக்கமுடியாத மனக் கலக்கத்தால் ஜெயசிங் இருப்பதையும் மறந்து "அய்யோ தெய்வமே! இப்படி நேரிடுமென்று யார் எண்ணினார்கள்," என்று தனக்குத்தானே கூறிக்கொண்டுஜெயசிங்கத்தைத் தாண்டித் துரிதமாய் மேலே சென்றாள்; ஜெயசிங்கும் துரித

மாய்ச் சென்றான். அவன் அப்பெண்ணிருந்த அறைக்குள் நுழைந்தபோது பூபாலப்பிள்ளை அறையின் மத்தியில் நின்றுகொண்டிருக்கிறான். தங்கம்மாள் ஒரு பிரம்மாண்டமான பயங்கர உருவத்தைக் கண்டவள்போல் அவனை மிரட்சியோடு நோக்கிக்கொண்டு அறையின் ஒரு மூலையில் நின்றுகொண் டிருக்கிறாள். ஆனந்தசிங் சுறுசுறுப்போடு தான் கண்டுபிடித்த விஷயங்களை ஒவ்வொன்றாகக் காட்டிக் கொண்டிருக்கிறான்.

ஆனந்தசிங் "இதோ பார்த்தீரா, அவள் பலவந்தமாகக்கொண்டு போகப்பட்டிருக்கிறாள் என்று நன்றாகத் தெரிகிறது. தன் உடைகளை யெடுத்துக்கொண்டு போகக் கூட அவளுக்கு அவகாச மிருந்திருக்கவில்லை," என்று கூறிக்கொண்டே சட்டென்று திரும்பி அங்கிருந்த ஒரு பீரோவின் ஒரு அறையை வெளியில் இழுத்தான். உடனே படபடப்பான ஒரு சத்தம் கிளம்பியதும் தங்கம்மாள் பாய்ந்து வந்து ஆனந்தசிங்குக்கும் அந்தப் பீரோவுக்கும் இடையில் நின்றுகொண்டு "நீங்கள் பெரிய மனிதர்கள்; அப்பெண் நாணயமானவள். அப்படிப்பட்டவள் தான் அணியும் உடைகள் அன்னியர் கண்கள் முன் சோதனைக்குக் காட்டப்படுவதை விரும்புவாளா என்று சிந்தித்துப் பாருங்கள்," என்றாள்.

ஆனந்தசிங் துரிதமாய்ப் பீரோவின் அறையை மூடிவிட்டு, "அம்மா! தொழில் முறையில் உண்டான கடின சித்தத்தால் அவசரப்பட்டு நான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் நீ கூறுவது நியாயமே,' என்றான்.' ஜெயசிங்குக்கு மட்டும் ஆனந்தசிங்கின் நடக்கையில் ஏதோ தந்திர சாமர்த்தியம் இருக்கிறதென்று மனதிற்பட்டது. தங்கம்மாள் பீரோவின் அருகில் சென்று அதன்மேல் சாய்ந்துகொண்டு பூபாலப் பிள்ளையின் மேலேயே கண்

ஞேக்கம் வைத்திருந்தாள். அவளுடைய பார்வையால் அவள் ஆனந்தசிங்குக்காக பயப்படாதவள் போலவும், பூபாலப்பிள்ளையின் அத்துமீறிய நடக்கையையே அஞ்சுகிற வள் போலவும் புலப்பட்டாள்.

பூபாலப்பிள்ளை ஆனந்தசிங்கை நோக்கி "நான் காணக்கூடியவை இவ்வளவேயாயின் இனிநான் என் காரியத்தைப் போய்ப் பார்க்கலாம் என்று கருதுகிறேன். இவ் விஷயம் நான் கருதியதைக் காட்டிலும்விபரீதமாகவே தோற்றுகிறது. இதைப்பற்றி உடனே விவகாரம் நடத்த வேண்டியது அவசியமென்று உனக்குத் தோன்றினல் தடையின்றிச் செய்யலாம். நான் சாதாரணமாய் எப்போதும் வெளிப்பிரஸ்தாபங்களில் சிக்காமல் அடக்கமாகவே யிருப்பவன் என்பதைப்பற்றி நீ கவனிக்கவேண்டாம். உன் தொழிலின் கடமையை நீ செய். இந்த வீட்டைப் பற்றிய விஷயத்தில் இதை உன் சொந்த வீடாக எண்ணிக்கொள். தங்கம்மாள் உனக்கு வேண்டிய அனுகூலங்களை யெல்லாம் செய்வாள்," என்று கூறிவிட்டு உடனே தன் அறைக்குச் சென்றுள்.

பூபாலப்பிள்ளை சென்றதே தங்கம்மாள் பெருமூச்சு விட்டுப் பீரோவையும் விட்டு அப்புறம் வந்தாள். மறு விநாடி ஆனந்த சிங் குனிந்து தான் முன்பு மூடிய பீரோவின் அறையைத் திறந்தான். அந்த அறையின்மேல் ஒரு வெள்ளைக்குட்டை முழுமையும் விரிக்கப்பட் டிருந்தது. அதன் கீழ் விலையுயர்ந்த சரிகை யிழைக்கப்பட்ட ஒரு கழுத்துப் பட்டை இருந்தது. அதோடு மிக்க சாக்கிரதையாய் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு நீலப்பட்டுடை இருந்தது. அதில் நாணயமாய்ச் செய்யப்பட்ட ஒரு பொன் ஊசி சொருகப்பட்டிருந்தது. உதிர்ந்துபோன ஒரு இரோஜா மலர்ச்செண்டும் அதிலிருந்தது.

இவற்றைக் கண்டதே ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் வியப்படைந்து பின்னிடைந்து நின்றார்கள். யாவும் பார்த்துக்கொண்டிருந்த தங்கம்மாள், பூபாலப்பிள்ளை யிருக்கும்போது இருந்த கலவரமனைத்தும் போய் மிக்க நிதானத்தோடு "இவற்றைப்பற்றி நன்குஒருவிவரமும்கூறமுடியாது. இவை விலைமதிப்புள்ளவைகளாகவிருப்பினும் உண்மையில் யாவும் அப்பெண்ணின் சொந்தமே. அவள் வரும்போது இவற்றைக் கொண்டுவந்தாள். இவற்றால் நான் முன்னே கூறியபடி அவள் சாதாரணமான ஒரு தையல் தைக்கும் பெண்ணல்லவென்பதும், ஆனால் முன்பு நல்ல நிலைமையில் இருந்தவளென்பதும் நிச்சயம் என்று தெரிகின்றன." என்றாள்.

ஆனந்த சிங் இந்த உடுப்பு முதலியவற்றை மறுபடி உற்றுப்பார்த்துவிட்டு, சாக்கிரதையாய் அவற்றை அறையில் வைத்து மெதுவாக மூடிவிட்டான். இரண்டொரு நிமிடங்கள் கழித்து ஜெயசிங் பார்த்தபோது ஆனந்தசிங்கைக் காணோம். அவன் எத்திக்கில் எப்போது சென்றான் என்பது ஜெயசிங்குக்காவது தங்கம்மாளுக்காவது தெரியாது. அவர்கள் சற்றுநேரம் வரையில் அவனுக்காக எதிர்பார்த்துக்கொண்டு அங்கேயே சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஜெயசிங் கீழிறங்கி வந்தபோது ஆனந்தசிங் பூபாலப்பிள்ளையின் படுக்கை அறையிலிருந்து பூனைபோல் வெளியில் வருவதைக் கண்டான். ஆனந்தசிங் புன்னகையோடு தன்னை நோக்கி வருவதைக்கண்ட ஜெயசிங், இவன் முகத்திலுண்டாயிருந்த குறியால், அவனுக்குத் திருப்தியை அளிக்கத்தக்க அளவு எதுவோ அகப்பட்டிருக்கிறது என்று உணர்ந்தான்.

ஆனந்தசிங் குசுகுசுவென்று "மிக்க நேர்த்தியான அழகு வாய்ந்த அறை. அதைச் சோதிக்க உனக்கு அவ

காசமில்லாதது விசனிக்கத்தக்கதே," என்றான். ஜெயசிங் "எனக்கு அவகாசமில்லையென்று உண்மையாய் நினைக்கிறாயா?" என்றான். அச்சமயம் தன் பின்னால் வரும் தங்கம்மாள் சமீபத்தில் வருவதையறிந்து ஆனந்தசிங்கின் சமீபத்தில் சென்று நின்றான். ஆனந்தசிங் மெய்யாகவே உனக்கவகாசமில்லை என்றான். இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டே இருவரும் சமீபத்திலிருந்த முற்றத்தில் போய் நின்றார்கள்.

ஆனந்தசிங் கூறிய மாதிரியால் ஜெயசிங் மனதிலுண்டான ஆவல் அடக்கமுடியாததாய்விட்டது. ஆனந்தசிங் கீழேயிருக்கும் வேலைக்காரப் பெண்களிடம் சம்பாஷித்துக் கொண்டே, இன்னொருவர் ஒரு நாள் முழுமையும் பேசினாலும் அறிந்துகொள்ள முடியாத அவ்வளவு சங்கதிகளைச் சொற்ப காலத்தில் அறிந்துகொண்டான். அச்சமயம் பார்த்து ஜெயசிங் பூபாலப் பிள்ளையின் அறைக்குள் சென்றான்.

ஜெயசிங் அந்த அறை மிக்க அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்குமென்று கருதினான். ஆனால் அதன் நிலைமையைக் கண்டபோது அவனுக்குண்டான வியப்பிற்கு ஓர் எல்லையில்லை. ஏனெனில் அது ஒரு வாசிக்கும் அறை அல்லது புத்தகசாலைபோலிருந்தது. அந்த அறையில் கீழே சரியான கம்பளம்கூட இல்லை. ஒரு பழைய ஜமுக்காளம் மட்டுமே இருந்தது. அதுவும் அறையின் மத்தியிலாவது நெகிடித் தியருகிலாவது இல்லை. அறையின் ஓர் ஓரத்தில் மட்டுமே இருந்தது. ஆனால் அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓர் படத்தின் எதிரில் இருந்தது.

ஜெயசிங் அப்படத்தை உற்று நோக்கினான். அது ஒரு ஸ்திரீயின் படம். அதன் முகத்தில் விளங்கிய குணங்களை

உற்று நோக்கியபோது அது பூபாலப் பிள்ளையின் சகோதரி யாயிருக்குமென்று அவனுக்குத் தோன்றியது. ஜெயசிங் அப்படத்திலிருந்த உருவத்தைச் சரியாகப் பார்த்துக் கொண்டே இருக்கையில் தங்கம்மாள் சிவந்த முகத்தோடு அருகில் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

அம்மாது "இது பூபாலம் பிள்ளையின் இரகசிய அறை. இதற்குள் நான் தவிர வேறு ஒருவருமே உள்ளே வரலாகாது. எந்த வேலைக்காரரும்கூட," என்றாள்.

ஜெயசிங் இந்த அறையில் ஆனந்தசிங்கின் மனதிற்குத் திருப்தியை உண்டாக்கியது எது என்று ஆவலோடு பார்த்துக்கொண்டே "ஆ! மன்னிக்கவேண்டும். கதவின் சந்தில் இப்படத்தைக் கண்டு இதன் அழகைச் சரியாகப் பார்க்கலாமென்றுக் கருதி உள்ளே வந்தேன். இது பூபாலப் பிள்ளையின் சகோதரி என்று கருதுகிறேன்," என்றான். தங்கம்மாள், "அல்ல. அவருடைய சகோதரன் மகள்," என்று கூறிவிட்டுக் கதவை மூடிக்கொண்டாள். அந்த விஷயத்தில் ஜெயசிங் தானே உளவு கண்டறிய முயன்றது அதுதான் கடைசி.

இரண்டொரு நிமிடங்களில் ஆனந்தசிங் தாழ்வாரத்திற்கு வந்து இவர்களைச் சந்தித்தான். உடனே ஆனந்தசிங்குக்கும் தங்கம்மாளுக்கும் சம்பாஷணை தொடங்கியது. ஜெயசிங் அதை மிக்க உன்னிப்பாய்க் கவனித்தான்.

ஆனந்தசிங் தங்கம்மாளை நோக்கி "நீ இந்தப்பெண்ணை எப்படியேனும் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறாய். அவ்விஷயத்தில் நேரிடும் செலவை எல்லாம் நீ மிச்சப்படுத்தி வைத்திருக்கும் பொருளிலிருந்து கொடுக்கத் துணிந்திருக்கிறாய். உன்னிடமிருக்கும் பணத்தை எல்லாமே இவ்விஷயத்தில் செலவழிக்க ஆயத்தமாக இருக்கிறாய். அல்லவா?" என்றான்.

தங்கம்மாள்:—"ஆம் ஐயா! நான் ஆயிரக் கணக்காகச் சேமித்து வைத்திருக்கவில்லை. நூற்றுக்கணக்கில் தானிருக்கும். நான் ஏழை. ஆனால் என்னிடம் இலட்சக் கணக்கான பணம் இருந்து இப்பெண்ணைக் கண்டு பிடிக்க அவற்றை எல்லாம் செலவழிக்க வேண்டியிருந்தால் நான் கடைசிக் காசு வரையில் செலவழிக்கத் தடையேயில்லை. நியாயமாக இதற்காக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ளுங்கள். அப்பெண் எப்படியாயினும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதுவும் சீக்கிரத்தில்," என்று மிக்க மனத் துடிப்போடும், வியாகுலத்தோடும், ஆத்திரத்தோடும் கூறினள்.

ஆனந்தசிங்:—பேசாமல் விட்டு விட்டால் அப்பெண் தானே வந்து விடலாகும் என்பதைச் சிந்தித்தாயா?

தங்கம்மாள்:—அவளால் கூடுமானால் வந்து விடுவாளே.

ஆனந்தசிங்:—அவள் தான் இருக்குமிடத்தில் அத்தகைய திருப்தி உடையவளாக விருந்தாள் என்று உனக்கு நம்பிக்கை உண்டாகி யிருக்கிறதா?

தங்கம்:—"அவள் இவ்வீட்டின்மேல் பிரியமே. ஆனால் என்மேல் மிக்க பிரியம். என்மேல் அவள் வைத்திருந்த பிரியத்திற்கு அவள் பலவந்தப் படுத்தப்படாமலிருந்தால் ஒரு காலும் போயேயிராள். அவள் குணம் ஒரு மாதிரி. அவளை ஒருவர் கொன்றிருந்தாலும் அவள் வெளிக்குத் தெரியுமாறு கூச்சலிடுகிறவளல்ல. அவர்கள் கொன்றாலும் அவள் சத்தமிட மாட்டாள்," என்றாள்.

ஆனந்தசிங், "அவர்கள் என்று எப்படிக் கூறுகிறாய்?" என்றான். தங்கம்மாள், "இரண்டு மூன்று பேர் பேசும் சத்தம் எனக்குக் கேட்டது," என்றாள்.

ஆனந்தசிங்:—இரவு பேசியவர்கள் குரலைக் கேட்டால் யாரென்று தெரிந்து கொள்வாயா?

தங்கம்:—முடியாது.

ஆனந்தசிங்:—"நான் ஏன் கேட்கிறேன் என்றால் நான் ஒரு சங்கதி கேள்விப்பட்டேன். பூபாலப்பிள்ளையிடம் இருக்கும் அச்சுதன் என்ற வேலைக்காரன் இப்பெண் கீழிறங்கி வரும் போதும் போகும் போதும் அதிகமாகக் கவனிக்கும் வழக்கமுண்டென்று கேள்விப் பட்டேன்," என்றான்.

இதைக் கேட்டதே தங்கம்மாள் முகம் சிவந்து அவள் துரிதமாய் எழுந்து நின்று "நான் இதை நம்பமாட்டேன். அச்சுதன் தன் அந்தஸ்தை அறிந்து நடப்பவன். இத்தகைய சங்கதிநை நான் செவியேற்க மாட்டேன். மேலும் இராஜாமணி அப்படிப்பட்ட............" என்பதற்குள்,

ஆனந்தசிங் "ஒரு நாய் அரசனை உற்று நோக்கலாம்; அதனாலேயே அரசனும் நாயை உற்றுப் பார்த்தான் என்று அர்த்தமல்ல. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் யாவற்றையும் சிந்திக்கவேண்டும்," என்றான். தங்கம்மாள், "அத்தகைய சங்கதியையே நீ ஒருபோதும் நினைக்கலாகாது," என்றாள்.

ஆனந்தசிங் மிக்க சாந்தமாய் "அம்மா! நீ அப்பெண் விஷயத்தில் இத்தகைய அன்பு வைத்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதைச் சற்று கூறினால் மிக்க நலமாக இருக்கும். மற்ற எல்லா விவகாரங்கள் உளவுகளைக் காட்டிலும், அப்பெண்ணின் உண்மையான பூர்வ சரித்திரம் கொஞ்சம் தெரிந்தால் இதன் உண்மையைக் கண்டுபிடிக்க எவ்வளவோ அனுகூலமாக விருக்கும்," என்றான்.

தங்கம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டு "நான் அவளைப்பற்றி எனக்குத் தெரிந்ததை முன்னமே கூற வில்லையா? அவள் வேலைக்காக என்னிடம் வந்தாள். நான் அவள் விஷயத்தில் பிரியங்கொண்டு அவளை வேலைக்கு வைத்துக்கொண்டேன். அதுமுதல் அவள் இங்கேயே யிருக்கிருள்....,' என்றாள்.

ஆனந்தசிங் "சரி, அப்படியாயின், நீ கூறமாட்டாய்?" என்றான். அதைக் கேட்டதே யவள் முகம் சோர்ந்து தடு மாற்ற மடைந்தாள். அதற்குள் ஆனந்தசிங், "நீ கூருவிட் டால் நாங்கள் இதில் வேலை செய்யக் கூடுமென்பது சந் தேகமோ" என்றான்.

தங்கம்மாள் "நீ தவருக எண்ணிக்கொண்டாய். மேல் அந்தஸ்திலிருந்து கீழ் நிலைக்கு வந்துவிட்ட எந்தப் பெண்ணிடமும் ஏதேனும் இரகசிய மிருக்கவே யிருக் கும்; அப்படியே இப்பெண்ணிடம் ஏதேனும் காணமற் போனதற்கும் அதற்கும் ஒரு சம்பந்தமு மிராது. அது உனக்கு எத்தகைய உதவியும் அளிக்காது. இது எனக்கு நம்பமாகத் தெரியும். ஆதலின் நான் பேசாமலிருக்கி றேன்," என்றாள்.

அவளிடம் சம்பாஷித்ததால் அவள் தான் வெளியிடக் கூடாது என்று கருதும் அவ் விஷயத்தை நல்லதனத்தாலும் பயத்தாலும் வெளியிடக் கூடியவளல்ல என்று ஆனந்த சிங் தெரிந்துகொண்டான். ஆகையால் அதைப் /பற்றி அவளை வற்புறுத்துவதால் பயனில்லை யென்று அச் சங் கதியை விட்டுவிட்டு,

"சரி, அது போகட்டும். இன்னொரு சங்கதியேனும். கூறுகிருயா? அதாவது அவள் எடுத்துக்கொண்டுபோன சில்லறைச் சாமான்கள் எவை? அதையேனும் கூறு," என்றான்.

தங்க:—"முடியாது. அவற்றிற்கும் அவள் காணமற் போனதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அவை அவ ளுக்குமட்டுமே மிக்க மதிப்புள்ளவை, மற்ற எவருக் கும் அவை சற்றும் இலட்சியமானவையல்ல. நடந்த விஷயங்களால், அவளுக்கு மிக்க அருமையான வற்றை மட்டும் எடுத்துக்கொள்ளவே அவளுக்கு அவகாசமளிக்கப்பட்ட தென்று தெரிகிறது. இவ் வளவே சங்கதி," என்றாள்.

ஆனந்தசிங் ஆசனத்தை விட்டெழுந்து கொண்டு "சரி நீ எங்களுக்கு மிக்க கஷ்டமான வேலையை வைத் திருக்கிறாய். நான் இத்தகைய கஷ்டங்களுக் கெல்லாம் பின்னிடைகிற ஆளல்ல. என் சாமார்த்தியத்தால் இப் பெண்ணைக் கண்டுபிடிக்கக்கூடுமாயின் நான் பிடித்தே தீரு வேன். ஆயினும் நீ இவ்விஷயத்தில் உதவிசெய்ய வேண் டும்" என்றான்.

தங்கம்மாள் திடுக்கிட்டவர்போல் "நானா உதவி செய்யவேண்டுமென்கிறாய்? எப்படிச் செய்வது?" என்றாள்.

ஆனந்தசிங் "எப்படியா? கூறுகிறேன். "தூதன்" என்ற பத்திரிகையில் ஒரு பிரசுரம் வெளியிடு. அவள் உன்மேல் அன்பு வைத்திருக்கிறாள் என்று கூறுகிறாய். அவளுடைய நண்பர்கள் இவள் காணமற் போனதற்காக மிக்க வியாகுலப்படுகிறார்களென்றும் பிரசுரம் செய்," என்றான்.

தங்கம்மாள் "நான் அப்படிச் செய்ய முடியாது. எனக்கு பீதியாயிருக்கிறது...." என்றாள்.

ஆனந்தசிங்:—"அப்படியாயின் நானே செய்கிறேன். 'த' என்பவர்கள் தன் சிநேகியாகிய இராஜாமணி விஷ

யத்தில் மிக்க கலக்கமடைந் திருப்பதால் அவளைப் பற்றிச் சங்கதி அறிய விரும்புகிறார்கள் என்று பிர சுரிக்கிறேன்'' என்றான்.

தங்கம்மாள் எப்படியேனும் செய் என்றாள். இது காறும் பாவம்கேட்டுக்கொண்டு பேசாமலிருந்த ஜெயசிங் பேசத்தொடங்கி "அதோடு சமாசார மறிவிப்பவர்களுக் குப் பரிசளிக்கப்படும் என்று கூறுவது நலம்,'' என்றான். ஆனந்தசிங் ஆம் ஆம் அப்படிச் செய்யலாம் என்றான்.

தங்கம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள். ஆனால் மறுத்து ஒன்றுங் கூறவில்லை. அதன்மேல் இராஜா மணி எப்படிப்பட்ட உருவம் உடையவள் என்று ஆனந்த சிங் தங்கம்மாளை வினவினான். தங்கம்மாள் "அவள் வெளுத்த நிறமுடையவள். கறுத்த கூந்தலும், கறுத்த விழிகளுமுடையவள்,'' என்று சுருக்கமாகவே கூறிவிட் டாள். அதன் பிறகு ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் அங் கிருந்து புறப்பட்டார்கள்.

4-வது அத்தியாயம்

ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் பூபாலப்பிள்ளையின் வீட்டிலிருந்து புறப்பட்டு அவ்வீதியின் கோடி யில் சென்றபோது ஆனந்தசிங் அங்கு நின்று "இது ஒரு விதமர்மமான விஷயமே. ஒரு பெண் அத்தகைய ஆபத்தான வழியாக வெளிப்படுவானேன்?'' என்று சாரளத்தையும் புதுக் கட்டிடத்தின் ஓரத்திலிருந்த ஏணியையும் சுட்டிக் காட்டி,"இதுதான் எனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது. சுமார் ஒரு வருட காலமாகப் பழகியவள் அவ்வழிச் செல் வானேன்? அவ் வழிகளில் இரத்தத் துளிகள் இருந்திரா

விட்டால் ஒரு பெண் அவ்வழிச் சென்றிருப்பாளென்று நான் கருதவே மாட்டேன்.

அவளுடைய புகைப்படம் மட்டும் கிடைத்தால்! கறுத்த கூந்தல், கறுத்த கண்கள், வெளுத்த முகம், மெலிந்த தேகம். ஆகிய இத்தகைய அடையாளங்களைக் கொண்டு இந்தப் பிரம்மாண்டமான நகரில் ஒரு பெண்ணைக் கண்டுபிடிப்பதென்கிற விஷயம் சுலபத்தில் நடக்கக் கூடியதா?" என்றான்.

அச்சமயம் பூபாலப்பிள்ளை வருவதைக் கண்டு ஆனந்தசிங், "ஆ! இதோ பூபாலப்பிள்ளை வருகிறார். போனகாரியம் நிறைவேறவில்லை போலும்! இப் பெண்ணைப்பற்றி இவர் என்ன அடையாளங் கூறுகிறார் பார்ப்போம்," என்று கூறிக்கொண்டே அவர் அருகிற் சென்று நின்று இரண்டொரு கேள்விகளைக் கேட்டான். ஜெயசிங் சற்று எட்ட நின்றபடியால் ஆனந்தசிங் கேள்விகள் அவன் செவியில் கேட்கவில்லை. ஆனால் பூபாலப்பிள்ளை கெட்டியாய்க் கூறியது மட்டும் கேட்டது. அவன் "அய்யா! நான் கூறுவது உங்களுக்குச் சற்றும் பயன்படாது. அந்தப்பெண் எப்படியிருப்பாளென்பதே எனக்கு நினைவிற்படவில்லை. அத்தகைய ஒரு பெண் என் வீட்டிலிருக்கிறாளென்ற சங்கதியே இன்று காலைதான் எனக்குத் தெரிந்தது. இத்தகைய குடும்ப விஷயங்களை யெல்லாம் நான் தங்கம்மாள் பொறுப்பில் விட்டு விட்டிருக்கிறேன்," என்றான்.

ஆனந்தசிங் மறுபடி என்னமோ கேட்டதற்குப் பூபாலப்பிள்ளை "ஓ! நான் இவளைப் பார்த்திருக்கலாம். நான் கூட்டத்தில் அப்போதைக்கப்போது வேலைக்காரரைக் காண்பதுண்டு. ஆனால் அப்பெண் உயரமோ குட்டையோ கறுப்போ சிவப்போ, அழகோ அழகல்லவோ, இவற்றில்

ஒன்றுமே எனக்குத் தெரியாது. உங்களுக்கு எவ்வளவோ அவ்வளவுதான். எனக்கும் தெரியும்," என்றான்.

ஆனந்தசிங் "இவ்வளவுதானா?" என்றான். பூபாலப் பின்னை வியப்போடு அவனை உற்றுநோக்கி, மரியாதை யோடு "வேலையாட்கள் என்னிடமிருந்து நீங்கியபின் அவர் களைப்பற்றி நான் கவனிப்பதில்லை. அச்சுதன் என்பவன் நல்ல வேலையாளே. ஆனால் கொஞ்சம் அகங்காரமுடைய வன். நான் அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். அவன் சங்கதி அவ்வளவோடு முடிந்தது. அதன் பிறகு அவன் என்னவானானோ எனக்குத் தெரியாது. வருகிறேன்." என்று கூறிவிட்டுச் சென்று தன் மனைக்குள் பிரவேசித் தான்.

ஜெயசிங் ஆனந்தசிங்கை நோக்கி "நான் இந்த ஆளின் பிடியில் சிக்கப் பிரியப்பட்டேன். இவன் தன்முன் நிற்ப வர்கள் தங்களை அற்பமாக மதிக்கும்படி செய்கிறான்," என்றான்.

ஆனந்தசிங்:—"ஆயினும் நீ அதே அனுபவத்திற்குள்ளாக வேண்டி நேரிடும்." என்றான் அதைக்கேட்ட ஜெயசிங் மிக்க வியப்போடு தன் தலைவனை நோக்கினான். ஆனந்தசிங் "அந்தப்பெண் தானே திரும்பிவாராவிட் டால், அல்லது அவள் இருப்பிடம் அல்லது நடவடிக் கைகளைப்பற்றி நமக்கு ஒரு உளவும் சிக்காவிட்டால், இம் மனிதனுடைய குடும்பத்தில் நடக்கும் விவகாரங் களைக் கவனிக்கத்தக்க விடத்தில் உன்னை அமர்த்த வேண்டியிருக்கும். இந்த விஷயத்தில் பெரிய மர்மம் இருப்பதாயின் அம்மர்மம் அந்த வீட்டிற்குள்ளேயே இருக்கிறது," என்றான்.

ஜெயசிங் மிரட்சியோடு நோக்கி, "நான் காணத்தவறி விட்ட ஏதோவொரு விஷயம் உனக்குச் சிக்கியிருக்கிறது.

இன்றேல் நீ இவ்வளவு உறுதியாய்க் கூறமாட்டாய்" என்றான். ஆனந்தசிங் "உற்று நோக்கும் இயல்புடைய எவரேனும் காணமுடியாத எதையும் நான் கண்டுவிடவில்லை," என்றான்.

இவ்வார்த்தைகள் ஜெயசிங்கின் மனதில் உறுத்தின. அவன் பேசாமல் தலையசைத்தான். ஆனந்தசிங் "எல்லாம் உன் கண்களின் முன்பேயிருந்தன. அவற்றிலிருந்து ஒரு உத்தேசத்திலிருந்து வருவதற்குப் போதுமான விஷயங்களைப் பொறுக்கிக்கொள்ள உன்னால் முடியாவிட்டால் அதற்காக நீ என்மேல் குற்றம் கூறலாகாது," என்றான்.

ஜெயசிங் பின்னுமதிக மனத்தாங்கலடைந்து ஆனந்தசிங்கோடு ஸ்டேஷனுக்குச் சென்றான். அவன் வெளியில் ஒன்றும் கூறவில்லை யெனினும் தனக்குள்ளாகவே, "இந்த விவகாரம் ஒரு முடிவிற்கு வருவதற்குள் ஆனந்தசிங்கிடம் நாம் இழந்த மதிப்பை மறுபடி பெறவேண்டும்," என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவ்வாறே ஜெயசிங் சற்று நேரங்கழித்து வெளியிற் சென்று பூபாலபிள்ளையிருக்கும் வீதியில் இரவு காவல் நின்ற போலீஸ்காரனைக் கண்டுபிடித்து "இரவு பதினொரு மணிக்கும் ஒரு மணிக்கு மிடையில் பூபாலபிள்ளை வீட்டின் பக்கத்திலுள்ள வாயிற்படி வழியாக யாரேனும் வெளிவந்ததையாவது உட்சென்றதையாவது நீ கண்டாயா?" என்று வினவினான்.

அவன் "நான் காணவில்லை. ஆனால் தாமன் யாரையோ கண்டதாக ஒரு அபூர்வமான கதை கூறுகிறான்," என்றான். ஜெயசிங் என்ன கதை என்று கேட்டதற்கு அவன்,

"தாமன் இரவு சுமார் பன்னிரண்டுமணி வேளைக்கு அவ்வீதியின் கோடியிலுள்ள தீபஸ்தம்பத்தின் அடியில் இரண்டு

ஆடவரும் ஒரு மாதும் நின்றிருப்பதைக் கண்டானும். அவர்கள் இவனைக் கண்டதும் பிரிந்து விட்டார்களாம்; ஆடவர் இருவரும் அவ்வீதிக்குள் நுழைந்து போய்விட்டார்களாம்; அம்மாது தன்னை நோக்கி வருவதுபோல் தோன்றவே அவன் அங்கேயே நின்றானும்; ஆனால் அம் மாதோ சட்டென்று திரும்பிப் பூபாலப்பிள்ளையின் வீட்டுக் கதவினருகில் நின்று கதவைத்திறக்க முயல்பவள்போல் கரத்தைத் தூக்கினாளாம்; ஆனால் என்ன காரணத்தாலோ அங்கு பேயைக் கண்டவன்போல் கண்கள் பிதுங்கி மிரண்டு திரும்பி வந்தவழியே ஓடிவிட்டாளாம். தாமன் பிரமித்து துரிதமகச் சென்று அக்கதவினருகிற் போய் என்ன இருக்கிறதென்று பார்த்தானும்; உள்ளிருந்து கதவி லிருக்கும் கம்பிகளின் இடைவழியாய்ப் பூபாலப்பிள்ளை நோக்குவதைக் கண்டு பிரமித்து நிதானித்துப் பார்ப்பதற் குள் பூபாலப்பிள்ளை மறைந்துவிவிடானும்' பிறகு தாமன் கதவைத் திறக்க முயன்றானும்; உட்பக்கம் தாளிடப்பட்டி ருந்ததாம். இதுதான் தாமன் கூறிய கதை," என்றான்.

ஜெயசிங் "இவ்வளவுதானு தாமன் கூறினன்," என்று கேட்டான். போலீஸ்காரன் ஆம் என்றதே ஜெயசிங் "இது மிக்க அபூர்வமான கதையே. ஆயினும் நீயாவது தாமனு வது இதைப்பற்றி வெளியில் பிரஸ்தாபித்துக் கொண்டிருக் கலாகாது; பத்திரம். பூபாலப்பிள்ளையைப் போன்ற ஆசா மிகள் சம்பந்தப்பட்டிருக்கும் விவகாரங்களில் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருப்பதே நலம்," என்று கூறிவிட் டுச் சென்றான்.

அதன் பிறகு ஜெயசிங் தாமனைக்கண்டு அதைப்பற் றிக் கேட்டபோது, அவன் அதிகமாக ஒன்றும் கூறவில்லை. அப் பெண் உயரமாகவும், மெலிந்த தேகியாகவும்

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY

இருந்தாள். தேகம் முழுமையும் ஒரு சால்வையால் மூடிக் கொண்டிருந்தாள்," என்று மட்டுமே கூறினன். அதன் பிறகு ஜெயசிங் பூபாலப்பிள்ளையின் குடும்பத்தைச் சேர்ந்த இரகசிய விவகாரங்களைக் கண்டுபிடிக்கத் தன்னால் கூடிய வரையில் எச்சரிக்கையோடு முயன்றான். கடைசியில் அடியிற் கண்ட விஷயங்கள் அவனுக்குப் புலப்பட்டன:—

பூபாலப்பிள்ளை, தன் குடும்ப விஷயங்களைக் கவனிக்காதவனுக இருந்தாலும், இராஜாங்கச் சம்பந்தமான பெரிய விவகாரங்கள் நடந்தாலன்றி எந்த இடத்திற்கும் வெளியில் செல்பவனல்ல. அவன் சரியாக முப்பத்தைந்து வயது முடிந்தவனல்ல. அழகுடையவன். இிலையான திரண்டசெல்வ முடையவன்; அவனுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. ஆகையால் இத்தகைய ஆள் சாதாரணமாகக் கலியாணமாகத் தக்க பெண்கள் புழங்கும் கூட்டங்களில் நடமாட வேண்டியவன். அப்படியிருந்தும் அவன் சாதாரணமான விருந்துகளுக்குப் போக விரும்புவதில்லை. அது மட்டுமல்ல அவனுடைய நண்பர்கள் விருந்துக்கழைத்தாலும் அவன் செல்வதில்லை. இராஜாங்க விவகாரத்தில் தில் நெருங்கிய சம்பந்தமுடைய நண்பர்கள் யாரேனும் அழைத்தால் அங்கு மட்டுமே செல்வான். மாதர்களோடு அவன் சகவாசம் வைத்துக் கொள்வதேயில்லை. எந்தச் சமயத்திலும், கோயிலுக்குச் செல்லும்போதேனும், விருந்துகளிலேனும் வேறெந்தச் சந்தர்பத்திலேனும் அவன் ஒரு மாதோடு சென்றதை ஒருவரும் கண்டதில்லை.

இதோடு அவன் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருக்குமே ஒவ்வொரு விதமான அபூர்வ குணங்கள் இருந்தன. அதாவது ஒருவித அசுபாவமான குணங்கள். அவன் பாட்டன் உலகம் புகழும் பிரசித்திபெற்ற கவிச்சக்கரவர்த்தியை எவரேனும் தன்முன் புகழ்ந்து பேசினல் அவர்களோடு

மறுபடி பேசமாட்டான். அவன் சிற்றப்பன் எதிரில், போஜனம் செய்யும்போது யாரேனும் மச்சம் என்று மொழிந்து விட்டால் உடனே போஜனம் செய்யாமல் எழுந்து போய்விடுவான். ஆகையால் இவனுக்கு மாதர் மேல் வெறுப்பிருக்கிறது என்பது அதிசயமல்ல.

அப்படியிருந்தாலும், பூபாலப் பிள்ளை உதய புரியி லிருந்தபோது, அவனுடைய சிறிய தந்தையின் புதல்வி யாகிய பங்கஜம் என்பவள்மேல் மிக்க அன்புகொண்டி ருந்ததாக, பூபாலப் பிள்ளையின் நண்பர்களில் நெருங்கிய ஒருவரே ஜெயசிங்கிடம் கூறினர். அம்மாது பிறகு பாஞ் சால நாட்டிலிருந்த வயோதிகச் செல்வப் பிரபுவாகிய மார்த்தாண்டம் பிரபுவை மணம்புரிந்து கொண்டாள். மணம் முடிந்த சில தினங்களுக்குள் அவர் மரித்தார். அவ ருடைய திரண்ட ஆஸ்தியும் பட்டமும் அம்மாளுக்கே சேர்ந்தன. அச்சீமாட்டி இப்போது இந்திரபுரியிலேயே இருக்கிருள். ஆனல் அவளும் பூபாலப் பிள்ளையும் இப் போது சிநேக பாவமாக இல்லை என்பது தெரிந்தது. ஜெய சிங், 'அவள் நாம் பார்த்த படத்திலிருக்கும் அம்மாதாக இருக்குமோ,' என்று எண்ணிக்கொண்டு ஆனந்தசிங்கிடம் அதைப்பற்றி ஜாடையாய்க் கேட்டான்.

ஆனந்தசிங் தலையசைத்து, "நீ இம் மீனைப் பிடிக்க வேண்டுமாயின் இக்கிணற்றில் இன்னும் ஆழமாக முழுக வேண்டும்," என்றான்.

சில தினங்கள் வரையில் காணமற்போன பெண்ணைப் பற்றி ஒரு சங்கதியும் தெரியவில்லை. அவள் இருப்பிடத் தைக் கண்டுபிடிக்க என்ன முயற்சி செய்தும் சற்றும் பயன்படவில்லை. தங்கம்மாள் செய்த பிரசுரத்தாலும் ஒரு பயனும் உண்டாகவில்லை, ஜெயசிங் தன் முயற்சிகளைத் தும் வியர்த்தமாய் விடவே மனச்சோர் வடைந்து விட்

டான். ஆனால் அச்சமயம் அவனுக்கு ஒரு சமாசாரம் எட்டியது. அதாவது, அவன் உளவறிவதற்காகப் பூபாலப் பிள்ளையின் வீட்டில் வேலைசெய்யும் ஜானகி என்ற பெண்ணினிடம் சிநேகம் செய்துகொண்டிருந்தான்.

அப்பெண் தங்கம்மாளின் அதிசயமான நடக்கைகளைப் பற்றிச் சில விஷயங்களைக் கூறியதைக் கேட்டதே, 'ஓகோ! இது அப்படி அசாத்தியமான காரியமல்ல; நாம் கொஞ்சம் தக்க முயற்சி எடுத்துக்கொண்டால் இதுகண்டு பிடிக்கத் தக்க விவகாரமே," என்று அவன் புத்திக்குப் புலப்பட்டது.

ஜானகி என்ற அப்பெண் தான் அறிந்த விஷயங்களை எல்லாம் அவனிடம் கூறிய பின் கடைசியில் "அந்தோ! தங்கம்மாள் ஒரு ஆவேசமாக விருந்தால்கூட அப்படி எந்நேரமும் மேலும்கீழும் பேய்போல் அலைந்துகொண்டிருக்க மாட்டாள். ஒரு விநாடிகூட அவள் ஒரு இடத்தில் தங்க முடியாதவள்போல் அலைகிறாள். அச்சமயங்களில் அவள் முகம் சவம்போல் வெளுத்துவிட்டிருக்கிறது. அவள் தேக மாதியந்தமும் நடுக்கலெடுக்கிறது. மேஜைமேலிருக்கும் ஒரு தட்டை எடுக்கும்போதுகூட அவள் கரங்கள் நடுங்குகின்றன.

இது பெரிதல்ல. பூபாலப் பிள்ளை வீட்டிலிருக்கும் போது அவள் அவருடைய அறையின் முன் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எவரும் மிக்க வியப்படைவார்கள். அதில் மிக்க அதிசயம் என்னவெனில் அவர் அறைக்குள் இருக்கும்போது அவள் அந்த அறைக்குள் செல்வதென்னமோ இல்லை. ஆனால் மிக்க மனக் கலக்கத்தோடும் பெருந் திகிலோடும் அந்த அறையின் எதிரில் முன்னும் பின்னும் திரிந்துகொண்டேயிருக்கிறாள்; தன் கரங்களை நெரித்துக் கொள்கிறாள். மிரண்டு மிரண்டு அந்த

அறையின் கதவைப் பார்க்கிறாள். ஒவ்வொரு சமயம் கதவைத் திறந்து உள்ளே செல்லக் கருதுகிறவள்போல் அதனருகிற்சென்று அக்கதவின் கைப்பிடியைத் தொடுகிறாள். இரண்டொரு நிமிடங்கள் அப்படிப் பிடித்துக்கொண்டே இருந்து, திடீரென்று ஏதோ நெருப்பின்மேல் கை வைத்தவள்போல் சட்டென்று கையை எடுத்துக்கொண்டு தூர வந்துவிடுகிறாள். ஒரு சமயம் உள்ளிருந்து கதவு திறக்கப்படுவதுபோல் தெரிந்தாலோ, அய்யோ கடவுளே! அவள் அங்கிருந்து ஓடிப்போவதைப் பார்த்தால்........நீரே யதைப் பார்த்தால்தான் விளங்கும். இவற்றின் அர்த்தம் என்னவென்று எனக்குச் சற்றும் விளங்கவில்லை. ஆயினும் எனக்கும் பலவிதமான பீதிகள் தோன்றுகின்றன. இவளுக்குப் புத்தி சபலித்துப்போயிருக்கவேண்டும். அப்படிக்கின்றேல் என் * * * *" என்று முடித்துவிட்டாள்.

இவையாவும் கேட்டதே ஜெயசிங் "ஏன்! நாம் இதைக் கண்டுபிடிக்க முடியாதென்று மனமுறிந்து விடுவது முட்டாள் தனம். இவற்றின் மூலமாக நாம் எப்படியாயினும் இதைப்பற்றிய உளவுகள் ஏதேனும் கண்டுபிடிக்கலாகும். இதில் பெரிய மர்மம் இருந்தாலுமிருக்கட்டும். அதில் பூபாலப் பிள்ளையைப் போன்ற மனிதன் சம்பந்தப்பட்டிருந்தாலும் இருக்கட்டும். நமக்குப் பயமில்லை," என்று தனக்குள் தைரியமும் உற்சாகமுமடைந்தான். இச்சங்கதி கடைசியில் இப்பெண் யாரோ ஒரு கள்ள நாயகனோடு ஓடிவிட்டாள் என்ற சாதாரணக் கதையாய் முடிந்துவிடுமோ என்றதே அவனுக்குப் பெரும் பீதியாயிருந்தது. இப்போது அவன் அறிந்த விஷயங்களால் இதில் பெரிய மர்மமிருக்கிறது; நமது சாமார்த்தியத்தைக் காட்டி வேலைசெய்ய வழியிருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அவன் மனதிற்குப் பின்னும் உற்சாகத்தை

உண்டாக்கத்தக்க ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, ஜானகி அவனிடம் வந்து பூபாலப் பிள்ளை நகர சங்கத்தில் நடக்கும் ஒரு நடன விருந்திற்குப் போவதற்காக வண்டியை ஆயத்தப்படுத்தும்படி கட்டளையிட்டார் என்று கூறினாள்.

பூபாலப் பிள்ளை அத்தகைய விவகாரங்களுக்குச் செல்லும் ஆளல்ல. ஆகையால் "இவன் நடவடிக்கைகளில் இத்தகைய மாறுதலை உண்டாக்கியது என்ன விஷயம்? இவன் அங்கு யாரையோ சந்திப்பதற்காகவே போவதாக விருக்க வேண்டும். இதை நாம் கண்டறியவேண்டும்," என்று ஜெயசிங் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். அந்த நடனவிருந்து நடக்கச் சற்றுநேரம் இருக்கும்போதே அவனுக்கு அச்சங்கதி தெரிந்தது. ஆயினும் அவன் சுறுசுறுப்போடு ஆயத்தப்பட்டுச் சென்றான். அங்குக் கேளிக்கை தொடங்கி ஒரு மணி நேரத்திற்குப் பின்பே அவன் அங்குப் போய்ச் சேர்ந்தான்.

அவன் அங்கு சென்றபோது பெருங் கூட்டமாக விருந்தது. ஜெயசிங் கடைசியில் பூபாலப் பிள்ளை இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தான். பூபாலப்பிள்ளை அச்சமயம் தனியாக ஒருவரிடம் ஒரு மூலையில் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதே அவனுக்கு மிக்க வியப்பாய் விட்டது. ஏனெனின் அவர் இராஜாங்க விஷயங்களில் ஒரு முக்கிய ஆசாமியாகையால் அனேகர் அவரைச் சூழ்ந்து குழுமிக் கொண்டிருப்பார்களென்று அவன் கருதி இருந்தான். இப்போது பூபாலப் பிள்ளையிடம் பேசிக்கொண்டிருப்பவனும் அரைத்தன விவகாரங்களில் அவர் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பனே. அவர்கள் இருவரும் மூன்றாவது ஒரு மனிதனுடைய குணங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெயசிங், "அடடா! இதற்காகவா நாம் இங்கு வந்தோம்," என்று மனச்சோர்வடைந்து அங்கிருந்த கூட்டத்தை நோக்கிக் கொண்டேயிருந்தான். சற்று நேரத்திற்குள் அக்கூட்டத்தில் ஒரு ஆளைக் கண்டதே திடுக்கிட்டு "ஓகோ! இதில் ஏதோ விசேஷமிருக்கவே இருக்கிறது நாம் வந்தது வியர்த்தமாகாது," என்று அவன் மனதில் புலப்பட்டது. ஏனெனில் அந்தஆள் அவன் பூபாலப்பிள்ளையின் இரகசிய அறையில் கண்ட புகைப்படத்திலிருந்த மாதே. அதாவது பூபாலப்பிள்ளை முன்பு காதலித்திருந்தவளும் பிறகு பாஞ்சால நாட்டு மார்த்தாண்டம் பிரபுவை மணம்புரிந்து கொண்டவளுமாகிய பங்கஜம் என்பவளே. இப்போது மேல்நாட்டு ஆசாரப்படி அவள் பெயர் மார்த்தாண்டம் சீமாட்டியே.

அவள் அப்பிரபுவை மணம்புரிந்து கொண்டதே அவர் இறந்து போனரென்றும், அதுமுதல் அவள் அப்பட்டத்தையும் திரண்ட செல்வத்தையுமனுபவித்துக் கொண்டு சுயேச்சையாய் வாழ்ந்து வருகிறளென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். ஜெயசிங் அவளை நன்ருக உற்று நோக்கியபோது, அவள் மணம்புரிந்தது முதல் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கவில்லை யென்றும், அதனுல் அவளுடைய பழைய காதல் நீங்கியிராதென்றும் அவன் மனதிற் புலப்பட்டது.

அதனுல் அவன், "ஆ! இவர்கள் இருவரும் சந்திக்கும் போது என்ன நடக்கிறது பார்ப்போம்," என்று மிக்க ஆவலோடு மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான். கடைசியில் பூபாலப்பிள்ளை அவளைச் சந்தித்தார். பிறகு இருவரும் சாதாரணமாய்ச் சம்பாஷிக்கத் தொடங்கினர்கள். இதெல்லாம் வீண் சடங்கென்று ஜெயசிங் அறிவான். இருவரும் சம்பாஷித்துக்கொண்டே உலவிவரும்போது

மார்த்தாண்டம் சீமாட்டி அதாவது பங்கஜம் ஒரு தனி யிடத்தில் செல்லக் கருதி ஒரு பக்கமிருந்த சாளரத்தை நோக்கினள்.

அக் குறிப்பை யறிந்த ஜெயசிங் "ஒகோ இவர்கள் அங்குச் சென்றுதான் இரகசியமாகப் பேசப்போகிறார் கள்." என்றுணர்ந்து துரிதமாகச் சென்று அச்சாளரத்தின் அருகிலிருந்த திரையின் பின் மறைந்து கொண்டான். மறு நிமிடம் பங்கஜமும் பூபாலப்பிள்ளையும் அங்கு வந்து சேர்ந் தார்கள். பிறகு இருவர்க்கும் பின்வருமாறு சம்பாஷணை தொடங்கியது:—

பூபாலப்பிள்ளை:—இன்று பெரும்பாலோர் உன் விஷயத்தில் பிரியங்கொள்வதாகத் தெரிகிறது.

பங்கஜம்:—நீ அப்படிக் கருதுகிறாயா? நீ வரும்போது நான் அதற்கு நேர்மாறான அபிப்பிராயங் கொள்ளவிருந் தேன்.

பூபாலப்பிள்ளை:—அப்படியாயின் ஒரு பிரபுவின் மனைவி சீமாட்டியாகிய நீ இந்தச் சாதாரண மனிதர் கூட்டத் தில் புழங்கக் கருதுவது வியப்பே. நான் அவ்வாறு கருதவேயில்லை.

இதைக்கேட்டதே அவள் கண்களில் ஒருவித அனல் வீசியது. பூபாலப்பிள்ளை தன்னை இகழ்ந்து கூறுகிறார் என்று உணர்ந்து கொண்டாள்.

பூபாலப்பிள்ளை மறுபடி கூறத் தொடங்கி "ஆ! ஒரு விஷயம் நான் மறந்துவிட்டேன். பங்கஜம்மாள் இரண்டு வருடங்கள் கழிந்தபின் மறுபடி தன் ஜன்ம பூமிக்கு வந்த தால், தான் முன்பு விளையாட்டுக் கருவிகளாய்க் கருதிக் கழித்துவிட்ட பொருள்களில் மறுபடி விருப்பங்கொள்ளா ததுபோல முன்பு நடந்த விஷயங்களை யெல்லாம் மறந்து விட்டிருக்கலாமென்று நான் கருதுகிறேன்" என்றார்.

அச்சமயம் திரை மறைவிலிருந்த ஜெயசிங் தன்னிடமிருந்த கத்தியால் திரையில் ஒரு துவாரம் உண்டாக்கி அதன் மூலமய்ப் பேசும் இருவர் முகங்களையும் நோக்கிக் கொண்டிருந்தான்.

பூபாலப்பிள்ளை கூறிய வார்த்தைகளைக் கேட்ட அம்மாது "பங்கஜம் என்ற பெயர்போய் நெடுங்காலமாய் விட்டது," என்று சற்று மனவருத்தத்தோடு கூறினாள். பூபாலபிள்ளை "உனக்குத் துயரத்தை வருவிப்பதாயின் நான் அப்பெயரைக் கூறவில்லை" என்றான்.

பங்கஜம்:—அதன் சில துயரமான சங்கதிகளை நினைப்பூட்டுவதாயின், அவ்வாறே சில சந்தோஷ சங்கதிகளையும் நினைப்பூட்டக்கூடும்.

பூபாலப்பிள்ளை:—உன் பெயர் மார்த்தாண்டம் சீமாட்டி. அது உனது சுற்றத்தார்களுக்குப் பெருமையாகவேயிருக்கும்.

அம் மொழிகளைக் கேட்டதே அவள் கண்களில் மின்னல்போல் ஒரு பிரகாசம் தோன்றியது. முகம் சிவந்தது. அவள் பூபாலப்பிள்ளையை உற்று நோக்கி "நீர் பேசுகிற மாதிரியைப் பார்த்தால் என் பழைய நண்பராகிய பூபாலப்பிள்ளைதானா என்று கருதவேண்டியதாய் இருக்கிறது!" என்றாள்.

பூபால:—முன்பு நடந்த விஷயங்களை மறந்து போவது மனிதற்கு இயற்கையாக விருக்கிறது.

பங்கஜம்:—"என்ன? அப்படி நீர் கூறக்கூடுமா?" என்பதற்கு

பூபால:—நான் ஒன்றுமே கூறமாட்டேன். இது முடிவான சந்திப்பு; அப்படியே கடைசிப் பிரிவினை. இத்தகைய சமயத்தில் குற்றம் சாட்டத்தக்க சங்கதிகளை நான் ஒன்றும் கூறமாட்டேன். நான்....

பங்கஜம்:—பொறும் பொறும். இப்போது நீர் கூறிய வார்த்தைகளுக்கு விவரம் கூறவேண்டும். குற்றம் சாட்டத்தக்க என்று கூறுவதற்கு நான் உமக்கு அப்படிப்பட்ட காரியம் என்ன செய்தேன்?

பூபாலப்பிள்ளை சற்று ஆக்கிரகத்தோடு "என்னவா? எனக்குப் பெண்பாலரிடம் நம்பிக்கையே இராதபடி நீ செய்துவிட்டாய். ஒரு பெண் ஒருவனிடம் 'நான் உன்னைக் காதலிக்கிறேன்,' என்று கூறிவிட்டுப் பிறகு அதை யடியோடு மறந்துவிட்டு பட்டத்திற்கும் செல்வத்திற்கும் ஆசைவைத்து, மற்ற விஷயங்களில் தான் வெறுக்கத்தக்க ஒரு மனிதனை மணம்புரிந்து கொள்வாள் என்று நிரூபித்து விட்டாய். நீ காட்டிய குணம்———

பங்கஜம்:—இரும். நீர் என்ன குணம் காட்டினீர்?

பூபாலப்பிள்ளை திடுக்கிட்டார். தன் குற்றம் வெளிப் பட்டு விட்டது என்று கண்ட ஒருவன் எப்படி விழிப் பானோ அப்படி விழித்து "சரி, நான் அந்த வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்," என்றார்.

பங்கஜம் நிமிர்ந்து நின்று "அந்தக்காலத்தில் நாம் இரு வரும் பின்னால் வியாகூலத்தை யனுபவிக்கக் கூடிய மாதிரி மூட்டாள் தனமாய் நடந்துகொண்டோம். அதனாலேயே இனிமேலும் சந்தோஷத்தை அனுபவிக்காத மாதிரியே நடந்து கொள்ள வேண்டுமோ? உம்மால் கைவிடப்பட்ட பின் நான் நண்பர் கூட்டங்களில் கலக்காமல் மனச்சோர் வோடு என் யௌவன காலத்தை வியர்த்தமாகக் கழித்து விட்டிருக்கலாந்தான். ஆனால் நான் வாலிப வயதுடைய வள்; போகங்களில் எனக்கு விருப்பமிருப்பது இயற்கை. அப்படியே பட்டம் செல்வம் முதலியவற்றிலும். ஆயினும் ஒரு வருடத்திற்கு முன் என்னைக் கைவிட்டு விட்ட நீரா அதைச் சொல்லிக் காட்டுவது? நான் உன் மேல்

குற்றம் கூறவில்லை. நான் கூறுவது நடந்த விஷயங்களை மறந்துவிட வேண்டும் என்பதே," என்றாள்.

பூபால:—"முடியாத காரியம். நடந்த சங்கதிகளைத் திருப்ப முடியாது. நம்மிருவர்க்கும் எதிர்கால சுகம் என்பதே கிடையாது. ஆம் இல்லை. நடந்த காரியங்களை மறைத்து விடலாம். ஆனால் திருப்பி நடத்த முடியாது. முடியுமாயினும் நீயும் அப்படிச் செய்ய விரும்பமாட்டாய் என்றே நான் நினைக்கிறேன். ஆகையால் அதைப்பற்றிப் பேசுவதும் தவறே. பங்கஜம்! நான் உன்னை ஒரு முறை காண விரும்பினேன். மறுபடி பார்க்க எனக்கு விருப்பமில்லை. இப்படி நான் வெள்ளையாய்க் கூறியதற்கு என்னை மன்னிக்கவேண்டும்" என்றான்.

பங்கஜம்:—"வெள்ளையாகக் கூறியதற்கு நான் பூரணமாய் மன்னித்து விட்டேன், ஆனால்—" என்றதே;

பூபாலப் பிள்ளை அவள் கருத்தை யுணர்ந்து வெறுப்போடு புன்னகை புரிந்துவிட்டுச் சட்டென்று அதை விட்டுப் போய்விட்டார். மறு விநாடி பங்கஜமும் கூட்டத்தில் போய்க் கலந்து கொண்டாள்.

5-வது அத்தியாயம்

பூபாலப் பிள்ளையின் மாளிகையிலிருக்கும் வாடைக்கு எதிர்வாடையிலுள்ள ஒரு வீட்டின் மேல்மாடி மூலையில் ஒரு அறை காலியாயிருந்தது. மேற்கண்ட சம்பவங்கள் நடந்த ஐந்தாறு நாட்கள் கழித்து ஜெயசிங் இரகசியமாய் அந்தக்காலியறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அந்த அறையில் நின்று சாளர

வழியாகப் பார்த்தால் வீதியும், பூபாலப் பிள்ளையின் வீட்டி லிருந்து வெளியில் வருகிறவர்களின் செயல்களும், வீட்டிற் குள் செல்பவர்களின் செய்கைகளும் நன்றாகத் தெரியும். அச் சமயம் பூபாலப்பிள்ளையின் நடவடிக்கைகளைக் கவ னிக்க வேண்டியது ஜெயசிங்குக்கு அவசியமா யிருந்தது. பூபாலப்பிள்ளை சற்றும் நிம்மதி யில்லாதவனாய்க் காணப் பட்டான். அவன் பன்முறை வீதியில் திரிந்துகொண்டிருந் தான். திரிந்து கொண்டிருந்தான் என்றால் மன நிம்மதி யோடு உல்லாசமாய் உலவும் ஒருவனைப் போலன்று. ஏதோ மன விசார முடையவன் போலும் அக்கரையோடு யாரை யோ தேடுகிறவன்போலவும் முன்னும் பின்னும் திரிந்து கொண்டிருந்தான்.

அவன் வெளியிற் சென்றால் மாலை ஐந்து மணிக்கு மேல் வருவான். வீட்டில் யாருக்கும் விருந்தளிக்கா விடி னும் மறுபடி இரவு ஏழு மணிக்கு வீட்டிலிருந்து வெளிப் பட்டுக் காலை வேளையில் உலவுவதுபோல் வீதியில் திரி வான். எதிர்படும் ஸ்திரீகளை யெல்லாம் நேராய் முகத்தில் உற்று நோக்கிக்கொண்டே செல்வான். இச் சமயங்களில் ஜெயசிங் அவன் பின்னால் செல்வான். அவன் மாறுவேட மணிவதில் ஆனந்தசிங்கைப் போலவே கைதேர்ந்தவன். ஆகையால் பலவிதமான மாறுவேட மணிந்து அவன் பின் னால் செல்லும்போது அவனுக்கு சிறிதளவும் சந்தேக முண்டாவதில்லை.

பூபாலப்பிள்ளை வர வர அவ் வீதியை விட்டு பெரிய வீதிகளின் வழியாகச்சென்று பிறகு சிறிது சந்துகளி லும் நுழைந்து உற்று நோக்கிக்கொண்டே செல்லத் தொடங்கினான். ஜெயசிங் முதலில் அவன் பின் செல்வ தால் ஏதேனும் விசேஷம் அகப்படும் என்றும் கருதாமல் வேடிக்கையாகவே கருதினும் வர வர இவன் யாரையோ

தேடுகிறான் என்பது நிச்சயம் என்று அவன் மனதிற்குப் புலப்பட்டு விட்டது. அதுமுதல் ஜெயஸிங் விடாமல் பூபாலப்பிள்ளையின்மேல் மோருவிருக்கத் தொடங்கினான். அவனோ வர வர மிக்க அயோக்கியர்களும், எதற்கும் அஞ்சாத துஷ்டர்களும், கள்ளர்களும் இருக்கும் சந்துக்களுக்கெல்லாம் போகத்தொடங்கினான். அந்த வீதிகளில் எத்தகைய ஜனங்கள் வசிக்கிறார்களென்று போலீசாருக்கு மட்டுமே தெரியும். அதிலும் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த இரகசியப் போலீஸாருக்கு மட்டுமே அந்த விஷயம் நன்றாகத் தெரியும்.

இத்தகைய இடங்களுக்கெல்லாம் பூபாலப்பிள்ளை செல்வதைக் கண்டதே, ஓகோ இதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று ஜெயஸிங்குக்கு உற்சாகமுண்டாய்விட்டது. பூபாலப்பிள்ளை மிக்க கீழ்த்தரமான ஹோட்டல்கள் மதுபானக் கடைகள் முதலிய இடங்களின் முன்னெல்லாம் சற்றும் நாணமின்றி நின்று அந்த இடங்களுக்குள் செல்வோரையும் அங்கிருந்து வெளியில் வருவோரையும் உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர் சென்ற இடங்களில் சில மிக்க பயங்கரமான சந்துகள். அங்கு நுழையும் போதே ஜெயஸிங் தன் ஜேபியிலிருக்கும் கைத்துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துக்கொள்வான். அத்தகைய இடங்களுக்கு வருமட்டும் அவரும் தமது கைத்துப்பாக்கியைக் கொண்டுவந்திருப்பாரென்றே ஜெயஸிங் கருதினான். அவர் ஆட்களைப் பார்க்கும்போது மாதர்களையே அக்கறையாகவும் மிக்க உன்னிப்பாகவும் பார்ப்பதை நோக்க அவர் ஒரு ஸ்திரீயைத் தேடுகிறார் என்று ஜெயஸிங்குக்கு நன்றாகப் புலப்பட்டது.

பூபாலப்பிள்ளை செல்லுமிடங்கள் பெரிய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் கடமையுடைய போலீஸ் அதி

காரிகளும், மிக்க அயோக்கிய நடக்கைகளில் அமிழ்ந்து அழியும் ஆசாமிகளை நல்வழிப் படுத்த முயலும் மத போதகர்களும் மட்டுமே தைரியமாகச் செல்லக்கூடிய இடங்கள். மற்ற சாதாரண மனிதர்கள் அங்குப் பகற் காலத்தில் செல்லவே நடுங்குவார்கள்.

பூபாலப்பிள்ளையின் மனம் நிம்மதியான நிலைமையி லில்லை. ஒரு சமயம் ஒரு சிறுவன் அவர்செல்லும்பாதையின் முன் கவிழ்ந்து விழ்ந்துவிட்டான். பூபாலப்பிள்ளை வழி யில் ஏதோ தடுக்கியது என்று மட்டுமே உணர்ந்தாரன்றி அவர் மனோ நிலைமை அதற்குமேலுணர முடியாத மாதிரி யிருந்தது. அவர் தமது பொன் கடிகாரத்தைக் கூட அணிந்துகொண்டு வராமல் சாக்கிரதையாகவே வந்தார். ஆயினும் அவர் உருவமும் கம்பீரமான தோற்றமும் அவர் செல்வவந்தர் என்று சந்தேகமின்றிக் காட்டிவிடும். அவர் செல்லும் இடத்தில் சந்திக்கும் ஆசாமிகளோ பணம் கிடைக்குமென்றால் எத்தகைய அக்கிரமத்தைச் செய்ய வும் பின்னிடையார்கள். அவர் மிக்க அநீதங்களைச் செய்யும் துஷ்டர்கள் வசிக்கும் இடங்களிலெல்லாம் சென்றார். ஒரு சமயம் அவரும் கைத்துப்பாக்கிகொண்டுவந்திருக்கலாகும் என்றே ஜெயசிங் கருதினான். ஏனெனில் அந்தப் பிரதேசம் இரவில் ஆயுதமின்றி செல்லக்கூடிய இடமில்லை.

பூபாலப்பிள்ளை மிக்க தற்பெருமை உடையவர். அப்படிப்பட்ட ஆள் எத்தகைய இழிவான விடத்திற்குள் நுழையவும் பின்னிடையவில்லை. இரண்டொரு சமயங்களில் இவருடைய உருவத்தைக் கண்டு உண்மை யந்தஸ்தை யுணர்ந்து இவர்மேல் உராய்ந்துகொண்டு சென்றால் அப் போது மட்டும் நின்று கடுகடுத்த முகத்தோடு ஏதேனும் கூறுவர். அது இன்னதென்று ஜெயசிங் செவியில் விழுவதில்லை, ஆனால் அவர் அப்படிப்பட்டவர்களை

விட்டுப் பிரிந்ததே பேயால் அரத்தப்பட்டவர்போல் மிக்க துரிதமாகச் செல்வார்.

இரண்டு நாட்கள் இத்தகைய விவகாரமே நடந்து கொண்டிருந்தது. மூன்றுவது நாள் பூபாலப்பிள்ளை 'வசந்த மாளிகை' என்ற பிரசித்திபெற்ற ஹோட்டலினருகில் சென்றூர். அங்குத்தான் மார்த்தாண்டம் சிமாட்டி என்ற பங்கஜம் தங்கியிருக்கிறுள். பூபாலப்பிள்ளை அந்த ஹோட்டலில் ஸ்திரீகள் நுழையும் வாயிற்படியில் சென்று கதவைத் தட்டினூர். ஆனல் உடனே துரிதமாகத் திரும்பி வெளியில் வந்து விட்டுக் கரங்களைப் பின்புறம் கட்டிக் கொண்டு முதலில் கருதியபடி உள்ளே செல்லவாமா வேண்டாமா என்று சிந்திப்பவர் போல் வீதியில் முன்னும் பின்னும் திரிந்தார்.

அச்சமயம் ஒரு வண்டி வந்து அந்த ஹோட்டலின் முன் நின்றது. அந்த வண்டியிலிருந்து பங்கஜமே மிக்க ஆடம்பரமான உடையோடு இறங்கினுள். வண்டி நின்றதும் ஹோட்டல் வேலையாட்களில் ஒருவன் வந்து கதவைத் திறந்தான். பங்கஜம் உள்ளே செல்லும்போது பூபாலப்பிள்ளை எட்டவிருந்து அவளை உற்று நோக்கியதும் சட்டென்று திரும்பிப் பிறகு சற்றும் தடுமாற்றமின்றி நேராகத் தமது வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினூர். அதன் மேல் ஜெயசிங்கும் தன் வாசஸ்தலத்திற்குச் சென்றுன்.

நான்காவது நாள் ஜெயசிங் சுகவீனமாக விருந்தாைதலின் பூபாலப்பிள்ளையின் பின்னல் செல்ல முடியவில்லை. ஆயினும் போர்வையணைந்து தன் அறையின் சாளரத்தில் உட்கார்ந்துகொண்டு பூபாலப்பிள்ளை வெளியில் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான், அன்று அவர் திரும்பிவர நெடுநேரமாயிற்று. இடையிடையில் தங்கம்மாள், வீட்டின் சாளர வழியாய்த் தலையை நீட்டி எட்டிப்

பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் மிக்க கலக்கமான குறி இருந்தது. அவளும் தன் எஜமான் வருகைக்காகவே பார்த்துக் கொண்டிருக்கிருள் என்று ஜெயசிங் கருதினான். அச்சமயம் அவளும் மிக்க மனக்கலக்கமடைந்ததே இருந்தாள் என்று பின்னால் தெரிய வந்தது. அவன் பன்முறை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று காணாமற்போன பெண்ணைப்பற்றி ஏதேனும் சங்கதி அகப்பட்டதா என்று விசாரித்தான்.

ஜெயசிங் பூபாலப்பிள்ளையின் பின்னால் திரிந்து திரிந்து, "சே, இவன் பின்னால் திரிவதில் பயனில்லை," என்று விட்டு விடுவதற்கு முன்னால், தங்கம்மாள் ஆனந்த சிங்கிடம் சென்று "பெரும்பாலும் இராஜாமணி இறந்துபோய் விட்டிருப்பாளென்றே எனக்குப் புலப்படுகிறது. அப்படி இருந்தால் போலீசாருக்கு அச்சங்கதி தெரிய வருமா?" என்று கேட்டாள். ஆனந்தஸிங் "ஆகா தெரியவரும். யாராகிலும் அவளைக் கள்ளத்தனமாய் எங்கேனும் அழைத்துக் கொண்டு போய் விடாதிருந்தால் எப்படியாயினும் கண்டு பிடித்தே தீருவேன்," என்றான். அதன்மேல் தான் அவள் மனம் சற்று நிம்மதியடைந்தது. ஆயினும் இரண்டொரு நிமிடங்களில் அவள் தன்னை மறந்தவள் போல், "இன்னும் இரண்டு வாரங்கள் பார்க்கிறேன். அதற்குள் அவளைப்பற்றி ஏதேனும் சமாசாரம் கிடைத்தாலாயிற்று இன்றேல் நானே விவகாரத்தை நடத்தி—" என்று கூறிச் சட்டென்று நிறுத்தி விட்டாள். அவள் இன்னது செய்யப் போகிறேன் என்று வெளிப்படையாய்க் கூறவிடினும் ஏதோ பயமுறுத்துதலான விஷயம் கூறக் கருதினள் என்று அவள் முகக் குறியால் தெரிந்தது.

இக்காரணங்களால்தான் அவள் வீட்டின் சாளரத்தில் எட்டிப் பார்த்தபோது அவள் முகத்தில் அத்தகைய விகார

முண்டாகி இருந்தது. அவள் கூடத்தில் அங்குமிங்கும் திரிவதும் சாளரத்தில் எட்டிப் பார்ப்பதுமாக இருந்தாள். கடைசியில் நெடுநேரங் கழித்துப் பூபாலப்பிள்ளை வீதியின் முனையில் வருவதைக் கண்டதே அவள் தன்னை உள்ளே இழுத்துக் கொண்டு அங்கிருந்த திரையின் பின்னால் மறைந்து நின்று, ஓய்ந்த நடையாய் மனச் சோர்வோடு மெதுவாய்ப் படிகளிலேறி வீட்டிற்குள் வரும் தன் எஜமானைக் கவனித்துக் கொண்டிருந்தாள். பூபாலப்பிள்ளை வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடும் சத்தத்தைக் கேட்ட பின்பே அவள் சாளரத்தை மூடிவிட்டு அந்த இடத்தை விட்டுத் துரிதமாக அப்புறம் சென்றாள்.

தங்கம்மாளுடைய நடக்கைகளைக் கண்ட ஜெயசிங், "இதில் என்னவோ மர்மம் இருக்கவேண்டும். இதை எப்படியேனும் நாம் கண்டறிய வேண்டும்," என்று உற்சாகங் கொண்டான். ஆகையால் மறுநாள் தன் தேகம் சுறுசுறுப்பாய் வேலை செய்யக்கூடிய நிலைமையிலிருப்பதைக் கண்டபோது அவன் மிக்க சந்தோஷமடைந்தான். அன்று தன் பழைய மாறுவேடத்தைக் களைந்து புதிய வேடமணிந்துகொண்டு பூபாலப்பிள்ளை வீதியின் கோடியில் திரும்பியதும் தான் துரிதமாய்ப் பின் தொடர்ந்து சென்றான். ஒரு சமயம் இதுகாறும் முடிந்ததுபோல் இம்முறையும் கடைசியில் ஒரு பயனுமின்றியே திரும்பி வந்து சேர வேண்டுமோ என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டே பூபாலப்பிள்ளையையும் தன் பார்வையிலிருந்து விடாமல் தொடர்ந்து சென்றான். ஆனால் இம்முறை ஒரு விசேஷமும் நேரிடாமற் போகவில்லை.

பூபாலப்பிள்ளை தான் மனதிற் கொண்டிருந்த காரியம் இதுகாறும் கைகூடாதது பற்றி விரக்தியடைந்தானோ என்ன காரணமோ புலப்படவில்லை. அவன் அடுத்த வீதி

யின் மத்தியில் சென்றதும் சட்டென்று திரும்பி அங்கிருந்த ஒரு சந்தின் வழியாக வரும் ஒரு வண்டியை அழைத்தான். அச்சமயம் ஜெய சிங் வீதியின் மறுபக்கம் இருக்கிறான். அவனும் அதே வண்டியை நோக்கிக் கரத்தை நீட்டிக் கொண்டு துரிதமாய் நடந்தான். பூபாலப்பிள்ளை வண்டியி லேறினால் தானும் அதே வண்டியில் ஏறுவதென்று தீர் மானித்தான்.

ஆனால் பூபாலப்பிள்ளையோ வண்டியை நோக்கிச் சென்றவன் மறுபடி சட்டென்று திரும்பினான். அச்சம யம் வீதியின் ஓரத்திலுள்ள மேடான பாதையில் ஒரு பெண் சென்றுகொண்டிருந்தாள். அவள் தோளில் ஒரு கூடை மாட்டிக்கொண்டிருந்தாள். பூபாலப்பிள்ளை அவளை நோக்கிச் செல்வதைக் கண்ட ஜெயசிங் ஓகோ! இவன் அப் பெண்ணை நிறுத்தி அவளிடம் பேசக் கருதுகிறான், என்று எண்ணி நின்றான். வண்டியைப் போகவிட்டான்.

இப்போது பூபாலப்பிள்ளையின் அருகிற் சென்றால் அவனுக்குப் பெரிய சந்தேகம் உண்டாகிவிடும். ஆகை யால் எட்டவே வீதியின் ஓரத்தில் நின்றான். பூபாலப் பிள்ளை அப்பெண்ணினருகிற் சென்று அவளை ஒரு புறமாக அழைத்து அக்கரையோடு சற்று நேரம் அவளிடம் பேசிய பின் அவள் கூடவே அடுத்த வீதிக்கும் பேசிக்கொண்டே நடந்தார்.

ஜெயசிங் அப்பெண்ணின் உடைகளை நன்றாக கவனித் தான். அப்பிரதேசம் தாழ்ந்த நிலையிலிருப்போர் வசிக்கும் இடம். உடையால் மனிதர் அந்தஸ்தை அறியலாகும். அது அந்த நாட்டின் வழக்கத்தைப் பொறுத்தது.

ஜெயசிங் பூபாலப்பிள்ளை சந்தேகித்தாலும் சந்தேகிக் கட்டுமென்று துணிந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென் றான். இரண்டொரு நிமிடங்களுக்குள் பூபாலப்பிள்ளை

சட்டென்று திரும்பி ஜெயசிங் நின்ற திக்கே நடந்தான்.
அவன் தான் முன்பு வந்த வீதியின் மூலைக்கே திரும்பிச்
செல்கிறான் என்று ஜெயசிங் உணர்ந்து அவனைக் கவனிக்
காதவன் போல் அப் பெண் செல்லும் திக்கே சென்றான்.

அச் சமயம் பூபாலப் பிள்ளையை விட்டுவிட்டு அப்
பெண்ணின் சங்கதியை அறியவேண்டுமென்று தீர்மானித்
தான். அப்பெண் சற்று உயரமாய் மெலிந்த தேகமுடை
யவளாயிருந்ததோடு சற்று நாணயமானவளாகவும் அவ
னுக்குத் தோன்றினாள். அவன் அவளை நெருங்க அவள்
உடைகளை நன்றாகக் கவனித்தான். அந்த உடைகள் கிழிந்
திருந்ததோடு மிக்க அழுக்காகவு மிருந்தன. அத்தகைய
பெண்ணைப் பூபாலப்பிள்ளை வீதியில் நிறுத்திச் சம்பாஷித்
ததும், கொஞ்சதூரமேனும் அவள் கூட நடந்ததும் ஜெய
ஸிங்குக்கு மிக்க வியப்பாகவே புலப்பட்டது. ஒரு சமயம்
அவர் இப் பெண்ணை எங்கேனும் கண்டிருப்பாரோ என்று
அவன் சிந்தித்தான்.

ஜெயசிங் அப்பெண்ணின் முகத்தைப் பார்க்கவேண்டு
மென்ற ஆவலோடு துரிதமாக நடந்தான். ஆனால் அப்
பெண் பூபாலப்பிள்ளையிடம் பேசியபின் அதி வேகமாய்ச்
செல்லத் தொடங்கினாள். அவள் அவ்வீதியின் கோடியில்
சென்றதும் அச் சமயம் அங்கு செல்லும் ஒரு குதிரை
வண்டியின் பின் கூச்சலிட்டுக்கொண்டு ஓடும் சிறுவர்கள்
கூட்டத்தில் நுழைந்தாள். ஜெயசிங் பார்த்தான்; ஓடினா
லன்றி அப்பெண்ணை நெருங்கமுடியாதென்று அவனுக்குத்
தோன்றியது. ஆகவே அவன் ஓடத் தொடங்கினான்.
கொஞ்சதூரம் செல்வதற்குள் ஒழுங்கீனமாக ஓடிவரும்
சிறுவர்கள் குறுக்கே வரவும் காலிடறி விழுந்துவிட்டான்.
ஆயினும் உடனே சமாளித்துத்தெழுந்து நோக்கியபோது

அப் பெண் கண்களுக்குப் புலப்படாததைக் கண்டு மனமுடைந்து விட்டான். ஆனால் மற்றொரு திக்கில் நோக்கிய போது அப் பெண் அங்குப் பாதையோரத்திலிருந்த ஒரு பெரிய சிப்பத்தில் அவள் உடை சிக்கிக் கொண்டதால் அதை விடுவித்துக்கொள்ள முயன்றுகொண்டிருந்தாள். அவன் இதுவும் தற்காலமே என்று துரிதமாய் நடந்தான். ஆயினும் அவன் அங்கு செல்வதற்குள் அப் பெண் எந்த வழியாகவோ மாயமாய்ப் போய் விட்டாள்.

ஜெயசிங் மனச்சோர்வோடு அச் சிப்பத்தினருகிற் சென்று பார்த்தான். ஆ! அங்கிருந்த ஒரு வஸ்துவைக் கண்டதும் அவன் மனம் சற்றுச் சந்தோஷ மடைந்தது. அந்த வஸ்து ஒரு சிறு சீலைத்துண்டே, ஆனால் அது அப் பெண் அணிந்திருந்த உடையிலிருந்து பிய்ந்துபோனது. அது அச் சிப்பத்தில் சிக்கிக்கொண்டிருந்தது. அது ஒரு அற்ப வஸ்துவே யாயினும் துப்பறியும் சாமார்த்தியமுடைய அவனுக்கு அது ஒரு பெரிய உளவாகவே தோன்றிச் சந்தோஷத்தை யளித்தது.

ஜெயசிங் அச்சீலைத்துண்டை எடுத்து மிக்க பத்திரமாய் வைத்துக்கொண்டான். அன்று பிற்பகல் அவன் தன் வாசஸ்தலத்தை அடைந்தபோது எதிர்பாராத ஒரு விஷயத்தால் அன்று முழுமையும் இந்த வேலையைப்பற்றிக் கவனிக்க ஜெயசிங்குக்கு அவகாசமில்லாமற் போயிற்று. மறுநாட் காலை பூபாலப் பிள்ளை வழக்கம்போல் வெளியில் புறப்படவில்லை. காரணம் என்ன வென்று தெரியவில்லை. சற்று நேரங் கழித்து ஜானகியிடமிருந்து சமாசாரம் வந்தது. பூபாலப்பிள்ளை பிரயாணம் செய்ய ஆயத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக அவள் தெரிவித்தாள். அவர் எங்கு செல்கிறாரென்பது தனக்கே தெரியாதென்றாள். ஆனால்

தங்கம்மாள் மட்டும் அவர் முதலில் செல்லும் இரயிலில் செல்வாரென்று கருதுவதாகவும். அவள் மிக்க மனக்கலக்கமும் பீதியுமடைந்திருப்பதாகவும் மட்டும் அறிவித்தாள். அதோடு வீடு மயானம்போல் இருக்கிறதென்றும் தெரிவித்தாள்.

இச்சங்கதிகளைக் கேட்டதே ஜெயசிங் திடுக்கிட்டு விட்டான். பூபாலப்பிள்ளை திடீரென்று இம்மாதிரி செய்வார் என்று அவன் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை; ஜெயசிங் இதுகாறும் வெளியில் அதிகமாகப் பிரயாணம் செய்ததுமில்லை; ஒப்பறியும் தொழில் முறைமையில் வெளியில் எங்கும் சென்றதுமில்லை. அதோடு ஆனந்தசிங் கூறியது அவன் மனதில் அதிகமாக உறுத்தியது. அதனால் இந்த விவகாரத்தில் நாம் ஜெயமடைந்தாலன்றி நமது கௌரவம் சற்றும் தங்காது என்று தனக்குள் சிந்தித்தான்.

மறுநாள் காலை பூபாலப்பிள்ளை ஆற்ரோம் ஸ்டேஷனில் பிரயாணச்சீட்டு விற்கப்படும் காரியாலயத்தில் சென்று பட்டினம் என்ற இடத்திற்குச் சீட்டு வாங்கினார். அதே சமயம் வாலிபனை ஒருவனும் மறு விநாடி வந்து அதே இடத்திற்குப் பிரயாணச் சீட்டு வாங்கினான். அவ்வாலிபன் ஒரு வாத்தியக்காரன்போல் காணப்பட்டான். பூபாலப் பிள்ளையும் அவனைப் பார்த்தார். ஆனால் புதிதாய் ஒருவனை ஒருவன் கண்டால் எப்படிப் பார்ப்பானோ அப்படிப் பார்த்தாரேயன்றி இவன் யாரென்று சற்றும் சந்தேகம் கொள்ளவேயில்லை. தன்னை யாரேனும் கவனிக்கிறார்கள் என்றாவது தன் நடவடிக்கைகளை வேவு பார்க்கிறார்களென்றாவது சற்றும் சந்தேகம் கொள்ளவேயில்லை. ஜெயசிங் அவனுக்குச் சந்தேகம் உண்டாகலாகாதென்று இரயி

வில் பூபாலப்பிள்ளை ஏறிய வண்டியிலேருமல் அதற்கு மூன்ருவது வண்டியிலேறிஞன். பட்டினம் போய்ச் சேரும் வரையில் அவன் பூபாலப்பிள்ளையின் கண்களுக்குப் புலப்படவில்லை.

6-வது அத்தியாயம்

பட்டினம் என்பது சற்றும் பிரசித்தி பெருத ஒரு சிறு நகரம். பூபாலப் பிள்ளை இச் சமயத்தில் வெளிச் செல்வதே அதிசயம். அதிலும் அத் தகைய சிற்றூருக்குச் செல்வது ஜெயசிங்குக்கு மிக்க வியப்பாகவே தோன்றியது. அவன் பட்டினம் ஸ்டேஷன் போய்ச் சேருமட்டும் இதைப்பற்றியே சிந்தித்துக்கொண் டிருந்தான்.

மாலை சுமார் ஐந்து மணிக்கு இரயில் பட்டினம் ஸ்டேஷனில் போய் நின்றது. பூபாலப் பிள்ளையும் ஜெய சிங்கும் கீழிறங்கினர்கள். பூபாலப் பிள்ளை வண்டியை விட்டிறங்கியதும் அந்த ஸ்டேஷனிலிருந்து சற்று தூரத்தி லிருக்கும் இன்னெரு சிற்றூரின் வழியாய்ச் செல்லும் வண்டி எப்போது செல்கிறதென்று விசாரிக்கத் தொடங் கினர். ஸ்டேஷன் அதிகாரி, "அவ்வண்டி தினம் ஒரு முறையே செல்கிறது. இன்று காலை வந்த முதல் இரயில் வண்டி வந்தபோதே அந்த வண்டி புறப்பட்டு விட்டது. தாங்கள் நாளைக் காலைவரையில் காத்திருந்தால் தான் அந்த வண்டி கிடைக்கும்," என்று கூறிஞன்.

அதைக்கேட்ட பூபாலப் பிள்ளை மனமுடைந்து மிக்க சோர்வடைந்து விட்டார். ஸ்டேஷன் அதிகாரி "அப்படித் தாங்கள் அவசியம் செல்லவேண்டுமாயின், அதோ இருக் கும் ஹோட்டலின் முதலாளியிடம் போய்க் கேட்டால் அவன் வேண்டுமாயின் பிரத்தியேகமாய் வேருெரு வண்

டியை யமர்த்தி யனுப்பலாகும். இன்று அந்தப் பிரதேசத்தில் ஒரு சவச்சடங்கு கூட நடக்கப்போகிறது. ஆகையால்——" என்றான்.

பூபாலப் பிள்ளையும் ஸ்டேஷன் அதிகாரியும் பேசிய யாவும் ஜெய்சிங் பூரணமாகக் கேட்டான். அவன் ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல் துரிதமாக ஹோட்டலுக்குச் சென்று அதன் முதலாளியைக் கண்டு, "நான் மேலூருக்கு அவசரமாய்ச் செல்லவேண்டும். தாங்கள் அன்பு வைத்து ஒரு வண்டி ஏற்பாடு செய்தால் மிக்க நன்றி பாராட்டுவேன். அதற்காக எவ்வளவு செலவு நேர்ந்தாலும் நான் அதைக் கொடுக்க ஆயத்தமாக விருக்கிறேன்," என்று மிக்க மரியாதையோடு கேட்டான்.

ஹோட்டல் அதிகாரி:—"அந்தோ! என் இலாயத்தில் இச்சமயம் ஒரு குதிரைகூட இல்லை. இவ்வூரில் வேறு எவ்விடத்திலும் வண்டி அகப்படாது," என்றான். ஜெயசிங், "அந்தோ! நான் இன்றிரவு அந்த விடத்திற்கு அவசியமாய்ச் செல்லவேண்டும்...." என்றதே,

ஹோட்டல் அதிகாரி "இந்த ஐந்து வருடங்களாக இத்தகைய குழப்பம் நான் காணவே யில்லை. மேலூரில் இறந்து போனவன் அவ்வளவாகப் பிரக்யாதிபெற்ற மனிதனல்ல. ஆயினும் இந்தச் சிற்றூரிலுள்ள குதிரைகள், கழுதைகள் எது அகப்பட்டாலும் அவைகளுக்கெல்லாம் கிராக்கி ஏற்பட்டு விட்டது. டாக்டரிடமுள்ள நொண்டிப் பெட்டைக் குதிரைக்குக்கூட கிராக்கி வந்து விட்டது—" என்றான்.

ஜெயசிங்:—"நான் அவசியமான விஷயமாய் அங்குச் செல்ல வேண்டும். அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமாயினும் நான் தருகிறேன்," என்றான்.

ஹோட்டல் அதிகாரி "அந்தோ! என்னால் முடிவ

தாயின் செய்யத் தடையே யில்லை. ஆனால் முடியாது.'' என்று தலை அசைத்துவிட்டான். அச்சமயம் பூபாலப் பிள்ளை உள்ளே வருவதைக்கண்ட ஜெயசிங் துரிதமாய் ஒரு புறம் போய் நின்று கொண்டான்.

பூபாலப்பிள்ளை உள்ளேவந்ததும் அவருடன் ஹோட்டல் அதிகாரியிடம் அதே விஷயத்தைப் பற்றிப் பேசினார். ஆனால் அவர் மிக்க சிரத்தையோடு விசாரித்து, அதிகாரி முடியாதென்றபோது ஏதோ பெரிய விஷயம் கெட்டுப் போவதுபோல் அவர் மனமுடைந்து விட்டதோடு ஹோட்டல்காரனை மறுபடி மறுபடி வற்புறுத்திக் கேட்டார். ஆனால் கடைசியில் சற்றும் பயன்படவில்லை. என்ன செய்வார்? சோர்வடைந்து ஒருபுறம் போய் உட்கார்ந்து கொண்டார்.

பூபாலப்பிள்ளைக்கு அத்தகைய குக்கிராம ஹோட்டலில் இரவைக் கழிப்பது மிக்க அசௌகரியமாகவும் வெறுப்பாகவும் தோன்றியது. ஆயினும் என் செய்வது? வேறு வழியில்லை. அந்த ஹோட்டலில் கிடைத்த சொற்ப ஆகாரத்தை உண்டு தமக்கு விடப்பட்ட சிறு அறையில் சயனித்துக்கொண்டார். அவர் அந்த ஹோட்டலில் தமது பெயரைக் கூறாமலே சாமார்த்தியமாய் மறைந்து விட்டார். பிறகு ஜெயசிங் தந்திரமாக விசாரித்தபோது, அந்த ஹோட்டலில் உள்ளவர்களில் ஒருவருக்கேனும் அவர் யாரென்று தெரியாதென்பது விளங்கியது.

ஜெயசிங் தந்திரமாய்ப் பூபாலப் பிள்ளையின் அறைக்குப் பக்கத்தறையில் தனக்குப் படுக்கை ஏற்படும்படி செய்து கொண்டான். இதனால் அவன் இரவு முழுமையும் நிம்மதியாய் நித்திரை செய்யவே இல்லை. அவன் கவனம் பக்கத்திலுள்ள பூபாலப் பிள்ளையின் அறையின்

மேலேயே யிருந்தது. பூபாலப்பிள்ளை நெடுநேரம் அறையில் முன்னும் பின்னுமாக உலவிக்கொண்டே யிருந்தார்.

கடைசியில் பொழுதும் விடிந்தது. ஹோட்டல் அதிகாரி காலையில் யாவர்க்கும் காலையாகாரம் வேளை தவறாமல் ஆயத்தம் செய்து விட்டான். அது முடிந்த கால் மணி நேரத்திற்குள் மேலூர் வழியாகச் செல்லும் தபால் வண்டி வந்து விட்டது. பூபாலப்பிள்ளை அதன் பின்புறமிருக்கும் ஆசனத்திலுட்கார்ந்து கொண்டார். ஜெயசிங் முன் யோசனையோடு முன் ஆசனத்தில் சாரதியின் பக்கத்திலிருந்த காலியிடத்தி லுட்கார்ந்து கொண்டான்.

இவ்வண்டியில் இன்னும் சில மனிதர் இருந்தார்கள். பூபாலப்பிள்ளை ஒருவரிடமும் பேசவில்லை. தாம் உட்கார்ந்த விடத்திலிருந்து ஒன்றையுமே கவனிக்கவில்லை. கடைசியில் பகல் பன்னிரண்டு மணிக்கு வண்டி மேலூர் போய்ச் சேர்ந்தது. மேலூர் ஒரு மிகச் சிறு ஊர். இதன் தன்மையைக் கண்டதே ஜெயசிங்குக்குப் பின்னும் மிக்க வியப்புண்டாய் விட்டது. ஏனெனில் பூபாலப்பிள்ளை ஒரு பிரசித்தி பெற்ற மனிதர். மிக்க செல்வவந்தர். பூர்வீகம் முதல் பெருமை வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இத்தகைய மனிதர் நகரத்தை விட்டுப் பட்டினம் போன்ற கிராமத்திற்கு வந்ததே பெரும் வியப்பு. இப்போது அதையும் விட்டு இத்தகைய குக்கிராமத்திற்கு இவன் எதற்காக வரவேண்டுமென்பது ஜெயசிங்குக்கு மிக்க அதிசயமாகவும் பெரிய மர்மமாகவும் தோன்றியது.

ஜெயசிங் இனிமேல் என்ன நடக்கிறதோ பார்போம் என்று சிந்தித்துக்கொண்டே இருக்கையில் பூபாலப்பிள்ளை ஹோட்டல் காரனை நோக்கி "ஐயா! போஜனம் ஆனவுடனே எனக்கொரு குதிரை ஆயத்தம் செய்யப்பட வேண்டும்," என்று கூறியதைக் கேட்டான். இதனால்

பூபாலப் பிள்ளை அந்த இடத்தையும் விட்டு வேறு எங்கோ செல்லப்போகிறார் என்பதை உணர்ந்ததே ஜெயசிங் மிக்க வியப்பும் கலக்கமுமடைந்தான். இம்மாதிரி நடக்குமென்று அவன் சற்றும் எதிர் பார்த்தவனல்ல. இதுகாறும் தான் அவரை விடாமற் பின்தொடர்ந்து, அவருக்குச் சற்றும் சந்தேகம் உண்டாகா வண்ணம் வந்துவிட்டான். இப்போது அவர் தனியே கிராமப் பாதையில் செல்லும்போது தான் எப்படிப் பின்தொடர்ந்து செல்வது? அவருக்கு என்னளவு சந்தேகம் உண்டாகி விட்டதோ அடியோடு காரியம் கெட்டே போகும். இவ்வளவு தூரம் வந்தும் கடைசியில் ஏதோ விசேடம் நேரிடும் சமயத்தில் விவகாரத்தைக் கைவிடுவதென்றால் அதைவிட முட்டாள்தனம் வேறில்லை.

ஆயினும் ஹோட்டல்காரன் தன்னையறியாமலே ஜெயசிங்குக்கு அச் சமயம் உதவி செய்துவிட்டான். அந்த ஹோட்டல்காரன் மிக்க பரபரப்பும் சுறுசுறுப்பும் உடையவன்; எந்த விஷயத்திற்கும் பல கேள்விகளைக் கேட்பான். அவன் அச்சமயம் பூபாலப்பிள்ளையை நோக்கி "ஐயா! தாங்கள் பெரியகல்லுக்குப் போகிறீர்களோ? அங்குச் செல்ல ஒருவர் வருவார் என்று மூன்று நாட்களாக நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்றான்.

ஜெயசிங் பூபாலப் பிள்ளையின் முகத்தை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான் ஆதலின், அப்போது அவர் முகத்திலுண்டான தோற்றத்தால் அவர் பெரிய கல்லுக்குச் செல்பவரல்ல என்றுணர்ந்தான். ஆகவே ஆலசியம் செய்யாமல் முன் சென்று ஹோட்டல்காரனை நோக்கி மிக்க அவசரத்தோடு பேசுபவன்போல்,

"நான்தான் ஐயா, அங்கு செல்லவேண்டியவன். தயவு செய்து என்னைக் காக்கவைக்காதே. முன்னமே அசந்தர்ப்

யத்தால் இரண்டு நாள் ஆலசியம் நேர்ந்து விட்டது. இப்போதே என் காரியம் எங்கு கெட்டுவிடுமோ வென்று அச்சமாக விருக்கிறது. நீ இன்னும் ஒரு விநாடிகூட காலட்சேபம் செய்யாமல் துரிதமாய்க் குதிரையைக் கொண்டுவா; நான் ஒரு விநாடியில் என் போஜனவேலையை முடித்து விடுவேன்," என்று சற்று கோபத்தோடும், ஆலசியமும் வீண் பேச்சும் வேண்டாமென்று பயமுறுத்துகிறவன் போலவும் கூறிவிட்டு உடனே தன்னறைக்குட் போய் விட்டான்.

அவன் நடந்து கொண்ட மாதிரியால் ஹோட்டல் காரன் அவனை ஒரு கேள்வியும் கேட்பதற் கில்லாமற் போயிற்று. பூபாலப் பிள்ளை மட்டும் இரண்டொரு முறை அவன் முகத்தை நோக்கினார். ஆனால் அவனோ அவர் முகத்தை ஏறெடுத்துப் பாராமல் அவரைக் கவனிக்காதவன் போலவே அபிநயித்தான்.

ஹோட்டல்காரன் துரிதமாய் இரண்டு குதிரைகளை ஆயத்தப் படுத்த முயன்றானெனினும் பெரிய கல்லுக்குச் செல்லவேண்டிய குதிரையே முதலாவதாக வந்து நின்றது.

ஜெயசிங் துரிதமாகவே போஜனம் செய்து விட்டானாதலின் குதிரை கொண்டுவந்து நிறுத்தப்பட்டதே போய் அதில் ஏறிக்கொண்டு புறப்பட்டான். அந்த அவசரத்தில் பெரியக் கல்லுக்குச் செல்லும் பாதை எதுவென்று ஹோட்டல் காரனைக் கேட்க மறந்துவிட்டான். அக் கிராமத்திலிருந்து முதலில் ஒரே பாதை செல்கிறது. சற்று தூரம் சென்றதும் ஜெயசிங் தட்டென்று குதிரையை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். ஏனெனில் அப்போது தான் அவனுக்கு "அடடா! பூபாலப் பிள்ளை எங்கு செல்கிறார் என்பதை நாம் கவனிக்கவில்லையே. அவர்

ஹோட்டல்காரனிடம் அதைக் கூறுமட்டும் தாமதிக்காமல் வந்து விட்டோமே," என்னும் நினைவு வந்தது.

என் செய்வது? அச்சமயம் ஆனந்தசிங் தனக்கு மன உறுத்தலாகக் கூறிய மொழிகள் அவன் நினைவிற்கு வந்தன. அதனால் அவன், "ஆம், நம்மிடம் துப்பறிபவனுக்கு இருக்கவேண்டிய முன்யோசனையே குறைவே. அதனால் தான் ஆனந்தசிங் அவ்வாறு கூறநேர்ந்தது," என்று தனக்குள் கூறிக்கொண்டு கிராமத்தின் திக்கை நோக்கினான்.

இரண்டொரு நிமிடங்களில் தூரத்தில் பூபாலப் பிள்ளை ஒரு பெரிய குதிரைமேல் ஏறிக்கொண்டு வருவதைக் கண்டான். இன்னும் அங்கு நிற்பது சரியல்ல. ஆகையால் முன் சென்றான். அந்த இடத்தில் பாதை மேடாக விருந்ததால் இதுதான் சாக்கென்று பூபாலப் பிள்ளை தன் சமீபத்தில் நெருங்கட்டுமென்று மெதுவாய்ச் சென்றான். சற்று தூரம் செல்லு முன் தூரத்தில் பாதை இரண்டாய்ப் பிரிவதைக் கண்டான். இப்போது என்ன செய்வது? பெரிய கல்லுக்கு எந்த வழிச் செல்வதென்பது தெரியாது. பூபாலப்பிள்ளை எந்த வழி போவாரென்பதும் தெரியாது. இதுகாறும் அவன் திரும்பிப் பார்க்கவில்லை. இப்போது பாதை பிரியுமிடத்தில் சென்றதும் நின்று திரும்பிப் பார்த்தான். பூபாலப் பிள்ளை சுமார் ஐம்பது கஜ தூரத்தில் பின்னால் இருந்தார். ஜெயசிங் அங்கு நின்று அவர் அருகில் வந்ததும் அவன் மரியாதையாய் வந்தன மளித்து, "இந்த இரண்டு வழிகளில் எந்த வழி பெரியகல்லுக்குச் செய்கிறது? நான் அவசரமாக வந்ததால் ஹோட்டல் காரனை வழிகேட்க மறந்து விட்டேன்," என்றான். பூபாலப் பிள்ளை இடது பக்கம் செல்லும் பாதையைச் சுட்டிக் காட்டி "இவ்வழி பெரியகல்லுக்குச் செல்

னும் வழியல்ல என்றுமட்டும் எனக்கு நன்ருகத் தெரியும்," என்று கூறிவிட்டு அவ்வழியே சென்ருர்.

இப்போது ஜெயசிங் மிக்க குழப்பமடைந்து விட்டான். அவன் என்ன செய்யக்கூடும்? வேறு வழியில்லை, நாம் வலதுபக்க மார்க்கமே செல்வோம். இவர் சென்றபின் நாம் திரும்பி வந்து அவரைப் பின்பற்றிச் செல்வோம் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். இந்த வழிகளில் வலது பக்கம் செல்லும் மார்க்கம் வடக்கு நோக்கிச் செல்கிறது. இடது பக்கம் செல்லும் மார்க்கம் மேற்கு நோக்கிச் செல்கிறது, ஜெயசிங் உடனே தன் குதிரையை வலது பக்க வழியே விட்டுக்கொண்டு சென்ருன். ஆனல் மெதுவாய்ச் சுமார் கால் மணி நேரம் சென்றபின் தன் புரவியைத் திருப்பி வந்து இடது பக்கம் மேற்கில் செல்லும் பாதையில் துரிதமாக விட்டான்.

அக்குதிரை துரிதமாகச் சென்று பூபாலப் பிள்ளையைக் காணுமாறு செய்யுமோ வென்பதில் அவனுக்கு மிக்க சந்தேகமே. ஆனல் அது ஒரு மெலிந்த தேகமுடைய பெட்டைக்குதிரையாய் இருந்தாலும் அவன் எதிர்பார்த்ததைவிட மிக்க வேகமாய்ச் சென்றது.

அதனல் சற்று நேரத்திற்குள் முன்னே செல்லும் பூபாலப்பிள்ளை எங்கும் குன்றுகள் நிறைந்த அப்பூமியில் ஒரு மேட்டின்மேல் ஏறிச் செல்வதைக் கண்டான். ஜெயசிங் உடனே தன் குதிரையை யடக்கிப் பாதையின் பக்கத்திலிருந்த அடவி வழியில் பிரவேசித்து, பூபாலப் பிள்ளையும் மேட்டின் உச்சியைச் சேர்ந்து மறு பக்கமுள்ள சரிவில் இறங்கும்போது ஜெயசிங் தன் குதிரையைத் துரிதமாய் நடத்திப் பாதையிற் சென்ருன். இவ்வாறே இருவரும் சுமார் ஒரு மணி நேரம் நடந்தபின் பூபாலப் பிள்ளை ஒரு

மேட்டின் உச்சியிற் சென்று மறுபக்கம் இறங்கத் தொடங்கினர்.

கீழே பெரும் பள்ளத்தாக்கிருந்தது. அதில் படிப் படியாய்க் குன்றின்மேல் குன்றாகவிருந்தன. ஆயினும் ஜெயசிங் உச்சியில் சென்றபோது அவன் கண்களுக்குப் புலப்பட்ட காட்சி மிக்க வியப்பை உண்டாக்கி விட்டது. அங்குக் கீழே எதிரில் ஒரு சிறிய ஊரே யிருந்தது. அங்கிருந்த வீடுகளை ஒரு கை விரலால் எண்ணிவிடலாம்.

அத்தகைய விடத்திற்குப் பூபாலப் பிள்ளையைப் போன்ற செல்வவானும், பெரிய நகரங்களில் கிடைக்கக் கூடிய எல்லாச் சௌகரியங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பவனுமாகிய ஒரு மனிதன் செல்வதே மிக்க வியப்பு. இதைவிட இன்னொரு சம்பவமே ஜெயசிங்குக்கு மிக்க அதிசயத்தை யளித்தது. அதாவது பூபாலப்பிள்ளை அச்சரிவிலிறங்கி அக்கிராமத்திற்குப் பாதிவழி தூரத்தில் சென்றதும் குதிரையைத் தட்டென்று நிறுத்தித் தன் ஜேபியிலிருந்து ஒரு கைத் துப்பாக்கியை எடுத்து அதைச் சோதிப்பதை ஜெயசிங் கண்டான்.

ஜெயசிங் தட்டென்று தன் குதிரையை நிறுத்தி விட்டான். ஆயினும் அவர் செய்கைக்கும் தனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்றே அவன் மனதிற்குப் புலப்பட்டது. ஏனெனில் அவர் நேரே தன்முன் நோக்கிக் கொண்டு சென்றாரே யன்றி ஒரு முறையேனும் பின்னால் திரும்பிப் பார்க்கவேயில்லை.

பூபாலப்பிள்ளை செல்லும்வழி அக்கிராமத்தின் ஒரு புறமிருக்கும் ஒரு தனி வீட்டிற்குத் திரும்பிச் செல்வதைக் கண்டதே ஜெயசிங் பின்னும் வியப்படைந்தான். ஏனெனில் அவ்வீடு ஒரு பழைய வீடாகவும், பாழடைந்ததுபோலவும் தோன்றியது. அத்தகைய விடத்திற்குச் செல்ல இவர் என்

இத்தகைய ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதே ஜெயசிங்குக்குச் சொல்லொணு வியப்பை உண்டாக்கிவிட்டது.

அத்தனிக் கட்டிடம் மூன்று பாதைகள் பிரியும் ஒரு சந்திப்பினருகில் இருந்தது. அதன் முன் பக்கம், நாணயமற்றதாகவும் நாகரீகமாய்ச் சாயம் பூசப்பட்டிராததாகவும் இருந்தாலும் விசாலமானதாகவும் இருந்தது. அது ஒரு கிராமச் சத்திரம் அல்லது ஹோட்டல் என்று மட்டும் தெரிந்தது. அக்கட்டிடத்தின் மேலிருந்த புகைக் கூடுகள் பாசி பற்றி இருந்தன. அவற்றிலிருந்து புகையே வெளியில் கிளம்பவில்லை. மேலும் அக்கட்டடத்தில் புலப்பட்ட சாளரங்களனைத்தும் மூடப்பட்டிருந்தன. இவற்ருலும் மற்ற குறிகளாலும் அங்கு ஜனசஞ்சார மிருக்கிறதா என்பது மிக்க சந்தேகமாகவே யிருந்தது. அதன் பக்கத்திலிருந்த ஓர் புராதனமான ஆலமரத்தின் நிழல் அக்கட்டடத்தின் மேல் ஓர் காவலாள்போல் கவிந்து கொண்டிருந்தது.

பூபாலப் பிள்ளையும் அந்த ஹோட்டலில் ஜனவாசமில்லைபோல் இருக்கிறது என்பதை உணர்ந்தவர்போல் காணப்பட்டார். ஏனெனில் அவர் அக்கட்டிடத்தை உற்று நோக்கியதும் மனச்சோர்வோடு தமது கைத்துப்பாக்கியை ஜேபியில் வைத்துக்கொண்டு மெதுவாய்ச் செல்லத் தொடங்கினர்.

இப்போது ஜெயசிங் இருப்பதற்கும் அக்கட்டிடத்திற்கும் இடையில் பாதையோரம் முழுமையும் புதர்கள் நிறைந்து வளர்ந்திருந்தன. ஜெயசிங், "நாம் இப்புதர்களில் நுழைந்து இவருக்கு முன்சென்று அந்த ஹோட்டலின் எதிரில் மறைந்திருந்து இவர் அங்கு வந்து என்ன செய்கிருர் என்பதைப் பார்க்கவேண்டும்," என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

அவ்வாறே பாதையின் ஓரத்திலுள்ள புதர்களில் நுழைந்து சற்று தூரம் சென்றதும் தன் குதிரையை ஒரு செடியிற் கட்டிவிட்டு அங்கிருந்து புதர்களில் மறைந்து கொண்டே சென்று கடைசியில் அத் தனிக் கட்டிடத்தின் எதிரில் போய்ச் சேர்ந்தான். அவன் தன் வரையில் பூரணமாக மறைந்துகொண்டிருந்தாலும் தான் மட்டும் ஹோட்டலின் முன் பாகத்தை நன்றாகப் பார்க்கக்கூடிய இடத்திலிருந்தான்.

பூபாலப் பிள்ளை தீர்மானமுடைய முகக் குறியோடு அக்கட்டிடத்தினெதிரில் சென்று குதிரையை நிறுத்தினார். ஜெயசிங் அக்கட்டிடத்தின் முன்பாகத்தை நோக்கினான். அங்கு மனிதர் அரவமே இல்லை என்று அவனுக்குப் புலப்பட்டது. அக்கட்டிடத்தின் முன்பக்கமிருந்த இரண்டு வரிசைச் சாளரங்களில் ஒன்றேனும் திறக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளே ஆட்களிருப்பதாகச் சற்றும் புலப்படவில்லை. அத்தகைய தனிக்கட்டிடமும் அதன் பக்கத்திலிருக்கும் புராதனப் பிரம்மாண்டமான ஆலமரமும், அங்கிருந்த நிர்ச்சந்தடியும் ஒரு விதமான பயங்கரத்தை அளித்தன. உண்மையில், ஜெயசிங்கின் தேகம் சிலிர்த்து விட்டது. அவனுக்கு ஒருவிதமான பிரமை உண்டாயிற்று.

பூபாலப் பிள்ளையோ நேராய் அக்கட்டிடத்தின் எதிரில் வந்ததும் குதிரையை நிறுத்தி அக் கட்டிடத்தை உற்று நோக்கினார். பிறகு குதிரையை விட்டுக் கீழிறங்காமலே தமது குதிரைச் சாட்டையின் கைப்பிடியால் சாளரங்களின் கதவுகளிலெல்லாம் பலமாகத் தட்டினார். ஒரு பதிலுமில்லை. கதவைப் பன்முறை தட்டினார். அப்போதும் ஒருவரேனும் ஏன் என்பாரைக் காணோம். பிறகு கதவைத்திறக்க முயன்றார்; முடியவில்லை. ஏனெனில் கதவு உட்பக்கம்

பூட்டிடப் பட்டிருப்பதாகத் தெரிந்தது. ஜெயசிங் மறைவிலிருந்து அவர் செய்கைகளை எல்லாம் நோக்கிக் கொண்டேயிருந்தான்.

பூபாலப் பிள்ளை முன்பக்கம் பார்த்து விஷயத்தை உணர்ந்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டு வீட்டின் முன்பாகம் முழுமையும் மேலும் கீழும் நன்றாகப் பார்த்த பின், குதிரைமேலேயே அக்கட்டிடத்தைச் சுற்றிச் சென்றார். அதற்கு எவ்வித வேலியுமில்லாததால் அவ்வாறு செல்வதில் அவருக்கு எவ்விதக் கஷ்டமுமில்லை. எங்கும் உள்ளே செல்ல ஒரு வழியேனுமில்லை. முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு அவர் கடைசியில் மறுபடி முன் பக்கத்திற்கே வந்து சேர்ந்தார். அங்கு வந்ததும் கதவைத் திறக்கப் பலமான முயற்சி செய்து பார்த்தார். கதவு சற்றும் அசைவதாகப் புலப்படவில்லை. என்ன செய்வார் பாபம்! சற்று நேரம் சிந்தித்துக்கொண்டே நின்றார். அவர் மனதிற்கு ஒரு ஆலோசனையும் தோன்றவில்லைபோலிருக்கிறது. நாம் உள்ளே செல்ல என்ன பிரயத்தனம் செய்தாலும் பயனில்லை என்று அவருக்கு நன்றாகப் புலப்பட்டு விட்டதுபோல் காண்கிறது. ஆகையால் அந்த இடத்தைவிட்டுக் குதிரையைத் திருப்பியதும் மேலூருக்குச் செல்லும் பாதையே திரும்பினார்.

இதைக்கண்டதே ஜெயசிங் மிக்க வியப்படைந்தான். "அடடா! கடைசியில் இத்தனிக் கட்டிடத்திற்கு வரவா இந்த ஆள் இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டான்; இரண்டு நாட்கள் குளிரான இம் மலைப் பிரதேசத்தில் தக்க சௌகரியங்களின்றிக் கஷ்டத்தோடு பிரயாணம் செய்தான்," என்று கருதினான். அவர் என்ன கருத்துக் கொண்டு எதற்காக இங்கு வந்தார் என்பது சற்றும் ஜெய

சிங்குக்கு விளங்கவில்லை. ஒரு சமயம், "காணமற்போன பெண் இங்கு வந்திருக்கிறாள் என்று கருதியோ, அல்லது கேள்விப்பட்டதாலோ இங்கு வந்தாரோ, அப்படியாயின் அவள் எங்குப் போய்விட்டாள்," என்று சிந்தித்தான். எல்லாம் மர்மமாகவே இருக்கிறதன்றி ஒன்றும் விளங்கவில்லை.

7-வது அத்தியாயம்

ஜெயசிங் கடைசியில் உடனே தானும் அவ்வீட்டைச் சுற்றிப் பார்ப்பதென்று தீர்மானித்துக்கொண்டான். "பூபாலப் பிள்ளைக்கு அவ்வீட்டிற்குள் செல்ல வழி அகப்படாவிட்டாலும் நமக்கு எந்தத் துவாரமேனும் அகப்படாமற் போகிறதா," என்று எண்ணினான். அவன் எவ்வளவு நுணுக்கமாகப் பார்த்தும் ஒரு வழியுமகப்படவில்லை. எல்லாச் சாளரங்களும் நன்றாக மூடித் தாளிடப் பட்டிருந்தன.

ஜெயசிங் கடைசியில் பூபாலப் பிள்ளையைப் போலவே சோர்வடைந்து திரும்பிவிடக் கருதினான். அச்சமயம் அருகிலிருந்த குறுக்கு வழியாய் இரண்டு மூன்று சிறுவர்கள் புத்தகங்களைக் கக்கத்தில் வைத்து வேடிக்கையாய்ச் சம்பாஷித்துக் கொண்டே வருவதைக் கண்டான். அவர்கள் ஜெயசிங்கைக் கண்டதும் அச்சத்தோடு ஒரு புறமாக ஒதுங்க முயன்றார்கள். ஜெயசிங் அதை உணராதவன் போல் இரண்டொரு இனிய மொழிகளால் அவர்களைக் கூவி அவ்வீட்டைச் சுட்டிக்காட்டி இது யார் வீடு என்று கேட்டான். அம் மொழிகளைக் கேட்டதே முன்னமே அச்சமடைந்த அவர்கள் முகங்கள் மிகவும் வெளுத்து விட்டன.

ஆயினும் அச்சிறுவர்களில் ஒருவன் "ஏன்? உனக்குத் தெரியாதா? இரத்தினகிரி பாங்கியிலிருந்த பணத்தைக் கொள்ளையடித்த அந்த இரண்டு துஷ்ட மனிதர்களும் இங்கு தான் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறைச் சாலையில் வைக்கப்பட்டார்கள். ஆனால் எப்படியோ அதி லிருந்து தப்பித்துக்கொண்டுபோய்—" என்றான்.

அச்சமயம் அவன் பக்கத்திலிருந்த சிறு பெண் சட் டென்று அவன் சட்டையைப் பிடித்திழுத்தாள். உடனே அச்சிறுவன் ஏதோ பெருந்தவறு செய்துவிட்டவன் போல் மிக்க பயமடைந்து அப்பெண்ணின் தோளைப்பற்றிக் கொண்டான். உடனே சிறுவர்கள் ஓடிவிட்டார்கள். ஜெய சிங் மரம்போல் அசைவற்று நின்று அவர்களை உற்று நோக் கினன்.

அந்த இரண்டு கள்ளர்களும் பேர்போன கள்ளர்கள்; குறைந்தது ஐந்தாறு தப்பறியவர்கள் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவன், "அடடா! இத் தகைய பாழடைந்த வீட்டிலா அத்துஷ்டர்கள் தங்கி யிருந் தார்கள். இது உண்மை யாயிருக்குமா? ஆயினும் இந்தப் பக்கத்திலிருந்தே அவர்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால்........" என்று சிந்தித்தான்.

ஜெயசிங் இப்போது திரும்பி அவ்வீட்டை மறுபடி நோக்கியபோது அது ஒரு பயங்கரமான கொலைக்களம் போல் அவனுக்குத் தோன்றிற்று. அதனால் அவன் "அடட எத்தகைய பயங்கரமான சம்பவங்கள் இதில் நடந்திருக் கின்றனவோ!" என்று சிந்தித்தான். ஏனெனில் அக் கள் வர்கள் எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சார்கள். அவன் சிந்தித்துக்கொண்டே நோக்குகையில் ஒரு சாளரத்தின் மேல் சிவப்புச் சுண்ணும்புக் கட்டியால் ஒரு சிலு வைக் குறி போடப்பட்டிருந்ததைக் கண்டான். அது

யும் ஒரு பயங்கரமான குறியென்றே அவன் மனதிற் பட்டது.

சாளரத்தின் மேலிருந்த எழுதகம் பாசி பற்றி யிருந்தது. கீழிருந்த பலகைக்கல்லில் வட்டமான ஒருவித சிவப்புக்கறை காணப்பட்டது. அது இரத்தமாயிருக்குமோ என்று அவன் கருதினான். அச்சமயம் கள்ளரைப்பற்றிய சிந்தனையிலேயே இருந்த அவன் மனதில் திடீலென்று ஒரு நினைவு வந்ததும் மிக்க பிரமையடைந்தான். அதாவது மிக்க நாணயமும் கௌரவமும் பொருந்திய புராதன குடும்பத்தைச் சேர்ந்த செல்வவானான பூபாலப்பிள்ளைக்கு இத்தகைய கொலைபாதக இடத்தில் என்ன சம்பந்தமிருக்கும்? இந்த நாகரீகமான பெரிய மனிதர், நாணயமான ஜனசமூகத்தில் நடமாடுகிறவர், செல்வந்தர்—இப்படிப்பட்டவர், முதல்தரமான கள்ளப்பயல்களும், எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சாதவர்களும், இரண்டு வருடங்களாக நெஞ்சு திடுக்கிடும் பல கொள்ளைகள், கொலைகள் முதலியவற்றைச் செய்தவர்களும், கடந்த இரண்டு மாதங்களாகப் போலீஸாரால் தேடப்பட்டவர்களும், தூக்கு மரத்தால் ஆவலோடு எதிர் பார்க்கப் பட்டவர்களும், பேர்போன போக்கிரிகளுமாகிய இந்த இரண்டு துஷ்டர்கள் வசிக்கும் இடத்திற்கு—இப்பாழடைந்த விடத்திற்கு என் வரவேண்டும்? இது என்ன? எந்த நன்மையையேனும் உதவியையேனும் எதிர் பார்த்தா? அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவா? அவர்கள் உதவியைக்கொண்டு பெருஞ் செல்வம் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசையாலா?" எனப் பலவிதமாக ஆலோசனை செய்தான். என்ன ஆலோசனை செய்தும் மனதில் ஒன்றும் புலப்படவில்லை.

கடைசியில் "எப்படியாயினும் இந்த வீட்டிற்குள் நுழைந்து பார்க்கவேண்டும்; இதற்குள் எப்படிச் செல்

வது?" என்று சிந்திக்கலானான். அதில் வசித்துக்கொண்டிருந்தவர்கள் இன்னாரென்று தெரிந்தபிறகு எப்படியாயினும் இந்த வீட்டிற்குள் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். அந்த வீட்டினருகிலிருந்து பல திக்குகளில் பாதைகள் பிரிந்து சென்றன.

ஜெயசிங் அப்பாதைகளையெல்லாம் உற்று நோக்கினான். எதிலும் ஒரு பூதர்கூட நடமாடவில்லை. பாடசாலையிலிருந்து சிறுவர்கள்கூட தூரத்திலிருந்த ஐந்தாறு வீடுகளில் நுழைந்து மறைந்து விட்டார்கள். அவன் அந்த வீட்டிற்குள் நுழைவதாயின் அவனைக் கவனிப்பவர்களேனும், தடை செய்வோரேனும் ஒருவருமில்லை. அவன் துணிகரமாகச் சாமர்த்தியத்தோடு வேலைசெய்ய வேண்டியதே குறை. அவன் தன் மனதில் நிறைந்திருந்த எண்ணப்படி வேலை செய்யத் துணிகரமுடையவனானான். அவ்வீட்டின் மேல் மாடியிலிருந்து தாழ்வாரத்திலுள்ள சாளரங்களில் ஒன்று கொஞ்சம் திறக்கப்பட்டிருந்தது. வீட்டினோரத்திலிருந்த பெரிய ஆலமரத்தின் கிளைகளில் மூன்று வீட்டின் ஓரமாகச் சென்றிருந்தன. அவற்றில் ஒன்று அச்சாளரம் இருக்குமிடத்தின் ஓரமாக உராய்ந்து கொண்டு சென்றது.

இப்போதவன் அம்மரத்திலேறித்தான் உள்ளே சென்றால் செல்லலாம். நகரத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு மரமேறத் தெரிவது துர்லபமே. ஆனால் ஜெயசிங்கோ இந்திரபுரிக்குச் சற்றுத் தூரத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் பிறந்து கொஞ்சகாலம் வரையில் அங்கேயே வளர்ந்தவன்; ஆகையால் நற்காலமாக அவனுக்கு மரமேற மிக நன்றாய்த் தெரியும். ஆகையால் உடனே தன் மேற்சட்டையைக் கழற்றிக்கொண்டு ஏறத்தொடங்கினான்.

மரத்தின் மேலேறி, தான் கருதிய சாளரத்தினருகிற் செல்லும் கிளையின் வழியாய்ச் சென்று மெதுவாய் ஊஞ்ச

லாடி மாடியின் தாழ்வாரத்தில் குதித்து அங்கிருந்த சாள ரத்தின் வழியாக ஒரு அறைக்குள் சென்றான். அது ஒரு பெரிய அறை. அதில் உடைந்த கண்ணாடிகள் குவியலாய்க் கிடந்தன. அந்த அறையில் ஜமுக்காளமாவது எவ்விதப் பாயாவது ஒன்றுமேயில்லை. அங்கு நின்றதே அவன் தேகம் நடுங்கியது. ஓர் வித பயங்கரமான குளிர் அவன் மனதிற் பற்றியது, தன் தேகத்திலுள்ள இரத்தம் உறைந்துவிடும் போல் அவனுக்குத் தோன்றியது. அவன் முதலில் உண் டான பீதியாலும் கலக்கத்தாலும் நாம் முதலில் கருதியபடி இவ்வீட்டைக் சோதிக்கலாமா அல்லது உடனே புறப்பட் டுத் திரும்பிப்போய் விடலாமா என்று சிந்திக்கலானான்.

அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே சாளரத்தின் முன் அசைந்து கொண்டிருக்கும் ஆலமரத்தின் கிளைகளை நோக்கினான், அப்போது ஒரு விஷயம் அவன் மனதிற்குப் புலப்பட்டது. அதாவது "நாம் இம்மரக் கிளையின் வழி யாக எப்படியோ சாமர்த்தியமாய் இங்கு குதித்து விட் டோம். ஆனால் இதேவழியாக நாம் இதைவிட்டு வெளிச் செல்வது முடியாதகாரியம்." என்று அவனுக்கு நன்றாய்ப் புலப்பட்டு விட்டது. ஆகையால் இக்கட்டடத்தை விட்டு வெளிச்செல்ல வேறுவழியே பார்க்கவேண்டும். ஆகவே தன் அச்சம் கலக்கம் யாவையும் மனதில் ஒரு புறம் அடக் கிக்கொண்டு தான் முதலில் தீர்மானித்தபடி நடக்கத்தொட ங்கினான்.

தான் நிற்கும் அறையின் விஷயத்தை இரண்டொரு நிமிடங்களிலறிந்து கொண்டான். அந்த அறையில் ஒரு மூலையில் இரண்டு மூன்று நாற்காலிகள் குவியலாகக் கிடந் தன, புராதனமான துணிகள் ஒரு பக்கம் குவிக்கப்பட் டிருந்தன. அதன் பிறகு அங்கிருந்த ஒரு நெருக்கமான

ஏணியின் வழியாய்க் கீழ்க்கட்டிடத்திற்கு இறங்கினான். அங்கு இருள் சூழ்ந்திருந்தது. அந்த இடம் ஒரு கூடம். அங்கும் வெளிச்சமில்லை அது விசாலமானதுமல்ல. அதன் ஒரு மூலையில் படிகள் இருந்தன. மற்றொரு மூலையில் ஒரு கதவிருந்தது. ஜெயசிங் அக்கதவைத் திறந்து அவ் வழியே சென்றான். அங்குச் சதுரமான ஒரு பெரிய அறையிருந்தது. அங்கு ஒரு மஞ்சம் இருந்தது. ஆனால் அதன்மேல் படுக்கையேனும், விரிப்பேனும், மேலே கொசுவலையேனும் ஒன்றுமேயில்லை. ஜெயசிங் சற்று நேரம் வியப்போடு அதை உற்று நோக்கினான். பிறகு நாற்புறங்களிலும் நோக்கியபோது அங்கு வேறு சில பொருள்களுமிருந்தன. அங்கு உபயோகமற்ற ஒரு பீரோவும், ஒரு அசையும் நாற்காலியும், ஒரு சாதாரண நாற்காலியும் இருந்தன. ஆனால் எல்லாவற்றையும்விட ஒரு விஷயம் மட்டும் ஜெயசிங் மனதில் சற்று பயங்கரமான உணர்ச்சியை உண்டாக்கி விட்டது. அது எதுவெனில் அந்த மஞ்சத்தின்மேல் அதைச் சுற்றி விடப்பட்டிருந்த திரைகள் கந்தலாகச்சுற்றி மேலே எறியப்பட்டிருந்தன.

ஜெயசிங் அங்கிருந்த ஒரு சிறு அறையைத் திறந்தான். அதில் விசேஷமொன்றும் காணப்படவில்லை. அதன்மேல் தான் முயற்சி எடுத்துக்கொண்டு இதுகாறும் கஷ்டப்பட்டு வந்த காரியத்தின் முடிவை அறியவேண்டும் என்ற காரணத்தால் துரிதமாய் அவ்வீட்டின் முன்பாகத்திற்குச்சென்றான். அங்கு இன்னொரு கூடமிருந்தது. அதன் பக்கத்தில் வரிசையாக அறைகளிருந்தன. அந்த அறைகளிலிருந்த அலங்காரங்களனைத்தும் முழுதும் களையப்பட்டிருக்கவில்லை. ஆயினும் அதன் காட்சி ஜெயசிங்கின் மனதிற்கு உற்சாகத்தைச் சற்றேனும் உண்டுபண்ணவில்லை.

ஏனெனில் அவன் கோரிக்கைக்குச் சம்பந்தப்பட்ட ஒன்றேனும் அங்கு சிக்கவில்லை.

அங்குள்ள அறைகளில் ஒரு சிறு அறையில் மட்டும் சற்று சமீப காலத்தில் ஜனசஞ்சாரமிருந்ததாகப் புலப்பட்டது. அது சௌகரியமான இடமாகவும் தோன்றியது. அங்கிருந்த மஞ்சத்தின்மேல் அவசரமாக விரிக்கப்பட்ட படுக்கை சுருட்டி ஒரு புறம் எறியப்பட்டிருந்தது. ஒரு ஆடவனே அம்மாதிரிச்செய்யலாகும் என்றும் ஜெயசிங்குக்குப் புலப்பட்டது. அவன் அம்மஞ்சத்தின் எதிரில் நின்று அதை உற்று நோக்கினான். அந்த அறை ஏன் அவ்வளவு இருட்டாக விருக்கிறதென்று ஜெயசிங் நாற்புறங்களிலும் நோக்கினான். அங்கிருந்த சாளரம் ஒரு பழைய சால்வையாலும் இரண்டு தடிப்பான மேற்சட்டைகளாலும் பூரணமாக மூடப்பட்டிருந்தன. அவை சாளரத்தின் முன் தொங்கவிடப்பட்டு அவற்றின் தலைப் புறம் ஆணி அடிக்கப்பட்டிருந்தன.

அதைக் கண்டதே அந்த இரண்டு துஷ்டர்களாகிய கள்ளர்களும் எங்கேனும் ஓர் மூலையிலிருந்து எச்சமயம் திடீரென்று வெளிவருவார்களோ என்று சிந்தித்து ஜெயசிங் தன் இருதயத்தைத் தட்டென்று தொட்டுப்பார்த்துக் கொண்டான். அவன் உடனே சென்று சாளரத்திலிருந்த சால்வையையும் சட்டைகளையும் இழுத்தெறிந்தான். சாளரத்தின் உட்பக்கம் அச்சாளரத்திலிருந்த திரைகள் கிழிந்து போய்ச் சுருட்டிக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவை முதலில் பளபளப்பான நிறம் பொருந்தியவைகளாகவே இருந்திருக்கும். ஆனால் அப்போது வெளுத்து மாசடைந்திருந்தன.

அங்கிருந்த சில குறிகளால் அந்த விடத்தில் சமீப காலத்தில் யாரோ வசித்துக்கொண் டிருந்தார்களென்று

தெரிந்தது. சுவரின்மேல் கரடுமுரடான கடிதம் ஒட்டப்பட்டிருந்தது, படங்கள் சில மாட்டப்பட்டிருந்தன. அப்படங்களெல்லாம் பல பத்திரிகைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டன. ஆனால் படத்தின் இலட்சணங்களை அறிந்தவர்களே அவற்றைப் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. ஆனால் அவைகளெல்லாம் பலம் பொருந்திய மனிதர்களின் உருவங்களே, ஆண் பெண் இருபாலரும் துணிகரமும் அஞ்சாத தீரமுமுடைய பார்வை உடையவர்கள். ஒரு வேட்டைக்காரன் ஒரு சிறுத்தைப் புலியின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு நிற்கிறான். ஒரு போர் வீரன் தன் கூட்டாளியை ஒருவன் அடிக்காதபடி தடுக்கிறான். ஒரு முரட்டு ஸ்திரீ எதையோ கண்டு அலறிக்கொண்டு பின்னிடைகிறாள். அப் படத்தின் மற்ற பாகம் கிழித்துவிடப் பட்டிருந்தது.

கீழே தரையில் ஒரு பத்திரிகையின் பாதிப் பாகமும் ஒரு துண்டு மெழுகு வத்தியும் கிடந்தன. ஜெயசிங் அப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். அது "இரத்னகிரித் தூதன்" என்ற பத்திரிகை. இரண்டு தினங்களுக்கு முன்பு தான் வெளிவந்தது. அதை வாசித்தபோது ஜெயசிங்குக்குத் தான் செய்த காரியம் இன்னதென்று தெரிந்தது. இத் துணிகரமான கள்ளர்கள் இச்சமயம் இந்த வீட்டிற்குள் இராவிடினும் இரண்டு மூன்று நாட்களுக்குமுன் இங்கிருந்திருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டான். மேல் சாளரத்தில் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்ததன் விஷயம் இப்போது அவனுக்கு விளங்கிவிட்டது. அந்த வழியாக மரத்தில் ஏறி வந்த முதல் ஆள் நாமல்லவென்று நினைத்துக்கொண்டான்.

அப்போது பெரும்பாலும் ஏதோ அபாயம் இங்கு நேரிடலாகும் என்ற உணர்ச்சியால் ஒருவிதப் பீதி அவன்

மனதைப் பற்றிக்கொண்டது. இந்த இடத்தில் அத்துஷ்டர்களிடம் நாம் சிக்கிக்கொண்டால் நம்மிடமுள்ள கைத்துப்பாக்கி நம்மைக் காப்பாற்றமாட்டாது என்று அவன் மனதிற் புலப்பட்டது. நெருக்கமான ஒரு வளைக்குள் சிக்கிக்கொண்ட குள்ளநரிபோல் இருக்கிறோம்; அத்துஷ்டர்கள் படிகளின் வழியாக வந்து நம்மைக் கண்டுவிட்டால் அல்லது கூடங்களில் ஒன்றில் நாம் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டால் தப்புவது கஷ்டமே என்று அவன் கருதினான்.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டே அந்த அறையை விட்டு மெதுவாக முன்பக்கம் செல்லும் படிக்கட்டு வழியில் சென்று உற்றுக் கேட்டான். எங்கும் கல்லறைபோல் நிச்சந்தடியாகவே இருந்தது. வெளியிலிருந்த பெரிய விருக்ஷம் காற்றினால் அசைவதால் உண்டாகும் பயங்கரமான சத்தம் மட்டுமே கேட்டது. ஆனால் உள்ளும் கீழ்க்கட்டிலும் ஒரு சத்தமுமில்லை. அங்கு ஒருவருமில்லை என்று நிச்சயமாகத் தெரியாவிடினும் மெதுவாகக் கீழிறங்கிச் சென்று இரண்டிலொன்றை அறிந்துகொள்ளவேண்டியதே என்று அவன் தீர்மானித்தான். அவன் இருக்கும் பெருஞ் சந்தேகமான நிலைமையிலுள்ள இதிலே அனுபவிப்பதைவிட ஒரு ஆபத்தை எதிர்ப்பதே நிம்மதியை யளிக்கும்.

ஆகவே கரத்தில் துப்பாக்கியை ஆயத்தமாகப் பிடித்துக்கொண்டு இரு செவிகளாலும் மிக்க எச்சரிக்கையோடு உற்றுக் கேட்டுக் கொண்டே மெதுவாக அடிமேலடி வைத்து இறங்கிச் சென்றான். ஒருவித சத்தமும் அவன் செவிகளில் விழவில்லை. கீழுள்ள கூடத்தில் சென்றபோது அங்கு ஒருவரும் காணப்படவில்லை. அவன் துரிதமாக நடந்து அங்கிருந்த தாழ்வாரத்தைக் கடந்து சமையலறைக்குள் சென்று அங்கிருந்த சாளரங்களில் ஒன்றை மெது

வாகத் திறக்க முயன்றான். உட்பக்கமிருந்தபடி அதைத் தூக்கிவிடலாம் என்று புலப்பட்டது. அவன் அக்கட்டிடத்தில் நுழைந்தது முதல் அதுகாறும் மனதில் உண்டாகியிருந்த திகில் அச்சமயந்தான் நீங்கி அவன் மனதில் திம்மதியும் தைரியமும் தோன்றின. அங்கு நின்று பெருமூச்செறிந்தான்.

உடனே திரும்பி அங்கிருந்த சமையலறையிலுள்ள ஒரு சிறு அறையைத் திறந்தான். அவன் அதற்குள் உற்று நோக்கியபோது அவன் எதிர் பார்த்தபடி அங்கு கொளுத்தப்பட்ட சில உடைகளிருந்தன. அவைகள் அக்கள்ளர்களுடைய சிறைச்சாலை உடைகள் என்று ஜெயசிங் தெரிந்து கொண்டான். அங்கிருந்து இன்னும் சற்று உள்ளே சென்றபோது அங்கிருந்த சாம்பலில் இருந்து ஒரு மோதிரம் அகப்பட்டது. ஜெயசிங் இது எப்படி இங்கு வந்திருந்தாலும் இருக்கட்டும், இது எப்போது அத்தாட்சியாய் உதவுமோ அப்போது உதவட்டும் என்றுகருதியதை எடுத்துப் பத்திரமாக வைத்துக்கொண்டான்.

அதன் பிறகு அங்கு பிரயோசனப்படத் தக்க வஸ்து ஒன்றும் அகப்படவில்லை என்றுணர்ந்ததும் உக்ராணகிடங்கிற்குள் செல்லலாமா என்று சிந்தித்தான். உடனே "சே! நாம் இருக்கும் நிலைமையில் அப்படி உள் நுழைவது சட்ட விரோதமாக முடியும் என்று கருதி, சமையலறையிலிருந்த சாளரத்தைத் திறந்துகொண்டு அக்கட்டிடத்தை விட்டு வெளியில் வந்தான். அதேவினாடி அக்கட்டிடத்தின் உக்கிராணக்கிடங்குக் கதவு திறக்கப்பட்டது போலவும் மறுபடி மூடப்பட்டது போலவும் சத்தம் ஜெயசிங்கின் செவிகளிற் கேட்டது. அதைப்பற்றி அவன் சத்தியம் செய்வான். அதைக்கேட்டதே அவன் தேகத்திலுள்ள நரம்பு

களில் மின்சாரம் ஏறியதுபோன்ற ஒரு விதத் துடிப்பு உண்டாயிற்று.

8-வது அத்தியாயம்

ஜெயசிங் சற்று நேரம் சிந்தித்தான். பேசாமல் பூபாலப்பிள்ளை சென்ற மேலூர் வழியே செல்வதே சரியென்று தீர்மானித்தான். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆனந்தசிங்காக இருந்தால் என்ன செய்வான்? முதலாவது அவன் அக்கட்டிடத்திலிருந்து அவ்வளவு சீக்கிரமாக வெளிவந்து விட்டிருப்பானா? அங்கிருந்த விஷயங்களைக்கொண்டு ஏதேனும் முக்கியமான உளவுகளைக் கண்டு பிடிக்காமல், அக்கட்டிடத்தின் உக்கிராணக் கிடங்கை மட்டுமல்ல; அங்கிருந்த ஒவ்வொரு அங்குல இடத்தையும் சோதித்துப் பார்க்காமல் வெளிவருவானா? ஒருகாலுமில்லை. ஏனெனில் தேடிச்சென்ற விஷயத்தை விட வேறொரு முக்கியமான விஷயம் இப்போது சிக்கியது. ஆனால் ஆனந்தசிங் துப்பறியும் தொழிலில் பழுத்த பழம் போன்றவன். இனி ஜெயசிங் என்ன செய்தான் என்பதைக் கவனிப்போம்.

ஜெயசிங் தான் தீர்மானித்தபடியே மேலூர் வழியே திரும்பினான். அவன் அவ்வழியே செல்லுகையில் அவன் மனதிற் பலவிதக் கலவரங்கள் குடிகொண்டிருந்தன. ஆனால் அவையாவற்றிலும் முக்கியமான ஒரு விஷயமே அவனுக்குச் சற்று மனோ திம்மதியை யளித்தது. அதாவது அவன் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டு வந்த விஷயம் மிக்க அற்பமானதே. ஏனெனில் அது காணமற்போன ஒரு சாதாரணமான பெண்ணைத்தேடும் விஷயம்.

மிக்க பிரமாதமான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறி வோர்க்கு இது ஒரு பெரிய விஷயமல்ல. இது கடைசி யில் மிக்க சாதாரணமான விஷயமாக முடிந்தாலும் முடிய லாகும். ஆனால் அது மர்மமான விஷயமாகத் தோன்றிய படியால் ஏதோ பகைஷிருப்பதாகக் கருதப்பட்டது.

ஆனால் அத்தகைய விஷயத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்ததில் தனக்குத் தெய்வ சங்கல்பமாகச் சிக்கிய விஷ யமோ மிகப்பிரமாதமானது. அனேக பெரிய குற்றங்க ளைச் செய்த பிரசித்திபெற்ற இரண்டு கள்ளர்கள், பன் முறை துரைத்தனத்தாரை ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விட்டவர்கள். அவர்களைப் போலீஸாரும், முக்கியமாக முதல் தரமான ஐந்தாறு துப்பறியும் நிபுணர் களும் தேடிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றிய எள்ளளவு உளவும் இதுகாறும் ஒருவராலும் கண்டு பிடிக்கப் படவில்லை.

அவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு, அல்லது அவர்களைப் பிடிக்கத் தக்கதான அவர்கள் விஷயங்களைப் பற்றிய எவ்வித உளவுகளையேனும் கண்டுபிடித்து அறிவிப் பவர்களுக்குத் துரைத்தனத்தார் பெரும் பரிசளிப்பதாகப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். இப்போது அத்தகைய கள் ளர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்வரையில் வசித் திருந்த இடத்தைத்தான் கண்டு பிடித்துவிட்டான். தெய்வ சங்கல்பமாய் அது சிக்கியபடியால் அதன் மூலமாகவே அத்துஷ்டர்களைக் கண்டு பிடிக்கத் தக்கதாய் வழியுண்டாகி விட்டால் தனக்கு மிக்க கௌரவம் உண்டாகி விடுமென்று அவனுக்குப் புலப்பட்டது. அதனாற்றான் அவன் மனதில் சற்று நிம்மதி ஏற்பட்டது. அதன் வழியில் அதைப் பற் றியே சிந்தித்துக்கொண்டு சென்றான். விஷயம் இவ்வாறு முடிந்ததால் நாம் உடனே போலீஸ் சூப்ரெண்டிடம் இவ்

விஷயங்களைப்பற்றிக் கூறவேண்டும் என்றும் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

ஜெயசிங் மேலூரில் உள்ள ஹோட்டலில் போய்ச் சேர்ந்ததும் தந்திரமாய் பூபாலப் பிள்ளையைப்பற்றி விசாரித்தான். அவர் ஒரு மணி நேரத்திற்குமுன் க்ஷேமமாக வந்து சேர்ந்தாரென்றும் மேல்மாடியில் ஒரு அறையிலிருக்கிறாரென்றும் தெரிய வந்தது. அதன் பிறகு ஜெயசிங் மிக்க தந்திரமாய் ஹோட்டல்காரனை அழைத்து, தான் கண்ட தனி வீட்டைப்பற்றி விசாரித்தான்.

ஹோட்டல்காரன் "இது மிக்க ஆச்சரியமான விஷயமே. சற்று நேரத்திற்கு முன்புதான் மாடிமேல் வந்திருக்கும் ஒருவர் அதே வீட்டைப்பற்றிப் பல கேள்விகளைக் கேட்டார். இப்போது நீரும் அதைப்பற்றியே கேட்கிறீர். இப் பிரதேசத்தில் அப்பாழடைந்த வீடுதான் ஓர் விசேஷமான இடம் போலல்லவோ உங்களுக்குத் தோன்றுகிறது?" என்றான்.

ஜெயசிங் புன்னகையோடு "அப்படியு மிருக்கலாகும். ஏனெனில் இச்சமயம் பத்திரிகைகளிலெல்லாம் அக்கள்ளர்களைப்பற்றிய விஷயமே நிறைந் திருப்பதால் அவர்கள் வசித்தவிடம் யாவர்க்கும் மிக்க விசேஷமாகவே புலப்படும்," என்று கூறி மறுபடி தந்திரமாக அவ்வீட்டைப் பற்றியும் அக்கள்ளரைப் பற்றியும் ஹோட்டல்காரனுக்குத் தெரிந்த வரையில் கூறும்படி அவனைப் பக்குவமாய் விசாரித்தான்.

ஹோட்டல்காரன் "எங்களுக் கெல்லாம் அந்த விஷயத்தைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆயினும் அவர்கள் ஒரு நாளைக்குத் தூக்கு மரத்தில் தொங்க வேண்டியவர்களே என்பது மட்டும் தெரியும். அது யாவரு மறிந்த விஷயம். ஒரு காலத்தில் அவர்கள் பண

விஷயத்தில் சற்று இழிவாய் நடந்து கொண்டிருந்தபோது யாவர்க்கும் அவர்கள்மேல் சந்தேகமே யன்றி ஒருவரும் அவர்களைப்பற்றிக் கெட்டவிதமாகக் கருதவில்லை. அது அவர்கள் அந்த விடத்தில் ஒரு ஹோட்டல் வைத்துக் கொண்டிருந்த காலம்.

ஆனால் இரத்னகிரி பாங்கியில் கொள்ளை அடித்தது இவர்கள்தான் என்று சந்தேகமின்றி வெளியானபோது இங்குள்ளவர்களில் அனேகர் ஆ! நாங்கள் முன்னமே அவர்கள்மேல் பூரணமான சந்தேகங் கொண்டிருந்தோம். அவர்கள் களவாடுவது மட்டுமல்ல; அதைவிட விபரீதமான குற்றங்களைச் செய்கிறவர்கள் என்று எங்களுக்கு முன்னமே சந்தேக முண்டு," என்று கூறினார்கள். ஆயினும் அந்தப் பாங்கிக் களவு தவிர வேறொரு குற்றமும் அவர்கள் மேல் ருசுவாகாததால் அக்களவிற்கு மட்டும் அவர்கள் இருபது வருட சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இது யாவரு மறிந்ததே,

இரண்டு மாதங்கட்கு முன் அவர்கள் சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவ்வளவே கடைசியாக அவர்களைப் பற்றித் தெரிந்த சமாசாரம். அவர்கள் இருவரும் முதல்தரமான கள்ளப் பயல்களே என்பதில் சந்தேகமென்னமோ சற்று மில்லை. பிள்ளையைவிட அனேக வருடங்கள் வயது முதிர்ந்த தந்தை பெரிய கள்ளன் எனலாம்," என்றான்.

ஜேயசிங்:—அந்த ஹோட்டல் எப்போது மூடப்பட்டது?

ஹோட்டல்காரன்.—அது அவர்கள் சிறை செய்யப்பட்டதே மூடப்பட்டது.

ஜேயசிங்:—அது முதல் அது திறக்கப்படவே இல்லையோ?

ஹோட்டல்காரன்:—ஒரே ஒரு முறை மட்டும் திறக்கப்பட்டது. இரண்டு தப்பறிபவர்கள் அதைச் சோதனை

செய்ய வந்தார்கள், அப்போது மட்டுமே திறக்கப் பட்டது.

ஜெயசிங்:—அதன் சாவி யாரிடமிருக்கிறது?

ஹோட்டல்காரன்:—"அதைப்பற்றி நான் கூறமுடியாது!" என்றான்.

பூபாலப்பிள்ளை என்ன கேள்விகளைக் கேட்டாரென் றறிய ஜெயசிங்குக்குப் பிரியம். ஆனால் அதைப்பற்றி கேட் பதே மோசமாகும். இப்போது எவ்வளவு துரிதமாக இந்திரபுரிக்குச் செல்லலாமென்பதே அவனுடைய முக்கிய நோக்கமாக விருந்தது. போஜனம் முடிந்ததும் ஹோட் டல்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை யளித்து விட்டுப் புறப்பட்டான். அவன் துரிதமாகச் சென்றதால் மாலை ஐந்து மணிக்கு முன்பே சமீபத்திலுள்ள இருப்புப் பாதை நிலையத்திற்குச் சென்றான். சற்று நோங்கழித்து அம்மார்க்கமாக வந்த வண்டியிலேறி மறுநாட் காலை இந் திரபுரி சேர்ந்தான்.

ஜெயசிங் வீடுசேர்ந்து அரை மணிக்குள் புறப்பட்டுப் போலீஸ் பிரதம அதிகாரியின் காரியாலயத்திற்குச் சென்று பிரசித்திபெற்ற அந்த இரண்டு கள்ளர்களும் வசித்துக் கொண்டிருந்த விடத்தில் தான் கண்ட விவரத்தைப் பற்றிக் கூறினன். அங்குள்ளவர்கள் மிக்க சிரத்தையோடு அதைக் கேட்டார்கள். பிரதம அதிகாரி அன்றே இரண்டு கெட்டிக்கார ஆசாமிகளை வடக்குப் பிரதேசத்திற்கு அனுப்பினர்.

அன்று மாலை ஜெயசிங் பூபாலப்பிள்ளை வீட்டிற்கேரா மாகச் சென்றான். இவன் வருகையைக் கண்டதே பொன்னம்மாள் என்ற பெண் வெளியில் வந்து வேலி யோரமாக நின்றாள். அவள் கண்களில் பயங்கரமான பார்வை யிருந்தது! அவள் தேகம் முழுமையும் நடுக்கங்

கொண்டிருந்தது. அவள் ஜெயசிங்கின் அருகில் வந்ததும் "ஓ! அடடா இன்று என் செவியில் வீழ்ந்த சங்கதி ஓ!...." என்றாள்.

ஜெயசிங்:—"அதென்ன சங்கதி கூறு. என் செவியிலும் அது விழட்டுமே," என்றான். பொன்னம்மாள் தன் இருதயத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு "அடடா நான் ஒரு போதும் அப்படிப் பயந்ததே இல்லை. என் ஜன்மத்திலில்லை. நான் அதைக் கேட்டதே மூர்ச்சை அடைந்து விடுவேன் என்றே கருதினேன். அப்படிப்பட்ட நாணயமான மாதின் வாயினின்று குற்றத்தைப்பற்றிய அத்தகைய வார்த்தை வெளி வருவதாயின்—அடடா...." என்றதே,

ஜெயசிங், "எத்தகைய நாணயமான மாது? எந்த மாது? உன் கதையை நடுவிலாரம்பித்து விடாதே. ஆ! நீ புத்திசாலியான பெண்ணல்லவா? நான் ஆதியோடந்தமாய் யாவும் கேட்கவேண்டும். நிதானமாய்க் கூறு பார்ப்போம்," என்றான்.

அதன்மேல் பொன்னம்மாள் சற்று சாந்தமடைந்து இன்று தங்கம்மாளிடம் ஒரு மாது வந்து பேசிக்கொண்டிருந்தாள். அவள் ஒரு நாணயமான துரைசானியே. அவள் உடைகள்—"என்றதே, ஜெயசிங் மறுபடி அவளைத் தடுத்து, "அவள் உடை முதலிய விவரம் இருக்கட்டும். அதையெல்லாம் விட்டுவிடு. அவள் பெயரென்ன? என்ன கூறினாள்? என்பது முதலான சங்கதிகளைக் கூறு," என்றான்.

பொன்னம்மாள்:—ஓ! அவள் பெயரா? அவள் பெயர் எனக்கெப்படித் தெரியும்? அவள் என்னிடமா பேசவந்தாள்? இல்லையே.

ஜெயசிங்:—சரி? இருக்கட்டும். நீ அவளைப் பார்த்திருப்பாயென்று நம்புகிறேன். அவள் எப்படி இருக்கிறாள்?

பொன்னம்மாள்:—நான் அதைப்பற்றிக் கூற முயன்ற போது தானே— நீ தடுத்துவிட்டாய். அவள் ஒரு இராணிபோல் இருந்தாள். ஆம் அப்படிப்பட்ட கம்பீரம் பொருந்திய மாதை இதுகாறும் கண்டதில்லை அவளுடைய முகம்மல் உடை தரையில் புரண்டுகொண்டிருந்தது. அவள் அணிந்திருந்த இரத்தினங்களோ! ஆ எவ்வளவு பெரியவை!

ஜெயசிங்:—அவள் நிறம் சற்று கறுப்போ?

பொன்னம்மாள்:—அவள் கூந்தல் கறுப்பே. கண்களும் கறுப்பே.

பொன்னம்மாள்:—"ஆம்; ஆம். நீ அவளை அறிவாயோ?" என்று குசு குசுவெனக் கேட்டாள்.

ஜெயசிங், "இல்லை. நான் நேராகக் கண்டதில்லை. ஆயினும் அவள் யாரென்று நான் கூறக்கூடும் என்றே நினைக்கிறேன். அவள் இன்று வந்து தங்கம்மாளைக் கண்டாளோ? அப்படியா சங்கதி அப்புறம்?" என்றான்.

பொன்னம்மாள்:—ஆம். தான் திரும்பிச் செல்லுமுன் எஜமான் வீட்டிற்கு வந்து விடுவார் என்று அவள் அறிவாள் என்றே நான் யூகிக்கிறேன்," என்றாள்.

அம்மொழிகளைக் கேட்டதே ஜெயசிங் மனத்துடிப்படைந்து, "ஆ! நீ தயவு செய்து நிதானமாய் முதலிலிருந்து நடந்த சங்கதியைக் கூறு," என்றான்.

பொன்னம்மாள்:—நான் உனக்குக் கூறவில்லையா? நான் மேல்மாடிக்கு உடையணியச் செல்லும்போது மாலை மூன்று மணியிருக்கும். நான் அந்தக் கூடத்தில் சற்று நின்றேன். அங்கிருந்த கதவினருகில் நின்றேன். தங்கம்மாள் அவளிடம் சிநேகிபோல் பேசிக்

கொண்டிருந்தாள். தங்கம்மாள் ஒரு மாதிரி பேசியதால் அம்மனுஷி தன்னிடம் வந்து பேசுவது அவளுக்குப் பிரியமில்லாததுபோல் எனக்குப் புலப்பட்டது. ஆயினும் அம்மாது அதைச் சற்றும் கவனிக்காதவள்போல் மிக்க இனிமையான தேன்மொழிகளால் பேசினாள். பிறகு அவர்கள் வெளிவந்தபோது அவர்கள் பேசிக்கொண்டிருந்த மாதிரியைப் பார்த்தால் அம்மாது தங்கம்மாளைச் சகோதரிபோல் நேசிக்கிறவளென்று யாரும் கருதுவார்கள். அவள் தங்கம்மாள் முகத்தை நோக்கி, "உனக்கு அதிக வேலையிருப்பது போல் தெரிகிறது. நீ ஒரு நாளேனும் வந்து என்னிடம் இருந்தால் எனக்கு மிக்க சந்தோஷமாக இருக்கும். நாம் பழைய சங்கதிகளைப்பற்றிப் பேசலாம்," என்றாள்.

ஆனால் தங்கம்மாளோ அவள் மொழிகளால் சற்றேனும் பிரீதி யடையவில்லை. தான் அம்மாதை விரும்பவில்லை என்பதையே நன்றாகத் தன் நடவடிக்கைகளால் வெளிக்குக் காட்டினாள். அவளுக்குப் பதில் கூற வாய் திறந்தாள். ஆனால் அச்சமயம் முன்னிருந்த கதவு திறக்கப்பட்டதும் பூபாலப் பிள்ளை அறைக்குள் வந்தார். அவர் அவர்கள் இருவரையும் பார்த்ததே மிகத் திடுக்கிட்டு விட்டார். அவர் மரியாதையாக ஏதோ கூற முயன்றார். ஆனால் அவருடைய மனோநிலைமையால் வாய்திறக்க முடியவில்லை. அம்மாது "ஆ நான் தங்களைக் காண்பேனென்று எதிர்பார்க்கவில்லை...." என்று மெதுவாய் என்னமோ கூறிக்கொண்டே வெளிச்செல்லக் கதவருகிற் சென்றாள். ஆனால் பூபாலப் பிள்ளை அம்மாதை நிறுத்தி தமது இரகசிய அறைக்கு அழைத்துச் சென்றார். அக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த தங்கம்மாள் பித்தம் பிடித்தவள்போல் அவர்களிரு

வரையும் நோக்கியபடி பிரமித்து நின்றான். பூபாலப் பிள்ளை தமது பிரயாணப் பையைக் கரத்திலும் குடையைக் கக்கத்திலும் வைத்தபடி சென்றார். தங்கம்மாள் அங்கு நெடுநேரம் நிற்கவில்லை, ஏதோ ஒரு பேய்பிடித்தவள் போல் கூடத்தின் வழியாக ஓடி வந்தாள். அவள் எங்கே என்னைப் பார்த்து விடுவாளோ, பூபாலப் பிள்ளை முன்பாக அவமானப்படுத்தி விடுவாளோ என்று நான் மிக்க நடுக்கமடைந்து விட்டேன். நான் அங்கிருந்த படிகளுக்கும் சுவருக்கும் இடையிலுள்ள இடத்தில் மறைந்து நின்றிருந்தேன். ஆயினும் எங்கே என்னைப் பார்த்து விடுவார்களோ என்ற பீதி அதிகமாக இருந்தது.

ஆனால் தங்கம்மாள் நேராகப் போய்விட்டாளேயன்றி என்னைக் காணவில்லை. இதில் ஏதோ பயங்கரமான மர்மம் இருக்கிறதென்று என் புத்திக்குப் புலப்பட்டது. ஆகவே எப்படியாயினும் ஆகட்டும். நாம் இங்கேயே நிற்போம் என்று தீர்மானித்துக் கொண்டேன். அவர்களிருவரும் அந்த இரகசிய அறைக்குள் சென்று பேசிவிட்டு வெளிவரும் வரையில் அங்கேயே இருக்கக் கருதினேன். நான் நெடுநேரம் காத்திருக்க நேரிடவில்லை. சில நிமிடங்களுக்குள் அறையின் கதவு திறக்கப்பட்டதும் இருவரும் வெளிவந்தார்கள். ஐஜமான் முன்னும் அம்மாது பின்னுமாக வந்தார்கள். அவன் முன்னே படிகளை நோக்கிச் செல்வதையும் அம்மாது பின்னால் துரிதமாகச் செல்வதையும் கண்டபோது எனக்கு மிக்க அபூர்வமாகவே தோன்றியது. அச்சமயம் அவள் முகத்தில் தோன்றிய மிக்க மனவியாகுலமும் ஆவலுமான குறிகள் எனக்கு மிக்க வியப்பை உண்டாக்கிவிட்டன.

அவர்கள் இருவரும் பூபாலப் பிள்ளையின் இரகசிய அறைக்குள் சென்றபோது எனக்குண்டாயிருந்த திகில்

இத்தகையதெனக் கூறமுடியாது. நான் அங்கு மறைந் திருந்து உற்றுக் கேட்டேன் என்று தெரிந்தாலோ அதோடு என் ஜீவனமே போய்விடும். ஆயினும் அவர் கள் அந்த இரகசிய அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டதும் நான் அதனருகில் சென்று பூட்டுத் துவாயில் செவி வைத்து உள்ளே என்ன பேசுகிறார்களென்று உற் றுக் கேட்டேன்," என்றாள்.

ஜெயசிங் ஆவலோடு "நீ என்ன கேட்டாய்?" என்று கேட்டான்.

பொன்னம்மாள்:—"முதலில் நான் அம்மாது சந்தோஷத் தோடு கூச்சலிட்டதைக் கேட்டேன். அவ்வாறு கூவி யதும் அவள் 'ஆ! நீ இதை எப்போதும் உன் எதிரில் வைத்துக்கொண்டே இருக்கிறாய். நீ பாசாங்கு செய் கிறபடி என்னை வெறுக்க முடியாது,' என்றாள். அவள் கூறுவதன் அர்த்தம் இன்னதென்று எனக் குச் சற்றுமே புலப்படவில்லை. அவர் எதை எப் போதும் எதிரில் வைத்திருப்பதாக அவள் கூறினு ளென்று எனக்குத் தெரியவில்லை. அச்சமயம் அவர் என்ன செய்கிறாரென்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் அறையில் நடக்கும் சத்தம் மட்டும் கேட்டது. பிறகு அம்மாது இப்போது தான் ஏதோ துன்பமடைந்தவள் போலும் எதற்காகவோ மிக்க வியப்படைந்தவள் போலவும் பிரலாபித்தாள். எஜ மான் உடனே நின்று என்னவோ அவளிடம் பேசி னார். அவர் கூறிய வார்த்தைகளில் ஒன்றுமே என் செவியில் விழவில்லை. ஏனெனில் அவர் மிக்க மெது வாய்ப் பேசினார். அம்மாது துக்கமடைந்து சற்று தேம்பியழுவது என் செவியில் வீழ்ந்தது. எனக்குப்

பெரும் பயந்தோன்றியதால் உடனே அந்த விடத்தை விட்டு ஓடிவிடலாமென்று கருதினேன்.

அச்சமயம் அம்மாது விறிட்டுக் கத்தி 'ஓ! இன்னம் ஒன்றுமே கூறவேண்டாம். அந்தோ! மிக்க பெருமையோடிருந்த நமது குடும்பத்தில், இக்கௌரவமான குடும்பத்தில் குற்றம்,—குற்றம் சேர்வதாயின்—ஓ கடவுளே! நீ எப்படி? நீ! நீ! எப்படி அதைச் செய்தாய்?' என்றாள். இதே மாதிரி மிக்க ஆத்திரத்தோடும் அயாத்தோடும் ஆவேசம் வந்தவள்போல் கேட்டாள். ஆம். இதே வார்த்தைகள் அவள் கேட்டாள்," என்றாள்.

ஜேயசிங்:—சரி. இதற்குப் பூபாலப் பிள்ளை என்ன கூறினார்?

போன்னம்மாள்:—ஓ! அதற்கப்புறம் கேட்க நான் அங்குத் தங்கியிருக்கவில்லை. பெரிய மனிதர்களாக இருப்பவர்கள் அப்படிப்பட்ட சங்கதிகளைப் பற்றிப் பேசுகையில் கதவருகில் நின்று கேட்பது தகுதியல்ல என்று எனக்குத் தோன்றியது. நான் உடனே அதைவிட்டு மேல் மாடிக்குப் போய்விட்டேன்.

ஜெயசிங் இச்சங்கதியை இன்னும் யாரிடமாயினும் கூறினையோ என்று வினவினான். பொன்னம்மாள் "ஒருவரிடமும் கூறவில்லை. நான் அத்தகைய இழிவான காரியத்தைச் செய்வேனென்று எண்ணினை? அதிலும் இங்கு நடக்கும் எந்தச் சங்கதியையும் உனக்கு மட்டுமே கூறுவதாக வாக்களித்திருக்கையில்," என்றாள்.

அதன் பிறகு அவர்களுக்குள் அதிக சம்பாஷணை நடக்கவில்லை. மார்த்தாண்டம் சீமாட்டி என்ற பங்கஜம் ஒரு பெரிய சீமாட்டியைப்போல் நடந்து கொள்வதில் மிக்க விருப்பம் உடையவள் என்று ஜெயசிங் தெரிந்து கொண்டான். இப்போது அச்சீமாட்டியை நேரிற்கண்டு பேச

அவனுக்குத் துணிகரமுண்டாகி விட்டது. பேசவேண்டியதும் அவசியம் என்று புலப்பட்டது. ஏனெனில் பொன்னம்மாள் கூறிய விஷயங்களால் பூபாலப்பிள்ளை ஏதோ ஒரு பெரிய குற்றம் செய்துவிட்டிருக்கிறார் என்று தெரிய வந்ததோடு அந்த மர்மமாகிய இரகசியம் மார்த்தாண்டம் சீமாட்டிக்கு மட்டும் தெரியும் என்றும் அவன் உணர்ந்தான்.

ஜெயசிங் வீட்டிற்குச் சென்று ஒரு புது மாதிரியான மாறுவேட மணிந்து அச் சீமாட்டியின் வாசஸ்தலத்திற்குச் சென்று மணியடிக்கும் கயிற்றைப் பிடித்து இழுத்தான். உடனே ஒரு நீக்ரோ மாது வந்து கதவைத் திறந்தாள். ஜெயசிங் தான் ஒரு அவசியமான விஷயமாகச் சீமாட்டியைக் காண வந்திருப்பதாகக் கூறினன். அம்மாது உள்ளே சென்று சற்று நேரத்திற்குள் திரும்பிவந்து "சீமாட்டி சுகவீனமாக இருக்கிறார்களாதலால் ஒருவரையுங் காண முடியாது," என்று கூறினள். ஜெயசிங் வெறுங் கையோடு செல்லவில்லை. ஒரு நண்பனிடமிருந்த விலைமதிக்கத்தக்க ஒரு புராதனமான வேலைப்பாடுடைய ஒரு பாத்திரத்தை எடுத்துச் சென்றான்.

9-வது அத்தியாயம்

வேலைக்காரி, சீமாட்டி ஒருவரையும் காணமாட்டாள் என்று கூறியதைக் கேட்ட ஜெயசிங் சற்றும் மனமுடைந்து விடவில்லை. உடனே பாத்திரம் இருக்கும் கூடையை அவளிடம் அளித்து "இதைக் கொண்டுபோய்ச் சீமாட்டியிடம் கொடுத்துவிடு. இத்தகைய பொருள் சீமாட்டிக்கு மறுபடி கிடைக்கத் தக்கதல்ல வென்று கூறு," என்றான்.

வேலைக்காரி சந்தேகத்தோடு தலை அசைத்துக் கொண்டே அதை எடுத்துச் சென்றாள். ஆனால் நாம் சந்தேகப்பட்டது தவறென்று சீக்கிரத்திலேயே அவளுக்குப் புலப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் மறு நிமிடமே வெறுங்கையோடு திரும்பி வந்து, "சீமாட்டி உம்மைக் காண விரும்புகிறார்கள். வாரும், என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஜெயசிங் உள்ளே சென்று சீமாட்டியைக் கண்ட போது அவள் மனவாட்டம் அடைந்தவள்போல் உலவிக் கொண்டிருந்தாள். அவள் கரத்தில் ஒரு கடிதத்தை வைத்து மடித்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அவள் அதை வாசித்து முடித்தாள் போல் தோன்றியது. ஜெயசிங் கொண்டு வந்த பாத்திரம் மேஜைமேல் வைக்கப் பட்டிருந்தது.

ஜெயசிங் மரியாதையோடு வாயிற படியில் வந்து நிற்பதைக் கண்டதும் அவள் கடிதத்தை ஒரு புத்தகத்தில் வைத்துவிட்டு மேஜைமேலிருந்த பாத்திரத்தை எடுத்தாள். அப்போது ஜெயசிங் அவள் உருவத்தை உற்று நோக்கினான். அன்று அவளும் பூபாலப் பிள்ளையும் பேசியபோது அவள் இருந்த மாதிரிக்கு இப்போதிருப்பதைக் கண்டதே அவன் திடுக்கிட்டு விட்டான். அப்போது அவள் விலை உயர்ந்த கப்பிரமான பட்டுடை அணிந்திருந்தாள். இப்போது சாதாரண உடை அணிந்திருக்கிறாள். இந்த மாறுத லல்ல அவனைத் திடுக்கிடச் செய்தது! அவள் முகத்தில் அப்போதிருந்த சந்தோஷப் பிரகாசம் இப்போது கொஞ்ச மேனு மில்லை. அவளுக்குச் சுகவீனமேனும் நேர்ந்திருக்க வேண்டும். அல்லது மனச்சோர்வை உண்டாக்கத்தக்க சம்பவம் ஏதுவோ நேர்ந்திருக்கவேண்டும். அவள் முகத் திற்குள் எரிந்துகொண்டிருந்த தீபமே அணைந்து விட்டது.

போல் தோன்றியது. அன்று தலை நாணி நின்ற பூபாலப் பிள்ளை முன் நின்றபோது அவள் உற்சாகமும் மனோ வல்லமையும் களிப்பும் உடையவளாக இருந்தாள். இப்போது அவை அனைத்தும் மறைந்து போயின. ஓகோ! இவள் கொண்டிருந்த நம்பிக்கை அடியோடு போய் விட்டது போலும், என்று ஜெயசிங் எண்ணிக் கொண்டான்.

சிமாட்டி தன் கையிலிருக்கும் பாத்திரத்தை நோக்கியபடி "இது மிக்க நேர்த்தியான சித்திர வேலைப்பாடுள்ள சாமான். நீ எங்கிருந்து வருகிறாய்? இச் சாமான் யோக்கியமான வழியில் தான் விற்கப்படுகிறது என்பதற்கு ஏதேனும் அத்தாட்சிப் பத்திரம் உன்னிடமிருக்கிறதா?" என்று வினவினாள்.

ஜெயசிங் புன்னகையோடு முதற் கேள்வியைக் கவனிக்காதவன்போல் விட்டு விட்டு "அத்தாட்சி பத்திரம் ஒன்றும் என்னிடமில்லை. ஆயினும் இந்நகரத்திலுள்ள போலீஸாரனைவரும் இப்போது இச்சாமானோடு நான் இங்கு வந்திருப்பதை அறிந்தால் எனக்கு அதனால் எள்ளளவும் பயமில்லை," என்றான். சிமாட்டி அதைக் கேட்டதும் தன் தோட்களை அசைத்துக்கொண்டே அப் பாத்திரத்தின் விளிம்பைத் தடவிப் பார்த்து "இம்மாதிரிப் பாத்திரம் எனக்குத் தேவையில்லை. மேலும் மேலும் இச் சமயம் இந்தப் பிற்பகல் நான் பேரம் செய்யும் மனோ நிலைமையிலில்லை," என்று சோர்வோடு கூறிக்கொண்டே பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டாள். ஆனால் மறுபடி "இது என்ன விலை?" என்றாள்.

ஜெயஸிங் அளவு மீறிய விலை கூறினான். அதைக் கேட்டதே அவள் திடுக்கிட்டு அவன் முகத்தை உற்று நோக்கி "நீ இதை எடுத்துச்சென்று இன்னும் யாருக்கேனும் காட்டு. அவ்வளவு தொகை என்னிடமில்லை,"

என்றாள். ஜெயசிங் தடுமாற்றத்தோடு அதை எடுத்துக் கொண்டே "ஆயினும் இதைத் தங்களுக்கு விற்கவே எனக்குப் பிரியம். ஒரு சமயம்...." என்பதற்குள், வெளியிலிருந்த அறையிலிருந்து ஒரு ஸ்திரீ சீமாட்டி உள்ளே இருக்கிறார்களா, என்று கேட்டுக்கொண்டே வரும் சத்தம் கேட்டது.

அதைக் கேட்டதே சீமாட்டி சட்டென்று பாத்திரத்தை அவன் கரத்திலிருந்து எடுத்துக்கொண்டு "ஓ! அதோ அரிய நாயகி என்று அறையின் கதவைத் திறந்தபடி விட்டுவிட்டுப் பக்கத்தறைக்குச் சென்றாள். வந்த மாது நல்ல நாணயமான உடை அணிந்திருக்கிறாள். இருவரும் க்ஷேமங்களை விசாரித்தபின் ஜெயசிங் கொண்டு வந்த சாமானை எடுத்துக் கொண்டு ஒரு புறமாகச் சென்று நின்றார்கள். இருவரும் அச்சாமானைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

ஜெயசிங் இதுதான் நமக்குச் சமயம் என்று கருதினான். அச்சீமாட்டி வாசித்துவிட்டுப் புத்தகத்தில் வைத்த கடிதம் மேஜைமேல் இருக்கிறது. ஜெயசிங்கின் கைக்கு இரண்டங்குல தூரத்திலேயே அது இருக்கிறது. சாமானைப் பார்ப்பவர்கள் இருவரும் முதுகை இவன் பக்கம் திருப்பிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அப்புத்தகத்தின் மேல் அட்டையைத் திருப்பினால் உள்ளிருக்கும் கடிதத்தைச் சுலபமாக வாசித்தறியலாம். ஜெயசிங் உடனே ஒரு கண்ணால் அம்மாதரைப் பார்த்துக் கொண்டே மற்றொரு கண்ணால் அக்கடிதத்திலுள்ள பின்வரும் சமாசாரத்தை வாசித்தான்.

"என் அன்பார்ந்த பங்கஜம். நீ அனுப்பிய மாதிரி உடையை நான் இரண்டொரு வர்த்தகர்களிடம் காட்டினேன். அதே திறமுடைய வல்வெட் கிடைப்பது கஷ்டமென்கிறார்கள். ஆயினும் இன்னும் சிலரைக் காண்கிறேன்.

நீ பூபாலப்பிள்ளையைப் பற்றிய சங்கதியைக் கேட்கிறாய். நான் அவரைப் பன்முறைச் சந்தித்தேன். அவர் முன் உனக்குத் தெரிந்த மாதிரியாகஇல்லை. இப்போது மிக்க திதான புருடராய் விட்டிருக்கிறார். முன்பு என்னிடம் நீ அவர் விஷயத்தில் சில நம்பிக்கைகள் கொண்டிருப்பதாக என்னிடம் மொழிந்தாய். அந்த விஷயம் இப்போது அனுபவத்திற்கு வாராதென்று கூற நான் மிக்க விசனிக்கிறேன். இது உண்மை; அவர் என்ன செய்திருக்கிறாரென்றால்..." என்றமட்டில் வாசித்தான்.

அச்சமயம் அம்மாதர்களின் சம்பாஷணை முடிந்துவிட்டது. சீமாட்டி அங்கிருந்து திரும்புவதுபோல் தோன்றியதால் ஜெயசிங் புத்தகத்தைச் சட்டென்று மூடிவிட்டான். சீமாட்டி அவனருகில் வந்து, "இது மிக்க நேர்த்தியாகவே இருக்கிறது. ஆயினும் நான் முன்பே கூறியதுபோல் நான் இதை வாங்கும்மனமுடையவளாக இல்லை. நீ கூறிய விலையில் பாதிக்கு அளிப்பதாயின் யோசிப்பேன்," என்றாள்.

ஜெயசிங்குக்கு அப்பொருளை விற்றுவிடப் பிரியம் சற்றுமில்லை. அவன் அதை ஒரு சாக்காகக் காட்டி அச்சீமாட்டியிடம் பேசக் கூடுமானால் பூபாலப் பிள்ளை செய்திருக்கும் குற்றம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க எண்ணி வந்தானே அன்றி வேறில்லை. ஆகையால், "அம்மா! நான் அப்படி அரைவிலைக்களிக்க முடியாது. நான் கூறிய விலை அளிப்பதாயின் பாருங்கள். இன்றேல் பூபாலப் பிள்ளையிடம் நான் அதே விலை பெறலாகும்," என்றான்.

சீமாட்டி திடுக்கிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு "பூபாலப் பிள்ளையிடம் நீ பேரம் செய்வதுண்டோ?"

என்றாள். ஜெயசிங், "அவர் இத்தகைய வேலைப்பாடுகளின் திறமையை அறிந்து கொள்ளும் குணம் வாய்ந்தவர்," என்றான்.

சீமாட்டி, "எனக்கு இது வேண்டாம். நீ இதை யாரிடத்திலேனும் கொண்டுபோய் விற்றுக் கொள்ளலாம்," என்றாள்.

ஜெயசிங் அதற்குமேல் பேச இடமில்லை. ஆகையால் தன் பொருளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து திரும்பினான்.

* * * * * *
* * * * *

இரண்டொரு நாட்கள் கழிந்து ஜெயசிங்கும் ஆனந்தசிங்கும் சந்தித்தார்கள். ஆனந்தசிங், "அந்த இரண்டு கள்ளர்களும் மிக்க தொந்தரை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வடக்கிலுள்ள போலீஸாரை ஏமாற்றி விட்டுச் சிறைச்சாலையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். இங்குப் பல இடங்களில் தங்கள் கையைக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது இந்த நகரத்திலேயே எங்கோ பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எங்கிருக்கிறார்களோ....?" என்றான்.

அச்சமயம் ஆனந்தசிங்கின் முகத்தில் ஒரு விதமான விகார முண்டாயிற்று.

ஜெயசிங்:—"அப்படியா சங்கதி? அப்படியாயின் அவர்களை எப்படியாயினும் பிடித்துக் கொள்ளலாம். என்னிடத்தில் சரியான இரண்டு ஆசாமிகளை மட்டும் கொடுத்துவிட்டால் இம்மாதம் முடிவதற்குள் கட்டாயம் அப்பயல்களைப் பிடித்து விடுவேன், என்று பந்தயங் கட்டுவேன்," என்று பொன்னம்மாள் தன்னிடம் கூறிய சங்கதிகளை எல்லாம் கூறினான்.

ஆனந்தசிங், "வலை நெருங்குகிறது. முடிவு என்னமாமோ எனக்குத் தெரியாது. 'குற்றம்' என்று அவள் கூறினள்? அந்தப் பெண் எந்த மூலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறுளென்று தெரிந்தால்," என்றுன்.

ஆனந்தசிங் கூறியதற்கு விடையளிப்பது போல் கதவு திறக்கப்பட்டதும் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த அவர்கள் ஆட்களில் ஒருவன் உள்ளே வந்தான். அவன் கரத்தில் ஒரு கடிதம் கொண்டு வந்தான். ஆனந்தஸிங் அதை வாங்கிப் பார்த்த பின், "இதைப்பார்! என்று ஜெயசிங்கினிடமளித்தான். ஜெயஸிங் அதை வாசித்துப் பார்த்த போது அதில் கீழ்க்கண்டபடி வரைந்திருந்தது:—

"பதினைந்தாவது வீதியின் பின்னுல் இருக்கும் ஆற்றில் ஒரு பெண்ணின் சவம் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அச்சவம் நீர் முன்பு கொடுத்திருந்த குறிப்பில் கண்ட அடையாளங்களை ஏறக்குறைய உடையதாக விருக்கிறது. அது பார்வைக்குச் சமீபகாலத்தில் இறந்த உருவமாகத் தெரியவில்லை. அதைப்பற்றி என்ன செய்வதென்று நமது மேல் அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறேம். நீர் அச்சவம் சவக்கிடங்கிற்குக் கொண்டு போகப்படுமுன் காணப் பிரியப்பட்டால் பதினைந்தாவது வீதியின் கோடியிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே வாரும்—இப்படிக்கு கிரிநாதன்."

ஜெயஸிங் இதை வாசித்துப் பார்த்தபின், ஆனந்தசிங்கை நோக்கி, "சரி வாரும். நாமே நேரில் போய் அதைப் பார்வை இடுவோம். அப்படி அது நாம் தேடும் பெண்ணின் சவமாகவே இருந்தால்...." என்றதே ஆனந்தசிங், "பூபாலப்பிள்ளை இன்று ஒரு விருந்து வைத்திருக்கிறுர். அது போனுல் போகட்டும். இதைக் கவனிக்கவேண்டியதே," என்றுன்.

ஒரு மணி நேரத்திற்குள் ஆனந்தசிங், ஜெயசிங் இருவரும் அப்பெண்ணின் சவத்தின் முன்போய் நின்றார்கள். ஜெயசிங் அதைக் கண்டதும் ஒருவிதப் பீதி யடைந்து மரம்போல் ஸ்தம்பித்து நின்றான். அதில் மர்மம் அதிகமாக ஒன்றுமில்லா விடினும், அதில் சம்பந்தப்பட்ட ஆசாமிகள் செல்வாக்கும் பிரசித்தியும் உடையவர்கள்.

அச்சவத்தின் முகம் மூடப்பட்டிருந்தது; அதைத் திறந்தால் நாம் எதைக் காண்போமோ என்று ஜெயசிங் மிக்க பீதியடைந்து விட்டான். ஆனந்தசிங் அச்சவத்தின் மேலிருந்த முகமூடியை நீக்கிப் பார்த்தபோது, அங்கிருந்த உத்தியோகஸ்தன், "ஒரு மெலிந்த உருவமே. ஆனால் முகத்தின் அடையாளங்கள் தெளிவாக இல்லாதது மிக்க பரிதாபம்." என்றான்.

ஜெயசிங் அச்சவத்தின் கூந்தலை உற்று நோக்கினான். அக்கூந்தல் சற்று சிவந்த பொன்னிறமாக விருந்தது. அதைக் கண்டதும் அவன், "முகத்தின் குறிகளை நாங்கள் கவனிக்க வேண்டிய அவசியமே இல்லை. இவள் கூந்தலே போதும். இவள் அப்பெண்ணல்ல," என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

அப்போது ஆனந்தசிங் நடந்து கொண்ட மாதிரி அவனுக்குச் சொல்லொணு வியப்பை உண்டாக்கிற்று. ஆனந்தசிங், "உயரம், மெலிந்த தேகம், முகம் வெளுப்பு, கண்கள் கறுப்பு, முகத்தின் அடையாளங்கள் அப்படியே இல்லாமற் போனது பரிதாபம்," என்று தனக்குத் தானே மெதுவாகக் கூறிக்கொண்டான்.

ஜெயசிங் ஆனந்தசிங் தோளைப் பற்றிக்கொண்டு, 'பொன்னம்மாள் அப்பெண்ணின் கூந்தல் மிகக் கறுப்பு என்பதைப் பற்றி முக்கியமாய்க் கூறினான்," என்று கூறியதும் மறுபடி அச்சவத்தை உற்று நோக்கித் திடுக்கிட்டு

"ஐயோ! கடவுளே" என்று அலறிவிட்டான். ஏனெனில் அவள் கூந்தல் பொன்னிறமோ கறுப்போ எப்படியாயி னும் ஆகட்டும்; பாதையில் செல்லும்போது பூபாலப் பிள்ளை கூடை எடுத்துச் சென்ற ஒரு பெண்ணைச் சந்தித் துச் சற்று நேரம் பேசினுனே, அப்பெண்ணே இவள் என்று ஜெயசிங்குக்குப் புலப்பட்டது. அவளைப் பற்றிய மற்ற விஷயங்கள் அவனுக்குச் சற்று மறதியாக விருந்தா லும் அவளணிந்திருந்த உடை நன்ருக நினைவிலிருந்தது. உடனே தான் ஜேபியில் எடுத்து வைத்திருந்த அவளுடைய உடையிலிருந்து கிழிந்துபோன துண்டை எடுத்துப் பார்த் தான். அவள் அப்போதும் அதே உடை அணிந்திருந்ததால் தான் அவனுக்கு அந்த நினைப்பு வந்தது. அத்துண்டை எடுத்து அச்சமயம் அவளணிந்திருந்த உடையோடு ஒத்திட் டுப் பார்த்தான். எல்லா விதத்திலும் இரண்டும் ஒன்றே என்று தெரிந்தது.

ஆனந்தசிங் அவர்கள் எதிரிலிருக்கும் சவத்தின் சிரசிலும் புயங்களிலும் உள்ள, ஏதோ பலமான கருவியால் உண்டானதுபோன்ற காயங்களையும் வீக்கத்தையும் சுட் டிக் காட்டி "எப்படியாயினும் இவள் எனக்கு ஒரு கேள் விக்கு விடையளிக்க வேண்டியிருக்கிறது. அதாவது இவ் வாறு குரூரமாக நடத்தப்பட்ட இப்பெண் யாரென்பதே," என்று கூறிவிட்டு அங்கிருந்த உத்தியோகஸ்தனை நோக்கி "இத்தேகத்தின்மேல் வேறு காயங்களிருக்கின்றனவோ?" என்று கேட்டான்.

உத்தியோகஸ்தன், "ஆம். இவள் மிக்க குரூரமாக அடித்துக் கொல்லப்பட்டிருக்கிருள்," என்ருன், ஆனந்த சிங் "ஆம். மிக்க குரூரமான கொலையே" என்று ஒருவிதத் தீர்மானத்தோடு கூறிச் சவத்தின் முகத்தின்மே லிருந்த

லியைத் தூக்கி முகத்தைப் பார்த்துவிட்டு மறுபடி மூடினான்.

பிறகு இருவரும் அங்கிருந்து ஆற்றோரமாகத் திரும்பி வரும்போது ஜெயசிங் "சரி, ஒரு விஷயமட்டும் உண்மையெனத் தெரிகிறது. பூபாலப்பிள்ளையின் வீட்டிலிருந்து ஓடிவிட்ட பெண் இவளல்ல என்று மட்டும் தெரிகிறது," என்றான்.

ஆனந்தசிங் "அது எனக்கு அவ்வளவு நிச்சயமாகத் தோன்றவில்லை," என்றான். ஜெயசிங் வியப்படைந்து "ஏன் அப்படிக் கருதவேண்டும்? அந்த ஓடிவிட்ட பெண்ணைப் பற்றிப் பொன்னம்மாள் கூறிய அடையாளங்களைத்தும் பொய்யென்று கருதுகிறாய்?" என்றான்.

ஆனந்தசிங் நகைத்துப் பின்னால் திரும்பி, கூடவரும் உத்தியோகஸ்தனை நோக்கி "ஏதோ நான் கொடுத்தேனே அந்த விவரத்தைக் கொடு. சில தினங்களுக்குமுன் துறைமுகப் போலீஸாருக்குக் கொடுக்கும்படி கொடுத்தேனே," என்றான்.

அந்த உத்தியோகஸ்தன் உடனே தன்ஜேபியிலிருந்து ஒரு அச்சடித்த கடிதத்தை எடுத்து ஆனந்தசிங் கூறியபடி ஜெயசிங்கிடமளித்தான். அதில் பின்வருமாறு இருந்தது.

"ஓர் வர்லிபப்பெண்ணின் தேகத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். உயரமான. சற்று மெலிந்ததேகம். நல்ல உருவம். பிரகாசமான நிறம். அத்தகைய பெண்ணின் தேகம் அகப்பட்டால் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனந்தசிங்,"

ஜெயசிங் இதை வாசித்துப் பார்த்து "எனக்குச் சற்றும் விளங்கவில்லை," என்றான். ஆனந்தசிங் அவன் தோளைத் தட்டி "இன்னொரு முறை ஏதேனும் மர்மம் அடங்கிருக்கும் ஒரு அறையை நீ சோதனை செய்யும்போது

அங்கிருக்கும் பீரோவின் கீழ் நன்ருகப் பார். அங்கு ஒரு சீப்பு இருந்து அகப்பட்டு அச்சீப்பில் பொன்னிறமான இரண்டு மூன்று உரோமங்கள் இருந்து அகப்படின், அங்கு வசித்திருந்த பெண்ணின் கூந்தலைப் பற்றி எத்தனை பொன்னம்மாள் என்ன கூறினும் நம்பாதே," என்ருன்.

10-வது அத்தியாயம்

ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் பூபாலப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினூர்கள். ஒரு வேலைக்காரன் வந்து கதவைத்திறந்ததும் ஆனந்தசிங் "பூபாலப்பிள்ளை வீட்டிலிருக்கிருரா? நாங்கள் அவரைக் கண்டு பேசவேண்டும்," என்ருன்.

வேலைக்காரன் "ஐயா! அவர் போஜனம் செய்து கொண்டிருக்கிருர். நீங்கள் பெயரைக் கூறினுல் நான் சென்று அறிவிக்கிறேன்," என்ருன்.

ஆனந்தசிங் "அவருக்கு அப்படித் தொந்தரை கொடுக்க வேண்டாம். ஒரு நிம்மதியான அறையைக் காட்டு. நாங்கள் அவர் போசனத்தை முடித்துக்கொண்டு வருமட்டும் காத்திருக்கிருேம்," என்ருன்.

வேலைக்காரன் அவ்வாறே செய்கிறேன் என்று அவர்களிருவரையும் அங்கிருந்த கூடத்தின் வழியாக அழைத்துச் சென்று ஒரு சிறிய அறையின் கதவைத் திறந்தான். அந்த அறை சுத்தமாகவும் தடித்த அழகிய திரைகள் விடப்பட்டும் இருந்தது. வேலையாள் அவர்களை அங்கு உட்காரவைத்துவிட்டு "நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்று எஜமானனுக்கு அறிவிக்கிறேன்," என்று கூறிவிட்டுத் துரிதமாய் போஜன அறையை நோக்கிச் சென்ருன்.

ஜெயசிங் "நாம் இங்கு வந்திருப்பது பூபாலப் பிள்ளைக்கு அவ்வளவாகப் பிடிக்காதென்றே நினைக்கி

றேன். வேலைக்காரன் கூறியதே அவன் தன்கூடப் போஜனம் செய்கிறவர்களை விட்டு எழுந்து வந்து விடுவானென்று நினைக்கிறாயா? அவன் குணம் சரியாக எனக்கு விளங்கவில்லை. உன் அபிப்பிராயம் எப்படியோ?" என்று ஆனந்தசிங்கை வினவினான்.

ஆனந்தசிங்:—இல்லை. பூபாலப்பிள்ளை நான் நினைப்பது தவருக இல்லாதிருந்தால், அவன் மனத்தைரியமுடையவனென்றே நினைக்கிறேன். அவன் மனக்கலக்கமடைந்ததாக அவன் முகத்தில் ஒரு நரம்புகூட அசங்காது என்பதைக் காண்போம்.

ஜெயசிங்:—"நானும் அப்படியே அச்சப்படுகிறேன்," என்றான்.

ஆனந்தசிங் அந்த அறையின் அலங்கரிக்கப்பட்ட சுவர்களையும், அங்கிருந்த விலையுயர்ந்த அழகான சாமான்களையும் நோக்கிப் புன்னகைபுரிந்தான். ஜெயசிங்கை நோக்கி உனக்கு அப்படித்தான் தோன்றும் என்றான்.

மறுநிமிடம் ஒரு வேலையாள் கையில் புட்டிகளும் கிண்ணங்களும் வைத்த ஒரு தட்டை எடுத்துக்கொண்டு வாயிற்படியில் நின்றான். அவனைக் கண்டதே இருவரும் மிக்க வியப்படைந்தார்கள்.

அந்த வேலையாள் தான் கொண்டுவந்த ஒயின்பானம் முதலியவற்றை மேஜைமேல் வைத்து "ஐயன்மீர்! எஜமான் தமது வந்தனத்தைக் கூறச்சொன்னார். நீங்கள் சந்தோஷத்தோடு காலத்தைப் போக்குவீர்களென்று அவர் நம்புகிறார். கூடிய சீக்கிரத்தில் வந்து தங்களைக் காண்பதாகக் கூறினார்?" என்றான்.

வேலைக்காரன் சென்றதே ஜெயசிங் ஒயின் புட்டியைத் தொடக் கையை நீட்டினான். அச்சமயம் ஆனந்தசிங்

"அவனுடைய ஒயிலே நாம் தொடாமலே விட்டுவிடுவது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது," என்றான். இதைக் கேட்டதே ஜெயசிங் திடுக்கிட்டு அயர்ந்து விட்டான். இருவரும் அதன் பிறகு அரைமணி நேரம் வரை பேசாமல் இருந்தார்கள். போசன அறையிலிருந்து பலர் கேளிக்கை யாகப் பேசும் சத்தம் இவர்கள் செவிகளில் விழுந்தது. அதன் பிறகு அங்கு வந்திருந்த விருந்தினர் ஒவ்வொரு வராக இவர்களிருக்கும் அறையின் முன்னுள்ள தாழ் வாரத்தின் வழியாக வெளிச்செல்வதைக் கண்டார்கள். அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் ஆடவரே. பூபாலப் பிள்ளை ஸ்திரீகள் ஒருவரையும் விருந்திற் கழைக்கிற வழக்கமில்லை. அங்கு நடந்தவிருந்து துரைத்தனவிவகாரத் தில் பூபாலப் பிள்ளைக்கு நெருக்கமான ஒரு நண்பருக்காக வைக்கப்பட்ட விருந்து. அந்த நண்பருக்குச் சமதையான அந்தஸ்தி யிருப்பவர்களே அந்த விருந்திற்கு அழைக்கப் பட்டார்கள்.

விருந்தினரனைவரும் சென்ற சற்று நேரங் கழித்து பூபாலப் பிள்ளை இவர்களிடம் வந்து இவர்களைக் காக்க வைத்ததற்காக மரியாதையாக மன்னிப்பு கேட்டுக் கொண்டு,

"நீங்கள் மிக்க அசந்தர்ப்பமான சமயத்தில் வந்து விட்டீர்கள். என்ன வேலையாக என்னிடம் வந்தீர்களோ ? வெகுவாய்த் துரைத்தன சம்பந்தமான விஷயமாகவே வந்திருப்பீர்களென்று நான் உத்தேசிக்கிறேன்" என்றார்.

அச்சமயம் ஆனந்தசிங்கின் முகத்திலுண்டான ஒரு விதத் துணிகரமான பார்வையைக் கண்ட ஜெயசிங் மிக்க வியப்படைந்தான். ஆனந்தசிங் "இவன் என்ன நம்மை அறியாதவன் போலவே சூடாய்த்துப் பேச முயல்கிறானே" என்று சிந்தித்துக்கொண்டே,

"எங்கள் விவகாரம் இராஜாங்க விவகாரத்தைப் பற்றியதல்ல. ஆயினும் மிக்க முக்கியமானதே. தயை செய்து கதவை மூடுகிறீர்களா?" என்றான்.

அம் மொழிகளைக் கேட்டதே பூபாலப் பிள்ளை மிக்க வியப்படைந்தார். எனினும் திரும்பிப் போய் கதவை மூடிக்கொண்டு அவர்கள் எதிரில் வந்து நின்று உற்று நோக்கினார். உடனே அவர் முகத்தில் ஒரு மாறுதலுண்டாயிற்று. "நான் உம்மைப் பார்த்திருக்கிறேன் என்று கருதுகிறேன்" என்றார்.

ஆனந்தசிங் ஆம் என்று தலையசைத்து "முன்பு இதே வீட்டில் தங்களைக் கலந்து பேசும் கௌரவத்தைப் பெற்றிருக்கிறேன்," என்றான்.

பூபாலப் பிள்ளையின் முகத்தில் அப்போது தோன்றிய குறியால் அவர் இவர்களைப் பூரணமா யறிந்துகொண்டார் என்று விளங்கிற்று. அவர் "ஆ! நினைவிருக்கிறது. இரண்டொரு வாரங்களுக்கு முன் இந்த வீட்டிலிருந்து ஒரு வேலைக்காரப் பெண்ணோ யாரோ ஒருத்தி ஓடிவிட்டாளே அவ் விஷயத்தில் நீங்கள் சிரத்தை எடுத்துக் கொண்டீர்கள். அவளைக் கண்டு பிடித்தீர்களோ?" என்று சற்றும் அதைப்பற்றிக் கவலை யில்லாதவர்போல் கேட்டார்.

ஆனந்தசிங் "கண்டுபிடித்தோமென்றே நினைக்கிறோம் தான் கொன்றவர்களை நதி அப்போதைக்கப்போது வெளியிடுகிறது ஐயா" என்றான்.

பூபாலப் பிள்ளை உண்மையாகவா? அவள் வேணுமென்றே ஆற்றில் வீழ்ந்திருந்தாளென்று நீங்கள் கருதவில்லை யென்று நினைக்கிறேன். ஒரு காலத்தில் என் வீட்டில் வசித்த ஒரு பெண்ணுக்கு அத்தகைய விபத்து நேர்ந்ததற்காக நான் விசனிக்கிறேன். என்ன கஷ்டம் அல்லது துன்பம் நேர்ந்து அவளை அப்படிச் செய்யும்படி தூண்டியதோ!" என்றார்.

ஆனந்தசிங் அவர் அருகிற் சென்று "அதை அறிவதற்கே நாங்கள் இங்குவந்தோம்" என்று கூறித் துணிகரத்தோடு ஆனால் பூர்ண மரியாதையோடு அப் பெண்ணைச் சமீபகாலத்தில் கண்ட தாங்கள் இதைப்பற்றிச் சொல்ப விவகாரமேனும் வெளியிடக் கூடியவராக விருக்கவேண்டும்," என்றான்.

பூபாலப் பிள்ளை ஆனந்தசிங் அனுப்பிய சீட்டிலுள்ள பெயரைப் பார்த்து "ஆனந்தசிங்! நீங்கள் முன்பு இங்கு வந்திருந்தபோது அந்தப் பெண்ணைப்பற்றியே எனக்குச் சற்றும் நினைவில்லை யென்று கூறினேனே. அத்தகைய ஒரு பெண் என் வீட்டிலிருந்தா ளென்பதே எனக்குத் தெரியாது. இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் என்னை எவ்வளவு கேள்விகள் கேட்டாலும் அவ்வளவும் வியர்த்தமான சம்பாஷணையாகவே முடியும்," என்றார்.

ஆனந்தசிங் தலையசைத்து, "இந்த வீட்டில் அப் பெண்ணுக்கும் தங்களுக்கும் எத்தகைய சம்பந்தமிருந்திருந்தபோதிலும் நான் அதைப்பற்றிக் கூறவில்லை. சில நாட்களுக்குமுன் பெரிய தெருவின் கோடியில் தாங்கள் அப் பெண்ணைக் கண்டு பேசியதைப் பற்றியே நான் கூறினேன். தாங்கள் இவளைக் கண்டு பேசினீர்களல்லவா?" என்றான்.

இவற்றைக் கேட்டதே பூபாலப் பிள்ளையின் முகத்தில் இரத்தம் ஏறிச் சிவந்து விட்டது. அவர் "ஐயா! நீர் அளவு மீறிப் போகிறீர்" என்று கூறித் தட்டென்று வாய் மூடிக்கொண்டார். அவர் மிக்க தற்பெருமையையும் கௌரவத்தையும் கவனிப்பவராயினும் இவரிடம் கோபமில்லைபோல் தோன்றியது. அது கோபத்தை வெளியிட இது சமயமல்லவென்று கருதியிருந்தாலு மிருக்கலாம்.

இரண்டொரு நிமிடங்கழித்து அவர் 'சில தினங்களுக்கு முன் நான் ஒரு வீதியின் கோடியில் ஒரு பெண்ணைக்கண்டு பேசினேன் என்பது உண்மையே. ஆனால் என் வீட்டில் வசித்துக்கொண்டிருந்தவள் அப்பெண் தான் என்று எனக்கு இப்போது தெரியாது. இப்போதும் தக்க ருசுவில்லாமல் நான் அப்படி நினைக்கமாட்டேன்,'' என்று கூறி விட்டு மறுபடி ஒரு விதமான தீட்சணியப் பார்வையோடு நிமிர்ந்து நின்று, "நான் யாரோ ஒரு ஏழைப் பெண்ணை வீதியில் கண்டுபேசினால் அதைக்கூட குறித்துக் கொள்ளவும் கவனத்தில் வைக்கவும் கூடியவிதமாய் நகரப் போலீஸ் அதிகாரிகள் என்மேல் வேவு ஆளை வைத்திருக்கிறார்களோ?" என்றார்.

பூபாலப்பிள்ளை கூறிய மாதிரியைக்கேட்டதே ஜெயசிங் மனங்கலங்கி விட்டான். "இத்தகைய கௌரவம் பொருந்திய புராதன குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெரிய மனிதன் மேல் வேவு வைத்தது குற்றமாய் விடுமோ, ஆனந்தசிங் இதற்கு என்ன சமாதானம் கூறுவான்?" என்று தனக்குள் கலக்கமடைந்தான்.

ஆனால் ஆனந்தசிங்கோ எத்தகைய விவகாரங்களாலும் எத்தகைய மனிதராலும், அவர்களிடம் ஆராய்ச்சிசெய்யப்படவேண்டிய மர்மம் இருக்கிறதென்று தெரிகிறவரையில், சற்றும் கலக்கமடைகிற மனமுடையவனல்ல. அதனால் அவன் அளித்த பதிலைக் கேட்டதே ஜெயசிங் தன் தலைவனைப்பற்றி மிக்க பெருமையே யடைந்தான்.

ஆனந்தசிங் பூபாலப் பிள்ளை கேட்டதற்கு பதில் "யோக்யதையான நடக்கையுடைய எந்த மனிதனும் தன் நடவடிக்கைகளை அதிகாரிகள் வேவு பார்ப்பதற்கு ஆட்சேபனை செய்யவேண்டிய அவசியமேயில்லை: அதுவும் ஒருவன் தன் யோசனையற்ற நடக்கையால் தன்மேல் வேவு

லைக்கவேண்டியது அவசியமெனத் தோன்றுமாறு சந்தேகத்தை உண்டாக்கி விட்ட பின், வேவு பார்ப்பது தகுதியல்ல என்று எப்படிக் கருதலாம்," என்முன்.

பூபாலப்பிள்ளை "அப்படியாயின் என் பின்னல் ஒரு ஆள் தொடர்ந்து பார்த்ததாகவா கூறுகிருய்?" என்று வெளுத்த முகத்தோடு விரல்களை நெரித்துக்கொண்டு கேட்டார். ஒருவரை விட்டு ஒருவரை மாறி மாறி உற்று நோக்கினார். இவர்களிருவரில் யார் நம் பின்னல் வந்தவன் என்று பார்த்தார். வந்தவன் மாறுவேடமணிந்திருந்ததால் யாரென்றறிய அவரால் முடியவில்லை. அவர் கேட்ட கேள்விக்கு ஆனந்தசிங் "அப்படிச் செய்யாவிடின் வேறு மார்க்கமில்லை. செய்யவேண்டியது அவசியமாயிற்று," என்முன்.

பூபாலப்பிள்ளையின் முகம் சிவந்துவிட்டது. அவர் கோபத்தோடு ஜெயசிங்கை உற்று நோக்கி "நகரத்திற்குள்ளும், நகரத்தை விட்டு வெளியிலுங்கூடவா?" என்று வினவினர். ஆனந்தசிங்கே இதற்கும் பதிலளிக்கட்டும், நாம் ஒன்றும் கூறலாகாதென்று எண்ணிக்கொண்டு பேசாமலிருந்தான்.

ஆனந்தசிங் அதையுணர்ந்து பூபாலப்பிள்ளை கேட்ட கேள்விக்கு விடையளித்த மாதிரியாகவும் அதே சமயம் அவர் இவர்களிடம் நமது ஏமாற்றல் செல்லாதென்று உணரும் வண்ணமாகவும் "தாங்கள் அப்பிரபல பாங்கிக் கொள்ளைக்காரரைக் காணச் சென்றிருந்தீர்கள்," என்முன்

பூபாலப்பிள்ளை அம்மொழிகளைக் கேட்டதும் பெருமூச்செறிந்து அலங்கரிக்கப் பட்டிருந்த அந்த அறையை உற்று நோக்கினர். அங்குள்ள ஒரு பக்கச் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தின்மேல் அவர் பார்வை

தங்கியது, அது அவருடைய தந்தையின் படம் என்று ஆனந்தசிங்குக்குப் பின்னால் தெரிந்தது. பூபாலப்பிள்ளை அப்படத்திலிருந்த உருவத்தைச் சற்று நேரம் நோக்கிவிட்டுத் திரும்பி ஆனந்தசிங்கை நோக்கி "உனது சந்தேகங்கள் தானென்ன கூறு," என்றான்.

ஆனந்தசிங் "இப்போது உன்மேல் சந்தேகங்கள் இருக்கின்றனவென்று நான் இங்கு வரவில்லை. தாங்கள் அன்று வீதியில் சந்தித்துப் பேசிய அப்பெண் இறந்து போனாள் என்று தங்களுக்குக் கூறவும் இதைப்பற்றிய உண்மையை அறியத் தாங்கள் எங்களுக்கு உதவியாகக் கூடிய ஏதேனும் சமாசாரம் கூறக்கூடுமா என்று கேட்கவுமே வந்தோம்," என்றான்.

பூபாலப்பிள்ளை "நான் ஒன்றும் கூறமுடியாதென்று உங்களுக்குத் தெரியும். நீ கூறுகிறபடி என்னை ஒருவர் பின்பற்றி வந்து பார்த்திருந்தால் நான் என் அப்பெண்ணைக் கண்டு பேசினேனென்பதையும் அக்கள்ளர் இருந்த இடத்திற்கு ஏன் சென்றேனென்றும் தெரிந்துகொண்டிருக்கலாகும். தெரிகிறதா?" என்றார்.

ஆனந்தசிங் இத்தகைய கேள்விகளைப் பொருட்படுத்தி விடையளிப்பவனல்ல. அவன் நிதானமாகவே தாங்கள் என்ன சமாதானம் கூறுகிறீர்களோ அதைக் கேட்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்," என்றான். அதைக் கேட்டதே பூபாலப்பிள்ளைக்கு மிக்க கோபம் உண்டாகிவிட்டது. அவர் ஆத்திரத்தோடு "என்னை இவ்வாறு கேட்க உனக்கு அதிகாரம் இருக்கிறதென்று நீ கருதியிருக்கிறாயா அப்படியாயின் என்ன காரணம்?" என்றார்.

ஆனந்தசிங் கெம்பீரத்தோடு நிமிர்ந்து பூபாலப்பிள்ளையை உற்று நோக்கி, "ஆகா. தடையின்றிக் கூறுகிறேன் கேளும். உத்தியோக முறைமையில் தற்சமயில்லா

விடினும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு, தங்களைப் போன்ற ஒரு பெரிய மனிதர் வீட்டிற்குள் வந்து அவருடைய குடும்ப விவகாரங்களைப்பற்றி இத்தகைய கேள்விகளைக் கேட்க எவ்வாறு தைரியமும் துணிகரமு முண்டாகிறது என்பதைப்பற்றி விவகாரமாகக் கூறுகிறேன் கேளும் நீரே போலீஸ் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த காரியாலயத்தில் உட்கார்ந்திருக்கும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் என்று எண்ணிக்கொள்ளும். அச் சமயம் ஒரு மரியாதையான பெரிய மனிதர் வீட்டிலுள்ள காரியஸ்தர் அங்கு வந்து 'ஐயா என்னிடம் தையல்வேலை செய்து கொண்டிருந்த ஒருபெண் கடந்த இரவு மிக்க அபூர்வமான விதமாக என் எஜமான் வீட்டிலிருந்து எப்படியோ காணாமற் போய்விட்டாள். நான் சாரளத்தில் கண்ட சில அத்தாட்சிகளால் அவள் பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போகப்பட்டாள் என்றே நினைக்கிறேன் என்று கூறுகிறான். அவன் மிக்க ஆத்திரத்தோடு அவசரமாய் உதவி வேண்டுமென்கிறான். இத்தனைக்கும் அப்பெண் தனக்கு ஒரு உறவுமல்ல வென்கிறான். தனக்கு அவள் விஷயத்தில் ஏன் அத்தகைய சிரத்தை யுண்டாயிற்றென்பதையும் கூறவில்லை. ஆனால் அவளை எப்படியாயினும் கண்டுபிடிக்க வேண்டும் என்கிறான். அதற்காக என்ன செலவாவதாயினும் தான் சேர்த்து வைத்திருக்கும் பணத்திலிருந்து கொடுப்பதாய்க் கூறுகிறான். உன் எஜமான் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்கிறதில்லையா என்று கேட்டபோது அவன் கலவரமடைந்து அக் கேள்விக்குப் பதில் கூறாமல் ஜாடையாய் விட்டு விடுகிறான். தன் எஜமான் வேலைக்காரரைப் பற்றி ஒன்றும் கவனிப்பதில்லை என்றும் அத்தகைய விவகாரங்களெல்லாம் தன்னிடமே விடப்பட்டிருப்பதாகவும் இன்னும் என்னென்னவோ

கூறுகிறான். உன் எஜமானியைப்பற்றி விசாரிக்கலாமா என்றால் பீதியடைகிறான். இதன்பிறகு அதே பெரிய மனிதன் வீட்டிற்கு நீர் உன் உதவித் துப்பறியவனோடு செல்கிறீர் என்று வைத்துக்கொள்ளும். நீர் காணாமல் போன அப் பெண் இருந்த அறைக்குச் செல்கிறீர். அங்கு சென்றதே முதல் என்ன காண்கிறீர். அந்த அறை நல்ல அழகான அறை. அதில் அமைக்கப் பட்டிருக்கும் சௌகரியங்கள் நேர்த்தியானவை. அங்கு நல்ல சரித்திர நூல்கள், பாடல்கள் முதலிய நாணயமான புத்தகங்களெல்லாம் இருக்கின்றன. இவற்றால் இங்கு வசித்திருந்த பெண் தையல்வேலை செய்பவள் என்று வெளிக்குத் தோற்றப்பட்ட அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்தை உடையவள் என்று நன்கு புலப்படுகிறது. வீட்டுக் காரியஸ்தியை அதைப்பற்றி விசாரித்தபோது அது உண்மையே யென்று உமக்குப் புலப்படுகிறது. இதோடு இப்பெண் பூரணமாய்த் தன் மனவிருப்பத்திற்கு மாறாகவே சென்றாளென்று கருதப் பூரணமான ருசுவில்லாவிடினும், அவள் பலவந்தமாகச் சாளரத்தின் வழியாய் அழைத்துச் செல்லப்பட்டாள் என்று யூகிக்கச் சில காரணங்களிருக்கின்றன வென்றே தெரிகிறது. அம்மாது கூறுகிறமாதிரியால் அவளுக்கு அப்பெண்ணின் நடக்கையைப் பற்றிய விசேஷ சங்கதிகளைப்பற்றி அவளுக்குத் தெரிந்திருப்பது போலவும், அல்லது அவள் உயர்ந்த அந்தஸ்திலிருப்பவளென்று தனக்குத் தக்க அத்தாக்ஷி யிருப்பது போலவும், அவள் பலவந்தத்தின்மேல் செல்லாமல் தன் பிரியப்படி செல்லவில்லையென்று தான் அறிந்திருப்பதாகவும் கூறுகிறாளென்றும் உமக்கு விளங்குகிறது. அம் மொழிகளை அங்கிருந்த திரைச்சீலைகள் கிழிக்கப்பட்டிருப்பதும் கூரைமேல் காணப்பட்ட இரத்தக் கறைகளும் நிச்சயப்படுத்துகின்றன.

இன்னும் சில விவகாரங்கள் வெளிவருகின்றன. முதலில் கீழேயிருக்கும் புற்றரையாகிய பாதையில் இருந்து ஒரு பேனுக்கத்தி யகப்பட்டது. அதனால் பாதையின் கூரைமேல் கண்ட இரத்தக் கறையை உண்டாக்கியது எந்த ஆயுதமென்று தெரிய வந்தது. அது முத்துச் சிப்பி மேலே புதைக்கப்பட்ட கைப்பிடியுடைய ஒரு கத்தி. அது அப்பெண்ணின் திறந்திருந்த மேஜையிலிருந்த கத்தியாக இருக்கவேண்டும். அக்கத்தியின் சாதாரண அற்பத்தன்மையால், அது அவர்களால் உபயோகப்படுத்தப் பட்டதல்லவென்றும், இப்பெண்ணாலேயே அவளுடைய எதிரிகளின் மேல் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் புலப்பட்டது. ஒரு ஆடவன் எவனாக இருந்தாலும் தற்காப்புக்காயினும் எதிரியைத் தாக்கவாயினும் இத்தகைய அற்பமான ஆயுதத்தைக் கரத்திலெடுத்துக்கொண்டு வெளிவரமாட்டான். அந்த எதிரிகள் இருவரென்றும் இருவரும் ஆடவரே என்றும் தெரிகிறது. ஏனெனில் அம்மாது அவர்கள் பேசுவதைக் கேட்டான். ஐயா! இத்தகைய விஷயங்கள் இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று ஆவலை உண்டாக்குகின்றன. அதிலும் அவ்வீட்டின் சொந்தக்காரனாகிய பெரிய மனிதன் தன் வீட்டில் தன்னிடம் வேலையிலிருந்த ஒரு பெண்ணைப்பற்றிய விஷயத்தில் சற்றும் கவலை இல்லாது நடக்கும்போது காரியஸ்தி தன் எஜமான் எதிரிலிருக்கும்போது அவர் இருப்பதால் மிக்க திகிலடைவதும் அவர் போய்விட்டால் மனோ நிம்மதி யடைவதுமாக இருக்கும் போது, என்னவென்று நினைப்பது," என்றான்.

அச்சமயம் பூபாலப் பிள்ளை ஒருவித தீட்சண்யமான பார்வையாக ஆனந்தசிங்கை நோக்கினார். ஆனந்தசிங் அதைப் பொருட்படுத்தாமல் உறுதியாய், "ஆம். இதில் மர்மம் ஏதோ இருக்கிறதென்று மேற்கண்ட விவகாரங்

களால் தெரிகிறது. மர்மம் இருக்கிறதென்று தெரிந்ததே அதைப்பற்றி விசாரிக்கவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. அவ்வாறு விசாரணை நடத்ததில், அவ் வீட்டின் எஜமானராகிய மர்ம புருடர் அப்பெண் காணமற் போன அதே வேளையில் தோட்டத்தில் இருக்கிறார்; தோட்டத்தின் ஓரத்திலுள்ள வெளிவாயிற்படியின் அருகில் நிற்கிறாரென்றும், கதவிலுள்ள கம்பிகளின் சந்து வழியாய் வெளியில் பார்த்துக்கொண் டிருக்கிறார் என்றும், அப்பெண் தன்னைப் பிடித்துச் சென்றவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு வீட்டிற்குள் செல்ல நினைத்தவன்போல் வாயிற்படியண்டை வந்தவள் அங்கு நிற்கும் தன் எஜமானைக் கண்டதே பெரும் பீதியடைந்து திரும்பியோடி மறுபடி தன் பகைவரிடமே பெரும்பாலும் சிக்கிக்கொண்டாளென்றும் தெரிய வந்தது," என்று கூறிவிட்டு "என்ன ஐயா! பேசினீர்களா?" என்று கேட்டான்.

பூபாலப் பிள்ளை:—"இல்லை, அப்புறம் கூறு," என்றார்.

11-வது அத்தியாயம்

ஆனந்தசிங் பூபாலப் பிள்ளையை உற்று நோக்கிப் பின்னும் கூறத்தொடங்கினான்:—

"விசாரணை செய்ததில் இன்னும் இரண்டு மூன்று விஷயங்கள் தெரியவந்தன. முதலாவது, இந்த மர்மமான பெரிய மனிதர், மாதர்கள் கூட்டத்தில் நன்றாகப் பிரகாசிக்கத் தகுதியுடையவரே எனினும், அத்தகைய இடங்களைப் புறக்கணித்துவிட்டு, அங்குச் செல்வதற்குப் பதில் வீதிகளில் ஓரங்களில் திரிந்துகொண்டும் சந்து பொந்து

களிலும் மூலைமூடுக்குகளிலும் ஏழைப் பெண்களைக் கண்டு அவர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தார் என்று தெரியவந்தது. அவர் கடைசியாகக் கண்டு பேசிய பெண், அவருடைய வீட்டிலிருந்து காணுமற் போய்விட்டாளே அதே பெண் என்றும் தெரியவந்தது...." என்றதே பூபாலப் பிள்ளை ஒருவித அதிகாரத் தொனியோடு "அங்கு நில். இச்சந்தர்ப்பத்தில் நீ தவறிவிட்டாய். இது நடக்கமுடியாத விஷயம்," என்றார்.

ஆனந்தசிங் "ஹா! ஏன்?" என்றான்.

இப்போது நீ கூறிய பெண் பிரகாசம் பொருந்திய பொன்னிறமான கூந்தலையுடையவள். இந்த வீட்டில் இருந்த பெண் அத்தகைய கூந்தலை உடைத்தாயிருக்க வில்லை," என்றார்.

ஆனந்தசிங் "பேஷ். தாங்கள் இவ்வீட்டில் இருந்த பெண்ணைக் கவனித்ததே இல்லை, உமக்குத் தையல் வேலை செய்து கொண்டிருந்த அப்பெண்ணைப் பார்த்தது கூட இல்லை என்றல்லவோ எண்ணினேன்," என்றான்.

பூபாலப்பிள்ளை "நீ கூறும் பெண்ணுக்கிருந்தது போன்ற கூந்தல் அவளுக்கிருந்திருந்தால் நான் அவளைக் கவனித்தே இருப்பேன்," என்றார்.

ஆனந்தசிங் நகைத்துக்கொண்டே தன் ஜேபியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துத் திறந்து அதிலிருந்த உரோமங்களைக் கரத்திலெடுத்து "ஐயா! இதோ அப்பெண்ணின் தலைமயிரின் மாதிரி கொண்டு வந்திருக்கிறேன் பாரும்," என்று அவருக்குக் காட்டி "பார்த்தீரா? அன்று தாங்கள் சந்தித்துப் பேசிய அப்பெண்ணின் கூந்தல் போன்றே பளபளப்பும் பொன்னிறமும் உடையதாக இருக்கிறது," என்றான்.

பூபாலப் பிள்ளை அதைக் கரத்தில் வாங்கிப் பார்த்தார். அவர் கரம் நடுக்கலுற்றது. மனத்துடிப்போடு கரத்தை இருதயத்தில் அழுத்திக்கொண்டு "இதை எங்கிருந்து கண்டெடுத்தாய்?" என்று கேட்டார். ஆனந்தசிங் அப்பெண் மறைந்துபோன இரவு தலை சீவ உபயோகித்திருந்த சீப்பிலிருந்து எடுத்தேன்," என்றான். பூபாலப் பிள்ளை அந்த உரோமங்களை எறிந்துவிட்டு ஆனந்தசிங்கின் முகத்தை உற்று நோக்கி, "நாம் வீண் காலட்சேபம் செய்கிறோம். நீ இப்போது கூறியவை யனைத்தும் நீ இங்கு வந்ததற்குக் காரணமாகப் போதுமானவையல்ல. நீ என்னிடம் பேசிய மாதிரிக்கும் காரணமாகப் போதுமானவையல்ல. நீ என்னதான் உள்ளத்தில் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ அலட்சியமாய் நடத்தப்படத்தக்க ஆளல்ல," என்றார்.

ஆனந்தசிங் எழுந்து நின்று சட்டென்று ஜெயசிங்கை நோக்கியபின் "ஆம். நீர் கூறுவது சரிதான். இன்னொரு விஷயம் இல்லாவிடின் இவையாவும் நான் இங்கு வந்ததற்குத் தக்க காரணமல்லதான். அதையும் கூறட்டுமா?" என்றான்.

பூபாலப் பிள்ளை அவனை உற்று நோக்கி "நீ என் முழுமையும் கூறலாகாது. ஒரு சமாசாரத்தைக் கூறவந்தவரையில் அதை முழுமையும் கூறுவதால் கெடுதியில்லை. நான் அந்தக் கள்ளரைக் காணச் சென்றேனென்பதைப்பற்றி என்னமோ கூறக்கருதுகிறாய் அல்லவா?" என்றார்.

ஆனந்தசிங் தலையசைத்ததைக்கண்ட பூபாலப் பிள்ளை "என்ன? அத்தகைய மர்மத்தைப் பற்றிய விவரத்தையா புறக்கணித்துவிடக் கருதுகிறாய்?" என்றார். ஆனந்தசிங் "தங்கள் வீட்டிலிருந்து காணாமற்போன அப்பெண்ணைப் பற்றியே எனக்கு சிரத்தையுள்ளது. அதற்குச் சம்பந்தப்

படாத வேறு மர்மங்களைப் பற்றிப்பேச நான் இங்கு வர வில்லை," என்ருன்.

பூபாலப்பிள்ளை தன் கம்பீரமான பார்வை முழுமையும் ஆனந்தசிங்மேல் நாட்டி, அப்படியாயின் நாம் இன்னும் சம்பாஷிப்பது அனுவசியமே. நீ எனக்கு விரோதமாக என்ன சங்கதிதான் மனதில் வைத்துக் கொண்டிருக்கிருய், என்னதான் கூறக் கருதி வந்தாய் என்பதை அறியவே இவ்வளவுதூரம் இடங் கொடுத்தேன். ஏனெனில் சமீப காலத்தில் என் நடவடிக்கைகளைக் கண்டவர்களுக்கு, அதன் மூலம் தெரியாதவரையில், அவை வியப்பாகவே தோன்றும் என்று நான் அறிவேன். இப்போது நீ என் வீட்டிலிருந்து காணுமற்போன அப்பெண்ணின் விஷயத்தில் சம்பந்தப்படாத எந்த மர்மத்தையும் பற்றி உனக்கு அவசியமில்லை என்று கூறிவிட்டாய். நானும் உண்மையாய்க் கூறுகிறேன். சமீப காலத்தில் நேர்ந்த என் நடவடிக்கைகளில் எதுவும், நான் எங்குச் சென்றிருந்தாலும் யாரைக் கண்டிருந்தாலும் யாரோடு பேசியிருந்தாலும் என் வீட்டிலிருந்து காணுமற்பொன அப்பெண் விஷயத்தில் சற்றேனும் சம்பந்தப்பட்டதல்ல. அவள் என் வீட்டிலிருந்தபோது எனக்கு அறிமுகமில்லாதவளே. அவள் போய்விட்டதே நான் அச்சங்கதியை மறந்து விட்டேன். ஆகையால் நமது சம்பாஷணை முழுமையும் பயனற்ற காரியமே," என்ருர்.

அதுகாறும் ஆனந்தசிங் தாங்கள் பானம் செய்யாமல் அப்படியே விட்டுவைத்திருக்கும் ஒயின் ஜாடியின் பக்கமாகக் கையை நீட்டிக் கொண்டிருந்தவன் உடனே அதை இழுத்துக்கொண்டு, "அப்படியாயின் தங்கள் வீட்டில், நேராய் நம் தலைகளுக்குமேல் இருக்கும் அறைகளில், கடந்த பதினெரு மாதங்களாக வசித்துக்கொண்டிருந்த

அப்பெண்ணிற்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று கூறுகிறீர்?" என்றான்.

பூபாலப் பிள்ளை:—"நான் ஒரு முறை கூறிவிட்ட சங்கதியைப் பற்றி மறுபடி கூறும் வழக்கமில்லை. அது இதைவிட இன்னும் மிக்க அற்பமான சமாசாரத்தைப் பற்றியதாக விருப்பினும் சரி," என்று ஒரு விதத் தீர்மானமாகக் கூறுபவர்போல் கூறினார்.

ஆனந்தசிங் மிக்க கலக்க மடைந்தவன்போல் ஜெயசிங்குக்கும் புலப்பட்டது. ஆனந்தசிங் மெதுவாய் தன் தொப்பியை எடுத்துக் கொண்டே, "நான் மிக்க விசனப்படுகிறேன்," என்று தன் தொப்பியின் ஓரத்தை இரண்டொரு விநாடி தடவிக் கொண்டிருந்து திடீரென்று அதை மேஜைமேல் வைத்துவிட்டு மிக்க கம்பீரமான பார்வையோடு நிமிர்ந்து நின்று பூபாலப்பிள்ளையின் முகத்தை உற்றுநோக்கி,

"ஐயா! நான் இப்போது இந்த வீட்டிற்கு வரும்போது, தங்கள் விவகாரங்களைப்பற்றி நம்பியிருக்கிற மட்டில் தங்கள் விஷயத்தில் மிக்க மரியாதை வைத்திருக்கிறேன். ஆகையால், இப்போது வெளிவராமல் என் வாய் நுனியில் ஒரு பெரும் பாரமாக விருக்கும் சங்கதியைக் கூறாமலே போய்விட எனக்கு மனம் வரவில்லை. ஏனெனில் இப்போது நான் அதைக் கூறிவிட்டால் பிறகு ஒரு காலத்தில் வேறிடத்தில் அதைக் கட்டாயம் கூறியே தீர வேண்டியதாகவரும். இப்போது அதைப்பற்றித் திருப்திகரமான சமாதானம் கூறிவிடத் தங்களுக்குச் சந்தர்ப்பமிருக்கிறது. ஆனல் அப்போதோ இத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். ஐயா பூபாலப்பிள்ளை உமது வீட்டில் பதினொரு மாதங்களாக வசித்து வந்து காணமற்

போய் விட்ட அப்பெண் தங்களுக்கு அடியோடு தெரியாது என்ற சங்கதியை நான் நம்பவில்லை," என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட பூபாலப்பிள்ளை "ஆ! கடைசியில் இப்போதுதான் உனக்கு இத்தைரியம் வந்ததுபோல் தோன்றுகிறது. ஆனால் இதைப் போலவே நீ விஷயங்களின் உண்மையைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை என்று எனக்குப் புலப்படுவதால் நான் விசனப்படுகிறேன்," என்றார். அவர் ஆனந்தசிங்கின் தொப்பியை எடுத்து அவனிடமளித்தார்.

ஆனந்தசிங்:—'என் நடவடிக்கைகள் நியாயமானவைகளே என்று தங்களுக்கு நிரூபிக்க எனக்குப் பிரியமே. ஆனால் வார்த்தைகளாலல்ல. வார்த்தைகள் எல்லாம் முடிந்தன. மற்றதைச் செய்கைகளே முடிக்கவேண்டும், பூபாலப்பிள்ளை! தாங்கள் என்னைக் கௌரவம் பொருந்திய ஒரு உத்தியோகஸ்தன் என்றும் நம்பத் தக்க மனிதன் என்றுமே கருதுகிறீர்களென்று நம்புகிறேன். ஒரு விநாடி தங்கள் இரகசிய அறைக்கு வருகிறீர்களா? அங்கு ஒன்று இருக்கிறது. அதனால் நான் மூடத்தனமாகப் பேசவில்லை என்றும், முன்னே தங்களிடம் அம்மொழிகளைக் கூறியபோது பெருமைக்காகக் கூறவில்லை என்றும் நன்கு விளங்கும்," என்றான்.

பூபாலப்பிள்ளை மிக்க தன் மதிப்பும் பெருமையுமுடையவனாதலால் இத்தகைய விஷயத்திற்கு உடன்படமாட்டான் என்றே ஆனந்தசிங் கருதினான். ஆனால் பூபாலப்பிள்ளையோ சற்றும் மறுத்துக் கூறாமல், தான் வியப்படைந்த போதிலும், பேசாமல் அப்படியே ஆகட்டுமென்று தலையசைத்து, "வா!" என்றார். அதோடு, "என் அறைகளும் என் சகவாசமும் உனக்குச் சொந்தம் என்று

எண்ணிக்கொள். ஆனால் நீ கருதுவதற்குச் சரியான காரணமிருக்கு மென்பதை நிரூபிக்கத் தக்கது அங்கு ஒன்றுமிராது என்றே நீ காண்பாய்," என்றார்.

ஆனந்தசிங் எதற்கும் நான் முயற்சி செய்தாவது பார்க்கட்டும். அப்போது எதுவும் என் மனதாரத் தெரிந்துவிடுமல்லவா?" என்றான்.

பூபாலப்பிள்ளை ஒருவித வெறுப்போடு நகைத்துக் கொண்டு சரி வா என்றார். ஆனந்தசிங் ஜாடையாய் ஜெய சிங்கை அழைத்ததைக் கண்டதே அவர் "இவரும் கூட வரட்டும். எதற்கும் நீ கருதியது உண்மையா அல்லவா என்பதற்கு ஒரு சாட்சி இருப்பது நலம்,'! என்றார்.

ஜெயசிங்குக்கு அங்கு என்ன நடக்குமோ என்பதை அறிய அடக்கொணு ஆவலிருந்தது. ஆகையால் அவன் "நம்மை எங்கே கூடவரும்படி அழைக்காமல் போய்விடு வார்களோவென்று மிக்க மனக்கலக்கத்தி லிருந்தான். ஆகையால் பூபாலப்பிள்ளை கூறியதைக் கேட்டதே மிக்க சந்தோஷமடைந்து உடனே அவர்கள்கூடச் சென்றான்.

இவர்கள் மூவரும் செல்லும்போது பூபாலப்பிள்ளையி னிடம் தோன்றிய தைரியத்தையும் கம்பகத்தையும் கண்ட போது தன் தலைவனாகிய ஆனந்தசிங்கின் நோக்கம் கடைசி யில் பயனற்றதாகப் போய்விடுமோவென்று ஜெயசிங்குக்கு மிக்க மனக்கலக்கமாகவிருந்தது. ஏனெனில் அப்படி நேர்ந் தால் ஆனந்தசிங்குக்கு மிக்க மனச்சோர்வு உண்டாகி விடும். அவன் இதுகாறும் அடைந்த பெருமைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடும். ஆனால் அந்த அறைக்குள் சென் றதே ஜெயசிங்கின் கலக்கமெல்லாம் மறைந்துவிட்டன. ஏனெனில், அங்குச் சென்றதே பூபாலப்பிள்ளையின் முகத் தில் ஒருவிதமான மனக் கலக்கத்தை உண்டாக்கும் குறி தோன்றியது. அந்த அறையில் ஏதோ மர்மம் சம்பந்தப்

பட்டிருக்கிறதென்றும் அதுவே பூபாலப் பிள்ளையின் மனதில் கலக்கத்தை யுண்டாக்குகிற தென்றும் நன்றாகப் புலப்பட்டது.

இவர்கள் அந்த அறைக்குட் சென்றதே, பூபாலப் பிள்ளை ஆனந்த சிங்கை நோக்கி, "ஐயா! இதோ இந்த அறையும் இதிலுள்ளவைகளும் உன் வசத்திலிருக்கின்றன. இப்போது என்ன கூறுகிறாய்?" என்றார்.

ஆனந்தசிங்கோ பிடிவாதத்தோடேயே யிருக்கிறான். அவன் அந்த அறை முழுமையும் ஒரே பார்வையில் பார்த்தான். அந்த அறையிலுள்ள எல்லா வஸ்துக்களிலும் அந்த அறைக்கு அலங்காரத்தை அளிக்கத் தக்கது ஒரேயொரு வஸ்துதான். அது ஒரு படம். ஆனந்தசிங் அதன் எதிரில் நின்றான்.

பூபாலப்பிள்ளை மிக்க வியப்படைந்து விட்டார். ஆயினும் அவர் முகம் எளிதில் மனக்கலக்கத்தை வெளியிடத் தக்க சுபாவமுடைய தல்ல. இவர் "இது என் சுற்றத்தாளாகிய மார்த்தாண்டம் சீமாட்டியின் படம்" என்றார்.

ஆனந்தசிங் சரிதான் என்று தலையசைத்துச் சற்று நேரம் அம் படத்தை யுற்று நோக்கிக்கொண்டிருந்தான். அதன் பிறகு அவன் நடத்தை இவர்களிருவரையும் திடுக்கிடச் செய்தது. ஏனெனில், ஆனந்தசிங் திடீரென்று அப்படத்தை அடியோடு திருப்பினான்.

அந்தோ! அப்போது அப்படத்தில் தோன்றிய உருவத்தைக்கண்டு ஜெயசிங் பிரமித்து மரம்போல் அசைவற்று நின்று விட்டான். ஏனெனில் முன் கண்ட உருவம் அடியோடு மாறிவிட்டது. கண்கள், கூந்தல், அவயவம், பார்வை யாவும் பூரணமாக மாறிவிட்டன. இவ் வுருவத்தைக் கண்டதே பூபாலப்பிள்ளையின் முகம் அடியோடு மாறுதலடைந்தது. படத்திலிருந்த உருவத்தின் முகம் வெளுத்திருந்

தது. கண்கள் கறுத்திருந்தன. கூந்தல் பளபளப்பாய் பொன்னிறம் வாய்ந்திருந்தது.

ஆனந்தஸிங்கின் கண்களில் இச்சமயம் ஒருவிதமான பிரகாசம் ஜொலித்தது. அவன் "நீ என்னையா ஏமாற்றக் கருதி மிக்க பெருமையோடும் அதிகாரக் குரலோடும் பேசினாய்," என்று கேட்பவன் போன்ற பார்வையாய்ப் பூபாலப் பிள்ளையை நோக்கினான். பூபாலப்பிள்ளை பாதிக் கோபத்தோடும் பாதி பயமுறுத்துதலோடும் "நீ இவ்வளவு தைரியமாய் இப்படி.......இப்படி...ச் செய்ய உனக்குத் துணிகரம் உண்டானது எவ்விதமென..........." என்று மொழிந்து அதற்குமேற் பேச முடியாமல் தடுமாற்றத் தோடு நின்றார்.

அங்கிருந்த படத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்த ஆனந்தசிங் "என் நடக்கையின் நியாயத்தை உமக்கு நிரூபிக்கப் போவதாய் முன்னமே கூறினேன். இதுதான் என் ருசு. இந்த அறையில் மற்ற படங்களைப் போலிருக்காமல் சுவரைப் பார்ப்பது போலிருந்த இவ் வுருவத்தின் கூந்தலை நன்ருகப்பாரும். இக்கூந்தலின் நிறம் சற்று நேரத்திற்குமுன் நான் காட்டிய உரோமங்களின் நிறம்போலவே இருக்கிறதல்லவா? உண்டோ இல்லையோ? அந்த உரோமங்கள் கடவுளறிய உமது வீட்டிலிருந்து காணமற்போன அதே பெண்ணுடைய கூந்தலிலிருந்தவை," என்ருன், இச்சமயம் பூபாலப்பிள்ளை பீதியடைந்தவர்போல் சற்று பின்னடைந்தார்.

ஆனந்தஸிங் கூறத்தொடங்கி "இது மட்டுமல்ல; இப்படத்திலுள்ள உருவத்தின் உடைகளை நன்ருகக் கவனித்துப் பாரும். இதோ இந்தப் பளபளப்பான கறுப்புப் பட்டு உடையையும், மேல் அங்கியையும் மற்றவற்றையும் நன்ருகப் பாரும் முக்கியமாகக் கரத்திலுள்ள இரோஜா

மலர்ச் செண்டைக் கவனியும். இப்போது என் கூட மேல் மாடிக்கு வாரும்” என்றான்.

ஆனந்தசிங் இவ்வாறு அதிகாரத் தோரணையோடு கூறுபவன்போல் கூறுவதைக் கேட்ட ஜெயசிங் மிக்க வியப்பும் கலக்கமுமடைந்தான். ஆனால் சற்று நேரத்திற்கு முன் அதிகாரத் தொனியாகவும், மிக்க பெருமையோடும் பேசிய பூபாலப்பிள்ளை ஒரு குழந்தையைப்போல் வாய் திறவாமல் ஆனந்தசிங்கின் பின்னால் நடக்கத் தொடங்கியதைக் கண்டதே ஜெயசிங் தன் தலைவன் சாமார்த்தியத்திற்காக மிகப் பெருமையும் நடக்கும் விஷயத்தைப் பற்றி மிக வியப்புமடைந்தான்.

ஆனந்தசிங் தைரியமாகவும் நிதானத்தோடும் உறுதியாய் நடந்து மேல் மாடிக்குச் சென்றான். மூவரும் காணமற்போன இராஜாமணி என்ற பெண் வசித்துக் கொண்டிருந்த அறைக்குள் சென்றதே ஆனந்தசிங் அங்கிருந்த பீரோவின் கீழறையைத் திறந்துகொண்டே; பூபாலப்பிள்ளையை நோக்கி,

“இங்கிருந்து காணமற்போன இராஜாமணி என்ற அப் பெண்ணுக்கும் உமக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லையென்று நீர் கூறியதை நான் நம்பவில்லை யென்று கூறியபோது நான் உம்மிடம் அவமரியாதையாகப் பேசியதாக என்மேல் குற்றம் சாட்டினீர். இப்போது இந்த அத்தாட்சிகளின் எதிரில் இன்னமும் அவ்வாறே கூறுவீரா?” என்று அந்தப் பீரோவின் அறையிலிருந்த நாம் முன்கூறிய உடைகளையும் வாடியுலர்ந்த இரோஜாமலர்ச் செண்டையும் காட்டினான். அவற்றைப் பூபாலப்பிள்ளைக்குக் காட்டாதபடி தங்கம்மாள் முன்பு ஆனந்தசிங்குக்குக் குறிப்பாய்க் காட்டி மறைத்ததும், பிறகு அப் பொருள்களை அப் பெண் மிக்க அருமையாகப் பாதுகாத்து வருகிறு

ளென்று ஆனந்தசிங்கிடம் கூறியதும் இதை வாசிப்போர்க்கு நினைவிருக்கலாம்.

இப்போது ஆனந்தசிங் அங்கிருந்த தீபத்தைத் தூண்டிவிட்டு பீரோ அறையின் மேலிருந்த குட்டையை யெடுத்துக் கீழிருந்த உடைகள் ரோஜாமலர்ச் செண்டு யாவற்றையும் அவருக்குக் காட்டி "இவையாவும் இராஜாமணியுடையவை யென்றும், அவள் இங்கு இவற்றைக் கொண்டுவந்து பத்திரமாக வைத்துக்கொண்டிருந்தாளென்றும் தங்கம்மாள் கூறினாள். இவைகள் அப் படத்தில் குறிக்கப்பட்ட அதே உடைகளும் மலர்ச் செண்டும் அல்லவென்று கூறுவீரா?" என்று வினவினான்.

பூபாலப் பிள்ளையின் பெருமை, அகங்காரம், கோபம் யாவும் எங்கோ உடனே பறந்து போய்விட்டன. அவர் கோவென்றலற அப் பீரோவின் முன் முழங்காற்படியிட்டு உட்கார்ந்து தலை கவிழ்ந்தபடி "ஐயோ கடவுளே! கடவுளே இவைகள் என்ன? இவைகளென்ன?" என்றார். இரண்டொரு நிமிடங்கள் வரை அதற்குமேல் ஒன்றுமே கூற முடியவில்லை. அதன் பிறகு தேகம் முழுமையும் நடுங்கிக் கொண்டே கண்கள் தீபம்போல் ஜொலிக்க மிக்க ஆத்திரத்தோடு, "தங்கம்மாள் எங்கே?" என்று அங்கிருக்கும் மணியடிக்கும் கயிற்றைப் பிடித்திழுத்து, "நான் உடனே அவளைப் பார்க்கவேண்டும்" என்றார்.

மணிச்சத்தத்தைக் கேட்டதே பொன்னம்மாள் துரிதமாக ஓடி வந்து அவர் முன் நின்றாள். அவர் அவளை நோக்கி "தங்கம்மாளை உடனே இங்கு வரச்சொல்!" என்றார்.

பொன்னம்மாள் "ஐயா! தங்கம்மாள் எங்கோ வெளியில் சென்றிருக்கிறாள். தாங்கள் போஜனம் செய்துவிட்டு எழுந்ததே அந்தம்மாள் சென்றாள்," என்றாள்.

பூபாலப்பிள்ளை "இந்த வேளையில் சென்றாளா?" என்றார். பொன்னம்மாள் "ஆம். இப்போது சில நாட்களாக அந்தம்மாள் அடிக்கடி வெளியில் போகிறாள்," என்றாள். பூபாலப்பிள்ளை முகத்தைச் சுளித்துக்கொண்டு, "அவள் வந்தவுடனே என்னிடம் வரும்படி கட்டாயம் கூறு," என்றார்.

பொன்னம்மாள் சென்றதே பூபாலப்பிள்ளை அச்சாமான்களிருக்கும் பீரோவின் அருகிற்சென்று சந்தேகமும் கலக்கமுமான பார்வையோடு தாழ்ந்த குரலாய், "இதைப் பற்றி என்ன நினைப்பதென்று எனக்குப் புலப்படவில்லை. இந்த வஸ்துக்கள் இந்த அறையிலிருப்பது இன்ன விதம் என்று தெரியவில்லை. கீழே வந்தால் மற்ற சங்கதிகள் உனக்கு விளங்கும்படியாகக் கூறுகிறேன். என் இரகசியங்களைப் பின்னொருவர்க்குக் கூறுவது என் மனதிற்கு வருத்தமேயாயினும், விஷயங்கள் அளவு மீறிப்போய் விட்டனவாதலால் இன்னமும் என் இரகசியங்களை மறைத்து வைப்பதற்கு வழியில்லை," என்றார். அதன் பிறகு அவர் இவர்களிருவரையும் அழைத்துக்கொண்டு தமது அறைக்குச் சென்றார்.

12-வது அத்தியாயம்

மூவரும் அறையில் உட்கார்ந்ததும், பூபாலப்பிள்ளை ஆனந்த சிங்கையும் ஜெயசிங்கையும் நோக்கி "ஐயன்மீர்! அப்படத்தில் இருந்த உருவத்தில் குறிக்கப்பட்ட ஆளும் என் வீட்டிலிருந்து காணாமற் போய்விட்ட பெண்ணும் ஒன்றேயென்று நீங்கள் யூகித்துக்கொண்டீர்கள். அதற்குப் போதுமான காரணம் இருக்கிறதென்றே நான் கருதுகிறேன். இப்போது நான் கூறப்போவதைக்

கேட்டபின் நீங்கள் அவ்வாறு கருதமாட்டீர்கள். உங்களுக்கு இது மிக்க வியப்பாகத் தோன்றுமெனினும், அப்படத்தில் நீங்கள் கண்ட உருவம் என் மனைவியினுருவம்," என்றார்.

உண்மையில் அதைக் கேட்டதே அவர்களிருவரும் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு விட்டார்கள். இருவரும் ஏககாலத்தில் "தங்கள் மனைவியா? நீங்கள் மணம் புரிந்து கொண்டீர்கள் என்ற சமாசாரமே எங்களுக்குத் தெரியாதே," என்றார்கள்.

பூபாலப்பிள்ளை "ஆம். அதற்கு சந்தேகமேயில்லை. அந்த ஒரு விஷயமட்டுமேனும் துப்பறிபவர்களுக்குங்கூட அகப்படவில்லை. நான் அவளை என் மனைவியாய் அங்கீகரித்துக் கொள்ளவுமில்லை. நாங்கள் இருவரும் ஒன்றாக வசிக்கவுமில்லை. குரு செய்யும் சடங்கால் ஒரு ஆடவனும் ஒரு ஸ்திரீயும் புருடன் மனைவியாவது உண்மையெனில் அப்படத்தில் நீங்கள் கண்ட உருவத்தால் குறிக்கப்பட்ட ஸ்திரீ என் மனைவியே," என்று கூறிவிட்டு மெதுவாய் எழுந்து சுவரின் அருகிற் சென்று அதிலுள்ள படத்தைத் திருப்பினார்.

ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் மறுபடி அந்த உருவத்தை உற்று நோக்கினார்கள்.

பூபாலப்பிள்ளை அவர்களை நோக்கி இதற்குமேல் நான் உங்களுக்கு இன்னுமதிகமாய் ஒன்றும் கூறவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இதுகாறும் எந்த மனிதனிடமும் நான் வெளியிடாத இரகசியத்தை உங்களிடம் வெளியிட்டிருக்கிறேன். இதுவே நீங்கள் என்மேல் ஏதேனும் தவறான சந்தேகம் கொண்டிருந்தால் அதை நீக்கப் போதுமானது. என் போன்ற நிலைமையிலுள்ள ஒரு மனிதனுக்கு இரகசியத்தில் இதைப்பற்றி அன்னியர்

பேசிக்கொண்டிருப்பதே மிக்க மனவருத்தமானது. இன்னும் இது பகிரங்கமாகப் பலர்க்கும் தெரிந்துவிட்டால் எம்மாதிரி இருக்குமென்று நீங்களே சிந்தித்துப் பார்க்கலாம். ஏனெனில் அதைவிட அவமானம் ஒருவனுக்கு வேறொன்றுமில்லை. இப்போது நான் இச்சங்கதியை இதோடு விட்டுவிட்டால் நீங்கள் பலவிதமாக உத்தேசித்துக் கொள்வீர்கள். பிறகு அவள் பெயரல்லாவிடினும் என் பெயர் வீணாய் எங்கும் மிக்க அசிங்கமான சம்பாஷணைக்குக் கருவியாய்விடும். இன்னும் மிக்க அகௌரவமான சந்தேகங்களெல்லாம் உண்டாகிவிடும். பெரிய மனிதர்களே! நீங்கள் மனைவியரை உடையோரென்றும் மக்களையுடையோரென்றும் தங்கள் கௌரவத்தை மதிப்பவர்களென்றும் பூரணமாய் நம்புகிறேன். இப்போது நான் சமீபகாலத்தில் செய்துகொண்ட நடவடிக்கைகள், நீங்கள் சிரத்தை கொண்டிருக்கும் காணாமற்போன பெண்ணின் விஷயத்தில் என்னளவும் சம்பந்தப்பட்டனவல்லவென்று நிரூபித்தால், என் நடக்கைகளின் நோக்கத்தைப் பற்றிய விஷயங்களை நீங்கள் இரகசியமாகவே வைத்திருப்பீர்களென்று நான் நம்பலாமல்லவா?" என்றார்.

ஆனந்தசிங்:—போலீஸார் செய்யவேண்டிய கடமைக்குள் சேராத எல்லா விஷயங்களைப் பற்றியும் என்னை நம்பலாகும். வீண் பேச்சுப்பேச எனக்கு அவகாசமேயில்லை.

பூபாலப்பிள்ளை "இதோ இருக்கிறாரே உன்னுடைய நண்பர் இவர்?" என்றார். ஆனந்தசிங் "இவனுக்கு இலாபமிருக்கிறவரையில் இவன் பிறழக்கூடியவனல்ல," என்றான். பூபாலப்பிள்ளை "அப்படியாயின் உங்களிருவரையும் நான் நம்பலாகும்," என்று கூறிவிட்டு, இரண்

டொரு விநாடி சிந்தித்து, "தன் ஆயுளில் முதல் முதல் தன் அந்தரங்க விஷயத்தை அன்னியனிடம் வெளியிடப் பலவந்தப் படுத்தப்பட்டவன் எத்தகைய உணர்ச்சி அடைவானோ அவ்வாறே என் தந்தையின் விவகாரத்தையும் இதில் கலந்து உங்களிடம் கூறப்போகிறேன்," என்று முன்னுரையாகக் கூறிப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்:—

"என் தந்தை ஒருவிதத் துணிகரமான மனமுடையவர். அவர் நடக்கைகளில் துணிகரமான அபிப்பிராயங்களுண்டு. நான் எங்கள் குடும்பத்தின் மரியாதையையும் செல்வத்தையும் பற்றிய கீர்த்தியை அழிக்காமல் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற தீர்மானமுடையவர். ஆகையால் 'நீ உன் யோக்கியதைக்குப் பங்கம் வராதபடி நடந்து கொள்கிறமட்டில் உன் விருப்பங்களனைத்தும் பூர்த்தி செய்யப்படும்' என்று கூறினார். என் சிறு வயதிலிருந்தே இம்மாதிரி அவர் கூறிக்கொண்டிருந்தார். அதை விட்டு என் விருப்பத்திற்கு எள்ளளவேனும் மாறாக நடந்தாலும், அல்லது பெயரைக் கெடுக்கத்தக்க எத்தகைய காரியங்களிலேனும் பிரவேசித்தாலும் கட்டாயம் என் அன்பையும் ஆதரவையையும் அடியோடு இழந்து விடுவாய் என்று கூறிக்கொண்டிருந்தார். ஆகையால் ஒரு காலத்தில் என் சுற்றத்தாளாகிய பங்கஜம் (மார்த்தாண்டம் சீமாட்டி) என்பவள்மேல் நான் காதல்கொண்டபோது, அவளை நான் மணம்புரிவது என் தந்தையின் மனதிற்குப் பிரியமாக இருக்குமாவென்று அறிய முயன்றேன். அவர் விருப்பம் அதற்கு மாறாக விருக்கிறதென்று தெரிந்ததே என் காதலை மறந்துவிட முயன்றேன். அச்சமயம் எங்கேனும் வெளி நாடுகளுக்கு யாத்திரை செல்வது உசிதம் என்று என் மனதிற்குப் புலப்பட்டது.

அதன்படியே நான் வெளிநாடுகளுக்குச் சென்ற போது, பல மாதரைப் பார்க்க நேர்ந்தது. நான் முதலில் பார்த்த பங்கஜமே பூரண வனப்புடையவள் என்று நான் கருதியிருந்த அபிப்பிராயம் மாறிவிட்டது. அவளைக்காட்டி லும் வசீகரமான வனப்புடையவர்கள் இருக்கிறார்கள் என்று மனதிற்குப் புலப்பட்டது. அதன் பிறகு இயற்கை அமைப்பைக் கண்டு மகிழ்வதும் அடவிகளில் வேட்டை யாடுவதுமாகிய வாழ்க்கையில் என் மனந் திரும்பியது.

அதன்மேல் மேற்கு நாடுகளுக்குச் சென்றேன். அமெரிகா கண்டத்திலுள்ள கலிபோர்னியா, ப்ளோரிடா, கானடா இந்த இடங்களிலுள்ள அடவிகளிலெல்லாம் சஞ் சாரம் செய்தேன். இவ்வாறு கடைசியாகச் சஞ்சாரம் செய்த இடத்தில்தான் என் விருப்பயன்படி அமையக் கூடியதும் என்னால் தள்ள முடியாததுமான ஒரு சம்பவம் நேர்ந்தது. ஆயினும் அச்சமயம் அது ஏதோ ஒரு நாளில் நேரக்கூடிய சாதாரணமான விவகாரம் போலவே தோன் றியது.

நான் அப்போதுதான் கனடாவிலிருந்து திரும்பி வந்து ஜார்ஜ் என்ற ஏரிக்கரையிலுள்ள ஒரு இடத்தில் தங்கி னேன். அச்சமயம் அதற்குச் சமீபமான ஒரு இடத்தி லிருந்த என் நண்பன் ஒருவன் என்னைத் தானிருக்கு மிடத் திற்கு வரும்படி மிக்க அன்போடு கடிதம் எழுதினான். அங்கு நேர்த்தியான மீன் வேட்டை இருக்கிறதென்றும் நான் அவசியம் வரவேண்டுமென்றுதான் மிக்க ஆவலோடு எதிர் பார்ப்பதாகவும் எழுதியிருந்தான்.

அச்சமயம் நான் யோசனையின்றி எப்படி வேண்டு மாயினும் மனப்போக்கின்படி நடக்கக்கூடிய நிலைமையி லிருந்தேன். ஆகையால் அவ்வாறே வருவதாய் அந்த நண் பனுக்குக் கடிதம் எழுதிவிட்டு மறுநாளே அந்த இடத்

திற்குப் புறப்பட்டேன். ஆனால் அங்கு போய்ச் சேர்வது மிக்க கஷ்டமான காரியமாக விருந்தது. அந்த இடம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் இருபது மைல் தூரத்திலிருந்தது. குன்றுகளின் மத்தியிலுள்ளது; அங்குப் போய்ச் சேர்வதற்கு தபால் வண்டியில் நெடுந்தூரம் செல்ல வேண்டுமென்றும், கொஞ்சதூரம் குதிரைமேல் ஏறிச் செல்ல வேண்டுமென்றும் தெரியவந்தது.

அந்த வழிகள் எனக்குப் பழக்கமில்லை ஆதலால் அங்கங்குபோய்ச் சேரத்தக்க வேளையைத் தவறாகக் கணக்கு வைத்துக்கொண்டேன். இதனால், பொழுதமர்ந்தபோது இருட்டில் முன்பின்னறியாத ஒரு புதுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறேன். இது போதாதென்று திடீரென்று என் குதிரை கால் எப்படியோ சுளுக்கிக்கொண்டு நொண்ட ஆரம்பித்து விட்டது. பிறகு அதை மிக மெதுவாகவே நடத்த வேண்டியதாயிற்று.

கள்ளிருளில் இத்தகைய நிலைமையில் பிரயாணம் செய்யும் ஒருவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைக் கண்டால் எப்படியிருக்கும். ஆகவே சற்றுநேரம் மிக்க கலவரத்தோடு சென்றுகொண்டிருந்த நான் தூரத்தில் தெரியும் ஒரு தீபவொளியால் ஏதோ ஒரு வீடிருக்கிறதென்று கண்டதே நடுக்கடலில் திசை தப்பி விழிக்கும் ஒரு மாலுமிக்குக் கரை தோன்றியது போன்ற பெருஞ் சந்தோஷம் உண்டாயிற்று. அத் தீபவொளி தோன்றுமிடத்திற் சென்று பார்த்தபோது அது ஒரு ஹோட்டல் என்று தெரிந்தது. அதைக்கண்டதே எனக்குண்டான சந்தோஷத்திற் களவில்லை.

குளிர்காலமாதலின் ஹோட்டலின் கதவு மூடப்பட்டிருந்தது. நான் அதன் எதிரில் நின்றதும் கூப்பிட்டேன். உடனே கதவு திறக்கப்பட்டதும் ஒரு ஆள் வெளியில் வந்

தான். அவன் கரத்தில் இராந்தலோடு வந்தான். நான் உடனே எனக்கு இரவு தங்க இடமும் உணவும் வேண்டும் என்று கூறினேன். அம்மனிதன் "இது பயங்கரமான கொடிய இரவு. இன்னும் சற்று நேரத்தில் அதிக பயங்கரமாக முடியும். நீர் உள்ளே செல்லும்; சீக்கிரத்தில் கடுமையான மழை வருஷிக்கும்," என்று கூறிக் குதிரையைப் பிடித்துக்கொண்டு எனக்கு உள்ளே செல்லும் வாயிற்படியைக் காட்டினான்.

நான் கஷ்டத்தோடு அங்கிருந்த பலமான கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றேன். உள்ளே இருந்த இன்னொரு மனிதன் பின்பக்கம் தீபம் எரிந்துகொண்டிருக்கும் ஒரு அறையை எனக்குச் சுட்டிக் காட்டிவிட்டு முன்பு என் குதிரையைப் பிடித்துச்சென்ற மனிதனுக்கு உதவி செய்யச் செல்பவன்போல் வெளியிற் சென்றான். நான் அவன் குறிப்பாய்க் காட்டிய அறைக்குள் சென்றேன். நான் அந்த அறைக்குள் சென்றதே, இதுகாறும் நான் கண்டிராத இணையற்ற வனப்புடைய ஒரு வாலியப் பெண்ணை அந்த விடத்தில் கண்டேன். அப்பெண் ஒரு மேஜையின் முன் உட்கார்ந்திருந்தவள் என்னைக் கண்டதும் அதிசயப் போடும், பாதி அச்சத்தோடும் தன் முன்னிருக்கும் மேஜையின்மேல் கரங்களை ஊன்றிக்கொண்டு எழுந்து நின்று என் முகத்தை உற்று நோக்கினாள். அந்த விடத்தில் ஒரு ஸ்திரீயைக் காண்பது அவ்வளவு அதிசயமல்ல. ஆனால் அப்படிப்பட்ட ஸ்திரீ. அவளைக் கண்ட முதல்விநாடியே அவள் அபூர்வ சக்தி வாய்ந்தவளென்று விளங்கியது. அவள் உருவம் மெலிந்த உருவம். முகம் வெளுத்த முகம். கூந்தல் மிக்க பளபளப்பாய்ப் பொன்னிறம் வாய்ந்திருந்தது. அக்கூந்தல் இரு பிரிவாகப் பிரிந்து அவள் தோட்கள்மேல் தொங்கிக்கொண்டிருந்தது. இமை யாயும் அவள் கரு

விழிகளின் தீட்சண்யமான பார்வைக்குச் சற்றும் ஈடல்ல. அக்கண்களின் பார்வை அபூர்வ சக்தி வாய்ந்தவை. எதிரில் குபீர் என்று ஒரு தீச்சுடர் கிளம்பினால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது. நான் உடனே அவளுக்கு வந்தனமளித்தேன்.

உடனே அவள் தேகத்தில் ஒருவித நடுக்கல் உண்டாயிற்று. ஆயினும் அவள் எனக்குப் பதில் வந்தனமளிக்கவில்லை. அச்சமயம் இருவர் பார்வையும் ஒரு உயரமான மேட்டின் ஓரத்தில் நின்று ஆழ்ந்த பாதாளத்தை நோக்குபவர் பார்வைபோலிருந்தது. அவள் பார்வை சற்று நேரம் என் முகத்தின்மேல் நாட்டப்பட்டது. பிறகு தட்டென்று கரத்தைத்தூக்கிப்போ வெளியில் என்று கூறுவதுபோல் கதவைச் சுட்டிக்காட்டினாள். அதே விநாடி கதவு திறக்கப்பட்டதும் இரண்டு ஆடவர் உள்ளே நுழைந்து கால்களைத் தட்டிக்கொண்டே என்னருகில் வந்தார்கள். உடனே அவள் கரம் தாழ்ந்து விட்டது. அவள் அவர்கள் பேசுவதற்கு அவகாசங் கொடாமலே சட்டென்று வெளியில் சென்றாள். அச்சமயம் அவள் அணிந்திருந்த உடையைக் கவனித்தேன். அது காலிகோ துணியால் தைக்கப்பட்டது.

அந்த அறையின் ஒருபுறம் நெகிடித்தி சுடர்விட்டெரிந்துகொண்டிருந்தது. அங்கு வந்த இரண்டு ஆடவரில் மூத்தவன் இளையவனை நோக்கி "நீ லீலாவின் பின்சென்று மேற்கு அறையில் படுக்கை ஆயத்தப்படுத்தும்படி கூறு," என்று ஆழ்ந்த குரலாகக் கூறிவிட்டுத் தன் மேற்சட்டையைக் கழற்றி அதிலுள்ள ஈரத்தைப்போக்க நெகிடித்தி யருகில் காட்டினான்.

இளையவன் "ஓ! நான் தொந்தரை கொடாமலே அவள் அதைச் செய்து விடுவாள்! நானும் முழுதும் நனைந்திருக்கிறேன்," என்றான்.

அவர்கள் இருவரும் அன்னிய நாட்டார் என்று தோன்றியது. மூத்தவன் மிக்க பலம் பொருந்தியவன். சுமார் ஐம்பது வயதிருக்கும். சுளித்த முகம். அதிலும் மிக்க கெட்ட முகச்சுளிப்பு. இளையவனுக்கு அது உறுத்துவதாகவே புலப்பட்டது. அவர் சட்டையை நாற்காலியின்மேல் எறிந்துவிட்டு அறையை விட்டுச் சென்முன். மூத்தவன் "இக்காலத்தில் பையன்கள் மிக அதிகப் பிரசங்கித்தனமாகவே நடந்து கொள்கிருர்கள். என் காலத்தில் பெரியோர் எப்படிக் கூறுகிருர்களோ அப்படியே நடப்பார்கள். ஆம். ஒரு கேள்வியும் கேட்கமாட்டார்கள்," என்முன்.

அப்போது வெளியில் சென்ற சுமார் ஆறடி உயரமுள்ள வாலிபன் அவன் பையன் என்று கூறியது எனக்கு நகைப்பை யுண்டாக்கிற்று, நான் "அவன் உமது குமாரன் போலும், அல்லவா?" என்று நெகிடித்தீயின் அருகில் உட்கார்ந்தேன். அங்கிருந்து வெளியில் சென்ற அப் பெண்ணின் உருவம் என் எதிரில் நிற்பது போலவே தோன்றியது.

அம் மனிதன் நான் கூறியதற்குப் பதில் "ஆம் அவன் என் புத்திரனே. சற்று முன்பு இங்கு பார்த்தாயே அப் பெண் என் மகள். நான் இந்த ஹோட்டலை நடத்தி வருகிறேன். இவர்களிருவரும் எனக்கு உதவியாக இருக்கிருர்கள். ஆனல் நான் கூறுகிறேன், இது ஒரு அற்ப சீவனமேயாகும். இவ் வழிகளில் பிரயாணிகள் மிகக் கொஞ்சம். ஏனெனில் பிரயாணம் செய்ய மிகக் கஷ்டமான பாதைகளே இங்குள்ளன," என்முன்.

நான் ஐந்தாறு குன்றுகளில் ஏறியிறங்கி வந்ததை யெண்ணிக்கொண்டு "அது உண்மையென்றே நினைக்கி

றேன். இங்கிருந்து பொன்னூர் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்றேன். அம்மனிதன் துரிதமாய் "ஓ இரண்டு மூன்று மைல்களிருக்கும். பகலில் சமீபமாகவே தோன்றும். ஆனால் இரவிலோ பெரும்பிரயாணமாகத் தோன்றும். அதிலும் இத்தகைய இரவில் மிகக் கஷ்டமே," என்றான்.

நான் "ஆம் உண்மையே. எனக்குத் தங்க இச்சமயம் ஒரு இடமகப்பட்டது அதிஷ்ட வசமே," என்றேன். அம்மனிதன் என் பிரயாணச் சாமான்களை நோக்கினன். அவை ஒரு சிறு பையும் ஒரு மேற் சட்டையும் ஒரு தூண்டிலும் மட்டுமே யென்பதைக் கண்டதும் மனச் சோர்வடைந்தவன்போல் காணப்பட்டான். "மீன் வேட்டைக்குப் போகிறதுபோல் காண்கிறது," என்றான். நான் "ஆம்" என்றேன்.

அம்மனிதன், "அங்குள்ள ஆறுகளில் நல்லகெண்டை மீன்கள் உண்டு. அதிலும் ஏராளமாயிருக்கும்; தனியாகவே செல்கிறீரோ?" என்று வினவினன்.

அவன் பேசியமாதிரி எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை; ஆயினும் சந்தர்ப்பத்தை நோக்கிச் சலக்கரணையாகவே பேசவேண்டுமென்று நினைத்து, "இல்லை இல்லை. நான் பொன்னூரில் ஒரு சிநேகிதனைச் சந்திக்க எதிர்பார்க்கிறேன். அவன் என் கூட வருவான்," என்றேன்.

அம்மனிதன் ஏதோ சிந்தனையி லிருப்பவன்போல் தன் தாடியைத் தடவினன். எனக்கிருக்கும் உலக அனுபவத்தால் அவன் ஏதோ கெட்ட எண்ணத்தோடு பார்க்கிறான் என்று எண்ணினேன். அவன் என்னை நோக்கி "அப்படியாயின் நீ எதிர்பார்க்கப் படுகிறாய்," என்றான்.

இதற்கு விடையளிப்பது அவசியமென்று எனக்குப் புலப்படவில்லை. ஆகையால் எனக்கு அச்சமயம் குளிர்

அதிகமாக விருந்தபடியால் நெகிடித்தியின் அருகில் கால்களை நீட்டிக் குளிர் காயத்தொடங்கினேன். அதன் பிறகு அவன் என் நீலக்கம்பளியுடையை நோக்கி "நெடுங்காலமாக யாத்திரை செய்கிறீர்களோ?" என்று கேட்டான். நான் "வசந்தகாலம் முழுமையும்," என்றேன். அவன் மறுபடி மனச்சோர்வடைந்தவனாகக் காணப்பட்டான். அவன் "தாங்கள் எங்கிருந்து புறப்பட்டீர்கள்?" என்றான். நான் "இந்திரபுரியிலிருந்து புறப்பட்டேன்," என்றேன்.

அம்மனிதன் "ஆ! அது பெரிய நகரம். நான் ஒரு காலத்தில் அங்கிருந்தேன். அங்குள்ள பிரம்மாண்டமான கட்டிடங்களில் ஏராளமான பொருள் சேகரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆ! அல்லவா?—" என்றான்.

நாம் ஆம் என்றதே அவன் தன் நாற்காலியை என்னருகில் இழுத்துக்கொண்டு வந்தான். ஆனால் அச்சமயம் வெளியில் சென்றிருந்த அவன் புத்திரன் உள்ளே வந்து, நான் இருவர் மத்தியிலும் சிக்கும் விதமாக நெகிடித்தியின் மறுபக்கம் வந்து உட்கார்ந்தான். இந்த நடக்கை எனக்குப் பிரியமில்லை. அவன் நடக்கை மூடத்தனத்தால் நேர்ந்ததென்று எண்ணினேன். நான் பின்னடைந்து, என்னறை ஆயத்தமாயிற்றாவென்று கேட்டேன். அது இன்னும் ஆயத்தமாகவில்லை என்று தெரிந்ததால் எனக்கு அதிருப்தி உண்டாயிற்று. ஆயினும் என் பிரியத்திற்கு மாறாக அங்கேயே உட்கார்ந்து அவர்களோடு சம்பாஷிக்க வேண்டியதாக இருந்தது.

அரைமணி நேரம் கழிந்தது. இதற்கிடையில் காற்று அதிகமாயிற்று. கடைசியில் அது புயல்காற்றாக மாறியது. கல்மழை அடிப்பதுபோல் சாளரங்களில் மழைத்துளிகள் வீசத் தொடங்கின. அருகிலிருந்த குன்றுகளிலிருந்து அடிக்கடி இடிமுழக்கம் பயங்கரமாய் உண்டாகியது. அச்

சமயம் 'நாம் இத்தகைய சந்தர்ப்பத்தில் நமக்கு இந்த இரவு தங்க ஒரு இடம் அகப்பட்டது கடவுள் தயவே,' என்று கருதினேன். அச்சமயம் நாங்கள் தற்கால நிலைமையைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தோம். திடீரென்று அறையின் கதவு திறக்கப்பட்டதும், "இவருடைய அறை ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது," என்று ஒரு மெலிந்த சத்தம் உண்டானதைக்கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தேன். நான் முன் கண்ட பெண்ணே அங்கு வந்து அதைக் கூறுகிறாள் என்று கண்டேன்.

நான் உடனே எழுந்து "அப்படியாயின் நான் உடனே சென்று சயனித்துக்கொள்கிறேன்," என்று என் மூட்டையை எடுத்துக்கொண்டு அப்பெண்ணை நோக்கி நடந்தேன். அப்போது ஹோட்டல் முதலாளி என்னை நோக்கி "இந்த வீட்டில் இரவில் இத்தகைய பயங்கரமான சத்தங்கள் கேட்கும். இச்சாளரங்களெல்லாம் கலகலத்துப் போயிருக்கின்றன. கதவுகளும் உறுதியா யமைக்கப் பட்டவையல்ல. இத்தகைய காற்றில் எப்படிப்பட்டவர்களையும் நித்திரை செய்யக்கூடாத அத்தகைய பயங்கரமான சத்தங்கள் உண்டாகும். ஆயினும் உண்மையில் பயம் ஒன்றுமேயில்லை. நீ மட்டும் இச்சத்தங்களைச் சட்டை செய்யாதிருந்தால் ——— " என்றதே,

நான் "இத்தகைய சத்தங்களுக்கு நான் பீதியடைய மாட்டேன். நான் சற்றும் பீதியின்றி நிம்மதியாய் நித்திரை செய்வேன்;" என்றேன். அச்சமயம் கணப்பால் படிகளிலேயே படுத்துக் கொள்ளலாமா என்று ஆவலாக இருந்தது. அதன் பிறகு நான் அப்பெண்ணின் கூடவே மேல்மாடிக்கு ஒரு விசாலமான அறைக்குச் சென்றேன். அந்த அறை நாணயமாக அலங்கரிக்கப்பட்ட அறையல்ல.

அங்கு ஒரு பெரிய மஞ்சம் அதைச்சுற்றித் தடிப்பான திரைவிடப் பட்டிருந்தது.

நான் அதைக் கண்டதும் "ஐய்யோ! இத்தகைய திரைக்குள் நித்திரை செய்ய என்னால் முடியாது," என்று அப்பெண்ணை நோக்கிக் கூறினேன். அவள் உடனே ஒரு கரத்தால் அத்திரையைச் சுற்றி மேலே எறிந்துவிட்டு "நான் உனக்குச் செய்யவேண்டியது இன்னும் ஏதேனு முண்டோ?" என்றாள். நான் இல்லை என்றதே கதவை மூடிக்கொண்டு சென்றாள்.

13-வது அத்தியாயம்

பூபாலப்பிள்ளையின் சரித்திரத் தொடர்ச்சி:—

நான் தனியே அந்த அறையில் விடப்பட்டதும் என் மன நிலைமை மாறுபாடு அடைந்தது. காற்று பயங்கரமாக வீசுகிறது. ஒவ்வொரு சமயம் எங்கே, அக்கட்டிடமே அடியோடிடிந்து விழுந்துவிடுமோ என்று பீதியுண்டாயிற்று. அங்கு வரும்போது படுக்கையில் படுத்ததே நித்திரை போய் விடுவோம் என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால் அந்த அறையில் தனியே விடப்பட்ட பின் நித்திரைக்கும் எனக்கும் மிக்க தூரமாய் விட்டது. நான் அங்கிருந்த படுக்கையை உற்றுநோக்கி, படுக்கை நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறதே, நாம் ஏன் நிம்மதியாக நித்திரை செய்யலாகாது என்று வீணே சிந்திக்கலானேன். ஆயினும் நித்திரைப் பிரியம்நான் உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து என்னைக் கிளப்பவேயில்லை. நான் ஏதோ அபூர்வமான சக்திக்குள் சிக்கியிருப்பது போலும் அது என்னைத் தூங்காதபடி விழிக்க வைத்துக் கொண்டிருப்பதுபோலும் தோன்றியது. நான் அப்படி

இப்படித் திரும்பியபோது எனக்கு ஒருவிதமான பீதி தோன்றியது. ஏதோ ஆபத்து நேரும்போல் புலப்பட்டது. ஆனால் ஆபத்து வருமென்று நினைக்க எனக்குள் ஒரு காரணமும் தோன்றவிடினும், ஏதோ நமது மனப் பலஹீனத்தால் நமக்கு இத்தகைய பீதி தோன்றுவானேன் என்று எனக்குள் சிந்திக்கலானேன். எனக்கு ஏன் கலக்கமடைய வேண்டுமென்று காரணம் புலப்படவில்லை.

நான் சிந்தித்துக்கொண்டே உறக்கத்திலிருக்கையில் பயங்கரமான காற்று வீச அக் கட்டிடத்தைச் சூழ்ந்திருந்த மரங்களால் உண்டான சத்தம் என்னைத் திடுக்கிடச் செய்தது. அக் கட்டிடமே நடுங்குவதுபோ லிருந்தது. நான் இவற்றால் உண்டாகும் பீதியை உணரா திருக்க வேண்டின் நித்திரை செய்யவேண்டும். ஆகையால் நான் என் சட்டையைக் கழற்றிவிட்டு அதை நாற்காலியின்மேல் போடப்போனேன். பிறகு உள்ளிருந்த அரைச்சட்டையைத் தளர்த்தினேன். அச்சமயம் அதிலிருந்த பையை நினைத்துக்கொண்டு, எதற்கும் எச்சரிக்கையாக விருக்க வேண்டுமென்று கருதி அறையின் கதவை மூடிப் பூட்டிக் கொண்டு பிறகு பையை வெளியிலெடுத்து அதிலிருந்த நோட்டுகளில் சிலவற்றை மட்டும் எடுத்து உள் ஜேபியில் வைத்துவிட்டுப் பையை முன்போல் உட்சட்டையிலேயே பழைய விடத்தில் வைத்துக்கொண்டேன்.

நான் ஏன் இப்படிச் செய்தேன் என்பதற்குக் காரணம் எனக்கே தெரியவில்லை. நமக்கு ஏதேனும் ஆபத்து நேரிடுமென்ற சிந்தனை எனக்கில்லை. எவ்விதச் சந்தேகமும் என் மனதிலில்லை. அங்கிருந்த மனிதர்களின் மாதிரியும் பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவேயன்றி வேறு எவ்வித சந்தேகமாவது கலக்கமாவது அனக்குண்டாகவில்லை. ஆயினும் நான் கூறியபடியே

செய்ததோடு தீபத்தையும் அணைக்காமல் வைத்துவிட்டு படுத்துக்கொண்டேன். நான் முன் ஒருபோதும் தீபத்தை அணைக்காமல் சயனித்ததில்லை, காற்றடிப்பதால் கட்டிடமே நடுங்குவதுபோல் இருந்த பயத்தால் அவ்வாறு செய்தேன்.

பிறகு எந்நேரம் அப் பயங்கர சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேனோ அதன் பிறகு எந்நேரம் உறக்கத்தி லிருந்தேனோ தெரியாது. புயலின் மும்முரம் அடங்கு வதற்கு முன்பே யாரோ என்னைத் தொடுவதுபோல் இருக் கவே திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன். உடனே துள்ளி எழுந்து மஞ்சத்திலிருந்து கீழே குதித்தேன். என் எதிரில் அந்த லீலா என்ற பெண் நிற்பதைக் கண்டதே எனக் குண்டான ஆச்சரியத்திற் களவேயில்லை. அவள் தான் என்னைத் தொட்டவள். அவள் என் சட்டையைக் கரத் தில் வைத்துக்கொண் டிருந்தாள்.

நான் பிரமித்து ஒன்றுந்தோன்றாது அவளை நோக்கு வதற்குள் அவள் முன் நான் கண்டமாதிரிக்கு நேர் விரோதமாய் கலக்கமான குரலோடு "நீர் இச்சட்டையை அணிந்துகொண்டு என்கூட வரவேண்டும். இனி நீர் இங் கிருக்கலாகாது. இவ்வீடு அபாயகரமானது. இதோ பாரும் இது எப்படி நடுங்குகிறது. என்ன பயங்கரமான சத்தம்! இன்னும் இத்தகைய ஒரு வேகமான காற்றடித்ததோ மேல் கூரை அடியோடு போய்விடும்," என்று கூறிக்கொண்டே கதவை நோக்கி நடந்தாள். நான் கதவு பாதி திறக்கப் பட்டிருப்பதைக் கண்டதே பின்னும் மிக்க வியப்படைந் தேன்.

நான் தடுமாற்றமுறுவதைக் கண்ட அப் பெண் திரும்பிவந்து குசு குசு வென்று "நீர் வரமாட்டீரா? நீர் இங்கே இனித் தங்கும்படி நான் விடலாகாது. அப்படிச்

செய்வேனாயின் உமது இரத்தம் என் தலைமேல் விழும்." என்று ஒருவித நிர்மானத்துடன் கூடிய பார்வையோடு கூறினான்.

நான் அங்கிருந்த சௌகரியமான படுக்கையை ஆவலோடு நோக்கி, "நீ மிக்க பீதியடைந்து விட்டாய். இப் பழைய வீடுகளெல்லாம் எப்போதும் பலமானவை. இப்படிப்பட்ட புயல்காற்றுகள் எத்தனையோ கட்டிடங்களைப் பார்த்திருக்கும்," என்றேன். அவன் "நான் அதிகமாகப் பீதியடைகிறேனா? ஹா! அதைக்கேள்," என்றான்.

நான் "ஆம். ஆயினும் இப்பயங்கரமான இரவில் வெளியில் செல்வதென்றால்..." என்றேன். அவன் "நானும் கூடவருகிறேன். என்றான். நான் "அப்படியாயின்...." என்று அதற்குமேல் கூறுமுன் அவன் "அதோ உமது பிரயாணப்பை. இத்தூண்டில் இங்கே கிடக்கட்டும். இதை எடுத்துச் செல்ல முடியாது," என்று கூறிக்கொண்டே பையை எடுத்து என் கரத்திலளித்தான்.

நான் "ஆனால்—" என்றதே அவன் படிகளின் தலைப்பில் நின்று கீழே எதையோ உற்றுக் கேட்டுவிட்டு, குசுகுசுவென்று "என் தந்தையும் தமையனும்கூட நீர் கருதுவதைப் போலவே இந்தப் பயங்கரமான இரவில் வெளியில் செல்வதைவிட இங்கிருப்பதே நலம் என்று கூறுவார்கள். ஆனால் நீர் அவர்கள் வார்த்தைகளைக் கவனிக்கலாகாது. நான் கூறுவதை நம்பும். இந்த இரவு நீர் இங்கே இருப்பது ஆபத்து. எத்தகைய புயற்காற்றாயினும் வெளியில் இருப்பதே, பாதையில் செல்வதே க்ஷேமம்," என்றான்.

என் விடைக்கு எதிர்பாராமல் உடனே கீழிறங்கத் தொடங்கினான். நான் பேசாமல் சென்றேன். படிகளின் அடியிலிருந்த கதவைத் திறந்து நெகிழ்த்தி யிருக்கும் அறைக்குள் சென்றோம். அச்சமயந்தான் எனக்கு அந்த

அறையில் ஏதோ பெரிய ஆபத்திருப்பதுபோல் நெஞ்சு நடுங்கியது. நெருப்புவத்தி என்னமோ இன்னும் எரிந்து கொண்டே யிருக்கிறது. ஆனால் அதனாலல்ல என் மனதில் பீதியுண்டானது. அங்கு வெளியிலுள்ள கூடத்திற்குச் செல்லும் வாயிற்படியில் ஒரு கதவும், சமையலறைக்குச் செல்லும் வாயிற்படியில் ஒரு கதவுமிருந்தன. அங்கிருந்த இருவரில் தந்தை ஒரு கதவின்மேலும் மகன் மற்றொரு கதவின்மேலும் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தார்கள். இக் காட்சியே என் மனத்தை நடுங்கச் செய்தது.

என் பக்கத்தில் அப்பெண் சற்றும் அஞ்சாத நெஞ்சோடும் ஒரு விதத் துணிகரமான பார்வையோடும் நிற்பதைக்கண்டதே எனக்குத் தைரியமுண்டாயிற்று. அவளுடைய தைரியம் என் பட்சத்திலிருக்கிறவரையில் எனக்கு எத்தகைய ஆபத்து நேர்வதாயினும் தப்பித்துக்கொள்வேன் என்று என் மனதில் யாரோ கூறுவது போலிருந்தது. என் பிரயாணப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு நான் வெளி வாயிற்படியையும் அங்கு நிற்பவனையும் நோக்கி நடந்தேன். ஆனால் லீலாள் தட்டென்று என் தோளைப் பற்றி இழுத்து "நீர் பேசாமல் நில்லும்," என்றாள். நான் அவ்வாறே தட்டென்று நின்றேன்.

அப்பெண் அவ் வாயிற்படியில் சற்று மன வாட்டத்தோடும் அதிருப்தியோடும் நிற்கும் தன் தமையனை உற்று நோக்கி "அண்ணா! கதவைத் திறந்து எட்டவில்; இவர் வெளியில் செல்லட்டும். இத்தகைய புயற் காற்றடிக்கும் இரவில் இக்கட்டிடத்திற்குள் இருக்க அவர் மிகவும் பயப்படுகிறார்," என்றாள். ஆனால் தன் தமையன் கதவின்மேல் இன்னும் உறுதியாகச் சாய்வதைக் கண்டு "உடனே திற. நான் ஒரே வார்த்தை கூறுபவள் என்று தெரியுமல்லவா!" என்றாள்.

அவ்வாறெனின் "இத்தகைய இரவில் வெளியில் செல்லக் கருதுபவன் மூடனாகவல்லவோ இருக்கவேண்டும்? அவ்வாறே கூறும் நீயும் மூட்டாளாகவே இருக்கவேண்டும். உன் சுகத்திற்குப் பங்கம் நேரிடுமாதலின் எனக்கு விருப்பமில்லை," என்றான். லீலா அவன் வார்த்தைகளைச் செவியேற்றவளாகக் காணப்படவில்லை. அவளும் நானும் தீயருகிலேயே நின்றுகொண்டிருக்கிறோம். அவன் அந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட நகராமலே, "உடனே கதவைத் திறக்கிறாயா இல்லையா?" என்றாள்.

அவன் முரட்டுத்தனமாய் "இல்லை நான் திறக்கமாட்டேன். இரவிற்குக் கதவுகள் மூடப்பட்டன. இனி நானாவது, என்போன்ற யாராவது திறக்க முடியாது," என்றான். லீலா மிக்க தீட்சண்யமான பார்வையோடு தன் தந்தையை நோக்கினாள். அவன் மறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தான். அவள் மறுபடி தன் தமயனை நோக்கி, "யாரேனும் ஒருவர் கதவைத் திறந்தே தீரவேண்டும். இவர் வெளியில் செல்லவேண்டுமென்கிறார். இவர் பிரியம் நிறைவேற்றப்பட வேண்டும். அக் கதவை நீ திறக்கிறாயா அல்லது நான் திறக்கட்டுமா?" என்றாள்.

உடனே அவள் தந்தை ஒரு மிருகத்தைப்போல் உறுமிச் சட்டென்று தான் சாய்ந்துகொண்டிருந்த சமையலறைக் கதவை விட்டு அவளை நோக்கி வந்தான். அவன் முகத்திலிருந்த குரூரமான பார்வையை நோக்கியபோது அவன் அவளைக்கொன்று விடுவான்போல் தோன்றியது. நான் உடனே அவனைத் தடுக்க எண்ணி கரத்தைத் தூக்கினேன். ஆனால் அச்சமயம் லீலாவின் முகத்திலுண்டான அஞ்சாத தீட்சணியமான பார்வையைக் கண்டதும் என் கரத்தைத் தொங்கவிட்டுவிட்டேன்.

அவள், தன் தந்தை தான் இருக்குமிடத்திற்கு நான்கு ஐந்தடிகள் தூரத்தில் வரும்போது அவள் தன் கரத்தை நீட்டி "நீர் அங்கேயே நிற்கவேண்டும். இன்றேல் நீங்கள் எதற்காக உங்கள் ஆன்மசுத்தத்தை இழந்துவிடத் துணிந்தீர்களோ அந்த வஸ்துவை அடியோடு இத்தீக்கிரையாக்கி விடுவேன்." என்று கூறிக்கொண்டே ஒரு கற்றை உண்டிகளைக் கரத்தில் பிடித்தபடி அங்கிருந்த நெகிடித் தீயின்மேல் காட்டினாள்.

தந்தை "நீ....நீ...." என்று அதற்குமேல் ஒன்றும் கூற முடியாமல் தான் நின்ற இடத்தை விட்டு நகராமல், அவள் தீயின்மேல் பிடித்துக்கொண்டிருக்கும் கடிதங்களைப் பார்த்தபடி நிற்கிறான்.

அப்பெண் ஒரு விதமான அணிகாமுடைய அதிகாரத் தொனியோடு, "நான் பல வார்த்தைகளைப் பேசுகிறவளல்ல. ஒரே வார்த்தை பேசுகிறவள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் என் நெஞ்சைப் பிடித்து நெருக்கிவிடலாம்; என்னைக் கொன்று விடலாம். இவர் இந்த இரவு இந்த வீட்டை விட்டு வெளியிற் செல்லவேண்டும். இன்றேல் ஒரு விநாடியில் இப்பணத்தை எல்லாம் அழித்து விடுவேன்," என்றாள். தந்தை மறுபடி "நீ ..." என்று மட்டும் கூறினனேயன்றி வேறொன்றும் கூறவில்லை. இடத்தை விட்டுப் பெயரவுமில்லை," ஆனால் அவ்வாலிபனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்தான். மறு விநாடி அப்பெண்ணின்மேல் பாய்ந்தே இருப்பான். ஆனால் நான் உடனே பாதி வழியில் அவனைச் சந்தித்து ஒரே குத்தால் அவனைப் பூமியில் வீழ்த்தினேன்.

அதைக்கண்ட லீலாள் ஒன்றுமே கூறவில்லை. ஆனால் அவள் கையிலிருந்த உண்டிகளிலிருந்து ஒன்று கைதவறி அங்கிருந்த நெகிடித்தீயில் போய் வீழ்ந்து உடனே தீய்ந்து

சாம்பலாய்விட்டது. அதைக்கண்ட தந்தையும் மகனும் பிரமித்து விழித்த கண் விழித்தபடி நின்றார்கள்.

மூத்தவனாகிய தந்தை வெறிகொண்ட மிருகம்போல் தரையில் தன் பாதங்களாலுதைத்து, "நில்" என்று கூறியதும் அவன் துரிதமாக முன் பக்கமிருக்கும் வாயிற்படிக்குச்சென்று, அதைத் திறந்துவிட்டு, "நீங்கள் அத்தகையமடையர்களாகவிருந்தால் போங்கள். உங்கள் தலைமேல் இடிவிழட்டும். ஆனால் முன்னே பணத்தை என்னிடம் கொடுத்துவிடு," என்றான்.

அப்பெண் "கதவை விட்டு அப்புறம் வா," என்று கூறிக்கொண்டே நெகிடித்தியின் பக்கத்திலிருந்த இராந்தலைத் தொட்டுக்காட்டி, "அண்ணா! இதை உடனே ஏற்றிவிட்டு வெளியிற் செல்லும் வாயிற்படியை விட்டு அப்புறம் வந்து விடட்டும்," என்றாள்.

அச்சமயம் அவள் முகத்தில் தீக்ஷண்யமான ஒரு தீ சொலிப்பது போலிருந்தது. எனக்கே அதைக் கண்டபோது பீதியுண்டாகிவிட்டது. அவள் எனக்கு நன்மை செய்யவே துணிந்திருக்கிறாள். என்ற உண்மை எனக்குப் புலப்பட்டிராவிட்டால் அந்த இரண்டு ஆடவர்கள் செய்கையால் எனக்குண்டான பீதியைக் காட்டிலும் இவள் தோற்றத்தால் மிக்க பீதியடைந்து விட்டேயிருப்பேன்.

அவள் அவ்வாறு துணிகரத்தோடு கூறியதே இரண்டொரு விநாடிக்குள் அவள் கட்டளைப்படி யாவும் நடந்துவிட்டன. கதவு திறக்கப்பட்டன. இராந்தல் கொளுத்திக்கொண்டு வரப்பட்டது. லீலா என்னை நோக்கி "இப்போது நீர் செல்கிறீரா? நான் பின்னால் வருகிறேன்," என்றாள். நான் "நீ வராமல் நான் தனியாகச் செல்ல மாட்டேன்," என்றேன்.

அச்சமயம் மூத்தவன் "ஆனால் பணம்?" என்றான்.

அப்பெண் "நான் திரும்பி வரும்போதுதான் அதைக் கொடுப்பேன்," என்றாள்.

* * * * * * *

லீவாள் என் கரத்தைப் பற்றி வெளியில் இழுத்துச் சென்றபோது என் தேகத்தில் மின்னல் பாய்ந்தது போலிருந்தது. இருவரும் வெளியில் வந்ததும் கதவை லீவாள் மூடிவிட்டாள். அங்கிருந்து நாங்கள் பாதையில் பிரவேசித்ததும் லீலாள் இலாந்தரைக் கையில் எடுத்து வந்தாள். இன்றேல் என் வரையில் வழியறிவது கஷ்டம், ஏனெனில் பயங்கரமான இருள் எங்கும் சூழ்ந்து கொண்டிருந்தது. மழை சோ சோ வென்று அடித்தது. என்னுடன் வரும் பெண்ணின் அழகு அவ்வளவாய் என் மனதைக் கவரவில்லை. ஆனால் அவளுடைய துணிகரமான மனோ வல்லமையே என் மனதைக் கவர்ந்து கொண்டது. காற்றின் வேகமும், இருளும், மழையும் அவளுக்கு உதவி செய்வது போலவே தோன்றின. அவள் அதி துரிதமாய் நடந்தாள்.

இருவரும் கொடி வழியை விட்டுப் பெரிய பாட்டையில் சேர்ந்ததும் அவள் நின்று திரும்பிப் பார்த்தாள். ஹோட்டலில் இருந்த இரண்டுபேரும் அக்கட்டிடத்தின் வாயிற் படியில் நின்றுகொண்டிருந்தார்கள். மறு விநாடி அவர்கள் இருட்டில் பாய்ந்து எங்களை நோக்கி வரத் தொடங்கினார்கள். லீலாள் ஓ என்று மெதுவாய்ச் சத்தமிட்டதும் அருகிலிருந்த மரத்தினருகில் ஓடினாள். நானும் பின்னால் ஓடினேன். அம்மரத்தடியில் என் குதிரை ஆயத்தமாய் சேணம்போட்டு கட்டப்பட்டிருந்ததைக் கண்டது எனக்கு அவளுடைய புத்தி சாமார்த்தியத்தைப் பற்றிப் பின்னும் வியப்பாய் விட்டது.

அவன் குதிரையை மரத்தினின்று அவிழ்த்து விட்டு இராந்தலைச் சேணத்தின் மூலையில் கட்டிவிட்டு ஏறு என்ருன். நான் உடனே ஏறிக்கொண்டேன். அப்பையன் குதிரையை ஒருதட்டு தட்டிவிட்டதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் பின்னுல் ஏறிக்கொண்டான். இவையாவும் ஒரு விநாடியில் முடிந்து விட்டது. குதிரை பாதை வழியே துரிதமாகச் சென்றது.

திடீரென்று அவன் நாம் நிற்கவேண்டும் என்ருன். நான் உடனே குதிரையை நிறுத்தி விட்டேன். அச்சமயம் நான் திரும்பிப் பார்த்தபோது அவள் தந்தையும் தமையனும் துரிதமாக வருவதைக் கண்டேன். அவன் சட்டென்று இறங்கு என்று கீழே குதித்தான். நானும் இறங்கி விட்டேன். அவன் என் கரத்தைப் பற்றிக் கொண்டு குசு குசு வென "அவர்கள் தீபத்தைப் பார்த்துக் கொண்டு அத்திக்கே செல்வார்கள்," என்று கூறிவிட்டு நேர்மாருன திக்கில் அழைத்துக் கொண்டு துரிதமாக நடந்துகொண்டே "நீர் என்னை நம்பினுல் நான் உம்மைச் சீக்கிரத்தில் ஒரு இடத்தில் அழைத்துக் கொண்டு போய் விடுவேன்," என்ருன்.

நான் "நீ என் விஷயத்தில் மிக்க அன்பு காட்டுகிருய், எனக்காக நீ இத்தகைய கஷ்டங்களுக்கும் ஆபத்துக்கும் உட்படுவானேன்?" என்றேன். அவன் ஒரு பதிலும் கூருமல் என் கரத்தைக் கெட்டியாகப் பற்றியதையும் விடாமல் துரிதமாக நடந்தான். சற்று தூரம் சென்றபோது காற்றுக்கும் மழைக்கும் எதிர் வாட்டில் செல்வதால் எனக்கு மூச்சு வாங்கி விட்டது. வீலான் திடீரென்று நின்று தாழ்ந்த குரலாய் ஆனுல் உறுதியான மொழிகளாய் "நாம் பயங்கரமான ஆழ்ந்த பாதாளத்தின் ஓரத்தில் நிற்கி

ரோம் என்பது உமக்குத் தெரியுமா? இங்கிருந்து அது கால் மைல் தூரம் வரையில் செல்கிறது. இத்தகைய இருட்டான இரவில் ஒருவன் குதிரையேறி இவ்வழியாக வருவானாயின் அவனும் குதிரையும் பாதாளத்தில் வீழ்வது சாதாரணம்," என்றாள்.

அதைக்கேட்டதே நான் ஏதோ ஒரு பெரிய பயங்கரமான ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டது போல் என் மனதில் புலப்பட்டு என் தேகம் நடுங்கியது. அவள் கூறியதில் ஏதோ கருத்திருப்பதாகத் தோன்றியது. நான் "அப்படியாயின் இது மிக்க அபாயகரமான பாதை," என்றேன். ஆம் மிக்க அபாயகரமானதே என்றாள்.

நாங்கள் எவ்வளவு தூரம் சேறும் புல்லும் நிறைந்த அப்பாதை வழியாகச் சென்றோமோ எனக்குப் புலப்படவில்லை. நெடுந்தூரம்போல் தோன்றியது. சுமார் முக்கால் மைலுக்கதிக மிராதென்று நினைக்கிறேன். கடைசியில் ஆ! இதோ வந்துவிட்டோம் என்று கூறிக்கொண்டே நின்றாள். நான் நிமிர்ந்து பார்த்தபோது நாங்கள் தீபமில்லாத ஒரு குடிசை வீட்டின் முன் நிற்கிறோம் என்று தெரிந்தது. காற்று மழையில் அடிப்பட்டுத் தேக முழுமையும் நனைந்து சேற்றில் நடந்து காலோய்ந் திருப்பவர்களுக்கு அச்சமயம் அக்குடிசை ஒரு மாளிகைபோல் தோன்றியது.

இருவரும் இரண்டொரு நிமிடம் வெளித் தாழ்வாரத்தில் நின்றபின் வீலாள் தடாலென்று கதவைத் தட்டிவிட்டு "இங்கு நமக்கு அடைக்கலம் கிடைக்கும்," என்றாள். அவள் கூறியது உண்மையே. இரண்டொரு நிமிடங்களில் வயது முதிர்ந்த ஒரு ஆள் தீபத்தோடு வந்து கதவைத் திறந்தான். சற்று நேரத்திற்குள் நாங்கள் அங்கிருந்த புருடன் மனைவியோடு நன்றாக எரியும் நெகிடித்

தியினருகில் உட்கார்ந்தோம். ஆபத்து நீங்கி க்ஷேமமான இடத்திற்கு வந்து சேர்ந்தோம் என்று தெரிந்ததே அந்தத் திர மனப் பெண் எனக்காகச் செய்த காரியங்களெல்லாம் என் மனதில் தோன்றின. நான் அவளை ஏற இறங்க நோக்கினேன். அப்போதுதான் அவள் உருவத்தை நன்ருய்க் கவனித்தேன். அவளுக்கு வயது பதினறுக்குமேல் ஆகவில்லை யெனினும் அவள் முகவிலாசமும் தேஜசும் மிக்க வியப்பளித்தன. அவள் கூந்தலிலுள்ள ஈரத்தை உலர்த்திக் கொண்டிருந்தவள் நிமிர்ந்து என் முகத்தை நோக்கியபோது நான் தலையைக் குனிந்து வந்தனமளித்துப் பிறகு என் நன்றியை வாக்கால் வெளியிட முயன்ற போது அவள் சட்டென்று நிமிர்ந்து "நான் உமக்கு ஒன்றும் செய்து விடவில்லை. நான் என் கடமையையே செய்தேன். அதில் ஜெயமடைந்தேன் என்பதற்காகச் சந்தோஷப் படுகிறேன்," என்று கூறிவிட்டுப் பிறகு மெதுவாய், "ஐயா! தாங்கள் என் நடக்கைக்காக நன்றி பாராட்டுவதாயின் ஹோட்டலில் இப்போது நடந்த சங்கதிகளை ஒருவரிடமும் வெளியிடாது இரகசியமாய்க் கருத வேண்டுமென்று கேட்டுக் கோள்கிறேன்," என்றுள்.

உடனே அங்கிருந்தபோது என் மனதிற்பட்ட ஒரு வித சந்தேகம் கவனத்திற்கு வந்தது. நான் உடனே என் ஜேபியில் கையிட்டுப் பார்த்தேன். என்னிடமிருந்த நோட்டுகள் உண்டிகள் அடங்கிய கட்டு அடியோடு போய் விட்டது. நான் ஜேபியில் கையிட்டுப் பார்த்ததை அவள் பார்த்துக் கொண்டிருந்தும் சற்றும் தடுமாற்றமுறவில்லை. "நான் கோரியபடி செய்வதாயின் என் மனக்கலக்கம் நீங்கும்," என்றுள். நான் என் கையைச் சேபியிலிருந்து எடுத்து வெறுங்கையைத் தடவி ஒன்றும் சொல்லாமல் பேசாமலிருந்தேன்.

அப்பெண் "நீர் ஏதேனும் இழந்துவிட்டீரோ? உட்சட்டைச் சேபியில் நன்றாகப் பாரும்" என்றாள். நான் அவ்வாறே பார்த்தபோது திருப்தியோடு கரத்தை வெளியிலெடுத்தேன். ஏனெனில் நோட்டுகள், உண்டிகள் யாவும் இதிலிருந்தன. "நீ கோரியபடி நடப்பதாக நான் வாக்குத் தத்தம் செய்கிறேன்," என்றேன். லீலாள் "ஆயினும் ஒரு உண்டி காணாமலிருக்கும். அது எவ்வளவு தொகைக்கோ உனக்குத் தெரியாது. ஆனால் ஏதேனுமொன்றை யிழக்கவேண்டியது அவசியமாக விருந்தது," என்றாள்.

நான் "நான் உன் புத்தி சாமார்த்தியத்திற்கு மெச்சிக்கொள்வதோடு உன் தீரமான நடக்கைக்காக நான் உன்னை அதிகமாகப் புகழ்கிறேன். நீ மிக்க பெருந்தன்மையுடைய மாது," என்றேன்.

14-வது அத்தியாயம்

பூயாலப்பிள்ளையின் சரித்திரத் தொடர்ச்சி:—

நான் கூறிய நன்றியான வார்த்தைகள் அவளுக்கு வருத்தமுண்டாக்கின போல் புலப்பட்டது. ஏனெனில் அவள் உடனே என்னை நோக்கி "அவர்கள் இத்தகைய காரியத்தைச் செய்ய முயன்றது இதுதான் முதல் தடவை. முன் இரண்டொரு முறைகளில் பிரயாணிகளின் பொருள்களை அபரிக்கமட்டுமே முயன்றார்கள். ஆனால் இதுகாறும் பிராணஹானி செய்ய எத்தனித்ததில்லை. இப்போது உம்மைக் கொலை செய்ய எண்ணிவிட்டார்கள். நீர் உமது படுக்கையறையில் உம்மிடமிருக்கும் பையை வெளியிலெடுத்து அதிலுள்ள நோட்டுகள் உண்டிகள் முதலியவற்றை யெடுத்துப் பார்த்தபோது அவர்கள் கதவில் செய்து வைத்திருக்கும் ஒரு துவாரத்தின் மூலமாய் நோக்கி

னார்கள். அவற்றைக்கண்டதே அவர்கள் பணவெறிகொண் டார்கள். அவர்கள் உம்மிடமுள்ள பொருளை யெடுத்துக் கொண்டு உம்மைக்கொன்று உம்மையும் உமது குதிரை யையும் நான் காட்டிய பாதாளத்தில் தள்ளிவிட எண்ணி னார்கள். நான் அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட் டேன். ஆகையால் அவர்கள் உமது குதிரைக்குச் சேணம் கட்டும்போது நான் உமது அறைக்கு வந்து உம்மிட மிருந்த பணத்தை யெடுத்துக்கொண்டேன், ஏனெனில் அது உம்மிடமிருக்குமட்டும் உமக்கு ஆபத்தே. நான் உமக்குத் தெரியாமலே அதை எடுத்துக் கொண்டேன். ஏனெனில், அவர்கள் குற்றத்தை வெளியிடாமல் மறைக்க முயன்றேன். அவர்கள் என் தந்தையும் தமையனும் என்று தாங்கள் அறியவேண்டும்" என்றாள்.

நான், அவர்களை நான் காட்டிக்கொடுக்க மாட்டே னென்று கூறினேன். அவள் புன்னகையோடு என்னை நோக்கினாள். ஆனால் அவள் பார்வையால் அவள் விஷயத் தில் நாம் இரக்கம் கொள்ளவேண்டும் என்றே எனக் குப் புலப்பட்டது அதன்மேல் நான் "உன்னுடைய நிலைமை மிக்க கஷ்டமானது போல் காண்கிறது. உன் வாழ்நாள் மிக்க தொந்தரையுடையதாக விருக்கவேண்டும்," என்றேன்.

அவள் ஒருவிதப் பிரகாசம் பொருந்திய பார்வையாய் என்னை நோக்கி "நான் கஷ்டப்படவே பெண்ணாகப் பிறந் தவள். ஆனால்..." என்று அதற்குமேல் ஒன்றும் கூறாமல் பேசாமலிருந்துவிட்டாள். அச்சமயம் அவள் தேகத்தில் மின்சாரம் பாய்ந்ததுபோல் ஒரு நடுக்கம் தோன்றியது. ஆனால் அது குற்றம் செய்தவர்களுக்குத் தோன்றும் குறி யல்லவென்று நான் உணர்ந்தேன். ஏனெனில் அவள் கூறிய அவ்வார்த்தைகளில் ஒவ்வொன்றும் அவளுடைய

இருதயத்திலிருந்து சொட்டப்பட்ட இரத்தத்துளிபோ லிருந்தது.

அதைக் கேட்டபோது என் மனம் மிக்க இரக்க மடைந்ததால் நான் "அப்படியாயின் நீ ஐயோ கட வுளே...." என்பதற்குள், அவள் மிக்க துரிதமாகவும் துணிகரத்தோடும் "சில சம்பவங்கள் இயற்கையாக ஏற் பட்ட பாசபந்தத்தைக்கூட அடியோடு மூறித்து விடத் தக்கவைகளாக இருக்கின்றன. என்னை மிக்க அவமான மும் பாபமுமான வழியில் இழுத்துக்கொண்டு செல்லும் விஷயத்தைப் பற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்ற விதி இல்லை. இப்போது நாமிருவரும் விட்டு வந்த அந்த இடத் திற்கு நான் மறுபடி ஒருபோதும் செல்லேன்," என்று மிக்க நிதானமாகவே ஒரு சாதாரணமான விஷயத்தைப் பற்றிக் கூறுகிறவள்போல் கூறினள்.

இம்மொழிகளைக் கேட்டபோது என் மனோ நிலைமை அவ்வாறு இருந்திருக்குமென்பதை நீங்களே சிந்திக்கலாம். எனக்காக உதவிசெய்யக் கருதியவள், என் பிராணனையே காப்பாற்றியவள், எனக்காக இத்தகைய கஷ்டங்களை அநு பவித்தது போதாமல் உலகில் ஒருவருக்கு மிக்க நெருங்கிய சுற்றமரிய தந்தையையும் தமையனையுமே அடியோடு இழந்துவிட நேர்ந்ததெனின், அதைக் கேட்ட என் மனம் எத்தகைய நிலைமையையடையும்? நான் "அந்தோ! அப்படி நீ கருதுவதாயின் நீ எங்கு செல்வாய்? என்ன செய் வாய்?" என்று வினவினேன். அவள் மௌனமாயிருக்கவே நான் பின்னும் கூற முயன்று "நீ வாலிப வயதுடைய வள்...." என்றேன்.

அவள் உடனே, "அதோடு நல்ல தேக பலமும் தைரியமு முடையவள். தாங்கள் எனக்காக அஞ்சவேண் டாம்," என்றாள். அச்சமயம் அவளிடம் உண்டான புன் னகை இளஞ்சூரியனது பிரகாசம்போ லிருந்தது. அந்த

இரவு நான் அதைப்பற்றி வேறொன்றும் பேசாமலிருப்பதே நலமென்று கருதி அவ்வாறே யிருந்துவிட்டேன்.

மறுநாட்காலை அவள் சமையலறையில் ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண் டிருக்கும்போது கண்டேன். அப்புத்தகம் அவள் நிலைமைக்கு மேலானதாக விருந்ததோடு, அவள் வயதிற்கும் மிஞ்சியதாக விருந்தது. அதைக் கண்டதே அவளுக்குக் கல்வியில் மிக்க ஆவலிருக்கிறதென்று எனக்குத் தோன்றவே "உனக்கு இன்னும் கல்வி கற்கப் பிரியமோ," என்று வினவினேன். உடனே அவள் முகத்திலுண்டான பிரகாசம் பொருந்திய பார்வையே வார்த்தைகளைவிடத் தெளிவான விடையாகவிருந்தது.

ஆயினும் அவள் "நான் அறிந்த பல பெண்கள் எதை அறிய வேண்டுமென்று கல்வி கற்கிறார்களோ அத்தகைய கல்வியை நானும் கற்றால் அதுவே எனக்குப் பூரண திருப்தியை அளிக்கும்," என்றாள். அவள் மொழிகளைக் கேட்டதே "ஆகா! அவள் நமக்காக எடுத்துக்கொண்ட கஷ்டங்களுக்கும், துணிந்து நுழைந்த ஆபத்துக்களுக்கும் நாம் ஒருவாறேனும் நமது நன்றியை வெளியிட ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதென்று என் மனதிற்பட்டது. அதனால் எனக்குண்டான சந்தோஷத்தை நான் இத்தகையதெனக் கூறுவது அனாவசியம். நான் மிக்க கஷ்டத்தின்மேல் என் உதவியால் கல்வி கற்குமாறு அவள் சம்மதிக்கும்படிச் செய்தேன். அதை விவரமாகக் கூறுவது அவசியமல்லவென்றே கருதுகிறேன். இதனால் அவள் தன் பிராணனுக்கே துணிந்து என் பிராணனைக் காப்பாற்றிய உதவிக்குச் சற்றேனும் நாம் ஈடு செய்ததாக ஆகும் என்று என் மனம் கொஞ்சம் சந்தோஷமடைந்தது.

அத்தகைய கல்வி தனக்குப் பிற்காலத்தில் உலக வாழ்க்கைக்குப் பேருதவியாகு மென்பது அவளுக்கு நன்

ருய்த் தெரியும். அதோடு அவன் அவ்வாறு கல்வி கற்பதற்கு நான் உதவி செய்வதாயின் எனக்கு எத்தகைய சிரமமும், பணச்செலவு மிருக்கும் என்பதை அவன் உணர்ந்தேயிருந்தான் என்று நான் அறிந்துகொண்டேன். அவன் யாவும் உணர்ந்திருப்பதால் அவனை அந்த ஏற்பாட்டிற்கு ஒப்பும்படிச் செய்ய நான் மிக்க பிரயாசப்படவேண்டியதாகவே இருந்தது. ஆயினும் கடைசியில் அவன் தேருரிலுள்ள ஒரு பாடசாலையில் போய் வாசிப்பதென்றும், அங்கு போய்ச் சேரவேண்டிய காலம் வரையில் மேல்வனம் என்ற இடத்தில் ஒரு தொழில் செய்து தன் உடைகளுக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக் கொள்வதென்றும் முடிவு செய்து கொண்டோம். அப்பாடசாலையின் பிரதம உபாத்தினி எனக்கு மிகவும் வேண்டியவள். இந்த ஏற்பாடு முடிந்த பின்பு நான் அவனை அந்தக் குடிசை வீட்டிலிருந்த வயோதிகத் தம்பதிகளிடம் ஒப்பித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன். அப்பாடசாலையில் கல்வியோடு போசனமு மளிப்பார்கள்.

அக்காலத்தில் நான் மிக்க அஜாக்கிரதையாக நடப்பவன். ஆயினும் நான் அப்பெண்ணுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை அப்படியே நிறைவேற்றினேன். அப்பாடசாலையில் அவன் மூன்று வருடம் வாசிக்கும்படியாய் ஏற்பாடு செய்ததோடு அப்பாடசாலையின் காரியஸ்தியாகிய பிரதம உபாத்தினி மூலமாய் அவனுக்கு வேண்டிய யாவும் உபகரிக்க ஏற்பாடு செய்தேன். அவ்வுபாத்தினி அவன் மேல் மிக்க அன்புடையவளானாள், எனக்கு அதனால் யாவும் சுலபமாகவே யிருந்தது. அப்போதைக்கப்போது ஒரு உண்டி எழுதியனுப்பிவிட வேண்டியதே. அவ்வளவு தான்; எல்லா வேலையும் நடந்தேறிவிடும் இதையேன் கூறுகிறேனென்றால் அதற்காக நான் கொஞ்சம் சிரம

மெடுத்துக்கொள்ள வேண்டிருந்தாலும் என் காலத்தில் கொஞ்சமேனும் செலவழிக்க வேண்டியிருந்தாலும் நான் அதில் பிரவேசித்திருக்க முடியாது. ஏனெனில் நான் நகருக்குத் திரும்பி வந்ததே என் சுற்றத்தாளாகிய பங்கஜத்தினிடம் நட்பு அதிக நெருக்கமாய் விட்டது. அவள் சம்பந்தமல்லாத வேறெந்த வேலையிலும் நான் பிரவேசித்திருக்க மாட்டேன். அச்சமயம் வேறெதிலும் என் மனம் செல்லவில்லை.

இவ்வாறு இரண்டு வருடங்கள் கழிந்தன. பங்கஜத்தினிடம் நான் அடிமையாய் விட்டேன். ஆயினும் மணம் புரிந்து கொள்வதாக எங்களுக்குள் ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படவில்லை. என் தந்தையின் உறுதியான ஆக்ஷேபனையே அதற்குப் போதுமான தடையாயிருந்தது. ஆனால் ஒருவித நிபந்தனை யிருந்தது. அது எப்படியேனும் ஒரு நாளைக்கு என் எண்ணம் நிறைவேற வழியுண்டாக்கி விடுமென்று நான் ஆசையோடு நம்பியிருந்தேன். ஆனால் என் தந்தையின் கருத்தை நான் அறிந்து கொள்ளவில்லை. அப்போது அவர் சுகவீனமாக இருந்ததால் இரண்டு மாதங்களில் அவர் வியாதியதிகரித்து இறந்துபோனார். அவர் என் நடக்கைகளின்மேல் கண் வைத்திருந்ததோடு என் அந்தரங்க எண்ணங்களையும் அறிந்து கொண்டிருந்தார். அவர் வார்த்தைகள் என்னைத் திக்பிரமையடையச் செய்தன. நான் அவருடைய ஏகபுத்திரன். மரணத் தருவாயில் அவர் என்னிடம் பின்வருமாறு கூறினார்:—

“நீ எனக்குள்ள ஒரே புத்திரன். உன்னை என்போல் செல்வவானாகவும் சுயாதீன புருடனாகவும் இருக்கச்செய்ய வேண்டுமென்பது என் மனப்பூர்வமான பிரியம். ஆனால் நீ என் மனதிற்கு முற்றும் விரோதமும் சற்றும் ஒவ்வாதது

மான ஒரு காரியத்தைச் செய்ய எண்ணங் கொண்டிருக்கிருய். சிறிய அல்லது பெரிய தந்தையின் மகளைக் கலியாணம் செய்வது கடவுளுக்குப் பிரியமல்லாததும் மனதிற்கு ஒவ்வாததுமான காரியம். மேலும் அது மிக்க துன்பத்தையும் பல தீமைகளையுமே விளைவிக்கும். நீ பிடிவாதமாக அவ்வாறே செய்வதாயின் என் ஆஸ்தி முழுமையும் வேறு யாருக்கேனும் வைத்துவிடுவேன்," என்ருர்.

அந்தோ இது மட்டுமல்ல. அவர் என் உள் எண்ணத்தைப்பற்றி ஒருவாறு ஊகித்துக் கொண்டவர்போல் நான் காதலித்த பெண்ணை மணம் செய்யாதபடி செய்ததோடு நிற்காமல், "நான் இறக்கு முன்பே நீ மரியாதையான ஒரு பெண்ணை அவசியம் மணம் புரிந்து கொள்ள வேண்டும். உன் பார்வைக்குப் பிரியப்படுகிறவர்களும் எள்ளளவு சந்தேகமுமில்லாத கற்புடையவளுமாகிய எவளையாகிலும் மணம் புரிந்துகொள்ளவேண்டும். அவள் செல்வவதியாக வேனும் நமது புராதன வமிசத்தைச் சேர்ந்தவளாக வேனும் இருக்கவேண்டியது அவசியம் என்று நான் கூறவில்லை. அவள் நல்லவளாகவும் கற்புடையவளாகவும் நம் சுற்றத்தைச் சேராதவளாகவும் மட்டும் இருந்தால் நான் உங்கள் இருவருக்கும் பூரண ஆசீர்வாதமளிப்பேன்," என்று கூறிஞர்.

இந்த எண்ணம் அவர் மனதை உறுதியாய்ப் பற்றிக் கொண்டது. அதை அவர் விடும்படிச் செய்வதெனில் சாத்தியமல்லவென்று எனக்குப் புலப்பட்டது. நான் கூறிய ஆக்ஷேபனைகளுக்கெல்லாம் அவர் ஒரேயொரு வார்த்தை மட்டுமே விடையாகக் கூறிஞர். அதாவது நீ யாரை மணம் புரியவேண்டு மென்பதைப்பற்றி நான் ஒருவரையும் குறிக்கவில்லை. இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவளாகவிருக்க வேண்டும், இன்ன தேசத்தவளாக விருக்கவேண்டும்

என்பனபோன்ற நிபந்தனை ஒன்றுமே கூறவில்லை. உனக்கு ஒரு மாதத்தவணை அளிக்கிறேன். அந்த ஒரு மாதம் முடிவதற்குள் நீ மணம்புரிய விரும்பும் மணமகளை என் எதிரில் அழைத்து வந்து நிறுத்தாவிடில், மரணத்தருவாயிலிருக்கும் என் விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தக்க ஒருவனுக்கு என் ஆஸ்தியை அளித்து விடுவேன். இவ்வளவே முடிவான வார்த்தை," என்றார்.

ஒரே மாதந்தானிருக்கிறது. நான் என் சிநேகிதர்களின் வீடுகளுக்கு வரும் மணமாகாத பெண்களையெல்லாம் பார்த்தேன். என் மனம் சோர்வடைந்தது. ஒருத்திமேல் உண்மையில் காதல் வைத்துக்கொண்டு வேறொருத்தியை மணம் செய்து கொள்வதா என்று சிந்தித்தேன். அது முடியாத காரியமென்று என் மனதிற் பட்டது. அங்கு நடமாடும் பெண்களைப் போன்றவர்கள் தாங்கள் மணம்புரிய ஒப்பும் கணவர்களிடமிருந்து பிரதி பலனாக எதையேனும் எதிர் பார்ப்பார்கள். ஒரு பெண் ஒருவனை மணம்புரியச் சம்மதிக்கும்போது தான் அவனுக்கு ஒரு பெரிய கௌரவத்தை அளிப்பதாக கருதிவிடுகிறாள். முக்கியமாய் உயர்ந்த அந்தஸ்திலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் அவ்வாறு அதிகமாகக் கருதுகிறார்கள். அதற்குப் பிரதிபலனாக ஒன்றை எதிர்பார்க்கிறார்கள். எதை? செல்வத்தை யெனின் செல்வம் அவர்களிடமிருக்கிறது. அந்தஸ்தென்றாலோ அதுவுமிருக்கிறது. மற்றபடி அவர்கள் எதிர் பார்ப்பது எது எனின் கலப்பில்லாத உண்மை அன்பே. அதை நான் இன்னொருத்திமேல் வைத்திருக்கிறேன். இவையாவும் சிந்தித்தும் நான் வெறுப்போடு அந்த இடங்களை விட்டுத் திரும்பிவிட்டேன்.

பங்கஜமோ மிக்க பெருமையுடையவள். அவள் என்மேல் விசுவாசம் வைத்ததுபோல் என் செல்வத்தின்

மேலும் அந்தஸ்தின் மேலும்கூட ஆசை வைத்திருந்தாள். அவளிடம் நான் இதைப்பற்றிக் கூறியபோது அவள் நீ உன் ஆஸ்தியை இழக்காததற்காக வேறொரு மாதை மணம் புரிவதாயின் அப்படியே செய்துகொள்; ஆனால் என் சினேகிகளில் எவளையும் மணம் புரியலாகாது. என் சம அந்தஸ்துள்ள சினேகிகளில் எனக்குப் போட்டிக்காரி ஏற்படலாகாது. நீ மணம்புரிந்து கொள்பவள் சாதாரணமானவளும் என்னிலும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவளுமாக இருக்கவேண்டும். ஆயினும் குடும்பப் பெயரைக் கெடுத்து விடாதே," என்றாள்.

இதற்கிடையில் நாட்கள் கழிந்துகொண்டே சென்றன. நான் அந்த விவகாரத்தைச் சற்று மறக்கலாமென்றாலும் நான் தினம் வீடு வரும்போது என் தந்தை என் முகத்தைப் பார்க்கும் கூர்மையான பார்வை எனக்கு அதன் நினைவை யூட்டி விடுகிறது. என் நிலைமை, நேராகத் தலையில் இறங்கி நசுக்கிவிடப் போகும் ஒரு பெரிய யந்திரத்தின் கீழ் நின்றுகொண்டு தப்ப வழியில்லாமல் தவிக்கும் ஒருவன் நிலைமைபோலிருந்தது.

இவ்வாறிருக்கையில் இந்த விவகார சம்பந்தமாய் லீலாளின் நினைவு எனக்கு முதல் முதல் எப்போதுதித்த தென்பது எனக்குத் தெரியவில்லை. முதலில் நான் அந்த உத்தேசத்தை வெறுப்போடு நிராகரித்து விட்டேன். ஆயினும் அவள் நினைவும் அவளை மணம்புரிவதற்கு அனுகூலமான பல காரணங்களும் அடிக்கடி என் மனதில் உதித்துக் கொண்டே இருந்தன. கடைசியில் அதையே இந்த ஆபத்தினின்றும் தப்பப் புகலிடமாகக் கருதவேண்டியதாயிற்று. அவள் ஒரு விதமான மாதேயாயினும் அவள்தான் நான் மணம் புரியவேண்டியவள் என்று புலப்பட்டது. அவன்

கள்ளர்களோடு, கொலை பாதகர்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறான் என்று எனக்குத் தெரியும். ஆனால் இப்போது அவள் அந்தகைய சுற்றத்தாரிடமிருந்து அடியோடு பிரிந்து விட்டாள். மறுபடி அவர்கள் தன் இருப்பிடத்தை அறிந்து வாராதபடி பிரிந்துவிட்டாள். மேலும் அவளுக்கு நான் நன்றி பாராட்டவேண்டியவனும் இருக்கிறேன். அவள் சுபாவப்படி ஒரு கேள்வியும் கேட்கமாட்டாள். நான் செய்யவேண்டியவை அனைத்தும் கூடி ஒரு பெரிய மனிதனாகிய நண்பன் எவ்வளவு அன்புடன் கவனிப்பானோ அவ்வளவு கவனித்தால் போதும். அவள் மனதிற்கு விருப்பமில்லாதவளல்ல. வனப்பில்லாதவளுமல்ல. உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் பெண்களிடமுள்ள ஒருவித பெருமையும் அகங்காரமும் பொருந்திய பாவனைகள் அவளிடமில்லை. சே! அகங்காரம் பொருந்திய பாவனைகளையுடைய பங்கஜத்தையேனும் அவள் போன்ற அவள் சிநேகிதிகளில் ஒருத்தியையேனும் மனைவியாய்க் கொள்வதைவிட அழகுடையவளும் நம்மிடம் வணக்கமுடையவளுமானவளை மணம்புரிவதே உசிதம் என்று எனக்குப் புலப்பட்டது.

என் மனதில் இத்தகைய ஒருவிதமான தீர்மானம் ஏற்பட்டதே லீலாவைப்போய்க் காண்பதென்று தீர்மானித்தேன். அன்று அச்சிறு குடிசை வீட்டில் அவளை விட்டுப் பிரிந்தது முதல் இதுகாறும் நான் அவளைச் சந்தித்ததில்லை. ஆனால் அவளை நேரில் கண்டபோது நான் திடுக்கிட்டு விட்டேன். அவள் மிக்க நன்றியறிதலோடு என்னை வணக்கமாக வரவேற்பாளென்று நான் எதிர்பார்த்தேன். என் மனதில் கோபம் ஜனித்தது. அரை நிமிடம் அவளை உற்று நோக்கினேன். நாம் மோசம் போய்விட்டோம், ஏமாற்றப் பட்டோம் என்று கருதினேன். ஆனால் அச்சமயம் அவள் முகத்தில் ஒருவிதப் புன்னகை தோன்றியது. அது என்னை

வேண்டிக் கொள்வதுபோலிருந்தது. அவள் என் மனக் குழப்பத்தை உணர்ந்து கொண்டாள் என்று எனக்குப் புலப்பட்டது. அவள் நகை என் மனதிற்கு இனிமை யளித்ததோடு என்னை வேண்டிக்கொள்வது போலிருந்தது. அந்த நகைப்பு என் மனதை ஒரு தீர்மானத்திற்குக் கொண்டுவந்துவிட்டது.

பத்துத் தினங்களுக்குள் அம்மாது என்னை மணம் புரியும்படி நான் எப்படிச் செய்தேனே அது எனக்குத் தெரியாது. நான் அவளுக்குச் செல்வமளிப்பதாகவாவது உயர்ந்த அந்தஸ்தில் அவளை அமர்த்துவதாகவாவது கூறவே யில்லை. அவ்வாறு நான் கூறத்தக்கவனே; கூறவேண்டிய சந்தர்ப்பமும் இருந்தது. ஆனால் எதுவோ என் மனதிலி ருந்துகொண்டு அப்படிக் கூறவொட்டாதபடி தடுத்துவிட் டது. பணம் அல்லது உயர்ந்த அந்தஸ்தின் ஆசையைக் காட்டி அவளை மனைவியாக விலைக்கு வாங்கலாகாதென்று எனக்குள் உண்டான ஒரு அபூர்வ உணர்ச்சியால் தீர்மா னித்துக் கொண்டேன். என் தந்தையின் ஆஸ்தியைப் பற்றியாவது, நான் சில நிபந்தனைகளின்படி நடக்காவிடின் அதை இழந்து விடுவேன் என்பதைப் பற்றியாவது, நான் அவளிடம் கூறவேயில்லை. ஆயினும் அவள் என்னை மணம் புரியச் சம்மதிக்கச் செய்துவிட்டேன். கடைசியில் நாங் கள் இரகசியமாகத் தேரூரில் மணம்புரிந்து கொண்டோம். எங்கள் கலியாணம் மிக்க அடக்கமாகவே நடைபெற்றது. அச் சங்கதி எப்படி வெளிவராம லிருந்துவிட்டதோ எனக் குச் சற்றும் புலப்படவே இல்லை. அச்சமயம் அதை மறைப்பதற்காக நான் உண்மையில் விசேஷ சிரத்தை ஒன் றுமே எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவ் விவகாரம் முடிந்த பின் என் மனதிற்குப் பாஷாணம்போல் தோன் றிய வெறுப்பாகிய அவ்விஷயம் வெளிவராதபடி அதை

அடக்கிவிட என்னால் கூடிய முயற்சியை செய்தேன் என்பது உண்மையே.

கலியாணச் சடங்கு முடிந்ததும் முதலில் நான் செய்த முயற்சி அவளை இந்திரபுரியில் இதே வீட்டிற்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்பதே. நான் முதலிலேயே "உனக்குக் கலியாணத்தின் கேளிக்கையாவது ஆடம்பரங்களும் சந்தோஷங்களுமாவது கிடைக்கா. மணக்கோலத்தை விட்டதே, மாணத்தறுவாயில் இருக்கும் என் தந்தையின் முன் நாம் இருவரும் சென்று அவர் ஆசியைப் பெறவேண்டும்," என்று தெளிவாய்க் கூறிவிட்டேன். அவள் ஒரு விதமான புன்னகையோடு என் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டாள்.

ஆனால் மணம் முடிந்தபின் நான் என் மனைவியை அழைத்துக்கொண்டு என் தந்தையிடம் செல்லும்போது என் மனதிலிருந்த வேதனை கடவுள் ஒருவரே அறிவார்.

15-வது அத்தியாயம்

பூபாலப்பிள்ளையின் சரித்திரத் தொடர்ச்சி:—

"என் மனதிலிருந்த வியாகூலத்தால் "நான் மணம் புரிந்து என் மனைவியை அழைத்துக்கொண்டு வருகிறேன்," என்று என் தந்தைக்கு முன்னடி அறிவிக்க என் மனம் உடன்படவில்லை. ஆகையால், நாங்களிருவரும் யாரோ புது மனிதர்கள் எங்கோ இருந்து வந்தவர்கள் போல் என் தந்தை இருக்கும் அறைக்குள் நுழைந்து அவர் எதிரில் நின்றோம்.

அங்குச் சென்று நின்றதும் நான் முதலில் கூறிய வார்த்தைகள் "ஐயா! இதோ உன் மருமகள்," என்ப

ளையே, ஐயோ கடவுளே! அம் மொழிகளைக் கேட்டதே அவர் புத்துயிர் பெற்றவர்போல் எத்தகைய சந்தோஷத்தோடும் ஆவலோடும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார் என்பதையும், நாணத்தோடு கலவரமடைந்து நிற்கும் லீலாவின் முகத்தை எத்தகைய ஆவலோடும் உன்னிப்போடும் உற்று நோக்கினாரென்பதையும் என்னால் கூறமுடியாது. அதுமட்டுமல்ல, அவர் எத்தகைய அன்பார்ந்த ஆவலோடு தமது இருகரங்களையும் அவளை நோக்கி விரித்து என்னருகில் வா என்பதுபோல் நோக்கியதையும் அதை உணர்ந்த லீலா என் பக்கத்திலிருந்தவள் பாய்ந்து சென்றதையும், அவள் என் தந்தையின் மார்பில் அணைத்துக்கொள்ளப் பட்டதையும், என் ஆயுள் உள்ளளவும் என்னால் விவரித்து இப்படியென்று கூறமுடியாது. என் தந்தை ஒருபோதும் என்னை இம்மாதிரி ஆலிங்கனம் செய்து கொண்டதில்லை. நான் சிறு வயதாயிருந்தபோது கூட அவர் என்னை மார்போடணைத்துக் கொண்டது எனக்கு நினைவில்லை. ஏனெனில் என் தந்தை ஆசையை வெளியில் காட்டுகிறவரல்ல. வெளிக்கு அச்சத்தோடு நாம் நடக்கும்படி நடந்துகொள்வதே அவர் சுபாவம்.

அவளை நீயார், எந்த ஊர் என்று ஒன்றுமே கேட்கவில்லை. நீ என் மகள் என்று மட்டுமே கூறினார். சற்று நேரங் கழித்து அவள் "ஆ! தந்தையின் அன்பு எனக்குத் தெரியாது," என்றாள். ஐயன்மீர்! நான் எல்லா உண்மையுமே கூறவிரும்புகிறேன். அக் காட்சியைக் கண்டபோது என் மனம் சந்தோஷமாவது பெருமையாவது அடையவில்லை. கடினமும் வெறுப்புமே அடைந்தது.

என் தந்தை நான் அத்தகைய மனைவியைப் பெற்றதற்காக அதிருப்தி காட்டி இருந்தால் அல்லது அவளைப்பற்றி

கேள்விகள் கேட்டிருந்தால் நான் அந்த மனைவியிடம் நிலை யான அன்பு வைத்திருப்பேன். என் தந்தையிடம் நன்றி யும் பாராட்டுவேன். என் தந்தை இதுகாறும் ஒருவேளை யிலேனும் பங்கஜத்தை அன்போடு நோக்கியதை நான் கண்டதில்லை. ஆதலால் இந்த மனைவிமேல் பூரண அன்பு வைககவாவது பகிரங்கமாக அவளைப் புகழ்ந்து பேசவா வது அத்தகைய மனைவி கிடைத்தாளென்று சந்தோஷங் காட்டவாவது என் மனம் ஒப்பவில்லை. இது இயற்கைக்கு நேர்மாறான சுபாவம்போல் உங்களுக்குத் தோன்றும். நான் பங்கஜத்தினிடம் மனப்பூர்வமான அன்பு வைத் திருந்ததாலும் என் தந்தை அதற்கு இடையூறு விளைவித்த தாலுமே என் மனம் அத்தகைய மாறுதலடைந்தது.

நான் என் மனைவியை நோக்கி "நான் சற்று தனியே என் தந்தையிடம் பேசவேண்டும். ஆதலின் நீ வெளியில் சென்றிரு," என்றேன். அவள் சென்றதும் நான் கதவை மூடிவிட்டேன். கடந்த ஒரு மாதமாய் என் மனதில் அடங்கியிருந்த வேதனை எரிமலை திடீரென்று வெடித்துக் கிளம்பி அக்கினிச் சுவாலையைக் கக்குவதுபோல் பொங்கி வெளியில் வந்தது, நான் என் தந்தையை நோக்கி,

"நீர் எனக்குக் கட்டளை இட்டதுபோல் உமக்கு ஒரு மருமகளைக் கொண்டுவந்து காட்டி விட்டேன். நீர் வாக் களித்தபடி எனக்கு ஆசீர்வாத மளித்துவிடும்; நான் போய் வருகிறேன். ஏனெனில் எனக்கு அன்பில்லாத மனைவி யோடு நான் வாழமாட்டேன்," என்றேன்!

உடனே, என் தந்தை பேச வாய்திறக்குமுன் சீலான் கதவைத் திறந்து கொண்டு எங்கள் முன்வந்து நின்றான். ஐயோ கடவுளே அச்சமயம் அவன் முகத்திலுண்டாகி யிருந்த விகாரமான மாறுதலை இப்போது நினைத்தாலும் பயமாகவிருக்கிறது. அவனுக்கு நான் அத்தகைய மனை

வேதனை உண்டாக்கியதைவிட அச்சமயம் என் அருகில் மேஜைமேலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டென்று அவளைச் சுட்டுவிடாமற் போனேமே என்று இப்போது கருதுகிறேன். ஆனல் அச்சமயமோ, சுடாய்த் துப்பேசவே எண்ணினேன்.

அவள் நேராய் என்னிடமும் என் தந்தையிடமும் நெருங்கி வந்து நின்று "என் செவிகளில் வீழ்ந்த சொற்கள் உண்மைதானு? உன்னிலும் அந்தஸ்தில் நான் குறைந்தவள் என்று இப்போது எனக்குத் தெரிகிறது. அப்படியிருந்தும் உன் தந்தையின் கட்டளைக்காகவா நீ என்னை மணம் புரிந்து கொண்டாய்? நீ என்னைக் காதலிக்கவில்லையே? ஒரு மாது மணம் புரிவதற்கு முக்கியமாய் அவளுக்கு எதை அளிக்கவேண்டுமோ, எதை அளிக்காவிட்டால் அந்த மணம் கடவுளுக்கு ஒப்பாதோ மனதிற்கும் ஒப்பாதோ அத்தகைய அன்பை எனக்கு நீ யளிக்கவில்லையே? நான் இந்த வீட்டிலிருப்பதாயின் நீ இதை விட்டுப்போய்விட வேண்டியது அவசியமோ?" என்ருள்.

அச்சமயம் என் தந்தையின் முகத்தை நோக்கிய போது அவர் தம்மால் கூடுமானல் பேச விரும்பியவர் போல் தோன்றியது. நான் என் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, "நீ நான் கூறியவற்றைக் கேட்டுவிட்டதற்கு மிக்க விசனிக்கிறேன். உன் மனதிற்கு வருத்த முண்டாக்க வேண்டுமென்பது என் கருத்தல்ல. நான் அப்படி நினைக்கவில்லை. என் மனேபீஷ்டத்தை அடியோடு தடுத்துவிட்ட என் தந்தை விஷயத்தில் எனக்கு எவ்வளவு வெறுப்பிருந்தாலும் உன் மனதிற்கு வியாகுல முண்டாக்க நான் நினைக்கவே மாட்டேன். நீ என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். உன் மனதிற்கு வருத்த முண்டா

வதாயின் இப்போது நான் வீட்டைவிட்டுச் செல்லவில்லை யென்று வாக்குத்தத்த மளிக்கிறேன்,'' என்றேன்.

ஹோ! நான் கூறிய அம்மொழிகளைக் கேட்டதும் அவள் முகத்தில் ஒருவித வெறுப்புத் தோன்றியது. நான் அவளைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயத்திற்கே அவள் வெறுப்புக் காட்டினாள். "அப்படியாயின் என் செவியில் வீழ்ந்த வார்த்தைகள் யாவும் உண்மையே,'' என்றாள். நான் என்னையே சபித்துக் கொண்டு தலையசைத்தேன். அச்சமயம் என் தந்தை "ஐயோ! பூபாலா! பூபாலா! நான் இச்சமயத்தில் என் மருமகளை இழந்து விடும்படி செய்யாதே,'' என்றார்.

நான் படுக்கையிலிருந்து திடீரென்று வந்த அச்சத்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபோது லீலா கதவை நோக்கிப் பாதிவழி செல்வதைக் கண்டேன். நான் அவளிடம் பாய்ந்து சென்று "நீ என்ன காரியம் செய்யப் போகிறாய்?,' என்றேன். அவள் "நீ நல். புத்திரன் ஒருபோதும் தந்தையைக் கைவிடலாகாது. நம்மிருவரில் ஒருவர் இன்று இவ்வீட்டை விட்டுச் செல்வதாயின் அது நானாகவே யிருக்கட்டும். நீ என்னை மணம் புரிந்து கொள்ளக் கேட்டபோது, நான் உன்னை முதலில் என் தந்தையின் ஹோட்டலில் கண்டது முதலே உன் மேல் மனப்பூர்வமான காதல் கொண்டிருந்ததால், மிக்க சந்தோஷமடைந்துவிட்டேன். அந்த அளவுகடந்த சந்தோஷத்தால், ஒரு பெண்ணை மணம்புரிய விரும்புகிறவன் அவசியம் கூறவேண்டிய முக்கியமான வார்த்தைகளான "நான் உன்மேல் காதல் கொண்டிருக்கிறேன்,'' என்றவற்றை நீ கூறுததை நான் கவனிக்கவில்லை. அச்சமயம் என் மனதிலுண்டாகியிருந்த மகிழ்ச்சி உன் மனத்திலுண்டாகவில்லை யென்பதை உன் முகக்குறியில் கவனிக்கவும்

தவறிவிட்டேன். நான் உன்னை மனப்பூர்வமாய் நேசித்த தால் நான் உன்னை மணம்புரிந்து கொண்டு உன் மனைவியாகப்போகிறேன் என்ற ஒன்றே என் மனதிற்கும் போதுமானதாக விருந்தது. என் கணவனே! இப்போதும் நான் உன்மேல் பூரண அன்புகொண் டிருக்கிறேன். அதனால்தான் உன்னைவிட்டுப் பிரிந்துபோகிறேன். உனக்குச் சந்தோஷத்தை அளிப்பதாயின் இன்னும் அதிகம் செய்வேன். நான் உன்னை இக்கலியாண ஒப்பந்தத்திலிருந்து விடுதலையே செய்ய வேண்டுமாயின் செய்துவிடுவேன். ஆனால் உனக்குப் பெயருக்குமட்டும் ஒரு மனைவிவேண்டும் என்று தெரிகிறது. ஆகையால் அத்தகைய மனைவியின் ஸ்தானத்தில் நான் இருக்கிறேன். அது என் அந்தஸ்திற்கு மேற்பட்டதாயினும் அதற்கு ஒருபோதும் அவமானத்தை உண்டாக்கமாட்டேன். ஒரு காலத்தில்—அக்காலம் வருவதாயின்—உனக்கு நான் வேண்டியிருந்தால், என் உதவியும் பணிவிடையும் உனக்குத் தேவையென்று புலப்பட்டால், அச்சமயம் நான் உயிரோடு மட்டுமிருந்தால், இவ்வுலகத்தில் நான் உன்னிடம் வருவதை எக்காரணமும் தடைசெய்ய முடியாதென்பது உண்மை. அக்காலம் வருமளவும் நீ என்னை எத்தகைய நிலைமையில் வைத்தாயோ அந்த நிலைமையிலிருக்கிறேன், அதாவது நான் மணம்புரிந்துகொண்ட புருடனை என் புருடன் என்று பாத்தியங்கொண்டாடாத நிலைமையில், ஆனால் அவன் பெயருக்கு அகௌரவமுண்டாக்காத நிலைமையில் இருக்கிறேன்," என்று கூறிவிட்டு ஏதோ ஒரு வரமளிப்பவன்போல் என்னை ஒருவிதப் பார்வையாய் நோக்கிவிட்டு நான் பிரமித்து நின்றுகொண்டே இருக்கையில் தெருக் கதவைத் திறந்துகொண்டு மாயமாக மறைந்துவிட்டாள்.

ஐயன்மீர்! அச்சமயம் நான் என் மனவுணர்ச்சியை அடக்கிக் கொண்டிருக்க முடியாமல் கூச்சலிட்டுக் கொண்

டே அவனை நோக்கியோடினேன் என்று தோன்றுகிறது. அதே சமயத்தில் அந்த அறையிலிருந்து இன்னொரு சத்தம் கிளம்பியது. ஓ! அச்சத்தம் என் தந்தையினிடமிருந்து வந்தது என்று தோன்றியது. நான் திரும்பிப்போய் என் தந்தையின் படுக்கையை நோக்கியபோது அவர் மூர்ச்சையாய் விட்டிருந்தார். நான் அந்த நிலைமையில் அவரை எப்படி விட்டுவிட்டு அப்புறம் செல்வது? அச்சமயங்களில் தங்கம்மாள் என் தந்தையினருகிலே இருப்பாள் நான் அவளை விளித்து விலானை செல்ல வொட்டாமல் தடுக்கும்படிக் கூறினேன். அச்சமயம் அவசரத்தில் 'என் மனைவியை' என்று கூறியதுபோல் நினைப்பிருக்கிறது. அவ்வாறு கூறிவிட்டு என் தந்தையிடம் ஓடினேன்.

நான் என் தந்தைக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்து அவருக்கு ஸ்மரணை உண்டாக்கச் சற்று நேரம் சென்றது. அவருக்கு ஸ்மரணை வந்ததும் அவர் முதல் பேசிய வார்த்தைகள் "என் மருமகன் எங்கே!" என்ற வார்த்தைகளே அவற்றைக் கேட்டதே நான் எழுந்து அவனை அழைத்துவரப் புறப்பட்டேன். அச்சமயம் "அவன் இங்கில்லை," என்று ஒரு சத்தம் கிளம்பியது. நான் திரும்பிப் பார்த்தபோது தங்கம்மாள் தான் அவ்வாறு கூறியவளென்று தெரிந்தது. அவள் மறுபடி என்னை நோக்கி "அந்தம்மாள் போய்விட்டார்கள். அவர்களை நிறுத்த என்னால் முடியவில்லை," என்றாள்.

நான் கடைசியாக அத்தினந்தான் நான் மணம்புரிந்த கன்னிகையை என் இரு கண்களால் கண்ட தினம். அவள் எங்குச் சென்றாள், எந்தவிடத்தில் அடைக்கலம் பெற்றாள், என்பவற்றுள் எனக்கு ஒன்றுமே தெரியாது. அச்சமயம் என் தந்தையோ நடந்த சம்பவங்களால் மனமுடைந்து

விட்டதால் வர வரச் சீக்கிரத்தில் மிக்க பலஹீனமடைந்து மரண பாதையில் துரிதமாகச் செல்லும் நிலைமைக்கு வந்து விட்டார்.

நான் மிக்க சிரத்தையோடு அவரைக் கவனிக்கத் தொடங்கினேன். அவரோ அடிக்கடி தன் மருமகன் வருகிறுரோவென்று வாயிற்படியை நோக்கும் பார்வை என் மனதிற்கு நன்ருகப் புலப்பட்டதால், என் மனம் மிக்க வேதனையடைந்தது. அதுமட்டுமல்ல. அவர் வாயிற்படியை நோக்கியதும் என் முகத்தை நோக்கும் பார்வை என் உள்ளத்தில் இராமபாணம் பாய்ந்ததுபோல் தோன்றியது. அப்போது தான் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. தாய் சொல் துறந்தால் வாசகமில்லை," என்று முன்னோர் கூறிய அரியமொழிகளின் உண்மை எனக்கு விளங்கியது. நான் அதற்கு மாருக நடந்து அநுபவிப்பவனுதலால், ஐயன்மீர், நான் அநுபவத்தின்படி உண்மையைக் கூறிவிடுகிறேன். அதாவது,

"நமது பெற்ருேர் தம்மக்கள் செய்யும் எத்தகைய குற்றங்களையும் சகித்துக் கொண்டு, அவற்றை உடனுக்குடன் மறந்து, தம்மக்களாகிய நமக்கு நன்மையே செய்ய முயல்வார்கள். அவ்வழியில் என்ன கஷ்டம் நேரினும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. நாம் செய்யும் அகெளரவமும் மானக்கேடுமான எல்லா நடக்கைகளையும் அவர்கள் மறைத்துவிட்டு நமக்குக் கெளரவமுண்டாக்கவே முயல்கிருர்கள். அந்தோ! சிறு வயதிலுள்ள உலக அநுபவமறியாத புத்தியால் அவர்கள் மனம் புண்படும்படி நாம் நடந்து கொண்டால், சத்தியமாய்க் கூறுகிறேன், சீக்கிரத்திலேயே அதன் கொடிய பலனை அநுபவிப்போம். அவர்கள் தங்கள் கெளரவத்தையும் மானத்தையும் கருதி, தங்கள் மனோ வேதனையை வெளியிடா விட்டாலும், நாம்

க்ஷேமமாகவே இருக்கவேண்டுமென்று அவர்கள் சுபாவப்படி பிரார்த்தித்தாலும், அவர்கள் மனம் நோகச்செய்த பலனை நாம் அநுபவித்தே தீருவோம். ஏனெனில் ஆண்டவனே அவ்வாறு செய்கிறான். அதற்குத் திருட்டாந்தம் நானே.

கடைசியில் என் தந்தை மரணமடைந்தார். அப்போது தான் நான் மணம் புரிந்து கைவிட்டு விட்ட கிரபாதியாகிய அப்பெண்ணின் விஷயம் என் மனதை அதிகமாக வாதிக்கத் தொடங்கியது. என் மனதில் ஒரு மலைபோன்ற துயரம் ஏறியதுபோல் தோன்றியது. அது என் முன் நடக்கைகளால் உண்டானதா அல்லது கடவுள் முன்னிலையில் நான் மணம்புரிந்த மனைவியை மனமுடையச் செல்லும்படி செய்து விட்டோமே என்ற துயரால் உண்டானதாவென்று எனக்குப் புலப்படவில்லை.

இச்சமயத்தில் பங்கஜம் பாஞ்சாலநாட்டு மார்த்தாண்டம் பிரபுவை மணம்புரிய ஒப்பந்தம் செய்து கொண்டாள் என்ற சங்கதி வந்தது. ஓ கடவுளே! எனக்கு மன வேதனையை உண்டாக்க இருப்பது போதாதென்று இதுவும் வந்து சேர்ந்தது. அவன் திரண்ட செல்வத்தையும் நல்ல அந்தஸ்தையும் கைப்பற்றி அநுபவிப்பதற்கு என் செய்கையே இடையூறாக விருப்பினும், கேவலம் பொருளுக்கும் அந்தஸ்திற்கும் ஆசைப்பட்டுத்தான் உண்மையில் காதலிக்க வெறுக்கத் தக்க ஒரு வயோதிகனை மணம்புரியச் சம்மதித்தாள் என்பது என் மனதிற்கு மிக்க வேதனையை உண்டாக்கிவிட்டது.

கடைசியில் சிந்தித்துப் பார்த்தபோது, நான் என் தந்தையின் ஆஸ்திக்காகத் தானே இம்மாதிரி நான் காதலித்த பெண்ணைக் கைவிட்டுக் காதலிக்காத ஒரு கன்னிகையை என் மனச்சாட்சிக்கு விரோதமாய் மணம்புரிந்து

கொண்டேன். அப்படியிருக்கப் பங்கஜம் செல்வத்திற்கும் அந்தஸ்திற்கும் தான் உண்மையில் காதலிக்க முடியாத ஒரு கிழவனை மணம்புரிந்து கொள்வதற்கு நான் எவ்வாறு அவள்மேல் குற்றம் கூறுவது என்று என் புத்திக்குப் புலப்பட்டது.

அத்தகைய சிந்தனையிலிருக்கும்போது சீலாள் கவனம் எனக்கு வந்தது. அவள் என் தந்தையின் ஆலிங்கனத்திலிருந்து பிரிந்து நான் கூறியபடி வெளியில்சென்று, நான் என் தந்தையிடம் கூறியமொழிகளைக்கேட்டு உள்ளே வந்து உண்மையறிந்து மனம் நொந்து கடைசியாக வெளியில் செல்லும்போது அவள் முகம் எவ்வாறிருந்ததோ அவ்வாறே என் எதிரில் அவள் நிற்பது போல் தோன்றியது. அது மட்டுமல்ல, அவள் கடைசியாகக் கூறிய வார்த்தைகள், அதாவது,

"நான் உன் மேல் காதல்கொண்டேன். ஓ என் புருடனே! நான் இன்னும் இப்போதும் உம்மை நேசிக்கிறேன். எனக்கு உம்மேல் இருக்கும் அன்பால் தான் உம்மை விட்டுப் பிரியப் போகிறேன். ஆனால், ஒரு காலம் வரின்—அத்தகைய காலம் வந்தால்—அப்போது என்னுடைய உதவியும் பணிவிடையும் உமக்கு வேண்டும் என்று தோன்றின், அச்சமயம் நான் இறந்து போகாமல் மட்டுமிருந்தால், எப்படிப்பட்டவர்களாலும் நான் உம்மிடம் வந்து சேர்வதைத் தடுக்க முடியாது," என்றவை எக்காலத்திலும் என் நினைவிற்கு வந்தன.

அப்போது என் மனதிலிருந்த மற்ற எண்ணங்களும் உருவங்களும் யாவும் மாயமாய் மறைந்துபோக சீலாவின் உருவமும் அவள் வார்த்தைகளும் மட்டுமே என் மனதில் வேரூன்றி நிலைத்து வளரத் தொடங்கின. ஆனால் நடந்த விஷயங்களால், அதனால் என் மனதிற்கு நிம்மதியும் சந்

தோஷமும் உண்டாகவில்லை. வியாகுலமும் வேதனையும் அதிகமேயாயிற்று. வெளியில் தெரிந்தால் உலகில் வெட்கக் கேட்டை உண்டாக்கும் ஒரு விலங்கில் மாட்டிக்கொண் டிருக்கிறேனென்பதை மறந்துவிட முயல்வேன்.

அந்தோ! அச் சமயத்தில்தான் அவள் தந்தையும் தமையனும ஏத்தகையவர் என்பது எனக்குத் தெரிந்தது. தண்டனை யடைந்த ஒரு கள்ளன் மகளை மணம் புரிந்து கொண்டோம் என்ற உண்மை தெரிந்தது. ஆயினும் அவளை மறக்க முடியவில்லை. கடைசியாக அவள் பார்த்த பார்வை என் மனதில் சூடிட்டதுபோலிருந்தது. கடைசி யில் அவ்வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவே அவள் உருவத்தைப் படத்தில் எழுதினேன்.

அதுதான் நீங்கள் பார்த்த உருவம். எனக்கு இயற்கை யாகவே சித்திரம் தீட்டுவதில் சூட்சும புத்தியும் இச்சையும் உண்டு. நான் மனம் வைத்திருந்தால் அத்தொழிலில் பிரசித்தி பெற்றிருக்கலாம். சில நாட்களில் அப்படத்தை எழுதி முடித்தேன். நான் மணம் புரியுமுன் கடைசியில் அவளைக் கண்டபோது அவள் உடுத்தியிருந்த மாதிரியே எழுதினேன். மணம் புரியும்போது நான் அளித்த இரோஜாமலர்ச் செண்டை அவள் கரத்தில் பிடித்திருந்த படியே வரைந்தேன். அவள் உருவம் பார்வை முதற் கொண்டு சற்றும் குறையா டின்றி யமைந்தது.

அவ்வுருவம் மறைவாயிருக்க வேண்டு மென்று கருதி யே, இரண்டு வருடங்களாக அந்த அறையில் மாட்டப் பட்டிருந்த பங்கஜத்தின் உருவம் எழுதப்பட்ட கித்தானின் பின் பக்கம் அதை எழுதிச் சுவரைப் பார்ப்பதுபோல் வைத்து விட்டேன். இடையில் அவள் தந்தையும் தமை யனுமாகிய கள்ளர்களைப்பற்றி மட்டும் சமாசாரம் எட்டி யதேயன்றி அவளைப்பற்றி யொன்றுமே தெரியவில்லை. என்

மனம் ஒருவித நிலையான துயரத்தி லமிழ்ந்துவிட்டது. எந்த விஷயமும் அதை நீக்க முடியவில்லை. பங்கஜத்தின் கணவன் இறந்தானென்றும் அவள் இங்கு வந்திருக்கிறாள் என்றும் கிடைத்த சமாசாரம்கூட என்னவேனும் என் மனநிலைமையை மாற்றக்கூடவில்லை. என் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. அதாவது பங்கஜத்தின்மேல் எனக்கிருந்த காதல் போய்விட்டதா அல்லது என் மனமே காதல் உணர்ச்சியை யிழந்துவிட்டதா என்று எனக்குப் புலப்படவில்லை. சே! இதன் உண்மையை அறிய வேண்டு மென்று தீர்மானித்தேன்.

பங்கஜம் எத்தகைய விடத்திலிருப்பாள் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் அங்கு சென்று அவளைக் கண்டேன். அவள், பிரகாசம் பொருந்திய முகவிலாசமும் பெருமையும் மமதையும் ஜொலிக்கும் உயர்ந்த நெற்றியின் பளபளப்பும் என் மனதில் சற்றும் உறுத்தவில்லை. போய்விட்டது என்று நான் எண்ணிய காதல் உணர்ச்சி என் மனதிலிருக்கிறதென்றும் அதிலும் பூரணமாகவே யிருக்கிறதென்றும் ஆனால் அது பற்றியிருக்கும் ஆள் நான் இழந்துவிட்ட என் மனைவியான கன்னிகையே யென்றும் எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது.

எப்போது இந்த உண்மை நன்றாய்ப் புலப்பட்டு விட்டதோ, அப்போதே என் மனச்சோர்வு நீங்கிவிட்டது. அது இருந்த விடத்தில் ஆவலும் உற்சாகமும் கிளம்பின. எந்த விதத்திலேனும் என் மனைவியைத் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வந்து விடுவதே சரி என்று தீர் மானித்துக் கொண்டேன். அவள் தன் தந்தையோடும் தமையனோடும் சிறைச்சாலையில் அடைக்கப்பட் டிருந் தாலும் அவளை யழைத்து வந்து விடுவதென்றே தீர்மானித்

க்கொண்டேன். ஆனால் எங்கு போய்த் தேடுவது. நான் நினைத்தபோது அவள் இருக்கும் இடத்தை யறிந்து கொள்ளத்தக்க உளவு எதையும் அவள் எனக்களித்துச் செல்லவில்லையே. ஒன்றுமட்டுமே எனக்குத் தெரியும். அதாவது, அவளுக்கு என்மேலிருக்கும் அன்பினால் அவள் என்னை விட்டு அதிக தூரத்திலிருக்க மாட்டாளென்பதே. என்னைவிட்டுப் பிரியும்போது அவள் மனம் என்ன நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையில் இப்போது மிருந்தால் அவள் இந்த நகரத்தைவிட்டுச் சென்றிருக்கமாட்டாள். போலீஸாருக்கு அறிவிக்கலாமா வென்று ஒரு யோசனை வந்தது. ஆனால் அவமானம் உண்டாகுமே யென்ற பீதி அதைத் தடுத்துவிட்டது. முன்னே நம்மாலான முயற்சிகளனைத்தும் செய்து பார்ப்போம் என்று கருதினேன். ஆகையால் ஆவலோடு வீதிகளில் திரிந்து தேடிப் பார்க்கத் தொடங்கினேன். திடீரென்று அவள் உருவம் எங்கேனும் எதிர்ப்பட்டுவிடும் என்று நம்பினேன். மூட நம்பிக்கை. அவள் உருவமும் தோன்றவில்லை. அவள் ஜாடையான வேறெந்த உருவமும் என் கண்களுக்குப் புலப்படவில்லை.

நான் இத்தகைய மனக்குழப்பத்தில் இருக்கையில் திடீரென்று ஒரு நினைவு வந்தது. சமீபத்தில் ஒருநாள் இரவு சற்றேனும் நித்திரை பிடிக்காமல் மனம் மிக்க கலவரத்திலிருந்தபடியால் நான் படுக்கையை விட்டெழுந்து உடையணிந்துகொண்டு சற்று நேரம் காற்றிலுலவலாம் என்று கருதித்தோட்டத்திற்குச் சென்றேன். நான் ஒருபோதும் அம்மாதிரி செய்ததில்லை. அன்றென்னமோ படுக்கையில இருக்கப் பொருந்தவில்லை. நீங்கள் கூறியபடி அந்த இரவு தான் என் வீட்டிலிருந்த பெண்காணமற்போனது. ஆனால் அப்போது எனக்கு அச்சங்கதிகள் ஒன்றுமே தெரியாது.

என் சிந்தனை என் வீட்டைவிட்டு எங்கோ நெடுந்தூரத்தி லிருந்தது. நான் தோட்டத்தின் ஓரத்திலிருந்த கதவின் கம்பிகளுக்கிடையில் வீதியை நோக்கிக்கொண்டு நின்ற போது ஒரு வினாடி என் சிந்தனையிலிருந்த என் மனைவியின் முகம் என் முன் தோன்றியது. அப்போது என் மனம் எத்தகைய நிலைமையில் இருந்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

நான் அவ்வாறு கம்பிகளின் வழியாய் ஒரு பெண்ணை பார்த்ததாகவும், அவள் என் வீட்டில் தையல் வேலை செய்து கொண்டிருந்த பெண்ணென்றும் நீங்கள் கூறுகிறீர்கள். அது அப்படியே உண்மையாக இருக்கலாம். ஆனால் அச்சமயம் அது என் மனைவியின் உருவமே என்று எனக்குத் தோன்றியது. அதுகாறும் நான் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த படியாலும், பன்முறை வீதிகளில் அவளைத் தேடித் தேடிக் காணாமல் மனச் சோர்வடைந்ததாலும், அது என் ஏற்பாடுகளில் ஒரு மாறுதலை உண்டாக்கி விட்டது. ஏனெனில் அம்முகம் அவள் முகமே என்று புலப்பட்டது. ஆனால் அவள் முன்போல் நாணயமான உடைகளை அணிந்து கொண்டிருக்கவில்லை. கூலி வேலை செய்யும் பெண்கள்போல் உடையணிந்திருந்தாள், ஆகையால் இனி அவளைச் செல்வம் பொருந்திய பெண்கள் நடமாடுமிடத்தில் தேடுவதில் பயனில்லையென்றும், ஏழைத் தொழிலாளர்கள் இருக்குமிடத்தில் தான் போய்த் தேட வேண்டுமென்றும் எனக்கு எச்சரிக்கை உண்டாயிற்று. ஆகையால் நான் கண்டவிடத்தில், தாழ்ந்தவர்கள் வசிக்கும் வீதிகளிலும், சந்துபொந்துகளிலும் அலைந்து திரியத் தொடங்கி விட்டேன். அவற்றையெல்லாம் கூறவேண்டுமாயின் எனக்கே மிக்க அவமானமா யிருக்கிறது. நீங்கள் கூறுவது

போல் நான் பின் தொடர்ந்து வரப்பட்டது உண்மையாயின் அவற்றைப்பற்றி நான் கூற வேண்டுவதும் அனுவசியம்," என்றார்.

16-வது அத்தியாயம்

பூபாலப்பிள்ளையின் சரித்திரத் தொடர்ச்சி:—

"நான் செய்த முயற்சிகளனைத்தும் வைத்தியக்காரன் செயலாக முடிந்தது. அவன் என் விஷயத்தில் கொண்டிருந்த அன்பு உண்மையானதென்றும் மனப்பூர்வமானதென்றும் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஆயினும் நான் அவளைத் தேடும்போது பார்த்த பிரத்தியட்சமான அனுபவத்தால், அந்தோ! தன் தந்தை தமையன் இவர்களுடைய நடக்கையால் அவள் மிக்க அகௌரவமும் ஏழ்மையுமான நிலைமைக்கு வந்துவிட்டிருந்தால், அதனால் மனவேதனையடைந்து எத்தகைய நிலைமைக்குவந்து விட்டிருப்பாளோ என்று நினைத்தபோது, என் நெஞ்சில் பழுக்கக் காய்ச்சின சலாகைகள் சொருகப்பட்டது போலிருந்தது.

ஏனெனில் எத்தகைய கற்புடைய மாதும் சகிக்கொணாத கடுமையான தரித்திரத்தால் பிடிக்கப்படும்போது அத்துன்பத்தைத் தாங்கமுடியாமல் எத்தகைய அவமானமான காரியத்திற்கும் உடன் படும்படி கட்டாயப் படுத்தப் படுகிறாள். அத்தகைய ஆபத்தான காலத்திலும் உயிருக்குத் துணிந்து தன் கற்பைக் காத்துக்கொள்ளும் தீரமுடைய மாதர் மிகச் சிலரே. எத்தனையோ உயர்ந்த வமிசத்தில் பிறந்த பெண்கள் முதலில் ஒருவனை உண்மையானவனென்று நம்பி அவனை மணம் புரிவதாய்ச் சம்மதித்து விடுகிறார்கள். பிறகு உலக அனுபோகமில்லாத

தால் தங்கள்நடக்கைகளில் அளவுமீறி நடந்து கொள்ளுகிறார்கள். அதாவது இரகசியமாய் புருடனும் மனைவியுமாய் விடுகிறார்கள். பிறகு அந்த வாலியன் அயோக்கியனாக இருந்து இவளைக் கருப்பவதியாயிருக்கும் சமயத்தில் கைவிட்டுப் போய்விட்டாலோ, இவள் நற்குடியில் பிறந்தவளானதால் நம்மால் நமது குலத்திற்குக் கெட்ட பெயர் வரலாகாதென்று எங்கேனும் ஓடிவிடுகிறாள், பிறகு அவள் அனாதரவாய்க் கஷ்டப்படும்போது என்ன செய்வாள் பாபம். எத்தகைய அகௌரவமான நிலைமைக்கும் ஒப்புக் கொள்கிறாள். அந்தோ! மிக்க இழிந்த பிராணிகூட தன் உயிரை உடம்போடு வைத்துக் கொண்டிருக்க விரும்புகிறதன்றோ?

நமது நாட்டில் தாய் தந்தையருக்குத் தெரியுமுன்பே ஒரு பெண் ஒரு ஆடவன்மேல் காதல் கொள்ளலாம் என்ற விதி அனுபவமாக இருக்கிறது. என்? பெற்றோரே தங்கள் மகளைக் காதலிக்கும் ஆடவன் செல்வம் முதலியவற்றால் தங்களுக்குத் திருப்தி உடையவனாய் இருந்தால் தங்கள் புத்திரி அவனோடு தாராளமாய்ச் சவகாசம் செய்யும்படி விட்டு விடுகிறார்கள். அவன் உட்கருத்தை இவர்கள் அறியார்கள். பெரும்பாலும் அவள் தாய் தந்தையர் சுற்றத்தார் ஒருவருக்கும் தெரியாமலே அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் பிறகு தங்கள் பெண்ணின் க்ஷேமத்திற்கு அவனை மணம் புரிபவன் தவிர வேறு எவரும் பொறுப்பாளிகளில்லை. அந்தோ! இத்தகைய கொடிய துர் ஆசாரத்தால் நம் நாட்டில் எண்ணிறந்த பெண்கள் மனம் திடுக்கிடத் தக்க இழிவான—மிக்க கோரமான துக்ககரமான—நிலைமையை அடைந்திருக்கிறார்கள்.

இக்காரணங்களால் இலீலாள் தன் தந்தை தமையன் இவர்களாலுண்டான அவமானத்தாலும், இவர்கள் சிறைப்

பட்டதால் தனக்கு ஏற்பட்ட கஷ்டமான தரித்திர தசையாலும் என்ன கெதியானளோ வென்று என் மனதில் மிக்க வேதனை யுண்டாயிற்று. நான் வீதி வீதியாய் என் மனைவிக்காக அலைந்து கொண்டே யிருக்கையில், கடைசியில் ஒரு நாள் ஒரு பெண்ணைக் கண்டேன். ஆயினும் அப்பெண் என் மனைவியைப்போன்ற உருவமுடையவளாக இல்லை. கூந்தல் மட்டும் அவள் கூந்தல் போல் பள பளப்பான பொன்னிற முடையதாக இருந்தது.

நான் எனக்குள்ள ஆவலால் துணிந்து சென்று அவளிடம் நெருங்கி அவளைக் கண்டேன். அது மட்டு மல்ல, அவளிடம் சம்பாஷித்தேன். அச்சம்பாஷணையால் நான் மேலே கூறிய விஷயங்களால் மிக்க மேலான நிலைமையிலிருந்து உயர்வான போகபோக்கியங்களை எல்லாம் அநுபவித்துக் கொண்டிருந்த பெண்கள்கூட கேட்டோர் கல் மனமும் கரையத்தக்க மிக்க அக்கிரமான தாழ்ந்த நிலைமையை அடைந்து விடுகிறார்களென்று தெரிந்தது. இவ்வளவேயன்றி என் மனைவியைப் பற்றிய எள்ளளவு சமாசாரம் கூட அவளால் நான் அறியக்கூட வில்லை. ஆதலின் நான் அவளோடு சம்பாஷித்த விஷயங்களைப் பற்றி உங்களுக்கு விரிவாகக் கூறுவதில் எள்ளளவும் பயனில்லை. இப்போது என் மனதிலிருக்கிற விஷயம் தெளிவாய்த் தெரிகிறவரையில் என் மனைவியைப்பற்றி என்ன கூறுவது என்ன உத்தேசிப்பதென்று எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏனெனில் தங்கம்மாளுக்கு இங்கிருந்து காணமற் போய்விட்ட பெண்ணைப் பற்றி என்ன தெரியும், அந்த பீரோவின் அடி அறையிலிருந்த உடை முதலியவற்றைப் பற்றி அவளுக்கென்ன தெரியும் என்பது முதலிய விஷயங்களைப்பற்றி அவளுக்கு எவ்வளவு தூரம் தெரியும் என்ற

உண்மையை...." என்று கூறும்போது அறையின் கதவு திறக்கப்பட்டதும் தங்கம்மாளே உள்ளே வந்தாள்.

தங்கம்மாள் வெளியில் சென்றிருந்தபோது அணிந்திருந்த உடையை இன்னும் கலைக்காமலே அங்கு வந்தாள். அவள் தன் எஜமானாகிய பூபாலப் பிள்ளையை நோக்கிய போது அவள் முகத்தில் மிக்க வியப்போடு பீதியும் காணப்பட்டது. அவள் பூபாலப்பிள்ளையை நோக்கி "தாங்கள் என்னை அழைத்தீர்களா?" என்று கேட்டாள்.

பூபாலப் பிள்ளை:—"ஆம் தங்கம்மாள்! என் வீட்டில் வந்து தையல்வேலை செய்துகொண்டிருந்த அப் பெண் யார்? அவள் பெயர் என்ன? அவள் எங்கிருந்து வந்தாள்? உண்மையைக் கூறு" என்றார். இம் மொழிகளைக்கேட்ட தங்கம்மாள் மிக்க நடுக்கத்தோடும் மனக்கலக்கத்தோடும் தியக்கமடைந்து நின்று விழித்தாள்,

ஆனந்தஸிங்:—"தங்கம்மா! எத்தகைய மர்மமாக விருந்தாலும் அதை மறைக்கவேண்டிய காலம் போய் விட்டது. நீ அறிந்த உண்மை எதுவாயினும் உள்ளது உள்ளபடி கூறிவிடு," என்றான்.

அதன்மேல் தங்கம்மாள் பூபாலப் பிள்ளையை நோக்கி மிக்க மனவருத்தத்தோடு, ஆனால் உண்மையைக் கூற வேண்டுமென்ற துணிகரத்தோடு, ஆவி சோர்ந்தவள்போல் நாற்காலியில் சாய்ந்து பூபாலப்பிள்ளையை நோக்கி,

"ஐயா! அவள் உமது மனைவியே. நீர் மணம்புரிந்த பரிதாபமான...." என்பதற்குள்,

பூபாலப்பிள்ளை மிக்க விகாரமடைந்த முகத்தோடும் நெஞ்சு தடுமாற்றத்தோடும் "ஹா கடவுளே!" என்றார். அவர் மனதிலிருந்த காதல், அதனாலுண்டான மாண

வேதனை யாவும் அந்த ஒரு வார்த்தையால் வெளியாயிற்று. தங்கம்மாளோ தட்டென்று துப்பாக்கியால் சுடப்பட்டவன்போல் வாயை மூடிக்கொண்டாள். ஆயினும் பூபாலப்பிள்ளை தமது கரத்தை "ஆ கடவுளே" என்று தூக்கி மெதுவாய்த் தாழ்த்தியதும்,

"ஐயா! அந்தம்மாள் என்ன நேர்ந்தபோதிலும் தன் மர்மத்தை எள்ளளவும் வெளியிடவேண்டாம் என்று என்னிடம் சத்தியம் வாங்கிக்கொண்டார்கள். உங்கள் தந்தை இறந்த இரண்டு வாரங்களுக்குள் அந்தம்மாள் இங்கு வந்து என்னைக் கண்டு தனக்கு உங்கள்மேல் இருக்கும் காதலையும் தன் சரித்திரத்தையும் பற்றிக் கூறினார்கள். தான் மனைவியாய் இருக்கிறவரையில் தன் கணவன் வீட்டைவிட்டு அன்னியர் வீட்டில் வசிக்கத் தனக்குப் பிரியமில்லையென்று கூறித் தன் கறுப்பு முகமூடியை எடுத்துத் தான் கலியாணம் செய்துகொண்டதால் தன் முகத்தினுண்டாகி யிருக்கும் மாறுதல் எத்தகையதென்று பார்க்கும்படி கூறினார்கள். அந்தம்மாளுடைய கூந்தலும் கண்களும் பிரகாசத்தோடு ஜொலித்துக்கொண்டிருந்தன. அந்தம்மாளுடைய நிலைமை என் மனதை வசப்படுத்திவிட்டது. நான் சத்தியம் தவறுவதால் உண்டாகும் பாபத்திற்காக மிக்க பீதியடைந்திருந்திருந்தேன்...." என்றதே,

பூபாலப் பிள்ளை:—"சரி, அவள் இங்கிருந்து காணாமற் போய்விட்ட பிறகு-அதன் பிறகு நீ என்ன செய்தாய்?" என்றார்.

தங்கம்மாள்:—ஹா! அதன் பிறகு என்ன செய்தேனா? ஐயோ கடவுளே! அவள் ஏதோ துன்பத்தில் சிக்கிக்கொண்டாள் என்று எனக்குத் தெரிகிறது அப்படியிருந்தும் அவள் இரகசியத்தை வெளியிடவோ, வாக்குத்தத்தம் அளித்தபின் மனம் வரவில்லை. அச்

சமயம் அவள் அத்தகைய சமையத்தில் அவள் யாரென்று உமக்குத் தெரிந்தால், மிக்க யோக்கிய வதியாகிய அவளைக் காப்பாற்றக் கருதாவிடினும் உமது மானத்தைப் பாதுகாப்பதற்கேனும் நீர் முயற்சிசெய்ய வேண்டியே யிருக்கும். அவள் உமது, க்ஷேமத்திற்காகத் தன் பிராணனையே வேண்டுமாயி னும் கொடுக்கச் சித்தமாயிருக்கும் உத்தமி. அத்த கையவள் பரமதுஷ்டர்களின் கையில் சிக்கிக்கொண் டிருக்கும்போது நீர் அதைப்பற்றிய கவலை என்ன வுமின்றி வேறு ஏதேதோ விவகாரங்களைக் கவனித் துக்கொண் டிருக்கிறீர்! அதனால் என் மனம் எத்த கைய வேதனைப்பட்ட தென்பதைப் பற்றி என்னைக் கேட்கவேண்டாம். அவள்—அத்தகைய கற்பரசி சென்றது முதல் என்மனம் படும் வேதனை கடவுள் ஒருவருக்கே தெரியு மன்றி மனிதர் எவருக்கும் தெரியாது.

அந்தோ! அந்தப் பதிவிரதா சிரோமணி தங்கள்மேல் எத்தகைய காதல் வைத்துக்கொண் டிருந்தாள் தெரியுமோ? அவள் உமது விஷயத்தில் வைத்திருந்த பக்தியும் சிரத்தை யும் நினைக்கும்போது அத்தகைய தங்கம்போன்ற பெண் மணியா யிருந்தாளே என்று என் மனம் சொல்லொணு வேதனை அடைகிறது...." என்று கூறியபோது,

பூபாலப் பிள்ளை "ஓ! அப்படியிருந்தாள், இப்படி இருந்தாள் என்று நீ இறந்த காலத்தில் நடந்த சங்கதி போல் கூறுகிருயே அதென்ன?" என்றுர்.

தங்கம்மாள் கண்ணீர் விட்டுக் கொண்டே "ஏனெ னில், அந்தோ! நான் இப்போதுதான் கோரகச் சவக்கிடங் கில் அவள் சவத்தைப் பார்த்துவிட்டு வந்தேன்" என்றுள்.

இதைக்கேட்ட பூபாலப் பிள்ளை ஆத்திரமான துடிப்போடு "இல்லை யில்லை. அங்கிருக்கும் சவம் அவள் சவமல்ல அவளைப் போன்ற வேறு எவரது சவமாக வேறுயிருக்க் வேண்டும்," என்றார்.

தங்கம்மாள்:—"கடவுள் அருளால் அப்படியே இருந்துவிடின் எனக்கு மிக்க சந்தோஷமே. ஆனால் அங்கு இறந்து கிடப்பவள் கூந்தல் அவள் கூந்தலைப்போலவே பளபளப்பான பொன்னிறம் வாய்ந்ததாகவிருந்ததே," என்றாள்.

ஜெயசிங்குக்கு அக்கோரக் காட்சியைப் பற்றிய சம்பாஷணையை அதற்குமேலும் சகித்துக்கொண்டிருக்க மனமில்லை. ஆதலால், அவன் உடனே "பூபாலப் பிள்ளை கூறுவது உண்மையே, அவர் அப்பெண்ணைக் கண்டு பேசி இருக்கிறார். அதுவும் சமீப காலத்திலேயே. அவள் தன் மனைவியென்றும் அல்லவென்றும் அவருக்கு நன்றாய்த் தெரியும்," என்றான்.

தங்கம்மாள்:—"ஆனால் அச்சவம் அவள் சவமல்ல?" என்றாள்.

பூபாலப் பிள்ளை:—"அல்ல அல்ல. அவள் என் மனைவி அல்லவே அல்லவென்று ஆயிரந் தரம் கூறுவேன்," என்றார்.

அதைக் கேட்டதே தங்கம்மாள் மனதிலிருந்து பெரும் பாரம் கழிந்ததுபோலிருந்தது. அவள் உடனே தன்னை மறந்து கீழே முழுங்காற்படியிட்டு "ஓ கடவுளே! உமக்கு மிக்க வந்தனம்," என்று கூறியதும் மறுபடி பழைய கவ்வாத்தோடு, "ஐயோ! நான் என்ன பெருந்தவறு செய்து விட்டேன். அவள் இறந்துபோய்விட்ட பிறகே நான் அவள் இரகசியத்தை வெளியிட்டிருக்க வேண்டும். அவ்வாறு அவளுக்கு வாக்களித்திருக்கிறேன். இப்போது

அதை வெளியிட்டது பெருந்தவருய் விட்டதே. என்ன செய்வேன்! நான் பூரண நன்றியுள்ளவளென்ற நம்பிக்கையால் தான் அவள் நிம்மதியோடு சென்ருள்," என்ருள்.

பூபாலப்பிள்ளை தங்கம்மாள் முகத்தை உற்றுநோக்கி "தங்கம்மா! நான் என் மனைவியை அதிகமாக நேசிக்கிறேன். இப்போது என் சுகமனைத்தும் அவளை நாடியிருக்கிறது," என்ருர்.

இதைக் கேட்டதே தங்கம்மாள் சந்தோஷத்தால் துள்ளி எழுந்து, "ஆ! நீர் அவளை நேசிக்கிறீரா? அப்படியாயின் நான் ஆண்டவனை வாழ்த்திப் போற்றுகிறேன்," என்று ஆனந்தக் கண்ணீர் விட்டுக்கொண்டே ஒரு மூலையில் சென்று நின்ருள். இச்சங்கதிகள் யாவும் கேட்டதே இனி நாம் அப்பரிதாபமான இராஜாமணி என்ற பெண்ணைக் கண்டு பிடிப்பதே நமது வேலை யென்று ஜெயசிங்குக்கும் ஆனந்தசிங்குக்கும் புலப்பட்டது. அவளை எப்படிக் கண்டு பிடிப்பதென்பதே அவர்களுடைய பெரிய கவலையாய்விட்டது.

இப்போது தெரிந்த விஷயங்களால் அவள் மிக்க பரிதாபமான நிலைமையிலிருக்கிருளென்றும், அவளைக் கண்டு பிடிக்க வேண்டியது மிக்க அவசியமென்றும் அவர்களுக்குப் புலப்பட்டது. அவள் தன் தகப்பனுலும் தமையனுலுமே பலாத்காரமாக் கொண்டு போகப்பட்டிருக்கிருளென்றும், இப்போது அவர்கள் வசத்திலேயே எங்கோ மறைத்து வைக்கப்பட்டிருக்கிருளென்றும் நன்ருகத் தெரியும். ஆகையால் இப்போது அவர்களிருவரையும் கண்டு பிடித்தால் தான் அவளைக் கண்டு பிடிக்கலாமென்று தெரிந்தது. ஆகையால் அக்கள்ளர்களைக் கண்டு பிடிப்பதே நமது முக்கியமான முதல் வேலையென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

ஆனந்தசிங்:—"நாம் முதலாவது அக்கள்ளருடைய நாட்டார் இருக்கும் பாகத்தைச் சோதனை செய்வோம். தென்முகம் இராசப்பனும் நமக்கு உதவி செய்வார்கள். விவகாரம் திருப்தியாகவே முடியும். இதுவே என் ஆலோசனை," என்றான்.

ஜெயசிங் தலையசைத்து "அக்கள்ளர் தங்கள் நாட்டார் இருக்குமிடத்திலேயே ஒளிந்து கொண்டிருப்பார்களென்று நான் கருதவில்லை. அவர்கள் தனியாயில்லை என்பதை நீ கவனிக்கவேண்டும். கண்டோர் மனதைக் கவரத்தக்க முக விலாசமுடைய ஒரு பெண்ணைக்கூட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கூட்டமான விடத்தில் அவளை வைத்துக் கொண்டிருந்தால் அவளைப்பற்றிய பிரஸ்தாபம் வெளிவரும், அதை மறைக்க வேண்டியது அவர்கள் முதற் கடமை," என்றான்.

ஆனந்தசிங்:—ஆம் ஆம். அவர்கள் ஜாதியார் அன்னியர் சங்கதிகளைத் தூற்றுவதில் பிரசித்தி பெற்றவர்கள்.

ஜெயசிங்:—"அவர்கள் அவளுக்கு சாதாரண அநாகரிகப் பெண்போல் உடையுடுத்தி அவளை இழிவாய் நடத்துவதாயின் பரவாயில்லை. யாரும் கவனிப்பார்கள். அவளோ அவர்களுக்கு ஒரு முதல்தரமான உயர்ந்த சரக்குப் போன்றவள். அவளால் பெருத்த தொகை சம்பாதிக்க அவர்கள் எண்ணியிருக்கிறார்கள். ஆகையால் தங்கள் நோக்கம் நிறைவேறும் சமயம் வருந்தனிலும் அவர்கள் அவளை மிக்க உயர்ந்த நிலைமையில் வைத்துப் பாதுகாத்து வருவார்கள். அவர்கள் அவள் மூலமாய்ப் பூபாலப் பிள்ளையிடம் மிக்க பணம் சம்பாதிக்கக் கருதி யிருக்கிறார்களென்பதில் எனக்குச் சந்தேக மில்லை என்றே கருதுகிறேன்," என்றான்.

ஆனந்தசிங்:—அதற்கோ அல்லது அது போன்ற வேறொரு காரணத்திற்கோ! பூபாலப்பிள்ளை செல்வவந்தன். அவன் தாங்கள் நாட்டை விட்டோடிவிட உதவி செய்வானென்று அவர்கள் எதிர் பார்க்கலாகும்.

ஜெயசிங்:—"அவர்கள் தங்கள் நாட்டாரிருக்கும் பிரதேசத்தில் வசிக்காவிட்டால் வேறு யாஞ்சால நாட்டார், மலையாளத்தார், தென்னாட்டார் முதலியவர்கள் வசிக்குமிடத்திலும் இரார்கள். அவர்கள் நோக்கம்—அவர்கள் ஆற்றின் மறு கரைக்குச் சென்று சாரைபூரிலிருப்பார்களென்று கருதுகிறேன். ஷண்முகத்தை அங்கு அனுப்பினாலென்ன?" என்றான்.

ஆனந்தசிங்:—ஜன நெருக்கமான நகரத்திலிருந்தால் அவர்களை அன்னியர் கவனிப்பதைவிட கொஞ்சம் ஜனங்கள் இருக்கும் நாட்டுப் புறத்திலிருந்தால் அதிகமாகக் கவனிப்பார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். அதை நீ கவனிக்கவில்லை போலும்.

ஜெயசிங்:—அப்படியாயின் அவர்கள் எங்கு போயிருப்பார்களென்று நீ கருதுகிறாய்?

ஆனந்தசிங்:—"என் அனுபவமான ஆலோசனைக்குப் புலப்படுவதாவது," என்று சற்று நேரம் சிந்தித்துப் பின் வருமாறு கூறினான்:—

"அக்கள்ளர்கள் பூபாலப் பிள்ளையிடம் பணம் பிடுங்க எண்ணியே அப்பெண்ணைக் களவாடிக்கொண்டு போனார்கள் என்று நீ கருதுகிறாய். நானும் அப்படியே நினைக்கிறேன். ஆகையால் இப்போது அவர்கள் நாட்டம் முழுமையும் அவன் மேலேயே இருக்கவேண்டும். அவர்கள் இனிச் செய்யவேண்டிய ஏற்பாடுகளனைத்தும் அவனைப் பற்றியே யிருக்கவேண்டும். அதற்காக அவன் விஷயங்

கஜையே அவர்கள் இப்போது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவர்கள். இதன் மேல் என்ன உத்தேசம் ஏற்படுகிறது? ஒரு கள்ளக் கூட்டத்தார் ஒரு பாங்கியைக் கொள்ளை அடிக்கக் கருதுகிறார்கள். அப்போதவர்கள் என்ன செய்வார்கள்? அந்த பாங்கிக்குச் சமீபமான ஒரு விடத்தைத் தந்திரமாக வாடகைக்கு வாங்கிக் கொண்டு அதிலிருந்து கொண்டே பாங்கியில் இருக்கும் பணப்பெட்டிக்குச் சுரங்கம் தோண்ட முயல்வார்கள்! இப்போது இக்கள்ளர் செய்ய முயல்வது வேறொரு விதமான கொள்ளையே. இப்போதிவர்கள் காரியமும் முழு நாட்டமும் பூபாலப் பிள்ளைமேலும் அவர் வீட்டின் மேலுமே இருக்க வேண்டும். பாங்கிக் கொள்ளைக்காரர் அதனருகிலிருப்பதோடு அப்பாங்கியிலுள்ள காவலர், மற்ற ஆட்கள் முதலியவர்களைத் தந்திரமாகச் சிநேகம் செய்துகொண்டு அவர்கள் மூலமாய் யாவும் அறிந்து கொள்வார்கள். சமயம் வாய்ந்தால் அவர்களில் சிலரை உளவாளிகளாக அமர்த்திக் கொள்வார்கள். அப்படியே இவர்களும் பூபாலப் பிள்ளையின் வீட்டருகி லிருந்துகொண்டு அங்குள்ள வேலையாட்கள் முதலியவர்கள் மேல் நாட்டம் வைத்துக்கொண்டிருப்பார்கள். நமக்குமட்டும் இப்போது போதுமான அவகாச மிருந்தால்...." என்றதே,

ஜெயசிங்:"நமக்கு அவகாசமில்லையே. அக் கம்பீரமான பெண் அத்துஷ்டர்களிடம் சிக்கிக்கொண்டு அவதிப் படும்படி விட்டிருப்பது மிக்க பரிதாபமாக விருக்கிறது," என்றான்.

ஆனந்தசிங்:—நமக்கு அவகாசமிருந்தால் நான் சொல்வதெல்லாம் கூடி, நாம் சற்று நிதானமாய்ப் பொறுக்க வேண்டியதே. வேடன் வலையில் பட்சிகள் சிக்கிக் கொள்வதுபோல் அக்கள்ளர் எப்படியும் கடைசியில்

நம்மிடம் சிக்கிக் கொள்வார்கள். ஆகையால் நான் கூறுவதாவது இப்போது நாம் பூபாலப் பிள்ளையின் வீட்டருகிலேயே வேவுபார்க்க வேண்டும். எனக்குள்ள அனுபவம் என்ன கூறுகிறதெனில் இப்போது அக்கள்ளர் பூபாலப் பிள்ளையும் அவர் வாசஸ்தலமும் தங்கள் பார்வையில் இருக்கத்தக்க அவ்வளவு சமீப இடத்திலேயே இருக்கவேண்டும். இதுவே நிச்சயம்.

ஜெயசிங்:—"ஆனால் நான் கூறுவதாவது, நானே சில நாட்களாக அப் பிரதேசத்தில் வசித்துக்கொண் டிருக்கிறேன். அங்கு அருகிலுள்ள ஒவ்வொரு வீட்டின் விவகாரமும் எனக்கு நன்றாகத் தெரியும். அங்கு அவர்கள் ஒரு நாள் இரண்டு நாட்களுக்கு மறைந்திருக்கத் தக்க விடமேயில்லை. அப்படியிருக்க இரண்டொரு வாரமாக எப்படி இருப்பார்கள்? அருகிலுள்ள வீதிகள் சந்துபொந்துகளிலோ, ஒவ்வொரு வீட்டிலுள்ள ஆட்களும் யாரார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் நீ என்னை அங்கு வேலைசெய்யும்படிக் கூறினால் நான் அப்படியே...." என்றதே,

ஆனந்தசிங்:—ஆம் அதே நான் கூறுவது. நீ அங்கு வேலை செய். நான் ஷண்முகத்தையும் இராசப்பனையும் மற்ற இடங்களில் வேலைசெய்ய அனுப்புகிறேன். இவ்வளவு வேலைகளும் நம் காரியசித்திக்கு வேண்டியவையே ஆகும்.

ஜெயசிங்:—நீ...?

ஆனந்தசிங்.—"நீங்கள் உங்கள் வேலைகளைச் செய்துமுடிக்கும்போது நான் என் வேலையைச் செய்து முடித்தே இருப்பேன்," என்றான்.

உடனே இருவரும் பிரிந்து விட்டார்கள்.

17-வது அத்தியாயம்

ஆனந்தசிங் கூறிய அனைத்தும் ஜெயசிங்குக்கு அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை. ஆயினும் பன்முறைகளில் அவன் ஆலோசனைகள் ஆச்சரியமான விதமாய் ஜெயத்தை அளித்திருக்கின்றன. ஆனால் இச்சமயத்தில் ஜெயசிங் அறிந்தவரையில் அக்கள்ளர் பூபாலப் பிள்ளையின் வீட்டிற்குச் சமீபத்தில் அப்பிரதேசத்திலுள்ள வீதிகளில்கூட எங்கும் ஒளிந்திருக்கவில்லை என்பது நம்பகமாய்த் தெரிகிறது. ஏனெனில் அவன் சாமார்த்தியத்திற்குத் தக்கபடி எங்கும் சோதித்துப் பார்த்திருக்கிறான். எப்படி இருந்தாலும் தன் தலைவன் ஆலோசனைக்கு இணங்கி நடக்கவேண்டும் என்பதற்காக அவ்வாறே செய்யச் சம்மதித்தானன்றி வேறில்லை.

அதன்படி நடந்து ஜெயமடைந்தபோது அவனடைந்த வியப்பும் சந்தோஷமும் சொல்லத்தரமல்ல. எப்படி ஜெயமடைந்தான்? எந்த உளவால்? அது மிக்க அற்பமான ஆனால் அதிசயமான உளவே. என்ன உளவு? கடைசியில் "ஆகா! எப்படியாயினும் ஆனந்தசிங்கே இத் துப்பறியும் வேலைக்கென்று பிறந்தவன். நாம் என்றும் அவன் சிட்டனாகவிருக்கத் தகுதியுடையவனே அன்றி அவனுக்குச் சமானமாக முடியாது," என்று எண்ணிக்கொண்டான். இனி அவன் எந்த உள்வால் அக்கள்ளரைப் பிடித்தான் என்பதைக் கூறுவாம்.

ஜெயசிங் பூபாலப் பிள்ளை வீட்டின் எதிர் வாடையில் வீதியில் திருப்பத்திலுள்ள ஒரு மாடி வீட்டில் மாறுவேடத்தோடு வசிக்கிறான் என்று முன்னமே கூறியிருக்கிறோம். இவன் இருப்பது கீழே உள்ள இரண்டறைகளில். நாள் முழுதும் அலைந்து வேலைசெய்து களைப்படைந்தாலும் மனதி

துள்ள கலவரங்களாலும் அதை மறந்து படிகளின் வழியாய்த் துரிதமாய் ஏககாலத்தில் இரண்டிரண்டு படிகளைத் தாண்டிக்கொண்டு மேல் மாடியில் நேராய்த் தன் அறைகளுக்கு மேலிருக்கும் அறை அருகிற்சென்று கதவைத் திறக்க முயன்று அது உட்பக்கம் பூட்டப்பட்டிருப்பதை அறிந்த பிறகே தன் தவறை உணர்ந்தான்.

அந்த அறைக்கு முன்னிருந்த கூடம் கீழுள்ள அவன் அறைகட்கு முன்னிருந்த கூடத்தைப் போலவே இருந்ததால் அவன் முன்னாடி தவறாக வந்துவிட்டோம் என்றுணரவில்லை. தான் தவறாக அன்னியர் இருக்கும் அறைக்கு வந்து விட்டோம் என்று அறிந்ததே அவன் தனக்குள் கோபமும் நாணமுமடைந்தவனாய்த் துரிதமாகத் திரும்பினான். அச்சமயம் அவன் காலில் ஏதோ பட்டு மடக்கென்று உடைந்தது. அவன் ஆனந்தசிங்கிடம் பயிற்சி அடைந்தவனாதலால் அற்ப விஷயங்களைக்கூட கவனிக்காமல் விடுவதில்லை. ஆகையால் குனிந்து தன் காலில் சிக்கி உடைந்த வஸ்துவை எடுத்துக் கூடத்திலிருந்த தீபவொளியில் பார்த்தான். அது ஒரு துண்டு சிவப்புச் சுண்ணாம்புக் கட்டி.

அது அற்பவஸ்து ஆயினும் அதைக்கண்டதே அவன் திடுக்கிட்டான். உடனே மறந்துபோயிருந்த இரண்டொரு விஷயங்கள் அவன் நினைவிற்கு வந்தன. கடைசியில் அந்த அற்பசம்பவமே அக்கள்ளரைப் பிடிக்க வழி காட்டியாயிற்று. எவ்வாறெனின், பூபாலப் பிள்ளை மேனாருக்குச் சென்று அங்கிருந்து அக்கள்ளர் வசித்திருந்த தனி வீட்டிற்குச் சென்றபோது ஜெயசிங்கும் மாறுவேட மணிந்து அவனைத் தொடர்ந்து சென்று பிறகு அவ் வீட்டிற்குள் நுழைந்து பார்த்தான் என்று முன்னம் கூறியிருந்தோம். அந்த வீட்டின் சாளரக் கதவில் சிவப்புச் சுண்ணாம்பால்

சிலுவையைப்போல் குறிபோடப்பட்டிருந்ததை அவன் பார்த்தது இப்போது நினைவிற்கு வந்தது.

அச்சமயம் அது ஒரு அற்ப விஷயமாக இருந்தது. அதைப்பற்றி அவன் சிந்திக்கவே இல்லை. இப்போது அவன் நினைவு அக்கள்ளர் விஷயத்திலேயே இருக்கையில் அச்சிவப்புச் சுண்ணாம்புக்கட்டியைக் கண்டது அவனுக்கு உண்மையை விளக்கியது. எப்படியெனில், அங்கு அது இருந்ததால் அக்கள்ளரும் அக்கட்டிடத்தில் இருக்கிறார்களோ என்ற சந்தேக முண்டாய்விட்டது. உடனே வீட்டுக்காரி இரண்டொரு நாட்களுக்கு முன்; மேல்மாடியிலிருக்கும் இரண்டு ஆடவர்கள் ஒரு ஸ்திரீயாகிய அவர்களால்தான் மிக்க தொந்தரை அடைவதாகவும் ஆயினும் அவர்கள் அதிக வாடகைப்பணமளிப்பதால்தான் பொறுத்துக்கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளது அவன் நினைவிற்கு வந்தது. உடனே திரும்பி மேலே சென்று தான் முன்பு தவறாய்த் திறக்கத்தொட்ட கதவை நன்றாக நோக்கினான்.

அது சாதாரணமான கதவே; வெள்ளை வர்ணம் பூசப்பட்டிருந்தது. ஆனால் கீழிருந்த அறைகளைக் காட்டிலும் நாகரீகக் குறைவாயிருந்தது. அந்த அறையின் கதவில் ஜெயசிங் முன்பு கள்ளரிருந்த வீட்டின் சாளரத்தில் கண்ட சிவப்புச் சுண்ணாம்பால் குறிக்கப்பட்ட சிலுவைக் குறியிருக்கக் கண்டான். அதைக்கண்டதே அவன் நரம்புகளில் மின்சாரம் பாய்ந்ததுபோல் தோன்றியது. அவன் உரோமங்கள் சிலிர்த்தன. "அட கடவுளே! கடைசியில் அக்கள்ளர் நாம் இரண்டொரு வாரங்களாக வசிக்கும் இதே வீட்டிலா வசிக்கிறார்கள்.—நமது தலைக்குமேல் நேராய்!" என்று கருதியதும் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை, பிரமித்து விட்டான். அச்சிலுவைக் குறியிலிருந்து தன்

பார்வையைத்திருப்ப அவனால் முடியவில்லை. அதில்தான் அக்கள்ளரைப் பிடிக்கும் பெரிய மர்மம் இருப்பதுபோல் அவனுக்குப் புலப்பட்டது.

அவன் கதவினருகில் நின்று குனிந்து உற்றுக்கேட்டான். உள்ளே ஒரு பலம் பொருந்திய மனிதன் இருந்து கொண்டு மெதுவாய்க் குறட்டை விடுவதுபோன்ற சத்தம் கேட்டது. அவன் கதவைத்தட்டித் திறக்கும்படிச் செய்யக் கருதி அதன்மேல் கையை வைத்தவன், மறுபடி உரத்த சத்தமாய்க் குறட்டை விடுவதைக் கேட்டதும் கையை யெடுத்துக்கொண்டான். உடனே உள்ளே இருப்பவன், பலம்பொருந்திய மனிதனாக விருக்கவேண்டு மென்றும் தான் கதவைத் திறந்து உள்ளே சென்றால் தனக்கே ஆபத்தாக முடியுமென்றும் அவன் புத்திக்குப் புலப்பட்டதால் ஒன்றும் செய்யாமல் பேசாமல் திரும்பி வந்து விட்டான்.

ஜெயசிங் அன்றிரவு முழுமையும் அந்த அறையில் என்ன சத்தமுண்டாகிறது, அக்கள்ளரே அங்கிருப்பதாயின் அவர்களை யெப்படியும் பிடிக்கலாம் என்பதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். தானே அக்கள்ளர் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதாயின் அவன் மனதிற்கு மிக்க சந்தோஷமுண்டாகும். மேலும் ஆனந்தசிங்குக்குத் தன்னிடம் மதிப்புண்டாகும் என்பது அவன் எண்ணம். ஆனால் "நாம் இந்த விசேஷமான விஷயத்தில் சம்பந்தப்பட்ட கள்ளரைக் கண்டு பிடிக்கும் வல்லமையுடையோமா? இவர்கள் அசாத்தியமான பேர்வழிகளாயிற்றே. ஆனந்தசிங் கூறியபடி, அவன் காட்டிய வழியில் வேலை செய்வதாலேயே பெரும்பாலும் நாம் இக்கள்ளரின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முடியும். எப்படியாயினும் அவர்கள்

இருப்பிடத்தை நாம் கண்டு பிடித்துவிட்டால் அதுவே நமக்குக் கௌரவத்தையளிக்கும்," என்று பலவாறு தனக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

பொழுது சரியாகப் புலர்வதன் முன் ஜெயசிங் எழுந்து தன் காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினான். அவன் எழுந்து படுக்கையிலிருக்கும்போது யாரோ முரட்டுத்தனமாக படிகளிலேறி மாடிமேற் செல்லும் சத்தம் கேட்டது. தான் தொடர்ந்து செல்ல ஆயத்தமாய்ச் சுறுசுறுப்போடிருந்தான். ஆயினும் எதற்கும் மேல் மாடியிலிருப்பவர்களைப்பற்றி வீட்டுக்காரியைத் தந்திரமாய் விசாரித்துப் பிறகு எதையும் செய்வது நலமென்று கருதினான். ஏனெனில், அவளை விசாரிப்பதால் அங்கிருப்பவர்கள் யாரென்பதைப் பற்றித் திட்டமாக அறியலாகும் என்பது அவன் கருத்து.

வீட்டுக்காரி அவ்வளவு காலையிலேயே சமையலறைக்குச் சென்று என்னவோ வேலை செய்துகொண்டிருந்தாள். ஜெயசிங் அங்குச் சென்று தந்திரமாக அவளையொரு தனியிடத்திலழைத்துச்சென்று மேல் மாடியிலிருப்பவர்களைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினான். சாதாரணமாகவே துப்பறிவோர் யாரார் மூலமாகத் தங்களுக்கு உளவு கிடைக்கக் கூடுமோ அவர்களையெல்லாம் மிக்க தந்திரமாக அன்பார்ந்த வார்த்தைகளால் வசியம் செய்து கொள்வார்கள். அந்தச் சாமார்த்தியம் இல்லாதவன் துப்பறிவதில் ஜெயமடைவது கஷ்டம். ஜெயசிங் இதுகாறும் நடந்து கொண்ட மாதிரியாலேயே அந்த வீட்டுக்காரி ஜெயசிங் விஷயத்தில் அன்புடையவளாய் விட்டாள். ஆகையால் அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தாராளமாய்ப் பதில் கூறத்தொடங்கினாள். அது மட்டுமல்ல; தன் துயரத்தையும் அவனிடம் கூறத் தொடங்கினாள்.

ஜெயசிங் "ஏனம்மா? மேல் மாடியில் இருக்கிறார்களே—இரண்டு ஆடவரும் ஒரு மாதும் என்று கூறினையே—அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?" என்முன்.

அம்மாது :"அந்தோ! அவர்களால் எனக்குப் பெருந் தொல்லை. அவர்கள் ஏதோ அதிகப்பணம் கொடுக்கிறார்களென்று நான் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒருவனில்லாவிட்டால் ஒருவன் எந்நேரமும் வீட்டிலேயே யிருக்கிறார்கள். அவர்கள் சதா சுருட்டுப் பிடிப்பதால் அறை முழுவதும் கறுத்து விடுகிறது. இது மட்டுமல்ல. அவர்கள் எப்போதும் அப்பெண்ணை வீட்டிலேயே அடைத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் மிக்க அசிங்கமாக உடை யணிந்துகொண் டிருக்கிறார்கள். அவர்கள் வெளியில் சென்றால் இரவில் அகாலத்தில் வந்து கதவைத் தட்டுகிறார்கள். இதுவே எனக்குப் பித்தம் பிடித்தது போலாய் விடுகிறது. ஆயினும் அவர்கள் கொடுக்கும் பணம்—அதுதான்......" என்றாள்.

ஜெயசிங் "ஆம் ஆம். அது கவனிக்கத் தக்கதே எப்போது சரியாகப் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுடைய சொற்ப குற்றங்களை மன்னிக்க வேண்டியதே. எப்போதும் உன்போன்ற வீட்டுக்காரிக்குப் பொறுமை யிருக்கவேண்டியதே. ஆகையால் நீ அவர்களைத் துரத்தி விட வேண்டாம்" என்றான்.

வீட்டுக்காரி :—"ஆனல் அப்பெண் இருக்கிறாளே. மிக்க நாணயமானவள், அடக்கமானவள், அவளைப் பார்த்தால் வியாதியுற்றவள் போலிருக்கிறாள். அப்பெண்ணை அங்கு அடைத்து வைத்து அவர்களில் ஒருவரில்லாவிட்டால் ஒருவர் காவலிருப்பது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அத்தடியன்களில் ஒருவராவது இருவருமாவது எந்நேரமும் அப்பெண்ணுக்குக் காவல்

இருக்கிறார்கள். கிழவன் அவள் தன் புத்திரி என்கிறான். அவள் அதை மறுக்கவில்லை; அந்தோ! அந்த அழகிய முகவிலாசமுடைய அப்பெண் இத்தகைய மூடர்களிடம் இருப்பதைவிட வீதியில் பிச்சையெடுப்பவளுடைய பெண்ணாயிருந்தால் நான் சந்தோஷமடைவேன். அவள் நல்ல நாணயமான உயர் குலக்கன்னிகைபோல் காணப்படுகிறாள். அப்படிப்பட்டவள் இத்தகைய அநாகரிக மூடர்களின் சுற்றத்தாளாயிருப்பது எனக்கு மிக்க மனவருத்தமாகவிருக்கிறது. நீ மட்டும் அவளைப் பார்த்தால்———" என்றதே,

ஜேயசிங் :—"அதே என் விருப்பமும், நீ அவளுடை வனப்பு முதலியவைகளைப்பற்றிப் புகழ்ந்து கூறியதாலல்ல நான் அவளைக் காண விரும்புவது. இப்போது ஒருபெண் காணமற் போயிருக்கிறாள். அவளைக் கண்டு பிடிப்போர்க்கு பெருந்தொகை பரிசளிப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அப்பெண் இவளாகவே யிருக்கவேண்டுமென்று எனக்குப் புலப்படுகிறது" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே அம்மாது வியப்படைந்து ஜெயசிங்கை யுற்றுநோக்கினாள். அவன் தொடர்ச்சியாகக் கூறத்தொடங்கித் தன் மர்மமனைத்தும் விட்டுவிடத் துணிந்து, முன்னமே திடுக்கிட்டிருக்கும் அம்மாதை நோக்கி "நீ இதுகாறும் கட்பியிருக்கிறபடி நான் வேலையில்லாமல் தினம் வெளியில் சென்று வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறவனல்ல. நான் உண்மையில் ஒரு துப்பறிபவன். காணமற்போன ஒரு கன்னிகையைத் தேடிக்கொண்டிருக்கிறேன்," என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே அம்மாது உண்மை உணர்ந்து கொண்டாள். துப்பறியவர்கள் சங்கதி அவ ளுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அவள் புத்தி யுக்தி களுக் கெட்டியவரையில் அவனுக்குத் உதவி செய்யத் தொடங்கினாள். அவ்வீடு முழுமையும் அவன் இஷ்டப்படி உபயோகிக்க ஒப்புக்கொண்டாள். யாவற்றினும் முக்கிய மான விஷயம் இச்சங்கதியை அடியோடு மிக்க இரகசிய மாக வைத்திருப்பதாய் ஒப்புக்கொண்டாள். அப்படிக் கின்றேல் அவன் சங்கதி ஒன்றுமே முடியாது,

கடைசியில் அதே தினம் மாலையே ஜெயசிங் புதிதாக அந்த வீட்டில் ஒரு அறை வாடகைக்கு எடுத்தவன் போல் மேல்மாடியில் அக்கள்ளர் இருக்கும் அறைக்குப் பக்கத் தறையில் போய்ச் சேர்ந்தான். ஜெயசிங்குக்கு ஒரு சித்தி ரக்காரன் சினேகமாக விருந்தான். அவன் அன்னியநாட் டான். க்ஷயரோக முடையவன். இப்போது ஜெயசிங் அந்த நண்பர்களைப்போல் மாறுவேட மணிந்துகொண் டான். தன்னால் கூடியவரையில் அவனுடைய நடை யுடை பாவனைகளை அப்படியே அபிநயிக்கத் தொடங்கி னான். இவன் அந்த நண்பனைக் கடைசியாகக் கண்ட போது அவன் வியாதியால் நலிவுற்று மனமுடைந்திருந் தான். இவன் அப்படியே நடிக்கத் தொடங்கினான்.

ஜெயஸிங் அந்த அறைக்குச் சென்று சுமார் அரை மணிநேரங் கழித்துப் பக்கத்தறையில் இருவர் மெதுவாய்ச் சம்பாஷிக்கும் சத்தம் கேட்டது. அவர்கள் ஒரு ஆடவ னும் ஒரு ஸ்திரீயுமென்று தெரிந்தது. ஸ்திரீயின் குரலால் அவள் வாலிப வயதுடையவ ளென்றும் நாணயமான மிருதுபாஷிணி யென்றும் தெரிந்தது. ஆனால் ஆடவன் முரட்டுத்தனமுடைய மூர்க்கன் என்றும் அவனிடம் அப்

பெண் மிக்க அச்சத்தோடு கடந்து கொள்கிறுளென்றும் தெரிந்தது. இப்போது ஜெயலிங்குக்கு அந்த ஆடவன் தந்தையென்றும் அப்பெண் புதல்வி என்றும் விளங்கியதோடு கள்ளரில் மூத்தவனே இப்போது அடுத்த அறையி லிருக்கிறுனென்றும் ஐயமறத் தெரிந்தது,

ஜெயலிங் இனி அப்பெண்ணை நாம் எந்தத் தந்திரத்தால் காணலாம்; எப்படி அவளிடம் தனியாய் இரண்டொரு வார்த்தைகள் பேசலாம் என்று சிந்தித்துக் கொண்டே இருக்கையில் படிகளின் வழியாய் யாரோ மேலேறிவரும் சத்தம் கேட்டதும் கவனமாய் உற்றுக் கேட்டான். இரண்டொரு நிமிடங்களில் வந்தவன் முரட்டுத்தனமாகவே நடந்துவந்து பக்கத்தறையின் கதவை மெதுவாக மூன்றுமுறை தட்டினன். உடனே அந்த அறையின் கதவு திறக்கப்பட்டு உடனே மூடப்பட்டது. ஜெயலிங் எவனைப்போல் அபிநயம் செய்கிறுனே அந்த கண்பன் இருமல் வியாதியுடையவன். ஜெயலிங்குக்குத் தங்கள் அறைக்குப் பக்கத்தறையில் யாரோ ஒரு ஆள் இருக்கிறுன் என்று அங்குள்ளவர்கள் அறியவேண்டும் என்பது கருத்து. ஆகையால் அவன் அடிக்கடி கடினமாய் இருமத் தொடங்கினன். அவர்களுக்கு அது பிரியமிருந்தாலு மிராவிட்டாலும் அவனுக்கு அவசியமில்லை.

ஜெயலிங் இரண்டு மூன்று முறை இருமியதே பக்கத்தறையின் கதவு பட்டென்று திறக்கப்பட்டதும் ஒருவன் முரட்டுத்தனமான குரலாய், "யார் இங்கே இப்படிச் சத்தம் போடுவது? நீ சீக்கிரத்தில் இந்த அருசாரமான சத்தத்தை நிறுத்திவிடா விட்டால்...." என்றுன்.

அதற்குள் மிருதுவான குரலாய் ஒருவர், அவனைத் தடுத்து, "நான் போய் அதைப்பற்றி பார்க்கிறேன்," என்று கூறியது ஜெயலிங் செவியில் விழுந்தது. அம்மிருது

வான குரல் இராஜாமணியின் குரலாகவே இருக்கவேண்டு மென்று ஜெயஸிங் தெரிந்து கொண்டான். மறுவிநாடி அடுத்த அறையிலிருந்து அவள் வரும்போது உடையின் சத்தம் கேட்டது. உடனே அவன் அறையினருகில் யாரோ வந்ததுபோல் தெரிந்தது. அதற்குள் இராஜா மணியே அறைக்குள் வந்தாள்.

ஜெயஸிங் மேஜையெதிரில் உட்கார்ந்து கொண்டு தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். இராஜாமணி அவன் எதிரில் வந்து நின்றாள். ஜெயஸிங்குக்கு நேராக அவள் முகத்தை உற்று நோக்க அச்சமாக இருந்தது. அச் சமயம் அவனுக்கு மிக்க விசேஷமானது—இப்போது நடக் கப்போகும் விஷயத்தால் தான் தன் காரியம் ஜெயமடை வதும் அபஜயமடைவதும் அவனுக்குத் தெரியவேண்டும்.

இராஜாம்பாள் அவனை நோக்கி "நீர் மிக்க கடுமை யான இருமலால் தொந்தரைப் படுகிறீர்போல் தெரி கிறது," என்று தன் இயற்கையான அன்பார்ந்த இரக்க முடைய மாதிரியாய்க்கூறி, "இதற்குப் பரிகாரம் ஒன்று மில்லையா?" என்றாள்.

ஜெயஸிங் தன்னெதிரிலிருந்த கடிதங்கள் முதலிய வற்றை எல்லாம் ஒரு புறம் தள்ளிவிட்டு நிமிர்ந்து நோக் கித் தலையசைத்து "இல்லை. ஆனால் எப்போதுமே இப்படி அதிகத் தொந்தரவாக இருப்பதில்லை. நான் உனக்குத் தொந்தரை கொடுத்ததாக இருந்தால் மிக்க விசனமடை கிறேன். என்னை மன்னிக்கவேண்டும்." என்றான்,

அம்மொழிகளைக் கேட்டதே இராஜாமணி தன் சிரசில் நெருக்கமாகப் போர்த்தியிருந்த சால்வையை விலக்கிவிட்டு சாந்தமான நடையாய் அவனருகில் சென்று இரக்கத் தோடு. "நீர் எனக்குத் தொந்தரை கொடுக்கவில்லை. ஆனால் என் தந்தை அப்படிக் கருதுகிறார். அவர் சில சமயங்

களில் சிடுசிடுப்பாய் நடந்து கொள்பவர். ஆகையால் ஒவ்வொரு சமயத்தில் சற்று முரட்டுத்தனமாகப் பேசினால் நீர் அதைக் கவனிக்கலாகாதென்று வேண்டிக்கொள்கிறேன்,'' என்றான்.

மாதர்கள் தங்கள் விஷயத்தில் ஆடவர்க்குப் பிரியமுண்டாகச் செய்வதில் பல விஷயங்களிருக்கின்றன. மாதர்களின் பார்வையாலும், குரலாலும், பேசும் இனிய மொழிகளாலும் ஆடவர்கள் அவர்கள்மேல் பிரியமும் இரக்கமும் கொள்கிறார்கள். மாதர்களின் அழகைவிட இத்தகைய விஷயங்கள் ஆடவரைச் சுலபமாக வசப்படுத்தி விடுகின்றன. இராஜாமணி பேசிய இரக்கமான மாதிரியால் ஜெயசிங்குக்கு அவள் தான் இதுகாறும் காணாத ரூபலாவண்யமுடைய ஒரு கன்னிகை போல் தோன்றினாள். ஜெயசிங் அவளை நோக்கி "அம்மா! நீ என் விஷயத்தில் மிக்க அன்பு காட்டுகிறாய், மிக்க இரக்கத்தோடு நடந்து கொள்கிறாய். உன் அன்பார்ந்த நடக்கை என் மனதில் உறுத்துகிறது,'' என்றான்.

அத்தகைய மாதினிடம் தான் தன் நிஜ உருவை மறைத்து மாறுவேடத்தோடு நடிப்பது அவனுக்கு மிக்க நாணமாக இருந்தது. அச்சமயம் பக்கத்தறையி லிருந்த யாரோ கோபத்தோடு உறுமும் சத்தம் கேட்டதும் ஜெயசிங் அவர்கள் கோபத்திற்கு ஆளாகாமல் சீக்கிரம் போய் விடும்படி இராஜாமணிக்குக் கூறினான்.

இராஜாமணி "இதோ ஒரு நிமிஷத்திற் போய்விடுகிறேன். நீர் இங்கு என்ன செய்கிறீர்? அதைத் தயை செய்து கூறும்,'' என்றாள். அதன்மேல் ஜெயசிங் தன் விஷயத்தைப்பற்றி எவ்வளவு கூறவேண்டுமோ அவ்வளவு வரையில் கூறி தான் அபிநயம் செய்யும் விஷயத்தைப் பற்றியும், அதைப்பற்றி அவள் தன் தந்தை முதலியவர்

களுக்கு எவ்வாறு கூறவேண்டுமென்பதைப் பற்றியும் கூறினன். அவன் மிக்க கனிவோடு யாவும் கேட்டுக் கொண்டான். அவன் கண்களில் நீர் துளித்தது. கடைசியில் அவன் அவனை நோக்கி,

"நான் இப்போது கூறுவது தங்கள் மனதில் நன்ருய் கவனமிருக்கட்டும். என் தந்தையும் தமையனும் ஏதேனும் முரட்டுத் தனமாகப் பேசினல் தாங்கள் அதைச் சட்டைசெய்யலாகாது. அவர்கள் தங்களுக்குள்ளாகவே சச்சரவிட்டுக் கொள்வார்கள். இரவிற்கே அந்த உண்மை தெரியும்," என்ருள். சாதாரணமாய்த் துயரத்தால் வாடியிருந்த அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. அவள் மொழிகளுக்குப் பதில் அவன் தலையசைத்தான். இச்செய்கை அவளைக் காப்பாற்றுவதாய் அவன் சத்தியம் செய்ததுபோலிருந்தது.

18-வது அத்தியாயம்

நடந்த விஷயங்களால் ஜெயசிங்கின் மனதிலிருந்த சந்தேகங்களெல்லாம் ஒழிந்தன. இனித் தன் காரியத்தை அனுகூலமாக முடித்துக்கொள்வதற்கு வழி ஏற்பட்டு விட்டதென்று அவன் மனம் திருப்தியடைந்தது. அவன் இரண்டொரு நாட்கள் வரையில் பேசாமலிருந்தான். ஏனெனில் அக்கள்ளர்கள் பொல்லாத முரட்டுக் குணமுடைய பரம துஷ்டர்கள். அவர்களை மிக்க ஜாக்கிரதையாய்ப் பிடிக்கவேண்டும். கொஞ்சம் தவறினல் காரியம் அடியோடு கெட்டுவிடும். ஆகையால் அவர்களைப் பிடிக்க முயலுமுன் அவர்களைப் பற்றிய விஷயங்களை எல்லாம் பூரணமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவன் கருத்து.

ஜெயசிங்கின் மனதில் இன்னும் இரண்டொரு விவகாரங்களிருக்கின்றன. முதலாவது அக்கள்ளர் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடி வந்து விட்டவர்கள். அவர்களைப் பிடித்துக் கொடுத்தால் அதுவே கௌரவம். அதன்றித் தன் தப்பறியும் திறமையால் காணமற்போன பூபாலப் பிள்ளையின் மனைவியைக் கண்டுபிடிப்பது தனக்குப் பிரசித்தியளிக்கும் விஷயமாகும். ஆனால் அவளைக் கண்டுபிடிப்பதோடு அவள் தந்தையும் தமையனுமாகிய இரண்டு கள்ளரையும் சிறைசெய்ய வேண்டும். ஆனால் இச்சங்கதிகள் பகிரங்கமாய் விட்டால் பூபாலப் பிள்ளைக்கு மானக்கேட்டை விளைவிக்கும். ஆகையால் அது பகிரங்கமாகவும் கூடாது, காரியமும் நிறைவேற வேண்டும். இதனால் அக்கள்ளரைப் பகிரங்கமாகச் சிறைசெய்யலாகாது. ஆனால் சிறைசெய்யாமலும் முடியாது. அதாவது இரகசியமாகவே காரியம் நடைபெறவேண்டும். அவர்களோ பலம் பொருந்திய ஆட்கள். அதோடு சரியான ஆயுதங்களை எப்போதும் ஆயத்தமாக வைத்துக் கொண்டிருப்பார்கள். விவகாரம் இப்படியிருப்பதால், பலத்தை விடத் தந்திர சாமார்த்தியமே இப்போது உபயோகப் படுத்தப்படவேண்டும். அப்படிச் செய்யவேண்டுமாயின் அதில் சம்பந்தப்பட்ட ஆசாமிகள் விஷயங்கள் யாவற்றைப் பற்றியும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால் ஜெயசிங் மூன்று நாட்கள் இவற்றைப் பற்றிய சங்கதிகளை அறிவதிலேயே தன் காலத்தைக் கழித்தான். கடைசியில் கீழ்க்கண்ட விஷயங்களை அறிந்தான்:—

1-வது— அப்பெண் எப்போதும் தனியாக விடப்படுவதில்லை யென்றும், தகப்பனில்லா விட்டால் தமையன், இருவரில் ஒருவர் எப்போதும் அவள்மேல் காவலாக இருக்கிறார்களென்பதும், அந்த வீட்டுக்காரி கூடியபடி உண்மையே.

2-வது—ஆயினும் அச்சமயங்களில் சற்றுநேரம் மட்டும் அவள் கூடத்தில் உலவிக்கொண் டிருக்கும்படி விடப்படுகிறாள்.

3-வது—அவர்களிருக்கும் அறையின் கதவின்மேல் சிவப்புச் சுண்ணத்தால் போடப்படும் சிலுவைக் குறியால் ஏதோ விசேஷமிருக்கிறது. அது ஆவர்கள் அந்த அறையில் இருப்பதைப் பற்றிய விஷயத்தில் சம்பந்தப்பட்ட இரகசியக் குறி எப்படியெனில் ஒரு காலத்தில் ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் மூவரும் அறையை விட்டுச் சென்றபோது அக்குறி கலைக்கப்பட்டது. ஆனால் முன்னாடி தந்தையும் மகனும் மட்டும் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் அச்சிலுவைக் குறி உடனே போடப்பட்டது.

4-வது—அவர்கள் ஏதேனும் சாமான்கள் வாங்க வேண்டியதாயின் தந்தையே சென்று வாங்குகிறானன்றி மகன் செல்வதில்லை. ஆனால் அவர்களுடைய மற்ற காரியங்களை எல்லாம் செய்பவன் மகனேயன்றித் தந்தையல்ல. மகனுக்கு அனுகூலமான வேளை இரவு வந்ததே. தந்தைக்கோ நடு இரவுதான் சௌகரியமான வேளை. ஆயினும் ஒவ்வொரு சமயம் மாலை வேளையில் தந்தை அவனுக்கு வேண்டிய இன்றியமையாத மதுபானத்திற்காக வெளியில் செல்வதுண்டு.

5-வது—அவர்கள் இருவரும் மிக்க பலசாலிகளே. ஆயினும் சுறுசுறுப் புடையவர்களல்ல. ஜெயசிங் ஒவ்வொரு சமயங்களில் மறைவிலிருந்து அவர்களை நோக்கிய போது அவர்கள் மூக்கின் விசாலத்தைக் கண்டு மிக்க வியப்படைந்து விட்டான். அவர்களுடைய நடை மந்தமாயிருந்தது. அப்படிக்கின்றி நடையும் அதைப்போன்றே

புத்தியும் சுறுசுறுப்பா இருந்திருந்தால் ஜெயசிங்கின் விவகாரங்களுக்குப் பிரதிகூலமாகவே இருந்திருக்கும்.

இவ்விஷயங்களை உணர்ந்தபின் இவற்றைக் கொண்டு அக்கள்ளரை எப்படிப் பிடிக்கலாமென்று ஆலோசனை செய்ய வேண்டியதே அவனுடைய முக்கிய காரியமாய் விட்டது. ஒரு நாள் நடுப்பகல் தான் செய்யவேண்டிய ஆலோசனைகளனைத்தும் முற்றுப் பெற்றதாய் அவனுக்குப் புலப்பட்டது. ஆகவே தான் மூலஸ்தானமாகிய துப்பறியும் போலீஸ் இலாகாவின் காரியாலயத்திற்குச் சென்று வரவேண்டும். அவனுக்கோ இரண்டொரு மணி நேரங்கூட அந்த விடத்தைவிட்டுச் செல்லப் பிரியமில்லை; ஆயினும் அங்கு சென்றே தீரவேண்டும். பிறகே முடிவான விஷயங்கள் நடைபெற வேண்டும்.

ஆகையால் தான் இதுகாறும் அபிநயமாகச் செய்து கொண்டிருந்த சித்திரம் தீட்டும் வேலையில் சம்பந்தப்பட்டவற்றை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிவிட்டுப் புறப்பட ஆயத்தமானதும் வேணுமென்றே இரண்டு மூன்று முறை கெட்டியாய் இருமினான். உடனே அடுத்த அறையிலிருந்து ஓனாய்கள் உறுமுவதுபோல் இரண்டு ஆடவரும் முணுமுணுக்கும் சத்தம் கேட்டது, மறுநிமிடம் இராஜாமணி இரக்கமான குரலாகவும் குளிர்ச்சியான முக விலாசத்தோடும் வெளியில் வந்து ஜெயசிங்கின் அறையில் நுழைந்து,

"ஆ! ஐயா! தாங்கள் இன்று இருமலால் அதிகமாகக் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. ஓ! வெளியில் செல்வதற்கு ஆயத்தப் படுகிறீர்கள்போல் காண்கிறதே........" என்றாள்.

அச்சமயம் பக்கத்தறையிலிருந்து "ஏ! வா, இங்கே சீக்கிரம். என்ன, அந்தக்கிழப் பயல் சனியனை வெளியிட்ட

மாதிரி குலைக்கிறபோதெல்லாம் நீ போய் ஏதோ உபசாரம் செய்கிருயே, இதென்ன அர்த்தம்?" என்று முரட்டுத் தனமான வார்த்தைகள் வெளிக் கிளம்பின.

அக்கடு மொழிகளைக்கேட்ட இராஜாமணியின் முகத்தில் ஒருவித நகை தோன்றியது. அவள் ஜெயசிங்கை நோக்கி "என் தந்தை இப்போது தன் வெறுக்குணமான வேலையி லிருக்கிருர். நீர் க்ஷேமமாய்ப் போய்வாரும். கடவுள் தயவால் ஜெயத்தோடு திரும்பி வருவீர் என்றே நம்புகிறேன்," என்ருள்.

உடனே அடுத்த அறையிலிருந்து மறுபடி கடூரமான பின்வரும் மொழிகள் கிளம்பின :—

"என்ன சமாசாரம்? ஜெயமடைவதா? நீங்கள் இருவரும் என்ன கதை செய்கிறீர்கள்? என்னதான் உங்கள் சங்கதி?" என்று மேகம் குமுறுவதுபோல் கேட்டதோடு முரட்டுத்தனமாய் ஆட்கள் அந்த அறையிலிருந்து வருவதுபோன்ற சத்தம் கேட்டது.

இராஜாமணி ஜெயசிங்கை நோக்கி, கருணையான முகத்தோடு "போய்வாரும், தாங்கள் மிக்க பலவீனமாயிருக்கிறதாகத்தெரிகிறது; அதோடு வயோதிகம். திரும்பி வந்தபின் தயவுசெய்து கொஞ்சம் மெதுவாக இரும முயலுங்கள்" என்ருள்.

ஜெயசிங் "திரும்பி வரும்போது............" என்றதும் வாயைமூடிக்கொண்டான். ஏனெனில் அச்சமயம் இராஜாமணியின் தந்தை வாயிற்படியில் வந்து நின்று வெறிகொண்ட வேங்கைபோல் இவர்களை உடனேவிழுங்கப்போகிறமாதிரி நிற்பதைக்கண்டதும் அவன் அசைவற்று நின்றுவிட்டான். அந்த முரடன் "நீங்களிருவரும் என்னபேசிக் கொண்டிருக்கிறீர்கள்? அதென்ன மூட்டை?" என்று ஜெயசிங் கரத்திலிருந்த மூட்டையை நோக்கிக் கேட்டான்.

இராஜாமணி துரிதமாய் "இவர் செய்துகொண்டிருந்த சில விளையாட்டுக் கருவிகள். அவற்றை விற்க எடுத்துக்கொண்டு போகிறார்," என்றாள். அவள் தந்தை அனல் போன்ற கண்களால் உருட்டிப் பார்த்துக்கொண்டே வேறொன்று மில்லையா என்றான். கன்னிகை, "ஒன்றுமில்லை. என் வார்த்தையை நம்பலாம்," என்றாள்.

அவள் தந்தையாகிய மூடன் ஓநாய்போல் உறுமிக்கொண்டே "அப்படியிருந்தால் என்ன நடக்குமென்பது உனக்குத்தெரிந்ததே," என்று கூறிவிட்டு அவள்தோளைப் பற்றி அவளை அறைக்கு அழைத்துச்சென்றான். அம்மொழிகளைக் கேட்டதே அவள் தேகத்தில் ஒருவித நடுக்கமுண்டாகி, இரண்டொரு விநாடி அவள் ஸ்மரணை நீங்கியவள் போல் ஒன்றையும் நோக்காது நின்றாள். பரமதுஷ்டனும் மூடனுமான தந்தை அதைச் சட்டைசெய்யவே யில்லை.

ஜெயசிங் தான் அபிநயம் செய்வதற்குத் தக்கபடி மெதுவாகத் தள்ளாடிக் கொண்டே மெதுவாய்ப் படிகளின் வழியாயிறங்கிக் கீழ்க்கட்டிலுள்ள கூடத்திற்குச் சென்றான். அவன் நேராக வீட்டுக்காரியின் அறைக்குச் சென்று அவளைக்கண்டு "அம்மா! நான் வெளியில்செல்கிறேன். நான் வரும்வரையில் நீ இப் படிக்கட்டுகளில் உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டும். மேல் அறையில் ஏதேனும் குழப்பம் நடந்து அந்தப் பெண் சத்தமிட்டால் நீ உடனே தயைசெய்து அவளுக்கு உதவிசெய்யச் செல்லவேண்டும்; மறக்கவேண்டாம். அவசியமாயின் உதவிசெய்வதற்காக ஒரு போலீஸ்காரனை வீதியில் நம்வீட்டினெதிரில் மறைவா யிருக்கும்படி ஏற்பாடு செய்துவைத்திருக்கிறேன்." என்றான்.

அந்த நல்ல மாது உடனே அப்படியே ஆகட்டுமென்று தலையசைத்து, உடனே தான் பின்னல்வேலைசெய்

யும் சாமான்களடங்கிய கூடையை எடுத்துக்கொண்டு “நல்ல திருஷ்டமாய் படிகளின் உச்சியில் உட்கார்ந்தால் அங்கிருக்கும் ஒரு சாளரத்தின் வழியாய் நான் அவர்கள் அறையில் நடக்கும் விஷயங்களைக் காணலாகும். தரும கைங்கரியத்திற்குக் கூட வீணாய்ப்போக எனக்கு அவகாசமில்லை” என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

ஜெயசிங் அவ்வளவு முன்சாக்கிரதையாய் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டுச் சென்றபோதிலும் திரும்பி வருந்தனிலும் அவன் மனம் பெருங்கலக்கத்திலிருந்தது. அவன் வெளியில் சற்று ஆலசியமாகவே யிருக்கவேண்டியிருந்தது. ஏனெனில், முன்னே போலீஸ் பிரதம அதிகாரிக்கு நடந்த சங்கதிகளைக் கூறவேண்டும். பிறகு ஆனந்தசிங்கைக்கண்டு இக்கள்ளரை எப்படிப் பிடிக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனைசெய்து அவன் உதவியாலேயே அக்காரியம் நிறைவேற வேண்டும். இவற்றால் மிக்க ஆலசியமாகு மென்றே ஜெயசிங் கலக்கப் பட்டுக்கொண்டிருந்தான்.

ஆனால் ஜெயசிங் வெளியில் புறப்பட்டதும் முன்னே நேராய் ஆனந்தசிங்கின் வாசஸ்தலத்திற்குச் சென்றபோது ஆனந்தசிங் அச்சமயம் வீட்டிலிருப்பதைக் கண்டு மிக்க சந்தோஷமடைந்தான். அதோடு அச்சமயம் ஆனந்தசிங் மிக்க உற்சாகமான நிலைமையிலிருந்தான். ஜெயசிங் தான் கண்டு பிடித்த விஷயங்களையெல்லாம் அவனிடம் கூறினான்.

யாவும் கவனமாகக் கேட்ட ஆனந்தசிங் குளிர்ந்த பார்வையோடும் புன்னகையோடும், “இந்த விஷயத்தில் அதிர்ஷ்டம் உனக்கு நல்ல உதவி செய்ததென்று தோன்றுகிறது. நான் பூபாலப் பிள்ளையின் வீட்டிலிருந்து பிரிந்து சென்றது முதல் இந்த விஷயத்தைப் பற்றி எனக்கு எள்ளளவும் உளவும் அகப்படவில்லை.

ஆனல் பூபாலப் பிள்ளையை இன்று காலை நான் கண்டேன். இந்த விஷயத்தை மட்டும் நாம் திருப்திகரமாக முடித்து விட்டால் அவர் மிக்க நன்றியுள்ளவராக இருப்பார் என்பது மட்டும் நிச்சயம்," என்றான்.

ஜெயசிங் :—"அது நல்லதே. நமக்கு வேண்டியது நன்றியறிதலே. அவருடைய மனைவி க்ஷேமமாய் என் பார்வையிலேதான் இருக்கிறாள் என்று அவருக்கு அறிவிக்க வேண்டியது நம்தொழில் முறைமைப்படி நமது கடமையேயென்று கருதுகிறேன். ஆனல் அவருடைய வாசஸ்தலத்திற்கு எவ்வளவு அருகாமையில் அவள் இருக்கிறாள் என்பதை அறிவிக்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. ஏனெனில் ஒரு காதலனுக்குள்ள இயற்கையான குணத்தால் அவர் அவசரப்பட்டால் காரியமே அடியோடு கெட்டு விடும். அவர் எப்போது நம்மோடு கலக்கவேண்டிய வேலை வருகிறதோ அப்போது யாவும் பகிரங்கமாய்க் கூறலாம் என்பது என் கருத்து. பிறகு உனது ஆலோசனை எப்படியோ அப்படிச் செய்யலாம்," என்றான்.

அதற்குள் ஜெயசிங்கின் மனதில் இன்னொரு முக்கியமான விஷயம் நினைவிற்கு வந்தது. அதாவது இராஜாமணி இவர்கள் விஷயத்தில் நம்பகம் வைத்து இவர்களோடு கலந்து நடந்துகொண்டால்தான் காரியம் அனுகூலமாகும். ஆகையால் அவன் ஆனந்தசிங்கை நோக்கி, "இவ்விஷயத்தில் இராஜாமணி நம்மோடு கலந்து வேலை செய்யவேண்டியிருக்கும். அவளுக்கு நம்மிடம் நம்பகம் உண்டாயிருக்கவேண்டும். ஆகையால் எதற்கும் தன் க்ஷேமத்திற்காக அவள் நம்மை நம்பி நமது ஏற்பாட்டின்படி நடக்கவேண்டுமென்று தங்கம்மாளிடமிருந்து அவ

ளுக்கொரு கடிதம் வாங்கி வந்தால் மிக்க நலமாக இருக்கும். பூபாலப் பிள்ளை இப்போது தன் மனைவிமேல் பூரண அன்பு வைத்திருக்கிறார் என்ற விஷயத்தில் அவள் நம்பிக்கை உடையவளானதால் இவ்விஷயத்தில் கணவனும் மனைவியும் ஒன்று சேருவதற்காக அவள் தன்னாலான உதவியைச் செய்ய மறுக்கமாட்டாள். இப்படிச் செய்யாவிட்டால் அப்பெண் நம்மை நம்பி நாம் கூறுகிறபடி நடக்க மாட்டாள். அக்கடிதம் வேண்டுமாயின் கையொப்பமில்லாமல் இருக்கட்டும். அதில் எப்பெயர்களும் குறிக்கப்பட வேண்டாம். ஏனெனில் தற்செயலாய் அக்கடிதம் எதிரிகளிடம் சிக்கிவிட்டால் மோசமாக முடியும். ஆனால் கையெழுத்து மட்டும் தங்கம்மாள் கையெழுத்தாக இருக்க வேண்டும். அவள் கையெழுத்து இராஜாமணிக்கு நன்றாகத் தெரியும்," என்றான்.

ஆனந்தசிங் மௌனமாகவே முழுமையும் செவியேற்றுச் சற்று நேரம் சிந்தித்தான். ஜெயசிங் கூறிய முன் யோசனையான எச்சரிக்கைகள் யாவும் அவசியமே என்று அவன் புத்திக்குப் புலப்பட்டபடியால் அவன் அவ்வாறே தங்கம்மாளிடம் ஒரு கடிதம் வாங்கி வருவதாய் ஒப்புக்கொண்டான். அவன் அவ்வளவு வரையில் ஆக்ஷேபமின்றி ஒப்புக்கொண்டதே ஜெயசிங்குக்கு மிக்க திருப்தியை உண்டாக்கி விட்டது. அதன்மேல் அவன் இனி அக்கள்ளரை எப்படிப் பிடிப்பதென்பதைப் பற்றித் தான் செய்திருக்கும் ஆலோசனைகளையெல்லாம் ஆனந்தசிங்கிடம் கூறினான். ஆனந்தசிங் முழுமையும் கேட்டு யாவும் தகுதியான ஆலோசனைகளே என்று கூறி, அவற்றின்படி நடக்கச் சம்மதித்ததைக் கேட்டதே ஜெயசிங் மிக்க சந்தோஷமடைந்தான். முன்பு ஆனந்தசிங்கிடம் தான் இழந்த மதிப்பு மறுபடி வந்து விட்டதென்று அவனுக்குத் திருப்தியுண்டாயிற்று.

ஆனந்தசிங் "நீ எப்படி ஏற்பாடு செய்திருக்கிறாயோ அதன்படியே நடக்கலாம். நமது ஆயுள் முழுமையும் நிலையிலிருக்கத் தக்க காரியம் நிறைவேறும். ஆனால் ஒரு விஷயம். நீ எதிர்பார்த்திராத சிக்கலான சங்கதி இதில் ஏற்படும். ஒரே ஒரு முறை தவிர எப்போதும் இத்தகைய விவகாரங்கள் சிக்கலின்றி நடப்பதைநான் கண்டதேயில்லை என்றான்.

இதைக் கேட்டபோது ஜெயசிங் இதுகாறும் அடைந்த சந்தோஷம் ஒருவாறு மங்கிவிட்டது. அவன் ஆனந்தசிங்கை நோக்கி "அன்று நீ பூரணஜெயமடைந்தாய். இச்சமயம் நான் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு கடைசியில் அபஜெயமடைந்தால் என் மனந்தாளாது," என்றான்.

ஆனந்தசிங்:—"நீ அபஜெயமடையமாட்டாய். இந்த விஷயத்தில் நீ பூரண ஜெயமடைய வேண்டுமென்று நான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன்," என்றான்.

ஜெயசிங் ஆனந்தசிங் கூறிய வார்த்தைகளால் தைரியமடைந்து, அத் தைரியத்தோடு வீட்டிற்குச் சென்றான். அப்போது வீட்டுக்காரி அவன் எங்கு உட்காரும்படி கூறினானோ அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஜெயசிங் அவளை நோக்கி "மேல் அறையில் ஏதேனும் குழப்பம் நடந்ததோ?" என்று கேட்டான். அதற்கு அம்மாது "இல்லை யில்லை. அங்கு எவ்விதக் குழப்பமுமில்லை. நீ சென்றது முதல் அங்கு எள்ளளவு சந்தடியுமில்லை," என்றாள். ஜெயசிங் அவளுக்குத் திருப்தியான பதிலளித்து விட்டுத் தன் அறைக்கு மெதுவாய்ச் சென்றான்.

ஜெயசிங் தன்னாலான வரையில் தன் காரியங்களை எல்லாம் சரிவரச் செய்தாலும், இனி நடக்கவேண்டிய காரியங்களில் மட்டும் மனக்கலக்கமே யிருக்கிறது. ஏனெ

னில் அக்கள்ளர் மிக்க துஷ்டர்கள். எதற்கும் அஞ்சாத பாதகர்கள். அதோடு எதிலும் சந்தேகங் கொண்டு மிக்க சாக்கிரதையாய் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பிரத்தியட்சமாய் அவன் கண்டிருக்கிறான். ஆயினும், ஆனந்தசிங்கிடம் கலந்து பேசியபின் அவனுக்குச் சற்று தைரியமே. ஆனந்தசிங் "நீ இக்காரியத்தில் பூரண ஜெயமடைய வேண்டுமென்பது என் தீர்மானம்," என்று கூறி அதைக் கேட்டபின் அவன் மனதில் நாம் எப்படியும் ஜெயமடைவோம் என்ற தைரியமுண்டாயிற்று. அதோடு இடையில் இதில் ஏதோ சிக்கலான விஷயமிருக்கிறதென்றும், ஆனால் அவ்விஷயத்தில் ஆனந்தசிங் உதவி செய்வானென்றும் அவன் உணர்ந்தான். ஆயினும் அது என்னவென்று மட்டும் அவனுக்குத் தெரியாது. ஆனால் ஆனந்தசிங் எந்த விஷயத்தில் தைரியங் கூறினானோ அதைப் பூரணமாக நிறைவேற்றச் சக்தியில்லாமல் ஒரு போதும் கூறமாட்டான் என்று மட்டும் அவன் நன்கறிவான்.

19-வது அத்தியாயம்

மறு நாட்காலை ஜெயசிங் படுக்கையை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு முன்னாள் ஆனந்தசிங்கிடம் கூறிவிட்டு வந்த விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே இருக்கையில் வீட்டுக்காரி வந்து ஒரு கடிதத்தை அவனிடமளித்தாள். அது ஆனந்தசிங்கினிட மிருந்து வந்த கடிதம். அக்கடிதத்திற்குள் ஆனந்தசிங் முன்னாள் ஏற்பாட்டின்படி தங்கம்மாளிட மிருந்து வாங்கிய கடிதத்தை வைத்தனுப்பி யிருந்தான்.

வீட்டுக்காரி மிக்க இரகசியமான சமிக்ஞையோடு அக்கடிதத்தை அவனிட மளித்தாள். அவன் இப்போதுதான் மர்மம் இரகசியம் யாவும் அறிந்து கொண்டான். ஜெயசிங் அக்கடிதத்தை பிரித்துப் பார்த்தான். அது மலைநாட்டு பாஷை. அவனுக்குச் சற்றும் புலப்படவில்லை. இராஜாமணிக்கு அப்பாஷை தெரியுமென்று தங்கம்மாள் அறிவாள். ஆயினும் எல்லாம் சரியாகவே இருக்குமென்று எண்ணிக்கொண்டு இராஜாமணியைக் காண சந்தர்ப்பம் வாய்க்கு மட்டும் எதிர்பார்ப்பதென்றும் இன்றேல் ஏதேனும் தந்திரம் செய்து அவனைக் கண்டு அக்கடிதத்திலுள்ள விஷயத்தை அவன் அறியும்படிச் செய்யவேண்டுமென்றும் கருதினான்.

ஜெயசிங் சுமார் ஒருமணி நேரம் எதிர்பார்த்ததும் ஒரு சந்தர்ப்பமும் நேரவில்லை. அடுத்த அறையின் கதவு திறக்கப்படவில்லை. இன்னும் அரைமணி நேரம் காத்திருந்தான். கள்ளர் ஒருவருக்கொருவர் பேசும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கேட்கின்றனவேயன்றி வேறொன்றுமில்லை. கடைசியில் ஜெயசிங்கால் பொறுக்க முடியவில்லை. துணிகரமாய் வேலைசெய்வதே சரியென்று துணிந்து எழுந்தான். அக்கடிதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, சிவப்புச் சுண்ணத்தால் சிலுவைக்குறியிட்ட கதவைத் தட்டினான். உடனே கள்ளரிருவரும் தங்கள் நிம்மதிக்கு இடையூறு நேர்ந்ததென்று அடியுண்ட வேங்கைகள் போல் உறுமினார்கள். அதோடு முரட்டுத்தனமாய்க் குதித்தெழுந்து உட்கார்ந்தார்கள். உண்டான சந்தடியால் நடக்கும் சங்கதியையறிந்த ஜெயசிங் என்ன நடந்தாலும் எதிர்த்து நின்று தன் காரியத்தை முடித்துக்கொள்வதென்ற தீர்மானங் கொண்டான். மறு வினாடி மிருதுவான காலடிச் சத்தம் காதை நோக்கி வருவது கேட்டது. உடனே

கதவு கொஞ்சம் திறக்கப்பட்டு இராஜாமணி தன் எதிரில் நிற்கக்கண்டான்.

உடனே "ஆ அம்மா! தொந்தரை கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும். நான் வயோதிகன். என் கண்கள் மங்கலாயிருக்கின்றன. எனக்கு மிக்க வேண்டிய நண்பர் ஒருவரிடமிருந்து கடிதம் வந்தது. அதை வாசிக்க என்னால் முடியவில்லை. தயைசெய்து வாசித்துக் காட்டினால் என் மனக்கலக்கம் ஒழியும்," என்றான்.

அச்சமயம் உள்ளே யிருக்கும் கள்ளர் சந்தேகங் கொண்டு முணமுண வென்னும் சத்தத்தைக் கேட்டதும் இராஜாமணி கதவை நன்றாகத் திறந்துவிட்டு ஜெயசிங்கை நோக்கி "ஆகா! என்னால் கூடுமானால் வாசித்துக் காட்ட ஒரு தடையுமில்லை," என்றாள்.

அச்சமயம் சின்னக் கள்ளன் அவன் அருகில் வந்து "ஏதோ! முன்னே நான் அக்கடிதத்தைப் பார்க்கட்டும்," என்று கூறிக்கொண்டே அவன் கரத்திலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டான். இராஜாமணி அச்சமயம் தன் இயற்கைக் குணமாகிய தைரியத்தை அடைந்து வெறுப் போடும் அலட்சியத்தோடும் "உனக்கு எப்போதும் எல்லா வற்றிலும், மிக்க அற்பமானதும் நமக்கு எள்ளளவும் சம் பந்த மில்லாததுமான விஷயங்களிலுங்கூட சந்தேக முண் டாய் விடுகிறது. சந்தேகப் பிராணிகளுக்கு இருண்ட தெல்லாம் பேயே. இக்கடிதத்தில் நம்மைப்பற்றிய சங்கதி ஒன்றுமே இல்லை. இப்படி அதை என்னிடத்தில் கொடுத்து விடு," என்றாள்.

அம்முரடன் "நீ பேசாமல் வாயை மூடிக்கொண்டிரு," என்று அக்கடிதத்தைப் பிரித்து இரண்டொரு விநாடி உற்று நோக்கியபின் "சட் இது ஒன்றுமே தெரியவில்லை,"

என்று கூறிவிட்டு, முரட்டுத்தனமான பார்வையோடு உறு மிக்கொண்டே சற்று பின்னால் நின்று கொண்டிருந்த தன் தந்தையிடம் அதை அளித்து "இதோ நீ பார்," என்றான்.

பெரிய அண்ணன் அதைப் பார்த்து "சந்தேகமின்றி ஒன்றுமே தெரியவில்லை. இது மலைநாட்டில் வழங்கும் மலையாள பாஷை," என்றான். இராஜாமணி "ஆம்; இவர் அந்த நாட்டில் பிறந்தவர். இவர் நண்பரும் அந்நாட்டா ராதலால் அப்பாஷையில் எழுதாமல் வேறெப்பாஷையி லெழுதுவார்கள்?" என்றாள்.

தந்தை கடிதத்தை அவளிடமளித்து "இந்தா இதை வாசித்துக் கூறு. உனக்குத்தான் அப்பாஷை தெரியுமே. பத்திரம், இதிலுள்ள சங்கதி இன்னதென்று என்னிடம் சொல்; நான் அறியாத விவகாரம் இங்கொன்றும் நடக்கக் கூடாது. கூறு. தெரிந்திருக்கட்டும்," என்றான்.

ஜெயசிங்:—அம்மா தயை செய்து இதிலுள்ள வார்த்தைகளை வாசி. என் நண்பர் என்ன எழுதினாரென்பதை அறிய நான் மிக்க ஆவலோடிருக்கிறேன். இது எனக்கு வந்த கடிதம். இதிலுள்ள சமாசாரத்தை நானறியவேண்டும். என் பாழுங் கண் பார்வை மங்கிப் போய்விட்டதால் உனக்குத் தொந்தரை கொடுக்க நேர்ந்தது. நீங்கள் பல பாஷைகள் படித்திருப்பீர்களென்று எண்ணியே இங்கு வந்தேன். கோபிக்க வேண்டாம்," என்றான்.

இராஜாமணி மிருதுவான பார்வையோடு ஜெயசிங்கை நோக்கிப் பிறகு அக்கடிதத்தைப் பார்த்து பின்கண்டபடி வாசித்தாள். மலையாள பாஷையில் அவள் வாசித்ததைக் கேட்ட ஜெயசிங், அச்சமயம் அவளுக்குண்டான மனக் கலக்கத்தைக் கண்டதும், "மிக்க வந்தனம். என் நண்பன் நான் கொடுக்கவேண்டிய வார வாடகையைத் தான்

அளிப்பதாகவும், அவன் வரும்போது நான் வீட்டிலிருக்க வேண்டுமென்றும் கூறுகிறான்," என்று கூறிக்கொண்டே சற்றும் ஐயமில்லாதவன்போல் அந்த முரட்டுக் கள்ளரை நோக்கினான்.

மூத்தகள்ளன்:—"அதில் கூறப்படும் வார்த்தைகளின் அர்த்தம் அதுதானா? நீ சொல்," என்று தன் புத்திரியைக் கேட்டான்.

அப்பெண் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "இதோ இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் அப்படி அப்படியே அர்த்தத்தைக் கூறுகிறேன்." என்று மொழிந்து "என் நண்பனே நீ பயப்பட வேண்டாம். உன் நண்பர் உன்மேல் மிக்க அன்பு கொண்டிருக்கிறார். உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார். இன்னும் நான்கு மணி நேரங்களில் நீ சுகமடைவாய். தைரியத்தோடும் உன் சுயபுத்தியோடும் நடந்துகொள். மலையாளத்தார் வழக்கம் இப்படித்தான் எழுதுவது," என்று கூறிவிட்டு, ஜெயசிங்கை நோக்கி "உன் நண்பர் உன்மேல் அன்புடையவராய் உனக்கு உதவிசெய்ய ஆயத்தமா இருப்பதைப்பற்றி நான் சந்தோஷமடைகிறேன்," என்று கூறிவிட்டுப் புன்னகையோடு அக்கடிதத்தை அவனிட மளித்துவிட்டாள்.

ஜெயசிங் கடிதத்தை வாங்கிக்கொண்டு உடனே அங்கிருந்து திரும்பினான். அவள் வாசித்ததைக் கேட்டபோது அவன் பிரமையடைந்து விட்டான். கூடுமானால் அவளைப் பேசவொட்டாதபடி நிறுத்தி விட்டிருப்பான். ஏனெனில் அத்தகைய துஷ்டர்கள் முன் அம்மாதிரி வார்த்தைகளை அவள் வாசிப்பதைக் கேட்டதே அவன் நெஞ்சு நடுங்கி விட்டது. அந்த முரட்டுக் கள்ளர் முன்னமே இயற்கையில் சந்தேக முடையவர்கள். அவர்களிடம் இத்தகைய மொழிகளைக் கூறினால் அவர்கள் விபரீதமாய் எண்ணிக்

கொள்ளத் தடையே இல்லை என்பது ஜெயசிங்கின் அபிப் பிராயம். அவளுக்கென்ன பைத்தியமோ என்று கருதி ஞன். ஆனல் அவள் அவ்வார்த்தைகளைக் கூறியபின் கடைசியில் தான் மெய்யாகவே அவற்றின் பொருள் தன்னைப் பற்றியதே என்று கருதாதவள் போல் மிக்க பெருந்தன்மையோடு நடித்ததற்காக ஜெயசிங் மிக்க வியப் படைந்தான்.

ஆகையால் இன்னும் அதிகமாக அவளிடம் நன்றி வைத்தவனய் அதைவிட்டுத் தன் அறைக்குச் சென்ருன். அதன் பிறகு அவள் தனியாக வந்து தன்னைக் காண்பாள் என்று மிக்க ஆவலோடு காத்துக் கொண்டிருந்தான். ஏனெனில் இப்போது அக்கடிதம் தங்கம்மாள் எழுதிஞ ளென்றும், அதில் குறித்த விஷயங்கள் தன்னைப் பற்றி யதே என்றும் அவள் நன்கறிவாளாதலின் எப்படியாயி னும், எத்தகைய பீதியும் மனக்கலக்கமும் இருப்பினும் தனியே வந்து தன்னைக் கண்டு பேச அவள் விரும்புவா ளென்று அவன் நன்ருயறிவான். அதனல் பொறுமை யோடு அவள் வரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஆனல் அவன் நம்பிக்கை வீணுகவில்லை.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து இராஜாமணி வெளி யில் வந்து அவன் அறைக்கு எதிரே நின்று மூக்கின்மேல் விரலை வைத்துப் பேசவேண்டாம் என்று சமிக்கை செய் தாள்.

ஜெயசிங் முன்யோசனையோடு அவளுக்குக் கூற வேண்டிய சங்கதியை ஒரு கடிதத்திலெழுதி ஆயத்த மாகக் கரத்தில் வைத்துக் கொண்டிருந்தான். ஆகையால் சட்டென்றெழுந்து சென்று அவள் தாழ்வாரத்திலிருக்கும் போதே அக்கடிதத் நடந்தால் உனக்கு திலிருக்கிறபடி

நன்மை," என்று சமிக்ஞை செய்தான். அக்கடிதத்தில் அவன் எழுதிய சங்கதி பின் வருமாறு:—

"உன் தமையன் வெளியில் செல்லும் சமயம் பார்த்து நீ அதிகமாக ஒரு மேல் அங்கியும் சால்வையும் அணிந்து கொண்டு இந்த அறைக்கு வந்துவிடு. அந்த மேல் அங்கி சால்வை இரண்டையும் இங்கு வைத்துவிட்டு உடனே கீழ்ச்செல்லும் படிகளின் தலைப்பிலிருக்கும் அறைக்குப் போய்விடு. இதற்கு மாறாக நடக்கலாகாது. நீ ஒன்றும் பேசவும் வேண்டாம். உன் தந்தையும் தமையனும் சிறை செய்யப்படுவார்கள். உனக்குப் பிரியமிருந்தாலும் இல்லாவிடினும் இது நடந்தே தீரும். இதைத் தடுக்க உன்னால் முடியாது. ஆனால் நீ இதில் கூறியபடி நடந்தால் அவர்கள் சிறைசெய்யப்படுவது பகிரங்கமா இராமல் இரகசியமாய் உனக்கும் உன் கணவருக்கும் அவமானமின்றி நடைபெறும்."

அவள் இக்கடிதத்தை வாசிக்கும்போது அவள் முகத்தில் ஒருவிதமான தைரியம் தோன்றியது. முழுமையும் வாசித்தபின் அவள் ஜெயசிங்கைக் குறிப்பாய் நோக்கிக் கொண்டே அக் கடிதத்தைத் தரையில் நழுவவிட்டாள். ஜெயசிங் கீழே விழுந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டி, நான் அதில் கூறியுள்ளதற்கு எள்ளளவும் மாறாக நடக்கமுடியாது என்று குறிப்பாய்ச் சமிக்ஞை செய்தான். ஜெயசிங்கின் துணிகரமான பதிலை அவள் உணர்ந்து கொண்டாள். ஆகையால் விசனத்தோடு தலைகுனிந்து அக்கடிதத்தைச் சுட்டிக்காட்டி அதன்படி மனதார நடப்பதாய்த் தன் இருதயத்தின்மேல் கரத்தை வைத்துச் சமிக்ஞை காட்டி விட்டுச் சென்றாள். அதன்மேல் ஜெயசிங் அக்கடிதத்தை எடுத்துக் கிழித்தெறிந்து விட்டான்.

அவன் அந்த அறைக்கு வந்தது முதல் அப்போது தான் மனத்திருப்தியோடு தன் அறையின் கதவை மூடினான். இனி யவன் செய்யவேண்டிய வேலைக்காகத் தன் மாறுவேடத்தை அவசியம் களைந்து விடவேண்டும். நோயாளி ஆகிய சித்திரக்காரன் வேலை முடிந்தது. இனித் துப்பறியும் ஜெயசிங்காக மாறிவிட வேண்டும். மணி இரண்டடிக்கும் சமயம் முன் ஏற்பாட்டின்படி அவனுடைய உதவி ஆட்கள் வந்து விட்டார்கள்.

முன்னே ஆனந்தசிங் வந்தான். அவன் ஜெயசிங் இருக்கும் அறைக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய அறைக்குள் மறைந்து கொண்டான். இரண்டொரு நிமிடங்கள் கழித்துத் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவர்களில் மிக்க அபூர்வ பலசாலிகளான இருவர் தங்கள் பாதரட்சைகளைக் கழற்றிவிட்டுப் படிகளின் வழியாக ஏறி வந்து வீட்டிலுள்ளவர்களில் ஒருவருக்குமே எள்ளளவு சந்தேகமும் தோன்றா வண்ணம் மிக்க சாமார்த்தியமாய் ஆனந்தசிங் நுழைந்த அதே அறைக்குள் போய் மறைந்துவிட்டார்கள். கடைசியாக வீட்டுக்காரி, ஜெயசிங் இராஜாம்பாளைக் கடைசியில் எந்த அறைக்குள் சென்றிருக்கும்படி கூறினானோ அந்த அறைக்குள் அவளுக்குத் துணையாயிருக்கச் சென்றாள்.

இப்போது கடைசி நாடகத்திற்கு யாவும் ஆயத்தமாய் விட்டன. கள்ளரில் சின்னவன் வெளியில் செல்லும் வேளையாதலின் அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் அத்தகைய மகா முரடர்களான போக்கிரிகளை ஏக காலத்தில் இருவரையும் பிடிப்பதைவிட தனித்தனியாக ஒவ்வொருவராய்ப் பிடிப்பதில் அனுகூலமிருக்கிறது. அப்படிச் செய்தால் இரத்தம் சிந்தாமல் ஒருவர்க்கும் துன்பம் நேரவொட்டாமல் பிடித்துக் கொள்ள

லாம்; அதோடு மிக முக்கியமாக இக் காரியத்தை பகிரங்கத்திற்கு வராமல் நிறைவேற்றலாம். பூபாலப் பிள்ளையின் கௌரவத்திற்காக இவ்வாறு செய்யவேண்டியதா இருக்கிறது. இன்றேல் தக்க ஆசாமிகளாய் ஐந்தாறு பேரைக் கொண்டுவந்து ஒரு விநாடியில் அவர்களைப் பிடித்துக்கொள்வார்கள்.

மணி இரண்டடித்தது. உடனே கள்ளர் இருக்கும் அறையின் கதவு திறக்கப்பட்டதும் சின்னக்கள்ளன் தன் இயற்கைக் குணப்படி முரட்டுத்தனமான நடையோடு இவர்களிருக்கும் அறைகளின் முன்பாகவே நடந்து கீழிறங்கிச் சென்றான். அவன் சென்றதும் ஜெயசிங் மிக்க ஆவலோடு இராஜாமணிக்காகக் காத்துக்கொண் டிருந்தான். ஏனெனில் அவன் கூறியபடி அவன் வேறொரு மேல்சட்டையோடும் சால்வையோடும் இன்னும் வரவில்லை.

இரண்டொரு நிமிடங்களில் இராஜாமணி வந்து ஒரு நிமிடம் அங்கு நின்று மேற்சட்டையையும் சால்வையையும் அவனிடம் அளித்துவிட்டுச் சென்றான். இனி நடக்கவேண்டிய விஷயங்களை மிக்க புத்தி சாமார்த்தியத்தோடும் தைரியத்தோடும் நடைபெற வேண்டியவை.

ஜெயசிங் இராஜாமணியின் சட்டையைத் தான் அணிந்துகொண்டு அவன் சால்வையை நன்றாக முகம் மறையும் வண்ணம் போர்த்துக்கொண்டான். அதோடு கைக்குட்டையை ஒரு கரத்தில் பற்றி நன்றாக மூக்கினருகில் முகத்தில் அணைத்துக் கொண்டான். இத்தகைய மாறுவேடத்தோடு துணிகரமாய்க் கள்ளர் அறைக்குள் நுழைந்தான். அந்த அறையின் கதவு அச்சமயம் கொஞ்சம்தான் திறந்திருந்தது. அன்னியரைப்போல் அபிநயம் செய்வதில் கைதேர்ந்த ஜெயசிங் இராஜாமணி எப்படி நடப்பானோ அவ்வாறே நடந்து கொண்டு அவன் எப்படி அச்சத்தோடு

மெதுவாகக் கதவைத் திறப்பானோ அப்படியே திறந்து கொண்டு சென்ருன். ஆயினும் அச்சமயம் அறைக்குள் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் இராஜாமணியின் தந்தையாகிய பெரிய முரட்டுக் கள்ளன் சாய்ந்து படுத்திருப்பதைக் கண்டதே அவன் மனதில் சற்று அச்சமே உண்டாயிற்று.

ஆயினும் ஜெயசிங் ஸ்திரீகளைப் போலவே தேகத்தை வளைத்துக்கொண்டு மெதுவாகக் கதவை மூடிவிட்டு அங்குள்ள ஒரு சாளரத்தினருகிலிருந்த ஒரு ஆசனத்தை நோக்கிச் சென்ருன். தன் புத்திரியே வந்தவளென்று கருதிய கள்ளன் "நீ கூட அடுத்த அறையிலுள்ளவன்போல் தூங்கமாட்டாயென்று கருதுகிறேன்," என்ருன். ஜெயசிங் அவன் வார்த்தைகளைக் கவனிக்காதவன்போல் சாளரத்தருகில் சென்று வீதியைப் பார்த்ததுபோல் உட்கார்ந்தான், ஏனெனில் அவன் எழுந்து தன்னை நோக்கி வரவேண்டுமென்பதே ஜெயசிங்கின் கருத்து. எதற்காகனில் இப்போது அவன் அறையின் வாயிற்படியைப் பார்த்தபடி இருக்கிருன். அவன் இந்த நிலையிலிருக்கும்போது அவன்மேல் பாய்ந்து அவனைப் பிடிப்பது கஷ்டம். அதோடு இருப்பது அவனுடைய பிரம்மாண்டமான பலம் பொருந்திய உருவத்தை நேரில் நன்ருகப் பார்த்ததால் இந்த நிலைமையில் அவனை ஒருவர்க்கும் ஆபத்தின்றிப் பிடிப்பது கஷ்டம் என்று ஜெயசிங்குக்கு நன்ருகப் புலப்பட்டது.

ஆனல் கள்ளனே மனச்சலிப்பாலோ சோம்பேறித்தனத்தாலோ அங்கிருந்து எழுந்திருக்கவே இல்லை. அச்சமயம் அறைக்கு வெளியில் ஆனந்தசிங் முதலியவர்கள் மெதுவாக வருவது போன்ற சத்தம் ஜெயசிங் செவிகளில் வீழ்ந்தது. அவன் உடனே ஒரு தந்திரம் செய்தான். அதாவது சாளரத்தின் வழியாய் வீதியில் ஏதோ அதிசயமான

சம்பவத்தைக் கண்டவன்போல் "ஆகா! அடாடா!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு குனிந்து பார்த்தான்.

அதைக் கேட்டதே எப்போதும் சந்தேகமுடைய கள்ளன் சட்டென்று துள்ளியெழுந்து "என்ன அங்கே? நீ என்ன பார்க்கிறாய்?" என்று கூறிக்கொண்டே அவனருகில் சென்றான். மறுவிநாடி கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதும் ஆனந்தசிங்கும் அவன் நண்பர் இருவரும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கள்ளனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் மிக்க துணிகரமும் அதிக பலமுமுடையவனாயினும் பருத்துக் கொழுத்த தேகமுடையவன் எனினும் அச்சமயம் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள அவனால் முடியவில்லை.

ஆயினும் சபித்துக்கொண்டே "ஏ பெண்ணே! இது உன்னுடைய குற்றமே," என்று கூறி, எதிரிலிருப்பது தன் புத்திரியே யென்று எண்ணிக்கொண்டு குனிந்து அவள் செவியருகில் குசுகுசு வென்று கூறுவதற்காகத் தன்னைப் பிடித்திருக்கும் மூவரையும் இழுத்துக்கொண்டு நகர்ந்து ஜெயசிங்கின் அருகில் சென்று "போய்க் கதவின் மேலிருக்கும் அக்குறியைக் கலைத்துவிடு, இன்றேல்—தெரியுமா—நான் என்ன செய்வேன் தெரியுமல்லவா—எப்படியும் செய்து விடுவேன். நான் கூறுவது கேட்கிறதா?" என்றான்.

ஜெயசிங் முகத்தை மறுபடியும் திருப்பியபடி எழுந்து மெதுவாகச் சென்று கதவிலிருந்த சிலுவைக் குறியைக் கலைத்துவிட்டான். ஆனால் அதற்குள் கள்ளன் நன்றாய்க் கட்டப்பட்டு வாயில் துணியடைக்கப்பட்டாய் விட்டதைக் கண்டதும், துரிதமாய்த் தன்னிடம் வைத்திருந்த சிவப்புச் சுண்ணத்தை யெடுத்து மறுபடி கதவில் முன் இருந்தது போலவே நன்றாய்ச் சிலுவைக் குறி போட்டுவிட்டான்.

பிறகு அவன் திரும்பிச்சென்று முன்போல் சாளரத்தினருகில் உட்கார்ந்து கொண்டான்.

பெரிய கள்ளனைப் பிடித்ததுபோலவே தந்திரமாகச் சிறிய கள்ளனையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றே ஜெயசிங் அவ்வாறு செய்தான். அதற்காகவே ஆனந்த சிங்கும் அவன் நண்பர்களும் இப்போது பூரணமாகச் சக்தியற்றிருக்கும் பெரிய கள்ளனை இழுத்துக்கொண்டு போய்ப் பக்கத்திலிருக்கும் அறையில் வைத்தார்கள். இப்போதவன் சற்றேனும் சந்தடி செய்யவே முடியாது. ஆனந்த சிங்கும் அவன் நண்பர்களுங்கூட அங்கேயே சந்தடி செய்யாமல் மறைந்திருந்தார்கள். ஜெயசிங் சின்னக் கள்ளனுடைய வரவிற்காக எதிர் பார்த்துக்கொண்டு சாளரத்தினருகில் உட்கார்ந்திருக்கிறான். ஒரு விசேஷமும் நடைபெறாததுபோல் கதவு வழக்கம்போல் மூடப்பட்டிருந்தது.

ஜெயசிங் மனத்தளர்ச்சியடையாமல் பூரண தைரியத்தோடு உட்கார்ந்திருந்தான். அவன் மிக்க தைரியசாலியான இராஜாமணியின் உடைகளை மேலே அணிந்திருந்ததால் அவளுடைய தைரியம் அவன் உள்ளத்தில் பாய்ந்ததுபோ லிருந்தது.

20-வது அத்தியாயம்

சுமார் அரை மணிநேரங் கழிந்தது. இவ்வளவு நேரம் சின்னக்கள்ளன் வெளியில் இதுகாறும் தாமதித்ததில்லை. ஒரு சமயம் அவன் ஏதேனும் சந்தேகங் கொண்டு ஓடி விட்டானோ என்று ஜெயசிங் சற்று கலக்கமடைந்தான். மறுநிமிடம் யாரோ தட்தட் என்று படிகளிலேறி மேல் வரும் சத்தம் கேட்டதும் கோபத்தாலோ

இயற்கையா யுள்ள முரட்டுக்குணத்தாலோ கதவு பலமாக தடாரென்று தட்டப்பட்டதும், படீர் என்று கதவைத் திறந்துகொண்டு சின்னக்கள்ளன் உள்ளே நுழைந்து வரு வதை ஜெயசிங் கண்டு எத்தகைய சம்பவத்திற்கும் ஆயத் தமாக விருந்தான்.

அவன் வாயிற்படியைக் கடந்து இரண்டடி வைத்த தும் நின்று உறுமிக்கொண்டே "எங்கே தகப்பனார்?" என்றான். ஜெயசிங் தலையை மெதுவாக எனக்குத் தெரி யாதென்று அசைத்து மௌனமா யிருந்தான். அவன் தன் கரத்திலிருந்த பிரம்பால் தடாரென்று பூமியை யடித்து தன் தங்கையென்று கருதியிருக்கும் ஜெயசிங்கை நோக்கி "நான் காணயமான ஒரு கேள்வி கேட்கும்போது நீ அங்கு சாளரத்தினருகில் உட்கார்ந்து உன்மத்தங் கொண்டவனைப்போல் வெளியில் பார்த்துக் கொண்டு எனக்கு விடையளிக்காமல் இருப்பதன் அர்த்த மென்ன?" என்றான்.

ஜெயசிங்கோ அப்போதும் பதிலளிக்கவில்லை. கள் ளனுக்குக் கோபம் அடக்க முடியாததாய் விட்டது. ஆயி னும் ஏதோ அபாயமாகிய காற்று வீசுவதுபோல் அவ னுக்கு ஐயமுண்டானதால் அவன் கோபத்தை வெளியிட முடியவில்லை. ஆனால் மிக்க கோபத்தோடு காட்டு மிருகம் போல் ஜெயசிங்கை விழுங்கி விடக் கருதியவன்போல் அங்கு நின்றபடி கோபத்தனல் வீசும் கண்களோடு கண் களை உருட்டியபடி அவனை உற்று நோக்கினான். ஆனால் அந்த விடத்தை விட்டுப் பெயரவில்லை.

சின்னக்கள்ளன் தன்னருகில் வந்தால் தான் அவ னைச் சந்தடி செய்யாமல் பிடிக்க முடியும். அவனோ எட் டவே நிற்கிறான். ஜெயசிங் பொறுத்துப் பார்த்தான். காரி யம் ஆலசியமாகிறது. கடைசியில் துணிந்து சாளரத்தின்

வழியாய் வீதியை நோக்கி அங்கு யாருக்கோ கையால் சமிக்கை செய்வதுபோல் அபிநயம் செய்தான். அந்தத் தந்திரம் உடனே பலித்துவிட்டது. எப்படியெனில் அதைக் கண்டதே, கள்ளன் "ஆ! கள்ளக்கழுதை!" என்று மிக்க உக்கிரத்தோடு சத்தமிட்டுக்கொண்டு கையிலிருந்தபிரம்பை ஓங்கிக்கொண்டு ஜெயசிங்கின்மேல் பாய்ந்தான். ஆனால் மறுவிநாடி, மிக்க உன்னிப்பாய் யாவும் கதவின் சந்தில் பார்த்துக்கொண்டிருந்த ஆனந்தசிங்கும் அவன் ஆட்களும் வேங்கைகள் போல் பாய்ந்து சென்று அவனைப் பிடித்துக் கொண்டார்கள். ஆயினும் அதற்குள் அம் மூடன் தன் கரத்திலிருந்த பலமான பிரம்பால் ஓங்கி ஜெயசிங்கின் மண்டைமே லடித்துவிட்டான்.

ஜெயசிங்குக்கு இத்தகைய சம்பவம் ஏதேனும் நேரு மென்று முன்னமே தெரியும். அந்த மூடர்களின் வஞ்சம் இராஜாமணிமேல் விழாதபடி அவளைக் காப்பாற்ற வேண்டு மென்று கருதியே அவன் அவள் உடைகளை யணிந்து அவளைப்போல் வேடமணிந்து அங்கு உட்காரத் துணிந்தான். ஆகையால் நடந்த சம்பவம் அவன் எதிர்பார்த்ததேயன்றி வேறில்லை. ஆகையால் அச் சமயம் அச் சம்பவம் அவனுக்கு மனத்தாங்கலை அளித்தாலும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் உடனே சமாளித்துக் கொண்டு எழுந்து நின்று தன் வேடவுடைகளைக் களைந்து விட்டுத் தான் ஆரம்பித்த வேலையைப் பூர்த்தி செய்யத் தொடங்கினான்.

தன் தங்கையென்று தான் கருதிய உருவம் தன் தங்கையல்லவென்றும், இதற்குமாறாகப் போலீஸ்காரரில் ஒருவனாகிய ஒரு ஆடவனென்றும், அவன் தன் தங்கையின் உடைகளை அணிந்திருந்ததால் தன் தங்கையே அவைகளை அவனிட மளித்திருக்க வேண்டுமென்றும், ஆகையால்

அவளே தான் சிறையாக்கப் படுவதற்கு உளவாயிருந்திருக்க வேண்டுமென்றும், இவ்வளவு தூரம் நடந்த வரையில் தன் தந்தை முன்பே சிறை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் இவ்வளவு விஷயங்களும் ஏககாலத்தில் அவன் மனதிற்குப் புலப்பட்டதே அவனடைந்த கோபத்திற்கு ஒரு அளவில்லை. அச்சமயம் இராஜாமணி மட்டும் அவன் எதிரிலிருந்து அவன் கரங்கள் தன் சுயாதீனத்திலிருந்தால் கட்டாயம் அவளைக் கொன்றுவிட்டிருப்பான் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

எல்லா விவகாரங்களும் முடிந்தபின் ஆனந்தசிங் தன் இரண்டு கூட்டாளிகளையும் அனுப்பிவிட்டுக் கள்ளர் இருவரையும் தன் முன்பாக நிறுத்தினான். அப்போது மூத்த கள்ளன் இனித் தப்ப முடியாதென்பதை நன்குணர்ந்தான். சிறிய கள்ளன் பிடிக்கப்பட்டதே பெரிய கள்ளனுடைய வாயில் அடைத்திருந்த சீலை எடுக்கப்பட்டது. தன் மகன் துரிதமாகக் கூறிய இரண்டொரு மொழிகளால் அவன் எல்லாச் சங்கதிகளையும் அறிந்துகொண்டான். அதனால் அடக்கொணா ஆத்திரமும் ஆவேசமும் கொண்டு ஆனந்தசிங்கை நோக்கி,

"நான் கோருவதெல்லாம் கூடி ஒன்றுமட்டுமே. அதாவது அப்பெண் எங்கே இருக்கிறாள். நான் அவளைப் பார்க்கட்டும், ஒவ்வொரு தந்தையும் தன் புத்திரியைக் காணச்சுதந்திர முடையவனே?" என்றான்.

ஆனந்தசிங்:—"பேசாமல் வாயை மூடிக்கொண்டிரு. வீண் குழப்பம் செய்வதில் ஒரு பயனுமில்லை. உன் நாடகம் முடிந்து விட்டது. இனி பேசாமல் மரியாதையாக அடங்கியிருந்தால் தப்பினாய். தெரிகிறதா? நீ உன்

மகளைப்பார்ப்பாய். ஆனால் அவளைக் காப்பாற்று அவள் கணவன் இங்கு வந்தபின்பே காண்பாய்," என்றான்.

இளைய கள்ளன்:—"ஆ! அவள் கணவனா? ஓகோ! உனக்கு அச்சங்கதிகளெல்லாம் தெரியும்போலிருக்கிறது! அவன் மிக்க பணக்காரனென்றும் பெருமைக்காரனென்றும் கூறுகிறார்கள், அவன் வந்து நாங்கள் நாய்கள் போல் இங்கு கட்டிப்போடப்பட்டிருப்பதைப் பார்த்து, தன் மாமனாரும் தன் மனதிற்கு எவ்வளவு நன்றாக இருக்கிறதென்று கூறட்டும்," என்றான்.

ஆனந்தசிங் "அவர் வருகிறார்" என்றான். ஏனெனில் அவன் முன்னமே இரகசியமாய் பூபாலப் பிள்ளையின் வீட்டிற்கு ஆளனுப்பியிருந்தான். ஆகையால் தைரியத்தோடு அவர் வருவார் என்று கூறிவிட்டு, "நீங்கள் இப்போது சிறைச்சாலைக்குப் போய் அங்கு காலத்தைக் கழிப்பதே நலமென்று அவரே கூறுவார்," என்றான்.

சிறிய கள்ளன் "நீ அழிந்து போவாய். ஆனால் அவன்—" என்றான். யாவும் கேட்டுக்கொண்டிருந்த ஜெயசிங் "ஆனால் அவன்....என்றால் என்ன?" என்று கூறிக்கொண்டே நின்றான். உடனே கதவு திறக்கப்பட்டதும் பூபாலப்பிள்ளை வெளுத்த முகத்தோடும் கலவரமடைந்த மனதோடும், ஒருவிதக் குழப்பத்தோடு அறைக்குள் வந்தார்.

பூபாலப் பிள்ளையைக் கண்டதே இரண்டு கள்ளரும் தங்கள் தலை குனிந்த நிலைமையிலிருந்து எழுந்து மெதுவாய் உட்கார்ந்தார்கள். ஏனெனில் பூபாலப்பிள்ளை தன் மாமனாரும் மைத்துனனும் சிறைவாசம் செய்வது தனக்கு

அகௌரவத்தை உண்டாக்குமென்று கருதித் தங்களை எப்படியாவது காப்பாற்றி விடுவான் என்ற எண்ணமேயன்றி வேறொன்றுமில்லை. ஆனால் அவர்களுடைய துஷ்டகுணமும் தங்கள் அக்கிரம நடக்கையில் அலட்சியமும் கொஞ்சங்கூட அப்போதும் அவர்களை விட்டொழியவில்லை. இச்சமயத்தில் மட்டும் தங்கள் தலையெழுத்து அவனிடம் இருப்பதாக மட்டும் அறிந்துகொண்டிருந்தார்கள்.

சின்னக்கள்ளன்:—"மைத்துனரே! எப்படி இருக்கிறீர்கள்?" என்று அதிகப்பிரசங்கித்தனமாய்க் கேட்டான்.

அம்மொழிகளைக் கேட்ட பூபாலப்பிள்ளை மிக்க வருத்தமும் நாணமுமடைந்து நாற்புறமும் நோக்கினார். அவர் ஆனந்தசிங்கை நோக்கி "என் மனைவி?" என்றார்.

ஆனந்தசிங்:—"உமது மனைவி சமீபத்திலுள்ள அறையில் க்ஷேமமாகவே யிருக்கிறாள். தாங்கள் அனுமதி அளித்தால் அந்தம்மாளை வரவழைக்கிறேன்," என்றான்.

பூபாலப்பிள்ளை:—"வேண்டாம் வேண்டாம். இதற்குள் வேண்டாம். நான் முன்னே இச்சண்டாளர்களைக் கண்டு இவர்கள் சம்பந்தத்தால் என் மனைவி எவ்வளவு மனவருத்தமடைவாள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும்," என்றார்.

இராஜாமணியின் தந்தை "உன் மனைவி—அவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? இப்போதிருக்கிற விஷயம்: இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? எங்களை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற என்ன செய்யப் போகிறாய் என்பதே," என்றான்.

பூபாலப்பிள்ளை:—"நான் அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் செய்யமாட்டேன். நீங்கள் இப்போது அடையவேண்

டிய தண்டனைக்குப் பூரணமாய்ப் பாத்திரவான்களே. நான் இருந்தாலும் இல்லாவிடினும் உங்கள் தண்டனைகளை நீங்கள் பூரணமாக அனுபவிக்க வேண்டியவர்களே," என்றார்.

சின்னக் கள்ளன்:—"இந்த விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தால் மிக்க வேடிக்கையாக விருக்கும்," என்றான்.

ஜெயசிங்:—"பத்திரிகைகள் இதைப்பற்றி ஒன்றுமே வெளியிடா. அவைகளுக்கு இச்சங்கதி தெரியவே தெரியாது இந்த இடத்தை விட்டு நாம் செல்லுமுன் உங்களுக்கும் பூபாலப்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் இருக்கும் எல்லாச் சம்பந்தமும் அடியோடு மண்ணில் புதைக்கப்படவேண்டும். தெரிகிறதா? அவர்களைப் பற்றிய ஒரு வார்த்தைகூட உங்கள் வாயினின்றும் வெளிவரலாகாது. இந்த வினாடியிலிருந்து; தெரிகிறதா? பத்திரம்! நான் இதை ஒரு கண்டிப்பான நிபந்தனையாக வைத்திருக்கிறேன். இதிலிருந்து நீங்கள் ஒரு மயிரிழைகூடத் தவறலாகாது," என்றான்.

கள்ளர் இருவரும் ஏககாலத்தில் ஒரே குரலாய் "ஓகோ! நீ நிபந்தனை வைத்திருக்கிறாயா? அப்படியா சங்கதி? எங்களுக்கு நிபந்தனைகள்கூற யார்? யார் நீ? நாங்கள் உன் நிபந்தனையின்படி நடப்போமென்று நீ என்ன தைரியத்தால் கருதுகிறாய்? நீ எங்களைப் பழையபடி நாங்கள் இருந்த சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடலாமே அன்றி வேறென்ன உன்னால் முடியும்? நாங்கள் அதற்கு அஞ்சியிருக்கும் ஆசாமிகளென்று நீ கருதினால் நீ மூடனே," என்றார்கள்.

ஜெயசிங் அவர்களை மிக்க அலட்சியமான பார்வையாய் நோக்கி "ஏ! முழு மூடர்களே! இவ்வளவுதானா உங்

கள் புத்தி. உங்கள் மனதில் நீங்கள் செய்த இதற்குமேற்பட்ட பயங்காரமான குற்றம் எதுவும் உறுத்தவில்லையா? இதென்ன பாருங்கள்!" என்று தன் மடியிலிருந்து ஒரு மோதிரத்தை யெடுத்து அவர்கள் கண்முன் காட்டினன். அந்த மோதிரம் ஜெயசிங் அவர்கள் வசித்திருந்த தனிவீட்டில் கெகிடித்தியின் சாம்பரிலிருந்து கண்டெடுத்த மோதிரம். அது அவர்கள் கொலைசெய்த ஒரு ஹாக்கரின் கையிலிருந்த மோதிரம்.

அந்த மோதிரத்தைக் கண்டதே தந்தை மகன் இருவரும் அதைப் பிரமையோடும் திகிலோடும் உற்று நோக்கினார்கள். மறு நிமிஷம் அவர்களின் ஆணிகாரமும் அகங்காரம் பொருந்திய வார்த்தைகளும் எங்கேயோபோய் விட்டன. இருவரும் கருடனைக்கண்ட நாகக்குட்டிகள்போல் ஒடுங்கி விட்டார்கள். அவர்கள் முகங்கள் சவம்போல் வெளுத்து விட்டன. மிரட்சியடைந்த பார்வையோடு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். ஏனெனில் அடடா! நாம் யாருக்கும் தெரியாதென்று எண்ணியிருந்த இப்பயங்கரமான இரகசியம் இவனுக்குத் தெரிந்து விட்டதோடு அத்தாட்சியோடு இவன் அதை அறிந்துகொண்டிருக்கிறானே என்று உணர்ந்து கொண்டார்கள்.

ஜெயசிங் அவர்களை நோக்கி "நீங்கள் உங்கள் சிறைச்சாலை உடைகளைக் கொளுத்தினீர்களே அந்த இடத்திலிருந்து நான் இதைக் கண்டெடுத்தேன். இது அற்ப விஷயமே. ஆனால் இதைக்கொண்டே நான் உங்களைத் தூக்கு மரத்திற்கு அனுப்பிவிடக் கூடும். இது விளையாட்டல்ல. அந்த ஹாக்கர்—," என்றதே.

பெரிய கள்ளன்:—"போதும் போதும். அந்த மோதிரத்தை வெளியில் எறிந்து விடு. நீங்கள் எந்தச் சங்கதி

வெளிவராவாகா தென்று கருதுகிறீர்களோ அந்தச் சங்கதியைப் பற்றி நான் ஒன்றும் கூறவே மாட்டேன். நான் அத்தகைய முட்டாளல்ல," என்று ஆவன் இதுகாறும் காட்டாத அவ்வளவு மிருதுவான மாதிரியாய்த் தாழ்ந்த குரலில் கூறினான்.

ஜேயசிங் :—"அப்படியே முட்டாளல்ல. இந்த மோதிரமும், நீங்கள் அந்தத் தனி வீட்டில் இருந்தபோது அங்கு நடந்த சில சம்பவங்களின் அத்தாட்சிகளும் என் வசத்தி லிருக்குமட்டும் உங்கள் உயிரே என் கரத்திலிருக்கிற மாதிரிதான். அத் தனி வீட்டில் நீங்கள் செய்த காரிய மனைத்தும் சமீபகாலத்தில்தான் எனக்கு அத்தாட்சியோடு கிடைத்தன. அந்த வீட்டில் பூபாலப் பிள்ளையும் ஒரு இரவு தங்கியிருந்தார். அந்த இடத்திலிருந்து எவ்வளவு சமீபத்தில் ஒரு செங்குத்தான பாதாள மிருக்கிறதென்பதை அவரும் அறிவார்....," என்றதே.

சின்னக் கள்ளன் :—"நீ ஏன் பேசமாலிருக்கிறாய். நாம் ஒன்றையும் வெளியிடலாகாதென்று அவர்கள் கருதுவதாயின் அதைக் கூறட்டும். அதை விட்டு வீண் சங்கதிகளை யெல்லாம் ஏன் கூறவேண்டும்?," என்று தன் தந்தையை நோக்கிக் கூறினான்.

அச்சமயம் ஆனந்த சிங் தட்டென்று அவர்கள் முன்னே வந்து நின்று அவர்களைப் பார்த்த பார்வை அவர்கள் வாயை உடனே மூடிவிட்டது. ஆனந்தசிங் அவர்களை நோக்கி, "இதோ பாருங்கள். எங்கள் ஏற்பாடுகள் என்ன வென்பதைக் கூறிவிடுகிறேன். நீங்கள் திரும்பிச் சிறைச்சாலைக்குச் சென்று உங்களுக்கு விதித்திருக்கும் தண்டனையை அனுபவிக்க வேண்டியதே. அதற்கு வேறு வழியில்லை. ஆனால் நீங்கள் மரியாதையாக நடந்து

கொண்டு, உங்களுக்கும் பூபாலப் பிள்ளைக்கும் இருக்கும் சம்பந்தத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் வெளியிடாம லிருக்கிறவரையில் மாத மாதம் ஒரு பாங்கியில் ஒரு தொகைப் பணம் கட்டப்படும். அது எந்தப் பாங்கி என்று அவர் பின்னால் கூறுவார். நீங்கள் உங்கள் சிறைவாசத்தைக் கழித்துவிட்டு வெளிவரும்போது சேர்ந்திருக்கும் அத் தொகையையும் அதற்குக்கூடிய வட்டியையும் பெற்றுக் கொள்ளலாகும். நீங்கள் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக் கிறீர்களல்லவா?," என்று கூறிவிட்டுப் பூபாலப்பிள்ளையை நோக்கி நீர் இதற்கு ஒப்புக்கொள்கிறீர் அல்லவா?," என்றான்.

பூபாலப்பிள்ளை "அப்படியே செய்யத் தடையில்லை. மாதாமாதம் இருநூறு ரூபாய் பாங்கியில் கட்டிவிடுகி றேன்," என்றார்.

அச்சமயம் கள்ளரிருவரும் கண்களால் சமிக்கை செய்து கொண்டதைக் கவனியாதவன்போல், ஆனந்தசிங் அவர்களைநோக்கி, "ஆனால், நீங்கள் இத்தகைய பூபாலப் பிள்ளை என்ற ஒருவர் இருப்பதாக உங்களுக்குத் தெரியு மென்றாவது அவருக்கும் உங்களுக்கும் அறிமுகமென்றா வது, எவ்வித சம்பந்தமேனும் இருக்கிறதென்றாவது யாரிடமேனும், ஒரு வார்த்தை யாயினும் சரி, கூறியதாய் எங்கள் செவியில் வீழ்ந்தாலோ பாங்கியில் கட்டப்பட்ட பணத்தில் ஒரு இம்மிகூட உங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமல்ல. அப்பழைய சங்கதி தக்க அத்தாட்சியோடு வெளிக்குக் கொண்டுவரப்படும். அதுவும் உங்களுக்கு வாய் திறந்து ஒரு வார்த்தையேனும் பேச அவகாசம் கிடைக் காதபடி திடீரென்று இடிவிழுந்த மாதிரியாய் உங்கள்மேல் விழும். இதை வீண் மிரட்டலென்றாவது வேடிக்கை என்றா வது கருதி மோசம் போகவேண்டாம். நான் ஒருபோதும்

னன்றால் செய்யமுடியாத அல்லது எனக்குச் சந்தேகமாகத் தோன்றுகிற சமாசாரத்தைக் கூறுவதில்லை. இதை நன்றாக மனதில் வையுங்கள்," என்றான்.

கள்ளரின் முகத்தில் முன் இருந்த அகங்காரமாகிய பார்வை அடியோடு மறைந்துவிட்டது. அவர்கள் இப்போது மிரட்சியோடு ஒருவரை யொருவர் நோக்கி என்ன சொல்கிறாய் என்று வினவுகிறமாதிரி பார்த்தார்கள். ஆனந்தசிங் கூறிய மொழிகள் அவர்கள் மனதில் ஆழ்ந்து பாய்ந்தன வென்று நன்கு புலப்பட்டது.

மூத்த கள்ளன் அதிருப்தியோடு ஆனந்தசிங்கை நோக்கியபடி, "நாங்கள் எங்கள் இரகசியத்தை வெளியிடா திருந்தால் நீங்கள் மூவரும் உங்களிடம் சிக்கியிருக்கும் இரகசியத்தை வெளியிடாம லிருப்பதாய் வாக்களிக்கிறீர்களா?," என்றான்.

ஆனந்தசிங்:—"நாங்கள் உண்மையாகவே அவ்வாறு வாக்களிக்கிறோம்," என்றான்.

பெரியகள்ளன் :—"சரி. அப்பெண்ணைக் கூப்பிடுங்கள். நான் செல்லுமுன் அவளையொருமுறை பார்க்கட்டும். நாங்கள் ஒன்றும் கூறமாட்டோம். அவள் என் மகள். நான் அவளிடம் சந்தோஷமாய் விடைபெற்றுக் கொள்ளா விட்டாலும்——————," என்றான்.

பூபாலப்பிள்ளை :—"இந்த ஆள் தன் புத்திரியைப் பார்க்கட்டும். நான் அப்படி விரும்புகிறேன்....," என்றார்.

ஜெயசிங் உடனே அறையைவிட்டு வெளியிற் சென்றான். அவன் நேராகத் தங்கம்மாளையும் இராஜாமணியையும் மறைத்துவைத்திருக்கும் அறைக்குச் சென்றான். அச்சமயம் இராஜாமணி குனிந்தபடி தன் முகத்தைக் கரங்களில் வைத்து மறைத்துகொண்டு ஆயரத்தோடு கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவள் மனம்

சொல்லொணா வேதனையைப் பட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கம்தான் இக்கட்டிலிருந்து மீட்கப் படுவதாயினும் மறு பக்கம் தன் தந்தையும் தமையனும் சிறையாக்கப்படப் போகிறார்கள். இதனால் அவள் தன் விடுதலைக்காக அடையவேண்டிய சந்தோஷத்தைக் காட்டினும் தன் சுற்றத்தார்க்காக அடையும் துயரம் அதிகமாகவே இருந்தது.

ஜெயசிங் அவளை நோக்கி "அம்மா! நான் கூறியபடி அவர்கள் சிறை செய்யப்படும் விவகாரம் இரகசியமாகவும் சற்றும் குழப்பமில்லாமலுமே நடந்தது. உன் தந்தை எங்களோடு கூட வருமுன் உன்னைக் காண விரும்புகிறார். நீ வருகிறாயா?" என்றான்.

இராஜாமணி:—"ஆனால் என்...என் கணவர்? அவர் எங்கே? கூடத்தில் நிச்சயமாய் அவர் காலடிச் சத்தத்தைக் கேட்டேன்...," என்றாள்.

ஜெயசிங்:—"உன் கணவர் உன் தந்தையும் தமையனும் இருக்கும் அறையிலிருக்கிறார். அவர் விருப்பத்தின் படிதான் நான் உன்னை வந்தழைக்கிறேன்," என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே அவள் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாகியது. அச்சமயம் அவள் மனதில் அனேக விஷயங்கள் கிளம்பின. அவள் மனோ நிலைமை தாம் இன்னதென்று விவரிக்கக் கூடிய நிலைமையிலில்லை. அவள் பார்வை தன் கணவனிருக்கும் அறையின்மேல் நாட்டப்பட்டது. மனம் அங்கும் தன் தந்தையும் தமையனும் இருக்கும் இடங்கள் மேலும் அலைந்தது. அதனால் அவள் பிரமையடைந்தவள் போலும் உன்மத்தம் பிடித்தவள் போலும் மரம்போல் அசைவற்று நின்றாள்.

ஜெயசிங்:—" நீ வரமாட்டாயா?" என்றான். அவள் "நான் என் தந்தையைக் காணவருவேன். ஆனால்.... ஆனால்...." என்று முணுமுணுத்தாள்.

மறுமொழி அவள் நடுங்கிக்கொண்டே பின்னிடைந் தாள். ஏனெனில் அச்சமயம் யாரோ அங்கு வரும் காலடி சத்தம் கேட்டதும், மறு நிமிடம் பூபாலபிள்ளை அறைக் குள் வந்தார். இராஜாமணி "ஆ! என் கணவர்..." என் றாள். அதற்குமேல் பேச அவளுக்கு வாய் வரவில்லை. உண்மையில் அவள் தன் கணவன்மேல் சத்தியமான அன் புடையவள். அதனால் தன் கணவனை விட்டுப் பிரிந்தது அவள் மனதிற்கு பெரிய வேதனையாகவே யிருந்தது. தன் கணவன் கௌரவம் பொருந்திய குடும்பத்தில் பிறந்தவன் என்றும் இப்போதும் கௌரவமான நிலைமையிலிருக்கிறான் என்றும் அவள் நன்றாக உணர்ந்து கொண்டாள். அதோடு தன் குடும்பம் தாழ்ந்த நிலைமையிலுள்ளதென்றும் அதனி லும் தன் தந்தையும் தமையனும் நடந்து கொண்ட மாதிரி யால் அத்தகைய குடும்பத்தில் பிறந்த பெண்ணை மணம் புரிந்த சங்கதி வெளிவந்தால் தன் கணவனுக்கு மிக்க அகௌரவம் நேரிடுமென்றும் அவள் நன்றாக உணர்ந்து கொண்டாள். இக்காரணங்களால் தன்னைப் பூபாலப் பிள்ளை மணம் புரிந்த சங்கதியே வெளிவராமலிருப்பதே மிக்க நலமென்பது அவள் அபிப்பிராயம். இக்காரணங் களால் தன் கணவன் அறைக்குள் வந்ததைக் கண்டதே என்ன கூறுவதென்று ஒன்றும் தோன்றாமல் இராஜாமணி பிரமையடைந்து நின்றாள்.

பூபாலப்பிள்ளை:—"நீ பேசாமலிருப்பது நியாயமே. நானே முதலாவதாக என் சமாதானங்களைக் கூறி உன் மன் னிப்பைப் பெறவேண்டும்," என்றார்.

இராஜாமணி:—"இல்லை யில்லை. தாங்கள் இங்கு வந்ததே போதுமானது. அப்படித் தங்களுக்கு என்மேல் வெறுப்பிருந்தால்....," என்றதே,

பூபாலபிள்ளை மனம்பதைத்து "என்ன என்ன? வெறுப்பா?—எனக்கு உன்மேல் வெறுப்பா? இராஜாமணி! நீ என் மனைவி. இப்படியமைந்ததற்காக நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன். என் பூரண அன்பையும் என் வாழ்நாள் முழுமையும் உள்ள சுகத்தையும் என் செல்வத்தையும் யாவையும் உனக்கு அற்பணம் செய்யவே இப்போது இங்கு வந்தேன். நீ இதுகாறும் என்மேல் பூரண அன்பையே வைத்திருந்தாய். இப்போது என்னை மன்னித்துவிடு. உன் அன்பே எனக்கு வேண்டியது," என்று தன் கரத்தை நீட்டினார்.

அவர் மொழிகளைக் கேட்டதே அவள் முகத்தில் சந்தோஷமானப் பிரகாசம் உண்டாயிற்று. அவள் மனம் பூரித்தது என்று அவள் முகக்குறியால் தெரிந்தது. ஆயினும் அவள் தன் கரத்தை அவரிடமளிக்கவில்லை. அவரை நோக்கி "தாங்கள் இச்சமயம் இதைக் கூறுகிறீர்கள். என் தந்தையும் தமையனும் கரங்கள் கட்டப்பட்டு கள்ளர்கள் என்று பகிரங்கமாய்ச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் படும் சமயத்தில்—அதோடு இத்தகைய அவமானமான தண்டனைக்கு அவர்கள் பாத்திரவான்களே யென்றும் நான் அவர்கள் சுற்றத்தாளென்றும் நன்றாகத் தெரிந்திருந்தும் இம்மாதிரி கூறுகிறீர்களா?" என்றாள்.

பூபாலபிள்ளை:—"எனக்கு அவர்கள் நடக்கைகளைப் பற்றி அக்கறையில்லை. நான் மிக்க வியாகூலத்தோடு தேடிக் கொண்டிருந்த என் அன்பார்ந்த மனைவி அகப்பட்டதே எனக்கு விசேஷம். இப்போது அவளை யன்போடு ஏற்றுக்கொண்டு பாதுகாப்பதே என் ஆவல்," என்றார்.

இராஜாமணி:—"இப்போது என்ன வந்தாலும் வரட்டும். நான் மறுபடி அயரத்தை அனுபவிக்கலாகாது,"

என்று தலை குனிந்தபடி தாழ்ந்த குரலாய்க் கூறினான். ஆனால் மறுவினாடி நிமிர்ந்து நின்றாள். அவளிடம் ஒரு புது மாறுதல் உண்டாயிற்று. உடனே பூபாலப்பிள்ளையை நோக்கி,

"என் கணவரே! நீர் மிக்க நல்ல உள்ள முடையவர். எவ்வளவு நல்லவரென்பது எனக்குத்தான் தெரியும். நான் தான் அதை அறியக்கூடும். நான் கடந்த ஒரு வருடமாக உமது வீட்டிலிருந்து அங்கு நடக்கும் எல்லா விவகாரங்களையும் கவனித்தேன். தாங்கள் ஆதிமுதல் எத்தகைய அந்தஸ்தில் இருந்து வருகிறீர் என்பதை நன்றாய் அறிந்து கொண்டேன். தங்கள் குடும்பப் பெருமையைச் சரியாக உள்ளபடி உணர்ந்து கொண்டேன். ஆனால் தங்கள் நற்குணத்தால் பின்னால் தாங்கள் ஆயுள் முழுமையும் துயரப் படும்படியான காரியத்தைச் செய்யலாகாது.

தாங்கள் அப்படிச் செய்யாவிட்டால், எழ்மை நிலைமையில் இருந்து அதன் பயன்களை அனுபவித்திருக்கும் நான் இரண்டு பேர்களுக்குரிய தைரியத்தைக் காட்ட வேண்டி யிருக்கிறது; காட்டுவேன். பின்னால் தங்களுக்கு அவமானத்தையும் வியாகூலத்தையும் உண்டாக்கத் தக்க காரியத்தில் பிரவேசிக்கும் படித் தங்களை ஒருபோதும் விட மாட்டேன். தாங்கள் என்னைத் தங்கள் மனைவியாய் மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்பது உண்மையே. ஆனால் அதனால் எத்தகைய துயரத்தை யேற்றுக்கொள் கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா?" என்றாள்.

பூபாலப்பிள்ளை:—"ஆகா நான் உணர்கிறேன். ஆனால் துயரத்தை ஏற்றுக்கொள்வதாய் நான் உணரவில்லை. என் மனவேதனை ஒழிந்த தென்பதையே நான் உணர் கிறேன்," என்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே இராஜாமணியின் மனம் மிக்க வேதனையடைந்தது. மனோ வேதனையால் அவள் புருவங்களை நெளித்துக்கொண்டு திகைப்படைந்தவள் போல் நின்றாள். தன் சம்பந்தத்தால் தன் கணவனுக்குப்பின்னால் அகௌரவத்தால் மன வருத்தம் நேரிடலாகா தென்பதே அவள் எண்ணம். தன் தந்தை தமையன் இவர்கள் நடக்கையால் தன் உத்தம குணமுடைய புருடனுக்கு வியாகுலம் நேரிடலாகா தென்பதே அவள் பிரியம்.

21-வது அத்தியாயம்

இராஜாமணி அவர் அருகில் சென்று, நாங்கள் கூறுவதும் ஏற்றுக்கொள்வதும் என்ன தெரியுமா? பூர்வீக முதல் கௌரவத்தோடு வாழ்ந்த குடும்பத்திற்கு நீங்காத அவமானம், குற்றம் பொருந்திய அகௌரவ நடக்கைகளை மறைத்து வைத்துக்கொண் டிருக்கவேண்டிய கஷ்டம், எதிர் காலத்தில் நெடுநாட்கள் வரையில் சிறைச்சாலை சம்பந்தமான விஷயங்கள் நினைவிற்கு வராமலும், அதைப்பற்றிப் பேசாமலும் எச்சரிக்கை யெடுத்துக் கொள்ளவேண்டிய கஷ்டம், அன்பார்ந்த சதி புருடர்கள் இருவரும் சம்பாஷிக்கையில் சில விஷயங்களைப்பற்றிப் பேசாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தந்தைக்கும் புத்திரிக்கும் தமையனுக்கும் தங்கைக்கும் இருக்கவேண்டிய அன்பின்படி அப்போதைக்கப்போது உண்டாகும் நினைவை வெளியிடாமல் மன வேதனைப்பட வேண்டும். அதைப்பற்றிய சங்கதிகள் வாயினின்றும் வெளிவரலாகாது. நான் உண்மையைக் கூறுகிறேன். கடவுளே

என்னை மன்னிக்கவேண்டும். இயற்கையாய் நமக்குள்ள பரிசுத்தமான எண்ணங்களையும், சிந்தனைகளையும், சம்பா ஷணைகளையும் மறைத்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

மனதில் கொடிய விஷம் பொருந்திய நாகமென்று கொண்டிருப்பது போன்ற வேதனையை யனுபவித்துக் கொண்டிருக்கும் மனைவி—எப்போதும் பிறப்பிலிருந்துதான் அனுபவித்துக் கொண்டிருந்த பெருமை கௌரவம் முதலி யவற்றை மறந்துவிட்ட புருடன்—இன்னும் மக்கள்—ஆம்.—மக்கள் உண்டாகலாகும். எப்படிப்பட்ட மக்கள்? பெருமையோடு நினைக்கவேண்டியதும், கூறவேண்டிய தும், பேசவேண்டியதுமான பாட்டன், அம்மான் என்ற வார்த்தைகளை நினைக்கக்கூடாத மக்கள் - அப்படி அவர்க ளைப்பற்றிய சங்கதியைக் கேட்டால் அம்மக்கள் நாணத் தோடு தலை குனியவேண்டும். அவர்கள் மதலைச் சொற்க ளால் பெற்றோரையும் சந்தோஷமனைத்தும் எள்ளளவிற் கும் பயன் படாமற்போம்," என்றாள்.

பூபாலன்:—"இராஜாமணி! உன் தந்தையும் தமையனும் தங்கள் மனப்படிச்செல்லவேண்டிய வழியில் செல்லு தாகவும் நன்மைப்பற்றி எவ்விதப் பிரஸ்தாபமும் செய்வதில்லையென்றும் ஒப்புக்கொண்டார்கள். உன் விஷயத்தில் அதாவது நமது விஷயத்தில் இனிப் பிர வேசிப்பதில்லை யென்று கண்டிப்பாக வாக்களித்து விட்டார்கள். நீ கூறுகிறபடி அவர்களைப்பற்றிய சிந்தனை உன் மனதி லிருக்குந்தான். ஏனெனில் அவர் கள் உன் நெருங்கிய சுற்றத்தார்கள். அதிலும் தந்தை யும் தமையனுமாக இருக்கிறார்கள். ஆகையால் நீ அவர்களைப் பற்றிய விஷயங்களை மறக்க முடியாது. ஆனால் இவ்விஷயம் நமது குடும்பத்தில் இடையூறு

உண்டாக்கவேண்டிய அவசியமேயில்லை. நீ எங்கிருந்து வந்து என்னை மணம்புரிந்து கொண்டாயென்றும், நீ கள்ளனென்று சிறையிலிருக்கப் பட்டவர்களுடைய சுற்றத்தானென்றும் ஒருவரும் அறிய வேண்டியதே இல்லை. ஒரு காலும் அறிய மாட்டார்கள். ஆகையால் நீயும் கடந்த விஷயங்களையும் நாம் அனுபவித்த அயாத்தையும் கருதி, அதற்கு ஈடு செய்வதற்காகத் தயவு செய்து ஒரு காரியம் செய்யலாகாதா? அதாவது நீ அத்தகைய மனிதர்களின் சுற்றத்தான் என்பதை மறந்திருக்கலாகாதா? அதனால் என் மனதிற்கு நிம்மதியை உண்டாக்கலாகாதா?'' என்றார்.

யாவும் கேட்டபின் அம்மாது “என் அன்பார்ந்த கணவரே! நான் எத்தகைய புத்தியும் தைரியமும் உடையவளாயினும் கடைசியில் ஒரு ஸ்திரீயே. எப்படியிருந்தாலும் பெண்கள் மனம் பலமுடையதல்ல. நான் அன்பான மொழிகளால் மனமிளக்க மடைந்து விடுவேன். அது என்போன்ற மாதர்க்கு இயற்கையே யாகும். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் நான் மிக்க தைரியமுடையவளாக இருக்கிறேன். அதாவது, நான் கௌரவப்படுத்த வேண்டிய மனிதர்க்கு—அதாவது என் கணவருக்கு—என் கடமையினின்றும் தவறுமலிருக்கவேண்டிய விஷயத்தில் மட்டும் நான் பூரண தைரியமுடையவளாக இருப்பேன். சுமார் பதினேரு மாதங்களுக்குமுன் நான் உங்களை விட்டுப் பிரிந்தேன். ஏனெனில் நீங்கள் அவ்வாறு கோரியதோடு என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அப்படிச் செய்யவேண்டி யிருந்தது. இன்று என் சந்தோஷம் முழுமையும், தாங்கள் எனக்களிக்கும் செல்வம் பொருந்திய அந்தஸ்தையும் யாவற்றையும் நிராகரித்து விடச் சித்தமாயிருக்கிறேன். ஏனெனில், நீர் இருக்க

வேண்டிய கௌரவமான பதவியும், நீர் அனுபவிக்கவேண்டிய சுகமும் என்னை இவ்வாறு செய்யும்படிக் கட்டாயப் படுத்துகின்றன," என்றாள்.

பூபாலப்:—இராஜாமணி! என் வாழ்நாட்களின் சந்தோஷத்தைப்பற்றியா கூறுகிறாய். நீ மட்டும் நான் உன்னை எம்மாதிரி காதலித்திருக்கிறேன் என்பதை மட்டிலும் அறிவாயாயின்—" என்றதே,

இராஜாமணி:—"நான் ஒரு சமயம் இணங்கி விடலாம். ஆனால் நான் உம்மை ஒரு பெண் காதலிப்பதுபோல் காதலிக்கிறேன். எத்தகைய பெண்? நினைத்தாலும் தேகமும் மனமும் நடுங்கும்படியான இடத்திலிருந்து சொல்லொணா மன வேதனை யடைந்துகொண்டு அகௌரவம் அவமானங்களால் துயரப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பெண் முதல் முதல் தன் மனதிற்குச் சந்தோஷத்தையும், சுகத்தையும் திம்மதியையும் செல்வத்தையும் கொடுத்த ஒருவர்மேல் எத்தகைய அன்பு வைக்கவேண்டுமோ அத்தகைய அன்புதான் நான் தங்கள் மேல் வைத்திருக்கிறேன். அத்தகைய கருணைக்கு நான் பதில் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்," என்றாள்.

பூபாலப் பின்னை உன் தந்தை தமையன் இவர்களது நடக்கைகளால் எனக்கு அகௌரவமுண்டாகுமென்று நீ அஞ்சுவதாகக் கூறுகிறாய். இருக்கட்டும். நீ என்னை மணம்புரியும்போது உன் தந்தையும் தமையனும் இப்படிப் பட்டவர்கள் என்று தெரிந்திருந்து தானே மணம் செய்து கொண்டாய். இப்போது அதைப்பற்றி ஏன் அஞ்ச வேண்டும்.

இராஜாமணி:—"ஆம். ஆம். அது உண்மையே. அச்சமயம் காதல் என் கண்களை மறைத்து விட்டது. மேலும்

அப்போது என் தந்தையும் தமையனும் தண்டனையடைந்த குற்றவாளிகளாக ஆகியிருக்கவில்லை. பணத்தால் தூண்டப்பட்டுக் குற்றமான காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அத்தகையவர்களை எப்போது விட்டுப் பிரிந்து விடலாமோ வென்று என் மனம் ஆவல் கொண்டிருந்தது. உம்மை மணம் செய்து கொண்டதே அவர்களை அடியோடு விட்டுப் பிரிந்து விட்டோம். இனி அவர்களை நாம் காணமாட்டோம். என்று கருதியிருந்தேன். இத்தகைய சம்பந்தங்கள் அப்படிச் சுலபத்தில் கத்தரித்துக்கொள்ளத் தக்கவை யல்லவென்று தெரிகிறது. அவர்கள் என்னைக் கண்டுபிடித்து விட்டார்கள். மறுபடி கண்டு பிடிப்பார்கள்—" என்றபோது,

பூபாலப்பிள்ளை:—"இல்லை யில்லை; ஒருபோது மில்லை. நான் அதைப்பற்றி ஜாக்ரதை யெடுத்துக் கொண்டேன். உன்வரையில் பூமிவெடித்து அவர்களை விழுங்கி விட்டமாதிரியே," என்றார்.

மனைவி.—"ஆயினும் இதனாலுண்டாகத்தக்க அவமானம்? அதைத் தாங்கள் கவனிக்கவில்லை போலும் அது இருக்கவே யிருக்கிறது. அது இருக்குமட்டும் நான் எங்கிருந்தால் அது என்னை மட்டுமே தாக்குமோ, தங்களைத் தாக்காதோ, அங்குதான் நான் இருக்க வேண்டும். நான் உங்களை அதிகமாக விசுவாசிக்கிறேன். தங்களை விடக் கடவுள்கூட எனக்கதிகமல்ல இந்த அவமானம், என்னை விட்டொழியுமட்டும் நான் தங்கள் மனைவியென்று கூறிக்கொண்டு தங்களருகில் வரமாட்டேன். மிக்க யோக்கியதையும் கௌரவமும் உயர்ந்த அந்தஸ்தும் உடைய ஒரு பெரிய சீமாட்டி கூடத் தங்கள் மனைவியாயிருக்கத் தாழ்ந்

துவளே யாகும். தங்கள் இனிய குணங்களையும் அன்பையும் என் மனதில் வைத்துக்கொண்டு நான் எங்கேனும் ஒரு இடத்திலிருந்துகொண்டு நற்காரியங்களைச் செய்துகொண்டு என் வாழ்நாட்களைக் கழித்துக்கொண் டிருக்கவேண்டியதே என் கடமையென்று கருதுகிறேன்," என்றாள்.

அவள் அவ்வாறு கூறிவிட்டு உடனே தன் தந்தையும் தமையனும் இருக்கும் அறைக்குச் சென்றாள். பூபாலப் பிள்ளை அவள் கூறியயாவும் பேசாமல் கேட்டுக்கொண்டே யிருந்தவர் அவள் சென்றதே திடுக்கிட்டவர்போல் "சேசே இது நம்மால் சகிக்கக் கூடியதல்ல, இவள்....இவள் அன் மனோ நிலைமையைச் சற்றேனும் அறிந்து கொள்ளவில்லை. ஆம் சற்றும் அறிந்து கொள்ளவில்லை. அவள் மனதில் தோன்றிய விஷயங்களை மட்டுமே கருதி அவற்றையே பாராட்டிக்கொண்டு ஒரு பேய்க்கு அஞ்சுகிறவள்போல் அஞ்சுகிறாள்," என்று கூறி விட்டுப் பக்கத்திலிருந்த ஜெயசிங்கை நோக்கி "ஐயா! தயவுசெய்து எனக்கொரு உதவிசெய்ய வேண்டும்" என்று கூறிக்கொண்டே தமது ஜேபியிலிருந்து ஒரு துண்டுக் கடிதத்தை யெடுத்து அதில் ஏதோ சில வார்த்தைகளை யெழுதி மடித்து, அக் கடிதத்தை ஜெயசிங்கினிடம் கொடுத்து, இதை என் வீட்டிலிருக்கும் தங்கம்மாளிடம் சேர்த்துவிட வேண்டும்" என்றார்.

ஜெயசிங் அக்கடிதத்தை உடனே தன் ஆட்களில் ஒருவனிடமளித்துத் தங்கம்மாளிடம் கொடுக்கும்படி கூறி விட்டுப் பூபாலப்பிள்ளையிடம் சங்கதியைத் தெரிவித்தான். அவர் "நான் எவ்வளவு கூறினும் அவளுக்கு என் மனோ நிலைமை தெரியவில்லை. ஒரு சமயம் தன் போன்ற ஒரு ஸ்திரீயே கூறினால் அப்போது அது அவள் மனதிற்கு விளங்க

லாகும் என்று கருதியே தங்கம்மாளை உடனே வரும்படி எழுதினேன்" என்றார்.

அதன் பிறகு பூபாலப்பிள்ளை தமது மனதிலுள்ள வேதனையைச் சகிக்கக் கூடாதவராய் அந்த அறையில் முன்னும் பின்னுமாய் திரிந்துகொண்டிருந்தார். ஜெயசிங் இனி நாம் இவரருகில் இருக்கலாகா தென்று கருதி இராஜாமணி சென்ற கள்ளரிருக்கும் அறைக்குச் சென்றான்.

ஜெயசிங் அந்த அறைக்குள் செல்லும்போது அங்கிருக்கும் ஆனந்தசிங் சாளரத்தில் நின்றுகொண்டு ஜாடையாய் வெளியில் பார்ப்பவன்போ லிருந்தான். ஜெயசிங் அவனருகிற் சென்றான். அச்சமயம் இராஜாமணி தன் தந்தையை நோக்கி "என் தேகத்தில் உன்னுடைய இரத்தமும் மகா உத்தமியாகிய என் தாயின் இரத்தமும் ஓடுகிறதென்பதை நான் ஒருபோதும் மறக்க முடியாது. என் தலையெழுத்து எப்படி யிருந்தாலும் சரி, நீங்கள் உங்கள் நடக்கைகளால் கவிழ்ந்து கொள்ளும்படிச் செய்த என் சிரசை உலகில் எந்த மூலையில் மறைத்துக்கொண்டிருந்தாலும், உங்கள் பாபத்திற்காக உங்களை மன்னிக்கவேண்டு மென்றும் இனியேனும் நீங்கள் நன்னெறியில் நடக்குமாறு உங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்றும் சர்வஜீவதயாபரராகிய ஆண்டவனை பிரார்த்தித்துக் கொண்டே நான் எப்போதும் உன் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டு மென்று எண்ணி யிருப்பேன்," என்று கூறினாள்.

இன்னொரு தந்தையாக விருந்தால் அவன் என்னதான் கள்ளனாக விருந்தாலும் மனங்கனிந்து கண்ணீர் விட்டிருப்பான். ஆனால் அடவியிலுள்ள துஷ்ட மிருகத்திலும் கொடிய சுபாவமுடைய அம் முரடனோ அப்போதும் ஒரு அடியுண்ட வேங்கைபோல் உறுமினானேயன்றி அவள் வார்த்தைகள் அவன் மனதிற் படவேயில்லை. அச் சமயம்

அவன் கரங்கள் அவன் சுயாதீனத்திலிருந்து ஆனந்தசிங் கும் ஜெயசிங்கும் அருகில் இல்லாதிருந்தால் அத் துஷ்டன் இவளுக்குத் தீங்கிழைத்தே யிருப்பான் என்பதிற் சந்தேக மேயில்லை. அவன் உளறியதைக் கேட்டதே ஆனந்தசிங் கோபமடைந்து தன் ஆட்களை யழைத்து அக் கள்ளரைப் பிடித்துச் செல்லும்படிக் கட்டளையிட்டான். இவர்களைப் பிடித்துக்கொண்டு போகும்போது இராஜாமணி பேசாமல் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் கடைசில் இவர்கள் சென்று கதவு மூடப்பட்டபின் அவள் முகத்தில் ஒருவிதத் தீர்மானமான குறி தோன்றியது. அப்போது அவளும் ஜெயசிங்கும் மட்டுமே அங்கு நின்றுகொண்டிருந் தார்கள். வானத்திலுள்ள சப்தமேகங்களும் குமுறி இடிக் கும் என்று எதிர்பார்ப்பவள் போல் ஒருவித தீரத்தோடு நின்றாள். தன் கணவர் வருவாரென்றும் தான் அவர் கோரிக்கைக்கு எவ்வளவு மறுத்துக் கூறினளோ அவ்வள வுக்கவ்வளவு அவர் தமது எண்ணத்தில் துணிகரம் கொண் டிருக்கிறாரென்றும் இவர் உணர்ந்தே ஒருவித தீர்மானத் தோடு நின்றாள்.

அவள் நெடுநேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை கள்ளர்களைப் போலீஸார் அழைத்துச் சென்றபின் தெருக் கதவு மூடப்பட்டதே பூபாலப் பிள்ளையும், தங்கம்மாளும், இன்னொரு மாதும் அறைக்குள் வந்தார்கள். அந்த மாது மேல் போர்வையும் தடித்த முகமூடியும் அணிந்துகொண் டிருந்தபோதிலும் அவள் உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் ஒரு சீமாட்டி யென்று தெரிந்தது. அவள் கம்பீரமான தோற்ற முடையவளாக விருந்தாள். அவள் பங்கஜம் என்ற மார்த் தாண்டம் சீமாட்டியே.

இவர்களைக் கண்டதே இராஜாமணி மிக்க வியப்பால் திடுக்கிட்டு விட்டாள். "ஆ! தங்கம்மாள்!" என்று

அவனை நோக்கித் தன் கரத்தை நீட்டினான். தங்கம்மாள் அவள் கரத்தை ஆவலோடு பற்றிக்கொண்டு, "என் அன்பார்ந்த எஜமாட்டியே! ஆ! உங்களை மறுபடி சுகமாகவும் க்ஷேமமாகவும் காண்பது என் மனதிற்கு மிக்க ஆனந்தத்தை அளிக்கிறது," என்று மிக்க அன்போடு மொழிந்தாள்.

இராஜாமணி அம்மாளை நோக்கி "நீ என் க்ஷேமத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் ஆவலை நான் அலக்ஷியமாகக் கருதியிருப்பேனென்று எண்ணியிருப்பாய். உண்மையில் உனக்குச் சமாசாரம் அனுப்பக் கூடிய நிலைமையில் நானில்லை. அப்படி நான் செய்யத் துணிந்தாலோ யாருடைய நன்மைக்காக வீட்டைவிட்டு வந்து இத்தகைய துன்பங்களை அனுபவித்துக்கொண் டிருக்கிறேனோ அவருக்கே கெடுதி செய்வதாக முடியும். அதாவது நான் விட்டு வந்த வீட்டின் எஜமானுடைய க்ஷேமத்திற்கும் உயிருக்குமே ஆபத்தாய்முடியும் போலிருந்தது," என்றாள்.

பூபாலப்பிள்ளை அதைக் கேட்டதே "ஆ! என்ன சங்கதி அது? என்னைக் காப்பாற்றுவதற்காகவா நீ என் வீட்டைவிட்டு அவர்களோடு கூடச் சென்றாய்?" என்றார். இராஜாமணி "ஆம் வேறெந்தக்காரணம் என்னை அவ்வாறு செய்யத் தூண்டும்? அவர்கள் என்னைக் கொன்றுவிடுவதாயினும் நான் சட்டை செய்யமாட்டேன். ஆனால் அவர்கள் தங்களுக்குத் தீங்கிழைப்பதாய்ப் பயமுறுத்திய போது....," என்றதே.

தங்கம்மாள் தன் எஜமானியின் கரத்தைப்பற்றிக் கொண்டு, இராஜாமணியின் வலதுகரத்தில் மணிக்கட்டிற்கு மேல் சற்று தூரத்திலிருந்த ஒரு வடுவைக்காட்டி "அம்மா

இதென்ன இது? நான் கடைசியாக உன்னைக்கண்டபோது இது இல்லையே," என்றான்.

இராஜாமணி மெதுவாக "ஆம் இல்லை. நானே என்னைக் கொஞ்சம் காயப் படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று, அது கிடக்கிறதுபோகட்டும்," என்றான்.

பூபாலப் :—"இல்லை. இராஜாமணி! அதை அப்படி விட்டு விட ஒருபோதும் முடியாது. நான் இதைப்பற்றி மட்டுமல்ல—அன்று நீ என் வீட்டைவிட்டுச் சென்று இரவு நடந்த சங்கதிகள் யாவும் பூரணமாக அறிய வேண்டும். நீ அடைக்கலம் புகுந்திருந்த இடத்தில் வந்து அவர்கள் உன்னை எப்படிக் கண்டுபிடித்தார் கள்; நீ இங்கிருப்பது அவர்களுக்கெப்படித் தெரிந் தது? இவையாவும் நானறிய வேண்டும்," என்றார்.

அதன்மேல் இராஜாமணி மிக்க மனவருத்தத்தோடு பின்வரும் சமாசாரங்களைக் கூறத் தொடங்கினான் :—

அவர்கள் முதலில் தங்கள் வீட்டிற்குள் வந்தபோது நான் அங்கிருக்கிறேனென்று தெரிந்தேனும், நான் தங்களை மணம் புரிந்து கொண்டதை அறிந்தேனும் வந்தவர்களல்ல. அவர்கள் எப்படியோ தாங்கள் செல்வவானென்றும் தங்கள் வீட்டில் அதிக பொருளிருக்கு மென்றும் தெரிந்து கொண்டார்கள். அதற்குமேல் வீட்டை வந்து பார்த்தார் கள். புதிதாகச் சேர்க்கப்படும் கட்டிடத்தினருகில் ஏணி இருப்பதைக் கண்டதே, ஆ இவ்வழியாக வீட்டிற்குள் சுலபமாக நுழையலாமென்று அவர்களுக்குப் புலப் பட்டது. பண ஆசை அவர்களைத் தூண்டி உற்சாகமளித் தது.

கடைசியில் அவர்கள் தங்கள் வீட்டில் கொள்ளை அடிப்பதற்கே அங்கு வந்தார்கள் என்று எனக்கு நன்றாகப்

புலப்பட்டுவிட்டது. இதற்காகவே அவர்கள் தங்கள் வீட்டிற்கு எதிர் வாடையிலிருக்கும் ஒரு வீட்டில் ஒரு அறையைச் சில நாட்களுக்கு முன்பே வாடகைக்கு எடுத்துக்கொண்டு தாங்கள் களவாடக் கருதிய வீட்டின் விஷயங்களைப் பற்றிக் கவனித்து வந்திருக்கிறார்கள். அச் சமயம் அவர்கள் கையில் காசில்லை. ஆனால் தாங்கள் பார்த்த அத்தனி வீட்டில் ஒரு இடத்தில் கொஞ்சம் பணம் புதைத்து வைத்திருந்தார்கள். ஆயினும் அச்சமயம் அவர்கள் அங்கு செல்வது ஆபத்தாயிருந்தது. பிறகு என் தமையன் அங்கு போய் வந்ததாகத் தெரிகிறது. வேறு வழி யில்லாமல் அப்படிச் செல்ல நேர்ந்தது.

அன்று அவர்கள் தங்கள் வீட்டிலிருந்த ஏணி வழியாக ஏறி நாம் இருக்கும் அறையின் சாளரத்தினருகில் வந்து நின்றது என்னைப் பார்த்துவிட்டார்கள். நான் எப்போதும் படுக்கைக்குச் செல்லுமுன் விளக்கைத் தூண்டி விட்டுச் சாளரத்தின் திரையைத் தொங்க விட்டுவிடுவது வழக்கம். பிறகு படுத்துக்கொள்ளும்போது தான் தீபத்தை இறக்கி விடுவது வழக்கம். அன்று வழக்கம் போல் திரையை விட்டுவிட்டுப் படுக்கைக்குச் செல்லுமுன் கூந்தலைச் சீவிக்கொண்டிருந்தேன்.

இவர்கள் ஏணி வழியாக ஏறிவந்ததும் என் அறையின் சாளரத்தருகில் நின்று மெதுவாகத் திரையைக் கொஞ்சம் விலக்கப் பார்த்தார்கள். நான் அங்கிருப்பதைக் கண்டு விட்டார்கள். உடனே ஆலோசனை செய்யலானார்கள். அப்போது நான் அங்கு என்ன நிலைமையிலிருக்கிறேனென்று அவர்களுக்குத் தெரியாது. ஏதோ வொருவித வேலைக்காரி நிலைமையிலிருக்கிறேனென்றே எண்ணிக் கொண்டார்கள். ஆயினும் தங்கள் காரியம் நிறைவேறுவதற்கு என்னை ஒரு அனுகூலமான கருவியாக உப

யோசித்துக் கொள்ளலாம் என்று மட்டும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அவர்கள் உடனே எனக்குச் சமிக்கை காட்டித் தாங்கள் பயமின்றித் தாராளமாக உள்ளே வருவதற்காக உடனே தீபத்தை அணைத்து விடும்படி எனக்குக் கட்டளை யிட்டார்கள். அந்தோ கடவுளே! அவர்கள் காட்டிய பயங்கரமான சமிக்கை எனக்கு இப்போதும் என் எதிரில் இருப்பதுபோல் தோன்றுகிறது. அச்சமயம் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. இவர்கள் நாம் இருக்கு மிடத்தைக் கண்டு பிடித்து விட்டார்களே என்பதே எனக்குப் பெருந் திகிலையும் மனக் குழப்பத்தையு முண் டாக்கி விட்டது. இவர்கள் நம்மிடம் ஏதேனும் ஆலோ சனை செய்ய அல்லது நமது உதவியைக் கோர வந்தார்க ளாக்கும் என்றே எண்ணினேன். ஏனெனில் அச்சமயம் அவர்கள் என் இருப்பிடத்தை அறிந்து என்னைக் காணவே வந்தார்கள் என்று நான் எண்ணிக் கொண்டேன். இவர் கள் களவாட வந்த சங்கதி பிறகே எனக்குத் தெரிய வந்தது. ஆகையால் அவர்கள் கோரியபடி தீபத்தை அணைத்துவிட்டேன்.

அவர்கள் உடனே அறைக்குள் வந்து நின்றார்கள். நான் எடுத்ததே "என்னத்திற்காக இங்கு வந்தீர்கள்? என்று கேட்டேன். அவர்கள் என்னை உற்று நோக்கினார் கள். அதன்மேல் நான் என்ன பேசுகிறேன் என்பதை யுணராமலே,

"நீங்கள் இப்படி இரவில், அகாலமான இந்நேரத்தில் அதிலும் தரையிலிருந்து சுமார் ஐம்பதடி உயரத்திலிருக் கும் சாளரத்தின் வழியாக இங்கு வருவானேன்? இது கள்ளத்தனமாக வருகிறமாதிரி அல்லவா? யாரேனும் பார்த்தால் உங்களைப்பிடித்து நங்கள் தப்பித்துக்கொண்டு

வந்துவிட்ட சிறைச்சாலைக்கு மறுபடி அனுப்பி விடுவார்கள் என்று உங்களுக்குப் பீதியில்லையா?" என்றேன்.

அவர்கள் கூறிய பதில் என் மனம் நடுங்கச்செய்தது. அப்போதுதான் அடடா நாம் இவர்களை உள்ளே வரும்படி இடங்கொடுத்ததால் எத்தகைய முட்டாள் தனம் செய்து விட்டோம் என்று என் மனதிற் புலப்பட்டது உடனே எனக்கு நடுக்கமுண்டாயிற்று. அவர்கள்,

"எங்களுக்கு வேண்டியது பணம். அதற்காகவே நாங்கள் இப்போதிங்கு வந்தோம், இப்போது நீ இங்கிருக்கிறபடியால் எங்களுக்கு ஒரு பீதியுமில்லை," என்றார்கள்.

அம்மொழிகளைக் கேட்டதே நான் அலறிவிட்டேன். அவர்களோ அதைச் சட்டை செய்யாமலே, நிதானமாய் "வீட்டிலுள்ளோர்களனைவரும் படுத்துக்கொண்டு சந்தடி அடங்குமட்டும் நாங்கள் பேசாமல் இங்கேயே இருக்கிறோம். அதன் பிறகு பூபாலப் பிள்ளையின் வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவை, முக்கியமாக நகைகள் ரொக்கம் முதலியவை வைக்கப்படும் பெட்டி—இவைகள் இருக்குமிடத்தை நீ காட்டவேண்டும்," என்றார்கள்.

நான் ஒரு வேலைக்காரி என்றே அவர்கள் எண்ணிக்கொண்டார்கள் என்று அப்போது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. சற்றுநேரம் வரையில் நான் அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பது போலவே நடித்துக்கொண்டிருந்தேன். ஆனால் நான் அவ்வாறு செய்ய மறுத்தபோது அவர்கள் முரட்டுத்தனமாக என்னைப் பிடித்து ஒரு புறமாகத் தள்ளிவிட்டு ஆவேசம் வந்தவர்கள்போல் படிகளில் இறங்கிச் செல்ல முயன்றார்கள். அப்போதுண்டான பயத்தால் நான் ஜாக்கிரதையை மறந்துவிட்டு மிக்க மனக்கலக்கத்தோடு 'ஐயோ! உங்கள் புண்ணியத்திற்கு இந்த

வீட்டிலிருப்பவர்களில் ஒருவருக்கும் எவ்விதத் துன்பமும் செய்யவேண்டாம். ஏனெனில் இது என் கணவன் வீடு,' என்று வாய்தவறிக் கூறிவிட்டேன்," என்றாள்.

22-வது அத்தியாயம்

பூபாலப்பிள்ளை முதலியவர்கள் கவனமாய் இராஜாமணி கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவள் பின்னுங் கூறத் தொடங்கி,

"இது என் கணவன்வீடு என்று நான் கூறியதே அவர்கள் தட்டென்று திரும்பி என்னருகில் வந்தார்கள். என்னைப் பல கேள்விகள் கேட்டுக் கடைசியில் நடந்த சங்கதி முழுமையும் அறிந்து கொண்டார்கள். நான் என் இரகசியத்தை அவர்களிடம் சிக்கச் செய்தது பெரியமூடத்தனமான செய்கை. முட்டாள் தனமாக அப்போது உண்டான பீதியால் என்னையறியாமலே என் வாயினின்றும் அது வந்துவிட்டது. உடனே அவர்கள் ஆலோசனை வேறு வழியில் திரும்பிவிட்டது. அவர்கள், விஷயங்களைத் துரிதமாகக் கிரகிக்கும் சூட்சும அறிவுடையவர்களல்ல. ஆயினும் இந்த விஷயத்தில் எனக்கு உம்மோடிருக்கும் சம்பந்தமாகிய இரகசியத்தைக் கொண்டு, தாங்கள் நல்ல பலனடையலாமென்று தீர்மானித்து விட்டார்கள்.

இதை வெளியிடுவதாய்க் கூறி என்னைப் பயமுறுத்தித் தங்கள் விருப்பத்தின்படி என்னை நடக்கச்செய்யலாமென்றும் தங்களுக்கு அவமானமுண்டாக்குவதாகப் பயமுறுத்தித் தங்களிடம் பொருள் பறிக்கலாமென்றும் எண்ணிவிட்டார்கள். முன்பு ஆவலோடு கேட்ட வெள்ளிப் பாத்திரங்களும் இரும்புப் பணப் பெட்டியும் இப்போது அவர்களுக்கு ஒரு துரும்பு போலாய் விட்டது. என்னை

வெளியிலழைத்துக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு தங்களிடம் பணம் பறிக்கக் கருதினார்கள். என் க்ஷேமத்தைக் கெடுத்து எனக்குத் தீராத் துயரை உண்டாக்குவதையும், தங்கள் கௌரவத்தையும் அவர்கள் சட்டை செய்யும் உள்ள முடையவர்களல்ல. நான் நியாயப்படி தங்கள் மனைவியாய் இருக்கிறேன் என்பதே அவர்களுக்குப் போதுமானது. அதிலும் நான் ஒரு கௌரவமும் செல்வமும் பொருந்திய மனிதனை மணம்புரிந்து கொண்டது அவர்களுக்கு ஒரு பெரும் புதையலகப்பட்ட மாதிரியாய் விட்டது.

அவர்கள் தங்கள் துஷ்டத் தனமான அக்கிரம எண்ணத்தை என்னிடம் வெளியிட்டபோது நான் அடியோடு அதற்கு உடன்பட மறுத்துவிட்டதைக் கண்டு அவர்கள் மிகவும் வியப்படைந்து திடுக்கிட்டு விட்டார்கள். நான் என் காதலைப் பற்றியும் என் கணவனுக்கு நான் காட்ட வேண்டிய கடமையைப்பற்றியும் எவ்வளவோ கூறினேன். அவர்கள் இருப்பிடத்தை வெளியிடாவிடினும் அவர்களது தீய எண்ணங்களை வெளியிட்டு விடுவதாகக் கூறினேன். அவர்கள் பண ஆசைக்கு முன் என் வார்த்தைகள் எதுவும் அவர்கள் செவியிலேறவே இல்லை. இயற்கையில் அவர்கள் கல் நெஞ்ச முடையவர்கள். அதோடு பண ஆசை பிடித்துக் கொண்டால் எவ்வளவு துஷ்ட காரியத்தைத்தான் செய்வார்கள்.

நான் என்ன கூறியும் கேட்காமல் "நீ எங்களோடு கூட வந்தே தீரவேண்டும், உன் பிரியப்படி வராவிட்டால் பலவந்தப்படுத்தப்படுவதாய்," என்று கூறியதோடு உடனே என்மேல் பாய முயன்று ஒரு நாற்காலியைப் புரட்டிவிட்டு திரைச் சீலையையும் கிழித்து விட்டார்கள். அத் திரையை நான் விடாமல் பற்றிக் கொண்டதால் அதைக் கிழித்து

விட்டார்கள். அப்போது நானுகவே தான் இவ்வாறு என் புயத்தில் காயத்தை உண்டாக்கிக் கொண்டேன். இத்தகைய பயமுறுத்தல்களுக்கு நான் அஞ்சுகிற ஆசாமியல்லவென்று அவர்களுக்கு அறிவிப்பதற்காகவே நான் அவ்வாறு செய்தேன். என் இரத்தத்தை நானே சிந்திக் கொள்ளும்படியான தைரியம் எனக்கிருக்கிறதென்று அவர்கள் அறியும்படிச் செய்ய வேண்டுமென்பது என் கருத்து. "நீங்கள் இம்மாதிரி என்னிடம் வீண் மிரட்டல்களைக் காட்டுவதால் ஒரு பயனுமில்லை. அதனுல் வீண் காலதாமதமேயன்றி வேறில்லை," என்றேன்.

அம்மொழிகளைக் கேட்டபின் அவர்கள் சற்று மனமுடைந்தார்கள். தங்கள் பயமுறுத்தல்களை வேறு வழியில் திருப்பினுர்கள். அதனுல் என் மனதில் பீதியுண்டாயினும் நான் அதை வெளியிற் காட்டலாகாதென்று எனக்குள்ளாகவே அடக்கிக் கொண்டேன். அதன்மேல் நான் என் உடைகளையும் மேல் போர்வையையு மணிந்துகொண்டு எனக்கு அவசியமான வஸ்துக்களை—அதாவது கலியாணக் கணையாழியையும், தங்கம்மாள் தயவாய் என்னிடமளித்த தங்கள் திருவுருவப்படம் ஒன்றையும் மட்டும் எடுத்துக் கொண்டு "நீங்கள் இவ்வாறு ஒரே பிடிவாதமாக என்னைப் பலவந்தப்படுத்துகிற வரையில் நான் அப்படியே உங்கள் கூட வருகிறேன். புறப்படுங்கள்," என்று தைரியத்தோடு கூறினேன்.

ஏனெனில் அதற்கு மேலும் அம்முரடர்களின் பிரியத்திற்கு மறுத்துக்கூற எனக்குத் தைரியமில்லை. அவர்கள் எத்தகைய விபரீத காரியத்தையும் செய்யத் துணிவார்களென்று நானறிவேன். என் சொந்தத் தந்தையைப்பற்றியும் தமையனைப்பற்றியும் இவ்வாறு கூறுவது எனக்கு எவ்வளவோ விசனமாகவும் அவமானமாகவுந்தானிருக்

கிறது. ஆயினும் அநீதியையும் அக்கிரமத்தையும் பொறுத்துக்கொண்டிருக்க என் மனம் இடந்தரவில்லை. ஓ தங்கம்மாள்! அச்சமயம் நீ தற்செயலாக என் அறை யருகில் வந்தாய். ஆனால் நான் என்ன செய்வது? என்ன எதிர்பார்க்கலாம். வீட்டிலுள்ளவர்களை எழுப்பி விடவேண்டும். அப்படி எழுப்பிவிட்டால் என் பயங்கரமான இரகசியம் பகிரங்கத்திற்கு வந்து விடுவதோடு கௌரவமான என் புருடனுடைய மானமும் போய் விடும்.

இது மட்டுமல்ல; அவர்கள் எத்தகைய அக்கிரமஸ்தர்களாக விருப்பினும், அவர்களே என் தந்தையும் தமையனும் ஆதலால் அறிவின்றி எனக்கும் என் கணவனுக்கும் தீங்கிழைகத் துணிந்தாலும், அவர்களுக்கு ஆபத்தை உண்டாக்க என் மனம் துணியவில்லை, அவர்களால் உடனே ஏதேனும் ஆபத்து நேர்வதாய் இருந்தாலொழிய நானே அவர்களைப் பிடித்துக் கொடுப்பதற்குக் காரணமாயிருக்க என் மனம் சம்மதிக்குமா? அச் சாளரத்தின் வழியாகத் தப்பித்துக்கொண்டு போவது பெரும்பாலான பெண்களால் ஆகிற காரியமல்லதான். ஆனால் நானோ அடி நாளிலிருந்தே அத்தகைய கஷ்டமும் ஆபத்துமான வழிகளில் பழகியிருந்ததால் அது எனக்குக் கஷ்டமான காரியமாகப் புலப்படவில்லை. சுமார் நாற்பதடி உயரமுள்ள ஒரு ஏணியின் வழியாக இறங்குவது எனக்குச் சுலபமான ஒரு வேலையாகவே புலப்பட்டது.

ஆனால் அக் காரியம் திம்மதியும், சமாதானமும், க்ஷேமமும், குற்றமற்ற சகவாசமும் பொருந்திய இடத்தைவிட்டு மனக்கலக்கமும், திகிலும், பாபமும், துஷ்ட சகவாசமும் சதா நிறைந்துள்ள விடத்திற்குச் செல்வதாக விருந்தது. அப்படிச் செல்வது மனதில் எவ்வளவோ பீதியையும், அதிருப்தியையும், மிக்க வெறுப்பையும். கலக்கத்

தையுமே யளித்தது. எனக்குப் பித்தம் பிடித்து விடும்போலிருந்தது. இது என் காலில் பெரிய விலங்கு மாட்டியிருப்பது போல் இருக்கிறது. இதனால்தான் நான் வீதியில் போலீஸ்காரனைக் கண்டதே நடுங்கி, ஓட வேண்டியதாயிற்று. நான் தப்பித்துக்கொண்டு போய் விடலாமென்று நம்பினேன். ஆனால் நான் என் முயற்சியில் ஜெயமடையவில்லை. நான் அதிருஷ்ட வசத்தால் என் தந்தையினிடமிருந்தும் என் தமையனிடமிருந்தும் தப்பித்துக்கொண்டுபோய் விட்டாலும் ஒரு பயனுமில்லாமற் போய்விட்டது. ஏனெனில் நான் வீதியில் வீட்டின் தோட்டத்தின் பக்கம் இருக்கும் வாயிற் படியருகிற் சென்றேன். நான் யாருடைய அதிருப்திக்காக அதிகமாகப் பயந்திருந்தேனோ அவர்களே என் கணவரே—அங்கு நின்று என்னை உற்று நோக்குவதைக் கண்டேன்.

அவரை அச்சமயத்தில் அங்கு கண்டதே என் மனதிலுண்டான நடுக்கமும் வேதனையும் சகிக்கவொண்ணாதவையாக விருந்தன. அதிலும் அச்சமயம் என் மனம் இருந்த பலவீனமான நிலைமையில் அவை தாங்க முடியாதவையே. அப்போது என் மனதில் ஒரே சிந்தனையிருந்தது. அதாவது நான் அந்த வீட்டிலிருந்தது அவருக்குத் தெரியாது. இனியும் தெரியலாகாதென்பதே என் கருத்து. இந்த எண்ணம் உதித்ததே நான் வேறொன்றும் சிந்திக்காமல் கண்மூடித்தனமாய் அங்கிருந்து திரும்பியோடி நான் விட்டுப் பிரிந்து வந்துவிட்ட என் தந்தையிடமும் தமையனிடமுமே சிக்கிக்கொண்டேன்,” என்று கூறித் தன் கணவனை நோக்கி “தாங்கள் அச்சமயத்தில் ஏன் அங்கு நின்றுகொண்டிருந்தீர்களோ, என்னைக் கண்டபின் கதவைத் திறந்துகொண்டு ஏன் என்னைப் பின்பற்றி வர

வில்லையோ, அது இப்போதும் எனக்கு விளங்கவில்லை," என்றான்.

பூபாலப்பிள்ளை:—நான் உன்னைக் கண்டதே பிரமித்து விட்டேன். என் மனதில் அச் சமயம் உண்டான கலக்கத்திற்கு ஒரு அளவில்லை. ஏனெனில் அப்போது நீ என் வீட்டிற்குள்ளேயே யிருக்கிறாயென்றும், என் வீட்டிலிருந்து காணாமல்போன தையல் வேலை செய்து கொண்டிருந்த பெண் நீயே யென்றும் எனக்குத் தெரியாது. அந்த இரவில் எனக்கு நித்திரை பிடிக்காமல் என் மனம் பெரிய கலக்கத்திலிருந்தது. அதனால் நான் தோட்டத்தில் நல்ல காற்றில் சற்று உலாவலாம் என்று கருதிப் படுக்கையை விட்டு எழுந்து வெளியிற் சென்றேன். சுமார் பத்து நிமிடங்கள் கழிந்தபின் நான் தற்செயலாய் தோட்டத்தில் அப் பக்க வீதியின் புறமாக விருக்கும் வாயிற்படியருகிற் சென்று வீதியைப் பார்த்தபடி நின்றேன்.

அப்போது திடீரென்று உன் உருவத்தைக் கண்டபோது, இது நமது மனைவியின் உருவமே யென்று எனக்குப் புலப்பட்டது. உடனே யெனக்கு மிக்க பிரமையும் மனக் கலக்கமும், மனதில் பலவித உணர்ச்சிகளும் உண்டாயின. அவையாவும் சேர்ந்து இரண்டொரு நிமிடங்கள் என்னை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. நான் சற்று நிதானமடைந்து பார்த்தபோது உன் உருவம் அங்கில்லை. நான் கண்டது உன்னுடைய மெய்யான வுருவமா என்பதே எனக்கு மிக்க சந்தேகமாய் விட்டது. எனக்கு என்ன நினைப்பதென்று தோன்றவில்லை. அப்படியும் நான் உடனே வெளியில் வந்து நீ யாரென்ற உண்மையை யறியவே கருதினேன். அந்தோ! அந்தக் கதவின் சாவி யென்னிடமில்லை. அக்கதவு மூடும்போது ஒரு வில்லால் தானே பூட்

டிக்கொள்ளும். ஆனால் திறக்க வேண்டுமாயின் சாவியில்லாமல் திறக்க முடியாது. என்னிடம் அச் சமயம் அதன் சாவியில்லை. நான் எத்தகைய மனவேதனையோடு திரும்பி என் படுக்கை அறைக்குச் சென்றேனோ அது கடவுளுக்கே தெரியும்—" என்றார்.

இராஜாமணி "அந்தக் கதவின் சாவி யென் தந்தையிடமிருந்தது. அவர் ஒரு வாரம் அதற்காகக் கடுமுயற்சி செய்து கடைசியில் அவர்கள் அங்கு வந்து நுழைந்த தினம் மாலைதான் அச்சாவி அவர் கையிற்சிக்கியது. எனக்குப் பின்னால்தான் அச்சங்கதி தெரிந்தது" என்றாள்.

இம் மொழிகளைக் கேட்ட பூபாலப்பிள்ளை அச்சாவி எப்படித் தமது வீட்டிலிருந்து அக்கள்ளன் கைக்கு எட்டியிருக்கும் என்று தமக்குள் சிந்தித்தார். தமது மனைவிக்கு அச் சாவியைப்பற்றிய சங்கதியே தெரியாது. தங்கம்மாள் தன்னுயிர் போவதாயினும் எஜமானைத் துரோகம் செய்து துன்பத்திற்கு ஆளாக்குபவளல்ல. ஆகவே, தம்மிடமுள்ள வேலைக்காரரில் யாரோ தான் பணத்திற் காசைப்பட்டு அச்சாவியைக் கள்ளரிடம் அளித்திருக்க வேண்டுமென்று தமக்குள் தீர்மானித்துக்கொண்டு, "சரி, என்னிடமுள்ள வேலைகாரரில் ஒருவருடைய செய்கை," என்று மெதுவாய்த் தமக்குள்ளாகவே கூறிக்கொண்டு "பிறகு நடந்த சங்கதியையும் கூறு," என்றார்.

இராஜாமணி:—"அன்று என்னைக் கொண்டுபோய் ஒரு வீட்டின்மேல் அறையில் வைத்து விட்டார்கள். ஏன், அடைத்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அந்த இடம் எங்கிருக்கிறது என்று எனக்கு இன்னும் தெரியாது. எந்த விடம்? இதோ இந்த விடமே எனெனில் அவர்கள் என்னை என் கணவன் வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதே அடுத்த வீதியில் ஒரு வண்டி

வாடகைக்கு பேசப்பட்டு அதில் நான் ஏற்றப்பட்டேன். வண்டிக்குள் என்னுடன் என் தமையன் மட்டும் உட்கார்ந்து கொண்டான். என் தகப்பனர் வண்டிக்காரனேடு வண்டியின் முன் பக்கம் மேலேயுள்ள ஆசனத்திலுட்கார்ந்து கொண்டார். வண்டியின் சாளரங்கள் மூடப்பட்டன. ஆதலின் வண்டி எந்த வழியாய்ச் சென்றதென்று எனக்குத் தெரியாது. இன்னும் தெரியாது.

வண்டி சுமார் இரண்டுமணி நேரம் வேகமாகச் சென்றது. இவர்கள் நம்மை நகரத்தை விட்டு நாட்டுப்புறத்தில் எங்கோ கொண்டுபோகிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன். ஏனெனில் அந்த நேரத்தில் வண்டி குறைந்தது பத்து மைல் தூரம் சென்றிருக்கலாம். பிறகு இந்த வீட்டிலுள்ள அறையில் என்னைக் கொண்டுவந்து விட்டார்கள். அதுமுதல் எனக்குச் சிறைவாசமே. நான் எந்தக் காரணத்திற்காகவும் அறையை விட்டு வெளியில் செல்லலாகாது. என் தந்தையாவது தமையனாவது இருவரில் ஒருவர் எந்நேரமும் என்னிடமே காவலிருப்பார்கள். அவர்கள் இருவரும் ஏககாலத்தில் ஒருபோதும் என்னைத் தனியாய் விட்டுவிட்டு வெளியில் செல்வதேயில்லை. இவ்வீட்டுக்காரியஸ்திரீயோ, வீட்டுக்காரியோ அவள் ஒருத்தியையே நான் காண்பது. அவளே எங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலிய யாவும் கொண்டுவருபவள். அப்போதும் என் தந்தை தமையன் இருவரில் ஒருவர் கூடவே யிருப்பதால் நான் அவளிடம் கூட ஒன்றும் பேசமுடியாது. இத்தகைய கௌரவமான சிறையில் நான் இருக்கவேண்டி இருந்தது.

ஏனெனில் இங்கு வந்த மறுநாளே என் தந்தையும் தமையனும் என்னை நோக்கி "நீ வேண்டுமாயின் இப்

போதே உன் கணவனிடம் செல்லலாம். ஆனால் அங்குச் சென்றபின் அவன் எங்கள் பிரியப்படி எங்களுக்கு உதவி செய்யும்படி அவனுக்கு நீ பயமுறுத்த வேண்டும். அவன் எங்கள் பிரியப்படி நடக்காவிட்டால், அவன் மானம் போய்விடும் படிச் செய்துவிடப் பின்னடைய மாட்டோ மென்று அவனுக்குத் தெரிவித்துவிடு. இப்போது நாங்கள் ஒன்றும் அதிகமாக கேட்கவில்லை. நாங்கள் இந்த நாட்டை விட்டு வெளி நாட்டிற்குச் செல்ல வேண்டும். அதற்கு ஒரு சௌகரியமான பணத் தொகையும் வெளிநாட்டிற்குச் செல்லப் போதுமான செலவும் கொடுத்து எங்களுக்கு அவசியமான உதவி செய்துவிட்டால் போதும்,'' என்று கூறினார்கள்.

நான் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ள அடியோடு மறுத்து விட்டதால்தான் இத்தகைய கடுமையான சிறைவாசம் செய்யவேண்டி நேர்ந்தது. நான் சில வாரங்கள் இத்தகைய சிறைவாசம் செய்ய நேர்ந்தது இப்போது எனக்கு மனதிற்குச் சந்தோஷமாகவே யிருக்கிறது. ஏனெனில் இதனால் என் கணவருக்கு என் அன்பிலும் கற்பிலும் நம்பிக்கையும் மதிப்பும் உண்டாயிற்று. மேலும் நான் எங்குச் சென்றாலும் தங்கள் நினைப்பு அன்போடில்லாவிடினும் இரக்கத்தோடேனும் என்னைத் தொடர்ந்து வரும் என்று நம்பிக்கை இருக்கிறது,'' என்று தன் கதையைக் கூறி விட்டு, தன் கணவனது வேண்டுகோளுக்கு மட்டும் இணங்கப் பிரியப் படாதவளாகவே எப்போதும் போல் வாட்டி நின்றாள்.

23-வது அத்தியாயம்

பூபாலபிள்ளையோ தன் மனைவியின் மறுதலிப்பால் மனத்தளர்ச்சி யடையவில்லை. அவர் தமது மனைவியை நோக்கி "நீ என் பொருட்டாகவும் உன் பொருட்டாகவும் இவ்வளவு கஷ்டங்களை அநுபவித்தபின் நான் கடைசியாகக் கோரும் விஷயத்திற்கு இணங்க மறுப்பது சற்றேனும் நீதியாகுமோ?" என்றார்.

இராஜாமணி "என் அன்பு இவ்விஷயத்தைவிட ஆழ்ந்தது. தங்களுக்கு நேரும் நீண்டகால மனவருத்தத்தையும் அவமானத்தையும் தடுப்பதற்காகவே நான் இம்மாதிரி செய்கிறேன். அதனால் தங்களுக்குக் கொஞ்சகால வியாகூலத்தை யளிக்கவும் துணிந்தேன்," என்றாள்.

பூபாலப்பிள்ளை மிக்க அணிகரத்தோடு பேசத்தொடங்கி "இராஜாமணி! உனக்கு ஒரு ஆடவனுடைய உள்ளம் எத்தகையது என்பது தெரியாது நான் இப்போது உன்னை இழப்பதாயின் அதனால் எனக்குச் சொற்பகால வியாகுலம் என்று நீ கருதுவது முழுமையும் தவறு. இது என் மரணபரியந்தம் தீராத்துயராய் முடியும் என்பது சத்தியம். உன் விஷயத்தில் இப்போதென் மனதில் முழுமாறுதலுண்டா யிருப்பதை நீ அறியவில்லை," என்றார்.

இராஜாமணி:—"அப்படியாயின் தங்கள்....," என்றாள்.

அதற்குமேல் என்ன காரணத்தாலோ பேச முடியாமல் நின்று விட்டாள். பெரும்பாலும் அவள் மிகுந்த நாணத்தால் அப்படிச் செய்தாளென்று தெரிந்தது.

அச்சமயம் தங்கம்மாள் இதுதான் நான் பேசவேண்டிய சந்தர்ப்பம் என்று உணர்ந்து, இராஜாமணியின் அருகிற் சென்று,

"என் அன்பார்ந்த எஜமாட்டியே! நீங்கள் இச்சமயத்தில் இந்த விஷயத்தில் மறுத்துக் கூறுவது தகுதியாயில்லை.

நான் நெடு நாட்களாக இக் குடும்பத்தில் இருந்து வருகிறேன். இதன் க்ஷேமத்தில் நான் கருத்துடையவள். இதன் கௌரவம் எத்தகையதெண எனக்கு நன்ருய்த் தெரியும்," என்ருள். அப்போது அவள் மனதில் ஏதோ மர்மமான துடி துடிப்பு இருந்ததாகத் தெரிந்தது. பின்னும் அவள் தன் எஜமானியை நோக்கி "அம்மா! இச்சமயத்தில் நீங்கள் உங்கள் கணவர் விரும்புகிற மாதிரி நடக்க மறுப்பது இக் குடும்பத்திற்குப் பெருந் தீங்கு விளைவிப்பதாகும், இதை விட அதிக தீங்கு நீங்கள் செய்யவேண்டியதில்லை. கடவுளே உங்களை அமர்த்திய நிலைமையிலிருந்து நீங்கள் விலகிக்கொள்வது இக்குடும்பத்திற்குப் பெருந் தீங்கு செய்வதாகும்," என்ருள்.

அச்சமயம் மார்த்தாண்டம் ஜமீன்தாரிணி[?] போல் பேசத்தொடங்கி, இதுகாறும் பேசாமல் யாவும் கேட்டுக் கொண்டிருந்தவள், முன்னுக்கு வந்து இராஜாமணியை நோக்கி,

"அம்மா இந்த உத்தமியும் உங்கள் விஷயத்தில் மிக்க அன்பும் அபிமானமு முடையவளுமான தங்கம்மாள் கூறியதை நான் மறுபடி கூறுகிறேன். நான் உன் கணவர் குடும்பத்தைச் சேர்ந்தவள். அக் குடும்பத்தைப்பற்றி எப்போதும் பெருமை யுடையவள். நான் உன்னை வேண்டிக் கொள்வதாவது, நீ என் சுற்றத்தாராகிய பூபாலப்பிள்ளையை மணம் புரிந்து கொண்ட வரையில் அவர் குடும்பத்தை ஆதரித்து அவருக்குச் சந்தோஷத்தை உண்டாக்க வேண்டியது உன் கடமை. அதோடு நீயும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும். சட்டத்தின் படிக்கும் கடவுளின் பிரியப்படிக்கும் அம்மாதிரி நடந்துகொள்ள வேண்டியது உன் கடமையாயிருக்கிறது. நீ அதற்கு மாருக நடப்பது அக் குடும்பத்திற்குத்

திங்கிழைப்பதேயாகும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் அவர் உன்மேல் வைத்திருக்கும் அன்பினாலேயே நீ அம் மாதிரி நடந்து கொள்ள வேண்டும். இதே நான் உனக்குச் சகோதரிபோல் கூறுவது," என்றாள்.

தான் முன் பின் பாராத கம்பீரமான அச் சீமாட்டி தன்னிடம் அம்மாதிரி கூறியதைக்கேட்டதே அவளை உற்று நோக்கினாள். அவளுடைய இரக்கமும் கருணையும் பொருந்திய வதனத்தையும், நாணயமான உடையையும் கண்டுதன் கரத்தை நீட்டி அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு, பாதி விசனமும், பாதி மதிப்போடும் கூடிய பார்வையோடு அவளை உற்று நோக்கி,

"அம்மா! தாங்கள் கூறிய நன்மை பொருந்திய மொழிகளுக்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன்," என்றதே,

அச்சீமாட்டி "அப்படியாயின் எங்களுடைய வேண்டுகோளை எற்றுக்கொள்வாயென்று நம்புகிறேன்," என்றாள்.

இராஜாமணி தன் தந்தையும் தமையனும் உட்கார்ந்திருந்த இடத்தைக் குனிந்தபடி நோக்கி, தலையசைத்து "ஐயோ! அப்படிச் செய்ய நான் துணியலாகாது." என்றாள்.

பேசாமல் யாவும் கேட்டுக்கொண் டிருந்த தங்கம்மாள் முன்பு பேசியது முதல், அவள் மனம் பதைத்துக் கொண்டே இருந்தது. அவள் மனதில் ஏதோ பெரிய மர்மமான இரகசிய மிருப்பதாகப் புலப்பட்டது. இப்போது அச்சீமாட்டி கூறியதற்கு இராஜாமணி கூறிய விடையைக் கேட்டதே அவள் மனத்துடிப்பை இன்னும் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. அதன் மேல் அவள் தன் உள் சட்டையின் சேபியில் கையைவிட்டு அதிலிருந்து ஏதோ

ஒரு மடித்த கடிதத்தைக் காத்தி வெடுத்துக்கொண்டு, "இராஜாமணியம்மாள்! என் எஜமானியே! இப்போது நீ செய்திருக்கும் தீர்மானத்தால் உன்மேல் பூரண அன்புடைய கணவருக்கு நீ மன வருத்தத்தை உண்டாக்குவதோடு அவருக்கு ஆயுள் பரியந்தம் பெருந்துயரை உண்டாக்குகிறாய். நான் கூறும் இம்மொழி சத்தியமானவாக்கு. நீ உன் தீர்மானத்தில் ஒரே பிடிவாதமாக விருந்தால் அதனால் அவருக்கு—உன் அன்பார்ந்த கணவருக்கு—எவ்வளவோ துன்பத்தை உண்டாக்குகிறாய். இத்தகைய சந்தர்ப்பத்தில் நீ உன் தீர்மானத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். ஏனெனில் நீ உன் பிடிவாதத்தால் உன் கணவனுக்குப் பெருந்தீங்கை விளைவித்துவிடுகிறாய். அது எத்தகைய தீங்கென்று உனக்காவது அவருக்காவது இன்னும் தெரியாது," என்றாள்.

இராஜாமணி:—"நான், நீ கூறும் விஷயம் உண்மை என்றறிந்தால்.... ஆ அப்போதும்......என்றாள்.

தங்கம்மாள் இராஜாமணியை நோக்கி "அம்மா! ஒரு சமயம் இக்கடிதத்தைப் பார்த்தால் நீ எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பது இனியேனும் உன் மனதிற்படுமென்று நம்புகிறேன்," என்று கூறிவிட்டுப் பூபாலப்பிள்ளையை நோக்கி,

"ஐயா! இப்போது நான் செய்யுங் காரியத்தைப்பற்றி என்னை மன்னிக்கும்படியாக முன்னாலே உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் நெடு நாட்களாக உங்கள் குடும்பத்திலிருந்தவளென்பதும், உங்கள் குடும்பத்தின் கௌரவமும் யாவும் எனக்குத் தெரிந்து நான் இவ்விஷயத்தில் எவ்வளவோ மனவருத்த மடைந்திருக்கிறேன் என்பதும் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. என் மேல் ஒரு

கடமை விழுந்திருக்கிறது. அக்கடமையை நான் நிராகரிக்க முடியாது. பழைய வேலைக்காரியாகிய நான் அவ்வாறு செய்யவேண்டி இருப்பது எனக்குக் கஷ்டமாகவே இருக்கிறது. ஆயினும் நான் செய்தே தீரவேண்டும். இதோ இக் கடிதம்,"—என்றதும் "ஆயினும் ஐயா! இது தாங்கள் முன்னடி வாசித்துப் பார்க்க வேண்டியதே," என்று கூறிக்கொண்டே உளமும் கரமும் ஏக காலத்தில் பீதியால் நடுங்கிக்கொண்டே அக் கடிதத்தை அவர் கரத்தில் கொடுத்தாள்.

பூபாலப் பிள்ளை அதை வாங்கிப் பார்த்ததே "ஓ! என் தந்தையின் கையெழுத்து" என்றார். இம்மொழிகளைக் கேட்டதே யாவரும் திடுக்கிட்டு மனக்கிளர்ச்சி அடைந்தார்கள். அவர் அவ்வாறு கூறியபோது தங்கம்மாள் "ஆம், என் கண் முன்பாக வரையப்பட்டது," என்றாள். பூபாலப் பிள்ளை அதைப் பார்த்தபின் கடைசியில் கையொப்பத்தை உற்று நோக்கி, தங்கம்மாளைப் பார்த்து "இது காறும் இது ஏன் எனக்குக் காட்டப்படவில்லை?" என்றார்.

தங்கம்மாள்:—உமது தந்தை அவ்வாறு கட்டளையிட்டார். அவர் என்னை நோக்கி "இது என்னுடைய கடைசி மரண சாசனம், நான் இதை இரகசியமாக உன்னிடமளிக்கிறேன். ஒரு வருடகாலம் இதைப்பற்றி உலகத்தில் ஒருவருமே அறியலாகாது. இப்போது நான் கூறுவதைக் கவனமாகக் கேள். இந்த ஒரு வருடத்தின் முடிவில் என் மருமகள் இவ் வீட்டின் எஜமானியாக விருந்து காரியங்களை நடத்தினால், அவள் தன் கணவனோடு சந்தோஷமாகவும் சுகமாகவும் வாழ்ந்து கொண்டிருந்தால், இக் கடிதத்தை வெளியில் ஒருவருக்கும் காட்டவேண்டாம். தீயில் கொளுத்தி விடு. அப்படிக்கின்றி, அவள் இறந்து போகாமல் வேறெங்

தக் காரணத்தாலாவது இந்த வீட்டில் இல்லாவிடின் இக்கடிதத்தை என் புத்திரனிடமளித்து அவன் உண்மையில் என் புத்திரனாயின் இதில் கூறியுள்ளபடி நடந்து கொள்ள வேண்டுமென்று நான் கட்டளை இட்டதாகக் கூறு," என்று எனக்குக் கட்டளை இட்டார்.

இம்மொழிகளைக் கேட்டதும் பூபாலப் பிள்ளையின் கரத்திலிருந்த கடிதம் துடித்தது. அவர் தங்கம்மாளை நோக்கி "இதிலடங்கியுள்ள சங்கதி என்ன என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்றார். தங்கம்மாள், அவர் எழுதும்போது அவர் கரத்தை நடுக்காதபடி பிடித்துக் கொண்டிருந்தேன்," என்று மன வருத்தத்தோடு கூறினாள்.

அதன்மேல் பூபாலப் பிள்ளை தம் மனைவியை நோக்கி "இராஜாமணி! நான் உன்மேல் கொண்ட மனப்பூர்வமான பூரணக்காதலோடு என்னை மணம்புரியும்படி உன்னை வேண்டிக்கொண்டபோது, நீ என்னோடுகூட என் அந்தஸ்தையும் செல்வத்தையும் அனுபவிக்க வேண்டுமென்றும், என் இருதயத்தின் பூரண அன்பையும் நீ யடையவேண்டுமென்றுமே நான் கருதினேன். இக்கடிதம் என் கண்களைத் திறந்து விட்டது. இக்கடிதத்தில் என் தந்தை குறித்துள்ள நிபந்தனையின்படி அவருடைய ஆஸ்தி முழுமையும் அனுபவிக்க வேண்டிய ஆள் அவருடைய மருமகளே அன்றிப் புத்திரனல்ல. அவர் விருப்பத்திற்கு மாறாக நான் ஒருபோதும் நடக்கமுடியாது," என்றார்.

சுருக்கமாக அம்மரண சாசனத்தின் நிபந்தனை இன்னதென்றுணர்ந்த இராஜாமணி "ஹா! எதோ அதைக் காட்டுங்கள்," என்று அப்பத்திரத்தை ஆத்திரத்தோடு அவர் கரத்தினின்றும் பிடுங்கிக்கொண்டு அதை உற்று நோக்கி, "அடடா! அவர் எப்படி—எப்படித்தான் இவ்

வாறு எழுதினர்?" என்று கூறிக்கொண்டே அதை முழுமையும் வாசித்துப் பார்த்து, கசக்கித் தன் மார்பில் அணைத்துக்கொண்டாள். "அந்தோ! அவர் எனக்குச் செய்யும் தீங்கு இதற்கு அதிகமாக வேறொன்று மில்லை. இதை அவர் கருதாமற்போனது எப்படியோ என் புத்தியிற் படவில்லை," என்று இரண்டொரு நிமிடங்கள் திகைப் படைந்தவள்போல் சிந்தனையி லிருந்தாள்.

பிறகு தனக்குள் சமாளித்துக்கொண்டு தன் மனதில் கொதித்தெழுந்த உணர்ச்சியை அடக்கமுடியாதவளாய், மிக்க சந்தோஷமும் தைரியமும் துணிகரமும் உடைய வளாய்,

அடடா! கடைசியில் இது இப்படியாகவா முடிந்தது? நான் பணத்தின்மேல் நாட்ட முடையவளென்று கருதப் பட்டது. தாங்களும் நானும் ஒரே குடும்பத்தில் ஒன்று சேர்ந்து வாழவிடாமல் தடுக்கும் இந்த இக்கட்டைப் பண ஆசையா ஒழிக்கும். என் உள்ளம், அந்தோ! அப்படிப் பட்டதல்லவே. அதை அவர் அறிந்தாரோ இல்லையோ என்பது எனக்கு இப்போது சந்தேகத்திற் கிடமாய்விட் டது. என்னை அன்போடு மெய்யான மருமகளாய்த் தாங்கிக் கொண்ட அந்த மார்பில் இத்தகைய எண்ணம் எப்படி வந்ததோ எனக்குப் புலப்படவில்லை! தெய்வ ஆசீர்வாதத் தால் அன்பினல் இரண்டும் ஒன்ருகக் கட்டுப்பட வேண்டிய உள்ளங்களை அநித்தியமாகிய செல்வம் கிடைப்பதும், கிடைக்காமல் போவதுமா கட்டுப்படுத்தும்? தங்கள் தந்தை அச்சமயம் என்னை அன்புடன் மார்பேர்டணைத்துக் கொண்ட பட்சத்தை நினைக்கும்போது அன்பே நம்மிரு வரையும் பிணைக்குமன்றி எத்தகைய செல்வமும் அக் காரியத்தைச் செய்யாது. அவர் அச்சமயம் காட்டிய நம்பிக்கையும் அன்புமே நம்மைப் பிரியாதபடிச் செய்யும்

பந்தமாகும், வேறு எதுவுமே அக்காரியத்தைச் செய்ய முடியாது. நாம் இருவரும் இப்போது இரண்டு வித்தியாசமான, உயர்வு தாழ்வான மேடைகளிலிருக்கிறோம். நம் இருவரையும் சமரசமான ஒரே மேடையில் அன்போடும் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வைக்கத்தக்கது அன்பு ஒன்றேயாகும். அன்பு ஒன்றே நம்பிக்கையையும் க்ஷேமத்தையும் அளிக்கும். அதனாற்றான் நாம் வாழ்நாள் முழுமையும் சுகத்தோடும் சந்தோஷத்தோடு இருக்கலாம்," என்று கூறிவிட்டு,

ஒரு கன்னிகை தன் முதற் காதலால் எவ்வளவு ஆனந்தத்தை அடையக் கூடுமோ அத்தகைய ஆனந்தத்தோடும் மனதில் சொல்லொணாத சந்தோஷக் கிளர்ச்சியோடும் உற்சாகத்தோடும், "இந்தச் செல்வத்தைப்பற்றிய நிபந்தனையே நமக்குள் எப்போதும் வேண்டாம்," என்று கூறிக்கொண்டே அம் மரண சாசனத்தைக் கிழித்துத் தீயி லெறிந்துவிட்டு அத்தியந்த ஆவலோடும் பிரேமையோடும் தன் கணவனது மார்பின்மேல் சாய்ந்துவிட்டாள்.

பூபாலப்பிள்ளை இன்ன விதமென்று விவரிக்கொண்ணாத ஆனந்தத்தோடு தமது அன்பார்ந்த மனைவியைத் தம் மார்பின்மேல் ஏற்றுப் பரவசமடைந்தார். அவருக்கு அவள் மேல் இது காறும் இருந்த அன்பு இப்போது அவளுடைய மிக்க பெருந் தன்மையான செய்கையைக் கண்டதே அளவு கடந்ததாகிவிட்டது. ஏனெனில் தமது தந்தையின் சொத்தனைத்தும் அவருடைய பிதுரார்ச்சிதம். அதை அவர் தம் பிரியப்படி யாருக்கு வேண்டுமாயினும் வைத்துவிடலாம். இப்போது அவர் மரண சாசனத்தின்படி அவருடைய சொத்தனைத்தும் இராஜாமணியுடையதே. அவள் அது முழுமையும் எடுத்து அனுபவித்துக்கொண்டு

பூபாலப்பிள்ளையை நடுத் தெருவில் அனாதைபோல் விட்டு விடலாம்.

அப்படிக்கின்றேல் அதுவும் தன் சுயாதீனப்படுத்திக் கொண்டு பூபாலப்பிள்ளையைத் தன் பிரியம்போல் நடக்கும் படிச் செய்யலாம். இறந்தவர் கருத்து எப்படி இருந்தாலும் இப்போது சொத்தனைத்தும் அவன் கையில் சிக்கி விட்டதால் அவன் எப்படி வேண்டினும் செய்யலாம். ஆனால் அந்த மாதோ செல்வத்தைச் சற்றும் மதிக்கவில்லை. 'அடடா நாம் நமது கணவரோடு கூடிவாழ்ந்தால், நமது தந்தை தமையன் இவர்களுடைய அயோக்கிய நடக்கையால் அப்படிப்பட்டவர்களின் சுற்றத்தாளை மணம்புரிந்து கொண்டாரே என்று அவருக்கு அவமான உண்டாகுமே. அவர் மிக்க கௌரவம் பொருந்திய குடும்பத்தைச் சேர்ந்தவரும், மிக்க கௌரவமும், பெருந்தன்மையும் யோக்கியதையும் உடையவருமாயிற்றே, நம்மால் அவருக்கு அவமானம் நேரிடலாகாது என்று கருதினோம். இப்போது அவர் தந்தையின் செய்கையால், நாம் அவரிடம் கூடி வாழாவிட்டால் அவர் நிராதரவாய் விடப்படுவார் போலிருக்கிறது. இனியும் நாம் மற்ற விஷயங்களைக் கவனிப்பதில் பயனில்லை. நம்மால் அவருக்கு மரணபரியந்தம் இடுக்கண் உண்டாகலாகாது. இனி எப்படியாயினும் சரி நாம், நமது கணவரின் சுகவாழ்க்கையையே கருதவேண்டும். இப்போது நாம் அவரோடிராவிட்டால் செல்வத்தை நாம் எடுத்துச் செல்லவேண்டும். அவரோ தந்தையின் கட்டளையை மீறி நடப்பவரல்லவென்று தெரிந்து கொண்டோம். ஆகையால் கடவுள் சித்தப்படி நடக்கட்டும்," என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டே தன் கணவன் அதிருஷ்டப் படி நடப்பதென்று உடன்பட்டாள்.

பூபாலப் பிள்ளையும் இவ்வளவு விஷயங்களையும் ஏக காலத்தில் தமக்குள் உணர்ந்தாராதலின் தமது மனைவியின் பெருந்தன்மையைப் பூரணமாக உணர்ந்து ஆனந்த பரவசமடைந்துவிட்டார்.

24-வது அத்தியாயம்

பங்கஜம் என்ற மார்த்தாண்டம் மோட்டி ஆதியில் பூபாலப்பிள்ளையின்மேல் காதல்கொண்டிருந்தாள். பிறகு பூபாலப்பிள்ளையாலேயே அவள் அன்னிய நாட்டுப் பிரபுவை மணம் செய்ய நேர்ந்தது. அப்பிரபுவை அவள் உண்மையில் காதலித்து மணம்புரியவில்லை. அவருடைய அந்தஸ்திற்கும் செல்வத்திற்கும் ஆசைப்பட்டே அவரை மணம் புரிந்து கொண்டாள். ஆனால் அவர் சீக்கிரத்திலேயே காலமாய்விட அவள் சுயாதீனமடைந்தாள், கணவன் இறந்து போனதால் அவளுக்கு விசனமில்லை என்று நாம் கூறவேண்டுவதில்லை. விசனத்திற்கு மாறாய்ச் சந்தோஷமே அடைந்தாள் என்று கூறலாம்.

ஏனெனில் அவர்கள் தேசாசாரப்படி மற்றொரு புருஷனை மணம்புரிந்துகொள்ளலாம். இப்போது கணவன் இறந்து போனதால் தன்னை என்னவேனும் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் ஒருவருமேயில்லை. திரண்ட செல்வமிருக்கிறது. திரண்ட செல்வத்தைக்கொண்டு தான் என்ன வேண்டுமாயினும் செய்யலாம், எங்கு வேண்டுமாயினும் போகலாம். அவள் இந்திரபுரிக்குத் திரும்பி வந்தபோது தன் சுற்றத்தாராகிய பூபாலப்பிள்ளையை மணம்புரிந்து கொள்ளலாமென்று கருதியே இருந்தாள். அவர் மணம் புரிந்துகொள்ளவில்லை யென்றே அவள் கருதியிருந்தாள். அதனால் அன்று விருந்து நடந்த இடத்தில் இருவரும் சந்தித்துப் பேசியபோது, அவர் "நான் உன்னைக் கடைசியாய்

ஒரே முறை பார்த்துவிட்டுப் போகவந்தேன்" என்று கூறியது அவளுக்கு மிக்க வியப்பை அளித்தது. ஆனல் அவள் தங்கம்மாள் மூலமாக நடந்த சங்கதிகளை யெல்லாம், அவர் மணம்புரிந்து கொண்டது, மனைவி அவரை விட்டுப் பிரிந்திருப்பது, அவள் காணமற் போனது யாவும் அறிந்து கொண்டாள். அவள் பூபாலப்பிள்ளை மேல் வைத்திருந்த காதல் பரிசுத்தமானதாகையால் இவை யாவுமறிந்ததே, அவள் அவர் விஷயத்தில் மிக்க இரக்கங் கொண்டாள். உண்மையில் அவருக்குத் தன்மேல் காத லிருக்கிறதென்றும், அவருடைய தந்தையின் பலவந்தத்தா லேயே மணம் புரிந்துகொள்ள நேர்ந்ததென்றும், அதற் காக அவர் உள்ளத்தில் மனவருத்தமே யடைகிருர் என் றும் அவள் மனதிற் பட்டுவிட்டது.

அவள் குணத்தின் பெருந்தன்மையை யுணர்ந்திருந்த தங்கம்மாள் வேணுமென்றே அச்சமயம் பூபாலப் பிள்ளை யின் கடிதத்தைக் கண்டு அங்கு வந்தபோது அவளையும் கூட அழைத்து வந்தாள். இப்போது பூபாலப்பிள்ளையும் அவர் மனைவியும் மனக்கலக்கமின்றி ஒரு மனதாய் வாழ உடன்பட்டது பங்கஜத்திற்கு மிக்க சந்தோஷத்தையே உண்டாக்கிற்று. அவர்கள் மணம் செய்துகொண்டது மிக்க இரகசியமாகவே. ஆதலின் பூபாலப்பிள்ளையின் நண் பர்களுக்குக்கூட அச் சங்கதி தெரியாது. பங்கஜம் மேற் கண்ட சமாசாரங்கள் நடந்த மூன்ருவது நாள் அவர்கள் திருமணத்தைக் கொண்டாடுவதற்காகத் தன் மாளிகையில் மிகச் சிறப்பான ஒரு விருந்து நடத்திஞள். அந்த விருந் திற்கு அவளுடைய சிநேகிதர்களும் பூபாலப்பிள்ளையின் சினேகிதர்களும் வேறு அனேகம் பிரமுகர்களும் கனவான் களும் அழைக்கப்பட்டார்கள். வந்தவர்க ளெல்லாம் இராஜாமணியின் குணம் பூபாலப்பிள்ளையின் அந்தஸ்துக்

கும் பெருந்தன்மைக்கும் பூரணமாய்ச் சகல விஷயங்களி லும் பொருத்தமானதேயென்று புகழ்ந்துகொண்டார்கள். ஆனால் அவள் யாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது ஒருவருக்கும் தெரியாது.

* * *

* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து, அதாவது இராஜா மணியின் தந்தையும் தமையனும் சிறையாக்கப்பட்ட மறு நாள் ஒரு இடத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி இங்கு கூறவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசிய மாயிருக்கிறது. அன்று மாலை சுமார் நான்கு மணி இருக் கும். அப்போது நாம் முன்பு கூறிய கள்ளர் இரகசிய மாய் வசித்துக் கொண்டிருந்த தனி வீட்டிற்குக் கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கும் ஒரு குக்கிராமத்தில் நாம் இப்போது கூறும்.சம்பவம் நிகழ்கிறது.

அக்கிராமத்தின் ஓரத்தில் ஒரு சிறு தோட்டத்தின் மத்தியில் ஒரு தனி வீடிருக்கிறது. அது சிறிய வீடே. அவ்வீட்டின் முன்னுள்ள தாழ்வாரத்தில் நாம் கூறியபடி மாலை நான்கு மணிக்கு இருவர் உட்கார்ந்து மிக்க அக்கறை யாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஆடவர்களே. ஒருவனுக்குச் சுமார் நாற்பத்தைந்து வய திருக்கும். அவன் முகத்தைக் காணும்போதே எவரும் அவன் முரட்டுத்தனமான குணமுடையவனென்று அறிய லாம். அவன் நுதலிலுள்ள கீறல்களாலும் கண் பார்வை யாலும் மற்ற சாமுத்திரிகா லட்சணங்களாலும், அவன் இரக்கமற்ற கல் நெஞ்சனென்றும், எதற்கும் அஞ்சாத மனமுடையவனென்பது நன்கு புலப்பட்டது.

அவன் எதிரில் இருப்பவன் அவனுடைய புத்திரன்; அவனுக்கு வயது இருபத்து மூன்றிருக்கும். எல்லா விஷ

யல்களிலும் தந்தையைப்போன்ற குணங்களே உடைய வன். அவன், தந்தையைக் காட்டிலும் நயவஞ்சகமும், கபடமும், தந்திரமும் மாறுவேட மணிந்து எவரையும் ஏமாற்றும் சாமார்த்தியமும், எத்தகைய பஞ்சபாதகங் களுக்கும் அஞ்சாத குணமும் உடையவன். தந்தையின் பெயர் வீரப்பன். மகன் பெயர் ஏழுமலை.

தந்தை:—குழந்தாய்! சங்கதி தெரியுமா? கேசவனும் அவன் மகனும் கூண்டில் சிக்கிக் கொண்டார்க ளாமே?

மகன் இதைக் கேட்டு மிக்க வியப்படைந்து "என்ன? நான் நம்பவில்லை. உண்மையா? கேசவன் சற்று அஜாக் கிரதையாயிருந்தாலும் சுப்பன் மிக்க ஜாக்கிரதையாய்த் தூண்டிற்காரன்போ லிருப்பானே. அவர்கள் எப்படிச் சிக்கிக்கொண்டார்கள்? அத் தனிவீடு........என்றதே,

தந்தை:—கேசவன் மகள் இருக்கிறளே - அப்பெண் எங்கோ போய்விட்டாளென்றுர்க ளல்லவா? அதி லும் ஏதோ நல்ல வேட்டை கிடைக்கும் சமயத்தில் அதைக் கெடுத்துவிட்டு அந்த ஆளை வெளியனுப்பி விட்டான் என்று கூறினர்களே, அச்சங்கதி தினை யிருக்கிறதல்லவா? அம்மனிதன் ஒரு செல்வவந்த னும். இப்போது இவர்கள் ஏதோ அச்சம்பந்தத் தால் தான் சிக்கிக்கொண்டார்கள் என்று நமது ஆசாமி....குள்ளன்—கூறினன். யாரோ துப்பறியும் ஆசாமி மூலமாக அவர்கள் பிடிக்கப்பட்டு இப்போது நகரச் சிறைச்சாலையி லிருக்கிறுர்கள்.

மகன்:—விவரம் ஒன்றும் தெரியவில்லையோ?

தந்தை:—மற்ற விவரம் ஒன்றும் தெரியவில்லை. நாமே முயற்சிசெய்து யாவும் கண்டு பிடிக்கவேண்டும். நீ

நான் கூறுகிறபடி செய். சிறைச்சாலை வீதியிலுள்ள தஞ்சாவூர் ஹோட்டலுக்குச் சென்று நான் கொடுக்கும் கடிதத்தை ஹோட்டல் காரனிடம் கொடு. அவன் எனது அந்தரங்க நண்பன். அச் சிறைச்சாலையில் கொண்டு வரப்படும் கைதிகளுக்கு அவன் சாப்பாடு அனுப்புவது வழக்கம். அதனால் சிறைச்சாலைக் காவலர்களில் ஒருவன் அவனுக்கு மிக்க நேசம். அவன் இவர்களைப்பற்றிய சங்கதிகளை எப்படியாவது கண்டு பிடித்து நமக்குக்கூறுவான். பிறகு நாம் இனி நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசிக்கலாம்," என்றான்.

மாலை சுமார் ஏழு மணியிருக்கும். அச் சமயம் ஏழுமலை சிறைச்சாலை வீதியிலிருக்கும் தஞ்சாவூர் ஹோட்டலுக்கு வந்தான். அவன் அங்குப் பன்முறை வந்திருப்பதால் அந்த ஹோட்டலின் அமைப்பும், அதன் முதலாளியின் விஷயங்களும், அங்கு நடக்கும் விஷயங்களும் யாவும் அவனுக்கு நன்றாகத் தெரியும். அந்த ஹோட்டல்காரன் சுமார் பதினைந்து வருடங்களாக அங்கு ஹோட்டல் வைத்துக் கொண்டிருக்கிறான். சிறைச்சாலைக் காவலர்களில் ஒரு உத்தியோகஸ்தனைக் கைவசப்படுத்திக் கொண்டு, அந்தச்சிறைச்சாலையில் திடீரென்று கொண்டுவரப்பட்டு விசாரணை முதலிய விவகாரங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு ஆகாரம் கொடுத்தனுப்பும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். அதில் அவனுக்கு நல்ல வரும்படி உண்டு. எப்படியெனில் சிறைப்பட்ட ஆட்களுக்கு வெளியிலிருந்து எந்தச் சங்கதியும் போகப்படாது. ஒருவரும் கடிதம் எழுதி அனுப்பலாகாது, என்பது கண்டிப்பான சிறைச்சாலை விதி; ஆனால் எவரேனும் தஞ்சாவூர் ஹோட்டல் முதலாளியாகிய இரங்கராவிடம் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி பணமளித்து விட்டால் கடிதமோ எதுவோ

னதுவாயினும் சரி, தான் அனுப்பும் சாப்பாட்டோடு சிறையாளர்க்குப் போய்ச் சேரும்படி செய்து விடுவான். இவனுடைய நடக்கையை ஒருவாறு ஜாடையாகக் கூறி விட்டோம். இனி நமது கதையைத் தொடங்குவோம்.

ஏழுமலை இரவு ஏழு மணிக்கு ஹோட்டலுக்குச் சென்றதும், அதன் அமைப்பு முழுமையும் அவனுக்கு நன்ருகத் தெரிந்திருப்பதால் நேராய் இரங்காராவின் இரகசிய அறைக்குச் சென்று வெளியிலிருந்த ஆளிடம், "வீரப்பன் புத்திரா ஏதோ முக்கிய வேலையாய் உம்மைப் பார்க்க வந்திருக்கிருர் என்று உன் எஜமானிடம் கூறு," என்ருன்.

இரண்டொரு நிமிடங்களில் இரங்காராவும் ஏழுமலையும் ஒரு தனி யறையில் சந்தித்தார்கள். ஏழுமலை தன் தந்தையளித்த கடிதத்தை எடுத்து அவனிடமளித்தான். இரங்காராவ் அதைக் கண்டதும் ஏழுமலையை நோக்கி "தம்பி! இச் சங்கதி யெல்லாம் எனக்கு இன்று தான் தெரியவந்தது. சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களில் ஒருவன் வந்து "திடீரென்று இரண்டு ஆட்கள் சிறைச்சாலையில் வந்திருக்கிருர்கள். அவர்களுக்குச் சாப்பாடளிக்க வேண்டுமென்று கூறினன்; அவ்வாறே அனுப்பிவருகிரேும். இனி இதைப்பற்றி யேதேனும் பேசவேண்டியதாயின், உன் தந்தையை நேரில் வரும்படிக் கூறுவதுதான் தகுதி" என்ருன்.

ஏழுமலை ஹோட்டல்காரனுக்கு வந்தனமளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுத் தன் தந்தையிடம் சென்று நடந்த சங்கதி யாவும் ஒன்று விடாமற் கூறினன்.

அதே இரவு சுமார் பதினொரு மணி யிருக்கும். அச் சமயம் ஏழுமலையின் தந்தையாகிய வீரப்பன் தஞ்சாவூர் ஹோட்டலுக்குச் சென்று அதன் சொந்தக்காரனுகிய இரங்காராவைக் கண்டு பேசினன். வீரப்பன் இரங்காராவை

நோக்கி "நண்பனே! நாம் நெடு நாளைய சிநேகிதர்கள். நாம் இருவரும் தனித்தும், இன்னும் இரண்டொருவரைச் சேர்த்தும் இரண்டொரு காரியங்களைச் செய்துமிருக்கிறோம். இப்போது நமது நண்பர்களைச் சேர்ந்த கேசவனும் அவன் மகனும் போனிலிருந்து வெளி வந்தவர்கள் எப்படியோ மறுபடி சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு முக்கியமாக எனக்குத் சங்கதியனுப்ப அவர்களுக்குச் சமயம் வாய்க்கவில்லை. நான் தற்செயலாக நமது நண்பன் ஒருவனால் அதை யறிந்தேன். இப்போது நாம் அவர்களுக்கு எவ்விதமேனும் உதவி செய்யவேண்டும். இதில் இன்னொரு முக்கிய விஷயம். அப்பாங்கி கணக்கில் எனக்கு இன்னம் சரியான பாகம் சேரவில்லை. அது எங்கோ புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் வெளியில் வந்தால் தான் நான் அதில் எனக்குச் சேரவேண்டியதைப் பெறலாகும். ஆகையால் இவ் விஷயத்தில் நீ யுதவிசெய்தே தீரவேண்டும். உன் அபிப்பிராயம் என்ன?" என்றான்.

இரங்காராவ்:—"நண்பரே! நான் இதில் என்னாலான உதவியைச் செய்யவேண்டியவனே. செய்யச் சித்தமாகவேயிருக்கிறேன். ஆயினும் ஒரு காரணத்திற்காக நான் மிக்க ஜாக்கிரதையோடும் அளவோடுமே வேலை செய்யவேண்டும். ஏனெனில் இப்போது நான் சிறைச்சாலையிலிருக்கும் கைதிகளுக்கு ஆகாரமனுப்பும் சந்தர்ப்பம் இருப்பதால் தான் நமது காரியங்களில் சமயோசிதப்படி உதவி செய்ய அனுகூலம் கிடைக்கிறது. நான் சற்று அளவுமீறி நடந்து கொண்டால் எனக்குக் கெடுதியுண்டாவதோடு நமக்கிருக்கும் இந்த அனுகூலமே மடியோடு போய்விடும். ஆகையால் இதற்கு ஊனம் வராதபடி நீ எத்தகைய காரியத்தைச் செய்யும்படிக்கூறினும் நான் செய்ய ஆயத்தமா

யிருக்கிறேன், இனி நீ என்னை யென்ன செய்யச் சொல்கிறாயோ அதைக் கூறு" என்றான்.

அதன் பிறகு இரங்கராவும் வீரப்பனும் மிக்க ஆலோசனையோடும் தந்திர சாமார்த்தியத்தோடும் ஒரு மணி நேரத்திற்குமேல் பேசினார்கள். கடைசியில் தாங்கள் செய்யவேண்டிய ஏற்பாட்டைப்பற்றி ஒரு முடிவிற்கு வந்ததும், வீரப்பன் "சரி, நான் நாளைக்கே ஏழுமலையை நமது ஆலோசனைப்படி தக்கவிதமாய் உன்னிடம் அனுப்பி விடுகிறேன். மேல் நடக்கும் சங்கதிகள் உடனுக்குடன் எனக்கு அறிவிக்கப் படட்டும்." என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றான்.

மறுநாள் மாலை ஆறுமணிக்கு கப்பலில் வேலை செய்யும் மாலுமியைப்போல் உடையணிந்த ஒரு வாலிபன் தஞ்சாவூர் ஹோட்டலுக்கு வந்து அதன் முதலாளியைக் காண வேண்டுமென்று வேலையாளிடம் கூறினான். இரண்டொரு விநாடிகளுக்குள் அவ் வாலிபனும் ஹோட்டல் சொந்தக்காரனாகிய இரங்கராவும் தனியாக அறையில் சந்தித்தார்கள்; இரங்கராவ் வாலிபனை நோக்கி எங்கே கடிதம் என்றதே, வாலிபன் தன் ஜேபியிலிருந்த கடிதத்தை யெடுத்து அவனிட மளித்தான்.

இரங்கராவ் கடிதத்தை வாங்கிப் பார்த்ததும் புன்னகையோடு, "சரி நீ இது முதல் என் ஹோட்டலில் வேலைக்கமர்ந்திரு. சிறைச்சாலையில் புதிதாக வந்திருப்பவர்களுக்குப் போசனம் கொண்டுபோக வேண்டும். மற்ற சங்கதி உனக்குத் தெரிந்ததே. நீ செய்துகொள்ள வேண்டியது;" என்றான்.

இப்போது ஹோட்டலில் வந்து வேலைக்காரனாக அமர்ந்தவன் வீரப்பனுடைய புத்திரனாகிய ஏழுமலையே. அவன் மிக்க தந்திர சாமார்த்திய முடையவனென்று முன்னம் கூறி யிருக்கிறோம், இப்போதவன் தன் மீசையைக் களைந்துவிட்டுக் கள்ளச்சிகை வைத்துக்கொண்டு சுமார் நாற்பது வயதுடைய ஒரு நொண்டியைப் போல் மாறுவேட மணிந்திருக்கிறான். அவன் முகத்தின் வலது பக்கம்

விழுந்து அடிபட்டது போன்ற வடுக்கள் இருக்கின்றன. இவையாவும் பொய் வேடமே. இரங்கராவுக்கு மட்டுமே அது தெரியும். அவன் இக் கள்ளருக்கு உள் உளவாக இருப்பவன் என்று முன்னமே கூறி யிருக்கிறோம்.

25-வது அத்தியாயம்

மூன் அத்தியாயத்தில் கண்ட சம்பவங்கள் நடந்த மறு நாள் காலை சுமார் பத்து மணி யிருக்கும். ஹோட்டல் காரனாகிய இரங்கராவ் சமையலறையில் காலைப் போசனம் ஆயத்தமாய் விட்டதாவென்று கவனித்துக் கொண்டிருக்கிறான். அச்சமயம் ஒரு வேலையாள் அவனருகில் ஓடிவந்து "ஐயா! சிறைச்சாலையிலிருந்து சாப்பாட்டிற்காக ஒரு உத்தியோகஸ்தர் வந்திருக்கிறார். உங்களைக் கூப்பிடுகிறார்," என்றான்.

ஹோட்டல்காரன் துரிதமாகச் சமையலறையைவிட்டு சிறைச்சாலை உத்தியோகஸ்தனிருக்கு மிடத்திற்கு வந்து அவனைக் கண்டு வந்தன மளித்தான். உத்தியோகஸ்தன் "என்ன ஐயா! சிறைச்சாலைக் கவர்னர் சாதாரணமாய் இது காறும் சிறையாளர்க்குச் சாப்பாடு தயார் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் ஆளிடமே இவர்களுக்கும் ஏற்பாடு செய் என்றார். நான் உனக்கு மெது வாய் அந்த வேலையில் இடந் தரக்கருதி "இவர்கள் கொஞ்ச காலமே இங்கிருந்துவிட்டுப் பிறகு மாகாணச்சிறைச் சாலைக்கு அனுப்பப்பட வேண்டியவர்க ளானபடியால் இவர்களிருவருக்கு மட்டுமே இதே வீதியிலுள்ள ஹோட்டலில் ஏற்பாடு செய்து விட்டேன்!' என்று கூறிவிட்டேன். அவர் சில விஷயங்களில் என்னிடம் பந்தப்பட்டிருக்கிறாராதலின் பேசாமலிருந்து விட்டார். இதோ மற்றப் பேர்களுக் கெல்லாம் ஆகாரம் வந்து கொண்டிருக்கிறது. நீ அனுப்பவேண்டிய இந்த இரண்டு பேருக்கு மட்டும் இன்னும் வரவில்லை. மணி பத்தரையாய் விட்டது," என்றான்.

இரங்கராவ்:—"நான் சாப்பாட்டைத் துரிதமாய னுப்புவதற்காகவே சமையலறையில் போயிருந்தேன். இன்று என் ஆட்களில் ஒருவன் போய்விட்டதால் வேறு ஆளைத் தேட நேர்ந்தது. அதனால்.........." என்றதே,

உத்தியோகஸ்தன்:—"ஆ! ஆட்கள் என்றதே நினைவுவந்தது. சிறைச்சாலைக்கு ஆகாரம் கொண்டுவரும் ஆட்கள் இந்த ஊரிலிருப்பவர்களாகவும், முக்கியமாக, சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளுக்கு அறிமுகமானவர்களாகவும் இருக்கலாகாது. இது முக்கியமான விஷயம்," என்றான்.

இரங்கராவ்:—"என்னிட மிருந்து கடந்த இரண்டொரு தினங்களாகச் சிறைச்சாலைக்குச் சாப்பாடு கொண்டு வந்த ஆள் போய்விட்டான். வேறு ஆள் அகப்படாமல் மிகக் கஷ்டப்பட்டேன். கடைசியில் நற்காலமாய் ஒரு ஆள் வேலையில்லாமல் அலைந்துகொண்டு இங்கு வந்தான். அவனுக்குச் சமையல்வேலை தெரியாது. அவன் கப்பலில் மாலுமியாயிருந்தவன், அவனுக்கு நம்மூர்ச் சங்கதியே தெரியாது. கடைசியில் விதியில்லை யென்று அவனை அமர்த்திக் கொண்டேன்," என்றான்.

உத்தியோகஸ்தன்:—"பேஷ்; இது மிக்க நலமே. அப்படியாயின், அவனிடமே சாப்பாட்டைக் கொடுத்தனுப்பு. நாங்கள் அதிக சிரத்தையோடு கவனிக்க வேண்டிய அவசியமே யில்லை. அந்த ஆளைமட்டும் எனக்குக் காட்டிவிடு; ஏனெனில் அவன் வந்தால் நான் கூட சிறையாளர் அறைக்குச் செல்லாமல் இவனையே அனுப்பி விடுவேன்," என்றான்.

இரங்கராவ்:—"தங்களுக்கு அவ்வாறு பிரியமாயிருக்கும் போது, தங்கள் கட்டளை அப்படியிருக்கிறவரையில், நான் ஒருபோதும் அதற்கு மாறாக நடக்கமாட்டேன். இவனிடமே அந்த இரண்டு புதுக் கைதிகளுக்கும் ஆகாரம் கொடுத்தனுப்புகிறேன்," என்றான்.

சிறைச்சாலை உத்தியோகஸ்தன் "அவர்கள் புதுக் குற்றவாளிகளல்ல. முன்பு பெரிய பாங்கியில் கொள்ளையடித்துத் தண்டனை அடைந்தவர்களே, தந்தையும் மகனும் அவர்களே. அவர்களோடு உளவாக இருந்தவர்கள் வேறிருக்கிறார்கள். ஆனால் இக்கள்ளப் பயல்கள் தங்கள் உளவாளிகளைக் கூறவேயில்லை........" என்றதே,

இரங்கராவ்:—"ஆகா! அக் கள்ளர்களா? சிறைச்சாலையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு போய் விட்டார்களென்றும், அவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு, அல்லது அவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அறிவிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாய்ப் பிரசுரம் செய்யப்பட்டிருந்ததே, அவர்கள்தானே?...." என்றான்.

உத்தியோகஸ்தன்:—ஆ! அவர்களே; எங்கள் ஆட்களால் மறுபடி மிக்க சாமர்த்தியமாய்ப் பிடிக்கப் பட்டார்கள்.

இரங்கராவ்:—"ஆ! அத்தகைய கள்ளர்கள் தங்கள் உளவாட்களை வெளியிட மாட்டார்கள். இப்படிப்பட்டவர்களை அடியோடு தொலைத்து விட்டால் தான் நமது சொத்தும் உயிரும் பத்திரமாக இருக்குமென்று கொஞ்சமேனும் நம்பலாம். இல்லாவிட்டால் அந்தோ! என் போன்றவர்களின் கதி என்னாகுமோ? கடவுளே என்று பெரும் பீதியடைந்தவன் போல் நடுக்கத் தோடுகூறினான்.

உத்தியோகஸ்தன்:—இச்சமயம் அவர்கள் மறுபடி தப்பித்துக்கொண்டு போக முடியாது. சிறைச் சாலையில் மிக்க கண்டிப்பான ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அது பற்றியே அவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வருகிறவர்களைப் பற்றிக்கூட மிக்க எச்சரிக்கையாய் இருந்து வருகிறோம்.

இரங்கராவ்:—ஆம் ஆம்! இத்தகைய ஆசாமிகளை மிக்க ஜாக்கிரதையாகவே கவனிக்க வேண்டும்.

உத்தியோகஸ்தன்:—"சரி! இச் சாப்பாட்டு விஷயத்தில் நான் வீணைச் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை," என்றான்.

அதற்குள் புதிதாக வந்த ஆள் தன் எஜமானுகிய ஹோட்டல்காரன் எதிரில் வந்து நின்றான். அவன், உத்தியோகஸ்தனுக்கு அவனைக் காட்டி "இவன் தான் நான் கூறிய ஆள்; புதிதாக வந்தவன்," என்றான்.

உத்தியோகஸ்தன்:—"மிக்க சந்தோஷம். இத்தகைய ஆள் தான் சரி. சீக்கிரம் இவனிடமே ஆகாரத்தைக் கொடுத்தனுப்பு. இனி வேறு யாரிடமும் அனுப்பாதே," என்றான்.

ஹோட்டல்காரன்:—தங்கள் கட்டளைப்படியே நடந்து கொள்வேன்," என்றான்.

இரண்டொரு நிமிடங்களில் சிறைச்சாலை உத்தியோகஸ்தன் ஹோட்டல்காரனிட முள்ள உயர்ந்த குடிவகைகளில் தனக்குப் பிரியமானவற்றைத் திருப்தியாக அருந்தி விட்டுச் சென்றான்.

சுமார் ஒரு மணி நேரங் கழித்து மாறுவேட மணிந்த ஏழுமலை சிறையிலிருக்கும் இருவர்க்கும் போசனம் எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று தன்னிட மிருக்கும் அனுமதிச் சீட்டை வாயில் காப்போனிடம் காட்டி

ஞன். அவன் அதை வாசித்துப் பார்த்து "அதோ அந்த அறையில் இருக்கும் உத்தியோகஸ் தரிடம் செல்; அங்கு உன்னைச் சோதனை செய்துகொண்டு நீ செல்ல வேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்வார்கள்," என்றான்.

ஏழுமலை முன்பின் தெரியாத ஒரு இடத்திற்கு வராதவன். எப்படி மிரட்சியடைவானே அதுபோல் மிரண்ட பார்வையோடு காவலன் காட்டிய அறைக்குள் சென்றான். அங்கு சற்றுமுன் தான் ஹோட்டலில் கண்ட உத்தியோகஸ்தனை உட்கார்ந்திருக்கக் கண்டு பீதியடைந்தவன் போல் மிக்க தாழ்மையாய்க் குனிந்து வந்தனை மளித்து "துரையே! தஞ்சாவூர் ஹோட்டலிலிருந்து இரண்டு கைதிகளுக்குச் சாப்பாடு கொண்டுவந்திருக்கிறேன்," என்றான்.

உத்தியோகஸ்தன் "ஆ! சரி," என்றெழுந்து, என் கூட வாவென்று அவனை அழைத்துக்கொண்டு, அங்கிருந்து பெரிய கூடத்தைக் கடந்து நீண்ட ஒரு தாழ்வாரத்தின் வழியாகச் சென்று கடைசியில் இன்னொரு பெரிய கூடம் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அக் கூடத்தின் இரு புறங்களிலும் வரிசையாக அறைகளிருந்தன. ஒவ்வொரு அறையின் கதவின் மேலும் பெரிய வெள்ளை எழுத்துக்களால் இலக்கங்கள் போடப் பட்டிருந்தன.

உத்தியோகஸ்தன் அக் கூடத்தில் நின்றதும், அங்கு காவலிலிருந்த ஆளை நோக்கி "அடே 40-வது அறையையும் 41-வது அறையையும் திற. இவன் அந்த இரண்டு ஆட்களுக்கும் சாப்பாடளித்து விட்டு அவர்கள் சாப்பிட்டதே பாத்திரங்களை எடுத்துச் செல்வான்," என்று கூறிவிட்டு ஏழுமலையை நோக்கி "நான் செல்கிறேன். நீ கைதிகளை, நீ யார் என்னவென்று ஒன்றுங் கேட்காதே; தெரி

யுமா? போசன மளித்துவிட்டுப் பேசாமல் வெளியில் வந்துவிடு. அவர்கள் பேசினாலும் பேசாதே. தெரிமா?" என்றான்.

ஏழுமலை:—"அவர்களிடம் செல்லவே எனக்குப் பயமாக இருக்கிறது, நான் சீக்கிரம் சாப்பாட்டை அளித்து விட்டு வந்துவிடுவேன்," என்றான்.

உத்தியோகஸ்தன் போய் விட்டான். அங்கிருந்த காவலன் முதல் 40-வது அறையைத் திறந்துவிட்டு 41-வது அறையின் முன்சென்று நின்றான். ஏழுமலை சாப்பாடு கொண்டுவந்த கூடையோடு அறைக்குள் சென்றதும் உள் ளேயிருந்த பெரிய கள்ளன் அவனைக் கண்டு திடுக்கிட் டான். ஆனால் மறுவினாடியே சாதாரணமாய் விட்டான். அதற்குள் ஏழுமலை சட்டென்று தன் மடியிலிருந்த ஒரு கடித உறையை அவனிடமளித்தான். கள்ளன் அதைச் சட்டென்று தன் படுக்கையின்கீழ் சொருகி மறைத்துவிட் டான். ஏழுமலை அதன்பின் கூடையிலிருந்த சாப்பாட்டு மூட்டைகளில் ஒன்றை எடுத்து அக்கள்ளன் முன் வைத்து விட்டு நாற்பத்தோராவது அறைக்குச் சென்றான்.

ஏழுமலை அந்த அறைக்குள் சென்றதும் காவலன் சென்று நாற்பதாவதறையைப் பூட்டிக்கொண்டு திரும்பி வந்தான். அதற்குள் ஏழுமலை தன் மடியிலிருந்த இன் னொரு கடித உறையை எடுத்துச் சின்னக் கள்ளனாகிய சுப் பனிடம் கொடுத்துவிட்டு இரண்டாவது சாப்பாட்டு மூட் டையை அவன்முன் வைத்துவிட்டு வெளியில் வந்தான். பிற்பகல் வந்து ஏனங்களை எடுத்துச் செல்லவேண்டும். பிறகு இரவு தீபம் வைத்ததும் இராப் போஜனம் கொண்டு வந்து கொடுக்கவேண்டும்.

போஜன பாத்திரங்கள் கொண்டு போகப்பட்டபின் கதவு பூட்டப்பட்டதும் மூத்த கள்ளனாகிய கேசவன்

தனக்கு வந்த கடித உறையை எடுத்துப் பிரிக்கத் தொடங்கினான். அச்சமயம் அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசமுண்டாயிற்று. உறையைக் கிழித்ததும் அதற்குள் ஒரு கடிதமும், இரண்டு மிக்க கூர்மையும் உறுதியுமான அரங்களும், ஒரு சிறு புட்டியில் ஒருவித திராவகமும், கொஞ்சம் கறுப்பு மெழுகும் இருந்தன. அவன் கடிதத்தை முழுமையும் இருமுறை வாசித்துப் பார்த்தான். அக் கடிதம் நான்கு பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது. அதை வாசிக்க வாசிக்க அவன் மனம் மிக்க உற்சாகத்தையும், துணிகரத்தையும், மகிழ்ச்சியையும் அடைந்தது. அச் சாமான்களோடு அக் கடிதவுறையில் ஒரு எழுதாத கடிதமும், ஒரு பென்ஸிலும் கூடவிருந்தன.

கேசவன் சுமார் அரைமணி நேரம் சிந்தித்தபின் இரண்டு கடிதங்கள் எழுதத் தொடங்கினான். ஒன்று தன் நண்பனாகிய வீரப்பனுக்கும் மற்றொன்று தன் புத்திரனாகிய சுப்பனுக்கும் வரைந்தான். ஆனால் அக் கடிதங்களில் வரைந்துள்ள சங்கதிகள் பின்னால் நமது கதையின் தொடர்ச்சியால் வெளியாகுமாதலின் இங்கு அதைப்பற்றி விவரிக்க வேண்டியது அனாவசியமாகும்.

சுப்பன் தன்னிடத்தில் அளிக்கப்பட்ட கடித உறையைப் பிரித்துப் பார்த்தபோது அதிலும் ஒரு வரைந்த கடிதமும், இரண்டு அரங்களும், ஒரு திராவகம் நிறைந்த புட்டியும், கொஞ்சம் மெழுகும், கடிதம் பென்ஸிலும் இருந்தன. அவனும் தன் தந்தையைப்போல் மிக்க சந்தோஷமடைந்து அவற்றை எல்லாம் பத்திரமாக வைத்துவிட்டு மாலை ஆகாரம் வருவதற்குள் தன் தந்தைக்கும் வீரப்பனுக்குமாக இரண்டு கடிதங்கள் எழுதி வைத்தான்.

ஏழுமலை, அன்று இராப் போஜனம் கொண்டு வந்தபோது, சுப்பன் கடிதத்தை அவன் தந்தையிடமும், தந்தை

யின் கடிதத்தைச் சுப்பனிடமும் அளித்துவிட்டு, அவ் விருவரும் வீரப்பனுக்கு வரைந்த கடிதங்களை எடுத்துக் கொண்டு சென்றான். வீரப்பன் தினம் ஹோட்டலுக்கு வந்து நடந்த சங்கதிகளைக் கேட்டறிந்துகொண்டிருந்தான்.

ஏழுமலை மிகக் கொஞ்சமாய்ப் பேசுவதோடு சிறைச் சாலையில் அக்கள்ளர்களிருக்கும் பாகத்தில் காவலிருந்த ஆளுக்குப் பலகாரம் சாராயம் முதலியவைகளைக் கொண்டு போய்க் கொடுத்துக்கொண் டிருந்தான். அதனால் அக் காவலன் தன்வரையில் அவன் கொடுக்கும் சாராயத்தைக் குடித்துச் சிற்றுண்டி பலகாரங்களை யருந்திக்கொண்டு ஏழுமலையையே அக்கள்ளர்கள் இருவர்க்கும் ஆகாரம் கொண்டு போய் கொடுத்துவிட்டுச் சாவியைப் பத்திரமாகக் கொண்டு வந்து தன் கையிலளிக்கும்படிக் கட்டளை யிட்டுவிட்டுத் தான் தன்னிடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருக்கத் தொடங்கினான். இதனால் கள்ளர்களுக்கு வெளியிலுள்ள தங்கள் நண்பனிடமிருந்து கடிதங்கள் வரவும் தாங்கள் அவனுக்குக் கடிதமனுப்பவும், தங்கள் இரகசிய ஆலோசனைக்கு அவசியமான கருவிகளை வரவழைத்துக்கொள்ளவும் பூரண அனுகூலம் ஏற்பட்டது.

இரண்டு மூன்று நாட்கள் விவகாரங்கள் இவ்வாறே நடந்துகொண் டிருந்தன. பிறகு ஒருநாள் சிறைச்சாலைக் காவலன் தினம் நடக்கும் வழக்கம்போல் அறைகளைச் சுத்தம் செய்யும் ஒரு மூதாட்டியை அழைத்துக்கொண்டு நாற்பதாவது அறையைத் திறந்து அந்த அறையைச் சுத்தம் செய்யும்படி அவளை யுள்ளே அனுப்பிவிட்டு அவன் வெளியில் உலாவிக்கொண் டிருந்தான்.

உள்ளே அறையைச் சுத்தம் செய்யச் சென்ற மூதாட்டி உள்ளே சென்றதும் காவலன் வெளியிலேயே

இருப்பதை அறிந்துகொண்டு அறையைச் சுத்தம் செய்யத் தொடங்கிக் கடைசியில் கதவின் பின்பக்க மூலையைச் சுத்தம் செய்யக் கதவை மூடினாள். ஆனால் அவ்வாறு மூடியதும் அவள் செய்த காரியம் பெரிய கள்ளனுக்கே மிக்க வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கிவிட்டது.

ஏனெனில் அம்மூதாட்டி கதவை மூடியவுடன் தன் தேகத்தைக் கதவிற்கு ஒரு முட்டுபோல் வைத்துக்கொண்டு பெரிய கள்ளனாகிய கேசவனை நோக்கி மூக்கின்மேல் விரலை வைத்துக்காட்டிப் பேசாமலிரு என்று சமிக்ஞை செய்து தன் மடியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவனிடமளித்துப் பிறகு துரிதமாய்த் தன் உடைக்குள் இடுப்பில் சுற்றிக்கொண்டிருந்த ஒரு கயிற்றை எடுத்து அவனிடமளித்தாள். அவன் சட்டென்று அதையும் கடிதத்தையும் தன் படுக்கையின்கீழ் மறைத்துவிட்டான்.

அவள் கொடுத்த கயிறு ஒரு பலமான நூலேணி செய்யப் போதுமான கயிறு. பலம் பொருந்திய நாரினால் மணிபோல் திரிக்கப்பட்டது. அதன் பிறகு கிழவி அந்த அறையைச் சுத்தி செய்தபின் நாற்பத்தோராவது அறைக்குச் சென்றாள். அங்கு அவள் சென்றபோது காவலன் பாட்டுப் பாடிக்கொண்டே நாற்பதாவதறையைப் பூட்டிக்கொண்டு மறுபடி கிழவி மற்ற அறையிலிருந்து வருமட்டும் பாடிக்கொண்டு உலவிக்கொண்டே யிருந்தான்.

சின்னக் கள்ளனாகிய சுப்பனும் கிழவியின் நடக்கையால் திடுக்கிட்டு விட்டானாயினும் வெளியிலுள்ள தங்கள் நண்பனின் செய்கை என்று உணர்ந்து மௌனமாக விருந்தான். கிழவி அவனுக்கும் பேசாம லிருக்கும்படி சமிக்ஞை செய்து, அவனிடம் ஒரு கடிதத்தை மட்டு மளித்தாள்.

இப்போது அவர்களுக்கு எழுமலை ஒருவன் மட்டுமல்ல, இருவர் தூதாட்கள் கிடைத்தார்கள். இக்கிழவி

ஹோட்டல்காரனாகிய இரங்கராவின் சுற்றத்தான். சுமார் நான்கு வருடங்களுக்கு முன் அவன் ஒரு ஆதரவுமின்றி அவனிடம் வந்துவிட்டான். அவன் சிறைச்சாலை அதிகாரிகளின் தயவால் அவனுக்குச் சிறைச்சாலையின் ஓர் பாகத்தைப் பெருக்கும் வேலை கிடைக்கும்படிச் செய்தான். அவன் மிக்க அற்பகுண முடையவன். இரங்கராவ் எப்படி எதைச் செய்யும்படிக் கூறுகிறானோ அதை அப்படியே செய்பவன். அதனால் அவன் தூண்டுதலாலேயே அவன் இத்தகைய காரியங்களைச் செய்யத் துணிந்தான். நாம் செய்வது நியாயமா அநியாயமா, நீதிக்குச் சம்மதமா அல்லவா, என்ற ஒன்றுமே அவனுக்குத் தெரியாது. இரங்கராவ் பாங்கிக் கொள்ளையிலும், இன்னும் பல கொள்ளைகள் முதலிய விவகாரங்களிலும், கேசவனோடும் சுப்பனோடும் சம்பந்தப்பட்டிருப்பவன். ஆனால் கள்ளர்களுக்குள் இருக்கும் கூட்டுறவால் இச்சங்கதி இதுகாறும் வெளிவரவேயில்லை.

சாதாரணமாக ஹோட்டல்காரரில் பெரும்பாலோர் கள்ளர்களுக்கும் வழிபறிக் கொள்ளைக்காரருக்கும் உடந்தையாக இருப்பவர்களே. நாம் இப்படிக் கூறுவதில் எங்கும் எல்லா ஹோட்டல்காரர்களும் இப்படித்தானிருக்கும் என்று கருதிக்கொள்ளலாகாது. இப்போது நாம் வரையும் இந்த நாவல் மேல் நாட்டு நாவல். இதில் மேல் நாட்டு ஆசாரங்களும் நடை யுடை பாவனைகளுமே பெரும்பாலும் காணலாம். அவற்றில் அனேகம் ஆபாசங்களிருக்கின்றன. அப்படியிருக்க அவற்றையேன் நீர் எழுதுகிறீர் என்றால் அதற்குத் தக்க காரணம் இருக்கிறது. என்னவெனில் :—

இக்காலத்தில் நம் நாட்டாரில் பெரும்பாலோர் மேல் நாட்டு நாகரிகம் நடையுடைபாவனைகளை அதிகமாய் மெச்சி

அவற்றைத் தாங்கள் பின்பற்றுவதன்றித் தங்கள் சந்ததி வழி வந்தோரையும் அந்நிய வழியில் பயிற்றுகிறார்கள். இத்தகையோர் மேல்நாட்டு நாகரீக வெளிப்பகட்டில் மயங்கி பிரமைகொண்டு தாம் சாக மருந்துண்போருக்குச் சமானமானவர்களே. ஆதலின் மேல்நாட்டு ஆசாரங்களையும் ஒழுக்கங்களையும் அவர்களது நாகரீகமென்று மயக்கத்தால் கருதப்படும் ஆபாசங்களையும் வெளியிட்டு, அவற்றாலுண்டாகும் தீமைகளை நன்றாக வெளிப்படுத்தி அத்தகைய ஆசாரங்களைக் கண்டித்து நம்மவர்க்கு அறிவுறுத்தவேண்டுமென்பதே நமது கருத்து. நாம் வரையும் ஒவ்வொரு நாவலும் இந்த உண்மையை ஆதித்தனொளிபோல் நன்கு வெளிப்படுத்தும்.

ஆனால் சூரியன் தன் எண்ணிறந்த கிரணங்களை வீசிச் சகச்சோதியாய்ப் பிரகாசித்தாலும் சூரியனும் இருட்டாகத் தானிருக்கிறதென்று கூறத் தக்க குருடனும் உலகிலிருந்கிறானன்றோ. ஏனெனில் குருடனுக்குச் சூரியனொளி எப்படித்தெரியும்? அவனுக்கு யாவும் இருட்டே. அதுபோல் நமது நாவல்களை வாசித்து நாம் என்ன நோக்கத்தோடு அவற்றை வரைகின்றோம் என்றுணர அறிவு ஆற்றல் போதாத ஒருவர், "ஆரணி குப்புசாமி முதலியார் நாவல்களை எழுதித் தென்னாட்டு மாதர்களை அடியோடு கெடுத்து விட்டார்............" என்று மனங்கூசாது வாய்கூசாது ஒரு சஞ்சிகையில் வரைந்திருக்கிறார். ஆனால் அவர் வேறு ஒரு விஷயத்தைப்பற்றிய துவேஷ புத்தியால் அவ்வாறு வரைந்தாரே யன்றி, மற்றப்படி அவரது மனசாட்சியே அது தவறென்று அவருக்குக் கூறாமற் போகாது.

ஆகையால் நாம் ஹோட்டல்கள் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறியது மேல்நாட்டு ஹோட்டல்களையே யாகும்.

அங்குக் கள்ளர்கள் ஹோட்டல்களில் அதிகமாகப் புழங்கு வார்கள். தமது ஹோட்டலுக்கு வருபவர்களில் இன்னின்னவன் கள்ளன், இன்னவன் பெரிய கொள்ளைக்காரன், பேர்போன வழிப்பறி கொள்ளைக்காரன் என்பது முதலிய விஷயங்களனைத்தும் ஹோட்டல் முதலாளிக்கு நன்ருகத் தெரியும். ஆயினும் அவன் அவற்றை யொருபோதும் வெளியிடமாட்டான்.

ஏனெனில் முதலாவது அவர்கள் ஹோட்டலில் வந்து மிக்க தாராளமாகப் பணத்தைச் செலவு செய்வார்கள். ஹோட்டல்காரன் கிரையப்பட்டியில் ஒரு அணு பெறு மான வஸ்துவுக்கு இரண்டணு போட்டிருந்தாலும் பேசாமல் கொடுத்து விடுவார்கள். ஏனெனில் "பகலிலும் இரவிலும் அகாலத்தில் வந்தாலும் அவன் தங்களுக்கு இடமும் உணவு முதலியவையும் மற்ற சௌகர்யங்களும் அளிப்பான்," என்பது கள்ளர் நோக்கம்.

ஹோட்டல்காரனே தன் வரையில் மிக்க ஜாக்கிரதையாகவே நடந்துகொள்வான். தன் ஹோட்டலில் வந்திருப்பவன் பிரசித்தி பெற்ற கள்ளன் என்றும் இப்போது தான் வர்த்தகனென்று மாறு பெயர் கூறுகிருனென்றும் அறிந்திருந்தாலும் ஒன்று மறியாதவன் போலவே நடிப்பான். போலீஸாருக்கும் அவர்களைக் காட்டிக்கொடான். ஏனெனில் அப்படி ஒரு கள்ளனைக் காட்டிக் கொடுத்தால் அக்கள்ளனுவது அவனைச் சேர்ந்தவர்களில் யாராவது தன்மேல் பயங்கரமான வஞ்சம் தீர்த்துக்கொள்வார்கள் என்று ஹோட்டல்காரன் நன்கறிவான். ஒவ்வொரு ஹோட்டல்காரர் கள்ளருக்கு உளவாகவிருந்து கொண்டு தங்கள் ஹோட்டலுக்கு வரும் பிரயாணிகளில் யாரிடமேனும் அதிகப்பொருள் இருப்பதாகத் தெரிந்தால் அவர்கள் எந்த வேளையில் எந்தத்திக்கை நோக்கிச் செல்லப்

போகிறார்களோ அதைக் கள்ளருக்கு அறிவித்துக்கொள் ளைப் பொருளில் பங்கு பெற்றுக் கொள்வார்கள். மேலே கூறப்பட்ட தஞ்சாவூர் ஹோட்டல்காரனாகிய இரங்காரவ் இத்தகையோனே.

26-வது அத்தியாயம்

சிறையிலிருக்கும் இரண்டு கள்ளருக்கும் வெளியி லுள்ள தங்கள் சிநேகிதர்களின் உதவியேற்பட்டு விடவே மிக்க சந்தோஷமும் தைரியமும் உண்டாகிவிட்டது வீரப்பன் அவர்களுக்குக் கொஞ்சம் பணம் அனுப்பினான். கொஞ்சநாள் சென்றால் தங்களை வேறு சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடுவார்கள் என்று அவர்களுக்குத் தெரி யும் ஆதலால் உடனே தங்கள் ஆலோசனைப்படி வேலை செய்யத் தொடங்கினார்கள்.

இவர்கள் இருக்கும் அறைகளின் பின்பக்கம் சாள ரங்களுண்டு. அவற்றில் இரும்புக் கம்பிகள் நாட்டப்பட் டிருக்கின்றன. சாளரங்கள் பின்பக்கமிருக்கும் நீண்ட விசாலமான முற்றத்தைப் பார்த்தது போலிருக்கின்றன. அம்முற்றத்தில் கைதிகள் முறைப்படி உலவுவதற்கு விடப் படுவார்கள். அம்முற்றத்தின் மறுபக்கம் பெரிய மதில் சுவர் இருக்கிறது. அம் மதில் ஓரத்தில் ஒரு சிறு அறை வீடிருக்கிறது. அங்கு ஒரு பாராக்காரன் எப்போது மிருப்பான்.

ஒரு நாள் மாலை ஐந்துமணியிருக்கும். அச்சமயம் சிறைச்சாலையிலுள்ள அறைகளையெல்லாம் சுத்தம் செய் யும் மூதாட்டி வந்து 41-வது அறையைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறாள். காவலன் வாயிற்படியில் நின்று கொண்டிருக்கிறான். சுப்பன் அவனை நோக்கிச் சமிக்கை

யாய்த் தன்னருகில் அழைத்தான். காவலன் அவன் அருகிற் சென்று என்ன சங்கதி யென்றான்.

சுப்பன் "நண்பனே! ஆம், நீ எங்கள் மேல் காவல் காத்தாலும் நான் உன்னை நண்பனெனவே கருதுகிறேன். ஏனெனில் நீ ஜீவனத்திற்கு இந்தத் தொழிலைச் செய்கிறாயே யன்றி எங்கள் மேல் விரோதங்கொண்டு எங்களை வெளியிற் சொல்லாதபடி அடைத்து வைத்துக்கொண்டு காவல் புரிய வில்லை. இதற்காக உன்மேல் நாங்கள் வெறுப்புக்கொள்ள எள்ளளவு காரணமுமில்லை. நீ உனக்கு உப்பளிப்பவர்களுக்குத் துரோகம் செய்யலாகாது........" என்பதற்குள் காவலன் "நீ இவ்வளவு பெருந் தன்மையாகக் கூறுவதற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். நீ கூறுவது உண்மையே. இத்தகைய நல்ல உதாரகுணமுள்ள நீங்கள் அநீதமாகவே தண்டனை அடைந்திருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்" என்றான்.

சுப்பன் "அந்தோ! அந்த அக்கிரமத்தை ஏன் கேட்கிறாய்? என் தந்தை போலீஸ் அதிகாரிகளுக்குக் கொடுத்திருந்த ஆயிரம் ரூபா கடன் தொகையைக் கண்டித்துக் கேட்கப்போம் இந்த அபாண்டமான களவுக் குற்றம் எங்கள்மேல் சுமத்தப்பட்டுத் தண்டனையும் அடைந்து விட்டோம். அதிகாரிக்குப் பயந்து எங்களுக்கு சாக்ஷி கூற ஒருவரும் வரப் பிரியப்படவில்லை. ஊரிலுள்ள எல்லாருக்கும் நாங்கள் நிரபராதிகளென்று நன்றாகத்தெரியும். ஆனால் அவர்கள் என்ன செய்யலாகும். நாங்கள் சிறை செய்யப்பட்டதைக் கேட்டதே சிறியோர் பெரியோர் அனைவர்களும் மனங்கலங்கிக் கண்ணீர் விட்டு எங்களுக்குத் தேறுதல்கூறி போலீஸ் அதிகாரியைச் சபித்தார்களே யன்றி வேறொன்றும் செய்யவில்லை. அவர்களுக் கென்னமோ மிக்க ஆத்திரமே. என் தந்தைமட்டும் அவர்களைச் சாந்தப்

படுத்திக் தடுக்காமலிருந்துவிட்டிருந்தால் அச் சமயம் அனர்த்தமே விளைந்திருக்கும்." என்றான்.

காவலன்:—"உங்களுக்கு என்னால் கூடிய உதவி யெதுவாயினும் செய்வேன்" என்றான்.

சுப்பன்:—"நான், நீ உன் கடமைக்கு விரோதமாய் நடக்கத் தக்க காரியத்தை யொருபோதும் கூறமாட்டேன். சிறைச்சாலைக் கதவைத் திறந்து விடுகிறேன், நீங்கள் ஓடிவிடுங்கள் என்று கூறினாலும் நாங்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டோம். நிரபராதிகளுக்கு எப்போதும் ஆண்டவன் துணையிருப்பான், ஒரு விஷயம் அதாவது, நாங்கள் மிக்க செல்வவந்தரல்ல. எனினும் சற்று நாணயமாகவும் நிம்மதியாகவுமேவாழ்ந்து வந்தோம். இப்போது எங்களுக்கு நாங்கள் வழக்கமாய் அனுபவித்து வந்த சௌகரியங்கள் இங்கே கிடைக்கவில்லை. ஆகையால் உன் மூலமாய் இரண்டொரு முக்கியமான வஸ்துக்களைத் தருவித்துக் கொள்ளலா மென்பது என் கருத்து. உனக்குப் பிரியமிருந்து அந்த அற்ப உதவியைச் செய்தால் நாங்கள் ஒருபோதும் அந் நன்றியை மறக்கமாட்டோம்," என்றான்.

காவலன் "இவர்களிடம் பண மிருக்கிறது. நமக்கும் கிடைக்கும்" என்று உணர்ந்துகொண்டு "நீ யொன்றுக்கும் கிலேசப்பட வேண்டாம். உங்களுக்கு என்ன வேண்டுமோ கூறுங்கள், நான் இரகசியமாய்க் கட்டாயம் வாங்கி வந்து அளிக்கிறேன்," என்றான். சுப்பன் அச்சமயம் அவனிடம் ஒரு சவரனை யளித்து "ஒரு புட்டி பிராந்தியும் இரண்டு கிச்சிலிப்பழங்களும் வாங்கிக்கொண்டு வந்தால் மிக்க புண்ணியமாகும்," என்றான்.

காவலன், "ஆகா அப்படியே வாங்கி வருகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான். சுப்பன் அவன் வாங்கி வந்த சாராயத்தில் தான் குடித்து அவனுக்கு மளித்து மீதியை அவன் மூலமாகவே தன் தந்தைக்கு மனுப்பினான். அதுமுதல் இத்தகைய விஷயங்களில் அக்காவலனும் இவர்களுக்கு அனுகூலமாய் விட்டான். அது முதல் சுப்பன் தினம் அவனிடம் மிக்க அன்புடையவன்போல் பேசிச் சிறைச்சாலையில் நடக்கும் விஷயங்களில் தங்கள் நோக்கத்திற்கு எவ்வளவு சங்கதிகள் அறியவேண்டுமோ அவ்வளவும் நன்றாக அறிந்து கொண்டான்.

அவை யென்ன சங்கதிகளெனின்; அச் சிறைச்சாலையில் முன்னே ஒரு விலாசமான கூடமிருக்கிறது. அங்கு மூன்று அறைகளிருக்கின்றன. ஒரு அறை சிறைச்சாலையதிகாரியின் இரகசிய அறை. இரண்டாவதறை அவருடைய காரியாலயம். அங்கு இரண்டு மூன்று இலிகிதர்கள் தினம் பகற்காலத்தில் வந்துவேலை செய்துவிட்டு மாலை நான்கு மணிக்குமேல் போய் விடுவார்கள். அந்தக் கூடத்திற்கு முன்னுள்ள விசாலமான முற்றத்தில் ஒரு சிறு மாடி வீடிருக்கிறது. அதுதான் சிறைச்சாலை யதிகாரியின் வாசஸ்தலம். அவருக்கு இப்போதிருப்பது இரண்டாவது மனைவி. அவளுக்கு ஒரேயொரு புத்திரன்றான் இருக்கிறான். அவருடைய முதல் மனைவிக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள். இரண்டாம் மனைவி அவர்களை அன்போடாதரிப்பதேயில்லை. அதனால் தந்தைக்கு மிக்க மன வியாகுலம். அவர் சிறைச்சாலையில் தன் வேலையைக் கவனித்துக்கொண் டிருக்கும்போதும் அவர் மனம் "அந்தோ! நமது மக்களை அச் சண்டாளி என்ன பாடு படுத்துகிறாளோ?" என்பதையே கலக்கத்தோடு சிந்தித்துக்கொண்டிருக்கும். அடிக்கடி வீட்டிற்குச் சென்று தமது முதல் மனைவியின் மக்களைக் கவனிப்

பதிலேயே அவருக்கு விருப்பம். இக் காரணத்தால் தமது வேலையைப் பெரும்பாலும தம்மிடமிருக்கும் காவலர் வசத் திலேயே விட்டுவிடுவார்.

இச் சங்கதிகளை யெல்லாம் சுப்பன் அக் காவலனிடம் சினேகபாவமாகப் பேசியே யறிந்து கொண்டான். அந்த முன் கூடத்திலிருந்து ஒரு நீண்ட சுரங்கம் போன்ற வழி பின்னுள்ள ஒரு முற்றத்திற்குச் செல்கிறது. அம் முற் முற்றத்தின் மூன்று பக்கங்களிலும் ஒரு பக்கத்திற்கு எட்டு அறைகள் வீதம் இருபத்திநான்கு அறைகளிருக்கின்றன. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு கைதியே வைக்கப்படு வது, இவையன்றி அற்ப குற்றம் செய்தவர்களை வைக்கும் வேறு முப்பதறைகள் சிறைச்சாலையின் முன் பக்கமுள்ள மதில் ஓரத்திலிருக்கின்றன. இந்த உள் முற்றத்திலிருக்கும் அறைகளில் நமது கள்ளர் இருக்கும் இரண்டறைகளும் பின்பக்கமுள்ள முற்றத்தையும். அதன் ஓரத்திலுள்ள மதில் சுவரையும் பார்த்தார்போலிருக்கின்றன வென்று முன்னமே கூறினோம்.

அந்த முற்றத்தில் மதிலோரத்தில் உள்ள ஒரு சிறு குடிசை அறையில் ஒரு காவலனிருக்கிறு னென்றும் கூறி னோம். அங்குப் பகலில் முற்பகல் ஒருவனும் பிற்பகல் ஒரு வனும், இரவில் அப்படியே முற்பாதி யிரவில் ஒருவனும் பிற்பாதி யொருவனுமாக இருவர் மாறி மாறிக் காவலிருப் பார்கள். சுப்பன் சினேகம் செய்துகொண்ட காவலன் எப்போதும் பிற்பகல் ஒரு மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரையில் காவல் இருக்க வேண்டியவன்.

சுப்பன் அவனிடம் தந்திரமாகப் பேசிக்கொண்டே "பாபம் உன் வேலை மிகக் கஷ்டமே. இரவு ஒன்பது மணிக்குமேல் வீட்டிற்குச் செல்லவேண்டும்," என்றான்.

காவலன்:—ஆம் ஒரு விஷயத்தில் கஷ்டமே. ஆயினும்

மணி ஒன்பதடித்து விட்டால் இங்கு இப்பாகத்தி லுள்ள சிறையாளர் இருக்கும் அறைகளை மட்டுமே திறந்து உள்ளே அவர்கள் போசனம் செய்தபின் பேசாமற் படுத்துக்கொண் டிருக்கிறார்களா வென்று பார்த்துக் கொண்டு கதவை மூடிப் பூட்டிக்கொண்டு நான் நேராக வீட்டிற்குச் செல்ல வேண்டியதே.

சுப்பன் இம்மொழிகளைக் கேட்ட பின் பக்குவமாகச் சில சங்கதிகளை அறியும் வண்ணம் தந்திரமாகப் பேசத் தொடங்கி,

"அது சரிதான். ஆயினும் நீ சுலபமாய் விஷயத்தைக் கூறிவிட்டாய். ஆனால் பாபம் உனக்கும் கஷ்டமிருக்கிறது. ஏனெனில், அறைகளைப் பார்த்தபின் கதவுகளை மூடிப் பூட்டிக்கொண்டு சிறைச்சாலை அதிகாரியிடம் சென்று யாவும் திருப்திகரமாகவே இருக்கின்றன என்று கூறிவிட்டு அதற்கு வேண்டிய பத்திரங்களில் கையொப்பமிட்டு விட்டுப் பிறகுதான் நீ செல்லவேண்டும். உன் வேலை முடிந்து விட்டாலும் அதிகாரிக்கு வேறு வேலை யிருந்தால் அதை அவர் முடித்துக் கொண்டு உன் வேலையைக் கவனிக்கு மட்டும் காத்திருந்து, அவர் அதைக் கவனித்து, "சரி; நீ செல்லலாம்," என்ற பிறகே நீ செல்லவேண்டும்," என்றான்.

காவலன்:—"நண்பனே! நீ கூறுவது உண்மையே கொஞ்சகாலத்திற்கு முன் வரையில் நீ கூறிய மாதிரி தான் விவகாரங்கள் நடந்துகொண்டிருந்தன. ஆனால் இப்போதிருக்கும் சிறைச்சாலை அதிகாரி வந்தபின்—நான்தான் அவருடைய குடும்ப விஷயங்களைப்பற்றிய எல்லாச் சங்கதிகளையும் உன்னிடம் கூறினேனே— இங்கு சிறைச்சாலை நடவடிக்கைகளெல்லாம் மாறி

விட்டனர். என் வரையில் நான் பகல் வந்தது முதல் என் வேலைகளைச் சரியாய்க் கவனித்துக்கொண் டிருப் பேன். இரவு ஒன்பது அடிக்கப் பத்து நிமிடங்கள் இருக்கும்போது என் வசத்திலிருக்கிற அறைகளைத் திறந்து அவற்றிலுள்ள சிறையாளர்கள் பேசாமல் சயனித்து, யாவும் திருப்தியாக யிருந்தால் உடனே கதவுகளைப் பூட்டிக்கொண்டு சாவியைக் கொண்டு போய் மாட்டி விட்டுப் பேசாமல் வீட்டிற்குச் செல்லவேண்டியதே," என்றான்.

சுப்பன் மிக்க வியப்படைந்தவன்போல் "என்ன! சாவியை மாட்டிவிட்டுப் பேசாமற் போய்விடுவதா! மேலதிகாரியிடம் ஒன்றுமே கூறாமலா?" என்றான்.

காவலன்:—"இந்த மேல் அதிகாரி அச்சமயம் தம் வீட்டில் குடும்ப விவகாரங்களில் பெருங் குழப்பத்தி லிருப்பார். இதற்கு முன் அதிகாரியிடம் சென்று யாவும் திருப்தியாகவே யிருக்கின்றனவென்று கூறி, இன்னும் அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையளித்து அவரைத் திருப்திசெய்து விட்டே செல்லவேண்டும். ஆனால் இப் புண்ணியவான் வந்த பின் அத்தகைய கஷ்டம் ஒன்றுமேயில்லை. அவரவர் கள் வேலை முடித்ததும் அவரவர்கள் பேசாமல் போக லாம். என் வரையில் நான் கூறியபடி என் பாகத்தி லுள்ள சிறையாளர் இராப் போஜனம் செய்தபின் அவரவர்களிடத்தில் பத்திரமாகபவ படுத்திருக் கிறார்க ளென்றறிந்த பின், அறைகளைப் பூட்டிக் கொண்டு நேரே சென்று என் வசத்திலுள்ள சாவிக் கொத்தை மாட்டிவிட்டு வெளியில் செல்ல வேண்டி யதே," என்றான்.

சுப்பன் "அப்படியாயின் தொந்தரையில்லை. சாவியை எங்கேனும் மாட்டிவிட வேண்டியதே. பிறகு பேசாமற் போகவேண்டியதே. இவ்வளவு தானே?" என்றான்.

காவலன் 'அல்ல அல்ல. சாவியை எங்கேனும் மாட்டிவிடுவதோ? அப்படியல்ல. முன் கூடத்தில் வலது புறச் சுவரில் வரிசையாய் ஆணிகளடித்து, ஒவ்வொரு ஆணியிலும் எண் குறித்த தகரப்பில்லைகள் தொங்கவிடப் பட்டிருப்பதைப் பார்த்தாயல்லவா?" என்றதே,

"சுப்பன், "ஆம், ஆம் கவனித்தேன்," என்றான். காவலன் "அந்த ஆணிகளில் நான்காவது எண்ணுள்ள ஆணியில் நான் சாவிக்கொத்தை மாட்டிவிட வேண்டும். பிறகு நேராய் வெளியிற் செல்லவேண்டியது," என்றான்.

சுப்பன்:—அப்போதும் வெளிவாயிற் படியிலுள்ள காவலனுக்குக் குறிப்புவார்த்தை கூறிவிட்டுத்தானே செல்ல வேண்டும்?

காவலன்:—"இங்கு மிக்க முக்கியமான, அதாவது இராஜாங்க சம்பந்தமான, கைதிகள் சிறைச்சாலையில் வந்திருப்பதால் மட்டுமே குறிப்பு வார்த்தை உபயோகிக்கப்படும். மற்றபடி சாதாரணக் கைதிகள் எத்தகையோர் வந்திருந்தாலும் குறிப்பு வார்த்தை உபயோகப்படுத்துவ தில்லை. அதிலும் என் விஷயத்தில் நான் அந்த வேளையில் வெளியில் செல்கிறவனென்று வெளிவாயில் காவல்காரன் எவனாக விருந்தாலும் அவனுக்குத் தெரியும். மேலும் இப்போது குளிர் காலமானதால் நான் என் ஊதாப் போர்வையைத், தேக முழுமைக்கும் போர்த்திச் செல்வது அவர்களுக்குத் தெரியும். நான் செல்லும்போதுதான் வெளிவாயிலில் பாரா மாற்றிக்கொண் டிருப்பார்கள்.

ஆகையால் என் போர்வையைக் குறிப்பாய்க் கண்டதே அவர்கள் அதற்குமேல் கவனிக்க மாட்டார்கள். இப்படியே வேறு யாரேனும் என் போர்வையை அணிந்து சென்றாலும் அவர்கள் யாரென்று கேட்கவே மாட்டார்கள்," என்றான்.

சுப்பன்:—"அது எப்படியாயினும் ஒழியட்டும். ஒன்பதுக்கு மேலாவது நீ நிம்மதியாய் வீடுபோய்ச் சேருகிறாய். அவ்வளவே எனக்குச் சந்தோஷம்," என்றான்.

ஆனால் உண்மையில் தான் இத்தகைய விஷயங்களையெல்லாம் அறிந்து கொண்டது அவனுக்கு மிக்க சந்தோஷம். கடைசியில் "போர்வை அணிந்து கொண்டு செல்வதாய்க் கூறினையே, எங்கே அதைக் காணோமே?" என்றான். காவலன் "போர்வை இரவிற் செல்லும்போது மட்டுமே வேண்டும். ஆகையால் நான் உட்காரும் அறையின் மேஜையில் அதை வைத்திருக்கிறேன். இரவு செல்லும் போது எடுத்துப் போர்த்துக் கொண்டு செல்வேன். அப்படியே எப்போதும் வழக்கமாய்விட்டது. இனி நேரமாய் விட்டது. நான் போய் வருகிறேன்," என்று கூறிவிட்டு அறையைப் பூட்டிக்கொண்டு சென்றான்.

அவன் சென்றபின் சுப்பன் சற்றுநேரம் ஆலோசனையி லிருந்தான். அதன்பின் தன்னிடமிருக்கும் காகிதம் பென்ஸில் முதலிய எழுதுகருவிகளை எடுத்துத் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி இந்த இரவு எழுமலை தனக்குப் போசனம் கொண்டு தந்தபோது அவனிடம் அக்கடிதத்தைக் கொடுத்துத் தன் தந்தையிடம் அனுப்பினான். அவன் அக்கடிதத்தில் தன் ஆலோசனையை எழுதியிருந்தான். அது என்ன என்பது முதலிய விஷயங்கள் பின்

னால் இவர்களுடைய நடக்கைகளால் வெளிவரு மாதலால் அதனை நாம் கண்டுக் கூறவேண்டியது அனுவசியமாகும்.

எந்தெந்தச் சமயத்தில் தங்கள் அறைகள் திறக்கப் பட்டுக் காவலர் முதலியவர்கள் உள்ளே வருவார்களென் பதும், வெளியில் எங்கெங்குக் காவலாட்க ளிருக்கிறார்க ளென்பதும் கள்ளர்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் கூறியபடி சுப்பன் தன் தந்தைக்கு மேற்கண்ட கடிதத்தை வரைந்த தினம் அவர்கள் அங்கு அடைக்கப்பட்ட பத்தா வது தினம். இன்னும் ஐந்து தினங்களே அவர்கள் அங் கிருப்பார்கள். அதற்குமேல் அவர்கள் வேறு சிறைச்சாலைக் குக்கொண்டு போகப்படுவார்கள். அதுவும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அன்று முதல் தங்கள் ஆலோசனைப்படி வேலைசெய்யத் தொடங்கினார்கள்.

27-வது அத்தியாயம்

வீரப்பன், கேசவன் அதாவது பெரிய கள்ளனுக் குத் தன் மகன் எழுமலை மூலமாய் அனுப்பிய கடித உறையில் இரண்டு அரங்களும், ஒரு திராவகம் நிறைந்த புட்டியும், ஒருவிதக் கறுப்பு மெழுகும் இருந்தன வென்று கூறியிருந்தோம். அத்திராவகம் எத்தகைய கடின மான இரும்பையும் மிருதுவாக்கக்கூடியது. அதனால் சான ரக் கம்பிகளை அறுக்கவேண்டிய இடத்தில் மிருதுவாக்கி னால் சுலபமாக அறுத்து விடலாம். பிறகு சிறைச்சாலைக் காவலர்கள் கம்பிகளறுக்கப் பட்டதை அறியாமலிருப்ப தற்காக கறுப்பு மெழுகை அறுத்த வாயில் பூசி அடைத்து விட்டால் அறுத்த சங்கதியே பார்வைக்குத் தோன்றாது. அதற்காகவே மெழுகு அனுப்பப்பட்டது.

இரும்பை அரத்தால் அறுத்தால் வெளியில் எப்படியும் சத்தம் கேட்கும். கள்ளர் இருக்கும் அறையின் சாளரம்

பின்பக்கம் முற்றத்தைப் பார்த்தது போன்றிருக்கிறது. அந்த முற்றத்தில் எந்நேரமும் ஒரு காவலனிருக்கிறான். இரவில் மாலை ஆறுமணி முதல் நடு இரவு பன்னிரண்டு மணி வரையில் ஒருவனும், அதற்குமேல் காலை ஆறுமணி வரையில் ஒருவனுமாக மாற்றிக் காவலிருப்பது வழக்கம். பகற்காலத்தில் கள்ளர் வேலை செய்ய முடியவே முடியாது. இரவிலும் மிக்க கஷ்ட மிருக்கிறது. எப்படியெனின் பின்னுள்ள முற்றத்தில் காவலிருப்போன் அம் முற்றத்தின் ஒரு மூலையிலிருந்து மறுமூலை வரையில் திரிந்து கொண்டேயிருப்பான். நாற்பதாவது என்னுள்ள அறையும் நாற்பத்தோராவது என்னுள்ள அறையும் முற்றத்தின் மையத்திலிருக்கின்றன.

ஆகையால் காவலன் அந்த அறைகளின் அருகில் வந்து அவற்றைக் கடந்து சென்றபின்பே இவர்கள் கம்பியை அறுக்கத் தொடங்கவேண்டும். காவலன் மறுகோடிக்குச் சென்று அவன் திரும்பி வரும் காலடிச் சத்தத்தால் தங்கள் அறையை நெருங்குகிறான் என்று தோன்றும் போது வேலையை நிறுத்திவிடவேண்டும். இதனால் அவர்கள் வேலை ஆலஸியமாகவே நடைபெறுவதாயிருந்தது.

பெரிய கள்ளன் மட்டுமே அவ்வேலையைச் செய்யத் தொடங்கினான். காவலன் இரவு போசனம் கொண்டு வந்து கொடுக்கும்போது சுமார் எழுமணியாகிறது. போஜனம் முடிந்ததும் கூடத் தன் வேலையைத் தொடங்கமுடியாது. ஏனெனில் எட்டுமணிக்குக் கடைசியாகச் சோதனை செய்ய ஒரு சிறைச்சாலை உத்தியோகஸ்தன் வருவான். அவன் வந்து கைதிகளிருக்கும் அறைகளில் சந்தேகத்திற்கு இடந்தரத்தக்க விவகாரங்கள் ஒன்றும் நடைபெறவில்லை என்று தெரிந்துகொண்டு சென்ற பின்பே கைதிகள் செல்ல

வேண்டும். பிறகு காலை ஏழு மணி வரையில் ஒருவரும் அங்கு வரமாட்டார்கள்.

இக் காரணங்களால் எட்டு மணிக்கு ஒருவன் வந்து சோதனை செய்துகொண்டு சென்ற பின்பே நமது கேசவனுடைய வேலை தொடங்கவேண்டும். அவன் மட்டுமே சாளரத்தின் வழியாகத் தப்பித்துக்கொள்வதென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். சின்னவனுகிய சுப்பன், ஏக காலத்தில் இருவரும் சாளரக்கம்பிகளை அறுக்கத் தொடங்கினுல் ஒரு சமயம் எப்படியேனும் கொஞ்சமாவது சந்தடி கீழே பாராவிருக்கும் காவலன் செவிகளில் விழலாகும். அவனுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாய்விட்டால் அவன் உடனே சிறைச்சாலை அதிகாரியிடம் சென்று கூறி விடுவான். உடனே பூரணமாக மிக்க ஜாக்கிரதையான சோதனை செய்யப்படும். அதனுல் எல்லா உண்மையும் கட்டாயம் கண்டு பிடிக்கப்படுவது நிச்சயம் என்று யாவரும் உணர்வார்கள். ஆகையால் சுப்பன் தன் வரையில் வேறு விதமான தந்திரத்தால் சிறைச்சாலையி லிருந்து வெளிப்படுவதென்றும், பிறகு தன் தந்தை வெளியில் வருவதற்கு வீரப்பன் முதலியவர்களோடு தானும் சேர்ந்து உதவி புரிவதென்றும் தனக்குள் மிக்க தந்திரமும் துணிகரமுமான ஒரு ஆலோசனை செய்துகொண்டு அதைத் தன் தந்தைக்கு அறிவித்தான். தந்தை அதை மெச்சிக்கொண்டு தன் கூட்டாளியாகிய வீரப்பனுக்கு அறிவிக்க அவனும் தன் புத்திரனுகிய ஏழுமலையோடு ஆலோசனை செய்து அதுவே சரியான ஏற்பாடென்று தங்களுக்குள் ஒருமித்து ஒருவித தீர்மானத்திற்கு வந்தார்கள். அதன்படியே இப்போது விவகாரங்கள் நடக்கப் போகின்றன.

இக்கதையை வாசிக்கும் நண்பர்களாகிய சகோதரர், சகோதரிகள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒரு

விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறோம். அதாவது இது கள்ளர் விவகாரம், அயோக்கியர்கள் விவகாரம். இராஜ நீதிக்கு மாறான விவகாரம், விவகாரத்தின் யோக்கியதை யைப்பற்றி நாம் இச்சமயத்தில் கவனிக்க வேண்டாம். அவர்களுடைய ஒற்றுமையான நடக்கையைப் பற்றி மட்டும் கவனிப்போம்.

வெளியிலுள்ள கள்ளர்களாகிய வீரப்பன் ஏழுமலை இருவரும் இப்போது எதைக் கவனித்தார்கள்? உண்மையில் இந்த விஷயத்தில் பிரவேசிப்பதால் அவர்களுக்குப் பெரிய ஆபத்தே நேரிடக்கூடும். ஆனால் அவர்கள் அதை உணரவில்லையா? ஒருகாலும் உணராமலில்லை. அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் அவர்கள் ஏன் இத்தகைய ஆபத்தான காரியத்தில் தலையிட்டுக்கொள்ள வேண்டும்? தங்கள் நண்பனாகிய கேசவனையும் அவன் புத்திரனாகிய சுப்பனையும் இந்த ஆபத்தினின்றும் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணமே இக்காரியத்தைச் செய்யும்படி அவர்களைத் தூண்டியது. இதனால் அவர்கள் "நாம் நமது நண்பர்க்கு உதவிசெய்ய முயல்வதால் நமக்கே கெடுதி, உண்டாகும்படி செய்து கொள்கிறோமே," என்பதைக் கவனிக்கவில்லை.

அதாவது தங்கள் சுயநலத்தைக் கருதாததோடு பெரிய தியாகத்தைச் செய்யத் துணிந்து விட்டார்கள். பிறர்க்கு நன்மைசெய்ய விரும்பும் எவனும் சுயநலத்தைக் கருதலாகாது. அதோடு தன்னாலான வரையில் தியாகம் செய்யக் கூடியவனே பொது நலமான காரியத்தைச் செய்யத் தகுந்த யோக்கியதை உடையவனாவான். ஏனெனில் சுயநலத் தியாக மின்றிப் பொது நலம் எப்போதும் நடைபெறுவதில்லை, இது உலகத்தின் பிரத்தியட்ச அனுபவம்.

இப்போது நமது பாரத பூமியாகிய தாய் நாட்டில் எத்தனையோ பேர் நான் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்யவே முன்வந்து பாடுபடுகிறேன் என்கிறார்கள். ஆனால் மேற்கண்ட கள்ளர் இருவருக்கும் இருக்கும் சுயநலத் தியாகம்கூட இவர்களில் பெரும் பாலரிடம் இல்லை. இவர்கள் இத்தொழிலால் தங்களுக்குக் கௌரவமும் செல்வாக்கும் வருமானமும் கிடைக்குமென்ற நோக்கத்தோடேயே அப்பதவிகளை அடைய முயல்கிறார்களே யன்றி வேறில்லை. ஏனெனில் இவர்களுக்குத் தாய் நாட்டின் மேல் உண்மையான பக்தியில்லை; அன்பில்லை; அபிமானமில்லை. இத்தகைய துரோகிகளை விட நமது வீரப்பனும், அவன் மகன் ஏழுமலையும் எவ்வளவோ உண்மையான சினேக அபிமானிகளென்று கூறச் சற்றும் தடையேயில்லை.

சகோதர சகோதரிகளே! உங்களில் சிலர் மனதைக் கவர்ந்து செல்லும் இந்த விவகாரம் ஏன் நடுவில் கூறப்பட வேண்டும் என்று வெறுப்படைய லாகும். ஆனால் உண்மையில் கதைகள் நாவல்கள் இவற்றை வாசிப்பது எதற்காக? நல்ல விஷயங்களை உணர்ந்து அதன்படி நடப்பதற்காகவே யன்றி வேறல்ல. அத்தகைய நோக்கத்தோடு எழுதப்படாத நாவல்கள் வாசிக்கத் தகுதி உடையவை யல்ல.

இப்போது நாம் கதைத் தொடர்ச்சியினிடையில் விவரித்துக் கூறிய விஷயம் எதற்காகவெனில், பொது நலத்திற்குப் பாடுபடுகிறோம், நம் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கே இக்காரியத்தைச் செய்கிறோம். என்று கூறுகிறவர்கள், எவராயினும் சரி, சுயநலங் கருதாதவர்களாக விருக்க வேண்டும். அதாவது, "நமக்குப் பட்டம், உயர் பதவி, செல்வம், கௌரவம் முதலிய எதுவும் வேண்டாம். இப்போது நாம் நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகச்

செய்ய முயலும் காரியம் நிறைவேற வேண்டும், அதற்கா கக் கூடும் இச்சையில் நமக்கு எந்த ஊழியம் அளிக்கப் பட்டாலும் சரியே. நமக்கு இதில் கௌரவப் பதவி வேண் டாம்." என்று பெருந்தன்மை வாய்ந்த குணசாலிகளாக இருக்கவேண்டும். இன்றேல் அவர்களால் தாய் நாட் டிற்கு ஒரு பயனும் உண்டாகாது.

இனிக் கள்ளராயினும் தங்கள் சிநேகரைக் காப் பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தால் தங்கள் சுயநலத் தைக் கருதாததோடு எத்தகைய ஆபத்திற்கும் துணிந்து, தம் நண்பர்க்கு உதவி செய்யத் தொடங்கினார்கள். சுய நலத் தியாகம் செய்ய மனந்துணியாத எவனும் அன்னி யர்க்கு எத்தகைய நலனையும் செய்ய முடியாது என்பது அநுபவம். நீ ஒருவன் பசியைத் தணிக்க விரும்பின், நீ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தில் கொஞ்சமேனும் தியாகம் செய்தே தீரவேண்டும். ஒருவனுக்கு வழிகாட்ட வேண்டுமாயினும் உன் வேலையை விட்டுவிட்டுச் சற்று தூரம் செல்லவேண்டும். மேல் நாட்டாரிடம் ஒரு பொது நலத்தைச் செய்யக் கருதும்போது எத்தகைய அவசிய மான தியாகத்தையும் செய்யும் குணமிருக்கிறது. அந்தோ! நமது நாட்டாரிடம் பெரும்பாலும் அக்குண மில்லை. மேலு க்குப் பொதுநலத்திற்கும் தாய் நாட்டிற்கும் பாடுபடவே பிரியப்படுபவர்கள் போல் அபிநயித்து அதற்குத் தக்க பத வியை அடைந்தே அற்பமான சுயநலத்திலேயே நாட்டம் வைத்துப் பொதுநலத்திற்கும் தாய் நாட்டிற்கும் இடையூறு வேண்டுமாயினும் செய்து விடுவார்கள். தங் கள் வரையில் கௌரவப் பட்டம், செல்வாக்கு, செல்வம் முதலியவைகளைப் பெற்றால் போதும் என் பதே அவர்கள் எண்ணம். நம்மவர்கள் மேல் நாட் டாரிட மிருக்கும் மேற்கண்ட உயர்ந்த குணங்களைப் பின்

பற்றுவதை விட்டு, அவர்கள் ஆசார ஒழுக்கங்களில் எவை நமக்கும் நம் தாய் நாட்டிற்கும் பெருந் தீங்கை விளைவிக்குமோ அவற்றையே பின் பற்றுகிறார்கள். இக் குணம் தேனை வடிகட்டும்போது மதுரமான தேனை வெளியே விட்டு விட்டு, சொத்தை, மெழுகு, செத்த ஈ முதலிய அசுத்தங்களை மட்டும் பிடித்துக் கொள்ளும் பன்னாடையின் குணமேயாகும். இனி நமது கள்ளர்களின் நடக்கைகளைக் கூறுவாம்.

வீரப்பன் கேசவனுக்கு இரண்டு மூன்று நல்ல அரங்களையும் இரும்பைப் பதனுக்கும் திராவகத்தையும் ஒருவிதக் கறுப்பு மெழுகையும் அனுப்பினானென்று கூறினோமல்லவா. இரவு எட்டு மணிக்குக் கடைசியாகக் காவலன் வந்து பார்த்து அறைகளை மூடிப் பூட்டிக்கொண்டு சென்ற பின் பெரிய கள்ளன் மெதுவாய்ச் சாளரத்திலுள்ள இரும்புக் கம்பிகளை ஒவ்வொன்றாய் அறுக்கத் தொடங்கினான். முற்றத்திலிருக்கும் பாராக்காரன் சாளரத்தை விட்டு எட்டச் சென்ற பின்னே அறுக்கத் தொடங்கவேண்டும். மறுபடி அவன் காலடிச் சத்தம் சாளரத்தை நெருங்கும்போது தன் வேலையை நிறுத்திவிட வேண்டும். பிறகு விடியற்காலமட்டும் வேலை செய்தபின் கம்பி அறுக்கப் பட்டிருக்கும் இடத்திலுள்ள அறுப்பு வாயில் கறுப்பு மெழுகைப் பூசி விடவேண்டும். அப்போது தான் பகலில் யார் பார்த்தாலும் சாளரக் கம்பிகள் அறுக்கப் பட்டிருக்கும் சங்கதி தெரியாது. இவ்வாறு நான்கு கம்பிகளை ஒருபக்கம் அறுத்துவிட்டு அவற்றை மறுபக்கம் வளைத்து விட்டால் ஒரு ஆள் சாதாரணமாய அவ் வழியே நுழைந்து செல்லலாகும்.

ஆனால் வேலை மேல் கண்டபடி ஆலசியமாக நடப்பதாலும் இரும்புக் கம்பிகள் மிக்க உறுதியானவையான

தாலும் அவ்வேலை முடியக் குறைந்தது நான்கு நாட்களாவது செல்லும் என்று உத்தேசிக்கப்பட்டது. அவ்வாறே அவ்வேலையைத் தொடங்கிய ஐந்தாவது நாள் காலை ஐந்து மணிக்கு நான்கு கம்பிகளும் மேல் பக்கம் பூரணமாய் அறுக்கப்பட்டு முடிந்தது.

இதற்கிடையில் சுப்பன் அப்பாகத்திலிருக்கும் பாராக்காரனிடம் தினம் பணம் கொடுத்துச் சாராயம் சிற்றுண்டிகள் வாங்கிவரச் செய்வதும், அவற்றை அவனையுங் கூட வைத்துக் கொண்டு அருந்துவதுமாய் அவனை மிக்க சிநேகமாக்கிக் கொண்டான். ஒரு நாள் இரவு எழு மணிக்கு இருவரும் சாராயமருந்திச் சிற்றுண்டி உண்டுகொண்டிருக்கையில் சுப்பன் காவலனை நோக்கி "ஆச்சு, இன்னும் இரண்டொரு நாட்களில் நாங்கள் வேறு சிறைச்சாலைக்கு கொண்டு போகப்படுவோம். எங்களுக்கென்னமோ எல்லாச் சிறைச்சாலைகளும் ஒன்றுதான். ஆனால் காவலர்கள் எப்போதும் எங்குமே நல்லவர்களாக இருப்பதில்லை. இங்கு உன்னைக் கண்டது முதல் எனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்தது போலிருக்கிறது. உன்னை விட்டுப் பிரிவதே என் வரையில் மிக்க மனவருத்தமாக இருக்கிறது," என்றான்.

காவலன், "எனக்கும் உன்னை விட்டுப் பிரிவது மிக்க துயரமேயாகும். என்னாலான உதவி எதுவேனும் செய்ய நான் சித்தமாக இருக்கிறேன்," என்றான்.

சுப்பன்:—"நீ செய்யத்தக்க உதவி என்ன இருக்கிறது? நாங்கள் இங்கிருக்கு மட்டும் இப்போது நீ செய்து கொண்டிருக்கும் இத்தகைய உதவியைத்தான் நான் உன்னைச் செய்யும்படி கேட்கலாம். இதற்கு மேல் உனக்கு ஆபத்தை அளிக்கத்தக்க அத்தகைய உதவியைச் செய்யும்படி நான் ஒருபோதும் உன்னைக்

கேட்கமாட்டேன். அப்படிநான் சிறைச்சாலையைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போகப் பிரியப்பட்டால், அத்தகைய அவசியம் நேர்ந்தால், அப்போதுங்கூட நான் உன்னை உடந்தையா இருக்கச்செய்து உனக்கு இக்கட்டை ஒருபோதும் உண்டாக்கமாட்டேன். அத்தகைய காரியத்தை நானே செய்துகொள்வேன். அப்படிப்பட்ட சமயம் இப்போதும் ஒன்றுமில்லை. ஆனால் எனக்கு ஒரு பிரியம் இருக்கிறது. அதாவது நாங்கள் இதைவிட்டுப் போவதற்குள் இன்னொரு முறை நீயும் நானும் இம்மாதிரி சந்தோஷமாய்ப் போஜன அருந்தவேண்டுமென்பதே," என்றான்.

அந்தோ! அக் காவலன் இக் கள்ளன் மொழிகளையெல்லாம் உண்மை மொழிகளாகவே மதித்துக்கொண்டான். இவன் மிக்க பெருந்தன்மையான குணமுடையவன். இவனும் இவன் தந்தையும் ஏதோ மிக்க தவறுக இத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனை அடைந்திருக்கிறார்கள். வேறு யாராயினும் இருந்தால் தாங்கள் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட நம்மை உளவாக இருந்து உதவிசெய்யும்படி கேட்பார்கள். இவர்கள் அப்படிப்பட்டவர்களல்ல," என்று எண்ணிக்கொண்டான்.

அதனால் அக்காவலன் சுப்பனை நோக்கி "நண்பனே! ஆம் நான் உன்னை நண்பனுகவே கருதுகிறேன். நீ என்ன காரியம் செய்யச் சொன்னாலும் சித்தமாய்ச் செய்யவிருக்கிறேன். என்னை என்றைக்கு உன்னோடு போஜனம் செய்யக் கூறுகிருயோ, அன்று சந்தோஷமாய்ச் சாப்பிட வருகிறேன்," என்றான்.

மறுநாட் காலை ஏழுமலை போஜனம் கொண்டுவந்த போது சுப்பன் தான் ஆயத்தமாக எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தை அவனிடமளித்து "இதை மிக்க இரகசியமாக உன் தந்தையிடமளிக்க வேண்டும்," என்று கூறினான்.

மறு நாள் மாலை போஜனம் கொண்டு வந்து கொடுத்த ஏழுமலை, தந்தைமகன் இருவர்க்கும் தன் தந்தை இடமிருந்து ஒவ்வொரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். சுப்பனிடம் கொடுத்த கடிதத்தில் ஒரு சிறு பொட்டணம் இருந்தது. அதை அவன் பெற்றதும் கடிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டுத் திருப்தியடைந்த முகக்குறியோடு அப்பொட்டணத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் ஒரு விதமான வெள்ளைச் சூரணம் சுண்ணம்போலி இருந்தது. அதைக் கண்டதும் சுப்பன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் அதைப் பத்திரமாக வைத்துக்கொண்டான்.

பெரிய கள்ளனாகிய கேசவன் தனக்குத் தன் நண்பனனுப்பிய கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"நண்பனே! நான் உனக்கு என்னால் கூடியவரையில் எல்லா உதவியும் செய்யத் துணிந்திருக்கிறேன். இதுகாறும் நடக்கும் விவகாரங்கள் நமது எண்ணப்படி நடக்கும் பட்சத்தில் நமது கருத்து நிறைவேறுமென்பதில் சற்றும் ஐயமில்லை. உன் வரையில் நீ செய்யவேண்டிய காரியம் பூரணமாக நிறைவேறிவிட்டதைப் பற்றி மிக்க சந்தோஷம். ஆயினும் எதற்கும் மிக்க ஜாக்கிரதையாகவே இருப்பது நலம். நமது சுப்பனுடைய ஆலோசனையும் ஏற்பாடும் மிக்க சோர்த்தியானதே. அவன் அதின்படி ஜெயமடைவா னென்றே நான் பூரணமாய் நம்புகிறேன்.

நாட்கள் இன்னும் மூன்றே இருக்கின்றன. இதற்குள் நமது காரியம் நிறைவேறவேண்டும். இன்றேல் இது காறும் செய்த முயற்சிகளனைத்தும் வியர்த்தமாய் விடும். நான் மிக்க சாக்கிரதையாய்க் கவனித்துக்கொண் டிருக்கிறேன். நீங்கள் உள்ளிருந்து உங்கள் காரியத்தைச் சரியாக முடித்துக்கொண்டால் நான் வெளியில் யாவும் ஆயத்தமாகத் தயார் செய்து வைத்துக் கொண்டிருக்கிறேன். இதைப்பற்றி உங்களுக்குச் சற்றும் ஐயம் வேண்டாம். இனி வேலை மட்டும் சரியாக அமையவேண்டும். என் வரையில் நாளை முதல் இரவு ஒரு மணி முதல் பின் பக்க மதில் சுவரோரம் தினம் சகல சௌகரியங்களோடும் ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருப்பேன். இது சத்தியம் மற்ற விஷயங்களுக்கு நீங்கள் சௌகரியப்படி நடந்து கொள்ளவேண்டும். இன்று முதல் எப்போதும் வெளியில் உதவி தயாராக விருக்கிறது. நீங்கள் சௌகரியப்படி நடந்து கொள்ளவேண்டும். நீங்கள் ஆயத்தமானதே மதில் சுவரின் ஓரத்தில் வந்து ஒரு கல்லை வெளியில் எறிய வேண்டியதே. அவ்வளவே, நூலேணி மதில் மேல் போடப்படும், மற்ற சங்கதி நான் கூறவேண்டுவதில்லை. மிக்க ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளுங்கள். நான் அதிகம் கூறவேண்டுவதில்லை," என்று எழுதப்பட் டிருந்தது.

வீரப்பன் சுப்பனுக்கெழுதிய கடிதத்தில் பின்வருமாறு வரையப்பட் டிருந்தது:—

"நண்பனே! உன் ஆலோசனை மிக்க சிலாக்கியமானதே. இருவரும் ஒரே விதமாக வெளிவருவதாயின் விபரீதமான சந்தேகமேயுண்டாகும். உன் உத்தேசப்படி யாவும் நடைபெறுமென்றே பூரணமாக நம்புகிறேன். நீ அம்மாதிரி சிறைச்சாலையினின்றும் வெளிப்பட்டதே உங்கள் அறைகளின் பின்பக்கமிருக்கும் மதில் சுவரின்

எதிரில் ஒரு இடத்தில் ஒரு பெரிய அரசமரமிருக்கிற தல்லவா; நீ நேராக அங்கு வந்து விட்டால் நமது ஆட்களைக் காணலாம். பிறகு நாம் உன் தந்தையை மதில் வழியாய் வெளியே அழைத்துக் கொள்ளலாம். எல்லாம் சுலபமாகவே முடிந்துவிடும்," என்று வரையப்பட்டிருந்தது.

28-வது அத்தியாயம்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த இரண்டாவது நாள் மாலை சுமார் ஆறுமணியிருக்கும். அச்சமயம் மேகம் கறுகறுத்து வானம் மிக்க பயங்கரமான நிலைமையி லிருந்தது. கொண்டல் கொண்டலாக கரிய மேகங்கள் வானமெங்கும் நிறைந்து கவிந்து கொண்டிருந்தன. அடிக்கடி கண்களைக் கெடுக்கக்கூடிய விதமாக மின்னல் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக்கொண் டிருந்தது. வானத்தில் "ஆச்சு; உங்களை யிதோடு அடியோடழித்து விடுகிறேன்," என்று சப்தமேகங்களும் பயமுறுத்துவதுபோல் குமுறலும் தடதட கடகடவென்ற பயங்கரமான சத்தமும் உண்டாகிக் கொண்டிருந்தன. அச் சமயம் ஏழுமலை கள்ளர் இருவருக்கும் போஜனம் கொண்டு வந்தான்.

அவன் முதலில் பெரிய கள்ளன் அறைக்குச் சென்றதும், அவனிடம் கண்களால் ஒருவிதச் சமிக்கைகாட்டி "ஐயா! பயங்கரமான மழை வரும்போ லிருக்கிறது. ஆகையால் சீக்கிரம் போசனம் செய்துவிட்டுப் பாத்திரங்களைக் கொடுத்து விடுங்கள்," என்று கூறிக்கொண்டே அவனிடம் ஒரு சிறு கடிதத் துண்டை அளித்துவிட்டுச் சாப்பாட்டு மூட்டையை அங்கு வைத்துவிட்டு, மற்றொரு மூட்டையை எடுத்துக்கொண்டு சுப்பன் அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதே கேசவன் தன்னிடம் ஏழுமலை அளித்த கடிதத்தை வாசித்தான். அதில் எழுதியிருந்ததைக் கண்டதே அவனுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. அவன் துரிதமாகப் போசனம் செய்யத் தொடங்கினான். ஏழுமலை அவன் அறையை விட்டதும் சுப்பன் அறைக்குச் சென்று அவனிடமும் ஒரு சிறு துண்டுக் கடிதத்தைக் கொடுத்தான். "மழை கொடுமையா அடிக்கும் போலிருக்கிறது; சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் பாத்திரத்தை அளித்துவிடு. நான் மழைக்குமுன் வீடுபோய்ச் சேரவேண்டும்," என்றான். அவ்வாறே அவன் அரைமணி நேரத்திற்குள் சிறைச்சாலையை விட்டுப்புறப்பட ஆயத்தமானான்.

அச்சமயம் சுப்பன் காவலனிடம் பணங் கொடுத்துச் சாராயமும் பலகாரமும் தருவித்தால் நாம் இருவரும் மழைக்கு நிம்மதியாய் அருந்தலாம் என்றான். காவலன் ஏழுமலையை அனுப்பி வேண்டியவற்றை வாங்கிவரச்சொன்னான். அவன் அவ்வாறே வாங்கிவந்து கொடுத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினான்.

அன்று மாலை எட்டு மணி அடிக்கும் சமயம் கடைசியாகக் காவலன் வந்து பெரிய கள்ளன் இருக்கும் அறையைப் பார்த்து, அவன் நிம்மதியாய்ப் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு கதவைமூடிப் பூட்டிக்கொண்டு நாற்பத்தோராவது அறைக்குச் சென்றான். சுப்பன் முன்னாடியே அவனைத் தன்னோடு சாராயங் குடிக்க வரும்படி அழைத்திருந்தபடியால் அவன் முன்னதாகவே வந்தான்.

தன் அறைக்குப் பக்கத்தறையில் காவலன் பிரவேசிப்பதை அறிந்தபோதே சுப்பன் அங்கு ஆயத்தமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கண்ணாடிக் கிண்ணங்களில் ஒன்றை எடுத்து, வீரப்பன் தனக்கு

அனுப்பியிருந்த வெள்ளைச் சூரணமாகிய மருந்தில் ஒரு சிட்டிகை எடுத்து அக்கிண்ணத்தில் போட்டு ஒரு துளி சாராயத்தை அதன்மேல் விட்டான். உடனே அச் சூரணம் சாராயம் பட்டதும் கரைந்து உருவில்லாமல் கிண்ணத்தின் அடியில் படிந்துவிட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் காவலன் சுப்பன் அறைக்கு வந்தான். சுப்பன் உடனே மலர்ந்த முகத்தோடு "நண்பரே! வாரும். இன்று வானம் என்னமோ கோபித்துக் கொண்டிருக்கிறதுபோல் காண்கிறது," என்றான். காவலன் "நல்ல மழைவரும். முன்னமே தூறல் ஆரம்பித்து விட்டது. முதலில் காற்று அதிகமாக அடிக்கும்போல் இருந்தது. இப்போது காற்று நின்று விட்டபடியால், நல்ல மழையே பொழியும் என்பதில் சந்தேகமில்லை. சீக்கிரம் போய் நிம்மதியாய்க் கப்பென்று படுத்துக்கொள்ளவேண்டியதே," என்றான்.

சுப்பன் உடனே புட்டியைத்திறந்து முதலில் மருந்து போடப்பட்டிருக்கும் கிண்ணத்தில் விட்டுக் காவலனிடம் அளித்தான். அவன் அதை அருந்தும்போது மற்ற கிண்ணத்தில் கொஞ்சம் சாராயம் விட்டுத் தான் அருந்தினான். பிறகு பலகாரங்களை எடுத்து வைத்துக் காவலனை உபசரித்து அருந்தச் செய்தான். இடையிடையில் சாராயத்தைத் தாராளமாய் விட்டு அவனுக்குக் கொடுத்துத் தானும் அருந்துபவன்போல் அபிநயித்தானே யன்றி, உண்மையில் தன் வரையில் திட்டமாய் அளவோடேயே அருந்தினான்.

காவலனுக்கு கண்கள் சொருகத் தொடங்கின. "நாம் சாராயம் கொஞ்சம் அதிகமாய்க் குடித்து விட்டோம் போல் காண்கிறது. அதனால்தான் உறக்கம் வருகிறது," என்று எண்ணி அதைச் சமாளிக்க முயன்றான். வரவர

உறக்கம் அதிகமாகிறது. தன் முன் இருப்பது இரண்டு மூன்று சிரங்களுடைய மனிதன் போலவும் அறையின் எண்ணிறந்த தீபங்கள் எரிவது போலவும் தோன்றின. கடைசியில் தனக்கு இதுகாறும் ஒருபோதும் தோன்றாத அசதியும் இந்திரியங்களின் ஒடுக்கமும் தோன்றின. புத்தியே மிக்க கலவரமடைவதுபோல் தோன்றியது. அப்போது தான் "ஐயோ! நமக்கென்னமோ தெரியவில்லை. தேகத்திற்கு ஏதோ அபாயகரமான ஆபத்து நேர்கிறது போலிருக்கிறது;" என்று எண்ணினான்.

மறுவிநாடி அவன் மனதில் ஒருவிதப் பயங்கரமான சந்தேகமுதித்தது. என்னவாயினும் இவர்கள் கள்ளர்கள் என்பதும், சுப்பன் முன்பு தன்னைப்பற்றிய விஷயங்களை எல்லாம் கேட்டிருப்பதும், அவன் அன்புடையவன்போல் நடிப்பதும், தன்னிடம் எவ்வித உதவியும் எதிர்பார்க்கவில்லை என்று கூறினும் தனக்கு அடிக்கடி அனுவசியமாய்ப் பணமளிப்பதும் யாவும் ஏககாலத்தில் கனவுபோல் அவன் புத்தியிற் பட்டன. மறுவினாடி சுப்பன் தனக்கு முதலில் ஒரு கிண்ணத்தில் சாராயம் விட்டளித்துவிட்டு பிறகு தன் வரையில் வேறு கிண்ணத்திலருந்தியதும் நினைவிற்கு வந்ததே குபீரென்று அவன் மனதில் பெரிய சந்தேகமுதித்தது. உடனே சட்டென்று தனக்குச் சாராயம் அளிக்கப்பட்ட கிண்ணத்தை எடுத்துக் கரத்தை நீட்டினான்.

அதன் பிறகு நடந்த விஷயம் ஒரு விநாடியில் முடிந்து விட்டது. சுப்பன் புலிபோல் திடீரென்று அவன் மேல் பாய்ந்து அவன் தொண்டையை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவனைக் கீழே தள்ளி மார்பின்மேல் முழங்காலை ஊன்றிக்கொண்டு தன் ஜேபியில் ஆயத்தமாக வைத்திருந்த குட்டையை அவன் வாயிலடைத்து விட்டு இடுப்பிலிருந்த

ஈட்டியை எடுத்துக்காட்டி "வாய் திறந்தால் கொன்று விடுவேன், அசைந்தாலும் சரி" என்று கூறிப் பக்கத்தில் படுக்கையின் மேலிருந்த கயிற்றை எடுத்து அவன் கரங்களையும் கால்களையும் சேர்த்து மஞ்சத்தின் காலில் கட்டிவிட்டான்.

சுப்பன் பிறகு அவனை நோக்கி "நண்பனே! நானும் என் தந்தையும் இம்மாதிரி நெடுங்காலம் அடைபட்டுக் கிடக்க முடியாது. நாங்கள் இன்னும் இரண்டு நாட்கள் இதே சிறைச்சாலையி லிருந்தால் மூன்றாம் நாள் வேறு சிறைச் சாலைக்குக் கொண்டுபோகப் படுவோம். அங்கு சேர்ந்தபின் நாங்கள் தப்பித்துக்கொண்டு போக முடியாது. ஆகையால் இங்கிருந்தே நாங்கள் விடுதலைபெற வேண்டும். நீ அறிந்தோ அறியாமலோ, பிரியப்பட்டோ பிரியமில்லாமலோ, இவ்விஷயத்தில் எனக்கும் என் தந்தைக்கும் உதவி செய்வதற்காக மிக்க நன்றியுடையவனாக விருக்கிறேன். இப்போது நான் உனக்குக் கொஞ்சம் கஷ்டம் கொடுப்பதோடு உன் உடைகளை, முக்கியமாய் நீ உன் அறையில் மாட்டியிருக்கும் மேல் போர்வையை எடுத்துக் கொண்டு போகவேண்டியது அவசியமாக இருக்கிறது. அவற்றின் கிரயத்தை நான் உனக்குக் கொடுக்கத் தடையில்லை. ஆனால் உன்னிடம் பணமிருப்பதைக் கண்டால் மேல் அதிகாரிகள் நீ இலஞ்சம் பெற்றுக்கொண்டு எனக்கு உதவி செய்ததாக உன் மேல் குற்றம் சாட்டுவார்கள். எனக்கு உதவி செய்யும் உனக்கு நான் அத்தகைய தீங்கை ஒருபோதும் செய்யமாட்டேன். இனி நான் விடைபெற்றுச் செல்கிறேன். உன்னை இந்த நிலைமையில் விட்டுச் செல்வது எனக்கு மிக்க மனவருத்தமாகவே யிருக்கிறது. ஆயினும், நான் உன் வாயில் துணி அடைக்காவிட்டால் நீ அவசரப்பட்டு கூச்சலிட்டு விடுவாய். என் காரிய சித்திக்காக நான் மனவருத்தத்தோடு இப்படிச் செய்ய

வேண்டியிருக்கிறது. இதற்காக என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் உன் அன்பிற்காகவும் நீ செய்த உதவிக்காகவும் நான் எப்போதும் நன்றியுடையவனாகவே யிருப்பேன்" என்று கூறிவிட்டுத் தன் உடைகளை அவனுக்கணிந்து விட்டு அவனுடைகளைத் தானணிந்துகொண்டு அறையை மூடிப் பூட்டிக்கொண்டு வெளிப்பட்டான்.

காவலனோ திக்பிரமை அடைந்து விட்டான். தான் பெருமோசம் போய்விட்டதை யுணர்ந்து கொண்டான். சுப்பன் பேசும் நயமான வார்த்தைகளுக்கும் அவன் செய்கைக்கு முள்ள வித்தியாசத்தைக் கருதியபோது அவன் மனம் தீப்பற்றி யெரிந்தது. அவன் கண்களில் கோபத் தணல் வீசியது. என்ன செய்வான் பாபம். தன் அவயவங்களோ தன் வயத்திலில்லை. ஏமாந்து சிக்கிக்கொண்டான். புத்தி பிசகி மூடத்தனமாய் ஒரு காரியத்தைச் செய்தபின் வருத்தப்படுவதில் பயனென்ன? "இவர்கள் கள்ளர்கள், இவர்களுக்கு நம்மேல் இயற்கையில் விரோதமும் வெறுப்புமே யிருக்கவேண்டும். இவர்கள் நம்மிடம் பிரியமிருப்பதுபோல் நடிப்பது ஏதோ சுயகாரியத்திற்காகவே யிருக்கவேண்டும், இவர்களன்பு உண்மையென்று நாம் நம்பலாகாது. மிக்க ஜாக்கிரதையாகவே யிருக்கவேண்டும்," என்று இவன் முன்னமே கருதி யிருக்கவேண்டும்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்ற பொய்யா மொழியார் வாக்கை மறந்து நடந்தபின் துக்கிப்பதில் என்ன பயன்?

சுப்பன், காவலனை அறைக்குள் கட்டிப்போட்டு விட்டுக் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு நேராய் அக் காவலன் அறைக்குச் சென்று அவன் போர்வையை யெடுத்துப் போர்த்திக் கொண்டுபோய்ச் சாவியை மாட்டவேண்டிய

விடத்தில் மாட்டி விட்டான். அச்சமயம் வெளிவாயிற் படியில் மாறா மாற்றிக்கொள்ள வேண்டிய இருவரும் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருப்பதால் இவனை யொருவரும் சரியாய்க் கவனிக்கவில்லை. சுப்பன் உயரத்திலும் பருமனிலும் அக் காவலன் போலவே யிருப்பதாலும் அவன் அணிந்திருக்கும் போர்வையாலும் அவர்கள் அவனைப்பற்றிச் சற்றும் சந்தேகங் கொள்ளவில்லை. இதனால் சுப்பன் இரண்டொரு நிமிடங்களில் சிறைச்சாலையின் வெளிவாயிற் படியைக் கடந்து புறப்பட்டான்.

கட்டடத்தைவிட்டு வெளிப்பட்டதே அவனுக்கு ஒரு வித உற்சாகமும் சந்தோஷமும் உண்டாயின. அதனால் அபூர்வமான தேக பலம் தோன்றியது. மனம் சோர்ந்தால் தேகபலம் குன்றிவிடுவது இயற்கை. தேக பலத்தைக் காட்டிலும் மனோ பலமே ஒருவனுக்கு எப்போதும் மிக்க அதிகம். மனதில் நம்பிக்கையும் பலமும் இருந்தால் ஒருவன் அபூர்வமான காரியங்களைச் செய்வான் என்பதற்குப் பல திருட்டாந்தங்களுண்டு. ஈண்டு ஒன்றைமட்டும் கூறுகிறோம்:—

நெபோலியன் சக்கிரவர்த்தி ஐரோப்பாவிலுள்ள ஏறக்குறைய எல்லா இராஜ்ஜியங்களையும் செயித்தார். அவர் தமது சேனைகளைப் பற்றிய விஷயங்களை மிக்க சிரத்தையோடு தாமே நேரில் கவனிப்பது வழக்கம். அக் குணம் இருந்திராவிடில் ஒரு பீரங்கிப் படையில் லெப்டினெட் உத்தியோகத்திலிருந்த ஒருவன் அத்தகைய தேசத்திற்கே சக்கிரவர்த்தியாகவும் உலகப் புகழ்ச்சிக் குரியவனாகவும் ஆக முடியுமோ? முடியாது. ஒரு இடத்தில் அவர் தமது சைனியத்தோடு பாளையமிறங்கி யிருக்கிறார். காலையில் எதிரிகளோடு சண்டை* தொடங்கவேண்டும். ஆகையால் இரவு மிக்க ஜர்க்கிரதையாக விருக்கவேண்டியது அவசியம்

ஆகையால், நெபோலியன் சக்கிரவர்த்தியே தமது படைவீரரனைவரும் அவரவர்கள் இடத்தில் எச்சரிக்கையாக விருக்கிறார்களா வென்று கண்டறிவதற்காக நடு இரவில் சாதாரண உடையோடு பாளையத்திற்குள் சோதனைக்குப் புறப்பட்டார். ஒரு இடத்தில் செல்லும்போது அங்கு காவல் நிற்பவன் தாம் அருகில் செல்லும்போதும் பேசாமலிருப்பதைக் கண்டு மெதுவாக அவன் கிட்டச் சென்றார்.

இராணுவச் சட்டத்தின்படி பாரா இருப்பவன் ஒருவர் வருவதைக் கண்டதே "யார் வருவது? நில்" என்று கூறவேண்டும். வருகிற ஆள் "நான் நண்பனே" என்று கூறினால் அவன் அருகில் வந்தபின் சரியாக உண்மையைத் தெரிந்துகொண்டே அவனை அப்புறம் செல்ல விடவேண்டும். வந்தவன் சரியான பதில் கொடாமல் பேசாமல் இன்னும் வருவதாயின் அவனைச் சுட்டு விடலாம். இது இராணுவச் சட்டம்.

நெப்போலியன் சக்கிரவர்த்தி அருகிற் செல்லும்போது கூட அங்கு பாரா நின்றிருப்பவன் ஒன்றும் பேசாமல் கற்சிலைபோல் தன் கையிலிருக்கும் துப்பாக்கியைத் தரையில் நாட்டியபடி அதன்மேல் தலையைச் சாய்த்துக் கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் பழுதாய்விட்ட ஒரு பீரங்கி கிடக்கிறது. சக்கரவர்த்தி அவனருகிற் சென்று பார்த்தார். அவன் நின்றபடி நித்திரை செய்கிறான் என்றுணர்ந்து கொண்டார். உடனே அவர் கரத்தில் பிடித்திருந்த துப்பாக்கியை மெதுவாக எடுத்துக் கொண்டார்.

அப்போதுண்டான தேக அசைவால் அவன் தட்டென்று விழித்துக்கொண்டான், தன்னிடமிருந்த துப்பாக்கி எடுத்துக்கொள்ளப்பட்டது, அவனுக்குத் தெரியாது. சக்கிரவர்த்தி கோபத்தோடு "அட்டென்ஷன்" என்றார். அது ஜாக்கிரதையாக ஒழுங்காகநில் என்று கூறும்

ஒரு குறிப்பு வார்த்தை. அதை மட்டுமே அவன் கேட்டான் யாரோ மேல் உத்தியோகஸ்தர் தணிக்கைப் பார்க்க வந்தார்கள் என்று கருதித் திகிலோடு நோக்கினான். இராணுவ விஷயங்களின் சட்ட திட்டங்களை மிக்க கண்டிப்பாகக் கவனிக்கும் தன் சக்கிரவர்த்தியே யெதிரில் நிற்பதைக் கண்டான். கையில் துப்பாக்கியில்லாததை உணர்ந்தான். நாம் உறங்கி விட்டோம், துப்பாக்கி கைநழுவிக் கீழே விழுந்து விட்டதென்று எண்ணிக்கொண்டான்.

என்ன செய்வான் பாபம்! இப்போது துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு ஒழுங்கின்படி நிற்க வேண்டும். நமது துப்பாக்கி கீழே அருகில் தான் விழுந்திருக்கும் என்பது அவன் பூரண நம்பிக்கை. அவன் மனநாட்டத்தில் துப்பாக்கி தான் இருக்கிறது. ஆகையால் குனிந்ததும் அருகிலிருந்த பீரங்கியைச் சட்டென்று தூக்கித் துப்பாக்கியைப் பிடிப்பதுபோல் நிற்க வைத்துப் பிடித்துக்கொண்டான்.

சக்கிரவர்த்தி மிக்க சூட்சமபுத்தியுடையவர். அதிலும் நெபோலியன் சக்கிரவர்த்தி மனோதத்துவங்களை நன்கறிந்தவர். அவர் தாம் நினைத்தபோது வெடி தீர்த்துக் கொண்டிருக்கும் பீரங்கியின் கீழே படுத்துக்கருதிய நேரம் வரை நித்திரை செய்யும் சக்தியுடையவர். அவர் நடந்த உண்மையையுணர்ந்து அவனை நோக்கி "உன் கையிலிருப்பது என்ன?" என்றார்.

அதைக் கேட்டதே போர்வீரன் தன்கையி லிருப்பது துப்பாக்கியல்ல பீரங்கி யென்று கண்டதும் "அப்பா!" என்று அதைத் தடாலென்று விட்டுவிட்டான். இப்போது அப் பீரங்கியைத் தூக்கும்படி யவனுக்குச் சக்தியளித்தது எது? மனோவல்லமையே யன்றி வேறில்லை. மனதினிடம் அபாரமான வல்லமையடங்கி யிருக்கிறது. மேற்கண்ட

மாதிரி சமயங்களில் அவ்வல்லமை தானே நம்முணர்ச்சியின்றி வெளிவருகிறது. மனதில் தத்துவத்தை உணர்ந்த அறிவாளிகள் அதைத் தம் வயப்படுத்திக்கொண்டு அதைக் கொண்டே அபூர்வமான காரியங்களை எல்லாம் சாதிக்கிறார்கள்.

சுப்பன் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டதும் கொஞ்சதூரம் அதாவது சிறைச்சாலை இருக்கும் வீதியைக் கடக்குமட்டும் சாதாரண மனிதர் நடப்பதுபோல் மெதுவாய் நடந்தான். அவ்வீதியைவிட்டு அடுத்த வீதியில் நுழையும்போது அங்கு இருள் சூழ்ந்திருந்த ஒரு இடத்தில் நின்று தன் மேல் போர்வையைக் கழற்றிச் சுருட்டிப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அதிவேகமாய் நடந்து வீரப்பன் வீட்டை நோக்கிச்சென்றான்.

29-வது அத்தியாயம்

மேல் அத்தியாயத்தின் இறுதியிற் கண்ட சம்பவங்கள் நடந்த அதே இரவு சுப்பன் சிறைச்சாலையைவிட்டு வெளிப்பட்டதும் மழைபொழியத் தொடங்கியது. சுப்பன் தந்தையாகிய கேசவன் காவலன் கடைசியாகத் தன்னை விட்டுச் சென்றதும், வீரப்பன் அப்போதைக்கப்போது தன்னிடம் அனுப்பிய கயிறுகளை எல்லாம் படுக்கையின் கீழிருந்து எடுத்து வெளியில் வைத்தான். அதன் பின் தன் படுக்கைமேலிருந்த விரிப்பை எடுத்துக் கிழித்து அவற்றையும் கயிறுகளையும் சேர்த்துத் திரித்து ஒரு நூலேணியாகக் கட்டினான். அதோடு ஒரு நீண்ட கயிறும் திரித்துக்கொண்டான். அதன்பின் பின்பக்கம் சாளரத்தின் வழியாய்க் காவலிருப்பவனைக் கவனித்தான்.

அக்காவலன் இரவு சரியாகப் பன்னிரண்டுமணிக்கு இன்னொருவனால் மாற்றப்படுவோன். அதனால் இவனை

ஏமாற்றி விட்டுச் சென்றால் இரவு பன்னிரண்டு மணிக்குச் சங்கதி வெளிப்பட்டுவிடும், பிறகு வருகிறவன் காலத்தில் அவனை எவ்விதத்திலும் வஞ்சித்துச் சென்றால் மறுநாள் காலை ஏழு மணிக்குப் பின் அவனைமாற்றும் ஆள் வந்த பின்பே சங்கதி பெருவாரியிலும் வெளிவரும். அது காறும் வாராது. ஆகையால் கேசவன் அங்கு பின்பக்கம் காவலர் மாறுமட்டும் தன் காரியத்தைத் தொடங்க எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு மணி பன்னிரண்டாகும்போது மழை மும்முரமா அடிக்கத் தொடங்கியது. இரண்டொரு நிமிஷங்களில் காவலர் மாறிவிட்டார்கள்; இருளோ பயங்கரமாக விருந்தது. ஆனால் கள்ளனுக்கு அந்த இருள் மிக்க அனுகூலமாக விருந்தது. மாறிவந்த காவலன் ஓயாமல் முன்னும் பின்னும் துரிதமாக ஒரே நடையாய் நடந்து காவலிருப்பதற்குப் பதிலாக இரண்டு கோடிகளிலும் சில நிமிஷங்கள் தங்கிவரத் தொடங்கினான். அவன் என்ன செய்வான் பாவம்! மழைத்தூறல் நற நறவென்று முகத்திலடிக்கிறது. ஒரு அடிக்கு முன் ஆள் நின்றால் தெரியாது. அத்தகைய காலத்தில் எதாவது விசேஷம் நடக்குமென்று யார்தான் எதிர்பார்ப்பார்கள். அதோடு மழையின் நோக்கத்தை அறிந்து "நாம் அர்த்த ராத்திரியிலிருந்து காலை வரை பாரா கொடுக்க வேண்டுமே அப்போது தான் குளிரும் அதிகமாகவிருக்கும்," என்று சிந்தித்துக் கொஞ்சம் அதிகமாகவே சாராயம் அருந்திவிட்டு வந்திருக்கிறான்.

கேசவனுக்கு அது மிக்க அனுகூலமான சந்தர்ப்பமே. அவன் மாற்றுக் காவலன் வந்ததே தன் அறையில் இருந்த தீபத்தை அணைத்துவிட்டுச் சாளரத்தை மெதுவாகத் திறந்தான். காவலன் சாளரத்தினருகில் வருவ

தும் எட்டப்போவதும், எந்தத் திக்கில் செல்கிறானென்பதும் அவன் காலடிச் சத்தத்தால் கேசவன் நன்றாக அறிந்து கொள்ளலாம். ஆகையால் மணியங்களிரண்டிற்குச் சரியாகக் காவலர் மாறியதும் சாளரத்தில் வந்து நின்று கவனித்தான். எங்கும் காரிருள் சூழ்ந்திருக்கிறது. அதோடு காவலன் கோடிகளில் சென்றதும் உடனே திரும்பி வருவதில்லை என்றும் ஐந்தாறு நிமிடங்கள், சில சமயங்களில் பத்து நிமிடங்கள் கூடத் தங்கித் தாமதித்து வருகிறானென்றும் அறிந்துகொண்டான்.

ஆச்சு, மணி ஒன்றடித்தது; காவலன் ஓரங்களில் அதிக நேரம் தாமதிக்கத் தொடங்கினான். கேசவன் இனி நாம் ஆலசியம் செய்யலாகாதென்று கருதி, தான் முன்னமே ஒரு பக்கம் அறுத்து விட்டு அறுபட்ட வாய்கள் தெரியாவண்ணம் கழிப்புமெழுகு பூசியிருக்கும் சாளரக் கம்பிகள் நான்கையும் மறுபக்கம் அடியோடிழுத்து வளைத்துவிட்டு அவற்றில் தான் தயாரித்து வைத்திருந்த ஒரு நீண்ட பலமான கயிற்றின் ஒரு முனையைக் கட்டி விட்டு மற்றக்கயிற்றை வெளிப்பக்கம் விட்டு விட்டான். தான் தயாரித்து வைத்திருந்த நூலேணியை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு தன் உடைகளை ஒரு சிறு மூட்டையாக்கி முதுகின்மேல் கட்டிக்கொண்டு சாளரத்தினருகில் மஞ்சத்தை இழுத்து வைத்து ஆயத்தமாக நின்று வெளியில் பார்த்துக்கொண்டிருந்தான்.

பத்து நிமிடத்திற்குள் பாராக்காரன் தன் சாளரத்தருகில் வந்து அதைக் கடந்து செல்வதை அறிந்தான். ஒரு நிமிடம் கழிந்து மஞ்சத்தின் மேலேறியதும் சாளரத்திலிருந்து தொங்கும் கயிற்றின் வழியாய்த் துரிதமாக மறுபக்கம் இறங்கியதும் காவலன் சென்ற கோடிக்கு மறு

கோடியில் சென்று அங்கிருந்த அந்தகாரத்தில் மறைந்து நின்றான். சுமார் பத்து நிமிடங்கள் கழித்து பாராக்காரன் தான் இருக்கும் கோடியை நோக்கி வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே தன் நண்பனாகிய வீரப்பன் அனுப்பிய ஒரு பொட்டணத்தை உட்சேபியிலிருந்து எடுத்து அதற்குள்ளிருந்ததை எடுத்தான். அது சுமார் ஆறங்குல அகல நீளமுள்ள பிசின் தடவப்பட்ட சீலைத்துண்டு. அதன்றி மற்றொரு சேபியிலிருந்த ஒரு சீலைத்துண்டையும் எடுத்து ஆயத்தமாக மேல் ஜேபியில் வைத்துக் கொண்டான்.

பாராக்காரன் தானிருக்குமிடத்தை நெருங்குவதை அறிந்ததே கேசவன் மேற்கண்ட இரண்டு வஸ்துக்களையும் ஆயத்தமாகக் கரங்களிலெடுத்து வைத்துகொண்டு அங்குள்ள மூலையில் பதுங்கிக்கொண்டான். காவலன் தன் வழக்கம்போல் அங்கு வந்ததும் அங்கிருந்த ஒரு குத்துக் கல்லின்மேல் உட்கார்ந்தான். அக்கல்லின் பின்னால் ஆறடி தூரத்தில் தான் கேசவன் பதுங்கிக் கொண்டிருக்கிறான்.

காவலன் மழையில் அடிப்பட்டு ஆயாசத்தோடு வந்து அங்கு உட்கார்ந்ததும் கேசவன் புலிபோல் பாய்ந்து அவன்மேல் வீழ்ந்து அவன் வாயின்மேல் பிசின் தடவிய சீலையை அப்பியதும் அவனைக் கீழே தள்ளிச்சீலைத்துண்டை அவன் சிரசின்மேல் போட்டு மூடிப்பிடித்துக்கொண்டு அவன் மார்பின்மேல் முழங்காலை அழுத்தியபடி "நீ வாய் திறக்க முயன்றால் இந்த ஈட்டியால் உடனே குத்திவிடுவேன்," என்று பயமுறுத்தினான்.

பாபம் அக்காவலன் தனக்குத் திடீரென்று இத்தகைய ஆபத்து நேர்ந்ததால் அவனுக்கு அது இன்னதென்று புலப்படவில்லை. தன் எதிரி யாரென்றேனும், அவர்கள் எத்தனை பேரென்றேனும் ஒன்றும் தெரியாது.

எல்லாம் பெரும் பீதியாகவே அவனுக்கு அச்சமயம் தோன்றியது. தன் உயிரே ஆபத்திலிருக்கிற தென்று மட்டுமே அச்சமயம் அவனுக்குப் புலப்பட்டது.

ஆகையால் அவன் ஒன்றையும் கருதாமல் தன் உயிரைப் பாதுகாப்பதொன்றையே கருதினன். அந்தோ! யாருக்கும் மனைவி மக்கள் முதலிய உயிர்ச் சார்பையும், தனம் தானியம் பூமி முதலிய பொருட் சார்பையும் விடத் தன் உயிரே அதிக இனிப்புடைய தன்றோ. ஆகையால் அப் பாராக்காரன் "என்னை ஒன்றும் செய்யவேண்டாம், உயிரோடு விட்டு விடுங்கள். நான் பேசாமலே இருக்கிறேன்," என்று சமிக்ஞை காட்டினன்.

கேசவன் நமது காரியம் இவ்வளவு அனுகூலமாக முடிந்ததே போது மென்று கருதித் தனக்குள் சந்தோஷமடைந்து, அக்காவலனை, தான் கொண்டுவந்த கயிற்றால் கட்டித் தூக்கிக் கொண்டுபோய் அங்கு மதில் சுவர் ஓரத்திலிருந்த சிறு வீட்டில் போட்டு அதை மூடித் தாளிட்டுக் கொண்டு அங்கிருந்து வெளிவந்தான்.

இப்போது கேசவன் அங்கிருக்கும் மதில் சுவரைமட்டும் தாண்டி விட்டால் வெளிப்பட்டு விடலாம். அவனுக்கு இச்சங்கதி தெரிந்தே யாவற்றிற்கும் ஆயத்தமாக இருக்கிறான். அவன் சிறைச்சாலையிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்திருக்கும் நூலேணியின் ஒரு முனையில் இரண்டு இரும்புக் கொக்கிகள் கட்டப்பட் டிருக்கின்றன. காவலனை அவன் அறையில் போட்டு அடைத்து விடச் சந்தர்ப்பம் வாய்த்தது அவன் எதிர் பாராத நற்காலம்.

அதன் பிறகு கேசவன், வீரப்பன் தனக்கு எழுதிய கடிதத்தில் குறித்த ஏற்பாட்டின் படி அம்மதில் சுவரின் வடகோடியிற் சென்று மூன்று சிறிய கற்களை மறுபக்கம் எறிந்தான். இரண்டொரு நிமிடங்களில் மறுபக்க மிருந்து

ஒரு வெள்ளைப் பந்து இவன் எதிரில் வந்து விழுந்தது. அது "நாங்கள் ஆயத்தமாய் உன் உதவிக்காக வந்திருக்கிறோம். நீ யாதொன்றுக்கும் அஞ்சாமல் வெளிவரலாம்," என்று உணர்வதற்காக இவர்களுக்குள் முன்னுடியே ஏற்படுத்திக் கொண்ட ஒரு குறியாகும். ஆகையால் அக் குறியைக் கண்டதும் கேசவன் "தன் புத்திரன் முதல் நண்பர்கள் எல்லாம் வெளியில் துணை வந்திருக்கிறார்கள்," என்று உணர்ந்து, பூரண தைரியத்தோடு, காவலன் வீட்டின் கூரைமேல் நூலேணியை விசிறி யெறிந்தான். அந்த நூலே ணியிலிருந்த கொக்கிகள் கூரையில் மாட்டிக் கொண்டன.

அதன்மேல் கேசவன் பக்குவமாய் அந் நூலேணியின் மேலேறி அச்சிறு வீட்டின் உச்சியை யடைந்ததும், நூலே ணியை மேலுக்கிழுத்து எடுத்துக் கொண்டான். அக் கூரை மதிலின் ஓரத்தில் இருக்கிறது. ஆனல் மதில் சுவரின் கூரையின் உச்சியிலிருந்து ஆறடி உயரமே இருக்கிறது. கேசவன் மறுபடி தன் நூலேணியில் கொக்கிகளிருக்கும் முனையைச் சுவர்மேல் வீசி யெறிந்தான். ஐந்தாறு முறை எறிந்தபின் கொக்கிகள் சுவரின் சிரசில் சரியாக மாட்டிக் கொண்டன. அப்போதுதான் கேசவனுக்கு தைரியம் உண்டாயிற்று. ஏனெனில் இனிச் சுவரின் உச்சியை அடைந்ததும் ஏணியை யெடுத்து மறுபக்கம் மாட்டித் தொங்க விட்டு வெளியில் போய்விடலாம். ஆயினும் அது காறும் சந்தேகமும் திகிலுமே. ஏனெனில் எந்த வேளையில் வேண்டுமாயினும் சிறைச்சாலையில் சம்பந்தப்பட்ட எந்த உத்தியோகஸ்தனேனும் மேல்பார்வை பார்க்கத் திடீ ரென்று வந்து விடலாகும்.

ஆனல் கெட்ட காரியத்திற்கு எல்லா அனுகூலங்க ளும் ஒழுங்காக அமைவது இக்கலிகாலத்தின் இயற்கை. நற்காலத்திற்கோ இடையூறுகளும் இக்கட்டுகளுமே நேரி

டும். ஆகையால் அச்சமயம் எந்த உத்தியோகஸ்தனும் அம் மழையில் அங்கு வரவில்லை. கேசவன் தான் சுவரின் மேல் எறிந்த நூலேணியை இழுத்துப் பார்த்து அது தன் பளுவைத் தாங்கக்கூடிய விதமாய் சுவரில் பற்றிக் கொண்டிருக்கிற தென்பதை உணர்ந்ததும் அதன் வழியாய் மேல் ஏறினான்.

கேசவன் மதில் சுவரின் உச்சிக்குச் சென்றதே மறு பக்கம் தன் நண்பர்கள் ஆயத்தமாக வந்திருக்கிறார்கள் என்பதைப் பிரத்யட்சமாய்க் கண்டான். இவன் சுவரின் மேல் ஏறி உட்கார்ந்த பின் தான் ஏறிவந்த நூலேணியை எடுத்து மறுபக்கம் அதாவது வெளிப் பக்கம் தொங்க விட்டு அதன் வழியாகத்தான் கீழிறங்க வேண்டும். ஆனால் இப்போதோ இவன் சிரம் மதில் சுவருக்கு மேல் வருவதைக் கண்டதே எல்லாவற்றிற்கும் ஆயத்தமாக வந்திருந்த அவன் நண்பர்கள் இவனுக்கு நேராக மதில் சுவரின் ஒரு ஏணியை காட்டினார்கள்.

கேசவன் தன் நூலேணியை எடுத்து மறுபக்கம் தன் நண்பர்களிடம் எறிந்து விட்டு அவர்கள் வைத்த ஏணி வழியாய்க் கீழிறங்கிச் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டான். கேசவன் கீழே பூமியில் காலை வைத்ததும் அவன் புத்திரனாகிய சுப்பன் வந்து அவனை ஆலிங்கனம் செய்து கொண்டான். கேசவனுக்குத் தன் புத்திரன் தனக்கு முன்பே சிறைச் சாலையிலிருந்து வெளி வந்திருப்பதைக் கண்டது பேரானந்தத்தை விளைவித்தது. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சன்றோ?"—

இக்கள்ளருடைய சாமர்த்தியமும் புத்தி சூட்சுமமும் விசேஷமானவைகளே. ஆனால் அத்தகைய புத்தி சாமார்த்தியத்தை அவர்கள் நல்ல வழியில் உபயோகித்திருந்தால்

உலகில் செல்வமும் கீர்த்தியும் பெறலாம். மனிதனுக்கு இயற்கையாகவே பகவான் மனதில் அபூர்வமான வல்லமையை அமைத்திருக்கிறார். ஆனல் மனிதர் சிலர் அந்த வல்லமை யிருப்பதை யுணர்ந்து அதைக் கையாளுகிறார்கள். அப்படிச் செய்வோரிலும் சிலர் அந்த வல்லமையைக் கெட்ட வழியிலுபயோகித்து அல்லல் படுகிறார்கள். ஒரு கள்ளனிடமுள்ள புத்தி சாமார்த்தியமும் தந்திரமும் தைரியமும் ஒரு துப்பறிபவனுக்குள்ள சாமார்த்தியமும் தந்திரமும் தைரியமும் ஒன்றே தான். கள்ளன் தன் அரிய குணங்களைக் களவாடுவதில் உபயோகிக்கிறான். அதனல் கடைசியில் பலமான தண்டனையடைகிறான். துப்பறிபவன் தன் வல்லமையை அக் கள்ளனைப் பிடிப்பதில் உபயோகிக்கிறான். அவன் புகழும் பொருளும் அடைகிறான்.

* * * * * *

பூபாலப்பிள்ளை இராஜாமணி பங்கஜம் மூவரும் தம்கம்மாளும் கள்ளர் இருந்த வீட்டை விட்டுப் புறப்பட்டபின் பூபாலப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றார்கள். பூபாலப்பிள்ளையின் கலியாணம் மிகவும் இரகசியமாகவே நடந்தது என்பதைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். இப்போது அதைக் கொண்டாடுவதற்காகப் பங்கஜம் என்ற மார்த்தாண்டம் சீமாட்டி தனது மாளிகையில் ஒரு விருந்து வைத்திருக்கிறாள் என்றும் உரைத்திருக்கிறோம். அச்சீமாட்டியின் மாளிகை விசாலமானது. மிக்க பணச் செலவு செய்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதைச் சூழ்ந்து மிக்க அழகான ஒரு தோட்டமிருந்தது. இரண்டு மூன்று நாட்கள் விருந்து மிக்க தடபுடலாக நடந்தது. பூபாலப்பிள்ளையின் நண்பர்களும், அநேகம் செல்வ வந்தர்களும், பெரிய மனிதர்களும் வந்திருந்தார்கள். இராஜாமணியின் நாணயமான நடக்கைகளையும், நடை யுடை பாவ

லைகளையும் கண்ட அனைவரும் பூபாலப்பிள்ளை அடைந்த மனைவியைப்பற்றி மிகப் புகழ்ந்து சந்தோஷம் காட்டினார்கள். அவளுடைய உருவத்தையும் அவள் நடக்கும்மாதிரியையும் மட்டுமே யாவரும் கண்டார்களன்றி அவள் யார் என்று ஒருவருக்கும் அறிவிக்கப்படவில்லை.

இம்மாதிரி மூன்று நாட்கள் விருந்து நடந்தது. பிறகு பூபாலப்பிள்ளையும் அவர் மனைவியும் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். தங்கம்மாளுக்கு நடந்த சங்கதி முழுமையும் தெரியுமாதலால் இப்போது பூபாலப் பிள்ளையும் அவர் மனைவியும் ஒன்று சேர்ந்துவிட்டதைப் பற்றி அவள் சொல்லொணாச் சந்தோஷமடைந்தாள். இராஜாமணி இப்போது பூபாலப்பிள்ளை வீட்டின் எஜமானியாய்விட்டாள். பூபாலப்பிள்ளையின் மனக்கலக்கம் முழுமையும் சற்றேறக் குறைய ஒழிந்தது. என் சற்றேறக்குறையவென்று கூறினோமெனின் தமது மனைவியின் தந்தையும் தமையனும் அதே நகரச் சிறைச்சாலையில் சிறைவாசத்திலிருப்பது அவர் மனதிற்குச் சஞ்சலத்தை அளித்துக்கொண்டே இருந்தது.

ஏனெனில், அவர்கள் அயோக்கியர்கள். தம்மிடம் அவர்களுக் கிருக்கும் சம்பந்தத்தை வெளியிடுவதில்லை என்று அக்கள்ளர் இருவரும் சத்தியம் செய்திருந்தாலும், அப்படிச் செய்தால் தாங்கள் செய்த கொலைக்குற்றம் பகிரங்கப் படுத்தப்படும் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய் அறிவிக்கப்பட் டிருப்பினும் எந்தச் சமயத்தில் அவர்கள் பண ஆசையால் ஆத்திரங்கொண்டு, அல்லது குடிவெறியால் பெருமைக்காக அச்சங்கதியை வெளியிட்டு விடுவார்களோ என்பது அவருக்கு அச்சமாகவே இருந்தது.

இராஜாமணிக்கோ, தன் தந்தையும் தமையனும் சிறைச்சாலையி லிருக்கிறார்களே என்று மனதில் வியாகூலம்

இருந்து கொண்டே இருந்தன. ஆனால் தன் புருஷன் விஷயத்தில் அவளுக்கு எல்லா விஷயங்களிலும் மிக்க திருப்தியாகவே இருந்தது. முதலாவது தன் கணவன் தன்னை மணம் புரிந்தபோது ஏதோ தமது சுயநலத்தைக் கருதி ஒப்புக்கு தன்னை மணம் புரிந்தாரே அன்றி தன்மேல் உண்மையான காதல் அவருக்கில்லை என்றே அப்போதிருந்த சந்தர்ப்பப்படி கருதினாள்.

ஆனால் அவள் உண்மையான கற்புடையவளானதால் தன் கணவன்மேல் பூரண அன்புவைத்து அவன் இருக்குமிடத்திற் கருகிலேயே இருக்கத் தீர்மானித்தாள். அதோடு தன் தந்தை தமையன் இவர்களுடைய நடக்கையில் அவளுக்கு வெறுப்பே. அவளுடைய இயற்கைக் குணத்திற்கு அவர்கள் நடக்கை சற்றும் சம்மதமானதா யிருக்கவில்லை. இவர்களை விட்டு எப்போது நீங்கிவிடலமோ வென்று தன் அனுகூல காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்களது மேல் நாட்டு ஆசாரப்படி கலியாணப் பருவம் வந்த ஒரு பெண் தன் அந்தஸ்திற்குக் குறையாத அந்தஸ்துடைய வாலிபப் புருஷர்கள் இருக்குமிடத்தில் நடமாடவேண்டும். அதன்மேல் எந்த வாலிபனாவது அவள்மேல் காதல் கொள்ளவேண்டும். அவளுக்கும் அவன்மேல் பரஸ்பரக்காதல் உண்டாக வேண்டும். இருவரும் இரண்டொருமாதமாவது பழகவேண்டும். கடைசியில் ஆடவன் அவளை நோக்கி நான் உன்மேல் காதல் கொண்டிருக்கிறேன். உன்னை மணம்புரிய விரும்புகிறேன் என்று கூறவேண்டும். அதற்கு அவள் ஒப்புக்கொண்டால் பிறகே அவளுடைய பெற்றோர்க்கு அதைப்பற்றிக் கூறுவாள். இவர்களுக்குள் மனங்கலந்து விட்டபின் இவர்களுக்குப் பிரியமான காலத்தில் தான் அதைப் பெரியோரிட மறிவிப்பார்கள்.

நேயர்களே! ஈண்டு ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறோம். ஒரு பெண்ணை மணம்புரியக் கொடுப்பதெனின், தந்தை மணமகன் கல்வி உடையவனா வென்பதைத் தான் கவனிப்பான். பெண்ணின் தாயோ மருமகன் செல்வமுடையவனா என்பதைக் கவனிப்பாள். பெண்ணோ கைநிறைந்த பொன்னைவிட கண்ணுக்கினிய புருஷனை வேண்டுமென்று கருதுவாள். இது ஆன்றோர் அனுபவமாகக் கண்டறிந்த உண்மை.

இது ஒரு பக்கமிருக்கட்டும். உலக அனுபவம் என்னென்று பார்ப்போம். ஒரு வாலிபன் வீதி வழியே சென்றுகொண்டிருக்கிறான். ஒரு வீட்டின் வாயிற்படியில் ஒரு பெண் நிற்பதைக்கண்டு அவள்மேல் அடக்க முடியாத காதல்கொண்டு அவள் யாரென்று விசாரிக்கிறான். அவள் விலை மாது என்று தெரிந்தால் "சரி ஒரு நாளைக்கு எவ்வளவாயினும் சரி, கொடுத்துவிட்டு இவளிடம் சுகமனுபவிக்கலாம்," என்று கருதுகிறான்.

இப்போதிவன் மனதில் காதலை உண்டாக்கியது அவள் உருவமேயன்றி, அவள் குணம், நடக்கை, குலம் முதலிய எதுவு மல்ல. ஆடவர்கள் மாதர்களின் மாயவலையிற் சிக்கி இடர்ப்படுவது அவர்கள் அவயவங்களைக் கண்டு மயங்கியே அன்றி வேறில்லை.

உலக அனுபவம் சற்றும் அறியாத வாலிபர்கள், எதற்காக நாம் மணம்புரிய வேண்டும், எத்தகைய கன்னிகை நாம் மணம் புரியத் தக்கவள் என்ற ஒன்றையும் அறியாத வாலிபர்கள், கண்ணுக்குப் பிரியமான பெண்ணையே விரும்புவார்கள். ஆகையால் தான் நமது முன்னோர் தம் மைந்தருக்குத் தாமே பெண்ணைத் தேடி மணம் செய்விக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டார்கள்.

இராஜாமணியின் தாயார் இறந்தபின் அவள் தந்தையும் தமையனும் கெட்டவழியில் நடக்கத் தொடங்கியபடியால் அவர்களிடம் சரியான மனிதர் வருவதில்லை. ஆகையால் இராஜாமணிக்கு மணம் புரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அன்று அந்தனிவீட்டில் முதல் முதல் பூபாலப்பிள்ளையைக் கண்டவுடனே அவள் அவர்மேல் விருப்பங்கொண்டாள். ஆயினும் "சே! புது மனிதன். முன் பின் அறிமுகமில்லாதவன். இவன்மேல் நமது மனம் நாடுவது தவறு. நாம் இவனுடன் சம்பாஷிக்க முயன்றால் மனம் அதிகமாக இவன்மேல் பற்றிக்கொள்ளும்," என்று கருதியே உடனே எழுந்து சமையலறைக்குப் போய்விட்டாள்.

பிறகு தன் தந்தை பூபாலப்பிள்ளையிடம் பணம் இருப்பதைக்கண்டு அவரைக் களவாடவும் கொலை செய்யவும் தன் தமையனோடு ஆலோசனை செய்தபோது, இயற்கையாகவே அந்நடக்கையில் அவளுக்கு விருப்பமில்லை. அதோடு தான் பிரியங்கொண்ட ஒருவனுக்கு அத்தகைய ஆபத்து நேர்வதைத் தடுக்காமலிருக்க அவள் மனம் இடந்தரவில்லை. அதனால் தான் அவள் தன் தந்தை தமையன் இவர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் அஞ்சாமல் தைரியத்தோடு அந்த இரவு பூபாலப்பிள்ளையைக் காப்பாற்றினாள். பிறகு பூபாலப்பிள்ளை தன்னை மணம்புரிந்தபோதும் அவளுக்கு அவர் செல்வவான் என்று தெரியாது. அவர் தமது தந்தையிடம் காட்டிய பக்தியைக் கண்டபோது அவளுக்கு அவர் விஷயத்தில் அதிக மதிப்பே உண்டாயிற்று.

பிறகு அவரை விட்டுப் பிரிந்தபோது "நாம் விரும்பிய ஒருவனைக் கடவுள் முன்னிலையில் மணம்புரிந்து கொண்டோம், நமது தீவினைப் பயனால் அவனோடுகூட இருந்து வாழ்வதற்கு அமைப்பில்லை. ஆயினும் இனி நாம் இன்னொருவனைக் கனவிலும் நினைக்கலாகாது," என்று தனக்

குள் தீர்மானித்துக்கொண்டே பூபாலப்பிள்ளை வீட்டை விட்டு வெளிப்பட்டாள். வெளிப்பட்டபின் தன் தந்தை தமையன்களிடம் திரும்பிச் செல்ல அவளுக்கு விருப்ப மில்லை. ஏனெனில் அவர்களுடைய நடக்கை அவளுக்குப் பிடிக்கவில்லை. அதோடு தான் ஒரு பணக்காரனை மணம் புரிந்துகொண்டதை யறிந்தால் அவர்கள் அக்கிரமமாக அவரிடம் பணம் பறிக்க முயல்வார்கள். ஆகையால் இனி அவர்கள் கண்ணுக்கு நாம் புலப்படலாகாது என்று தீர் மானித்துக் கொண்டாள்.

அதன் பிறகு இனி நாம் தனியே எங்கு வசிப்பது என்று சிந்திக்கலானாள். அச்சமயமட்டும் ஒரு ஹோட்ட லில் போய் இரண்டு மூன்று நாட்கள் தங்கி யிருந்தாள். இதற்கிடையில் தீர ஆலோசித்தாள். "நாம் நியாயமாகத் நமது கணவனோடு கூடவே யிருக்கவேண்டும். இப்போது நாம் விரோதப்பட்டு பிரிந்து விடவில்லை. நமது கணவரு டைய மனோபாவம் மாறிவிடவும் கூடும். ஒரு சமயம் அவர் நம்மை அழைத்துக் கொள்ளக் கருதினும் கருதலாகும். தற்சமயம் அவருக்கு அதில் விருப்பமில்லாததால் நாம் கூட இருப்பதை யவர் அறியலாகாது. அவருக்குத் தெரி யாமலே நாம் அவர் அருகிலேயே யிருந்து வந்தால் நாம் அவருக்கு உதவி செய்யத்தக்க சந்தர்ப்பம் தெய்வாதீன மாய் நேர்ந்தாலும் நேரும். அதுதான் சரி," என்று தனக் குள் தீர்மானித்துக் கொண்டாள்.

ஆனால் அத்தீர்மானம் எப்படி நிறைவேறுவது? தான் பகிரங்கமாய் அவர் வீட்டிற்குச் சென்று தன்னை ஒரு வேலையில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்க முடியாது. அப்படிச் சென்றால் உண்மை வெளிப்பட்டு விடும். ஆகையால் கடைசியில் அவள் மனதில் ஒரு ஆலோசனை உதித்தது. அதவேது, தான் அவரை யறி

யாமலே அவர் வீட்டிற்குள்ளிருக்க வேண்டுமாயின் அவ் வீட்டிலிருக்கும் யாரேனுமொரு ஆள் நமக்கு உளவாயி ருக்க வேண்டும். ஆகையால் தன்போல் ஒரு ஸ்திரீயா கிய தங்கம்மாளைக் கண்டு பேசுவதென்று தீர்மானித்தாள். ஒரு நாள் தங்கம்மாள் கடைவீதிக்குச் சென்றுகொண்டி ருக்கையில் அவளைத் தொடர்ந்து சென்று ஒரு தனியிடத் திற்கழைத்துக் கொண்டு போய்க் கண்ணீர் விட்டுக் கொண்டே தன் சங்கதிகளை வெளியிட்டு, "இந்த விஷயத் தில் நீ எனக்கு உதவி செய்தால் நான் உயிருள்ள மட்டும் அந்த நன்றியை மறக்கமாட்டேன். ஆயினும் நீ செய்யும் உதவிக்கு ஆண்டவனே உனக்கீடு செய்யவேண்டும்," என்று மொழிந்தாள்.

இராஜாமணியின் கணவன் பக்தியையும் சுயநலங் கரு தாத குணத்தையும் கண்ட தங்கம்மாள் அவள்மேல் மிக்க இரக்கங் கொண்டு அவள் பிரியப்படி நடக்கச் சம்மதித் தாள். அந்த ஏற்பாட்டின் படி தங்கம்மாள் வீட்டில் உள்ள தையல்வேலை முதலியவற்றைச் செய்யத் தனக்கு ஒரு உதவிவேண்டுமென்று பூபாலப்பிள்ளையிடம் கூறினாள். அச் சமயம் அவர் பங்கஜத்தின் காதலை இழந்து விட்ட தொன்று, தான் ஒரு பெண்ணை மணம்புரிந்து அவளைப் பிரிந்து விட்டதொன்று ஆகிய இவ்வியாகூலங்களால் ஒரு விதப் பித்தங் கொண்டவர் போல் வீட்டு விஷயங்களில் சற்றேனும் கவலையின்றி யாவற்றையும் தமக்கு நம்பிக்கை யான காரியஸ்தியாகிய தங்கம்மாளிடம் விட்டு விட்டிருந் தபடியால், தங்கம்மாள் தையல் வேலைக்கு ஒரு ஆள் வேண்டும் என்றதற்கு அவர் "சரி, உனக்குப் பிரியமான ஒரு பெண்ணை அமர்த்திக்கொள். மற்ற சங்கதிகளைப்பற்றி என்னைக் கேட்கவேண்டாம்," என்று கூறிவிட்டார்.

அதன்மேல்தான் இராஜாமணி அங்கு வசிக்கத் தொடங்கினாள். அதுமுதல் தன் கணவன் நடக்கைகளிலும்

குணங்களிலும் அவளுக்கு மிக்க திருப்தி உண்டாயிற்று. கடைசியில் தன் கணவன் இப்போது தன்மேல் பூர்ண அன்பு கொண்டிருக்கிறார். நாம் கூட இராவிட்டால் அவர் வாழ் நாட்களில் பெருந்துக்கமே ஏற்படுமென்று உணர்ந்தாள்.

30-வது அத்தியாயம்

மேற்கண்ட காரணங்களால் இராஜாமணி, தன் தந்தையும் தமையனும் அவ்வூர்ச் சிறைச்சாலையிலிருக்கிறார்களே என்ற ஒரு மனக்கலக்கம் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் அவள் திருப்தியோடேயே இருந்தார்கள். கள்ளர்கள் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்ட மறு நாள் காலை ஊரெங்கும் பெரிய வதந்தி உண்டாய் விட்டது. சிலர் அவர்கள் இருந்த அறைகள் அப்படியப்படியே பூட்டப் பட்டிருந்தனவாம். அவர்கள் இருவரும் மட்டும் எப்படியோ மாயமாய்ப் போய்விட்டார்கள் என்றார்கள். சிலர் அவர்கள் இரவு கடைசியாகக் காவலன் வந்து பார்த்துத் திரும்பும்போது அவனைக் கொன்றுவிட்டு மதில் சுவரின் மேலேறி யோடி விட்டார்களாம் என்றார்கள். சிலர் இவையாவும் பொய், சிறைச்சாலை அதிகாரியே பணம் வாங்கிக்கொண்டு உளவாக இருந்து அவர்களை விட்டுவிட்டார் என்றார்கள்.

கடைசியில் காலை ஒன்பது மணிக்கு யாவர்க்கும் பட்டவாடா செய்யப்பட்ட தினசரி விசேஷ அனுபந்தத்தில் பின்வரும் சமாசாரம் இருப்பதைப் பூபாலப்பிள்ளை வாசித்துத் தன் மனைவிக்குக் காட்டினார்:—

"சிறைச்சாலையில் ஆச்சரிய சம்பவம். கேசவன் சுப்பன் என்ற இரண்டு பிரசித்தி பெற்ற பாங்கிக் கொள்ளைக்

காரர்களும் மறுபடி சிறைச்சாலையினின்றும் தப்பியோடி விட்டார்கள். கடந்த வாரமே அவர்கள் நம் நாட்டுப் பிரசித்திபெற்ற துப்பறியும் சிங்கமாகிய ஆனந்தசிங்காலும் அவர் சீடராகிய ஜெயசிங்காலும் மிக்க சாமார்த்தியமாகப் பிடித்துச் சிறையில் அடைக்கப் பட்டார்கள் என்ற சங்கதி முன்னமே நமது பத்திரிகையில் வெளியிடப் பட்டிருக்கிறது. இரவு வானம் இருண்டு மழை தூறிக்கொண்டிருந்தது கள்ளருக்குத் தப்பித்துக் கொண்டுபோக அனுகூலமான சமயமாக விருந்தது. கள்ளரில் மூத்தவன் தந்தை. வாலிபன் அவன் மைந்தன். தந்தை அவன் இருந்த அறையின் சாளரக் கம்பிகளில் நான்கை ஒருபக்க மறுத்துப்பின் பக்கம் வளைத்து விட்டுப் பின்னுள்ள முற்றத்திலிறங்கி அங்கிருந்த பாராக்காரனைக் கட்டி அவன் வாயில் சீலை திணித்துப்போட்டு விட்டு எம்மாதிரியாகவோ மதில் சுவரைத் தாண்டிப் போய்விட்டான்.

அவன் மைந்தன் செய்தது பின்னும் துணிகரமான வேலை. அவன் இரவு எட்டுமணிக்குக் கடைசியாகக் காவலன் பார்த்துவிட்டுச் செல்ல வந்தபோது எவ்வாருகவோ அவன் வாயில் துணியைத் திணித்துக் கயிற்ருல் அவனைக் கட்டி அறைக்குள் போட்டு விட்டு அவன் உடைகளையும் போர்வையும் அணிந்துகொண்டு சாதாரண வழியாகவே வெளியில் போய் விட்டிருக்கிருன்.

இவர்களிடம் பலமான கயிறும் இரும்புக் கம்பிகளை அறுக்க அரமும் இருந்திருக்கின்றன. சோதனை செய்யப் பட்டதில் இரும்பை மிருதுவாக்கும் ஏதோ ஒருவிதத் திராவகத்தை உபயோகப்படுத்தி இருக்கிருர்களென்று தெரிகிறது. அது மட்டுமல்ல, அவர்களிடம் ஈட்டி கத்தி முதலிய ஆயுதங்கள் இருந்திருக்கின்றன. இவை யாவும் வெளியிலிருந்தே அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

அவை யெப்படி வந்தனவென்று இப்போது தெரியவில்லை. துறைமுகங்களுக் கெல்லாம் எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்கள் கண்டு பிடிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை யிருக்கிறது. இனி வரும் சங்கதிகள் வெளியிடப்படும்."

பூபாலப்பிள்ளை இதை வாசித்த பின் மனவருத்தத் தோடு தன் மனைவிக்குக் காட்டினார். அவள் அதை வாசித்த பின் மிக்க மனத்துயரடைந்தாள். ஆயினும் தன் கொழு நரை நோக்கி "சரி, இனி அவர்கள் நாட்டை விட்டுப் போய் விடுவார்கள்," என்றாள்.

பூபாலப்பிள்ளை அதற்கு "எங்கேனும் அவர்கள் க்ஷேம மாக விருக்கவேண்டு மென்பதே என் கோரிக்கை. உன் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்காம விருந்தார்க ளாயின் அதுவே யெனக்குப் போதும்" என்றார்.

அன்றிரவு பூபாலப் பிள்ளையின் வீட்டில் யாவரும் போசனம் முடிந்தபின் அவரவர்கள் அறைகளில் சயனித் துக்கொண்டார்கள். இரவு சுமார் பதினொருமணி யிருக் கும். அச் சமயம் தெருக்கதவு தட்டப்பட்டது. உடனே யொரு வேலைக்காரன் போய்க் கதவைத் திறந்தான். இரண்டு ஆடவர்கள் வந்து "நாங்கள் பூபாலப் பிள்ளையின் மனைவியை ஒரு அவசர விஷயமாய்ப் பார்த்து விட்டுப் போகவேண்டும். இதோ இச் சீட்டைக் கொண்டுபோய் அந்தம்மாளிடம் கொடு," என்று ஒரு கடித உறையை யவ னிட மளித்தார்கள்.

அவன் உடனே அதைக் கொண்டுபோய்த் தன் எஜ மானியிட மளித்தான். இராஜாமணி அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில் கீழ்க் கண்டபடி வரையப்பட் டிருந்தது:—

"எங்கள் அன்பார்ந்த புத்திரிக்கும் தங்கைக்கும் நாங் கள் இருவரும் எழுதிக்கொள்வது:—இப்போது நாங்கள்

சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டு கடவுள் தயவால் வந்து விட்டோம். ஆயினும் நாங்கள் கொடுத்த வார்த்தைப்படி இந் நாட்டைவிட்டுப் போய் விடுகிறோம். மறுபடி இங்கு வரமாட்டோம். உன் கணவர் எங்களுக்காக ஏதோ பணம் கட்டிவைப்பதாகவும், நாங்கள் நாட்டை விட்டுச் செல்லும்போது எங்களுக்கு அதைக் கொடுப்பதாகவும் முன்பு கூறினர். ஆனல் எங்கள் சிறைவாசம் முடியுமட்டும் இங்கு அடைபட்டுக் கிடக்க எங்களால் முடியாது. ஆகையால் எங்களுக்கு உதவுவதாக அவர் வாக்களித்த பணத்தைக் கொடுத்தால் நாங்கள் நாளையிரவு இங்கிருந்து புறப்படும் ஒரு கப்பலில் இரகசியமாய்ப் போய்விட ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வளவே சங்கதி. கடவுள் தயவால் நீயும் உன் கணவரும் நீடூழி சுகமாகவும் க்ஷேமமாகவும் வாழவேண்டுமென்பதே எங்கள் விருப்பம்."

இக் கடிதத்தை யவள் வாசித்த பின் அவள் கண்களில் நீர் துளிர்த்தது. அந்தோ! உத்தம மைந்தர்களுக்கும் சகோதரர்களுக்கும் தம் பெற்றோரிடமும் உடன் பிறந்தாரிடமும் அன்பு நிகழாதிருக்குமோ? அதை வாசித்த பின் இராஜாமணி சற்று சிந்தித்தாள். "இனி நாம் யோசிப்பதில் பயனில்லை. நமது கணவர் அபிப்பிராயப்படியே இவ் விஷயம் நடைபெறவேண்டும்," என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு அக் கடிதத்தைக் கொண்டு போய்த் தன் கணவரிடம் அளித்தாள்.

பூபாலப்பிள்ளை மிக்க பெருந்தன்மை வாய்ந்தவர். தன் மனைவிக்கு மனவருத்தம் நேரிடா வண்ணம் நடக்கவேண்டுமென்கிற எண்ணமுடையவர். அவர் அக் கடிதத்தை வாசித்தும் ஒரு நிமிடமே சிந்தித்து "சரி அவர்களை உன் அறைக்கு வரும்படிச் செய். அவர்களுக்கு ஆகா

ரம் அளித்து உபசரி. கால் மணிக்குள் நான் அங்கு வருகி றேன்," என்றார்.

இராஜாமணி தன் பர்த்தாவின் மிக்க அன்பார்ந்த பெருந்தகைமையைத் தன் மனதிற்குள்ளேயே வியந்து கொண்டு "அப்படியே செய்வேன்" என மொழிந்தேகி னள். இராஜாமணி யுடனே தன் தந்தைக்கும் தமையனுக் கும் ஆகாரம் அளித்தாள். அவர்களும் மனதாரப் புசித் தாயிற்று. அச் சமயம் அந்த அறையின் கதவு திறக்கப் பட்டதும் பூபாலப்பிள்ளை உள்ளே வந்தார்.

அவரைக் கண்டதே கள்ளரிருவரும் எழுந்து நின்றார் கள். மூத்தவன் என்னமோ கூற வாயெடுத்தான். அதை யறிந்த பூபாலப்பிள்ளை "அதிகமாய்ப் பேச இப்போது அவகாசமில்லை. உங்களைப் பிடிப்போர்க்கு பெருந்தொகை யான பரிசளிக்கப் படுமென்று மாலைப் பிரசுரமான பத்திரி கைகளில் கண்டேன். நீங்கள் கூறியபடி எங்கேனும் அன்னிய நாடு சென்று இனியேனும் நல்வழியில் காலத் தைக் கழியுங்கள். இதோ இப் பையில் ஐயாயிரம் ரூபாயிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நீங்கள் நல்ல வழியில் நடந்தால் அதிகச் செல்வம் சம்பாதிக்கலாம். இதோ இதைக்கொண்டு இவளுக்கு மட்டும் ஆசீர்வாதம் செய்துவிடை பெற்றுச் செல்லுங்கள்" என்று தமது மடியிலிருந்த பணப்பையை எடுத்து மூத்தக் கள்ளனிட மளித்து அறையை விட்டுச் சென்றார்.

பத்து நிமிடங்களில் கள்ளரிருவரும் பூபாலப்பிள்ளை யின் மாளிகையிலிருந்து புறப்பட்டார்கள். பூபாலப் பிள்ளையின் நடக்கை அவர்கள் கல் மனதைக் கரையச் செய்தது; ஆனால் இராஜாமணியோ தன் கணவனுடைய பெருந்தகைமையையும் உதாரகுணத்தையும் அறிந்ததே அவள் மன நெகிழ்ச்சி யவள் கண்களில் நீர் வடியச் செய்

தது. அவள் சுமார் அரைமணி நேரம் அவ்வாறே பூரிப்படைந்த மனோ நிலைமையிலிருந்தாள்.

அந்தோ! இவ்வுலகில் நிலையான அல்லது துக்கக் கலப்பில்லாத சந்தோஷம் எங்கேனும் எவ்விடத்திலேனும் உண்டோ? ஒருபோதுமில்லை என்பது அநுபவமான தோர் உண்மை. ஏனெனில் இது மிசிரம உலகம். அதாவது சுகம் துக்கம், நன்மை தீமை, உயர்வு தாழ்வு, சிறிது பெரிது, நல்லது கெட்டது என்ற இரண்டும் கலந்ததே யாகும், ஆகையால் தன் கணவனுடைய குணத்தைப் பற்றி யானந்த பரவசம் சிந்திக்கொண்டிருந்த இராஜாமணி மறு விநாடி "ஆ! நமது தந்தையும் தமையனும் நாட்டை விட்டே போய்விடப் போகிறார்கள். இனி அவர்கள் முகத்தை நாம் காணப்போகிறதில்லை," என்று கருதியதே அவள் ஆனந்த பரவசம் துக்க நீராக மாறி விட்டது. அவளையும் அவள் கணவனையும் அவ்வளவோடு விட்டுவிட்டுப் பணத்தை வாங்கிச் சென்ற கேசவன் சுப்பன் இருவரையும் கவனிப்போம்.

இந்திரபுரி நகரின் கிழக்கு ஓரத்தில் துறைமுகத்திற்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில் விவசாயிகள் தங்கள் விவசாயக் கருவிகளையும் கால் நடையும் சேர்த்து வைக்கும் ஒரு தனிவீடு புலன்களின் மத்தியில் இருக்கிறது. அது வீரப்பனும் இன்னொருவனும் கூட்டாக விவசாயம் செய்யும் பூமியிலிருக்கிறது. அத் தேசத்தில் குடியானவர்கள் தத்தம் பூமிகளில் தனியாக அத்தகைய கட்டிடங்களை வைத்துக்கொண்டிருப்பது வழக்கம்.

நாம் முன் கூறிய சம்பவங்கள் நடந்தபின் சுமார் இரவு ஒரு மணிக்குக் கேசவனும் அவன் மகனும் அத் தனிக் கட்டிடத்தை நோக்கிச் சென்று அதன் அருகில் நான்கு திக்குகளையும் நன்றாக நோக்கினார்கள். அங்கு ஒரு

வருமில்லை. அதன்மேல் கேசவன் அக்கட்டிடத்தின் பின் பக்கம் சென்று அங்கு வைக்கோல் போடப்பட்டிருக்கும் ஒரு அறைக்குள் நுழைந்து அதன் ஒரு மூலையில் மேல் கூரையில் தொங்கும் ஒரு கயிற்றைப் பிடித்திழுத்தான் இரண்டொரு நிமிடங்களில் வெளிக்கதவு திறக்கப்பட்டதும் மறுபடியும் உடனே மூடப்பட்டது. அதைக் கண்டதே இதுகாறும் வெளியில் நின்றிருந்த சுப்பன் தன் தந்தை சென்றிருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அதன்பின் பின்பக்கமிருக்கும் கதவு திறக்கப்பட்டதும் ஏழுமலை வெளியில்வந்து இவர்களிருவரையும் உள்ளேயழைத்துக் கொண்டு சென்றான். பின்பக்கம் முதலில் ஒரு விசாலமான அறை யிருந்தது. அதில் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள் நிறைய வைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் மூவரும் அதைக் கடந்து ஒரு கூடத்திற்குச் சென்றார்கள். அந்த இடத்தில் பழைய சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒரு பெரிய பெட்டியைத் தூக்கினார்கள். அதன் கீழ் இருந்த கள்ளக் கதவு திறக்கப்பட்டதும் கீழ்நோக்கிச் செல்லும் படிகள் தோன்றின.

அப்படிகளின் வழியாய் மூவரும் இறங்கிச் சென்றார்கள். அங்கு கீழே ஒரு விசாலமான அறையிருந்தது. அதில் ஒரு பெரிய மேஜையும் நான்கு நாற்காலிகளும் இருந்தன. உள்ளேயிருந்த சுவர்களில் இரண்டு பெரிய அலமாரிகள் இருந்தன. அந்த அலமாரிகளில் சிற்றுண்டிவகைகளும் குடிவகைகளும், நான் கைந்து கைத்துப்பாக்கிகளும் இரண்டு ஈட்டிகளுமிருந்தன. அறையின் ஒரு மூலையில் இரண்டு தகரப்பெட்டிகள் இருந்தன. அவற்றில் கேசவன் சுப்பன் இவர்கள் உடைகளிருந்தன. இதனால் இவர்

கள் பூபாலப்பிள்ளையின் வீட்டருகில் இராஜாமணியைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டிருந்தபோதே தங்கள் சாமான்களை அங்கு வைத்துவிட்டு வீரப்பனையும் ஏழுமலை யையும் தங்களுக்கு உளவாக வைத்துக் கொண்டிருந்தார் கள் என்று அறியக்கிடக்கிறது.

மூவரும் அங்கு உட்கார்ந்ததும் ஏழுமலை "நீங்கள் சென்ற காரியம் எப்படி நிறைவேறியது?" என்றான் கேச வன். "கடவுள் தயவால் அது நிறைவேறிவிட்டது. உன் தந்தை சென்றவர் வந்துவிட்டாரா?" என்றான். ஏழுமலை "அவர் இன்னும் வரவில்லை. ஒவ்வொரு விநாடியும் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்." என்றான். அதன் பிறகு அவன் அலமாரியைத் திறந்து அதிலிருந்து ஒரு சாராயப் புட்டியையும் சுருட்டுகளையும் எடுத்து மேஜை மேல் வைத்தான். உடனே மூவரும் சாராயம் அருந்தி விட்டுச் சுருட்டுகளைப் பிடிக்கத் தொடங்கினார்கள்.

ஏழுமலை கேசவனையும் அவன் மகனையும் நோக்கி "இப்போது இனி நீங்கள் என்ன செய்ய உத்தேசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

கேசவன்:—"நான் இந்தப் பூபாலப் பிள்ளையிடம் பெருந் தொகையான பணத்தைப் பிடுங்கலாமென்று கருதி யிருந்தேன், ஆனால் அந்தத் துப்பறியும் ஆனந்த ஸிங்கும் அவன் ஆளாகிய ஜெயஸிங்கும் எங்கள் சங் கதிகளை யெல்லாம் எப்படியோ தெரிந்துக் கொண் டிருக்கிறார்கள், அப்பன்ளத்தாக்கு விஷயம் தெரியு மல்லவா?" என்றதே!

ஏழுமலை, "போதும் போதும், அதைப்பற்றி யதிகம் கூறவேண்டாம். அதைப்பற்றி யென்ன?" என்று நடுக்கத் தோடு கேட்டான்.

கேசவன் "அச்சங்கதி அவர்களுக்கு எப்படியோ நன்றாகத் தெரிந்துவிட்டிருக்கிறது. ஆயினும் நீ அதிகக் கலக்கமடைய வேண்டாம். நாங்கள்தான் அதைச் செய்தோமென்று மட்டுமே யவர்களிடம் ருசுவாக்கப்பட்டிருக்கிறதேயன்றி நீங்கள் அதில் உதவி செய்தது அவர்களுக்கு தெரியாது. அச்சங்கதி அவர்கள் கையிலிருப்பதால் 'நீங்கள் உங்கள் சிறைவாசம் கழிந்ததே இத்தேசத்தை விட்டு தூரதேசம் போய்விடவேண்டும். இதற்கிடையில் இராஜாமணியின் கலியாண சங்கதியைப் பற்றி வெளியிட்டீர்களோ, உடனே அப்பள்ளத்தாக்குக் கொலைக் குற்றத்தை உங்கள்மேல் சாட்டி யதை ருசுப்படுத்திவிடுவோம்,' என்கிறார்கள். ஆகையால் நாங்கள் அந்நிபந்தனையின்படி ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அந்தச் சனியன் போன்ற ஆனந்தசிங், நாம் ஒருவருக்கும் தெரியாத இரகசியம் என்ற இரகசியத்தை, எப்படியோ அத்தாட்சிகளோடு அறிந்துக்கொண்டிருக்கிறான். இனி வேறு வழியில்லை. நாங்கள் எங்கேனும் தூரதேசம் போய்ச் சேர வேண்டியதே, கழுத்தின்மேல் கத்தி தொங்கிக் கொண்டிருக்கும்படியான நிலைமையில் இந்த நாட்டிலிருப்பது மூடத்தனமாகும். உன் தந்தை சமீபத்தில் ஏதோ கப்பல்கள் வெளிநாட்டிற்குச் செல்வதாகவும் அதில் எங்களை ஏற்றி அனுப்புவதாகவும், அதுகாறும் தம் உயிரைக் கொடுத்தேனும் எங்களைக் காப்பாற்றுவதாகவும் வாக்களித்துள்ளார். அவர் அப்படியே செய்வாரென்ற நம்பகம் எங்களுக்குண்டு" என்றான்.

அவன் அவ்வாறு கூறி வாய்மூடும் சமயம் வெளியில் மேலே மணியடிக்கும் சத்தம் கேட்டது. ஏழுமலை என் தந்தைதான் வருகிறார் என்றான். இரண்டு மூன்று நிமிடங்களில் நிலவறையின் படிக்கட்டுகளில் யாரோ இறங்கி

வரும் சத்தம் கேட்டது. மூவரும் உற்று கவனித்தார்கள். மறு நிமிடம் கதவு திறக்கப்பட்டதும் வீரப்பன் உள்ளே வந்தான்.

31-வது அத்தியாயம்

வீரப்பன் நிலவறைக்குள் வந்ததே கேசவனும் அவன் மகனும் அவன் முகத்தை ஆவலோடு நோக்கினார்கள். அவன் வதனத்தில் இருந்த சந்தோஷமான குறியைக் கண்டதே அவர்கள் இருவரும் மனமகிழ்ச்சியடைந்து ஏககாலத்தில் "நண்பரே! என்ன சங்கதி? என்ன ஏற்பாடு?" என்று ஒரே குரலாகக் கேட்டார்கள்.

வீரப்பன்:—"நண்பர்களே! கடவுள் யாவும் அனுகூலமாகவே முடித்தார். உங்களுக்குச் சற்றும் கலக்கம் வேண்டாம். சந்தோஷமாக நான் கூறுவதைக் கேளுங்க"—என்றதே.

கேசவன் "நண்பனே! இதற்காக முன்னுடி நாங்களிருவரும் எங்கள் ஆயுள் பரியந்தம் நன்றி பாராட்டக் கடமை பட்டவர்கள் என்பதையும் எங்கள் எண்ணிறந்த வந்தனத்தையும் அறிவித்துவிடுகிறேன். இனி நீ செய்யும் நன்மையைக் கூறு," என்றான்.

வீரப்பன்:—"தற்காலமாய் நாளை இரவு ஒரு மணிக்கு நமது இராஜாங்கத்தைச் சேர்ந்த குடியேற்று நாடுகளில் தென் ஆப்ரிக்காவிலிருக்கும் குடியேற்ற நாட்டிற்கு ஒரு கப்பல் செல்லுகிறது. நீங்கள் அதில் ஏறிச் சென்று அங்கு போய்ச் சேர்ந்துவிட்டால் பிறகு உங்களை யெவரும் கண்டு பிடிக்க முடியாது. அக்கப்

வில் ஜீவாந்தர சிட்சை அடைந்த கைதிகள் கொண்டு போகப்படுகிறார்கள். கொஞ்சப் பிரயாணிகளே ஏற்றப்படுகிறார்கள். ஆகையால் நான் மிக்க சிரமப்பட்டு நீங்கள் இருவரும் அதில் செல்லுமாறு பிரயாணச் சீட்டு வாங்கி விட்டேன்.

ஆயினும் ஒரு கஷ்டமிருக்கிறது. அதாவது சிறைச்சாலையிலிருந்து ஓடிவிட்ட இருவரைப் பற்றியும் துறைமுகங்களுக்கு எல்லாம் அடையாளங்களோடு அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. துறைமுக அதிகாரிகள் அதன் நகலையெடுத்துத் துறைமுகத்திலிருந்து புறப்படும் ஒவ்வொரு கப்பலின் கப்பித்தானுக்கும் கண்டிப்பான கட்டளையோடு அனுப்பியிருக்கிறார்கள். ஆகையால் நீங்களிருவரும் நான் எழுதிவைத்த குறிப்பின்படி மாறுவேடமணிந்து கொள்ளவேண்டும். அதற்காக மாறுவேடம் போடுவதில் கைதேர்ந்த ஒரு ஆளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவன் இப்போது உங்கள் உருவத்தின் உயரம் பருமன் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு சென்றால் நாளை மாலை ஆறு மணிக்கு வந்து உடை முதலியவற்றால் உங்கள் உருவங்களை அடியோடு மாற்றி விடுவான். இனி உங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டியதே," என்றான்.

கள்ளரிருவரும் மிக்க சந்தோஷமடைந்து தங்கள் நண்பனுக்குத் தங்கள் நன்றியறிதலை வெளியிட்டு "நண்பனே! நாங்கள் உன்னையே நம்பி இருப்பவர்கள் என்பது நீ அறிந்த சங்கதியே. ஆகையால் இச்சமயம் எங்களைக் காப்பாற்ற வேண்டிய விஷயத்தில் நீ எப்படி ஏற்பாடு செய்கிறாயோ அதன்படியே நாங்கள் நடந்துகொள்ளச் சித்தமாக இருக்கிறோம். எதையும் உன் பிரியப்படி செய்," என்றான்.

வீரப்பன் உடனே கேசவன் சுப்பன் இருவர்களையும் அழைத்துக்கொண்டு நிலவறையிலிருந்து மேலே போய் ஒரு அறையில் உட்காரவைத்து விட்டு, முன்னேயிருக்கும் ஒரு அறைக்குச் சென்று சுமார் ஐம்பது வயதிற்கதிகமான ஒரு முதியோனை அழைத்து வந்து இவர்களிருவரையுங் காட்டி "இந்தக் கோழைகள்தான் கடன்காரனுக்குப் பயந்து கொஞ்ச காலம் மறைந்திருக்கக் கருதுகிறவர்கள் என்று நான் கூறியவர்கள். இன்னும் ஒரு வாரத்திற்குள் இவர்கள் கொடுக்கவேண்டிய தொகை கைக்குவந்துவிடும். அதற்குள் இவர்கள் பயப்படுகிருர்கள்...." என்பதற்குள் அம்முதியோன் "ஐயா! எனக்கு விவரம், காரணம் எதையும் கூறவேண்டாம். நான் கூறியபடி என் கட்டளையை அளித்து விடுங்கள். பிறகு இவர்கள் தாயார்களே வந்து பார்த்தாலும் இவர்களை அறிந்து கொள்ளாதபடிச் செய்து விடுகிறேன்," என்ருன்.

வீரப்பன் "சரி இந்தா நீ கூறியபடி பாதித்தொகை முன்னுடி வாங்கிக்கொள். நாளை மாலை ஆறு மணிக்குள் வந்து உன் வேலையை முடித்து விட்டு மற்றதை வாங்கிக் கொள்," என்று தன் ஜேபியிலிருந்து பத்து ரூபாய் எடுத்து அவனிடம் அளித்தான். அம்மனிதன் இரண்டு கள்ளருடைய உயரம் பருமன் முதலியவற்றை அளந்துகொண்டு நாளை மாலைச் சரியாய் ஆறு மணிக்கு வருவேன்," என்று கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்ருன்.

மறுநாள் இரவு சுமார் பன்னிரண்டு மணியிருக்கும். அச்சமயம் வீரப்பன் வீட்டின்முன் இரண்டு புரவிகள் பூட்டிய ஒரு வண்டி வந்து நின்றதும் சாரதி அதினின்றும் இறங்கி வீட்டின் கதவைத் தட்டினுன். அதற்குள் வண்டி வந்த சத்தத்தைக் கேட்டதே கதவு திறக்கப்பட்டதும்,

வீரப்பன் வெளியில் வந்தான். இரண்டொரு நிமிடங்களில் நான்கு பெட்டிகள் வண்டியின் கூரைமேல் வைத்து கட்டப்பட்டன. மறுநிமிடம் மூன்றுபேர் வந்து வண்டியில் ஏறினார்கள்.

அப்படி ஏறியவர்களில் வீரப்பன் ஒருவன். மற்ற இருவரில் ஒருவன் பாஞ்சால நாட்டு உடையணிந்திருக்கிறான். அவனுக்கு வயது அறுபதுக்குமேல் இருக்கும்போல் தோன்றியது. அவன் குருமாரின் உடையணிந்திருந்தான். அதாவது உடையால் அவன் ஒரு குருவென்று தெரிந்தது. அவனுடைய நீளமான தாடியில் பாதி நரைத்தாயிருந்தது. மற்றவன் அக் குருவின் வேலையாளான ஒரு வாலிபன். அவன் குருவின் ஜபமாலையையும் வேத புத்தகத்தையும் கையில் வைத்துக்கொண்டு மிக்க பயபக்தியோடு குருவின் பின்னால் வந்து வண்டியில் ஏறினான்.

அரைமணி நேரத்திற்குள் அதாவது இரவு பன்னிரண்டரை மணிக்குள் வண்டி துறைமுகம் போய்ச் சேர்ந்ததும், சாமான்கள் துரிதமாகக் கப்பலில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. கரையிலிருந்து கப்பலின் மேலேறுமிடத்திலுள்ள பலகைப் பாலத்தின் முனையில் போலீஸ் அதிகாரிகள் இருவர் நின்றுகொண்டு கப்பலில் ஏறுகிறவர்களை எல்லாம் கவனித்து அவர்கள் பிரயாணச் சீட்டைப் பார்த்த பின்பே கப்பலிலேற விடுகிறார்கள்.

குருவும் அவர் ஆளும் செல்லும்போது வீரப்பன் அவர்கள் முன்னேசென்று பிரயாணச் சீட்டைப் போலீஸ் அதிகாரியிடம் நீட்டி ஞான தேசிக சுவாமிகளும் அவர் ஆளும் என்று பக்தியோடு கூறிவிட்டுப் பின்னால் வரும் கள்ளச் சுவாமியை நோக்கி, "வாருங்கள் சுவாமி, இது அரைத்தன உத்தரவின்படி நடக்கவேண்டிய சடங்கு.

தாங்கள் இதை அகௌரவமாகக் கருதவேண்டாம்," என்றான்.

கள்ளச் சுவாமிகள் "ஒரு போதும் அப்படிக் கருத மாட்டேன். அரசன் பாதுகாப்புத் தடையின்றிச் சரியாய் நடக்கவே வேண்டும். மைந்தர்களே! ஆண்டவன் உங்களுக்கு நல்லருள் புரிவாராக," என்று போலீஸ் அதிகாரிகளை நோக்கிக் கூறினார்.

அந்த மூடர்கள் தாங்கள் யாரைப் பிடிப்பதற்காக வந்து அங்கு நிற்கிறார்களோ அந்தக் கள்ளர் தங்களுக்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறார்கள் என்பதை எள்ளளவேனும் உணராதவர்களாய் குருவுக்கு மிக்க மரியாதையோடு வந்தனமளித்துவிட்டு எட்ட விலகி நின்றார்கள். வீரப்பன் குருவையும் அவர் ஆளையும் அழைத்துப் போய்க் கப்பலில் அவர்களுக் கமர்த்தப்பட்ட அறையில் விட்டுவிட்டுக் கப்பல் புறப்படும் சமயம் கரைக்கு வந்துவிட்டான். போலீஸாரும் கரைவந்து சேர்ந்தார்கள்.

வீரப்பன் முதலியவர்கள் கப்பலைவிட்டிறங்கிய பத்து நிமிடங்களுக்கெல்லாம் நங்கூரம் தூக்கப்பட்டதும் கப்பல் புறப்பட்டது. இவர்கள் போய்ச் சேரவேண்டிய இடம் இருபத்திரண்டு நாள் பிரயாணத்திலிருக்கிறது. புறப்படும் போது காற்று இவர்களுக்கு அநுகூலமாகவே யிருந்தபடியால் கப்பல் துரிதமாகவே சென்றது. கேசவனும் சுப்பனும் தங்கள் மாறுவேட உடையிலேயே இருக்கத் தீர்மானித்ததாலும், கேசவன் ஒரு குருவென்று கப்பித்தான் முதல் யாவரும் நம்பி யிருந்தபடியாலும் அவனும் அவன் ஆளும் கப்பலின் எப் பாகத்திற்கும் எந்த வேளையிலும் செல்லலாகும்.

இதனால் நாலைந்து நாட்களுக்குள் கேசவன் கப்பலின் எல்லாப் பாகங்களையும் பார்த்துக் கொண்டதோடு அதி

றுள்ள ஆட்களையும் நன்றாக அறிந்துகொண்டான். அக் கப்பலில் வேலை செய்வோர் பன்னிரண்டு மாலுமிகள், மூன்று உத்தியோகஸ்தர்கள், ஒரு கப்பித்தான் ஆகப் பதினறுபேர்கள். பிரயாணிகள் நான்கைந்து பேர்களே! ஏனெனில் அது வர்த்தகச் சாமான்களையும் சிறையாளரை யும் ஏற்றிச் செல்வதால் நாணயமான பிரயாணிகள் அதில் ஏறுவதில்லை. சிறையாளர் இருபத்திரண்டு பேர் இருக்கிறார்கள். இவர்களையன்றிக் கப்பல் சுத்தி செய்வோர், சமையல் செய்வோர், உக்கிராணக்காரன் இவர்கள் எட்டு பேர் இருக்கிறார்கள்.

சிறையாளர்களனைவரும் போக்கிரிகளும் பன்முறை சிறைவாசம் செய்த கள்ளர்களுமாகிய முரட்டுத் துணிகரமான பேர் வழிகள். ஏழெட்டுத் தினங்களுக்குள் கேசவன் அவர்களில் தனக்கு அறிமுகமானவர்கள் சிலர் இருக்கிறார்களென்றும் அக் கூட்டத்தில் அவர்களே செல்வாக்குடையவர்களென்றும் தெரிந்துகொண்டான். ஆனால் இவனுடைய மாறுவேடத்தால் இவனை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அக் கைதிகளில் கேசவனுக்குத் தெரிந்த ஆட்களில் மூன்று பேர் பிரபலமான கள்ளர்கள். அவர்கள் கன்னக்களவு, வழிப்பறி கொள்ளை கள்ளக் கையொப்பம் வைத்தல், கொலை யிவற்றில் கைதேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவன் பெயர் ஈட்டி கந்தன். வயது நாற்பதிருக்கும். அவன் எந்நேரமும் மடியில் ஒரு சிறு ஈட்டியை வைத்துக்கொண்டிருந்து ஹோட்டலில் வருகிறவர்களில் பணம் வைத்துக்கொண் டிருக்கிறவர்களை தந்திரமாயறிந்து கொண்டு அவர்கள் தூங்கும்போது அவர்களை ஈட்டியால் குத்திக்கொன்று விட்டுச் சந்தடி செய்யாமல் அவர்கள் வைத்திருந்தபொருளை யெடுத்துக்கொண்டு போய்விடுவான். இரண்டாவது ஆளின் பெயர் தளுக்கு தானப்பன் அவ

னுக்கு வயது முப்பத்தைந்திருக்கும். கொஞ்சம் கல்வியும், பெரிய மனிதர்களைப்போல் நடிக்கும் சாமார்த்தியமும் உடையவன் வாய்ப்பேச்சால் எவரையும் மயக்கி விடத்தக்கவன். அவனுடைய நாகரீகமும் சுத்தமும் நாணயமுமான உடையையும் நடைபாவனைகளையும் கண்டதே எப்படிப்பட்டவர்களும் அவன் சகவாசத்தில் பிரியப்படுவார்கள். இருபதுபேர் இருக்கும் ஒரு கூட்டத்தில் அவன் சென்ற பத்து நிமிடங்களுக்குள், யாவரும் தன் பேச்சை கேட்கும்படியான விதமாக அவர்கள் மனதைத் திருப்பி விடுவான்.

இவ்வாறு நடந்துகொண்டு அவர்களில் தக்க செல்வவந்தர்கள் யாரென்று தெரிந்துகொண்டு அவர்களிடம் நெருங்கி நட்புச் செய்துகொண்டு அவர்கள் எந்தப் பாங்கியில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறார்கள். வீட்டில் அப்பாங்கிக்குப் பணம் வாங்க அனுப்பும் உண்டிச் சீட்டு எங்கு வைத்திருக்கிறார்கள். என்பனவற்றை யறிந்துகொண்டு அவர்களைப்போல் எழுதவும் கையொப்பம் வைக்கவும் சுலபமாகப் பழகிக் கொள்வான். பிறகு சமயம் பார்த்து அவர்கள் எழுதியதுபோல் பத்தாயிரம் இருபதினாயிரம் முதலிய ஒரு பெருந்தொகைக்கு உண்டி (செக்) எழுதிப் பணத்தை வாங்கிக்கொண்டு உடனே ஒரு அன்னிய நாட்டிற்குப் போய்விடுவான். அங்குச் செல்லும்போது வழியிலேயே பெயர் நடையுடை பாவனை உருவம் யாவற்றையும் அடியோடு மாற்றிக்கொள்வான். அவனுக்கு நான்கைந்து தேச பாஷைகள் தெரியும். ஒவ்வொன்றிலும் அத் தேசத்தாரைப் போலவே பேசுவான். இரண்டொரு வருடங்களில் கொள்ளை யடித்த பணத்தைச் செலவழித்து விட்டு மறுபடி அத்தேசத்திலும் அதேமாதிரி செய்து இன்னொரு நாடு செல்வான்.

இப்படிப்பட்டவன் ஒரு பிரபுவின் வீட்டில் விருந்தாளியா யிருந்துகொண் டிருக்கையில் அவர் பத்தாயிரம் பவுனுக்கு ஒரு உண்டி எழுதியதாக எழுதிப் பாங்கியில் மாற்றப்போகிறான். பொக்கிஷதாரன், பத்து நிமிடங்கள் வெளியறையில் உட்காருங்கள். பணம் தருகிறேன்" என்றான். அவன் அப்படியே காத்துக்கொண் டிருக்கையில் தெய்வகதியாக அப் பிரபுவே ஒரு அவசர காரியமாகப் பணம் வாங்க அங்கு வந்து விட்டார். பொக்கிஷதாரன் சாதாரணமாய்ப் பேசத்தொடங்கி, "தாங்கள் அனுப்பிய உண்டிக்கும் இன்னும் பணம் தரவில்லை. அந்த ஆள் காத்துக்கொண்டிருக்கிறார்" என்றான்.

இதைக்கேட்டதே, பிரபு தாம் ஒருவருக்கும் உண்டி தரவில்லை யென்று தமக்குத் தெரியுமாதலால் "எங்கே அந்த உண்டி?" என்று இரகசியமாய்க் கேட்டு, அதைக்கொண் வந்த ஆள் யாரென்று தெரிந்து கோண்டதும், இவன் நாணயமான கள்ளனேயென்று அறிந்துகொண்டு உடன் போலீஸ் உத்தியோகஸ்தரை அழைத்து அவனைப் பிடித்துக் கொடுத்து விட்டார். அவன் விசாரணை செய்யப் பட்ட போது, போலீஸார் நெடுநாட்களாக இத்தகைய நான்கைந்து குற்றங்களுக்காகத் தேடிக்கொண் டிருக்கும், நாணயக் கள்ளனாகிய தளுக்கு தானப்பன் என்பவன் இவனே யென்று தெரிந்தது. யாவும் ருசுவானதால் இவன் தீவாந்தர சிட்சை யடைந்தான்.

மூன்றும் ஆசாமியின் பெயர் மாயரங்கன். அவனுக்கு வயது நாற்பதுக்குள்ளாகவே யிருக்கும். இவன் சாதாரணமான ஹோட்டல்களில் தன் கையாட்களை வைத்து யாரேனும் பிரயாணிகள் பணம் வைத்துக்கொண்டு தனி வழி செல்கிறார்களா வென்பதை யறிந்துகொண்டு அவர்கள் செல்லும் வழியில் பதுங்கியிருந்து கெட்டித்த துப்

யாங்கியைக் காட்டி பயமுறுத்தி அவர்கள் சொத்தைப் பறித்துக்கொண்டு மாயமாய்ப் போய்விடுவான். அவனுக்கு மாறு குரலில் பேச நன்றாகத் தெரியும். அதோடு அச் சமயம் மாறுவேடமும் முகமூடியும் அணிந்திருப்பான். ஆகையால் இரண்டு நாழிகைகள் கழித்து அவர்கள் ஒரு ஹோட்டலில் போய்ச்சேர்ந்து அங்கு தங்களுக்கு நேர்ந்த விபத்தைக் கூறும்போது இவனும் எதிரில் உட்கார்ந்து யாவும் கேட்டு அவர்கள்மேல் இரக்கம் காட்டி அத்தகைய கள்ளரைப் பிடிக்காமல் விட்டிருக்கும் அதிகாரிகளை வைவான்.

இந்த மூன்று ஆசாமிகளையும் கேசவன் அறிந்து கொண்டதும் இரகசியமாய் அவர்களுக்குத் தன் உண்மையை அறிவித்தான். அதை அறிந்ததும் அவர்களுக் குண்டான சந்தோஷத்திற் களவேயில்லை. ஏனெனில் அவர்கள் நாம் எப்படி இதை விட்டுத் தப்பித்துக்கொண்டு போவ தென்று முன்னமே தங்களுக்குள் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு வெளியி லிருந்து உதவி என்னளவும் இல்லை. ஆகையால் மிக்க கலவரத்தோடு ஆலோசனையி லிருந்தார்கள். ஆகையால் இப்போது கேசவன் கப்பலில் வந்திருப்பதை அறிந்ததே அவர்களுக்கு மிக்க சந்தோஷ முண்டாய் விட்டது. ஏனெனில் கேசவன் மிக்க புத்தி சாமர்த்திய முடையவ னென்று அவர்களறிவார்கள்.

அதன் பிறகு கள்ளக் குருவிற்கும் அவர்களுக்கும் கடித மூலமாகச் சமாசாரம் நடக்கத் தொடங்கியது. அக்கடிதங்களில் அடங்கிய சங்கதிகள் என்ன என்பதைப் பற்றி இங்கு நாம் கூறவேண்டியதில்லை. பிறகு நடக்கும் சங்கதிகளால் அச்சங்கதிகள் வெளியாகும். கப்பல்போய்ச் சேரவேண்டிய இடம் இன்னும் ஏழுநாட்பிரயாண தூரத்தி

விருக்கிறது. அதுகாறும் காற்று கப்பலுக்கு அனுகூல
மாகவே வீசிக்கொண்டிருந்தது. அன்று மாலை மூன்று
மணிக்கு வானத்தில் சூரியனைச் சுற்றி ஒரு வட்டமான
சிவந்த சோதி தோன்றியது. அதோடு காற்றும் வேறு
திக்கில் திரும்பி விட்டது.

இக் குறிகளைக் கண்டதே மாலுமிகளுக்கு ஒரு விதக்
கலக்கம் உண்டாயிற்று. ஏனெனில் கப்பல் அப்போது
இருக்குமிடத்தில் இத்தகைய குறிகள் தோன்றினால் பயங்
கரமான புயலடிக்குமென்று அவர்களுக்கு அனுபவத்தால்
தெரியும். ஆகையால் அவர்கள் உடனே கப்பித்தான் கட்
டளையின் படி கப்பலைப் பாதுகாக்க வேண்டிய வேலையைச்
செய்யத் தொடங்கினார்கள்.

மாலைப்பொழுது அமர அமர வானத்தில் கரியமேகங்
கள் பெருங் கூட்டமாகச் சேரத் தொடங்கின. காற்றும்
சற்று மும்மரமாக அடிக்க ஆரம்பித்தது. பகற்காலத்தை
விட இராக்காலத்தில் புயல் காற்றில் கப்பல் அகப்படுவது
மிக்க அபாயம். காற்று வரவர வேகத்தில் அதிகமாகத்
தொடங்கியது. அக்காலத்தில் கப்பல்களில் செல்வோர்
ஆயுதங்களோடேயே செல்வது வழக்கம். ஏனெனில் அப்
போது கடற் கொள்ளைக் காரர்களும் அதிகமாக விருந்தார்
கள். அவர்களிடம் எல்லா நாட்டின் கொடிகளும் இருக்
கும். தங்கள் கண்களுக்குப் புலப்படும் ஒரு கப்பல் என்ன
கப்பலென்று தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்ப்பார்கள்.
அக்கப்பல் தங்களை விடப் பலம் பொருந்தியதென்று அறிந்
தால் அதன் வழியில் வராமல் வேறொரு நாட்டுக் கொடி
யைப் பறக்க விட்டுக்கொண்டு போய் விடுவார்கள்.

அப்படிக்கின்றி எதிர்ப்படுங் கப்பல் தாங்கள்
கொள்ளை யடிக்கத்தக்க ஒரு வர்த்தகக் கப்பல் என்று கண்
டால் உடனே அந்தக் கப்பல் எந்நாட்டுக் கப்பலோ அந்

நாட்டுக் கொடியையே பறக்க விட்டு, தங்களுக்கு ஆகாரமோ நல்ல ஜலமோ, ஔஷதமோ ஏதோ உதவி வேண்டுமென்று கொடி காட்டிக்கொண்டு அக்கப்பலை நெருங்குவார்கள். அவர்கள் "அந்தோ நம் நாட்டுக் கப்பல். இதற்குதவி செய்யவேண்டும்," என்றெண்ணி அவர்கள் கப்பல் அருகில் வந்ததும் தங்கள் கப்பலை நிறுத்துவார்கள்.

அப்போது கள்ளர் உடனே தங்கள் கப்பலிலிருந்து படகுகளில் ஏறி அக்கப்பலில் பாய்ந்து அங்கிருப்பவர்களோடு சண்டையிட்டு அதிலுள்ள பிரயாணிகளையும் கப்பலையும் கொள்ளையடித்துக் கொண்டு போவார்கள். ஆகையால் எல்லாக் கப்பல்களிலும் ஆயுதங்களிருக்கும்.

32-வது அத்தியாயம்

அக்கப்பலிலிருக்கும் ஆயுதங்களெல்லாம் உக்கிராண அறையில் ஒரு பெட்டியிலிருக்கின்றன. அப்பெட்டியின் சாவியும் மற்ற முக்கியமான இடங்களின் சாவிகளும் எப்போதும் கப்பித்தான் வசத்திலேயே யிருக்கும். இவையாவும் கள்ளக் குரு கவனித்தறிந்து கொண்டான். பொழுது அமரும் சமயம் வானத்தில் கரியமேகங்கள் நிறைந்து விட்டன. மேல் காற்று அதிகரிக்கத் தொடங்கியது. ஆகையால் கப்பித்தான் இடைவிடாமல் கப்பலை பாதுகாப்பதற்கு அவசியமான கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறான். மாலுமிகள் அனைவரும் சுறு சுறுப்பாய் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கடல் அதிகமாகக் கொந்தளிக்கத் தொடங்கியது. பிரயாணிகள் பனையளவு உயர மெழும்பி வரும் அலைகளையும், கப்பல் மலைமேல் ஏறுவது போல உயரமான அலையின் உச்சியில் ஏறுவதையும் மறுகிமிடம் பாதாளத்தில்

அமிழ்ந்துவிடப் போவதுபோல் கீழ் இறங்குவதையும் பெரும் பீதியோடு பார்த்துக்கொண்டு கப்பலின் மேல் தட்டில் நிற்கிறார்கள். வரவரக் கப்பல் அதிகமாக அசையத் தொடங்குகிறது. அதோடு அலைகளும் மேல்தட்டில் புரளக் கூடியவைபோல் தோன்றின. ஆகையால் கப்பித்தான் பிரயாணிகளைக் கீழ்த்தட்டிலுள்ள அறைகளுக்குச் செல்லும் படிக் கூறினான். சற்று நேரத்திற்குள் இரவு தொடங்கவும் எங்கும் இருள் மயமாய்விட்டது. இனிமேல்தான் மிக்க ஆபத்து. ஏனெனில் காற்று தன் வல்லமைப்படி கப்பலை எத்திக்கிலாயினும் இழுத்துச் செல்லலாகும். ஒரு சமயம் மாறிமாறிப் பல திக்குகளில் இழுத்துச் செல்லும். கப்பல் இயற்கையாக நான்கு நாட்களில் செல்லக்கூடிய, அவ்வளவு தூரத்திற்குப் புயற்காற்று ஒரே இரவில் கொண்டுபோய் விடும். இக்காரணங்களால் கப்பல் எந்த இடத்தில் இருக்கிறதென்றறிய முடியாமற் போய்விடும். இவைமட்டுமல்ல. இருட்டில் கப்பல் ஒரு பாறையில் மோதிக்கொள்ளப் போவதாயினும் அதை அறிய முடியாது.

ஆகையால் கப்பித்தான் கப்பலைப் புயல் காற்று நிற்கு மட்டும் ஒரே இடத்தில் நிறுத்திவைக்கத் தீர்மானித்தான். ஆகவே உடனே நங்கூரங்களைப் பாய்ச்சும்படிக் கட்டளை யிட்டான். மாலுமிகள் அவ்வாறே பாய்ச்சிக் கொண்டிருக்கக் கப்பித்தான் கப்பல் அச்சமயம் இருக்குமிடத்தைக் குறித்துக் கொள்வதற்காகத் தன் அறைக்குச் சென்றான். உத்தியோகஸ்தர்கள் மாலுமிகள் நங்கூரங்களை விடுவதையும் கப்பலின் அசைவுகளைக் கூடிய வரையில் தடுப்பதற்காகச் செய்யும் காரியங்களையும் மேல்பார்வை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அச்சமயம் கள்ளக்குருவும் அவன் ஆளும் தங்கள் பெட்டியைத்திறந்து தங்களிட மிருந்த கைத்துப்பாக்கி

களை எடுத்து உட்சட்டையின் சேபியில் மறைத்து வைத்துக்கொண்டு தங்கள் அறையைவிட்டு வெளிப்பட்டார்கள். இருவரும் அங்கிருந்து மேல் தட்டிற்குச் செல்லவேண்டுமாயின் நேரே ஒருவழி இருக்கிறது. அவர்கள் அவ்வழியை விட்டுக் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறையின் அருகில் செல்லும்போது கேசவன் உள்ளிருந்த ஆட்களுக்கு ஒரு விதமான சமிக்கை காட்டிவிட்டு, அறையின் முன்பக்கம் வந்து நின்ற ஈட்டிக்கத்தனிடம் ஒரு கடிதத்தை யளித்துவிட்டு உடனே தன் ஆளை அழைத்துக்கொண்டு துரிதமாக நேராய்க் கப்பித்தான் அறைக்குச் சென்றான்.

கேசவனும் அவன் மைந்தனும் கப்பித்தான் அறைக்குச் செல்லும்போது புயல்காற்று மும்முரமாயடிக்கிறது. கப்பலின் பலகைகள் கிர்கிர் என்று போடும் சத்தமும், பாய்மரங்களின் சத்தமும், மேல்தட்டில் ஆட்கள் தடதடவென்று கீழும்மேலும் ஓடும் சத்தமும் யாவும் சேர்ந்து ஒருவர் கூறுவது ஒருவருக்குக் கேட்காத விதமாய்ப் பயங்கரமான சத்தத்தை உண்டாக்கின. இதனால் கேசவனும் சுப்பனும் கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் வந்ததைக் கப்பித்தான் அறிந்து கொள்ளவேயில்லை. அவர் அச்சமயம் தன் எதிரில் ஒரு மேஜைமேல் விரிக்கப்பட்டிருக்கும் பெரிய பூலோகப்படத்தை மிக்க கவலையோடு உற்று நோக்கிக்கொண்டே யிருக்கிறார்.

இக்கள்ளர் உள்ளே செல்லும்போது கப்பித்தான் வாயிற்படியின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டிருந்ததால் இவர்களைக் காணவில்லை. அப்படிக் கண்டிருந்தால் அவர் இவர்கள்மேல் எள்ளளவு சந்தேகமும்பட்டிருக்கமாட்டார். அவர் மறுபக்கம் திரும்பிக்கொண்டிருந்தது கள்ளருக்கு மிக்க அனுகூலமாக இருந்தது. ஆகவே இருவரும் ஏககாலத்தில் அவர்மேல் புலிகள்போல் பாய்ந்து அவரைத் தரையில்

விழ்த்தித் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி "நீ கூச்ச லிட்டால் மேல் தட்டில் கேட்காது. ஆயினும் நீ வாய் திறந்தையோ தட்சணம் உன் மூளை சிதறிவிடும்," என்று கூறி அவர் கால் கைகளைக் கட்டி விட்டார்கள். இவர்கள் யாரென் றறிந்ததே கப்பித்தானுக்குண்டான வியப்பும் பிரமையும் இதிலும் சொல்லமுடியாது, ஏனெனில் அவர், கேசவனை ஒரு குருவென்றே எண்ணியிருந்தார். ஆகை யால் இப்போது இவர்கள் நடக்கையைக் கண்டதே பெரும் பீதி உண்டாகிவிட்டது. தன் வசத்தில் கைதிகள், மிக்க துஷ்டர்களும், போக்கிரிகளும், கள்ளருமானவர்கள் இருக்கிறார்கள். "ஓகோ! இவன் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனாகவே இருக்கவேண்டும். இப்போது அவர் களை விடுதலை செய்துவிட்டு இவர்கள் கப்பலைக் கொள்ளை யடித்துத் தங்கள் சுயாதீனமாக்கிக் கொள்வார்கள், அப் படிக்கின்றி இவர்களிருவருமட்டுமே துணிகரமாய் இத் தகைய காரியத்தைச் செய்ய ஒரு காரணமுமில்லை," என்று ஒரு விநாடியில் பளிச்சென்று அவர் மனதிற்றோன்றியது.

ஆகையால் அவர் இவர்கள் எண்ணத்தைப் பூரண மாக அறிந்து கொள்ளவேண்டுமென்ற கருத்தோடு கேச வனை இன்னமும் குருவென்றே நம்புகிறவர்போல், "சுவாமி! இதென்ன கனவோ நினைவோ? தாங்கள் என்னை இப்படி அக்கிரமமாய் அதிலும் நன்றி மறந்து நடத்துவதை என்றால் நம்பக்கூடவில்லை. விளையாட்டென்றால் இது மிக்க அளவு மீறிய விளையாட்டாயிருக்கிறதே," என்றார்.

கேசவன் "ஏ கப்பித்தான்! இதில் விளையாட்டு ஒன்று மில்லை, நீ இன்னமும் என்னை ஒரு குருவென்றே கருது வதாயின் நீ சுத்த முட்டாளாகவே இருக்கவேண்டும். இப் போது நான் கூறுவதைக் கேள். இந்த விநாடி முதல் இக் கப்பல் என்னுடையது. உன் வரையில் நீ எனக்கு எவ்

விதத் தொந்தரையும் கொடாமல் இங்கேயே பேசாமல் இருந்தால் உன்னைத் தக்க இடத்தில் கரை இறக்கிவிட்டு நீ உன் ஊர்போய் சேரப் போதுமான பொருளும் அளிப்பேன். இன்றேல் இக்கடலே உன் மயான பூமியாகும். உன்னிடமுள்ள உத்தியோகஸ்தர் மாலுமிகள் யாவர்க்கும் இதே நிபந்தனைதான். இக்கப்பலில் சிறையாகவிருக்கும் யாவரும் என் நண்பர்கள்தான். இனி நல்ல அநுபவமுடைய கப்பித்தானாகிய உனக்கு நான் அதிகமாக ஒன்றும் கூற வேண்டுவதில்லை. இனிப் பேசாமலிரு. சாவி முதலியவை இருக்கும் எல்லா இடங்களும் எனக்குத் தெரியும். உனக்கு எள்ளளவு தொந்தரவும் கொடேன்," என்றான்.

இவன் மொழிகளைக் கேட்ட கப்பித்தான் பெருந் திகிலடைந்தானெனினும் கோபாவேசத்தோடு "ஓ பாம துஷ்டனே! நான் உன் விஷயத்தில் உதவி செய்யக்கருதி உன்னை என் கப்பலில் ஏற்றி வந்தேன். அந்தக் கள்ளப் பயலாகிய வீரப்பன் பேச்சைக்கேட்டு நான் மோசம் போனேன். இச்சமயம் நீ ஜெயமடைவதாகவிருந்தாலும் இத்தகைய நன்றிகெட்ட அக்கிரமச் செய்கைக்கு அதி சீக்கிரத்தில் நீ தக்க தண்டனை அடையாமல் தப்பவே மாட்டாய். இது சத்தியம். இப்போது அபகரித்துக்கொள்ளும் இக்கப்பலாலும் இதிலுள்ள விலைமதிபெறும் பொருள்களாலும் நீ ஒருகாலும் க்ஷேமமடைவாய் என்று கனவிலும் கருதவேண்டாம். இத்தகைய அக்கிரமத்தை ஆண்டவன் ஒருபோதும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார், இனி நீ செய்கிற காரியங்களைச்செய்," என்றார்.

கேசவன் உடனே அங்கு கப்பித்தான் தன் மேஜையில் வைத்திருந்த கொத்துச் சாவியை எடுத்துக்கொண்டு சுப்பனை அழைத்துக்கொண்டு சென்றான். அவன் நேராகக் கைதிகளிருக்கும் அறைக்குச் சென்று அந்த அறையைத்

திறந்து மூன்று பேரை அழைத்துக்கொண்டு உக்கிரான அறைக்குச் சென்று அங்கிருந்த ஆயுதப் பெட்டியை அடி யோடு சிறைச்சாலை அறைக்குக் கொண்டுபோய்க் கைதி களுக்கெல்லாம் ஆயுதம் அளித்துவிட்டுத் தான் மறுபடி சமாசாரமனுப்புமட்டும் அவர்கள் அங்கே இருக்கவேண்டு மென்று மாயரங்கனையும் தனுக்குத் தானப்பனையும் அவர் களுக்குத் தலைவர்களாக வைத்துவிட்டு ஈட்டிக் கந்தனையும் வேறு நால்வரையும் தன்கூட அழைத்துக்கொண்டு கப் பித்தான் அறையின் முன் அறைக்குச் சென்று அங்கு சில கட்டளைகளோடு ஈட்டிக் கந்தனையும் வேறொருவனையும் வைத்துவிட்டு மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு மேல் தட்டிற்குச் சென்றான்.

மேல் தட்டில் இருக்கும் கப்பல் மாலுமிகள் உத்தி யோகஸ்தர் அனைவரும் கப்பல் கவிழ்ந்துபோகாம லிருப் பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருப்பதால் கப்பலின் கீழ்தட்டில் நடக்கும் சம்பவங்களும், கப்பித்தானுக்கு நேரிட்டிருக்கும் ஆபத் தும் ஒன்றுமே அவர்களுக்குத் தெரியாது, இத்தகைய நிலைமையில் கேசவன் தன் மைந்தனைத் தன் ஏற்பாடுகள் சரியாக நடக்கின்றனவாவென்று மேல் பார்வை பார்க்க விட்டு விட்டு தான் அழைத்து வந்த இரண்டு கைதிகளையும் இட்டுக்கொண்டு துரிதமாக மேல் தட்டிற்குச் சென்று முதலாவது உத்தியோகஸ்தனை நோக்கி "கப்பித்தான் தங் களை உடனே வரும்படி கூறச்சொன்னார்," என்று சொல்லி விட்டுத் தன்கூட வந்தவர்களில் ஒருவனை நோக்கி "கப்பித் தான் இப்போது இருக்கும் அறையில் இவரை அழைத். துக் கொண்டு போய் விடு," என்றான்.

அந்த உத்தியோகஸ்தன் துரிதமாக அந்தக் கைதி யாகிய கள்ளன் கூடச் சென்றான். அவன் உத்தியோகஸ்

தனைக் கப்பித்தான் அறைக்கு முன்னறை முன் விட்டு "கப்பித்தான் இதில்தானிருக்கிறார்," என்றான். உத்தியோகஸ்தன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றதும் அங்கு ஒருவருமில்லாததைக் கண்டு அப்புறமிருக்கும் அறைக்குச் செல்ல இரண்டடி சென்றான். அதற்குள் கதவின்பின் மறைந்திருந்த ஈட்டிக் கந்தனும் அவன் ஆளும் அந்த உத்தியோகஸ்தன் பின்பக்கம் பாய்ந்து அவனைப் பிடித்துக் கீழே தள்ளி வாயில் துணியடைத்துக் கால் கைகளைக் கட்டிப்போட்டு விட்டார்கள். இச்சங்கதி முடிந்ததும் உத்தியோகஸ்தனை அழைத்து வந்தவன் கேசவனிடம் சென்று சங்கதி முடிந்த தென்று கூறினான். அதற்குள் முன் ஏற்பாட்டின்படி கட்டப்பட்ட உத்தியோகஸ்தன் தூக்கிக் கொண்டுபோகப்பட்டு கைதிகளிருக்கும் அறையில் போடப்பட்டான்.

பிறகு அரைமணி நேரத்திற்குள் மற்ற இரண்டு உத்தியோகஸ்தர்களையும் கேசவன் அவ்வாறே ஏமாற்றிச் சிறைப்படுத்தி விட்டான். இனி இருக்கிறவர்கள் மாலுமிகளே. அவர்களை வயப்படுத்துவது கஷ்டமல்ல. அவர்கள் யார் அதிகாரத்தி லிருக்கிறார்களோ அவர்களின் கீழ் வேலை செய்யக் கூடியவர்கள். முக்கியமானவர்களாகிய கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் சிறையாக்கப் பட்டதே கேசவன் கைதிகளுக் கெல்லாம் ஆயுதமளித்து அவர்களை மூன்று கூட்டமாகப் பிரித்து ஒன்றுக்குத் தளுக்குத் தானப்பனையும் இன்னொன்றுக்கு மாயாங்களையும் தலைவர்களாக வைத்து, மூன்றாவதைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டான். ஈட்டிக் கந்தனையும் தன் அருகிலேயே வைத்துக் கொண்டான். ஏனெனில் ஈட்டிக் கந்தன் மிக்க பக்காப் பேர்வழி யாதலின் அவனைத் தனியே விடின் அவன் மோசம் செய்தாலும் செய்து விடுவான் என்று கேசவனுக்குத் தெரியும்.

இனி நடக்கும் விவகாரங்கள் நன்முக விளங்குவதற்காகச் சில சங்கதிகளை நாம் இங்கு வெளியிடவேண்டும். அதாவது கப்பலில் வேலைசெய்யும் மாலுமிகளுக்கு மணிக்கணக்கின்படி வேலைத்திட்டம் ஏற்பாடு செய்வது வழக்கம் அதாவது பகல் பன்னிரண்டு மணிகளை இரண்டாய்ப் பிரித்தும், இரவு காலத்தை மூன்முகப் பிரித்தும், வேலைதிட்டம் ஏற்பாடு செய்வது வழக்கம். அந்தக் காலங்களுக்கு முதல் மணி, இரண்டாவது மணி, மூன்முவது மணி என்று பெயர் ஒவ்வொரு நாளும் காலையிலேயே அந்தந்த மணிக்கு இன்னின்னவர்கள் வேலை செய்வதென்று கப்பித்தான் திட்டம் செய்து விடுவார். இந்த வழக்கத்தால் முதல் மணியாட்கள் என்முல் மாலுமிகள் இன்னின்னவர்களென்று தெரிந்து கொள்வார்கள்.

கேசவன் இந்த விஷயங்கள் யாவும் நன்முக அறிந்துகொண்டிருக்கிறுன். இந்தக் கப்பலில் ஆட்கள் கொஞ்சமானபடியால் அந்த இரவு வேலைக்கு ஒவ்வொரு மணிக்கும் ஐந்துபேர் ஆறுபேர்தானிருப்பார்கள். ஆனல் புயற்காற்றுச் சமயமாதலின் யாவரும் அதிககாலம் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஆகையால் பகலில் வேலை செய்தவர்களுங்கூட பிறகும் செய்யவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப் பட்டதால், மணிக்கு எட்டுபேர் வேலை செய்ய வேண்டுமென்று ஏற்பாடாயிற்று.

கேசவன், கப்பித்தான் உத்தியோகஸ்தர்கள் இவர்கள் சிறையாக்கப் பட்டதும், கப்பித்தானுடைய அறையின் முன் அறையில் மாயரங்களையும் தனக்குத் தானப்பனையும் இவர்கள் ஆட்களையும் வைத்துவிட்டு அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய ஏற்பாட்டைக் கூறிவிட்டு மேல் தட்டிற்குச்சென்று மாலுமிகளை நோக்கி "கப்பித்தா

னும் உத்தியோகஸ்தர்களும் ஏதோ ஆலோசனை செய்கிறார்கள். முதல் மணியாட்களை யெல்லாம் அங்கு வரச் சொன்னார்கள்" என்றான்.

அதைக் கேட்டதே அந்த ஆட்கள் தீவிரமாய்ப் புறப்பட்டுக் கேசவன் அனுப்பிய ஆளின் பின்னால் சென்றார்கள். அவர்கள் கப்பித்தான் முன்னறைக்குள் நுழைந்ததும் அவர்களை யழைத்துச் சென்றவன் அறையின் கதவை மூடி வெளிப்பக்கம் தாளிட்டுக் கொண்டான். உள்ளே சென்ற நிராயுதபாணிகளாகிய எட்டுப்பேரும் சுமார் பத்துப்பன்னிரண்டுபேர் ஆயுதமணிந்தவர்கள் தங்களைச் சூழ்ந்து கொண்டதைக் கண்டதும் "ஓகோ! ஏதோ பெரிய ஆபத்தில் கப்பலே சிக்கிக் கொண்டது," என்று உணர்ந்து இடி விழுந்தவர்கள் போல் நடுக்கத்தோடு விழிக்கலானார்கள்.

அவர்கள் நிலைமையைக் கண்டதே மாயாங்கன் அவர்களை நோக்கி "யாவரும் உடனே பேசாமல் உட்காருங்கள். இன்றேல் ஆபத்தாய் முடியும்," என்றான். அந்தோ! நிராயுதபாணிகளாகிய அவர்கள் என்ன செய்வார்கள். பேசாமலுட்கார்ந்து கொண்டார்கள். மாயாங்கன் அவர்களை நோக்கி,

"நண்பர்களே! நீங்கள் விரும்பினால் நாம் நண்பர்களாகவே இருக்கலாம். இப்போது கப்பல் எங்கள் தலைவனுடையது. உங்கள் கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு ஆபத்தின்றித் தப்பித்துக் கொள்வதற்காக எங்கள் தலைவனுடைய நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு இணங்கி விட்டார்கள். நீங்களும் அவ்வாறே யொப்புக் கொண்டால் உங்கள் தொழில்களில் நீங்களிருக்கலாம். இதுமட்டுமல்ல. கடைசியில் நாம் ஒரு துறைமுகம் சேரும் போது இக் கப்பலிலுள்ள பொருள்களில் உங்களனைவர்க்

கும் திருப்திகரமான பாகமளிக்கப்படும். இந்த நிபந்தனைக்கு நீங்கள் சம்மதிக்காவிட்டால் இந்த நிமிடமே நீங்களனைவரும் சிறை செய்யப்படுவீர்கள். பிறகு உங்கள் முடிவு தலைவன் பிரியத்தைப் பொறுத்ததாகும். உங்கள் விடையென்ன? உடனே கூறிவிடுங்கள்,” என்றான்.

நிராயுதபாணிகளாகிய அம் மாலுமிகள் என்ன செய்வார்கள். தங்கள் கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் சுயாதீனமாயிருந்து தங்களை நடத்தினால் அவர்கள் உயிருள்ள மட்டும் ஒரு கைபார்க்கக் கூடியவர்களே. தலைவர்கள் அனைவரும் எதிரிகள் கையில் சிக்கிக்கொண்டிருக்கும்போது அவர்கள் என்ன செய்வது? ஆகையால் எல்லா நிபந்தனைகளுக்கும் பேசாமல் ஒப்புக்கொண்டார்கள். கள்ளர்கள் உடனே அவர்களைக் கொண்டுபோய் வேறொரு அறையில் காவலில் வைத்து விட்டார்கள்.

அதன் பிறகு இரண்டாம் மணி வேலை செய்ய வேண்டிய மாலுமிகளையும் அவ்வாறே தந்திரமாக அழைத்துப் போய் இன்னொரு அறையில் காவல் வைத்து விட்டார்கள். அதன் பிறகு இப்போது தங்களுக்கு இணங்கி விட்டவர்களிடம் சத்தியப் பிரமாணிக்கம் வாங்கிக்கொண்டு அவர்களில் நம்பத் தக்கவர்களாகத் தோன்றும் சிலரை யழைத்துக்கொண்டு மேல் தட்டிற்குச் சென்று அங்கிருக்கும் மாலுமிகளுக்குச் சங்கதியை யறிவித்தார்கள்.

அவர்கள் யாவும் கேட்டுத் திடுக்கிட்டுப் பிரமையடைந்தார்கள். ஆனால் தங்களைச் சேர்ந்த மற்ற பேரனைவரும் எதிரிகளுக்கு இணங்கி விட்டார்களென்று தங்களில் சிலரே பிரத்தியட்சமாகக் கூறும்போது குறைந்த தொகையான அவர்கள் என்ன செய்யக் கூடும்? பேசாமல் ஒப்புக்கொண்டார்கள். அதன்மேல் அவர்களிடமும் பிரமாணிக்கம் பெற்றுக்கொண்டு இனி நடக்க வேண்டிய விவகாரத்

தைக் கவனிக்கத் தொடங்கினார்கள். கப்பலில் கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களுமே கப்பலின் முதலாளிகளுக்குப் பொறுப்பானவர்கள். அவர்களிலும் கப்பித்தானே முதல் பொறுப்பு. இவர்கள் இணங்கிய பின் கூலிக்கு உழைக்கும் நிராயுதபாணிகளாகிய மாலுமிகள் என்ன செய்வார்கள் பாபம்!

33-வது அத்தியாயம்

இப்போது கப்பலும் அதிலுள்ள சொத்துக்களும் யாவும் கள்ளர் கையில் சிக்கிக் கொண்டன. கடைசியில் உங்களுக்கும் பாகம் கொடுக்கிறோம் என்று கூறியதால் மாலுமிகள் இவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். கப்பலிலுள்ள சொத்துக்களைக் கவனிப்பதன் முன்னம் கள்ளர் முதலில் கப்பலையும் தங்கள் உயிர்களையுமே கவனிக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் காற்றும் மழையும் இரவில் போகப்போக மிக்க பயங்கரமான மும்முரத்தோடு அடிக்கத் தொடங்கின. கப்பித்தான் உத்தியோகஸ்தர் சிறையாக்கப் பட்டபடியால் கப்பலின் இருப்பிடத்தைக் கவனித்துக் குறித்து வைப்பவர்கள் ஒருவருமில்லை.

அதனால் இரவு பத்துமணிச் சுமாருக்குக் கப்பல் எந்த இடத்தில் இருக்கிற தென்பதே ஒருவர்க்கும் தெரியாது. நூறுகெஜ தூரத்திற்கப்பால் பெரியபாறை யிருந்தாலும் தெரியாது. புயற்காற்றால் கடல் பயங்கரமாய்க் கொந்தளிக்கத் தொடங்கியது. அலைகள் மலை போல் உயர்ந்து கப்பலின் மேல்தட்டில் புரண்டு செல்லத் தொடங்கின. பாய்மரங்கள் ஒவ்வொன்றாய் முறிந்துவிழத் தொடங்கின. மாலுமிகள் மிக்க கஷ்டத்தோடும் சாமார்த்

இயத்தோடுமே அங்கிருந்து கப்பலைக் காப்பாற்றும் வேலைகளைச் செய்ய வேண்டியதாயிருந்தது. நற்காலமாகக் கைதிகளில் சிலர் மாலுமித் தொழில் தெரிந்தவர்களாகவிருந்தார்கள். ஆகையால் அவர்களும் மாலுமிகளோடு சேர்ந்து வேலைசெய்யத் தொடங்கினார்கள். கள்ளர்களுக்கெல்லாம் தற்காப்பிற்காக ஆயுதங்க ளளிக்கப்பட்டன.

கப்பலின் நிலைமை வரவர மிக்க பயங்கரமாக மாறிவிட்டது. கப்பல் அதி வேகமாய் நாற்புறங்களிலும் மாறி மாறி இழுத்துக்கொண்டு போகப்பட்டது, கப்பலிலுள்ளவர்களெல்லாம் தங்களைக் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினார்கள். கள்ளர்களின் சந்தோஷமடங்கிவிட்டது. அந்தோ! கடவுளின் அபூர்வச் செய்கைகளின் மர்மத்தை அளவிட்டறிய யாவரால் கூடும். ஒருவருக்குப் பெருந்துயரமாகத் தோன்றும், அதே சம்பவமே மற்றவர்க்கு மிக்க சந்தோஷத்தை அளிக்கிறது.

இச் சம்பவத்தில் அவ்வாறே. எப்படியெனின், கள்ளர்கள் தாங்கள் மிக்க சாமார்த்தியமாகப் பன்னாட்கள் சதியாலோசனை செய்து அக்கிரமமாக அக்கப்பலைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் நோக்கம் "அக் கப்பல் சாதாரணமான வர்த்தகக் கப்பலானதால் அதில் விலை உயர்ந்த சரக்குகளிருக்கும்; அவற்றையும் கப்பலையும் ஏதேனுமொரு அன்னிய நாட்டுத் துறைமுகத்தில் விற்றுவிட்டால் பெருந் தொகையான பணம் வரும். அதில் மிக்க சொற்ப பாகத்தை மாலுமிகளுக்கும், சிறையாளருக்குமளித்துவிட்டு மீதித்தொகையை நாம் எடுத்துக்கொள்ளலாம்," என்பதே. கைதிகள் தங்களை விடுதலைசெய்ததையே பேருதவியாகக் கருதுவார்கள். பிறகு மாலுமிகள் நிராயுதபாணிகள். அவர்களைப்பற்றிச் சற்றும் அஞ்ச வேண்டுவதில்லை என்பது அவர்கள் யோசனை.

ஆனால் இப்போதோ யாவற்றிற்கும் மோசமாய் இருக்கிறது. கப்பலே அமிழ்ந்துவிடும்போலிருக்கிறது. தங்கள் பிராணன்களுக்கே ஆபத்தாயிருக்கிறது. இதனால் அவர்கள் எதிர்பார்த்த செல்வமும் சந்தோஷமும் யாவும் பகற்கனவாகப் போய் உயிருக்கே ஆபத்து நேரலாகுமென்பதால் மிக்க பயமே உண்டாகிவிட்டது.

கப்பலின் கப்பித்தான் உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்கோ திடீரென்று நேர்ந்த சம்பவம் சொல்லொணாத் துயரத்தையே அளித்தது. அவர்கள் தைரியமும் சாமார்த்தியமு முடையவர்களே. ஆயினும் ஆயுதம் தரித்தவர்களும், எத்தகைய அக்கிரமத்திற்கும் அஞ்சாத துணிகரமுடையவர்களும், எண்ணிக்கையில் தங்களினும் அதிகமானவர்களுமாகிய துஷ்டர்கள் முன் நிராயுதபாணிகளாகிய தாங்கள் ஐவர் என்ன செய்ய முடியும்? ஆகையால் அவர்கள் சொல்லொணா வியாகூலத்தில் அமிழ்ந்து கிடந்தார்கள். ஆனால் இப்போது தெய்வசங்கற்பத்தால் புயற்காற்று அடிக்கும் நிலைமையில் கப்பல் நிலைக்காது என்பதை அறிந்தபின் "ஆ! இக்கள்ளர்கள் கடைசியில் அழிவார்களேயன்றி நமது கப்பலையும் இதிலுள்ள பொருள்களையும் கைப்பற்றிக் கொண்டதால் இவர்கள் ஒரு பயனையு மடையமாட்டார்கள்," என்று கருதிச் சந்தோஷமடைந்தார்கள்.

அந்தோ! சில சமயங்களில் "நாம் நன்மை அடையாவிட்டாற் போகிறது. நமக்குத் துன்பம் நேர்ந்தாலும் பரவாயில்லை. எதிரி நன்மை பெறுவிட்டால் போதும்," என்று நினைப்பது மனித சுபாவமாகவிருக்கின்றது. இச்சமயம் கப்பலிலுள்ளோர் நிலைமை அவ்வாறே இருக்கிறது.

இரவு மணி பன்னிரண்டிருக்கும். அச்சமயம் பயங்கரமான காற்று வீசுகிறது. கப்பல் எச்சமயத்தில் கவிழ்ந்துவிடுமோவென்ற நிலைமையிலிருக்கிறது. ஒவ்வொரு சமயம் அதி வேகமாகக் கொஞ்ச தூரம் செல்வதும் பிறகு சுழல்வதும் ஒரு பக்கம் அதிகமாகச் சாய்வதுமான ஸ்திதியிலிருக்கிறது. கப்பலிலிருந்த அனைவரும் தாங்கள் வாழ்நாட்கள் முடிவிற்கு வந்துவிட்டனவென்று கருதிக்கொண்டு கடவுளைக் கடைசியாகப் பிரார்த்திக்கத் தொடங்கினார்கள்.

கேசவன் தன் ஆட்களுக்கும் முக்கியமான மாலுமிகளுக்கும் கொஞ்சம் சாராயம் கொடுத்தார். அவர்கள் தைரியமாய் வேலை செய்வார்களென்று கருதி உக்கிராணக் கொட்டடியைத் திறந்து சாராயப் பீப்பாவைத்திறந்து அவரவர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சம் பகிர்ந்து கொடுக்கத் தொடங்கினான்.

இச்செய்கையே ஆனர்த்தத்திற்கு அடிகோலிய மாதிரியாய் விட்டது. எப்படியெனில் கொஞ்சம் வெளியேறியதே மாலுமிகளும் கள்ளர்களாகிய கைதிகளும் தங்கள் உண்மை நிலையை மறந்துவிட்டார்கள். நாம் மரணமடையும் காலம் பெரும்பாலும் நெருங்கிவிட்டது என்ற அச்சமய நிலைமை ஒன்றையே கருதினார்கள். அதனால் கட்டுக்கடங்காமல் பிரியப்படி நடக்கத் தொடங்கி விட்டார்கள். கேசவன் "இவ்வளவு குடித்தது போதும், பிறகு உங்கள் இஷ்டப்படி குடிக்கலாம். இப்போதிருக்கும் ஆபத்தான நிலைமையைக் கருதி அதற்குத் தக்கபடி நடவுங்கள்," என்று எவ்வளவு வேண்டிக்கொண்டும் ஒரு பயனுமில்லை. இவன் பேச்சைக் கவனிப்பவர் ஒருவருமேயில்லை. அச்சமயம் அவனவன் மனப்போக்கே அவனவனுக்குத் தெரிகிறதன்றி மற்றவன் வார்த்தை செவியிலேறவில்லை.

அப்போது தான் கேசவனுக்கு நாம் செய்தது பெருந்தவறு என்று புத்தியிற் புலப்பட்டது. பயனென்ன? காரியம் மிஞ்சிவிட்டது. இத்தகைய நிலைமைக்கு வந்த இவர்கள் இனி இக்கப்பலைக் காப்பாற்ற முடியாது, யாவரும் அழிய வேண்டியதே என்று அவன் மனதில் பெருந்திகிலுண்டாயிற்று.

அச்சமயம் "ஆ! சுப்பன் எங்கே காணுமே," என்று சிந்தித்தான். ஏனெனில் சுப்பன் சுமார் அரைமணி நேரமாய் அதாவது கேசவன் யாவர்க்கும் சாராயங் கொடுக்க உக்கிராணத்திற்குச் சென்றது முதல் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. அந்தோ! அவனுக்கும் தன் ஆன்மாவிற்கு இரண்டாவது தன் மதலையே யன்றோ. ஆகையால் புத்திரன் நினைப்பு வந்ததும் மற்று யாவற்றையும் விட்டுவிட்டு அவனைத் தேடிச் சென்றான்.

கேசவன் மேல் தட்டிற்குச் செல்லும் படிகளில் ஏறப் போகும் போது அங்கிருந்த தாழ்வார வழியாய்ச் சுப்பன் அவனருகில் வந்து "அப்பா! நீ செய்தது பெருந்தவறு. அதனால் விவரீதமே விளையும். அதைப்பற்றிச் சிந்திப்பதில் இனிப்பயனில்லை. இனி நாம் தப்பித்துக் கொண்டு போவதையே கவனிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்திருக்கிறேன். இங்குச் சிறையாளராக வந்திருப்பவர்களில் மலையாண்டி என்ற ஒருவனிருக்கிறான். அவன் என் பள்ளிக்கூடப் பாலிய சினேகிதன். நான் அவன் உதவியைக் கொண்டு, கப்பலின் பின்புற மூலையில் ஒரு பெரிய படகைக் கொண்டுபோய் ஆயத்தமாக வைத்திருக்கிறேன். அதில் நமது சாமான்களையும் வைத்துவிட்டேன். நீ உடனே உக்கிராணத்திற்குச் சென்று கொஞ்சம் ஆகார வகைகளையும், குடிவகைகள், திசையறி கருவி முதலிய நமக்கு அவசியமான வஸ்துக்களை மட்டும்

எடுத்துவந்து விட்டால் போதும், கப்பலிலிருக்கும் பொக்கிஷத்தையும் கொண்டுவந்துவிடு. நாம் தப்பித்துக்கொண்டு போய்விடலாம்," என்றான்.

கேசவன் ஒரு விநாடியே சிந்தித்தான். தன் மைந்தனை மெச்சிக் கொண்டான். உடனே அவனை அழைத்துச் சென்று கப்பலின் பொக்கிஷம் இருக்கும் இடத்திற்குச் சென்று அதை எடுத்துக் கொண்டுவந்து மகனிட அளித்து இதைப்படகில் வைத்துவிட்டு நீ அங்குக் காவலிருந்துகொண்டு மலையாண்டியை என்னிடம் அனுப்பு. இச்சமயம் எவரையும் நம்பாதே; உன் கைத்துப்பாக்கி எப்போதும் ஆயத்தமாய்க் கைக்கு எட்டுமிடத்தில் இருக்கட்டும்," என்றான்.

சுப்பன் உடனே அவ்வாறே சென்று மலையாண்டியை அனுப்பினான். கேசவன் அவனை அழைத்துக்கொண்டு உக்கிராணத்திற்குச் சென்றான். அச்சமயம் அங்குள்ளவர்கள் இன்னும் சாராயம் இருக்கும் இடத்திலேயே இருந்து குடித்துக்கொண்டிருப்பதைக்கண்டு இதுவும் ஒரு விஷயத்திற்கு நலமேயென்று மற்றொரு பாகத்திற்குச் சென்று தங்களுக்கு வேண்டிய ஆகாரம் குடிவகை முதலியவற்றை எடுத்து மலையாண்டியிட மளித்துப் படகிருக்கும் இடத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் மேல் தட்டில் என்ன நடக்கிறதென்று பார்க்கச் சென்றான்.

அவன் மேல்தட்டிற்குச் செல்லும் படிகளின் உச்சியிலேறும்போது பின் கண்ட வார்த்தைகளைக்கேட்டுத் திடுக்கிட்டுத் தட்டென்று நின்றான். அதாவது, "சட், நமக்கு ஆயுதம் அவசியமில்லை. இத்தகைய ஆபத்தில் நமது எஜமானர்களை விடுதலைசெய்தே தீரவேண்டும். கதவுகளை உடைத்துவிடுவது பெரிய காரியமல்ல," என்ற வார்த்தைகள் அவன் செவிகளில் விழுந்தன.

சங்கதி என்னவெனில் குடிவெறியேறிய மாலுமிகள் தங்களுக்கும் கப்பலுக்கும் நேரிடக்கூடிய ஆபத்தையுணர்ந்தும், ஒருவிதத் தைரியங்கொண்டு அங்கு தங்களோடு கூடியிருக்கும் கள்ளரோடு இதமாகப்பேசி "தங்கள் கப்பித்தானையும் உத்தியோகஸ்தரையும் சிறையிலிருந்து வெளிப்படுத்தி விட்டால் அவர்களும் எப்படியாவது மடியாமல் தப்பித்துக் கொள்வார்கள். இன்றேல் அவர்கள் அறையில் அடைக்கப்படிருப்பதால் கப்பலோடு முழ்கி மடிவார்களாதலால் அவர்களை விடுவித்து விடுவது புண்ணியம்," என்று தீர்மானித்தார்கள்.

இதைக்கேட்ட அங்கிருந்த கள்ளர்களும், வெறியால் காருண்ய குணமுடையவர்களாகி "ஆம் ஆம். எங்களிடம் ஆயுதங்களிருக்கின்றன. அவர்கள் அப்படி அநியாயமாகச் சாகும்படி விடலாகாது," என்றார்கள்.

இம்மொழிகளைக் கேட்டதே கேசவன் பேரிடி விழுந்தவன் போலாய் விட்டான். அவன் துரிதமாகச்சென்று ஈட்டிக்கந்தன் முதலியவர்களுக்குச் சங்கதியைத் தெரிவித்துக் கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் வைக்கப்பட்டிருக்கும் அறையின் முன் காவல் நிற்கும்படி ஆக்ஞாபித்தான். கைதிகளனைவரும் குடித்துவிட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் கேசவன் வார்த்தையை இலட்சியம் செய்யாமல் கப்பல் பயங்கரமாக அலைவதையே கவனித்துக்கொண்டு தங்கள் காரியத்தில் பாராமுகமாகவே இருந்தார்கள்.

இதற்கிடையில் மாலுமிகள் சென்று கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் இருக்கும் அறையின் கதவை உடைத்து அவர்களை விடுதலை செய்துவிட்டார்கள். மனிதர்கள் தங்கள் தங்கள் எண்ணப்படி எதெதையோ செய்ய முயல்கிறார்கள். ஆனால் எங்கும் சர்வசாக்ஷியாய் நிறைந்து

நின்று எல்லாச் சீவராசிகளின் உள்ளத்தையும் அறிந்து அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி பலனளிக்கும் சர்வேசன் எதெது எப்படி நடக்கவேண்டுமென்று விரும்புகிறாரோ அப்படியேதான் யாவும் நிறைவேறும்.

இவர்கள் இவ்வாறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு ஒருவரை யொருவர் அழிக்க எண்ணிக்கொண்டிருக்கையில், திடீரென்று கப்பல் எங்கோ மோதிக் கொண்டதுபோல் மிக்க பயங்கரமான ஒரு அதிர்ச்சியும் சத்தமும் உண்டாயின. அதனால் உட்கார்ந்திருந்தவர்கள் பந்துகள் போல் தூரத்தில் எடுத்தெறியப்பட்டார்கள். நின்றிருந்தவர்கள் தலை கீழாய் மோதியடிக்கப்பட்டார்கள் நடமாடிக்கொண்டிருந்தவர்கள் பயங்கரமான விதமாக உருண்டு விழுந்தார்கள். கப்பல் முழுமையும் அல்லோல கல்லோலமாய் விட்டது. கப்பலின் அடித்தட்டில் ஒரு பக்கப் பலகை பாறையில் குத்தப்பட்டு அதில் துளை உண்டானதால் நீர் உள்ளே நுழையத் தொடங்கியது.

கப்பித்தான் அடைக்கப்பட்ட இடத்திலிருந்து வெளியில் வந்துவிட்டபடியால் தன் கடமைப்படி உடனே கப்பலின் மேல் தட்டிற்குச் சென்று "யாவரும் அவரவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்," என்றான். உடனே அவரவர்கள் கைக்கு அகப்பட்ட படகுகளில் ஏறிக் கப்பலைவிட்டு வெளியிற் செல்ல முயன்றார்கள். ஆனால் வெளியில் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை அச் சமயமிருந்த பிராணாபத்தான நிலைமையில் ஒருவரும் கவனிக்கவில்லை. கப்பித்தான் முதலியவர்களுக்கு கப்பல் படகுகள் முதலிய யாவும் இருக்கும் இடங்களெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகையால் அவர்களே முதலில் படகேறிச் சென்றார்கள்.

கேசவனுக்கு யாவும் பெருங் குழப்பமாய்விட்டது. அவன் ஆழ்ந்த யோசனைக்காரனானால் நிதானித்தான். கப்பலை நன்றாகக் கவனித்தான். அடித்தட்டில் நீர் ஏறுகிறதென்று அவன் நன்றாக அறிவான். ஆயினும் கப்பல் கீழ் அமிழ்வதாக ஒரு குறியுமில்லை. சற்றுநேரம் சிந்தித்தான். கடைசியில் அவன் மனதில் உண்மை புலப்பட்டது. அதாவது, கப்பல் இரண்டு பாறைகளுக்கிடையில் கெட்டியாகச் சிக்கிக் கொண்டபடியால் அது அப்படியிப்படி அசைய முடியாதபடி சிக்கிக்கொண்டது. மேலெழும்பவும் முடியாது. கீழ் அமிழவும் முடியாது. பாறைகளாகையால் அமிழப்போதுமான இடமுமிராது.

கேசவன் மனதில் இந்த உண்மையைப்பற்றியசந்தேகமொழிந்ததும் அவன் "எதற்கும் நாம் சற்று நிதானிப்பதே நலம், இத்தகைய நிலைமையில் படகிலேறிக் கடலிற் செல்வது பெரிய ஆபத்தே. இங்கிருந்தால் அந்த ஆபத்து மநரவாகும். இன்றேல் ஒரு சமயம் கப்பல் முழுகாமலே யிருந்து புயல்காற்று அடங்கி விடின், கப்பலிலுள்ள பொருள்களில் கூடுமான வரையிலேனும் எடுத்துச் செல்லலாம்" என்று தனக்குள் தீர்மானித்துத் தன் ஆட்களிடம் கூறினான். சுப்பனும், சட்டிக் கந்தன் முதலிய மூவரும் கைதிகளில் ஏழுபேரும் ஆக பதினொரு பேர், கேசவனோடு சேர்ந்து பன்னிரண்டு பேரே தனித்து கப்பலில் நின்றார்கள்.

மற்றப்பேரனைவரும் கைக்கு அகப்பட்ட படகுகளிலும், பலகைகள், கட்டைகள் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டும் கப்பலைவிட்டுக் கடலில் சென்றார்கள். அச்சமயம் கடல் ஒரு பெருந்தீயிலிருக்கும் எண்ணெயைக் கொப்பரை யெப்படிக் கொதித்துக் கொந்தளித்துக்கொண்டிருக்குமோ அத்தகைய நிலைமையிலிருந்தது. கேசவனும் மற்ற பதினொரு பேருமட்டும் கப்பலில் பிரமையடைந்தவர்கள்

போல் இருந்தார்கள். அச்சமயம் இரவு சுமார் ஒரு மணி யிருக்கும். வானம் கடல் இரண்டும் ஒரே கரிய இருள் மயமாக இருந்தன. ஒரு நட்சத்திரம் கூடக் கண்களுக்குப் புலப்படவில்லை. கடல் கொந்தளித்துப் பொங்குவதும் அலைகள் மலைபோல் உயர்ந்து ஒன்றின் பின் ஒன்றாக வந்து கப்பலின் மேலும் பாறைகளின் மேலும் பயங்கரமாய் மோதுவது மாகிய சத்தத்தை விட வேறெவ்விதச் சத்தமும் கேட்கப்பட வில்லை. கப்பலிலிருப்போர் கடலில் படகில் செல்வோர் எப்படிச் செல்கிறார்கள் என்று கவனிக்க முயன்றார்கள். ஆனால் படகுகள் செல்லும் சத்தமாவது, வேறு எவ்விதச் சத்தமாவது இவர்களுக்கு எள்ளளவும் கேட்கவில்லை. சென்றவர்கள் தூரத்தில் சென்று விட்டார்களென்றாவது கடலில் அமிழ்ந்து விட்டார்களென்றாவது ஒன்றும் கண்டறிய முடியவில்லை.

கேசவனுக்கும் அவன் ஆட்களுக்கும் இச்சமயம் உயிரோடிருக்கிறோம் என்றவரையில் திருப்தியே யன்றி மறு விநாடி என்ன நேரிடுமென்று தெரியவில்லை. கேசவன் கீழ்த்தட்டில் இறங்கிப் பார்த்தான். கீழே மூன்றாவது தட்டில் ஜலம் ஏறக்குறைய நிறைந்து விட்டது. அதற்கு மேல் ஏறவில்லை யென்று தெரிந்தது. கப்பலோ முதலில் பாறைகளுக்கிடையில் சிக்கிய நிலைமையிலேயே யிருக்கிறது. இதனால் கப்பல் எப்புறமும் நகர முடியாதபடி சிக்கிக்கொண்டதென்றும் கடலின் நீர் மட்டம் வரையில் கப்பலில் ஜலம் ஏறிவிட்டு இனியேற முடியாமல் இருப்பதால் கப்பல் கீழே செல்லாத விதமாய்ப் பாறையில் சிக்கிக் கொண்டிருக்கிறதென்றும் கேசவன் சூட்சும புத்தியாலறிந்து கொண்டான்.

34-வது அத்தியாயம்

இப்போது கப்பலில் கேசவன், அவன் மகன் சுப்பன், ஈட்டிக் கந்தன், தனுக்குத் தாணப்பன், மாயாங்கன், வேறு ஏழு கள்ளர், ஆகிய பன்னிரண்டு பேர்களே யிருக்கிறார்கள். கப்பலோ அப்படி யிப்படி யசையும் நிலையிலில்லை. ஆகையால் அதைப்பற்றி இவர்கள் எவ்வித கவலையும் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. இரவோ எங்கும் ஒரே காரிருட் பிழம்பாக விருக்கிறது. கடைசியில் இவர்கள் கேசவன் கட்டளைப்படி கப்பலைச் சோதிக்கத் தொடங்கினார்கள்.

கப்பலை விட்டோடியவர்கள் தத்தம் உயிரையே அச்சமயத்தில் கருதினார்களன்றி அச்சமயம் தான் அணிந்திருக்கும் உடையையன்றி வேறெதையும் கவனித்திலர். ஆகையால் பெரும்பாலருடைய உடைகள் முதல் சாமான்களனைத்தும் கப்பலிலேயே விடப்பட்டிருந்தன. இவையன்றிக் கப்பலிலிருந்த வர்த்தகப் பொருள்கள், கப்பலிலேயே இருந்தன. வர்த்தக சமான்களில் பெரும் பாலானவை கீழே மூன்றாவதடுக்கில் இருந்தபடியால் நீரில் மூழ்கிவிட்டன.

ஆயினும் கப்பலிலிருந்த ரொக்கப் பணமும், உணவுப் பொருள்களும், உயர்தரச் சாமான்களும், அதாவது இரண்டாவது தட்டிலும் மேல் தட்டிலுமிருந்தவைகள், பழுதின்றியிருந்தபடியால் கள்ளர் வசத்தில் சிக்கின.

அந்தோ! அத்தகைய சமயத்தில் அத்தகைய திரண்ட பொருள் கிடைத்ததால் கேசவன் முதலியோர் சந்தோஷமடைந்திருப்பார்களா? அப்படி யடைந்திருந்தால் அவர்களைவிட மதியீனர் ஒருவருமில்லை யென்னே நாம் கருத

வேண்டும். ஆனால் கேசவன் அத்தகைய மதியீனனல்ல. தங்கள் தற்கால நிலைமையை அவன் நன்றாக உணர்ந்து கொண்டான். அதனால் தன் மைந்தனாகிய சுப்பனை அழைத்துத் தனியாய் அவனை நோக்கி, "மைந்தனே! நமது தற்கால நிலைமை மிக்க சந்தோஷமான தல்லவா?" என்றான்.

சுப்பன் "ஆம். ஆனால் நம் பிராணன்கள் காப்பாற்றப்படும் என்று நிச்சயமுணர்ந்தால் தற்கால நிலைமை மிக்க சந்தோஷமானதே," என்றான்.

கேசவன் "ஆம். நீ புத்திசாலியாகையால் இத்தகைய பதில் தான் அளிப்பாயென்று நான் கருதியே உன்னைக் கேட்டேன். இப்போது நமது பிராணன் காப்பாற்றப் படுமென்ற நிச்சயமில்லை. இக்கப்பல் வரையில் இது மடிந்த யாத்திரியே. இனி இதைவிட்டு நாம் படகிலேறிச் செல்ல வேண்டும். நற்காலமாய் நாம் முதலில் ஆயத்தம் செய்த படகு ஒருவர் கண்களுக்கும் புலப்படாமல் நாம் மறைத்து வைத்த இடத்திலேயே யிருக்கிறது. நம் பன்னிருவர்க்கும் அது போதும். ஆனால் இச்சமயம் நாம் எந்த விடத்தில் இருக்கிறோமென்பது நமக்குத் தெரியாது. அதனால் எந்தத் திக்கே செல்லவேண்டுமென்பதும் தெரியாது. இங்கிருந்து கரை எந்தத் திக்கில் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென் பதும் நமக்கு ஒன்றுமே தெரியாது. இந்த நிலைமையில் நாம் என்ன செய்கிறதென்பதே ஒன்றும் புலப்படவில்லை. இப்போது நமக்கு ஏராளமான பொருள்கள் என்னமோ அகப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றை நாம் எப்படி எங்கு எடுத்துச் செல்வது?" என்றான்.

ஈட்டிக் கந்தன்:—"கப்பித்தான் முதலியவர்கள் எங்கு சென்றிருப்பார்கள்?" என்றான்.

கேசவன்:—"அவர்களுக்கு மட்டும் எப்படி வழி தெரியும், மேலும் இத்தகைய பயங்கரமான கடலில் அவர்கள் தப்பிப் பிழைத்திருப்பது மிக்க சந்தேகமே," என்றான்.

கடைசியில் நாழிகைகள் கழியக் கழிய, பொழுதுவிடியும் சமயம், புயற்காற்று நிற்கப்போகும் சமயம் ஆகையால் தீபம், அணையும் சமயத்தில் குபீரென்று எரிவது போல மும்முரமான ஒரு காற்று வீசியதும் கப்பலின் அடிப்பக்கம் பிளவு பட்டுவிட்டது. இனி எந்த நிமிடத்திலும் கப்பல் துண்டுதுண்டாய் உடைந்து போகலாகும். ஆகையால் கள்ளர் மிக்க பீதியடைந்து உடனே தாங்கள் தயார் செய்திருந்த படகில் எடுத்துச் செல்லக்கூடிய ஆகாரங்கள் மற்றப் பொருள்கள் முதலியவற்றை வைத்துக்கொண்டு கப்பலை விட்டுப் புறப்பட்டார்கள்.

காற்று எப்பக்கம் அடிக்கிறதோ அப் பக்கந்தான் இவர்கள் படகை விடவேண்டும். ஏனெனில் கடலிலடிக்கும் காற்று பெரும்பாலும் கரையை நோக்கியே அடிக்கும், ஆகையால் தங்களால் கூடியவரையில் படகை மெதுவாகவே விட்டுக்கொண்டு சென்றார்கள். ஏனெனில் இருட்டில் முன்னே கடலில் பாறைகள் முதலியவை மறைந்திருந்தாலும் தெரியாது. கடைசியில் கிழக்கில் வர்ணம் வெளுக்கத் தொடங்கியதும் புயற்காற்றும் அடங்கத் தொடங்கியது; பயங்கரமான காற்று மழைக்குப் பின் இயற்கைபோல் வானம் பரிசுத்தமாய் விட்டது. மிக்க ஆரோக்கியமாகவும யாவர்க்கும் சந்தோஷத்தை அளிக்கக்கூடிய விதமாகவும் பொழுது விடிந்தது. யாரேனும் கடந்த இரவின் காட்சியைக் காணாதவர்கள் அந்த விடியற்காலை ஆரோக்கியமான மகிழ்ச்சியைக் கண்டால் இரவு வானத்தில் இத்தகைய பயங்கரமான காட்சி நடந்ததென்றும்,

அதனால் இத்தனைப் பிராணிகள் மனம் நடங்கிப் பிராணுயத் தக்குள்ளாகினார்கள் என்றும் கருதவே மாட்டார்கள். அந்த இரவு எத்தனையோ பேர் கடலுக்கிரையானார்கள். எத்தனையோ பேர் தாம் அருமையாய்ப் பெற்ற மைந்தரையும், எத்தனையோ மனிதர் தாம் கணவரையும் இழந்து விட்டார்கள்.

சூரியோதய மாகும்போதே படகில் செல்லும் கள்ளருக்கு நாம் எத்திக்கில் செல்கிறோமென்று தெரிந்தது. அச்சமயம் படகு தெற்கு நோக்கிச் செல்கிறது இப்போது எங்கிருக்கிறோ மென்பது அவர்களுக்குத் தெரியாததால், நாம் செல்லும் திக்கில் எந்த தேசமிருக்கிறது? எவ்வளவு தூரத்திலிருக்கிறது? என்று தெரியாது. இவர்கள் கப்பல் நோக்கி வந்தது ஆப்ரிக்கா தேசம். புயல்காற்று ஆரம்பமாகும்போது ஆப்ரிகாவிற்கு நான்கு நாள் பிரயாண தூரத்திலிருந்தார்கள். ஆனால் கடந்த இரவில் கப்பல் வேகமாய் பல திக்குகளில் மாறி மாறிச் சென்றதால் இப்போது எங்கிருக்கிறோம் என்று அவர்களால் கண்டறிய முடியவில்லை.

இத்தகைய நிலைமையில் அவர்கள் என்ன செய்வது? எத்தனை நாள் கரைகாணமல் கடலிலேயே யிருக்கவேண்டுமோ தெரியாது. ஆகையால் இருக்கிற ஆகாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செலவழித்துக்கொண்டு செல்வதென்றும், கடைசியில் கடவுள் விட்டவழியாகிற தென்றும் நடக்கத் தொடங்கினார்கள். அன்று பகல் முழுமையும் சென்றது. இரவும் வந்தது. நற்காலமாய் காற்று இவர்களுக்கு அனுகூலமா யிருந்தபடியால் படகு இடையூறின்றிச் சென்று கொண்டிருந்தது. படகு இரவு முழுதும் சென்று பொழுது விடியும் சமயம் வந்தது. காற்றின் குளிர்ச்சி மாறத் தொடங்கியது. அதனால் பூமி சமீபத்தில் இருக்கிறதென்று ஊகிக்க வேண்டியதாயிற்று.

பொழுது விடிந்தது. படகிலிருப்பவர்களின் மனோநிலைமை பெருந்திகிலிலிருக்கிறது. ஏனெனில் எத்திக்கை நோக்கினாலும் அகன்ற கடற்பரப்பையும் மேலே வானத்தையுமன்றி வேறொன்றும் காணப்படவில்லை. கடலில் எந்த கிரக்ஷா ரேகையிலிருக்கிறோம்? கரை எவ்வளவு தூரத்திலிருக்கிறது? என்பவை யொன்றுமே தெரியாது. அதோடு எந்த நாட்டின் கரை சேர்வமோ என்பதும் தெரியாது. பெரும்பாலும் ஆப்ரிகா கண்டத்தின் கரையில் தான் போய்ச் சேர்வோம் என்று மட்டும் நம்பக் கூடியதாகவிருக்கிறது.

ஆனால் அக் கண்டத்தில் எங்கோ மிகச் சிறிய பாகங்கள் இரண்டொன்றில் தான் தங்களைப் போன்ற நாகரீகமுடைய ஜனங்கள் குடியேறியிருக்கிறார்கள். மற்ற பெரும்பாகத்தில் அநாகரீகமான காட்டு மிராண்டிகளாகிய அந்த நாட்டுச் சுதேசிகளேயிருக்கிறார்கள். அக் கண்டத்தின் சில பாகங்களில் நரமாமிச பட்சணிகள் கூட இருக்கிறார்களென்று இவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு தூரமிருக்கிறதோ தெரியாது. இந்த நிலைமையில் சாதாரண மனிதர்களின் மனம் எத்தகைய வேதனையிலிருக்கும்? படகிலுள்ளோர் அனைவரும் ஜீவகாருண்ய மற்ற கல்நெஞ்சர்களேயெனினும் தங்கள் பிராணன்களுக்கே ஆபத்து நேரிடுமோவென்று கருதியபோது அவர்கள் நெஞ்சுகளில் பெருந்திகில் உண்டாயிற்று.

பகல் பன்னிரண்டு மணியாயிற்று. அப்போது யாவரும் போஜனம் அருந்தினார்கள். சுமார் ஒரு மணிக்கு மிக்க தூரத்தில் கடலின்மேல் ஆகாயத்தில் உயரத்தில் சில பட்சிகள் பறப்பது தெரிந்தது, கேசவனே முதல் முதல் அதைக்கண்டு யாவர்க்கும் காட்டினான். உடனே யாவர்க்

கும் சற்று சந்தோஷமுண்டாயிற்று. ஏனெனில் வானத்தில் பட்சிகள் பறப்பதால் பூமி சமீபத்திலிருக்கிறதென்று தெரிந்தது. இதை யறிந்ததே யாவர்க்கும் உற்சாகம் உண்டாயிற்று. அதனால் யாவரும் படகு செல்லும் முன் பக்கம் உற்று நோக்கியபடி யிருந்தார்கள்.

சுமார் மூன்று மணிக்கு வானமும் பூமியும் கூடுவது போல் தோன்று மிடத்தில் அதாவது அடிவாரத்தில் முன்பு மாலுமித் தொழிலிருந்த சிலர் "ஆ! அது பூமியே" என்றார்கள். உடனே யாவரும் மிக்க சந்தோஷமும் ஆவலும் கொண்டு அத்திக்கை நோக்கியபடி யிருந்தார்கள். மாலை சுமார் மூன்று மணிக்கு தூரத்தில் மலைகளின் சிகரங்களும் மேகம் படிந்திருப்பதும் புலப்படத் தொடங்கின. வரவரக் கடைசியில் தூரத்தில் எதிரில் தெரிவது பூமியின் கரையே யென்று நன்றாகத் தெரிந்தது. வரவர கரையிலுள்ள மரங்கள் முதலிய யாவும் தெரியத் தொடங்கின.

பொழுதமரும் வேளையில் கரையின்னும் நெடுந் தூரத்திலேயே யிருக்கிறது. கடைசியில் பொழுதுபோய் எங்கும் இருள் சூழ்ந்தது. அப்போது தான் படகிலிருந்தவர்கள் திருப்தியாகப் போஜனம் செய்யத் தொடங்கினார்கள். இரவு சுமார் பத்து மணியிருக்கும், அப்போது கரைக்குச் சுமார் எழு மைல் தூரத்தில் நெருங்கினோம் என்று தெரிந்தது. எப்படியெனில் பலவிதமான காட்டு மிருகங்களின் சத்தம் இவர்களுக்குக் கேட்டது, இதனால் தாங்கள் நெருங்கும் கரை அடவியென்று தெரிந்தது. அதோடு எள்ளளவேனும் எவ்விதமான வெளிச்சமு மில்லாததால் கரையில் மனித சஞ்சாரமில்லை யென்று விளங்கிவிட்டது.

ஆகையால் கேசவனும் மற்றக் கள்ளர் தலைவர்களும் ஆலோசனை செய்து இப்போது கரையைநெருங்காமல் கட

லில் எட்ட விருப்பதே நலம் என்று தீர்மானித்து படகிற்கு உடனே நங்கூரம் போட்டு விட்டார்கள். இரவு முழுமையும் அவர்களுக்குச் சற்றேனும் நிம்மதியில்லை; ஏனெனில் "கடலில் எத்தனை நாட்கள் இருக்க வேண்டுமோ? கரை காண்போமோ அல்லது கடலிலேயே மடிந்துபோய் விடுவோமோ? என்று இது காறும் இருந்ததிகில் ஒழிந்ததாயினும் இப்போது கரை கூடென்று தெரிந்ததும் "இது எத்தகைய நாடோ? இங்கு எத்தகைய மனிதர் இருப்பார்களோ?" என்ற கலக்கமுண்டாய் விட்டது. ஆகையால் மிக்க கலவரத்தோடேயே இராக் காலத்தைக் கழித்தார்கள்.

பொழுது விடிந்ததும் யாவரும் ஆவலோடு கரையை நோக்கினார்கள். கரை சுமார் மூன்று மைல் தூரத்திலேயே இருப்பதால் அங்குள்ள குன்றுகளும் பனைமரம் தென்னமரம் முதலிய விருக்ஷங்கள் நெருங்கிய அடவியும் நன்றாகப் புலப்படுவதைக் கண்டார்கள். சுமார் ஒன்பது மணிக்குக் கரையை நெருங்கினார்கள். அது ஜனசஞ்சாரமில்லாத இடமாக இருந்தபடியால் துறைமுகம் ஒன்றுமில்லை. ஆகையால் தக்கவிடம் பார்த்தே கரையிறங்க வேண்டும். அதற்காகக் கரையோரமே படகைச் செலுத்திக்கொண்டு சென்றார்கள்.

தாங்களிருப்பது எந்தத் தேசம் என்று தெரியவில்லை. சுமார் பிற்பகல் மூன்று மணியிருக்கும். அச்சமயம் கரையில் ஒரு இடத்தில் ஒரு சிறு ஆற்றின் முகத்துவாரம் தோன்றியது. அதை நெருங்கிப் பார்த்தபோது அது உள்நாட்டிலிருந்து வருவதாகவே தெரிகிறது. ஆனால் அது ஒரு சிறிய ஆறுதானா என்றும் அல்லது பெரிய கால்வாயா என்றும் நிச்சயிக்கக் கூடியதாயில்லை. ஏதோ ஓர் நீர் வழி

உள் நாட்டிற்குச் செல்கிறதென்று மட்டும் தெரிகிறது. அது சுமார் நூற்றைம்பது கஜ அகலமிருக்கும். படகு செல்லப் போதுமான ஆழம் சலமிருக்கிறது. ஆனால் உள் நாட்டில் செல்லச்செல்ல எப்படியிருக்குமோ தெரியாது எதற்கும் அன்று இராக்காலத்தைக் கடலிலேயே கழித்து விடுவதென்றும், இடையில் திர ஆலோசனை செய்து பிறகு, எப்படி நடந்து கொள்வதென்பதைத் தீர்மானிப்பதென்றும் கருதினார்கள்.

அவ்வாறே அந்த முகத்துவாரத்திற்கு இருநூறு முந்நூறு கஜ தூரத்தில் படகை நிறுத்தினார்கள். சூரியாஸ்தமன மாகுஞ்சமயம் வெளிச்சம் இருக்கும்போதே யாவரும் போஜனம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது ஆகாரப் பொருள்களைக் கவனித்துப் பார்த்தார்கள். யாவரும் தினம் இரண்டு வேளையும் திருப்தியாய்ப் போசனம் செய்வதாயின் ஐந்து நாட்களுக்கு வரும் என்று தெரிந்தது. யாவரும் போஜனம் செய்து முடிந்தபின் கேசவன், சுப்பன், ஈட்டிக்கந்தன் முதலியவர்கள், ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள்.

முதலில் இன்னும் இரண்டொரு நாட்கள் கரையோரமே சென்று பார்த்தால் ஒரு சமயம் ஏதேனும் துறைமுகஸ்தலம் தோன்றுதா என்று ஆலோசித்தார்கள். தோன்றினால் தான் சரி; இன்றேல் உள் நாட்டிற்குச் செல்லக் கிடைத்த வழியையும் இழந்துவிட்டதாகும். உள் நாட்டில் சென்றால் ஜன சஞ்சாரமுள்ள இடம் ஏதேனும் அவசியம் அகப்படும். அதைவிட்டுக் கரையோரம் சென்று கடைசியில் ஒரு அடவியி லிறங்கினால் யாவற்றையும் சுமந்துகொண்டு காட்டில் வழி தெரியாத விடத்தில் செல்வதெனின், அது சாத்தியமான காரியமல்ல. கடைசியில்

ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அதாவது கேசவன், "நாம் வீண் ஆலோசனைகளைச் செய்வதில் பயனில்லை. நம் மிடம் ஆகாரமிருக்கும் போதே ஜன சஞ்சாரமுள்ள ஒரு இடத்தில் போய்ச் சேரவேண்டும். இங்கே உள் நாட்டிற் குச் செல்வது ஒரு ஆறாக விருந்தால் கொஞ்சதூரம் செல் வதற்குள் அதன் கரையில் ஊர்கள் இராமற்போகா. அப் படிக்கின்றி இது ஒரு கால்வாயாக இருந்தால் அப்போ தும் சமீபத்திலேயே ஜன சஞ்சாரமான இடம் இருக்க வேண்டும். ஆகையால் இந்த வழியே செல்வதுதான் நலம்," என்றான். அவ்வாறே செய்வதென்று அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள்.

அன்று இரவும் இவர்கள் சரியாக நித்திரை செய்ய முடியவில்லை. ஏனெனில் இரவு வந்ததே கரையிலிருந்து பலவிதமான பிராணிகளின் சத்தம் கேட்கத் தொடங்கி யது. ஆயினும் புலி சிங்கம் இப்படிப்பட்ட பெரிய துஷ்ட மிருகங்களின் சத்தம் ஒன்றும் கேட்கவில்லை. கடைசியில் பொழுது விடிந்தது. படகை முகத்துவாரத்தில் செலுத்தி னார்கள். இவர்கள் சீக்கிரம் உள் நாட்டில் பிரவேசிக்க வேண்டியதற்கு இன்னொரு முக்கிய காரண மிருக்கிறது. அதாவது உணவுப் பொருள்கள் ஐந்தாறு நாட்களுக்குப் போதுமானவையே எனினும் இவர்கள் கப்பலிலிருந்து கொண்டு வந்த சுத்த ஜலம் இன்னும் ஒரு நாளைக்கு மேல் வராது. யாவும் சிந்தித்தே கேசவன் இம்மாதிரி செல்வ தென்று தீர்மானித்தான். படகைச் செலுத்திக் கொண்டு ஆறோ கால்வாயோ அவ்வழியே செல்லத் தொடங்கி னார்கள்.

35-வது அத்தியாயம்

இவர்கள் உள்நாட்டை நோக்கிச் செல்லச் செல்ல இரு புறங்களிலும் கரை வரவர உயரமாவதைக் கண்டு அது பெரும்பாலும் கால்வாயாகவே யிருக்கவேண்டும் என்று தோன்றியது. கரையில் இருபுறங்களிலும் உயரமான விருட்சங்களும் அடர்ந்த குத்துச் செடிகளுமிருந்தன. அம்மரங்களில் குரங்குகள் விசேஷமாகவிருந்தன. அதோடு இவர்கள் இதுகாறும் கண்டிராத பலவித நவீன ஜெந்துக்களிருந்தன. அவைகளின் பெயர் குணங்கள் முதலிய ஒன்றுமே இவர்களுக்குத் தெரியாது. பகல் முழுதும் கரையில் ஒரு விடத்திலேனும் மேலேறிச் செல்லும் வழி காணப்படவேயில்லை.

கடைசியில் இரவு நெருங்க நெருங்க இவர்களுக்குப் பீதியுண்டாகத் தொடங்கிற்று. அத்தகைய சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்ட குண்டு தைரியமுடையவனாயினும் மனமுடைந்து நடுங்கிவிட வேண்டியதே. ஜன சஞ்சாரமும் மற்ற எல்லாச் சௌகரியங்களுமிருக்கிற ஒரு நகரத்தில் துஷ்டர்கள் தங்களிடம் தக்க ஆயுதங்களையும், வேறு துணைகளையும், இன்னும் ஓடி ஒளிக்கத் தகுந்த வசதிகள், பின்னால் உதவி செய்யக்கூடிய தங்கள் போன்ற துஷ்டர்களாகிய நண்பர்கள் முதலிய எல்லா சௌகரியங்களும் சமீபத்திலிருக்கிறபடியால் அதிகாரிகளுக்கும், சட்டத்திற்கும், அரசனுக்கும் எதற்கும் அஞ்சாமல் துணிகரமாய் எங்கும் போய் எதையும் செய்யத் தைரியமுடையவர்களாக விருக்கிறார்கள்.

இங்கோ இருபுறங்களிலும் சுமார் ஐம்பது அறுபது அதிகமானால் நூறு கஜ தூரத்தில் இருண்ட காடேயிருக்கிறது. தங்களிடம் இரண்டு மூன்று துப்பாக்கிகளும் சில

தோட்டாக்களும் மட்டுமேயிருக்கின்றன. மற்றவை கத்தி கட்டிகளே. ஆனால் எச்சமயத்தில் துஷ்ட மிருகங்கள் அல்லது கொடிய அநாகரிக ஜனங்களால் தாக்கப்படுவோமோ வென்பது தெரியாது. அத்தகைய சந்தர்ப்பம் நேர்ந்தால் தங்களிடமுள்ள ஆயுதங்கள் தங்களைக் காப்பாற்ற முடியாதென்று அவர்கள் நன்கறிவார்கள்.

அன்று பொழுதமரு முன்பே யாவரும் மனக்கலக்கத்தோடு போஜனம் செய்துவிட்டுப் படகில் நியம் ஏற்ற மலே படுத்துக்கொண்டார்கள். அதாவது யாவரும் என்ன ஆபத்து நேர்ந்தாலும் ஆயத்தமாக விருக்கக் கருதி ஆயுத பாணிகளாய் அவரவர்கள் காவல் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். சூரியன் மேற்குத் திக்கில் மறைந்ததும் அந்த இடத்தில் எங்கும் பயங்கரமான காரிருள் சூழ்ந்து கொண்டது. அன்று அமாவாசை நெருங்கியநாள். இரவு பூரணமாக வந்ததே இரு புறங்களிலு முள்ள அடவிகளி லிருந்து பயங்கரமான சத்தங்கள் கிளம்பின. எங்கும் இருளாகவிருக்கையில் இரண்டு பக்கங்களிலுமுள்ள அடவிகளுக்கிடையிலுள்ள கால்வாய் போன்ற இடத்தில் மட்டுமே வெளிச்சமிருக்கிறது. எப்போதும் அப்படியிருக்கு மிடத்தில் திடீரென்று இவர்கள் படகு ஒரு பெரிய கரிய பொருள்போல் புலப்பட்டால் அங்கு நடமாடும் ஜந்துக்கள் மிரள்வது இயற்கையே.

இச் சத்தங்களைக் கேட்டு அவர்கள் அச்சத்தோடு படகில் பதுங்கி இருபுறங்களிலும் மிக்க சாக்கிரதையோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். பலவிதமான சத்தங்கள் கேட்பதால் இன்ன மிருகங்களின் சத்தம் என்று உணர அவர்களால் முடியவில்லை. இரவு சுமார் பதினொரு மணியிருக்கும். அச்சமயம், அந்த அடவியே அதிர்ந்து போகத் தக்க ஒரு பயங்கரமான சத்தம் கிளம்பத் தொடங்

கியது. அதைக் கேட்டதே படகிலிருந்தவர்களெல்லாம் நடுக்கம் கொண்டார்கள். மறுவிநாடி பெரிய வெண்கலச் சத்தம்போல் யாவர் நெஞ்சும் கலங்கத்தக்க பயங்கரமான சிம்ம கர்ஜனைக் கேட்டது. அது கிளம்பியவுடனே அடவியில் இதுகாறும் இருந்த சத்தங்களனைத்தும் அடியோடடங்கி விட்டன.

அச்சத்தம் சாதாரணமாகவே ஐந்து மைல் தூரம் வரையில் கேட்கக்கூடியது. அத்தகைய சத்தம் பக்கத்திலிருக்கும் கரையில் சுமார் இருநூறு கஜ தூரத்திலிருந்து கிளம்பியபோது, அது எவ்வளவு பயங்கரமானதாக இருந்திருக்கும் என்பதை இதை வாசிப்போரே ஊகித்துக்கொள்ளலாகும். அது சிம்மத்தின் கர்ஜனை என்றே அறிந்து கொண்டு சத்தம் வந்த திக்கை நோக்கினார்கள்.

இவர்கள் செல்லும் பாதை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கிறது. அதன் வடபுறக் கரையில் இவர்கள் உற்று நோக்கியபோது ஒன்றுக்கொன்று சுமார் ஒரு அடி தூரத்தில் நெருங்கியதாய்க் கொள்ளிக்கட்டைகள் போல் இரண்டு வட்டமான பிரகாசங்கள் தோன்றின. அநுபவசாலிகளுக்கு உடனே அது சிங்கமென்று தெரிந்துவிட்டது. கேசவனிடம் மூன்று கோர்த்தியான கைத்துப்பாக்கிகளிருக்கின்றன. அவற்றில் தோட்டா சொருகிச் சுடவேண்டும். கேசவன் ஏக காலத்தில் மூன்று துப்பாக்கிகளையும் சுடுவதென்று தீர்மானித்தான். கேசவன் குறிப்பார்த்துச் சுடுவதில் கைதேர்ந்தவன். மாயரங்கன் சுடுவதில் அனேக பந்தயங்கள் ஜெயித்தவன். சிறையாளராயிருந்தவர்களில் ஒருவன் வேட்டையாடுவதையே வெளிக்குத் தொழிலாய்ச் செய்திருந்தவனாதலால் அவனுக்குச் சுடுவதில் மிக்க பழக்கமுண்டு. ஆகையால் இவர்கள் மூவரும் ஏககாலத்தில் அந்தச் சிங்கத்தை நோக்கிச் சுட்டார்கள்.

அதன் கண்களையன்றிக் குறிபார்க்க இவர்களுக்கு வேறு வழியில்லை. ஆகையால் மூவரும் பிரகாசமாகத் தெரியும் இரண்டு கண்களின் மையபாகத்தை நோக்கியே கூடிய வரையில் ஏககாலத்தில் சுட்டார்கள்.

உடனே அக்காடே நடுங்கும்படியான வெடிச் சத்தங்களும் பிரதித் தொனியும் கிளம்பின; மறுவிநாடி அந்த இரண்டு பிரகாசங்களும் மறைந்து விட்டன. வேறு சத்தம் உண்டாகாததனால் அச்சிங்கம் மடிந்ததென்று கருதினார்கள். பிறகு இவர்கள் நிம்மதியாய்ப் படகின் மேல் தட்டில் உட்கார்ந்து ஆளுக்கு கொஞ்சம் சாராயம் அருந்தினார்கள். ஏனெனில் அச்சிங்கத்தை கொன்ற வெற்றியைக் கொண்டாடுவதற்காக.

இவர்கள் குடித்தபின் மிக்கச் சந்தோஷமாய்ச் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கிறார்கள். சிங்கத்தை அவர்கள் சுட்டுச் சுமார் கால்மணி நேரமாயிருக்கும். அச்சமயம் அச்சிங்கம் இருந்த இடத்திலிருந்து ஒரு கோரமான சத்தம் கிளம்பியது. அதைக் கேட்டதே படகிலிருந்தவர்கள் சந்தோஷமும் குடிவெறியும் அடியோடு பறந்து விட்டன. அச்சமயம் மடியும் சிங்கத்தின் பிராணவஸ்தையாலுண்டான சத்தமே. அது உண்டானதும் தட்டென்றடங்கிவிட்டது. உடனே படகிலிருந்தவர்கள் அச்சமும் ஒழிந்தது. ஆயினும் ஒரு விநாடியே.

ஏனெனில் அச்சத்தத்தைத் தொடர்ந்தாற் போல் உண்டான பயங்கர சத்தத்தைக் கேட்டதே அவர்கள் ஆவிகளனைத்தும் சேர்ந்து ஒடுங்கிவிட்டன. முன்பு சிங்க கர்ஜனையைக் கேட்டபோது இவர்களுக்கு உண்டான பயத்தைவிட இது ஆயிரமடங்கு அதிகமாக இருந்தது. அதோடு இது வெறும் சிங்கக் கர்ஜனையாக மட்டுமில்லை. இதில் துயரம் கலந்த மிக்க பயங்கரமான கோஷ்டமிருந்தது.

படகிலுள்ள யாவர்க்கும் கேசவன் முதற்கொண்டு நெஞ்சுலர்ந்துப் பேச நா வெழவில்லை. பேச முயல்கிறவர்களுக்கு வாய் குழறுகிறது. ஏனெனில் சிங்க கர்ஜனையே யாவற்றிலும் பயங்கரமானதென்று எல்லோருமறிவார்கள். இது அதைவிட எவ்வளவோ பயங்கரமானதாகவிருக்கிறது. ஆனால் இது எந்த ஜந்துவின் சத்தமென்று தெரியவில்லை. இதனால்தான் யாவரும் மனங்குழம்பி விட்டார்கள். ஒருவர்க்கும் நாவெழாததோடு கைகால்களும் ஸ்தம்பித்து விட்டன.

ஆனால் நற்காலமாக அங்கிருந்த கைதிகளில் ஒருவன் முன்பு மாலுமியாக இருந்து ஆப்ரிகா கண்டத்தில் சில பாகங்களைப் பார்த்திருப்பவன். இப்போது அவனுக்கு மட்டுமே நாம் எந்த இடத்திலிருக்கிறோம் என்பதும், இப்போதுண்டான இத்தகைய பயங்கர சத்தம் என்னவென்றும் விளங்கிவிட்டது. அவன் நேராக கேசவனிடம் வந்து "ஐயா! எனக்கு இந்த விடங்கள் கொஞ்சம் தெரியும். என் வார்த்தையைக் கேட்பதாயின் நான் என் அநுபவத்தில் அறிந்ததைக் கூறுகிறேன். அதனால் கடவுள் தயவால் நாம் அனைவரும் உயிர் தப்பலாகும் என்று கருதுகிறேன்," என்றான்.

கேசவன் "ஐயோ கடவுளே!, இச்சமயம் எங்கள் நிலைமையை இன்னதென்று அறிவித்தால் நீயே எங்கள் கடவுள். இந்நன்றியை ஒருபோதும் மறவோம். சீக்கிரம் யாவும் கூறு. நாம் எந்த விடத்திலிருக்கிறோம்? இந்த நெஞ்சு கலங்கும் சத்தம் என்ன? எந்த மிருகத்தின் சத்தம்?" என்றான்.

அதற்கு அவன் "ஐயா! நாம் இப்போது ஆப்ரிகா கண்டத்தின் மிக்க பயங்கரமான பாகத்திலிருக்கிறோம்.

இங்கு நெடுந் தூரமட்டும் நாகரிகமான ஜனங்களைக் காண்பது அரிதாகவே இருக்கும். பெரும்பாலும் நாம் நரமாமிச பட்சணிகளிடம் சிக்காமல் தப்பித்துக் கொண்டால் நற்காலமே. அது ஒரு பக்கமிருக்கட்டும். இப்பாகம் சிங்கங்கள் வாசம் செய்யும் கொடிய அடவி. இப்போது நாம் சுட்டது ஆண் சிங்கம். அது தன் மனைவியாகிய பெண் சிங்கத்தைக் கண்டதும் பிராணன் நீங்கும்போது போட்ட கூச்சலே நாம் முதலில் கேட்ட தாழ்ந்த சப்தம்; பின்னல் கேட்ட அப்பயங்கரமான சத்தம் தன் கணவன் மடிவதைக் கண்ட பெண் சிங்கம் வஞ்சந்தீர்க்கும் ஆவேசத்தோடு போட்ட சத்தம். இதுவே உண்மை. அப்பெண் சிங்கத்திற்கு மட்டும் தன் கொழுநனைக் கொன்றவர்கள் இப்படகிலிருக்கிறார்கள் என்று வாசனையால் தெரிந்து விட்டதோ அது கட்டாயம் ஜலத்தில் நீந்திக்கொண்டு இங்கு வரும். ஆனால் இங்கு இத்தகைய அனுபவமில்லாததால் அது தெரிந்துக் கொள்ளாதென்று கருதுகிறேன். ஆனால் காற்று வாசனையால் இங்கு மனிதர் இருப்பதை அறிந்துக் கொண்டாலோ நாம் மிக்க ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்" என்றான்.

அவன் கூறியவற்றைக் கேட்டதே யாவர்க்கும் ஆவியொடுங்கிவிட்டது. ஆயினும் கன்னெஞ்சர்களாகிய கள்ளத் தலைவர்கள் எதற்கும் இரவு முழுவதும் மிக்க ஜாக்கிரதையாக இருப்பதென்று தங்களுக்கு ஐவர்களுக்குள்ளாகவே முறை போட்டுக்கொண்டு காவல் இருப்பதென்று தீர்மானித்தார்கள். ஆனால் மேற்கண்ட சங்கதிகளைக் கூறிய ஆள் இப்பிரதேசங்களில் கொஞ்சமேனும் அனுபவமுடையவனாக விருப்பதால் அவனை மட்டும் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள்.

இரவு நெடுநேரம் வரையில் அப் பெண்சிங்கத்தின் துக்ககரமான கர்ச்சனை காடே அதிர்ந்துபோகும் விதமாய் சப்தித்துக்கொண் டிருந்தது. கடைசியில் அச் சத்தம் வர வர ஓய்ந்து அடங்கிவிட்டது; முடிவில் பொழுது விடிந்து சூரியோதயமாகி நான்கைந்து நாழிகைகள் கழிந்த பிறகே அந்த அடவிகளில் சரியான வெளிச்சம் தோன்றும்.

காலை சுமார் ஒன்பது மணி யிருக்கும். அதன் பிறகே படகிலுள்ளோர் கரைக்குச் செல்ல தைரிய முடையவர்களானார்கள். அப்போதும் தைரியசாலிகளான இரண்டொருவர் சிறு படகிலேறி கரையில் இறங்கிச் சற்று நேரம் அங்கு தங்கியிருந்த பிறகே மற்றவர்கள் தைரியத்தோடு கரைக்குச் சென்றார்கள். கரையில் சுமார் ஐம்பது கஜ தூரத்தில் இரவு சுடப்பட்ட அப் பிரம்மாண்டமான ஆண் சிங்கம் வீழ்ந்து கிடந்தது. இவர்கள் செலுத்திய மூன்று குண்டுகளில் இரண்டு அதன் மண்டையில் பாய்ந்து விட்டிருந்தன. இன்றேல் அது மடிந்திராது.

அவர்கள் அச் சிங்கத்தின் தோலை யுரித்து அதை யொரு ஜெயவிருதாக வைத்துக் கொண்டார்கள். அன்று பகலும் பாதைமுழுதும் முன்னாள் போன்றே யிருந்தது. கரை உயரமாகவே யிருந்தது. இதனாலும் இன்னொரு காரணத்தாலும் அது ஒரு கால்வாயே யென்றும் உள்ளே எங்கோ ஒரு ஆற்றிலிருந்து அதில் சலம்வந்து கலக்கிறதென்றும் தெரிந்தது. ஏனெனில் போகப்போக ஜலத்தில் மாறுதல் தோன்றியது. உப்பு ஜலம் சாதாரணமாக அருந்தும் ஜலமாக மாறிவிட்டிருந்தது. மூன்றாவது நாளும் அம் மார்க்கமே படகு சென்றது. அன்று ஒரு விசேஷமும் நேரவில்லை. ஆனால் இரண்டு விஷயங்கள் அவர்களுக்குத் திகிலை யுண்டாக்கின. ஒன்று—போகப்போக கால்வாயின் அகலம் குறைந்து கொண்டே போவதாகத் தெரிந்தது.

இரண்டாவது மிக்க ஆபத்தானது—ஆழம் குறையத் தொடங்கியது. படகிற்குப் போதுமான ஆழமில்லா விட்டால் படகு செல்லாது. அதோடு படகை விட்டு விட வேண்டியதே.

மறு நாள் பகல் இரண்டு மணிக்குப் படகு வலிப்பதால் செல்வதாகவில்லை. ஆகையால் கரையிலிருந்த மரக் கிளைகளை வெட்டி அவற்றைக் கொண்டு படகைத் தள்ள முயன்றார்கள். மாலை ஆறு மணிக்குக் கால்வாயில் ஜலம் மிக்க குறைவாய்விடப் படகு ஒரு மண்மேட்டில் சிக்கிக் கொண்டு நகர்த்த முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது. என்ன செய்வார்கள் பாவம்? யாவரும் மனமுடைந்து விட்டார்கள், அந்த இரவு அவர்கள் எப்படி எந்த நிலைமையிலிருந்தார்களென்பதை நாம் கூறமுடியாது. இரவு முழுமையும் பயங்கரமான மிருகங்களின் சத்தங்கள் காடே அதிர்ந்து போகத்தக்கனவாயிருந்தன.

பொழுது விடிந்ததும் யாவரும் ஒன்று கூடித் தங்கள் நிலைமையைப்பற்றி ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள் என்ன செய்வதென்று ஒருவர்க்கும் ஒரு யோசனையும் புலப்படவில்லை. இப்போது படகை யங்கேயே விட்டு விடவேண்டியதாய் விட்டது. அதிலுள்ள பொருள்களை முக்கியமாய் உணவுப் பொருள்களை மூட்டைக் கட்டித் தூக்கிக் கொண்டுபோக வேண்டும். எந்தத் திக்கில் செல்கிறது என்று தெரியவில்லை. அத்தேசம் பெரும்பாலும் ஆப்ரிகா கண்டமாகவே யிருக்க வேண்டுமென்று மட்டும் அவர்களுக்குத் தெரியும். அக் கண்டத்தின் சில பாகங்களில் கடலோரப் பிரதேசங்களில் நாகரீக ஜனங்கள் குடியேறி யிருக்கிறார்கள். அப் பாகங்கள் இப்போது தாங்களிருக்குமிடத்தி லிருந்து எவ்வளவு தூரத்தில் எத் திக்கி லிருக்கிறது என்று தெரியாது. எப்படியாயினும் இனி

அங்கேயே இருப்பதில் பயனில்லை. கடைசியில் தாங்கள் வடக்கிலிருந்து வந்தபடியால் ஆப்ரிக்காவின் பெரும்பாகம் தென் பாகத்தில் தான் இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கொண்டு தெற்குநோக்கிச் செல்வதென்று தீர்மானித்தார்கள். இப்போதவர்கள் இருக்குமிடம் கடலோரத்திலிருந்து குறைந்தது அறுபது எழுபது மைல் தூரத்திலிருக்கும்.

36-வது அத்தியாயம்

மறுநாள் காலை எழுமணிக்கு யாவரும் பூரண ஆகார மருந்தியபின், இருக்கும் பண்டங்களின் முக்கியமானவற்றை மூட்டை கட்டத் தொடங்கினார்கள். ஆகாரப் பொருள்கள் இரண்டு நாட்களுக்கே வரக்கூடியவையாக விருந்தன. அதுவும் சிக்கனமாகச் செலவு செய்தால் தான் இரண்டு நாட்களுக்கு வரும். அவற்றையும் அவரவர்கள் படுக்கைகள் உடைகள் முதலியவற்றையும் ஆயுதங்களையும் மட்டுமே யெடுத்துச் செல்வதென்று தீர்மானித்தார்கள். இரண்டு வேளைகளுக்கும் போதுமான ஆகாரத்தைச் சமைத்து எடுத்துக் கொண்டார்கள்.

கடைசியில் யாவற்றையும் சிப்பங்களாகக் கட்டிக்கொண்டார்கள். இவர்கள் பன்னிருவரும் மூட்டைகளைச் சமமாகத் தூக்கிக்கொண்டு மிக்க துயரத்தோடு படகை விட்டுப் புறப்பட்டார்கள்.

இவர்கள் அக் கால்வாயின் கரையை விட்டுப் புறப்பட்டுச் சற்று தூரம் செல்வதற்குள் பூமி சரிவாகச் செல்கிறதென்று தெரிந்தது. எங்கும் பலவிதமான விருக்ஷங்களும் குத்துச் செடிகளும் நெருங்கி யிருக்கின்றன, அவற்

றிற் கிடையில் இயற்கையாக அமைந்துள்ள இடை வெளியின் வழியாகவே இவர்கள் செல்லவேண்டும். ஏனெனில் மனிதர் சென்று பழக்கமான வழி, ஒரு கொடி வழி கூட அகப்படவில்லை. திக்கே இவர்களுக்கு வழிகாட்டவேண்டும். ஆகையால் சூரியன் நிலையைப் பிடித்துக்கொண்டு தெற்குத் திக்கே செல்வதென்று துணிந்து அவ்வாறே சென்றார்கள்.

போகப்போக எங்கும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் கானாறுகளுமாகவே யிருந்தன. இவர்கள் பல சிறு ஆறுகளைக் கடந்து செல்லவேண்டியதாயிற்று. மாலை சுமார் நான்கு மணியாயிற்று. இதுகாறும் எங்கும் காடேயொழிய மனிதர் நடமாடுகிறார்களென்று சந்தேகிக்கத் தக்க அத்தாட்சிகள் ஒன்றேனும் அகப்படவில்லை. இப்போது அவர்கள் எதிரில் ஒரு பெரிய குன்று சமீபத்தில் தோன்றியது.

அச் சமயம் கேசவன் அங்கு யாவரையும் நிற்கச் செய்து, "நண்பர்களே! இப்போது பிற்பகல் கிட்டத்தட்ட நான்கடிக்கப்போகிறது. இப் பிரதேசங்களில் பொழுது சீக்கிரத்தில் அமர்ந்து விடுகிறது என்பதைப் பிரத்தியட்சமாகப் பார்த்திருக்கிறோம். இப்போது நாம் இதைக் கடந்து சென்றால் பூமியின் நிலைமை எவ்வாறிருக்குமோ நமக்குத் தெரியாது. இங்கு ஒரு பெரிய குன்றும் அருகில் ஒரு நீரோட்டமும் செல்கிறது. இக் குன்றின் அருகில் பார்ப்போம். இரவு நாம் நம்மைத் துஷ்டப் பிராணிகளிட மிருந்து காப்பாற்றிக்கொள்ள ஏதேனும் வசதியான இடம் இருக்கிறதாவென்று பார்ப்போம். இருந்தால் இரவை யிங்கே கழித்து விடலாம்," என்றான்.

யாவரும் அதற்குச் சம்மதித்ததும் அக்குன்றினடியில் சென்று சுற்றிப்பார்த்தார்கள். அங்கு செங்குத்தான ஒரு

உயர்ந்தவிடத்தில் ஒரு குகையின் முகத்துவாரம் தெரிந்தது. அதன் வாயிலில் குத்துச் செடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அங்கு நன்ருகப் பார்த்தபோது மிருகங்கள் எதுவும் நடமாடவில்லை யென்று தெரிந்தது. அதன்மேல் கேசவனும் இன்னும் மூவரும் தங்களிடமிருந்த கருவிகளைக்கொண்டு ஒரு பந்தம் கொளுத்திக்கொண்டு தோட்டாக்கள் போட்ட துப்பாக்கிகளோடு அக் குகைக்குள் நுழைந்தார்கள்.

அக்குகை சுமார் அறுபது கஜ நீளமிருந்தது. அகலம் ஆறடி முதல் எட்டடிக்குள் இருக்கும். வாயிற்படி நான்கடி உயரமும் பத்தடி தூரத்திற்கப்புறம் சுமார் எழுடிக்கதிகமான உயரமு மிருந்தது. அதன் கோடியில் சுமார் பத்தடி அகலமும் பன்னிரண்டடி நீளமுமுள்ள கூடம் போல் இடம் இருந்தது.

உள்ளே சென்றவர்கள் மேற்கண்ட விவரங்களைக் கண்டதும் திருப்தியோடு திரும்பி வெளியில்வந்து "இங்குதான் நாம் இரவு தங்க மிக்க வசதியான இடமிருக்கிற" தென்று மற்றபேர்க்கு அறிவித்தார்கள் அதன்மேல் யாவரும் குகைக்குள் சென்று அதன் கோடியிலிருக்கும் விசாலமான விடத்தில் தங்கள் மூட்டைகளை யெல்லாம் வைத்துவிட்டுச் சில பாத்திரங்களை எடுத்துச்சென்று சிறு ஆற்றிலுள்ள நீரில் தங்களுக்கு இரவிற்கு வேண்டுமானதைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டார்கள்.

இப்போது இரவு தங்க வசதியான இடமகப்பட்டது. ஆனல் ஒரு பெருங்குறை; அதாவது, குகையின் வாயிற்படிக்கு மூடியில்லை. இரவில் உள்ளே மனிதர் இருக்கும் வாசனையை உணர்ந்து புலி சிங்கம் முதலிய துஷ்டமிருகங்

கள் வந்துவிடலாகும். ஆகையால் குகையின் வாய்ப் புறத்தில் எதுவும் நுழையா வண்ணம் காப்புச்செய்ய வேண்டியது அவசியமாயிற்று. அதற்காக அங்குள்ள பெரிய கற்களைப் புரட்டிவந்து குகைக்குள் சேர்த்துக் கொண்டு யாவரும் உள்ளிருந்தபடி குகையின் வாயை யடைத்துவிட்டார்கள். அதுமட்டும் போதாதென்று இரவு முழுமையும் முன்றுபோட்டுக்கொண்டு இரண்டுபேர் அங்கு கெட்டித்த துப்பாக்கிகளோடு காவல் இருக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

இவர்கள் வேலைகளைத்தும் முடிவதற்கும் பொழுது அமர்வதற்கும் சரியாயிருந்தது. இவர்கள் குகையின் வாய்ப்புறத்தைச் சரியாய் அடைத்து விட்டு உட்சென்று ஆகாரமருந்தத் தொடங்கினார்கள். அதற்குள் பொழுது அமர்ந்து எங்கும் காரிருள் சூழ்ந்தது. இவர்கள் போஜனம் செய்துகொண்டே யிருக்கிறார்கள். அச்சமயம் அக் குகையே அதிர்ந்து போகத்தக்க விதமாய் மிக்க பயங்கர மான ஒரு சத்தம் கிளம்பியது, அதுவும் சற்று சமீபத்தி லிருந்து வருவதாகவே புலப்பட்டது.

அந்தோ! அதைக் கேட்டதே அவரவர்கள் காத்தி லிருந்த ஆகாரம் கைநழுவி விழுந்துவிட்டது. நெஞ்சு உலர்ந்துவிட்டது. பேச நா வெழவில்லை. கண்கள் உடனே பிதுங்கி வெளிவந்து விடும்போல் தோன்றின. யாவரும் திறந்தவாய் திறந்தபடி விழித்தகண்கள் விழித்தபடி மிக்க நடுக்கத்தோடு ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள்.

அச்சத்தம் இன்ன சத்தமென்று தெரியாததால் அவர்கள் பீதி யளவு கடந்ததாய் விட்டது. கைதிகளில் இரண்டொருவர்க்கு—முன்பு மாலுமிகளா யிருந்தபோது ஆப்பிரிக்காவிற்கு வந்திருந்தவர்களுக்கு—மட்டுமே அது

இன்ன சத்தமென்று தெரிம். அவர்கள் "சகோதரர்களே! இது யானைகளின் சத்தம்; இந்தக் காட்டில் யானைகளிருக்கின்றன...." என்றதே யாவரும் ஆவிசோர்ந்து விட்டார்கள். மற்றப் பேர்களுக்கு யானை எல்லா மிருகங்களிலும் பெரியதென்றும் மனிதனை இரண்டாகக் கிழித்தெறிந்து விடும், அல்லது தன் துதிக்கையால் பற்றிக்கொண்டு ஒரு காலால் மிதித்துக் கொன்று விடும் என்ற வரையில்தான் தெரியும். மற்றப்படி படத்தில் மட்டுமே அவர்கள் யானையைப் பார்த்திருக்கிறார்கள்.

கேசவன் அச்சத்தம் யானைகளின் சத்தம் என்று கூறிய ஆட்களை நோக்கி "நண்பர்களே! அவற்றால் நமக்கு ஆபத்துண்டாகுமோ? அப்படியாயின் நாம் எப்படி அதைத் தடுக்கலாகும்? அவை குகைக்குள் வரமுடியாதல்லவா? எல்லாம் விவரமாகக் கூறுங்கள்," என்றான்.

அவர்களில் ஒருவன் "யானை பிரம்மாண்டமானதால் குகைக்குள் வரமுடியாது. நாம் முன்னமே குகையின் வாயை மூடிவிட்டதால் நாம் இங்கிருப்பது அவைகளுக்குத் தெரியாது. நாம் இதற்குள்ளாகவே யிருந்தால் அவற்றால் நமக்கு ஆபத்து நேராது. ஆனால் ஒரு விஷயம், இவைகள் நடமாடும் பிரதேசத்தில் கட்டாயமாகச் சிங்கங்கள் வரும்," என்றான்.

கேசவன் "இரவில் அவை குகைக்குள் வரா; விடிந்தால் மனிதர் கண்களுக்கு அகப்படாமல் போய்விடும்," என்றான். கடைசியில் பீதியோடு இராப்பொழுதை அக்குகையில் கழித்தார்கள். பொழுது விடியவிடிய எல்லா சத்தங்களும் அடங்கிவிட்டன. விடிந்ததும் அத்தகைய பயங்கரமான காட்டைச் சீக்கிரம் கடந்து போய்விட வேண்டுமென்பது அவர்கள் புத்திக்குப்பட்டது. ஆகையால் காலை ஏழு மணிக்கு முன்பே அங்கிருந்து புறப்பட்

டார்கள். இவர்கள் பன்னிரண்டு பேராயினும் இவர்களில் மூன்று பேர் துப்பாக்கிகளோடு இருநூறு முந்நூறு கஜங்கள் முன்னாடி எச்சரிக்கைக்காகச் செல்வதென்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதன்படி நட்டிக் கந்தனும் வேறிருவரும் முன்னே சென்றார்கள். ஏதேனும் அபாயம் நேரிடுமென்று தோன்றினால் அவர்களில் ஒருவன் வெடி தீர்க்கவேண்டியதென்று இவர்களுக்குள் ஏற்பாடு.

இவர்கள் கையிலிருந்த சொல்ப ஆகாரத்தில் கொஞ்சம் காலைப் போஜனமாகப் புசித்தபின்பே அங்கிருந்து புறப்பட்டார்கள். சுமார் ஐம்பது மைல் தூரம் சென்றார்கள். அதற்குள் குன்றுகள் பள்ளத்தாக்குகள் அடர்ந்த அடவிகள் முதலியவை கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்து கொண்டே போய்க் கடைசியில் காடு மலைகளைக் கடந்து வெளிப் பிரதேசமான சமபூமியிற் பிரவேசித்தார்கள். பூமி :ாஸ்திர அனுபவ முடையவர்களுக்கு இனிச் சீக்கிரத்தில் ;ன சஞ்சாரமான பிரதேசத்தைக் காணலாம் என்று தைரியம் உண்டாயிற்று.

இவ்வளவிலேயே அவர்களுக்குச் சந்தோஷமுண்டாய் விட்டது. ஏனெனில் எங்கே ஆகாரம் முடிந்து போய் இந்த அடவிகளில் நாம் பட்டினியால் மடிவோமோ என்று அவர்கள் திகில்கொண் டிருந்தார்கள். மணி சுமார் பன்னிரண்டாயிற்று. அப்போது ஒரு தோப்பைக் கண்டார்கள். அதில் ஒரு குளம் இருந்தது. அது புராதனமாகக் காணப்படினும் அதன் படிகளால் மனிதர் வேலை செய்து அது உண்டாக்கப் பட்டதென்று தெரிந்ததே அவர்கள் பின்னும் சந்தோஷ மடைந்தார்கள். அங்குள்ள குளிர்ச்சியான நிழலில் தங்கி ஆகாரம் அருந்திச் சுமார் இரண்டு மணிக்குமேல் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

பிற்பகல் இரண்டு மணிக்கு விதியில்லையென்று யாவரும் அத்தோப்பை விட்டுப் புறப்பட்டு அடவியில் நுழைந்து சென்றார்கள், அங்கிருந்து தோன்றிய பாதையே சென்றார்கள். சுமார் இரண்டு மூன்று மைல் தூரம் செல்வதற்குள் பூமி சமவெளியாக மாறுவதையும் காடு வரவாக் குறைந்துகொண்டே செல்வதையும் கண்டார்கள். கடைசியில் பொழுதமரும் வேளையில் சில விருட்சங்கள் கும்பலாக விருக்கும் ஒரு இடத்தில் தங்கத் தீர்மானித்தார்கள். இன்னும் போதுமான வெளிச்சம் இருப்பதால் கேசவன் சிலரை மரத்தின்மேல் ஏறிப் பார்க்கும்படிக் கூறினான்.

அவ்வாறே ஏறிப் பார்த்தவர்கள் இறங்கி வந்து "இங்கிருந்து அரை மைல் தூரத்திற்கப்பால் வெளிப் பிரதேசமே தெரிகிறது. அதற்கப்பால் தூரத்தில் ஆங்காங்கு தோட்டங்கள் போலவும் வேலிகள் போலவும் காணப்படுகின்றன. மனித சஞ்சாரம் என்னமோ காணப்படவில்லை," என்று கூறினார்கள். அன்று இரவு அங்கேயே தங்குவதென்று தீர்மானித்தார்கள். கேசவன் "யாவரும் கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொண்டு மூட்டைகளை மரக்கிளைகளில் கட்டிவிட்டு இராக்காலத்தை மரத்தின் மேல் கழிப்பதுதான் நலம். ஏனெனில் இங்கு ஒரு சமயம் துஷ்ட மிருகங்கள் இருக்கலாகும்," என்றான். யாவரும் சற்று நேரம் ஆலோசித்தபின் அப்படிச் செய்வதே நலம் என்று தீர்மானித்தார்கள்.

சுமார் மணி ஆறடிப்பதற்குள் யாவரும் ஆகாரம் எடுத்துக் கொண்டபின் கொஞ்சம் வெளிச்சமிருக்கும்போதே மரங்கள் வசதியாக இரண்டு கிளைகள் பிரியும் விலாசமுள்ள இடங்களைப் பார்த்துக்கொண்டு இருள் சூழ்வதற்குள் இரண்டு மூன்று மரங்களில் உட்கார்ந்துகொண்டு

முதுகைக் கொடியல்லது கயிறுபோட்டுச் சாய்ந்திருக்கும் கிளையில் கட்டிக்கொண்டார்கள்.

இரவு போகப் போகத் துஷ்ட மிருகங்களின் கூச்சல்கள் கிளம்பத் தொடங்கின. சுமார் பன்னிரண்டு மணி ஆயிற்று. அச்சமயம் சிங்கங்களின் கர்ச்சனை கேட்கத் தொடங்கியது. அதைக் கேட்டதே யாவரும் நடுக்கங் கொண்டார்கள். சற்று நேரத்திற்குள் பலவிதமான காட்டுமிருகங்கள் எங்கும் பயந்தோடத் தொடங்கின. இவர்கள் பதுங்கி யிருக்கும் மரங்களினருகில் இரண்டு மூன்று சிங்கங்கள் வந்தன. அவற்றின் கண்கள் கொள்ளிக் கட்டைகள் போல் ஜொலித்தன. மரங்களிலிருப்பவர்கள் இராப்பொழுதைக் கழிப்பதற்குள் அவர்களுக்கு நரக வேதனையாய் விட்டது.

கடைசியில் பொழுது விடியும் சமயம் மிருகங்களின் சந்தடி யடங்கத் தொடங்கியது. பொழுது விடிந்து சற்று நேரம் வரையில் அவர்கள் மரத்திலிருந்து இறங்கவில்லை. கடைசியில் இறங்கியபின் இருக்கும் ஆகாரத்தில் கொஞ்சம் அருந்தியபின் அங்கிருந்து புறப்பட்டார்கள். சுமார் ஒரு மைல் தூரம் சென்றபோது பாதை இரண்டாகப் பிரிந்தது. வலது பக்கந்தான் கடற்கரை இருக்கிறதென்று இவர்களுக்குத் தெரியும். ஆகையால் அப்பக்கம் செல்வது எப்போதும் நலமென்று கருதி அவ்வழியே சென்றார்கள்.

போகப் போக பூமியின் காட்டுத் தன்மை மாறிச் சம பூமியும் காலுறுகளும் தோன்றின. சுமார் பதினொரு மணிக்கு ஒரு இடத்தில் மனிதரால் பண்படுத்தப்பட்ட பூமியைக் கண்டார்கள். "இன்னும் கொஞ்சம் தூரம் சென்றபோது பூமி சதுரம் சதுரமாய்க் கரைகட்டப்பட்டு வரப்பு போடப்பட்டிருப்பதையும் அதற் கப்புறம் மண்வெட்டி முதலிய ஏதோ கருவிகளால் பூமி கிளறப் பட்டிருப்பதை

யும் கண்டார்கள். இக்குறிகளால் ஜனங்கள் வசிக்குமிடத்தை நெருங்குகிறோம் என்று உணர்ந்தார்கள்.

ஆனல் அதை அறிந்ததால் அவர்கள் பூரண சந்தோஷமடையவில்லை. ஏனெனில் ஆப்ரிக்கா கண்டத்தில் கடலோர முன்ளப் பிரதேசங்களில் சிற்சில பாகங்களில் மட்டுமே தங்கள் நாட்டு நாகரீக ஜனங்கள் குடியேறி இருக்கிறார்கள் என்பதும், உள் நாட்டில் அத்தேச பூர்வீகச் சனங்கள் சுயாதீனமாய் வசிக்கிறார்கள் என்பதும், அதிலும் அங்குள்ள சில ஜனங்கள் மிக்க அநாகரீகமான காட்டுமிராண்டிகளென்பதும், அவர்களில் மனிதரையே கொன்று தின்னும் நரமாமிச பட்சணிகள்கூட சில பாகங்களில் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் நன்றாக அறிந்த விஷயமே.

இக்காரணத்தால் இப்போது நாம் எத்தகைய மனிதர்களிடம் சிக்கிக்கொள்வோமோ என்ற பெரிய சந்தேகம் இவர்களுக்குள் உண்டாகி விட்டது. இதனல் முன்னேக்கிச் செல்ல அவர்களுக்குக் கால் எழவில்லை. என்ன செய்வார்கள்? போகாவிட்டாலும் விதியில்லை. ஏனெனில் இருக்கிற ஆகாரம் இன்னும் ஒருவேளைக்கு, இன்றிக் குறைந்த அளவாய் உபயோகித்தால் இரண்டு வேளைக்கே வரும். ஆகையால், எப்படியாயினும் சரி நேரே செல்லவேண்டியதே யென்று தீர்மானித்தார்கள். கேசவன் இருக்கிற ஆயுதங்களைக் கணக்கிட்டுப் பார்த்தான். தாங்கள் கொண்டு வந்த நான்கு கைத்துப்பாக்கி களும் கொஞ்சம் தோட்டாக்களுமே யிருக்கின்றன. கத்தி ஈட்டிகளிருக்கின்றன. ஆயினும் ஆட்கள் ஆகக்கூடிப் பன்னிருவரே. தங்களிலும் அதிகமானவர்கள், அதிலும் காட்டு மிராண்டிகள் வந்து சூழ்ந்து கொண்டால் என்ன செய்வது? இவை யாவும் யோசிக்கும்போது தங்கள் நிலைமை மிக்க அபாயகரமானதேயென்று யாவரும் உணர்ந்தார்கள்.

அதன்மேல் கேசவன், எத்தகைய ஆபத்து நேர்ந்தாலும் ஒவ்வொருவரும் மிக்க தந்திர சாமர்த்தியத்தையே உபயோகிக்க வேண்டுமென்றும், எடுத்ததே யுத்தம் செய்யலாகாதென்றும் யாவர்க்கும் உபதேசம் செய்தான். அதோடு ஒரு சமயம் தாங்கள் அத்தகைய துஷ்டரான காட்டு மிராண்டிகள் அல்லது நரமாமிச பட்சணிகளிடம் சிக்கிக்கொண்டாலும் தந்திரத்தால் தப்ப முயலவேண்டுமென்றும் இன்னின்ன மாதிரி அபிநயம் செய்வேண்டும். இன்னின்ன விதமாக நடக்கவேண்டும் என்றும் சில தந்திரமான ஆலோசனைகளை யாவர்க்கும் கற்பித்தான். அதோடு சில சமிக்கைகளையும் போதித்தான்.

37-வது அத்தியாயம்

கேசவன் கூறிய தந்திர மார்க்கங்களாகிய உபதேசங்களால் யாவரும் தைரிய மடைந்தார்கள். கேசவன் இன்னொரு ஆலோசனை செய்தான். அதாவது "நாம் ஜன சஞ்சாரமான விடத்தை நெருங்குகிறோம் என்பது எப்போது தெரிகிறதோ உடனே அதற்குச் சமீபமானஒரு இடத்தில் நமது ஆயுதங்களை யெல்லாம் மறைத்து ஒளித்து வைத்துவிட வேண்டும். ஏனெனில் நம்மிலும் எண்ணிக்கையில் குறைந்த ஆட்களாக விருந்து நமக்குத் தீங்கு செய்யத் தொடங்கினால் பயந்து ஓடுவதுபோல் ஓடிவந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எதிர்த்துத் தப்பித்துக் கொள்ளலாம். அப்படிக்கின்றி அதிகம் பேர் இருந்தால் நான் கூறியமாதிரி அச் சமயம் இணங்கி விட்டவர்கள் போலும் மிக்க கோழை

கள் போலும் அபிநயித்துப் பிறகு சமயம் பார்த்து நமது சமிக்ஞைகளின்படி யோசனை செய்துகொண்டு சிலரேனும் இரகசியமாக வந்து ஆயுதங்களை எடுத்து வந்து மற்றபேர்க்கும் அளித்தால் துணிகரமாய்த் தப்பித்துக்கொள்ளலாம்," என்றான்.

அதன்படியே யாவரும் ஒப்புக் கொண்டார்கள். இவர்கள் ஆலோசனையில் சுமார் இரண்டு மணி நேரம் கழிந்தது. மணி பன்னிரண்டாயிற்று. அங்கிருந்து புறப்பட்டார்கள். சற்று தூரம் சென்றபோது ஒரு சிறிய ஆறு குறுக்கே வந்தது. அதன் நிலைமையால் அது அதிக ஆழமில்லை என்று தெரிந்தது, சுலபமாகவே அதைக் கடந்து கரை சேர்ந்தார்கள். அங்கிருந்து சற்று தூரம் செல்வதற்குள் விவசாயம் நடக்கும் பூமிகள் புலப்பட்டன. ஒருவிதமான செடிகளில் சிறு பூசணிக்காய்கள் போன்ற காய்கள் காய்த்திருப்பதுபோல் தோன்றின. அப்போது நல்ல வெயிற்காலம். அருகிற்சென்று இரண்டொரு காய்களைப் பறித்துப் பார்த்த போது அவை இனிய சுவையுள்ள வெள்ளரிக் காய்கள் என்று தெரிந்தன.

அவரவர்கள் பிரியப்படி அவைகளைப் பறித்துத் தாகமும் பசியுமடங்கப் புசித்தார்கள். அங்கிருந்து சற்று தூரத்தில் ஒரு பெரிய தோப்பு தோன்றியது. இவர்கள் அத்தோப்பின் ஓரத்திற் செல்வதற்குள் வழியில் சாமையும் வேர்க்கடலையும் பயிரிடப்பட் டிருப்பதைக் கண்டார்கள். தோப்பின் ஓரத்தில் சென்றதே ஒரு வேலி யிருந்தது. கேசவன் யாவரையும் அங்கு ஒரு மறைவான விடத்தில் உட்காரவைத்துவிட்டு "நாங்கள் வருமட்டும் ஜாக்கிரதையாய் இங்கேயே இருங்கள்," என்று கூறிவிட்டு, சட்டிக் கந்தனையும் மாயரங்கனையும் அழைத்துக் கொண்டு தோப்புக்குள் நுழைந்து சென்றான்.

சென்றவர்கள் ஒருமணி நேரம் வரையில் வாராதிருக்கவே மற்றபேர் மிக்க பீதியடைந்தார்கள். ஆனால் சுப்பனும் தனக்குத் தானப்பனும் "பீதியடையவேண்டிய காரணம் ஒன்றுமேயில்லை. சமீபத்திலேயே இந்த நாட்டுச் சனங்களின் வாசஸ்தலம் இருக்கவேண்டும் என்று என் தந்தை யூகித்துக்கொண்டார். ஆகையால் அந்த விடத்தை முன்னாடி வேவு பார்த்து வர அவர்கள் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் துப்பாக்கி இருக்கிறது. அப்படியவர்களுக்குத் தாங்களாகவே நீக்கிக் கொள்ள இயலாத ஆபத்து நேர்ந்தால் உடனே துப்பாக்கி வெடிகள் கிளம்பும். தட்சணம் நாம் ஆயுதங்களோடு செல்லவேண்டும்," என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட பின்பு கள்ளர் கிம்மதி அடைந்தார்கள். அதற்குள் கேசவனும் மற்றவர்களும் திரும்பி வந்தார்கள். அங்கிருந்த அனைவரும் என்ன சங்கதி என்று கேட்பது போல் ஆவலோடு அவர்கள் முகங்களை நோக்கினார்கள். அவர்கள் முகக்குறியால் அவர்கள் சந்தோஷமாக வந்ததாகவும் தெரியவில்லை, பீதியும் துயருமடைந்தவர்களாகவும் புலப்படவில்லை. ஆயினும் சந்தேகமும் மனக் கலக்கமும் உடையவர்கள்போல் மட்டும் தோன்றியது.

கேசவன் அவர்களை நோக்கி "நண்பர்களே! இத் தோப்பு நெடுந்தூரம் செல்கிறது. இதன் மறுபக்கம் சுமார் அரைக்கால் மைல் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. கிராமம் என்பது அநாகரிகமான குடிசை வீடுகளே. சுமார் நூறு வீடுகளுக்குக் குறைவாகவே யிருக்கலாகும். அவ்வீடுகளின் நிலைமையை நோக்க அங்கு வசிக்கும் ஜனங்கள் மிக்க அநாகரீகமான காட்டுமிராண்டிகளே என்று தெரிகிறது. வீதியில் சில பிள்ளைகள் விளையாடு

வதையும் இரண்டொரு மாதர்கள் ஒரு வீட்டிலிருந்து ஒரு வீட்டிற்குச் செல்வதையும் கண்டோம். அவர்கள் மாதிரியைப் பார்த்தால் பேய்கள் போலவே காணப்படுகிறது. கடைசியில் நாம் ஒருவித இராக்ஷதர் வாசஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தோமோ வென்று எனக்கே அச்சமாயிருக்கிறது. ஆகையால் நமது ஆயுதங்களை எல்லாம் கையில் எடுத்துக்கொண்டே செல்வதுதான் நலம் என்று நினைக்கிறேன். ஏனெனில், ஒரு சமயம் நமக்கு அவர்கள் தீங்கு செய்யக் கருதினால் நம்மாலானவரை ஒரு கை பார்க்கலாம்," என்றான்.

ஈட்டிக்கந்தன்:—ஏன் அப்படியவர்களிடம் நாம் போய்ச் சிக்கிக் கொண்டு பிறகு சண்டையிட வேண்டும்? அங்கு எத்தனை பேர் இருக்கிறார்களோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களோ, அவர்களிடம் எத்தகைய ஆயுதங்களிருக்குமோ, இவை எல்லாம் நமக்கென்ன தெரியும். ஒரு சமயம் அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தால் நாம் அனைவரும் மடியவேண்டியதுதானே. நான் இந்தத் தேசத்தைப் பற்றிச் சில சங்கதிகள் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கு பல மாதிரி குரூர ஜனங்களிருக்கிறார்களாம். சிலர் விஷம் வைத்த அம்புகள் வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். அது தேகத்தில் பட்ட இரண்டொரு விநாடிகளில் ஆள் மடிந்து போகிறானும். நாம் எதையும் அறியாமல் சிங்கத்தின் குகைக்குள் நுழைவது பிசகு. இங்கு ஜனசஞ்சார மிருப்பதால் சுற்றுப்பக்கங்களில் சற்றுதூரம் வரையிலாவது துஷ்ட மிருகங்கள் நடமாடமாட்டா. ஆகையால் இருள் சூழ்ந்ததே நாம் பேசாமல் இந்த ஊர் ஓரமாகவே இதைக் கடந்து அப்புறம் தூரத்தில் சென்று அங்கு வேண்டுமாயின்

இரவு தங்கியிருந்து விடிந்தபின் போகலாம் என்பதே என் யோசனை," என்றான்.

மாயரங்கன்:—"பேசாமல் நாம் ஆயுதங்களை அணிந்துபோய் இந்த அநாகரீகமான மனிதரைத் தாக்கி விரட்டிவிட்டு அங்கு ஏதேனும் ஆகாரப்பொருள்கள் அகப்பட்டால் எடுத்துக்கொண்டு செல்லலாம்," என்றான்.

தளுக்கு தானப்பன்:—"இவையாவும் அவசரமான ஆலோசனைகள். இது நமக்குப் புதுநாடு. இங்கிருக்கும் வழிகள் ஜனங்கள் முதலிய ஒன்றுமே நமக்குத் தெரியா. இத்தகைய சமயங்களில் நாம் மிக்க ஜாக்கிரதையோடு வேலைசெய்ய வேண்டும். 'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவ மென்ப திழுக்கு,' என்றபடி எதையும் முன்னடி ஆலோசனை செய்தே செய்யத் துணியவேண்டும். கண்மூடித் தனமாய்ப்போய் முன்பின் விவரமறியாத ஒரு ஆபத்தில் சிக்கிக் கொள்வது தைரியமாகாது, வீரத்தன்மையுமாகாது. நம்மால் கூடியவரையில் ஆபத்தில் சிக்காமல் தப்பிக்க முயலவேண்டும். அப்படி ஆபத்து நேர்ந்துவிட்டால் அப்போது நமது தைரிய நடக்கையை வெளியிட வேண்டும்," என்று கூறியதும் சட்டென்று பேசாமலிருங்களென்று கையால் காட்டிவிட்டு ஒரு திக்கை நோக்கிச் சந்தடிசெய்யாமல் மரங்களி னிடையில் மறைந்து கொண்டே ஓடினான்.

அவன் நடக்கையைக் கண்டு யாவரும் வியப்பும் கலவரமுமடைந்து நாற்புறங்களிலும் நோக்கினார்கள். சுட்டிக்கந்தன் தானப்பன் சென்ற திக்கையே உற்று நோக்கிக் கொண்டிருந்தவன், "ஆ! அதோ அத்திக்கில் யாரோ ஒரு ஆளோ மிருகமோ ஓடுவதுபோல் தோன்றியது," என்றான். தானப்பன் இரண்டொரு நிமிடங்களில் திரும்பி

வந்து கேசவனையும் மற்றவர்களையும் நோக்கி, "நண்பர்களே! நாம் உடனே எச்சரிக்கையாய் நடக்கவேண்டிய வேளை நெருங்கிவிட்டது. இக்காட்டுமிராண்டிகளில் ஒரு ஆள் நம்மைக் கண்டுவிட்டுக் கிராமத்தை நோக்கி ஓடுகிறான். உடனே இரண்டு மூன்று பேர் மரங்களிலேறிக் கிராமத்தை நோக்கியபடி இருங்கள். மற்ற அனைவரும் ஆயுதபாணிகளாய் எத்தகைய ஆபத்தையும் தடுக்க ஆயத்தமாக விருக்க வேண்டும். துரிதமாக மரங்களில் ஏறிப் பாருங்கள்.

இம்மொழிகளைக் கேட்டதே யாவரும் பெருங்கலக்கமடைந்து விட்டார்கள். கேசவனும் ஈட்டிக்கந்தனும் இன்னும் மூவரும் உடனே உயரமான மரங்களின் உச்சியில் ஏறி அக்கிராமத்தை நோக்கினார்கள். சுமார் இருபது நிமிடங்கள் கழித்து யாவரும் ஏககாலத்தில் "ஆகா! சீக்கிரம் சீக்கிரம்...." என்று சத்தமிட்டுக் கொண்டே துரிதமாய்க் கீழிறங்கி கீழே யிருப்பவர்களை நோக்கி,

"துரிதமாய்த் துப்பாக்கிகளில் தோட்டாக்களைப் போட்டு எடுத்துச் செல்லக்கூடிய வஸ்துக்களை முதுகின் மேல் கட்டிக்கொள்ளுங்கள். இராட்சதர்கள் போன்றவர்கள்—ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து சுமார் ஐம்பது பேருக்கதிகமாய்க் கிராமத்திலிருந்து புறப்பட்டு நமது திக்கை நோக்கியே வர முயல்கிறார்கள். அவர்களிடம் தடிகள் போன்ற கழி ஆயுதங்கள் இருக்கின்றன," என்று கூவினார்கள்.

கேசவனும் தனுக்கு தானப்பனுமே அங்கிருப்பவர்களில் புத்திசூட்சும முடையவர்கள். உடனே அவர்கள் இருவரும் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள். மற்றப்பேர்கள் உயிருக்குத் துணிந்து அவர்கள் கட்டளை

களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க உடன்பட்டார்கள். இது மேல் நாட்டாரிடமுள்ள சிறந்த குணங்களில் ஒன்று.

எத்தகைய ஆபத்து நேர்ந்தாலும், தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்போதும், அல்லது பொது நலமாகிய எதையேனும் செய்வதற்காக பலர் ஒன்றுகூடி ஒரு சங்கமாகவோ சபையாகவோ சேர்ந்து வேலை செய்யும்போதும் தங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் யாவரும் மனவொற்றுமையோடு அதில் பிரவேசித்து அவரவரால் கூடியவரையும் அதற்காக உழைப்பார்களேயன்றித் தனக்கு இதில் அதிகார ஸ்தானம் இருக்க வேண்டும், கௌரவப் பதவியிருக்க வேண்டும் என்ற சுயநல எண்ணம் எவருக்குமிராது.

பத்துப்பேர் மதித்து யாரைக் காரியதரிசியாய் வைத்தாலும் சரி, தனக்கு வாயில் காக்கும் வேலையை அளித்தாலும் சரி, ஒன்றையும் கருதாமல் தன்னால் கூடியவரை பொது நலத்திற்கு வேண்டியக் காரியங்களைச் செய்வான். நமது நாட்டார்க்கு அத்தகைய தன்மையில்லாதது மிக்க துக்ககரமான விஷயமே. அத்தகைய இக்கட்டில் நம்மவர்களாயிருந்தால், 'என் ? அவன்தான் பெரிய மனிதனோ? நமக்கு அந்த யோக்கியதை இல்லையோ ?' என்று உடனே அந்தப் பதவி தனக்களிக்கப்பட வேண்டுமென்று தன்னைச் சேர்ந்த சிலரைத் தன் பட்சத்தில் சேர்த்துக்கொண்டு கலகம் விளைவிப்பான். இவர்கள் இப்படி சச்சரவு செய்துகொண்டிருக்கையில் எதிரிகள் வந்து எல்லோரையும் அழித்து விடுவார்கள். போட்டிக்குக் கிளம்பிய பொறாமைக்காரனாகிய மூடன் "தான் தலைவன் பதவியையடைவதைவிட எல்லாரும் மடிந்தாலும் மடியட்டும் என்று மனங்கூசாது கூறுவான். எத்தனையோ சங்கங்கள் கூடும்போது ஆரம்

பத்திலேயே இத்தகைய குழப்பம் உண்டாகி சபை கலைந்து எடுத்த காரியம்நிறைவேறாமல் அழிந்து போகிறது. நமது நாட்டாரிடமிருக்கும் இத்தீய குணம் எப்போது ஒழியுமோ அப்போதுதான் நம்நாடு சீர்ப்படும்.

இவர்கள் அயோக்கியமான கள்ளரும் போக்கிரிகளுமாயினும் அச்சமயம் ஏற்பட்டபடி கேசவனையும் தனுக்கு தானப்பனையும் மற்ற பேர்கள் தலைவர்களாக ஏற்றுக் கொண்டார்கள். உடனே தங்களிடமிருக்கும் துப்பாக்கிகளில் தோட்டாக்களை மாட்டிக்கொண்டு நால்வர் முன்னணியில் நிற்பதென்றும் மற்ற பேர்கள் கத்தி முதலிய ஆயுதங்களோடு வரிசை வரிசையாய்ப் பின்னால் நிற்பதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். கேசவனே இச் சிறு சைனியத்தின் சேனாதிபதி.

யாவரும் சில மரங்கள் அடர்த்தியாக ஒரு கூட்டமாயிருக்கும் இடத்தில் மறைவான இடத்தில் சென்று நின்றார்கள். அச் சமயம் பொழுதும் பூரணமாக அமர்ந்து விட்டபடியால் எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. கேசவன் கட்டளைப்படி இருவர் முன் வேவு ஆட்களாக அனுப்பப்பட்டார்கள். அந்த இருவரில் மாயரங்கன் ஒருவன். அவர்களிருவரும் கிராமம் இருக்கும் திக்கை நோக்கிச் சென்றார்கள்.

மரங்களில் ஏறிப்பார்த்தவர்கள் அக் காட்டாளர்கள் கூட்டமாகப் புறப்படுவதாகக்கூறினார்கள். அநாகரீக ஜனங்கள் பலர் ஒன்றுகூடிப் புறப்படுவதாயின் பெருத்த சத்தம் கேட்குமென்று இயற்கையாய் நினைக்க வேண்டியதே. ஆனால் அத்தகைய எவ்வித சத்தமும் அப்போது கேட்கவில்லை.

அதற்குள் பின்னால் தங்கியிருக்கும் ஆட்களில் சிலர் இது வீண் பயமே போலிருக்கிறது. மரத்தின்மேல்

எறிப்பார்த்தவர்கள் கூறியது மெய்யாயின் அச்சனங்கள் வரும் கோஷ்டம் இன்னுமா நமக்குக் கேட்காமலிருக்கும்?" என்றார்கள்.

அந்தோ! அத்தேச ஜனங்களின் சுபாவம் இவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பூனைகள்போல் பதுங்கி வருகிறார்கள். தங்கள் மனிதரில் ஒருவன் வந்து "அபூர்வமான மாதிரியாகிய சில ஜனங்கள் நமது கிராமத்தின் ஓரத்திலிருக்கும் தோப்பில் இருக்கிறார்கள் என்று கூறியதை மட்டுமே அவர்கள் கேட்டார்கள். இது நல்ல வேட்டையென்று எண்ணிக்கொண்டு உடனே புறப்பட்டார்கள்.

அந்த நாட்டார் மனிதர்களையும், மிருகங்களையும் காலடி பற்றிக்கொண்டு பின் தொடர்ந்து போய்க் கண்டு பிடிக்கக்கூடிய விஷயத்தில் அபூர்வ சக்தி வாய்ந்தவர்கள். அருகிலிருப்போர் அறியா வண்ணம் எவ்வித சந்தடியுமின்றிப் பூனைபோல் செல்லப் பழகியவர்கள். அதனால் அவர்கள் வரும் சப்தம் கேட்கவில்லையென்று அக்கள்ளன் கூறினான்.

கேசவன் "அடே! உன் அபிப்பிராயத்தையாவது ஆலோசனையாவது இச்சமயத்தில் நான் கேட்கவில்லை நீங்கள் கட்டளைப்படி நடக்க வேண்டியவர்களே யன்றி குறுக்கிட்டு வலியப் பேசக்கூடியவர்கல்ல," என்றான்.

கேசவன் அவ்வாறு கூறினும் அவனுக்குள் மட்டும் அதே சிந்தனை உதித்தது. அதே சமயம் வேவு பார்க்கச் சென்ற இருவரில் மாயரங்கன் அதிவேகமாய் ஓடிவந்து கேசவனை நோக்கி "சுமார் நாற்பது பேருக்குமேல், பெண்களுமிருக்கிறார்கள். யாவரும் தடிகளோடு வருகிறார்கள். சிலர் கரத்தில் நுனியில் ஈட்டிபோல் கூராகச் சீவப்பட்ட கழிகளோ மூங்கில்களோ இருப்பதாகத் தெரிகிறது.

இவர்கள் பெரும்பாலும் நரமாமிச பட்சணிகளாகவே இருக்கவேண்டும் என்பது என் கருத்து. சுத்த அநாகரீகர்கள். மடையர்கள். ஒரு தீபம்—ஒருவிதமான பந்தம் ஒன்றைக் கையில் கொண்டுவருகிறார்கள். நாம் தந்திரமாய் வேலை செய்ய வேண்டும்....” என்று துரிதமாகக் கூறினான்.

கேசவன் உடனே யாவரையும் மிக்க இருட்டானவிடத்தில் கொண்டுபோய் மறைவாய் நிற்கவைத்து விட்டான். பின்னால் நடக்கவேண்டிய விஷயத்தைப் பற்றியும் அவசியமான கட்டளைகளை யிட்டுவிட்டான். இவர்கள் ஒரு இருண்ட விடத்தில் பிரம்மாண்டமான மூன்று மரங்களின் பின்னால் நின்றுகொண் டிருந்தார்கள். ஐந்தாறு நிமிடங்களுக்குள் தூரத்தில் ஒரு தீபவொளிதெரிந்தது. அதன் பின்னால் சுருண்ட உரோமமும் கொள்ளிக் கட்டைகள் போன்ற கண்களும் குட்டையான பருத்த தேகமும், உடைய ஒரு கூட்டமான ஜனங்கள் காணப்பட்டார்கள். முன்னே இருப்பவர்களே. அவர்களில் ஒருவன் கையிற் பிடித்திருக்கும் தீபத்தின் ஒளியால் நன்றாகக் காணப்பட்டார்கள். அவர்கள் இடையில் ஏதோ ஒருவிதமான துண்டு மட்டும் அணிந்திருந்தார்கள். அக் கூட்டத்தில் இருந்த சில மாதரும் அப்படியே; மற்றபடி நிர்வாணிகளே யெனலாம்.

அவர்கள் தங்களிடமிருக்கும் தீபவொளியால் இவர்களைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். எப்போதும் கையில் தீபம் வைத்திருப்பவனுக்கு எட்டவிருக்கும் பொருள் தெரிவது கஷ்டமே. அவர்கள் கேசவன் முதலியவர்கள் இருக்குமிடத்தில் இடது பக்கமாய்ச் சுமார் இருபது கஜ தூரத்தில் வரும்போது கேசவன் முன் ஏற்பாடு செய்த

சமிக்ஞையின்படி ஒருவிதமாகச் சீழ்க்கை அடித்தான். உடனே ஏககாலத்தில் நான்கு துப்பாக்கிகளும் சுடப்பட்டன. அதோடு யாவரும் சேர்ந்து ஒரே குரலால் ஒருவித பயங்கரமான சத்தமிட்டார்கள்.

இவர்கள் சுட்ட நான்கு துப்பாக்கிகளிலுமிருந்து நான்கு வெடிகள் கிளம்பியதும், நான்கு அக்கினிச் சுவாலைகள் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டன. தட்சணம் அவர்களின் முன் அணியிலிருந்த நால்வர் இரண்டு கரங்களையும் மேலே தூக்கித் துள்ளி எகிறி மல்லாந்து விழுந்து சவமானார்கள்.

அந்த உள் நாட்டிலிருக்கும் ஜனங்களுக்குத் துப்பாக்கியின் சங்கதியே என்னவென்று தெரியாது. திடீரென்று வெடிகளின் சத்தத்தைக் கேட்டபோதே அவர்கள் நடுங்கி விட்டார்கள். பிறகு பயங்கர சத்தம் கேட்டது. கீழே விழுந்த ஆட்களைப் பார்த்தார்கள். அவர்கள் தேகங்களைத் தடவிப்பார்த்தார்கள். எவ்வித அம்புகளும் பாய்ந்திருக்கவில்லை. ஒவ்வொருவர் தேகத்திலும் ஒரு துவாரம் மட்டுமேயிருக்கிறது. இரத்தம் வடிகிறது. நால்வரும் மடிந்து போய் விட்டார்களென்று தெரிகிறது. இதை அறிந்ததே சிலர் தங்கள் பாஷையில் என்னமோ கூவினார்கள். அதே விநாடி யாவரும் அந்தப் பிரதேசமே நடுங்குமாறு பயங்கரமான கோர சத்தமிட்டுக்கொண்டு ஊரை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

38-வது அத்தியாயம்

அத்தேசத்தில் பலவித ஜாதிகளுண்டு. அவர்கள் கொள்கைகளும் பலவிதமே. சிலர் சந்திரனையே கடவுளாக வணங்குவார்கள். சிலர் ஆலவிருட்

சத்தை வணங்குவார்கள். சில பாகங்களிலுள்ளோர் நரமாமிச பட்சணிகள். இரண்டு கட்சிகளுக்குச் சண்டை நேர்ந்தால் சண்டை நடக்கும்போது பெண்பாலார் தங்கள் கணவர்கள் கொன்றவர்களின் சிரங்களைக் கொய்து வந்து ஒரு பக்கம் சேர்த்து வைப்பார்கள். பிறகு அச்சிரங்கள் உலர்த்தப்பட்டுக் கோவையாய் வைக்கப்படும். சிலர் தமது மனிதர்களில் ஒருவர்க்கு ஏதேனும் வியாதி கண்டால் உடனே அந்த ஆளைக் கொன்று தின்று விடுவார்கள்.

கேசவன் முதலியவர்களால் சுடப்பட்ட ஆட்கள் அக்னியைக் கடவுளாய் வணங்குவார்கள். நாகரீகமென்பதே அவர்களுக்குத் தெரியாது. மரம் மூங்கில் முதலியவைகளால் கூர்மையான ஆயுதங்களைச் செய்துகொள்வார்கள். துப்பாக்கியின் சங்கதியே அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் சத்தத்தோடுண்டான அக்னிச் சுவாலையை மட்டும் கண்டதால் அதுவே தங்கள் ஆட்களைத் துளைத்துக் கொன்று விட்டதென்றும் ஆகையால் வந்த ஆட்கள் தங்கள் கடவுளாகிய அக்னியையே வசம்செய்து கொண்டிருக்கிறார்களென்றும் எண்ணிவிட்டார்கள். இதனால் அவர்கள் பீதியடைந்து மிக்க கலக்கத்தோடு ஓட்டமெடுத்தார்கள்.

கேசவனும் அவன் புத்திரனாகிய சுப்பனும் உடனே ஆலோசனை செய்து, இச்சமயம் நாம் இந்த இடத்தை விட்டுத் தூரமான இடத்திற்குப் போய்விடுவதே நலம் என்று ஆலோசனைசெய்து அவ்வாறே மற்ற பேர்களுக்கும் அறிவித்து, உடனே யாவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

இவர்கள் இரவு முழுமையும் மிக்க திகிலோடு நடந்து சென்றார்கள். அந்த நாட்டில் எத்திக்கில் செல்கிறோமென்பது அவர்களுக்குத் தெரியாது. எங்கும் பெருங்காடு,

இரவு முழுமையும் நடந்தார்கள். கடைசியில் பொழுது விடிந்தது. இவர்களுக்கு நாம் எங்கிருக்கிறோம். என்பது தெரியாது. எங்கு பார்த்தாலும் புதுக் காட்சியாகவே யிருக்கிறது. அந்த அடவிகளில் இருக்கும் விருட்சங்கள் கூட இவர்கள் எப்போதும் கண்டவையல்ல.

இவர்களிட முள்ள உணவுப் பொருள்களும் செலவழிந்து விட்டன. என்ன செய்வார்கள் பாபம்! யாவரும் மிக்க மனக்குழப்பமும் திகிலுமடைந்து விட்டார்கள். அந் நாட்டில் சூரியன் உதயமானதே உஷ்ணமோ சகிக்கக் கூடியதாயில்லை. சுமார் பத்துமணிக்கு ஒரு சிற்றாறைக் கண்டு மிக்க ஆவலோடு அதன் கரையில் தங்கித் தங்களி டம் ஏதேனும் தின்பண்டம் இருக்கிறதாவென்று தேடிப் பார்த்தார்கள். ஒன்று மில்லை. கடைசியில் ஆற்று நீரை வயிறாரப் பருகி அங்கிருந்து புறப்பட்டார்கள்.

போகப்போகத் தங்களுக்கு உண்டாகிய குட்சி பாதையால் எத்தகைய ஜனங்களாயினும் சரி; எவ்விதமான உணவேனும் கிடைக்குமிடம் போய்ச் சேர்ந்தால் போது மென்று கருதினார்கள். சுமார் பகல் ஒரு மணிக்கு உழுது பயிரிட்டிருக்கும் பூமிகளையும் சற்று தூரத்தில் அடர்ந்த விருட்சங்களையுடைய ஒரு தோப்பையும் கண்டார்கள். யாவரும் ஆவலோடு அத்திக்கை நோக்கிச் சென்றார்கள். அரைமணி நேரத்திற்குள் இவர்கள் குளிர்ச்சியான அத் தோட்டத்தை அடைந்து அங்கு இளைப்பாறக் கருதிச் சற்று நேரம் தங்கினார்கள்.

சிலர் படுத்துக்கொண்டார்கள். சிலர் இரண்டுமூன்று பேராகக் கூடிக்கொண்டு தோட்டத்தில் உலவச் சென் றார்கள். அவர்கள் திரும்பி வந்ததும் "அதோ தெற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் சில வீடுகள் தெரிகின்றன,"

என்று கூறினார்கள். உடனே யாவரும் புறப்பட்டு அந்த இடத்தை நோக்கிச் சென்றார்கள்.

இவர்கள் சென்றவிடம் அந்நாட்டுச் சுதேசிகள் வசிக்கும் கிராமங்களில் ஒன்று. அங்கு ஆடவர்கள் பகல் முழுதும் தங்கள் பூமிகளில் சென்று வேலைசெய்வதும், காட்டிற்குச் சென்று காய் கிழங்குகளைப் பறித்துக் கொண்டு மாலை சுமார் ஐந்து மணிக்கு வீடுவருவதும் வழக்கம். ஆடவர்களோடு நல்ல வாலிப வயதுடைய கன்னிகைகளும் வேலைக்குச் செல்வார்கள். ஆகையால் இவர்கள் அக்கிராமத்திற்குள் நுழையும்போது அங்கு வயது முதிர்ந்த ஆடவர்கள், மாதர்கள், சிறுவர்கள் முதலியவர்களே இருந்தார்கள்.

இவர்கள் அக்கிராமத்தின் வீதியில் பிரவேசித்ததே வெளியிலிருந்த சில சிறுவர்களும் இரண்டொரு வயோதிகர்களும் இவர்களைத் தூரத்தில் கண்டதும் ஒரு விதமான சந்தோஷக் கூச்சலிட்டார்கள். உடனே பெரும்பாலோர் வீடுகளுக்குள் ஓடிவிட்டார்கள். வயது முதிர்ந்த சிலர் இவர்களை நோக்கி "வாருங்கள்! வாருங்கள்!" என்று கரங்களால் சமிக்ஞை செய்தார்கள்.

அதன்மேல் இவர்களுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. ஆ! இவர்கள் நம்மை ஆதரிக்கும் குணமுடைய ஜனங்கள் என்று எண்ணிக்கொண்டு வீதிக்குள் சென்றார்கள். அதற்குள் வீடுகளுக்குள்ளே இருந்த மாதர்கள் கிழவர்கள் முதலிய அனைவரும் வெளியில் வந்து, இவர்களைக் கண்டதும் சூழ்ந்து கொண்டார்கள். "நீங்கள் இங்கேயே இருங்கள், போஜனம் செய்யுங்கள்," என்று சமிக்ஞையாய்க் கூறினார்கள்.

அந்தச் சனங்களுடைய உருவமும் பார்வையும் குரூரமாகவே தோன்றின. ஆயினும் அவர்கள் செய்கையால்

அவர்கள் நல்லகுண முடையவர்களே என்று இவர்களுக்குப் புலப்பட்டது. பிறகு அவர்கள் காட்டிய சமிக்ஞைகளால், உங்களில் இரண்டிரண்டு பேர் ஒரு வீட்டில் வந்திருங்கள். உங்களுக்கு சாப்பாடு முதலிய யாவு மளிக்கிறோம் என்று கூறுவதாகத் தெரிந்தது.

கேசவன் சுப்பன் இருவர்க்கு மட்டும் மனதில் இம்மதி தோன்றவில்லை. கேசவன் தன்புத்திரனிடம் "எனக்கு எதுவும் திருப்தியாகத் தோன்றவில்லை. ஏனெனில் இவர்கள் அநாகரீகமான 'காட்டுமிராண்டிகளாகிய கறுப்பு மனிதர். உண்மையில் இவர்கள் நம்மைக் கண்டதே பயந்தோடிவிட வேண்டியவர்கள். இப்படிப்பட்டவர்கள் நம்மைக் கண்டதே சந்தோஷ மடைவானேன்? நம்மைப் பார்த்ததே ஒவ்வொருவரும் முகமலர்ச்சியோடு தங்கள் பாஷையில் பேசிக்கொண்ட பின்பே நமக்கு நல்வரவு கூறுவதாகச் சமிக்ஞை செய்தார்கள். இதை நீ கவனித்தாயா? இவர்கள் ஆடவர்கள் பூரணமான இராட்சதர்களே. இங்கே இருக்கும் இரண்டொரு கிழவர்கள் பிரியமுள்ளவர்கள்போல் சமிக்ஞை செய்தார்களெனினும், அவர்கள் கண்களின் பார்வை எவ்வாறிருக்கிறதென்று கவனி. ஒரு புதையலகப்பட்டால் எவ்வளவு அவாவும் சந்தோஷமும் தோன்றுமோ அவ்வாறே அவர்களுக்கு இப்போது மனதில் உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. இப்போது நாம் இக்கள்ளப் பயல்களுக்கு என்ன கூறினும் புலப்படாது. நான் கூறுவதை மட்டும் சரியாகக் கவனித்து அப்படியே நட. நாம் மட்டும் பிரியாமலே இருக்கவேண்டும். இவ்வூரார் முதலில் என்ன கொடுக்கிறார்களோ அதை உண்பதுபோல் அபிநயம் மட்டும் செய். ஆனால் உண்ணாதே. பிறகு, இவர்களிடம் வந்ததால் எள்ளளவேனும் துயரமாவது சந்தேகமாவது இருப்பதாகக் காட்டிக் கொள்ளாதே

உன் சொந்த வீடுபோல் சந்தோஷமாக விருப்பவனாகவே காட்டிக்கொள். தெரிகிறதா? பத்திரம்! பத்திரம்!" என்றான்.

சுப்பன் மிக்க கலவர மடைந்து தன் தந்தையை நோக்கி "என்ன அப்பா? ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? இவர்கள், வயது முதிர்ந்த ஸ்திரீகளும் கிழவர்களும் சிறுவர்களும் நமக்கென்ன கெடுதி செய்வார்கள். நாம் யாரென்றே இவர்களுக்குத் தெரியாதே," என்றான்.

கேசவன்:—"ஓ என் அருமை மகனே! இச் சமயம் நாம் மனிதர் வாழுமிடத்தை அடையாவிட்டால் ஆகார மின்றி மடியவேண்டியதே. ஆகையால் எங்கேனும் சரியென்று வந்தோம். நான் கூறுவதைத் தைரியமாகக் கேட்டுக்கொண்டு பிறகு நான் சொல்கிறபடி நீ நடந்தால் நாம் உயிர் தப்பிப் பிழைக்கலாம். ஏனெனில், இந்த நாட்டில் பல பாகங்களிலிருக்கும் ஜனங்களைப் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது இது எந்த நாடென்று நன்றாய் அறிந்து கொண்டேன். இச்சனங்கள் நடக்கும் மாதிரியைப் பார்த்தால் இவர்கள் நரமாமிச பட்சணிகளென்றே நான் நம்புகிறேன். இன்றேல் நம்மைக் கண்டதே இவர்களுக்குக் கலவரமும் பீதியும் உண்டாவதற்குப் பதிலாக இத்தகைய சந்தோஷ முண்டாகவேண்டிய காரணமுமில்லை. ஆடவர்களில்லை ஆதலால் அவர்கள் வருமட்டும் இவர்கள் நம்மை இங்கிருத்திவைக்க இப்படி அபிநயம் செய்கிறார்களென்றே நான் நம்புகிறேன்........" என்றான்.

இதைக் கேட்டதே சுப்பனுடைய ஆவி சோர்ந்துவிட்டது. அவனுடைய முரட்டுக்குணம், ஆத்திரம், அகங்காரம் யாவும் எங்கோ சூரியன் கிரணங்களைக் கண்ட பனிபோல்

பறந்து போயின. அவன் நாவுலர்ந்து "ஐயோ அப்பா! கடைசியில் நமது கதி இப்படியா...." என்பதற்குள்,

கேசவன்:—"முட்டாள்! தைரியமாயிரு. புத்தி சாமார்த்தியமும், தைரியமும் இருந்தால் எத்தகைய ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்ளலாம். கோழையாய் விடாதே. நான் சமிக்ஞை செய்கிறபடி நட. உனக்கும் எனக்கும் சம்பந்தமிருப்பதாய்ச் சற்றும் காட்டிக்கொள்ளாதே. நான் கூறுவது உத்தேசமே. ஆயினும் பெரும்பாலும் உண்மையாகவே இருக்கலாம். மாலை இங்குள்ள ஆடவர்கள் வந்ததே உண்மைப் பகிரங்கமாக வெளியாகிவிடும். நீ மட்டும் ஜாக்கிரதையாயிரு. உன்னிடமுள்ள சிறு கத்தியைப் பாதரட்சையிலேனும் மறைத்து வைத்துக்கொள். அது சமயத்திற்குதவும். நான் அப்போதைக்கப்போது உனக்கு நமது இரகசிய முறைப்படி சமிக்ஞை செய்கிறேன்.

ஒரு சமயம் இருவரும் பிரிந்துவிட நேர்ந்தால், சமயம் பார்த்துத் தப்பித்துக்கொண்டு ஒருவரையொருவர் சந்திக்க முயலவேண்டும். அப்படிச் சந்திக்க முடியாவிட்டால் தனியாகவே தப்பி ஓடிவிட வேண்டும். இருவரும் சுற்றத்தார் என்று காட்டிக் கொள்ளாமலிருக்கவேண்டும். பத்திரம், பத்திரம். நம்மாலான முயற்சி நாம் செய்தால் பிறகு கடவுள் விட்ட வழியாகிறது," என்றான்.

இதற்குள் அவ்வீடுகளிலிருந்த ஆட்கள் இவர்களைச் சூழ்ந்துகொண்டு சமிக்ஞையாய் உபசாரம் செய்து புளித்த மோர் கொண்டுவந்து யாவர்க்கும் பானத்திற் களித்தார்கள். இவர்கள் அங்கு நாற்புறங்களிலும் வீடுகளால் சூழப்பட்ட ஒரு சிறு முற்றத்தில் உட்கார்ந்தார்கள். அங்குள்ள ஜனங்கள் இவர்களைச் சூழ்ந்துகொண்டு சமிக்ஞைகளால்

பலவிதமான கேள்விகளைக் கேட்டார்கள். இவர்களால் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாததாக விருந்தது. இடையிடையில் இவர்கள் இங்கு தங்கலாமா அல்லது உடனே போய் விடலாமா வென்று ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள்.

அந்தோ! வினைப்பயன்படி ஆண்டவன் அவரவர்களுக்கு எந்தெந்த சுகதுக்கங்களை அமைத்து வைத்துள்ளாரோ அவ்வாறன்றோ நடக்கும். மனிதர் யோசனைப்படியே எதுவும் நடப்பதில்லை. இவன் புத்தியும் யோசனையும் கூட கர்மத்தின் வழியே தான் செல்கின்றன. அதனாலன்றோ புத்தி கன்மானுசாரணி என்று கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் அங்குச் சென்றபின் அங்கிருந்தவர்களில் இரண்டுபேர் வீடுகளின் பின்பக்கமாய் எங்கோ ஓடினதைக் காணவில்லை.

இவர்கள் அங்குச் சென்ற ஒருமணி நேரங்கழித்து அவர்களைச் சூழ்ந்திருந்த வீடுகளுக்குள்ளிருந்து ஏககாலத்தில் சுமார் முப்பதுபேர் ஆடவர்கள் பாய்ந்து வெளியில் வந்தார்கள். அவர்கள் வயது இருபத்தைந்து முதல் ஐம்பது வரையிலிருக்கலாம். அவர்கள் உருவங்கள் தடித்த பலம் பொருந்திய உருவங்கள். தீய்ந்து போன்ற அவர்கள் சுருண்ட உரோமங்களும், தடித்த உதடுகளும், கொள்ளிக் கட்டைகள்போல் சிவந்த கடுமையான பார்வையுடை கண்களும், என்றும் சுத்தி செய்யாத பாசிபிடித்த தந்தபந்திகளும் கேசவன் சுப்பன் இவர்களுக்கே கிலியுண்டாக்கி விட்டன வெனின் மற்றவர்களைப் பற்றிக் கூற வேண்டுவதில்லை. வந்தவர்கள் இராக்ஷத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது நன்ருகத் தெரிந்து விட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் கையில் பலமான ஒரு சுக்குமாந்தடியை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஆட்கள் ஏககாலத்தில் பாய்ந்து வந்ததும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு கரங்களில் வைத்திருந்த கயிறுகளால் இவர்கள் ஒவ்வொருவர் கரங்களையும் கட்டிவிட்டார். இவர்களால் அத்தகைய பலம் பொருந்திய இராட்சசர் முன் என்ன செய்யமுடியும்? முன்பு இவர்களிடம் அன்புகாட்டி உபசரித்த மாதர்கள் எல்லாம் இப்போது தம் ஆடவர்களுக்குத் துணைபுரியச் சுறுசுறுப்பாய் வேலை செய்தார்கள்.

தங்கள் ஆடவர்களைக் கண்டதே அம்மாதரின் முகத்திலிருந்த அன்பான குறிகளெல்லாம் மாறி ஒருவிதக் குரூரமான ஆவல் அவர்கள் முகங்களில் உண்டாகியது. கேசவன் சுப்பன் முதல் அனைவரும் பேரிடி விழுந்தவர்கள் போல் ஆவி சோர்ந்து நடுக்கமடைந்து விட்டார்கள். இவர்கள் ஒருவரோடொருவர் பேசத் தொடங்கியதே அந்த ஆடவர்கள் குறிப்பாய்க் கழிகளையோங்கிப் பேசியதால் மண்டையை யுடைத்து விடுவோம் என்று சமிக்கையாய்க் கூறுவது மாதிரி பயங்கரமாயிருந்தது.

அதன்மேல் அந்த ஆடவர்கள்—நரமாமிச பட்சணிகளாகிய அநாகரீக மனிதர்கள்—தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். சற்று நேரத்திற்குள், கேசவன் சுப்பன் முதலியவர்கள் இருவர் இருவராகப் பிரிக்கப்பட்டார்கள். உண்மையென்ன வெனில் நம் நாட்டில் சீவகாருண்யமற்றவர்கள் ஆடு, மாடு, கோழி முதலியவற்றைப் பங்கு போட்டுக்கொண்டு கொன்று தின்பதுபோல் அவர்கள் மனிதர்களை—தம்போன்றவர்களையே—தின்னும் சுபாவமுடையவர்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களுக்குள் இவர்களைப் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

அங்கிருக்கும் வீடுகளின் பின்பக்கம் ஒரு விசாலமான குடிசை வீடொன்றிருந்தது. அவ் வீட்டின் வரிசையாய்க்

கட்டுத் தறிகளடிக்கப்பட்டு இவர்களனைவரும் ஜதை ஜதையாய் அங்கு கொண்டுபோய்க் கட்டப்பட்டார்கள். ஒரு ஜதைக்கும் மற்றொரு ஜதைக்கும் சுமார் பத்து கஜ தூரமிருக்கும். இவ்வாறு இரண்டு வரிசைகளாக இவர்கள் கட்டப்பட்டார்கள். இப்போது இத் துஷ்டர்களின் மனோநிலைமை எப்படி யிருக்குமென்பதை இதை வாசிப்போரே யுணரலாகும்.

39-வது அத்தியாயம்

இப்போது பிராணபயத்தில்—அதிலும் நெஞ்சம் நடுங்கும் அகோரமான பிராணபயத்தில்—சிக்கிக்கொண்ட கேசவன், சுப்பன் முதலிய ஆசாமிகள் எப்படிப்பட்டவர்களெனின், சற்றும் ஈவிரக்கமின்றி தம் போன்ற மனிதர்களை—நிரபராதிகளும் யோக்கியமுமானவர்களைக் களவாடியோ, மோசம் செய்தோ, கொன்றோ, கொஞ்சமேனும் கலக்கமின்றி அவர்களுக்குப் பெருத்த துன்பங்களை விளைவித்தவர்கள். இவர்கள் செய்த அநீதங்களுக்கு ஓர் அளவாவது எல்லையாவது இல்லை.

யாவர் உள்ளத்திலும் இருந்து அவரவர் சிந்தனைகளை அப்போதப்போ துணர்ந்து அவரவர் நற்கிரியைகளுக்குத் தக்க நல்ல பலனையும் தீய செயல்களுக்குத் தக்க தண்டனையையும் அளிக்கும் ஒருவன் இருப்பது சத்தியமன்றோ? மூடர்கள் அவன் உளன் என்பதைக் கூட நம்பாமல் தம் மனம் போனபடி துர்க்கிருத்தியங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தம் குற்றத்திற்குத் தக்க தண்டனையடையாமல் தப்ப வென்னமோ முடியாது.

அக் கருணாநிதியாகிய பகவான் தன்னை நம்பினோர் ஏதேனும் தவறான காரியத்தைச் செய்து விட்டால், உட னுக்குடன் அதற்குத்தக்க தண்டனையை யளித்து அதனால் அவர்கள் பாவம் உடனுக்குடன் அச் சன்மத்திலேயே யொழியச் செய்து, பிறகு அவர்களுக்கு நித்தியானந்தமா கிய பெருவாழ்வை யளிக்கிறான். தன்னை யடியோ டலட் சியம்செய்து தான் என்கிற அகங்காரம் தலைக்கேறி "என்ன தெய்வம்? எந்த தெய்வந்தான் என்னை யென்ன செய்கிறது பார்க்கிறேன்," என்று மமதைகொண்டு கண் மண் தெரியா மல் தூர்வழியில் நடப்போரையோ, தட்சணம் ஒன்றும் செய்யாமல் பிறகு அவர்கள் பலவித ஈனமான ஜனனங் களை யெடுத்துச் சில பிறவிகளில் தங்கள் கர்மத்தின் பலனை யனுபவிக்கும்படிச் செய்கிறான். அதனாலே மகா ஞானிக ளாகிய நம்முன்னோர்,

"தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே முன்னின்று கண்ணறுக்கும்-தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் பின்புதல்வர்க் கன்றே
பல்காலும் செய்வார் பயன்"

என்று கூறியருளினார்கள். ஆயினும் அளவு மீறிய அக்கிர மம் செய்வோர்க்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் தண் டனையுண்டு. அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே இக் கேச வன் முதலிய துஷ்டர்கள். இவர்கள், கடவுள் ஒருவர் நமது கருமங்களை யெல்லாம் கூடவிருந்தே பார்த்துக்கொண் டிருக்கிறார் என்ற உண்மையை நம்பாதவர்கள். இப் போது பிராணபயத்தில் சிக்கிய பின்னும் தங்கள் நடக்கை களைப் பற்றித் தவறென்றும், தாம் ஆண்டவனிடம் மன்னிப் புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், அவர்கள் புத்தி யில் சற்றேனும் படவில்லை. இப்போதும் தான் என்ற அகங்காரத்தின் வயப்பட்டவர்களாய் நாம் நமது சாமார்த்

தியத்தால் எப்படி இந்த ஆபத்தினின்றும் தப்பிப்போக லாம் என்றே சிந்திக்கிறார்களே யன்றி,

"ஓ! பரமதயாநிதி, ஆபத்பாந்தவன், நம்பினவர்களை எத்தகைய ஆபத்தினின்றும் காப்பாற்றக் கூடிய சர்வ சக்திமான், எத்தனை தப்புகளை செய்யினும் மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டால் எல்லாக் குற்றங்களையும் மன்னிக் கும் பரம கருணாநிதி—அத்தகைய பரம்பொருள் நம்மைக் காப்பாற்றுவான்," என்ற சிந்தனையே அவர்களுக்குள் உண்டாகவில்லை.

அந்தோ! எப்படி உண்டாகும்? முன் ஜன்மங்களிற் செய்த தீயகர்மங்களின் தடிப்பு எவ்வளவு அதிகமாக ஏறி யிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு கடவுள் சிந்தனை உதிப் பது கஷ்டமே. பிரதிபலனைக் கோராமல் செய்யும் நற்கரு மங்களால் இக் கெட்ட கர்மபலன் கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைந்தால் பிறகே மனம் சுத்தமடைந்து ஈசுர சிந் தனையில் பிரவேசிக்கும். இத்துஷ்டர்களுக்கு இப்பிராணா பத்து அவ்வளவு அதிகமாக மனதில் உறுத்தவில்லை. ஏனெ னில் இவர்கள் பன்முறை ஆபத்துகளில் சிக்கித் தப்பியவர் கள். ஈவிரக்கமற்ற நெஞ்சமுடையதர்கள் ஆனதால் பாதி மிருகம் போன்றவர்கள்.

இவர்களுக்கு அங்ஙனம் கடவுள் சிந்தனையும், நீதிக ளும் மனதில் தோற்றுவிடினும், அப்போ தேற்பட்டிருந்த நிலைமையைப் பற்றிப் பெருந்திகில் உண்டாகிவிட்டது. அந்தோ! எப்பேர்ப்பட்டவர் களுக்கும் உயிர் என்றால் சர்க் கரைக்கட்டியல்லவா? அப்பேர்பட்ட உயிர் போவதென் றால் யாருக்குத்தான் மனந்திடுக்கிடாது? இவர்களைக் கட் டிப் போட்டவுடனே, அவர்கள், தங்களை அறுத்துக் கூறு போட்டு வீட்டுக்கொரு பங்காக எடுத்துக் கறி சமைத்துத்

தின்னப்போகிருர்கள் என்று எல்லோரும் தெரிந்து கொண்டார்கள் அடடா! அச்சங்கதி தெரிந்ததே அவர்கள் மனம் பட்டபாடு ஆண்டவனுக்கே தெரியும். மரண தண்டனை அடைந்த ஒருவன், தூக்கு மரத்தடியில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டவுடன் எவ்வித கலக்கத்தை அடைவானே அதேவிதமான பெருந் திகிலை எல்லோரும் அடைவார்கள். அதனல் ஒவ்வொருவரும், "ஐயோ! நாம் மிகுந்த சாமர்த்தியமான தொழில்களைச் செய்து முதலில் பல சௌக்கியங்களை அடைந்தாலும் பிந்தின காலத்தில் அடைந்தவை யெல்லாம் சகிக்க முடியாத துன்பங்களாகவே யிருக்கின்றன. கடைசியில் துள்ளத் துடிக்கக் கொல்லப்படும் சித்திரவதைக்குள் வந்து சிக்கிக் கொண்டோமே; ஆயுள் வரை சிறைவாசஞ்செய்தாலும் இத்தகைய அவஸ்தையானமரணமின்றி உயிருடனவது இருக்கலாமே; நாம் அவற்றையும் நீக்கிக் கொள்ள முயற்சி செய்து இந்தப் பெரிய ஆபத்தில் வந்து சிக்கிக் கொண்டோமே; அட சனியனே! அந்தக் கடலில் மூழ்கி இறந்திருந்தாலும், மிருகங்களால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தாலும் அந்த மரணங்கள் திடுமெனச் சம்பவிப்பதால் உயிர் ஒருவாறு வாதனை யின்றி ஒழிந்து போகுமே; நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இவர்கள் பதருமல் நம்மைச் சித்திரவதை செய்யும்போது நம்முடைய ஆவி என்ன பாடுபடும்," என்று எண்ணுத வெண்ணி மனம் புண்ணுகி ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கண்கலங்கி நின்ருர்கள். அவர்களுடைய ஈரல் துடித்துக்கொண்டிருந்தது.

அப்படி யிருக்கும்போது அவ்வூரிலுள்ள நரமாமிச பக்ஷணிகளாகிய அக் கூட்டத்தார் அவ்விடத்தில் கூடித் தங்களிடம் அகப்பட்டிருக்கும் கேசவன், சுப்பன் முதலிய மனிதர்களை அறுத்துச் சமைத்துண்ணும் விஷயத்தைப்

பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு மூன்று தினங்களுக்கு அப்பால் விசேஷமான பண்டிகை நாளொன்று வரக்கூடியதா யிருந்தது. அந்தப் பண்டிகையில் அவர்கள் முக்கியமாக நரமாமிசமே உண்பது வழக்கம். அன்றைக்கு அவர்கள் என்னபாடு பட்டாவது, எவ்வளவு தூரத்தில் சென்றாவது ஒரு மனிதனையாவது பிடித்துக் கொண்டுவந்து கொன்று அவனுடைய மாமிசத்தைப் பங்கு போட்டுக் கொள்வார்கள். ஆதலின், அக்கோர பண்டிகைக்கு இரண்டு தினங்களுக்கு முந்தியே நரர்கள் தாமே வந்தகப்பட்டது அவர்களுக்கு மிக்க திருப்தியாயிருந்தது. "நம்முடைய தேவதையே இவர்களைக் கொண்டு வந்து சேர்த்தது," என்று அவர்கள், தாங்கள் வணங்கக்கூடிய ஒரு துஷ்ட தேவதையைத் தொழுதார்கள். பின்னர் அவர்களுட் சில கிழவர்கள், "சரி; இவர்களை யெல்லாம் பண்டிகை யன்றுதான் கொன்று நாம் சந்தோஷம் கொண்டாட வேண்டும்; அது வரை நன்றாகக் கொழுக்க வைக்க வேண்டும்," என்று கூறினார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே பெருந் தீனிக்காரர்களாகிய சில வாலிபர்கள், "கையிற் கிடைத்த அருமையான ஆகாரத்தை உடனே உண்டு களிப்பதற்கு இடையூறாக இந்தக் கிழட்டுச் சவங்கள் ஏதேதோ கூறுகின்றனவே; ஐயோ! இரண்டு நாள் வரை வாயூறிக் கொண்டு நாம் எப்படி ஆசையை அடக்கிக்கொண்டிருக்க முடியும்?" என்று ஆத்திரப்பட்டு, "நீங்கள் சொல்வது சரியான யோசனையாகத் தெரியவில்லை, நமக்கு ஒரு பிரயாசையுமின்றி ஒரே காலத்தில் கொழுத்த தீனிகள் தாமே வந்து சிக்கியிருக்கின்றன. இவ்வாறு உயர்ந்த உணவு எப்பொழுதும் கிடைக்காது; இப்பேர்ப்பட்டவைகளை யெல்லாம் கையில் கிடைத்தபோதே வாயில்போட்டு மென்று

தின்றுவிடவேண்டும்; சாமிக்கென்றும் பூதத்துக்கென்றும், நாளை யென்றும் பின்னையென்றும் அவற்றைத் தின்றுருசிபார்க்காமல் வைத்திருப்பது மதியீனமாகும்; நாம் பண்டிகை தினம் வரை உயிருடனிருப்பது என்ன நிச்சயம்? அவர்கள், யூகமுள்ள அன்னிய தேசத்தவர்களாயிருப்பதால், நாம் அவர்களைக் கொன்று விடுவோமென்பதைத் தெரிந்துக்கொண்டு தந்திரமாகத் தப்பித்து ஓடினாலும் ஓடிவிடுவார்கள்; அல்லது நம்மைப் போன்ற வேற்றார் நரமாமிச பக்ஷணிகள் இவர்களைத் திருடிக் கொண்டுபோய்த் தின்றுவிட்டாலும் தின்றுவிடக் கூடும். அப்படி ஏதேனும் ஒன்று நேர்ந்து விட்டால் இவர்களை அறுத்துச் சாமிக்குப் படைப்பதெங்கே? பண்டிகைகொண்டாடுவதெங்கே? கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற்போய்விடும். "சென்றது கருதார்; நாளைச் சேர்வது நினையார்; கண்முன் நின்றது புசிப்பார்," என்றபடி நாம் முன்னால் நடந்ததையும், பின்னால் நடக்கப்போவதையும் கவனித்துக்கொண்டு இப்பொழுது கண்ணெதிரிலே நடக்க வேண்டியதை நிறுத்தக் கூடாது. இப்போது நம் கண்முன் எதிர்பட்ட இவர்களைக் கொன்று தின்பதே நல்லது; பண்டிகைக்குவேண்டுமானால் பிரயாசைப் பட்டு ஏதேனும் நரமாமிசம் தேடிக் கொள்ளலாம். அப்படி அகப்படாத பக்ஷத்தில், நாம் வருடந்தோறும் செய்யும் வழக்கம் போலவே நமக்குள்ளேயே ஒரு கிழவனை அறுத்துப்போட்டுப் பண்டிகை கொண்டாடலாம்," என்று சொன்னான்.

முந்தின கிழவர்களின் அபிப்பிராயத்தையும், இந்த வாலிபர்களின் வார்த்தைகளையும் கேட்ட நடுத்தர வயதையுடைய சில இராக்ஷதர் "உங்களுடைய அபிப்பிராயங்கள் சரியானவையல்ல; கிடைக்காமற் கிடைத்த இந்த நரர்களை பண்டிகையில் சாமிக்கும் படைக்கவேண்டும்; இப்பொழு

தே தின்னவும் வேண்டும். இவ்விரண்டு காரியங்களும் நிறைவேறுதற்கு நாங்கள் ஒரு யோசனை சொல்கிறோம்; அதன்படி செய்தால் இரண்டும் நிறைவேறி விடும். இவர்களில் நன்றாகக் கொழுத்து புஷ்டியாயிருக்கும் இரண்டு கடாப் பயல்களைப் பண்டிகைக்காக நிறுத்திக் கொண்டு, மற்றவர்களை யெல்லாம் நம் வழக்கப்படி ஆனந்தக் கூத்தாடி இன்றைக்கே சித்திரவதைசெய்து தின்றுவிடுவோம்; நிறுத்திய இருவர்க்கும் நல்ல தீனி போட்டுக் கொழுப்பேற்றிப் பண்டிகையன்று வெட்டி விடுவோம்," என்று கூறினார்கள்.

எல்லோருக்கும் இந்த முடிவு திருப்தியாயிருந்தது. அதனால் அந்த மிருக சுபாவமுடைய யாவரும், "இது தான் சரி," என்று ஒரே மனதுடன் இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டார்கள். இவர்கள் பேசிக்கொண்ட பாஷை கேசவன் முதலியவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. எனினும், அவ்விராக்கத கூட்டத்தார், தங்களைச் சுட்டிக் காட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருந்த குறிப்பினால், தங்கள் கழுத்தையறுக்கும் சங்கதியைப் பற்றியே பேசுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அதனால் அவர்கள், "இப்போதோ இன்னும் சற்று நேரத்திலோ நம் உயிர் போய்விடப் போகின்றது," என்று ஆவியும் உடலும் நடுங்கி, அறுக்கக் கொண்டுவந்து கட்டிய ஆடுகளைப்போல் தலையிறங்கி நின்றார்கள்.

அப்போது அந்த இராக்ஷஸ கூட்டத்தார்கள், தங்கள் தங்கள் வீடுகளிக்குச் சென்று சிறிது நேரத்திற்குள் பளபளப்பான சிறுசிறு கத்திகளையும், பெரிய கத்திகளையும், அரிவாட்களையும், கோடரிகளையும், வாள்களையும், வேல்களையும், குத்திட்டிகளையும், எறியீட்டிகளையும்; இன்னும்

பல ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு சந்தோஷ ஆவாரத்துடன் அவ் வீட்டிற்குள் வந்து நுழைந்தார்கள். அந்தோ! அவர்களையும், அவர்களுடைய ஆயுதங்களையும் கண்டவுடன், எத்தனையோ ஜனங்களைப் பயமுறுத்திக் கொலைக்கஞ்சாமலும், எவர்க்கும் அடங்காமலும் திரிந்து கொண்டிருந்த கேசவன் முதலிய திருடர்களுக்குப் பொறிகள் கலங்கி விட்டன. அப்போதுதான், கேசவனுக்கும், அவன் மகன் சுப்பனுக்கும், உயிரைப்பற்றிய அச்சமும், கொலையினால் உண்டாகும் வாதனையும் இன்னவென்று தெரிந்தன. அதனால் அவர்கள், "ஆ! நாம் பூபாலம்பிள்ளையை அத் தனி வீட்டில் நடுராத்திரியில் கொல்லத் துணிந்தோமே; அவ்வாறே அவரைப் பிடித்துக் கொல்ல முயன்றிருந்தால் அத்தருணத்தில் அவருடைய மனமும் இத்தகைய வேதனையைத்தானே அடைந்திருக்கும்; இது தெரியாமல் தானே நாம் கொலைத்தொழிலையும் அஞ்சாது புரிந்து திரிந்தோம்; 'தலைவலியும் காய்ச்சலும் தனக்குவந்தால் தெரியும்,' என்றபடி இப்போது நமக்கே படுமரணம் சமீபித்து விட்டதால் அவ்வாதனை இன்னதென்று தெரிகின்றது. ஐயோ! நாம் அந்தப் பள்ளத்தாக்கில் தள்ளிக் கொன்ற மனிதனும் கூட என்ன பாடு பட்டிருப்பன்! நாம் அத்தகைய பாதகங்களை யெல்லாம் செய்து வந்ததனால்தான் கடவுள் நமக்கு இத்தகைய ஆபத்தைக் கொண்டு வந்துவிட்டான். மனிதருள் அரசர் முதல் எவராலும் நம்மை அடக்க முடியவில்லை என்ற அகங்காரத்தால் நாம் ஒருத்தரையும் மதியாமல் திரிந்ததோடு கடவுளையும் கனவிலும் கருதாமல் காலந்தள்ளி வந்தோம்; ஒவ்வொருவருடைய நன்மையும் தீமையுங் கவனித்து அவற்றிற்குத் தக்கபயனை அளிக்கத்தக்க சர்வவல்லமையுள்ள இறைவன் ஒருவன் எங்கும் நிறைந்து இரகசியமாய் அரசு செலுத்து

இன்றுனென்பதை நாம் சிறிதும் உணராமற் போயினேம்; அவனுடைய முன்னிலையிலும் நம்முடைய வல்லமைச் செல்லுமா? அந்தோ! நம்மைச் சார்ந்த பெண்ணுகிய இராஜமணிக்கிருந்த புத்திகூட நமக்கில்லாமற் போய்விட்டதே; அவளும் நம்மைச் சேர்த்திருந்த எவ்வளவோ பாடுபட்டாளே; அவள் கூறிய புத்திகளெல்லாம் நம் செவிக்கேருமற் போயிற்றே; அவள், நல்ல மார்க்கத்தில் நடக்கும்படி நம்மைப் பன்முறைக் கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டுக் கொண்டாளே; அப்போதெல்லாம் நாம் அவளைக் கடிந்து கொண்டோமே யன்றிச் சிறிதும் கொண்டாட வில்லையே; நாம் ஏதேனும் நன்மார்க்கத்திலிருந்து பிழைப்பதற்காக நமக்குப் பூபாலப்பிள்ளை மிக்க பணமும் கொடுத்தாரே; அதை வைத்துக்கொண்டு நாம் ஒழுங்காக ஆப்பிரிக்கா போய்ச் சேர்ந்து நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கலாமே; கப்பலில் கொள்ளையடிக்க நினைத்து அதையும் கெடுத்துக் கொண்டோமே; அந்தக் கப்பித்தான் முதலிய எல்லோரும் நாம் சாமியார் வேடம் தரித்திருந்ததற்காகவே நமக்கு மிக்க மரியாதை செய்தார்கள். அதற்குத் தக்கபடி நாம் கௌரவமாக நடந்துகொள்ள வில்லையே; மிக்க புண்ணியம் பொருந்திய குருவின்வேடத்தை நாம் பாதகச் செயலுக்கு உபயோகப் படுத்தினேமே; அந்தப் பாதகத்திலேயே நமக்கு இத்தகைய பெருங்கேடு சம்பவித்தது; உலகத்திலுள்ள ஜனங்கள், சாதுக்கள் மீது மிக்க விசுவாசமுடையவர்களாதலால், அவர்களை எவ்விஷயத்திலும் நம்புகிறார்கள். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு நம்மைப்போன்ற மோசக்காரர்கள் சன்னியாசி வேடத்தைத் தாங்கிக்கொண்டு பற்பல அக்கிரமங்களை இரகசியமாய்ச் செய்து கபடமற்ற மனிதர்களை ஏமாற்றுகிறார்கள். அத்தகைய பாவிகளுக்கெல்லாம் இக்கதிதான் நேரும்; இனி

நாம் என்ன செய்தாலும், எது நினைத்தாலும், எதைப் பேசினாலும் இந்தக் கொடிய மரணத்தினின்றும் தவறப்போகிறதில்லை. எவரும் நம்முடைய ஆபத்தை தீர்க்கப்போகிறதுமில்லை; கடவுள் நினைத்தால் மட்டும் நம்மைக் காப்பாற்றலாமேயன்றி, வேறொருவராலும் அது முடியவே முடியாது; ஆதலின், இப்பொழுதாவது நமக்கு நல்ல கதி கிடைக்கும்படி நாம் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்; பிறகு ஆகிறது ஆகட்டும்'! என்று, 'வாழ்கிற நாளில் மாபாதகங்களைச் செய்துவிட்டுச் சாகிறநாளில் சங்கரா! சங்கரா!!' என்பதுபோல, எல்லா ஆட்டங்களும் ஆடிமுடிவான சமையத்தில் தெய்வத்தை துதிக்கத் தொடங்கி, "ஆண்டவனே! நாங்கள் எவ்வளவு பாதகங்களைச் செய்திருந்தாலும் மன்னித்து எங்களை இப்போது காப்பாற்ற வேண்டும்; நின்னையன்றி எங்களுக்கு வேறு துணையில்லை" என்று கடவுளை வேண்டினார்கள். இதுவரையில் தெய்வ சிந்தனையே இல்லாதிருந்த இவர்களுக்கு இப்பொழுதுதான் அஃதுண்டாயிற்று. இஃதிவர்கள் பிராணன் போவதற்கஞ்சியுண்டானதேயன்றி இயற்கையான பக்தியால் உண்டானதன்று. இது முந்தியே உண்டாகியிருந்தால் இவர்களுக்கு எவ்வளவோ அனுகூலத்தை உண்டாக்கியிருக்கும். எனினும், ஈசுவரநாமம் ஒருவர் நினைத்தவரையிலும், உச்சரித்தவரையிலும் அவருக்கு ஏதேனுமொரு அனுகூலத்தைச் செய்யாமற் போகாது. ஒருவன் எவ்வளவு பாதகங்களைச் செய்திருப்பினும் மரணதருவாயிலாவது ஒருமுறையேனும் ஈசுவரநாமத்தை உச்சரித்தால், ஈசுவரன் அத்தகையினரையுங் கூடக் காப்பாற்றுவாரென்பது சாஸ்திரங்களின் துணிபு. இதுபற்றியே பெரியோரும், "மெய்யும் பொய்யாகி விடுகின்றபோ தொன்று வேண்டுவன் யான், கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே," என்று கூறினார்கள்.

இவர்கள், இவ்வித நிலைமையிலிருக்க மற்ற திருடர்கள், உயிர் போகப்போகிறதே என்னும் பயத்தால் ஒன்றும் தோன்ருமல் சித்தப் பிரமை கொண்டவர்களைப் போலத் தேகம் மதர்த்து முகம் சவம்போல் வெளுத்து ஆவென்று வாயைத் திறந்தபடி நின்ருர்கள். அவர்களுடைய உடம்புகள் தாமே நடுங்கிக்கொண்டிருந்தன. அத்தருணத்தில், ஈவிரக்கமற்றுப் பிணம் பிடுங்கித்தின்னும் அந்தப் பேய்க்கூட்டத்தார், புகை வண்டியின் எந்திரம் ஊதுவதுபோல் ஒருவகைக் கூச்சலிட்டுக்கொண்டு அந்த வீட்டின் கதவுகளை அடைத்துப் பூட்டிவிட்டுத் திருடர் கூட்டத்தாரைக் கட்டவிழ்த்துவிட்டு நடுமுற்றத்தில் கூட்டமாக நிறுத்தினர்கள். ஆனல் கேசவனையும், சுப்பனையும் அவிழ்த்து விடவில்லை, ஏனென்ருல், மற்றவர்களைக் காட்டிலும் இவ்விருவரும் நன்ருகக் கொழுத்துப் பெருத்து மாமிச புஷ்டியோடு கூடியிருந்தார்கள். அதனல், இவ்விருவரையும் பண்டிகையன்று அறுக்கவேண்டுமென்றும், அவ்விருவர் மாமிசமும் அவ்வூரார்க்கு அன்றைக்குப் போதுமென்றும் அந்த இராக்ஷஸக்கூட்டத்தார் தீர்மானித்து அவர்களை நிறுத்தி வைத்தார்கள். இந்த உண்மை அத்திருடர் கூட்டத்தாருக்குத் தெரியாததலால், அதன் காரணத்தை உணராமல் விழித்தார்கள்.

மற்றவர்களைக் கொல்லுதற்கு ஆயுதங்களுடன் சென்ற அந்த நரமாமிச பக்ஷணக் கூட்டத்தார் ஏன் அவர்களைக் கட்டவிழ்த்துவிட்டு முற்றத்தில் கொண்டுவந்து நிறுத்தினர்களென்ருல், அவர்கள் நரமாமிச முண்பதில் ஒரு விநோதமான செய்கையுடன் சந்தோஷங் கொண்டாடி அவர்களை வதைத் துண்பது வழக்கம். எப்படி யெனில் அவர்கள் மாமிசத்துக்காக அறுக்கத்தக்கவர்களைக் கட்டிப் போட்டு ஆட்டை அறுப்பதுபோல் கழுத்தில் கத்தியை

வைத்துத் திடுமென அறுத்துவிடுவ தில்லை. தப்பித்து ஓட முடியாத ஒரு வெளியிடத்திலோ, கோட்டையின் மத்தியிலோ, வீட்டின் நடுவிலோ அவர்களை நிராயுதபாணிகளாக நிறுத்திவிட்டுத் தாங்கள் ஒவ்வொருவரும் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு பயங்கரமான தொனியுடனும், வீராவேசத்துடனும், உற்சாகத்துடனும் வளைந்து புலிகளைப்போல் பாய்ந்து மாறி மாறி ஓடி ஓடி அவர்கள்மீது குத்தியும் வெட்டியும் கூத்தாடுவார்கள்; கொலையுண்போர் வெறுங் கையுடன் உயிர்போவதற்கு அஞ்சி அவர்களுடன் எதிர்த்துக் குத்துச் சண்டை, மல் யுத்தம் போடத் துணிந்தாலும் அந்தப் பேய்க் கூட்டத்தார் அதைச் சட்டைப் பண்ணுமலே மேலும் மேலும் ஆயுதங்களால் அவர்களைக் குத்தி வருத்துவார்கள். இப்படியே நெடுநேரம் செய்து, அவர்கள் உபத்திரவம் சகிக்காமல் அங்கும் மிங்கும் ஓடிக் கதறிக் கதறித் தேகமெங்கும் இரத்த மொழுகச் சுழன்று வீழ்ந்து பலமொடுங்கிய பின் அவர்களைத் துண்டுகளாக அறுத்துச் சித்திரவதை செய்வார்கள். இவ்வாறு செய்து அந்த மாமிசத்தை உண்டால்தான் அப் பைசாசங்களுக்குத் திருப்தி உண்டாகும். "புலிக்குக் கொண்டாட்டம் ஆட்டுக்குத் திண்டாட்டம்," என்பது போலும், "பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்," என்பது போலும், "நண்டுக்குத் திண்டாட்டம் நரிக்குக் கொண்டாட்டம்," என்பது போலவும் இந்தச் செய்கை திருடர் கூட்டத்தாருக்குத் திண்டாட்டமாகவும், இராக்ஷஸ கூட்டத்தாருக்குக் கொண்டாட்டமாகவு மிருந்தது. உயிர்க் கொலை செய்து ஊனுண்ணும் பாவியர், ஜீவஹிம்சையைப் பற்றிச் சிறிதுமெண்ணார். பிராணிகள் துன்பப்படுவதெல்லாம் அவர்களுக்கு ஆனந்தமாகவேயிருக்கும். ஒரு பூனையைப் பிடித்தால் அதை உயிருடன் அங்கு மிங்கும்

போம்படி எறிந்து விளையாடி ஆனந்தங்கொண்டாடும். அதனால் எலிக்குண்டாகும் வேதனைக்கோ அளவில்லை. இப்படியே கொடிய மிருகங்களாகிய புலி முதலியவை களும் செய்யும். இவற்றைபோலவே மிருக சுபாவமுடைய மனிதர்களும் நெஞ்சம் திடுக்கிடும்படியான இக்கொடிய செய்கைகளை அஞ்சாது செய்வர். இத்தகைய மகா கொடூரமான செய்கைகள்கூட மனிதரிடத்தில் இருக்குமா என்று சிலர் சந்தேகிக்கக்கூடும். சில வருடங்களுக்கு முன் ஒரு பயாஸ்கோப் காட்சியில், அநேகம் மேல் நாட்டுப் படைவீரர்கள், ஒரு வெளியிடத்தில் கொழுத்த எருதொன்றை நிறுத்தி ஆயுதங்களுடன் வளைந்துகொண்டு, அது பயந்து ஓடஓட அதனைத் தூக்கிக் குத்திக் கதறக் கதறக் கொன்று அஃதிறந்தபின் அதனுடலை ஆகாரத்திற் காக இழுத்துக்கொண்டு போனதைப் பிரத்யக்ஷமாகப் பார்த்திருக்கின்றோம். நாகரிகமுடைய மனிதர்களெனக் கரு தப்படும் இவர்களே நெஞ்சிரக்கமின்றி இத்தகையக் காரி யத்தைச் செய்து களிப்புறும்போது காட்டுமிராண்டிகளா யிருக்கும் நரமாமிச பக்ஷணிகள் ஏன் செய்யமாட்டார்கள்?

ஆதலின், அந்த இராக்ஷதக் கூட்டத்தார் இவ்வாறு சித்ரவதை செய்து ஆனந்தங்கொண்டாடும் பொருட்டே அவர்களை அப்படிக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அத் திருடர் கூட்டத்தார் பலபேர்களாயிருந்தாலும், அவர்கள் தங்களைக் காட்டிலும் வலிமையிற் குறைந்தவர்களாதலா லும், கையில் ஆயுதம் இல்லாதவர்களாயிருப்பதாலும், தங்கள் கூட்டம் அதிகமாய் இருப்பதாலும், அவர்கள் ஓடி விடாதபடி அவ்வீட்டின் கதவுகளெல்லாம் மூடப்பட் டிருப்பதாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியா தென்று கருதியே அந்த நரமாமிச பக்ஷணிகள் அவ்வாறு நிர்ப்பயமாய் யாதொருவித சந்தேகமுமின்றி உற்சாகத்

துடன் அவர்களைக் கட்டவிழ்த்துக்கொண்டு வந்து வாசலில் நிறுத்தினார்கள்.

அவ்வாறு கொண்டு வந்து நிறுத்தியவுடன் அந்தோ! அத்திருடர்களெல்லோரும், மாமிச வியாபாரிகளால் வெட்டுவதற்குக் கொண்டுவந்து ஓரிடத்தில் திரட்டி நிறுத்தப்பட்ட ஆடுகளைப்போலத் தலைகுனிந்து கூட்டமாக நின்றார்கள். உடனே இராக்ஷதர்கள், தங்கள் கொடூரமான வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அந்தோ! அவர்கள், நரிகளைப்போல் ஊளையிட்டுக்கொண்டும், நாய்களைப்போல் குலைத்துக்கொண்டும், சிம்மங்களைப்போல் கர்ச்சித்துக்கொண்டும், குதிரைகளைப் போல் கனைத்துக்கொண்டும், இடியைப்போல் முழங்கிக்கொண்டும் ஆவேசங் கொண்டவர்களைப்போல் வீறிட்டலறித் தலை விரித்தாடி ஆனந்தப் பாட்டுப்பாடிப் பற்களை நற நற வென்னக் கடித்து ஆயுதங்களை ஓங்கிப் பிடித்தபடி ஓடி ஓடி அத்திருடர்களைக் குத்தினார்கள்; சிலர் மிதித்தார்கள். இவ்வாறு செய்யவே திருடர்கள், சாவுக்கஞ்சி "ஐயோ! அப்பா!!" என்று கதறியழுது நாலாதிக்குகளிலும் ஓடி ஓடித் திரும்பினார்கள். அவர்கள் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் இராக்ஷதர்கள் எதிர் சென்று அவர்களை வாளால் வெட்டினார்கள். அதனால், அவர்கள், வேடர் வலைக்குள் அகப்பட்ட மான்களைப்போல் ஓடி ஓடிச் சுழன்று சுழன்று பெருமூச்சு விட்டு முகத்தைச் சுழித்துக் கத்தித் திணறினார்கள். அவர்களுடைய தேகங்களில் எங்கே பார்த்தாலும் கத்தி வெட்டுகளால் பற்பல காயங்களுண்டாய் இரத்தம் தாரை தாரையாய் ஒழுகிக்கொண்டிருந்தது. அந்த முற்றத்தில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று. வெட்டுப்பட்டதால் பற்பல தசைத்துண்டுகள் ஆங்காங்கே சிதறி வீழ்ந்தன; கேசவன், சுப்பன் இவர்களுடைய முக

திலும் இவர்களுடைய இரத்தத்துளிகள் தெறித்துக்கொண்டிருந்தன. அப்போது, அவ் விருவரும், "அடே அப்பா! இதென்ன கோரக்காட்சி; இப்படியும் மனிதரை வதைப்பாண்டா! நமக்கும் இக்கதிதானே நேரிடப்போகின்றது" என்று நடுங்கிப் போனார்கள். பயத்தால் கண்களை இறுக்கி மூடிக்கொண்டார்கள். இடையிடையில் அங்கே என்ன நடக்கிறதென்று திறந்து திறந்து பார்த்து அக் கோரச் செய்கைகளைக் காணும்போதெல்லாம் மூடிக்கொள்வதும், மீண்டும் திறந்து பார்ப்பதுமா யிருந்தார்கள். அவர்களுக்கு அவ் விடத்திலிருப்பது பெரிய நரகவாதனையா யிருந்தது. அதனால் அவர்கள், "ஐயோ! இந்தக் கோரச் செய்கையைப் பார்த்துக்கொண் டிருப்பதைக் காட்டிலும் இறந்து போவது நலமாயிருக்குமே; நாம் பரம கோரமான கொலைகளைச் செய்திருந்தாலும் இந்தப் பயங்கரமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லையே" என்று செத்த சவங்களைப் போல் முகம் வெளுத்து நின்றார்கள். இதற்குள் வெட்டப்பட்ட அத் திருடர்களில் சிலர் மயங்கி வீழ்ந்து கால் கைகளை உதறித் துடித்துக் கொண்டிருந்தார்கள். எஞ்சி நின்ற சிலரையும் அந்த நரமாமிச பக்ஷணிகள் சிறிது நேரத்திற்குள் துள்ளத் துடிக்கக் குத்திக் கொன்று விட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்ட திருடர்கள் எல்லோரும் கழுத்தையறுத்துக் கிடத்தப்பட்ட வெள்ளாடுகளைப் போலக் கால்மாடு தலைமாடாகக் கிடந்தார்கள். அப்படிக்கிடந்த பிணங்களைப் பார்த்தவுடன், கேசவனும் சுப்பனும், "ஆ! ஆ!! மனிதர்கள் செருக்கால் செய்யும் தீமைகளுக்குத் தக்கபயனைத் தவறாது அனுபவிப்பார்கள் என்பதை நாம் பிரத்தியக்ஷமாகக் கண்டோம்; இவர்கள் எத்தனை ஏழைகளைத் துன்புறுத்தினார்களோ இக்கதி யடைந்தார்கள்! இனி நாம் அடையப்

போவதும் இந் நிலைமை தான்; கடவுள் சித்தம் எப்படி யோ?" என்று பிரமை கொண்டு நின்றார்கள்.

இவ்வாறு அத் திருடர்களாகிய மனித மிருகங்கள் கொல்லப் பட்டவுடன், இராக்ஷச கூட்டத்தார் எல்லோ ரும் அப் பிரேதங்களை ஓரிடத்தில் எடுத்துப் போட்டுத் துண்டு துண்டாக அறுத்துக் குவித்துத் தசைகளைப்பங்குப் போட்டுக் கொண்டார்கள். பங்கு போடுவதற்கு முந்தியே சில சிறுவர்களும் கிழவர்களும் பெரிய பெரிய மாமிசத் துண்டுகளை யெடுத்து அங்கேயே நெருப்பை மூட்டி அதிற் போட்டுச் சுட்டுத் தின்றார்கள். கேசவனும், சுப்பனும் இப்படி நரமாமிசத்தை விருப்புடன் தின்பவர்களைக் கேள்விப்பட் டிருந்தார்களே யன்றி நேரில் பார்த்ததில்லை. இப்போ பிரத்தியக்ஷமாகப் பார்த்தவுடனே "அடடா! இவர்களுக்கு நரமாமிசத்தில் என்ன விருப்பு; அதைச் சமையல் செய்வதற்கு முன் இவர்கள் சுட்டும் தின்கிறார் களே!" என்று அச்சமும், திகிலும், அதிசயமும் அடைந் தார்கள்.

பின்னர், அந்த இராக்ஷஸ கூட்டத்தார்கள், தாங்கள் பங்கிட்டுக்கொண்ட மாமிசங்களைக் கொண்டு போய்த் தங்கள் தங்கள் வீடுகளில், உப்புங் காரமும் சேர்த்து வேகவைத்து அன்றிரவு சில குடிவகைகளுடன் சேர்த்துத் தின்று சந்தோஷங் கொண்டாடினார்கள். அன்று அவர் களுக்குப் பெரிய தீபாவளிக் கொண்டாட்டமா யிருந்தது. ஆகாரம் முடிந்தவுடன் எல்லோரும் அவ் வூருக்குப் பொது வான வெளியிடத்திற் கூடி ஒருவித பேயாட்டம் ஆடி ஆனந்தங் கொண்டாடினார்கள். இவர்கள் கொண்டாட் டம் இவ்வாறு நடந்துகொண் டிருக்கும்போது கேசவன், சுப்பன் ஆகிய இருவருடைய நிலைமையும் மிகப் பரிதாபமா

யிருந்தது. அவர்கள் ஆகாரம் உண்டு நெடுநேரமாய் விட்டபடியால் அவர்களுக்குத் தாங்க முடியாத பசி கிளம்பி விட்டது. துக்கத்தாலும் அச்சத்தாலும் நாவறண்டு தாகம் அதிகரித்து விட்டது. அவர்கள் பசியாலும், தாகத்தாலும், சோகத்தாலும் மயங்கி, "அந்தோ! நாம் மரணமடையப் போவதைப் பற்றி உண்டாகும் துக்கத்தைக் காட்டிலும், பசி வேதனையும், தாகத்தின் சங்கடமும் அதிகமா யிருக்கின்றனவே; நமக்கு யார் இங்கே ஆகாரமளிக்கப் போகின்றார்கள்; நம்மையே கொல்லக் கருதியிருக்கும் இக் கூட்டத்தார்கள் நமக்கு உணவும் கொடுப்பார்களா? இப்படியே நாம் பட்டினி கிடந்து வருந்தி இவர்கள் கத்தி வெட்டால்மடிந்து போவது தான் நமக்கேற்பட்ட முடிவு; நாம் செய்த பாதகங்களுக்கு இவை மாத்திரமா நேரும்; இன்னும் எத்தனையோ துயரங்களெல்லாம் நேரும்; அடுத்த நிமிஷம் என்ன நடக்குமோ நமக்கொன்றும் தெரியாது; நம் உயிர் போவது இப்போதோ, பின்னையோ, வேறெந்த நேரமோ?" என்று பரிதபித்துக்கொண் டிருந்தார்கள்.

அத் தருணத்தில் சந்தோஷங் கொண்டாடிக் கொண்டிருந்த நரமாமிச பக்ஷணக் கூட்டத்தார், தங்களுடைய ஆட்டங்களெல்லாம் முடிந்த பிறகு கட்டப்பட்டுக் கிடக்கும் கேசவனையும், சுப்பனையும் நினைத்துக்கொண்டு, "ஓ! நாம் இந்த மகிழ்ச்சியால், அந்தக் கொழுத்த பயல்களாகிய இருவரையும் கவனியாம லிருக்கிறோம்; ஐயோ! அவர்களுக்கு ஆகாரமும் கொடுக்கவில்லையே; உணவில்லா விட்டால் அவர்களுடைய தேகம் இளைத்துப் போகுமே; உடம் பிளைத்தால் கொழுப்பில்லாமற் போய்விடுமே; கொழுப்பில்லா விட்டால் அவர்களின் மாமிசம் ஒன்றுக்கு முதவாது; ஆதலால் அவர்க்கு நல்ல ஆகாரம் கொடுத்துப்

புஷ்டி யேற்றவேண்டும்; அதற்கு நாம் இப்போது சாப்பிட்ட நரமாமிசத்தோடு கூடிய ஆகாரம் தான் சிறந்ததாகும்; இது தான் சீக்கிரத்தில் அவர்களுக்குக் கொழுப்பேற்றிவிடும்," என்று, கோழிக்கறியைச் சமைத்துண்டவர் அதோடு சேர்ந்த சோற்றையே மற்றொரு கோழிக்கு ஊட்டுவதுபோல், சிலர், அந்த நரமாமிசத்தோடு ஏதோ ஒருவகை மாவினால் ஆக்கப்பட்ட கழியை எடுத்துக் கொண்டு, கேசவனுக்கும், சுப்பனுக்கும் ஊட்டுவதற்குப் போனார்கள். ஐயோ! என்ன அதிசயம்! கேவலமான பிராணிகளானால், தங்களுடைய இனத்தின் தசையையே தாம் உண்ணும்; மனிதர் மனிதர் தசையைத் தின்பரா! காட்டு மிராண்டிகளாகிய நரமாமிச பக்ஷணிகள் தாம் அவ்வாறுண்பார்கள்; மூடர்களானாலும், சிறிது பகுத்தறிவுள்ள கேசவனும். சுப்பனும் அதை எப்படித் தின்னுதல் கூடும். அந்த இராக்ஷதர்கள், அவர்களை, தங்களுக்கு ஆகாரமாகும் அற்ப மிருகங்களைப் போலவே கருதியிருப்பதால், அவர்களும் தாங்களுண்ட நரமாமிசத்தை உண்பார்களென நினைப்பது அறிவீனர்களுடைய செய்கையல்லவா? அதனாலேயே அவர்களும் அப்படி நினைத்தார்கள்.

பின்னர், அங்ஙனம் ஆகாரம் கொண்டு சென்றவர்கள் கேசவனிடத்தும், சுப்பனிடத்தும் போய் அந்த நரமாமிச ஆகாரத்தை அவர்களுடைய வாய்க்கு முன்னே நீட்டி உண்ணும்படி அவர்களுக்கு ஜாடை காட்டினார்கள். அவ்விருவரும் தங்களுக்கிருந்த பசிக் கொடுமையால் அந்த ஆகாரம் வேறெதுவாகவேனு மிருக்கக் கூடுமென்று அதை உண்ணலாமென்று ஆவலுடன் பார்த்தார்கள். அந்தோ! அது மாமிசத்தோடு கூடியதாயிருக்கவே, அந்த மாமிசம் தங்கள் சிநேகிதர்களுடைய இறைச்சியென்றே தெரிந்து

கொண்டார்கள். அவ்வாறு தெரிந்து கொண்டதும் அவர்கள், "ஐயோ! இதென்ன கருமம்? நம்மைப்போன்ற மனிதருடைய மாமிசத்தை-அதிலும் நம்முடைய சிநேகிதருடைய மாமிசத்தையே எப்படி நாம் உண்பது! எவ்வளவுதான் பசி யிருந்தாலும் இந்த அருவருப்பான ஆகாரத்தை எப்படி உண்ணமுடியும்! 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா?' சீ! சீ!! நம் உயிர் போனாலும் போகட்டும்; இதை உண்ணவே கூடாது," என்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். இவர்கள் முகத்தைத் திருப்பின பக்கங்களிலெல்லாம் அந்தக் காட்டு மிராண்டிகள் ஆகாரத்தைக் கொண்டுபோய் எதிரில் வந்தினார்கள். அவர்கள் எவ்வளவோ பாடுபட்டும் கேசவனும் அவன் மகனும் முகத்தைச் சுளித்து அங்குமிங்கும் திருப்பிக் கொண்டே யிருந்தார்கள். இராக்ஷதர்கள், இவர்கள் ஆகாரமுண்ணாவிடில் புஷ்டி குறைந்துபோகுமென்று இவர்களுக்கு உணவூட்ட மிகுந்த அக்கரை உடையவர்களாய் இருந்தபடியால் இவர்கள், ஆகாரமுண்ண மறுக்கவே, "என் கழுதைகள் சாப்பிட மாட்டேனென்று பிடிவாதம் செய்கின்றன," என்று மிக்க கோபங்கொண்டு, சவுக்கால் இவர்களைப் பலங்கொண்டமட்டும் பளீர் பளீர் என்று மாறி மாறி அடித்து, "சாப்பிடுங்கள்! சாப்பிடுங்கள்!!" என்று அவ்வாகாரத்தட்டை இவர்கள் வாய்க்கு முன்னே மீண்டும் மீண்டும் நீட்டினார்கள், இவர்கள் சவுக்கடிபட்டும் அதற்கிசையவே இல்லை. முடிவில் அந்த இராக்ஷதர்கள், "நாம் இதைக் கையால் எடுத்து இவர்களுடைய வாயில்வைத்துத் திணித்து உண்ணும்படி இவர்களை உதைக்கவேண்டும்; அப்படிச் செய்தால்தான் இந்த மதம்பிடித்த பன்றிகள் உண்ணும்," என்று தீர்மானித்து அந்த நரமாமிசத்தையும் களியையும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து உருட்டிக்

கொண்டு கேசவனுக்கு ஓர் உருண்டையையும், சுப்பனுக்கு ஓர் உருண்டையையும் வாயில் வைத்துத் திணித்துப் பலாத்காரமாக விரலால் உள்ளே தள்ளிவிட்டு "உண்ணுங்கள்," என்று இவர்களுடைய விலாவில் குத்தினார்கள்.

ஐயோ! அவ்விருவரும் என்ன செய்வார்கள் பாவம்! அந்த நரமாம்சக் களி உருண்டைகள் தங்கள் வாய்க்குள் நுழைந்தவுடனே அவர்களுடைய குடல்களை யெல்லாம் வெளியிற் கொண்டுவந்து விட்டன. அதனால் அவர்கள், "அட சனியனே! இதென்ன கருமம்," என்று ஓங்காரித்து வாந்தியெடுத்து விட்டார்கள். ஓ என்ற ஓங்காரிப்பு அவர்களுடைய வாயிலிருந்து வெளிக் கிளம்புவதற்கு முந்தியே வயிற்றின் அடிம்பாகத்திலிருந்து வந்த வாந்தியானது வாயிலிருந்த மாமிசக் களித்துண்டைத் தள்ளிக்கொண்டு எதிரில் நின்ற இராக்ஷதர்களுடைய முகத்தில் அடித்துவிட்டன. எத்தகைய கேவலமான நிலைமையிலுள்ளவர்க்கும் வாந்தியென்றால் மிக்க அருவருப்பே உண்டாக்குமாதலின், அவர்கள் நரமாமிசம் உண்ணும் காட்டுமிராண்டிகளா யிருந்தாலும் இந்த வாந்தி முகத்தில் அடித்த மாத்திரத்தில் அவர்களும் ஓங்காரித்துக் குனிந்தபடி ஆகாரம் கொண்டுவந்த பாத்திரங்களை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுக் கிஸ்புஸ் என்று அவர்கள் பாஷையில் எதை எதையே பேசிக்கொண்டு ஓடி விட்டார்கள். அப்படி ஓடியவர்கள், "அந்த மனிதர்களுக்கு இந்த ஆகாரம் பிடிக்கவில்லை; அதனாலேயே அவர்கள் வாந்தியெடுத்து விட்டார்கள்; ஆதலால் நாளைக்கு அவர்களுக்கு வேறே ஆகாரம் தயார் செய்துகொடுக்கலாம்; இன்றைக்கு அவர்களை அடித்து வருத்தினால் அவர்களுடைய தசை கன்றிக் கெட்டுப் போய்விடும்; அதனால் நாம் பண்டிகையன்று உபயோகிக்கும் போது சுவையாயிராது," என்று பேசிக்கொண்டு முகத்

தைக் கழுவித் துடைத்துக்கொண்டு மற்ற கூட்டத்தாரிடம் அவ்விஷயத்தைத் தெரிவித்தார்கள், பின்னர் எல்லோரும் ஆலோசனைசெய்து அப்படியே செய்யலாமென்று முடிவுசெய்து, இரண்டுபேர்களை, கேசவனுக்கும் சுப்பனுக்கும் காவலாகப் படுத்துக்கொள்ளும்படி செய்து விட்டு அவர்களுடைய வீடுகளில் சயனித்துக் கொண்டார்கள். காவலுக்காக ஏற்படுத்தப்பட்ட இருவரும் ஆளுக்கொரு நீண்ட வாளை யெடுத்துக்கொண்டு கேசவனும், சுப்பனும் கட்டப்பட்டிருக்கும் அந்த வீட்டிற்குப் போய்க் கதவை மூடித் தாளிட்டு விட்டு உட் பக்கத்திலேயே கதவின் ஓரமாகப் படுத்துக் கொண்டார்கள். அன்றைக்கு அவர்களுக்கு விசேஷமான நரமாம்ச ஆகாரமாதலின், வெகு சீக்கிரமாகவே தூங்கி விட்டார்கள். அதனால் கேசவனும் சுப்பனும் பேசிக்கொள்ளச் சிறிது வசதி ஏற்பட்டது.

40-வது அத்தியாயம்

அந்த வீடெங்கும், முன்னே அறுக்கப்பட்ட மனிதர்களின் இரத்தம் சிந்திக் கிடந்தபடியாலும், நரமாமிசம் பற்பல விடங்களில் சிதறிக்கிடந்த படியாலும், ஒரே துர்நாற்றமும் கவுலும் வீசிக்கொண்டிருந்தன. கேசவனுக்கும் சுப்பனுக்கும் இந்த நாற்றங்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அது குடலைப் புரட்டிக் கொண்டே யிருந்தது. அவர்களுக்கு இந்த அருவருப் பொருபக்கம், மரணம் குறுகி யிருப்பதாலேற்பட்ட திகிலொருபக்கம் தாங்கமுடியாத வேதனையைச் செய்து கொண்டிருந்தன. அதனால் சுப்பன் கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு தன் தந்தையாகிய கேசவனை நோக்கி, "அப்பா! நாம் முன்னிருந்த நிலைமை யென்ன? இப்போதடைந்திருக்கும் நிலைமை யென்ன?

இவற்றை நினைக்கும்போது என் நெஞ்சம் வெடிக்கிறது போலிருக்கிறது. அந்தோ! நம்முடைய நேயர்களுடன் நாமும் கொல்லப்பட்டிருந்தால் இந்நேரம் அந்த இராக்ஷஸப் பேய்களுக்கு இரையாகியிருப்போம். ஏதோ தெய்வகிருபையால் பிழைத்திருக்கின்றோம்; எனினும் இந்தப் பிழைப் பொரு பிழைப்பல்ல; நம்மை நாளைக்கோ அல்லது அதற்கு மறுநாளோ கொல்லவே அவர்கள் தீர்மானித்திருப்பார்கள். அப்படி நாம் கொல்லப் படுவதற்குள் அடைந்தவைகளும், அடைகின்றவைகளும், இனி அடையப் போகின்றவைகளுமாகிய வேதனைகளோ அளவற்றனவா யிருக்கின்றன. அடே அப்பா! நம் சிநேகிதர்களை அந்தக் கன்னெஞ்சர்கள் சித்திரவதை செய்ததை நினைக்கும்போது என் ஈரல் வெடிக்கிறதே; உடலும் ஆவியும் ஒடுங்குகின்றனவே; ஆ! ஆ! அந்தப் பாவிகள் அவ் அருவருப்பான ஆகாரத்தை நம் வாயிற் புகுத்தி நம்மை உண்ணச் சொல்லி அடித்தார்களே! ஐயோ! அந்த ஞாபகம் இன்னும் என் குடலை வெளியிற் கொண்டுவருகின்றதே; இப்பொழுது நம் நிலைமை கொல்வதற்குத் தூக்கு மரத்தடியில் நிறுத்தப் பட்டவர்களுடைய நிலைமை போன்றதாய் யிருக்கின்றதே; இனி இந்த ஆபத்தினின்றும் நாம் எப்படித் தப்பப்போகின்றோம்; அந்தச் சண்டாளர்கள் நம்மை மட்டும் இவ்வாறு உயிருடன் வைத்து வேதனை யடையச் செய்வதைக் காட்டிலும் முந்தியே கொன்றிருந்தாலும் நல்லாய் இருக்குமே; இப்படியும் உலகத்தில் ஒரு வேதனை யிருக்குமென்று நான் நினைத்ததே யில்லையே; தப்பித்துக்கொண்டோடுவதற்கு ஏதேனும் மார்க்கம் செய்யலாமென்று நினைத்தால் நம் கால் கைகள் கட்டப்பட்டிருப்பதால் அது முடியாத காரியமா யிருக்கின்றதே; இனி என்ன செய்கிறது?" என்று வருந்தினேன்.

அப்போது கேசவனும் மிக்க மனக்குழப்பமடைந்திருந்தாலும் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, "நம் புத்திரனே சிறு வயதுடையவனாதலின் இந்தப் பெரிய பயங்கரமான கொடுஞ் செயல்களைப் பார்த்தவுடன் நடு நடுங்கிப் போயினன்; அவனைப்போலவே நாமும் இத்தருணம் மனங்கலங்கினால் இந்த ஆபத்தைவிட்டு நிவர்த்தி அடைதல் முடியாது; நாம் இதுவரையிலும் நினையாமல் இப்போதேனும் தெய்வ சிந்தனை செய்ததால் இப்போது பிழைத்திருக்கிறோம்; எதையும் யோசிப்பதற்குச் சிறிது சமயமும் வாய்த்திருக்கின்றது; ஆதலின், இவனுக்கு ஏதேனும் தேறுதல் சொல்லித் தேற்றிவிட்டுப் பின், நாம் பிழைப்பதற்கு ஏதேனும் மார்க்கம் அகப்படுமா என்பதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்யவேண்டும்," என்று துணிந்து சுப்பனை நோக்கி, "மகனே! நீ கோழைத்தனமாக இந்தச் சமயத்தில் தைரியத்தை விட்டுவிடாதே; 'சுருக்கத்தில் துணிவு' என்றபடி ஆபத்து வந்த சமயத்தில் எதற்கும் துணிந்து நிற்கவேண்டும்; நம் சிநேகிதர்களெல்லாம் மடிய நாம் மாத்திரம் தெய்வச்செயலால் உயிர் தப்பினோம். எனினும் நாமும் அடுத்த சமயத்தில் மடியவேண்டியவர்களே; எப்படியிருந்தாலும் மடியத்தான் போகிறோம். நம் நிலைமை அப்படி இருப்பதால் இந்த ஆபத்தினின்று தப்புவதற்கு ஏதேனும் முயற்சி செய்வோம்; அஃது அனுகூலப்பட்டால் பிழைத் தோடுவோம்; அப்படியின்றேல் மடிவோம்; இப்பொழுதென்ன யோசனை செய்யலாம்; சற்று ஆலோசித்துப் பார்," என்றான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடனே சுப்பன் சற்று தெளிவடைந்து சிறிதுநேரம் யோசித்து, "நமக்கிந்தக் கட்டுகள் மாத்திரம் இல்லாதிருந்தால் இங்குப் படுத்திருப்பவர்கள்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இவர்களைக் கட்

டிப் போட்டுவிட்டேனும், கொன்று விட்டேனும் ஓடிவிடலாம்; இந்தக் கட்டுக்களை எப்படி நிவர்த்திசெய்யமுடியும்?" என்றான். கேசவன், "மகனே! நீ புத்தி கலங்கியிருப்பதால் உன் யோசனை தப்பான மார்க்கத்தில் செல்கின்றது. நாம் கட்டுக்களை அறுத்துக் கொண்டாலும், இங்கே படுத்திருப்பவர்களைக் கட்டிப்போடவோ, கொல்லவோ முயற்சிப்பது பைத்தியக்காரத்தனமான யோசனையாகும்; அவர்கள் நம்மைக் காட்டிலும் மிக்க பலசாலிகள்; நம்மை ஒரே அழுத்தில் அழுத்திக் கொன்னுவார்கள்; ஒரு சமயம் பலம் குறைந்தவர்களாயிருந்தாலும் நாம் அவர்களைப் பிடித்துக் கட்டி வாயில் துணியடைக்கு முன் சத்தம் போடுவார்களேயானால் உடனே மற்ற இராக்ஷதர்களெல்லோரும் ஓடிவந்து நம்மைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். ஆதலால், நாம் ஏதேனும் உபாயத்தால் கட்டையவிழ்த்துக்கொண்டு சந்தடி செய்யாமல் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போக வேண்டும்; அப்படி ஓடும்போது ஒரு சமயம் இவர்கள் கண்டு துரத்தினாலும் மிக்க கதிகொண்டோடி இவர்களிடம் அகப்படாமல் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். அதிலும் அகப்பட்டுக் கொள்வோமானால் பின்னர் நம் தலையெழுத்தின்படி எதுவும் நடக்கட்டும்," என்றான் சுப்பன். "அப்படியானால் கட்டை அவிழ்ப்பதற்கு என்ன தந்திரம் செய்யலாம்?" என்றான்.

கேசவன், "நீ பேசாமலிரு; நான் அதைப்பற்றி யோசித்துப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அவனைக் கட்டியிருந்த விடத்திற்குப் பக்கத்தில் ஒரு கஜதூரத்தில் கொஞ்சம் கரிநெருப்புத் தழல் கிடந்தது. அது முன்னே, நரமாமிசம் சுட்டுத் தின்றவர்களால் எரிக்கப்பட்ட நெருப்பு. அது கேசவன், சுப்பன் இவர்களுடைய நல்ல காலத்தால் அணைந்து போகாமல்

புகைந்துகொண்டே கிடந்தது. அந்த இராக்ஷஸர்கள் அதிக யூகமில்லாதவர்களாதலால், அந்நெருப்பால், கேசவன் முதலியவர்களுக்கு என்ன சகாயம் ஏற்படப்போகிறதென்று அதனை அணைக்காம லிருந்துவிட்டார்கள். இப்போது அந்நெருப்பே அவர்களுக்குப் பெருஞ் சகாயமாய் விட்டது. இதை வாசிப்பவர்க்கு நெருப்பென்ன சகாயஞ் செய்ததென்று அதிசயமாகவே யிருக்கும். எனினும் அது சாதாரணமான செய்கையாகவே பின்னால் விளங்கும். கேசவன் மேற்கூறியபடி சிறிதுநேரம் யோசித்ததும் அந்த நெருப்பை நோக்கினான். அப்பொழுதே ஒரு பெரிய தந்திரம் அவன் மனதில் தோன்றிவிட்டது; அவன் முகம் சந்தோஷத்தால் பிரகாசித்தது. உடனே அவன், "ஆகா! இவ்வளவு எளிதான மார்க்கம் நமக்குச் சிக்கியிருக்கும் போது நாம் ஏன் வீணாக மனக்கலக்க மடைந்துகொண் டிருந்தோம்!" என்று மிக்க தைரியத்துடனே சுப்பனை நோக்கி, "புத்திரனே! இனி நாம் பிழைத்துக் கொள்வோம்; நீ பயப்படாதே," என்று சொல்லிவிட்டுக் கீழே உட்கார்ந்து அந்த நெருப்பின் பக்கம் தலையை நீட்டிப் படுத்தான். அவன் கைகள் ஒன்றாகச் சேர்த்து மணிக் கட்டுகளில் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. அதனால் கட்டினபடியே கைகளை ஒரு பக்கத்தில் நீட்டிக்கொள்ள வசதியிருந்தது. கால்கட்டு கணுக்கால்களில் கட்டப்பட்டிருந்தது. அதனால், கால்களையும் கட்டியபடியே நீட்டிக்கொள்ளலாம். இடுப்பில் ஒரு கயிறுபோட்டு ஒருமுழ நீளம் இடையில் விட்டு ஒரு மர முளையில் கட்டப்பட்டிருந்தது. அதனால் அவன் நிற்கவும், உட்காரவும், படுத்துக் கொள்ளவும் சௌகரிய மிருந்தது. இந்தச் சௌகரியத்தினாலேயே அவன் நெருப்புக்கு நேராகத் தலையை நீட்டிப்படுத்தான். அப்படிப் படுத்தபின், கைகளையும் அந் நெருப்பின் பக்க

மாகவே நீட்டினான். அந்தோ! அவன் எண்ணம் பூர்த்தியாக வில்லை. அந்நெருப்பு கைக்கெட்டினால் அதைக் கொண்டு ஓர் அநுகூலம் தேடிக் கொள்ளலாமென்று அவன் நினைத்தான். அந்நினைப்பின்படி கை நெருப்பின் சமீபத்தில் நெருங்கவில்லை. கைக்கும் நெருப்புக்கு மிடையில் ஒருசாண் தூரமே இடையிலிருந்தது. அதனால் கேசவன், 'ஐயோ! நம்முயற்சி பலிக்காமற் போயிற்றே!' என்று மனமிளைத்துப் போனான். அதனால் கொஞ்சநேரம் மனக் கலக்க மடைந்திருந்தான்.

அப்படி இளைத்தாலும் அந்தக் கேசவன், எதிலும் உயிருக்கஞ்சாமலும், சிரமத்தைப் பாராமலும், மிக்க ஊக்கத்துடனும் வேலை செய்யக்கூடியவனாதலின், சிறிது நேரம் சிந்தித்து, "இன்னும் ஒரு சாண் தூரமே யிருக்கிறது; கொஞ்சம் பலங்கொண்டு உடம்பை முன்னோக்கிச் சிறிது சிறிதாக இழுத்துப் பார்த்தால் கொஞ்சம் கொஞ்சம் முன்னே நழுவிச் செல்லக்கூடும்; அப்படியே கொஞ்ச நேரம் செய்துகொண்டிருந்தால் முடிவில் தீயின்மேல் கையைக் கொண்டுபோய் விடலாம்," என்று துணிவுகொண்டு அவ்வாறே மூச்சை அடக்கிக்கொண்டு வலுவாக உடம்பை நெருப்பின் பக்கமாக இழுத்து இழுத்து அசைத்துக் கொண்டிருந்தான். அதனால் இடுப்பில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் முறுக்கு சிறிது சிறிதாக நீண்டு கொடுத்தது. கொஞ்ச நேரத்தில் நெருப்புக்கு இரண்டங்குல தூரத்தில் அவன் கை நெருங்கிவிட்டது. அவ்வாறாகவே கேசவனுக்கு மிக்க தைரிய முண்டாகிவிட்டது. அவன், "இனி இருப்பது இரண்டங்குலமே; இதை ஒரே மூச்சில் கடந்து விடுவேன்," என்று முழுப்பலத்தையும் கூட்டி உடம்பை முன்னே இழுத்தான். இடுப்புக் கட்டின் கயிற்றில் மொடுமொடுவென்னும் சத்தம் கேட்டது. அது அதிகமாக

முறுக்குவிட்டு நீண்டு கொடுத்துவிட்டது. உடனே அவனுடைய கை நெருப்புக்கு மேலே நடுப்பாகத்தில் போய் நின்றது. அப்பொழுது கேசவன் போனவுயிர் வந்துவிட்டதென்றே கருதினான்; தன் முயற்சி கைகூடியதற்காகக் கடவுளைத் துதித்தான். உடனே சிறிதும் தாமதிக்காமல், 'கை வெந்துபோனாலும் அந்த இரணத்தைப் பின்னால் ஆற்றிக் கொள்ளலாம். இப்போது உயிர் தப்பினாற் போதும்' என்று துணிந்து கைகளின் மேல் கட்டப்பட்டிருக்கும் கயிற்றின் முடிப்புப் பக்கத்தை அந் நெருப்பின் மேற் படும்படி வைத்தான். அது சுவாலை விட்டெரியாத கரிநெருப்பா யிருந்தபடியால் மேலே நெருப்புச் சுடர் எழுந்து அவனுடைய கைகளிற்றாவி வேதனை செய்யவில்லை. அதனால் அவன் ஒரு பெரிய நெருப்புக் கங்கின்மேல் தன் கைக்கட்டின் முடிப்பை வைத்து நன்றாக அழுத்தினான். கட்டப்பட்ட கயிறு கற்றாழை நார்க் கயிறாதலால் இரண்டு நிமிஷத்தில் பொசு பொசு வென் றெரிந்து முடிப்பற்றுக் கட்டு நீங்கி விட்டது. முடிவில் அவன் கையிலும் கொஞ்சம் நெருப்புபட்டுக் காயமுண்டாகி விட்டது. அதை அவன் பொருட்படுத்தவே யில்லை; கை முழுதும் வெந்து கருகி யிருந்தாலுங் கூட அச்சமயத்தில் கவனிக்க மாட்டான். கயிறு பற்றியெரிந்து போனவுடனே கேசவன் கைகளைப் படீர் என்று உதறி யெடுத்துக்கொண்டான். இப்போது கைக்கட்டு நீங்கி விட்டது. அப்பொழுது கேசவன், "அப்பா! நாம் இப்பொழுது தான் மரணத்தின் வாயினின்றும் தப்பினோம்," என்று பெரிய மகிழ்ச்சி யடைந்தான்.

இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுப்பன் மகா ஆச்சரியமும் ஆனந்தமும் தைரியமும் அடைந்து "அப்பா! பிழைத்தோம்! பிழைத்தோம்!" என்றான்.

கேசவன், "அடே! அவசரப்படாதே; சந்தடி செய்யாதே; காரியம் கெட்டுப் போகும்; நம் வாயில் மண் விழுந்துவிடும்," என்று மெதுவாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னான். அவன் பயந்து கூறியதற்குத் தகுந்தபடி கதவோரம் படுத்திருந்த இரண்டு இராக்ஷதர்களுள் ஒருவன் முறுக்கு விட்டுக்கொண்டு புரண்டு படுத்தான். கேசவனுக்குப் பேரிடி விழுந்த மாதிரியாய் விட்டது. அவன் எங்கே விழித்துக் கொண்டானோ என்று கேசவன் கலங்கி விட்டான். அவனும் சுப்பனும் பல்லைக் கடித்துக்கொண்டு மூச்சுவிடாம லிருந்தார்கள். நல்ல வேளையாய்ப் புரண்டு படுத்த இராக்ஷசன் விழித்துக்கொள்ளவில்லை. மீண்டும் குறட்டை விட்டு உறங்கி விட்டான். அவனுடைய குறட்டைச் சத்தத்தைக் கேட்டவுடனே கேசவன் இதுதான் சமயமென்று துரிதமாக வேலை செய்யத் தொடங்கினான். முன்னே கட்டப்பட்டிருந்த கை இப்போது கட்டறுந்து வேலை செய்ய உபயோகமாகி விட்டது. அதனால் அவன் வெகு பூனைபோல் பதுங்கிச் சுப்பனிடம் சென்று அவனுடைய கட்டுக்களையும் ஒரு நிமிஷநேரத்தில் அவிழ்த்துவிட்டான். இவர்கள் துணிச்சலாக வேலைசெய்து வெளியேற வேண்டும். இருவருக்கும் நெஞ்சு படபட வென்றடித்துக்கொண்டது. அவர்கள் நெஞ்சைத் தொட்டுப்பார்த்துக் கொண்டார்கள். கேசவன் சுப்பனுடைய செவியில், "மகனே! இப்போது நாம் மெதுவாகப் பதுங்கிப்போய்க் கதவைத் திறந்து, அங்கே படுத்திருப்பவர்களைத் தாண்டிக்கொண்டு வெளியேறி ஓட்டம் பிடிக்கவேண்டும்; அப்படி வெளியேறும் சமயத்தில் அவர்கள் விழித்துப் பிடித்தாலும் பலங்கொண்டு அவர்களை உதறித் தள்ளி விட்டு ஓடவேண்டும்; நாம் அவர்களுடன் எதிர்த்துச் சண்டை செய்யவோ, நாம் முன்னே

ஆயுதங்களைப் புதைத்து வைத்த இடத்திற்குச் சென்று அவற்றை யெடுத்துக் கொள்ளவோ நினைக்கக் கூடாது; ஒரே மூச்சாகத் திரும்பிப் பாராமல் இந்த எல்லையை விட்டே நெடுந்தூரத்திற் கப்பாலோடிவிட வேண்டும்; வீட்டின் கூரைமேலேறிச் செல்லலாமென்றாலும் பெரிய சந்தடி யுண்டாகி இவர்கள் விழித்துக்கொள்வார்கள் ஆதலின் இவர்களைத் தாண்டிக்கொண்டு வாயிற்படி வழியாகச் செல்வதே நலம்," என்று சொன்னான், சுப்பன் "அப்படியே செய்யலாம்; சீக்கிரத்தில் இவ்வீட்டைவிட்டு வெளிப்பட்டு விட்டால் மற்ற விஷயங்களைப் பின்னால் யோசித்துக் கொள்ளலாம்; அப்பா! சீக்கிரம்! சீக்கிரம்!!" என்றான். கேசவன் "ஜாக்கிரதை! ஜாக்கிரதை! என்று சொல்லிக்கொண்டே கொக்கு அடியெடுத்து வைப்பதுபோல் நடந்து சென்றான்; சுப்பனும் அவ்வாறே அவன் பின்னாற் சென்றான். இருவரும் அளவற்ற திகிலுடன் கதவருகிற் போய் சேர்ந்தார்கள். நல்ல காலமாக அந்த இராக்ஷதர்களிருவரும் கதவைத் திறப்பதற்கு அனுகூலாகக் கதவை விட்டு ஒரு கஜதூரம் உட்பக்கத்தில் தள்ளியே படுத்திருந்தார்கள்.

கேசவன் இதுவும் தெய்வாநுகூலந்தான் என்று நினைத்து மெதுவாகத் தாளைக் கழற்றிக் கதவைத் திறந்து சுப்பனை முதலில் வெளியில் தள்ளிவிட்டுத் தான் பின்னால் நடக்க ஆரம்பித்து ஒரு காலைத் தூக்கி நிலைப்படிக்கு முன்னே வைத்து உள்ளே யிருந்த மற்றொரு காலை வெளிப்படுத்துவதற்குத் தூக்கினான். அந்தோ! அச் சமயத்தில் சந்தேகமாகவே படுத்திருந்த அந்த இராக்ஷதர்கள் இருவரும் விழித்துக்கொண்டார்கள். இவர்கள் தப்பியோடுவது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. உடனே, அந்த இராக்ஷதர்களில் ஒருவன், "ஆகா கொழுத்த ஆகாரம்

தப்பியோடுகிறது," என்று அவர்கள் பாஷையில் கூவிக்கொண்டு, கேசவன், உள்ளேயிருந்து வெளியில் தூக்கியெடுத்த மற்றொரு காலைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான். உடனே கேசவன், "ஆகா! மோசம் நேர்ந்தது; மீண்டும் எமன் வாயிற் சிக்கிக்கொண்டேன்; சுப்பா! என்னை வலுவாகப் பற்றி இழு," என்றான். சுப்பன் விஷயத்தைத் தெரிந்துகொண்டு தகப்பன் கையைப் பற்றிப் பலமாக வெடுக்கென்றிழுத்தான். கேசவனும், எதிரி கையில் அகப்பட்ட காலைப் பலங்கொண்டு உதறியிழுத்தான். பிடித்திருந்தவன் நெஞ்சில் பலமான ஓர் உதை விழுந்தது. இந்த உதையினுடைய அதிர்ச்சியாலும், அவன் படுத்திருந்தபடியே காலைப் பிடித்ததால் கையில் வலுவில்லாமற் போனபடியாலும், கேசவனுடைய காலை விட்டு விட்டான். காலை வேகங்கொண்டிழுத்த வேகத்தால் கேசவன் திடீரென்று வாயிற்படிக்கு முன்னால் கீழே விழ்ந்து படீரென்று துள்ளியெழுந்து, வேடன் கையிலிருந்து தப்பிய மான்போல் விரைந்தோடினான்; சுப்பனும் அவனைத் தொடர்ந்தோடினான். இதற்குள் அங்கே படுத்திருந்த இருவரும் வெளியிற் பாய்ந்து அவர்களுடைய பாஷையில், "பண்டிகைச் சமையலுக்குக் கட்டிப்போடப்பட்டிருந்தவர்கள் தப்பியோடுகிறார்கள்," என்று பெருஞ்சத்தமிட்டுக் கொண்டே அவர்களை துரத்தியோடினார்கள். மற்ற வீடுகளில் படுத்திருந்த நரமாமிச பக்ஷணிகளும் அவர்கள்மீது ஞாபகமாகவே படுத்திருந்தார்களாதலின், அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் எல்லோரும் படுக்கையை விட்டுப் பாய்ந்தெழுந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு "காச்சு மூச்சு" என்னும் சப்தத்துடன் திரண்டு அவ்விருவரும் ஓடின திக்கை நோக்கி ஓடினார்கள். ஊரைவிட்டு வெளியேறிச் சிறிது தூரம் செல்

வதற்குள் யாவரும், கேசவனையும், சுப்பனையும் நெருங்கி விட்டார்கள். இருள் மிகுந்திருந்தாலும் இவர்கள் ஓடுவது அந்த இராக்ஷதர்களின் கண்ணுக்குத் தோன்றியது. அவ்விருவரும் ஓடுவதைக் கண்டவுடனே, அந்தக் காட்டு மிராண்டிகள், "இதோ ஓடுகிறார்கள்; விடாதீர்கள்; பிடியுங்கள்! பிடியுங்கள்!!" என்று ஆக்கிரங்கொண்டு துரத்தினார்கள். கேசவனும், சுப்பனும் பிராணனுக்கஞ்சி ஓடுகின்றவர்களாதலின், "அடே அப்பா? இந்தப் பூதங்களிடம் நாம் மீண்டும் அகப்பட்டால் இப்பொழுதே நம்மைப் பியத்துத் தின்று விடுவார்கள்," என்று பின்னங்கால் பிடரியில் படும்படி வாயுவேகம் மனோவேகமாக ஓடினார்கள். காட்டு மிராண்டிகளும் நரமாமிசத்தில் மிகுந்த இச்சை யுடையவர்களாதலால் இவர்களை எப்படியும் பிடிக்கவேண்டு மென்னும் ஆக்கிரத்தால் இவர்களைப்போலவே விரைந்தோடித் துரத்தினார்கள். கேசவனும், சுப்பனும் எவ்வளவோ வேகமாகொண்டோடியும் இராக்ஷசர்களுடைய கண்களுக் கெட்டாமல் மறைய முடியவில்லை. இவர்கள், பயந்தோடும் முயல்களைப் போலவும், இவர்களைத் துரத்தும் காட்டுமிராண்டிகள், அம் முயல்களைத் தொடர்ந்தோடும் வேட்டை நாய்களைப் போலவும் விளங்கினார்கள். இராக்ஷதர்களுக்கு முன்னே, கேசவனும் அவன் மகனும் அதிக தூரத்திறகப்பால் ஓடவில்லை. நாலைந்து கஜ தூரத்திற்கப்பாலேயே ஓடினார்கள். அதனால் அவ்விருவருக்கும், "சிறிது நேரத்திற்குள் நாம் இவர்கள் கையிற் சிக்கிக் கொள்வோம்," என்ற பீதி உண்டாய் விட்டது. அவர்களுக்கு மேல்மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. உயிரில் நம்பிக்கை யில்லை. அப்போதவர்கள், "அந்தோ! நாம் இப்படித் துன்புறுவதைக் காட்டிலும் இராக்ஷதர் கைபிலகப்பட்டு மடிந்து போனாலும் பாதகமில்லை," என்று நினைத்தார்கள்.

இப்படி அவர்கள் பலவிதமான கலக்கத்துடனே ஓடும்போது அந்தோ! 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்,' என்றபடி அவர்களுக்கு இன்னும் பெரிய இடையூறாக இடையில் குறுக்காக ஒரு பெரிய நதியின் வெள்ளம் கொந்தளித்து ஓடிக்கொண்டிருந்தது. அதன் இரைச்சல் செவியைத் துளைத்துக்கொண் டிருந்தது. அதைக் கண்டவுடனே அவர்களுக்குப் பெருந் திகிலாய் விட்டது. அவர்கள் வேறு பக்கங்களில் திரும்பினாலோ இராக்ஷதர்களிடம் அகப்பட்டுக் கொள்வார்கள்; அதனால் ஆற்று வெள்ளத்தில் பாய்ந்தே தீரவேண்டும்; வெள்ளத்தில் வீழ்ந்தாலோ இறப்பது நிச்சயம்: அவர்கள் ஒரு நிமிஷம் நிதானித்தார்கள்; அதற்குள், இராக்ஷதர்களிடம் அகப்பட்டுப் பயங்கரமான வாதனை அடைவதைக் காட்டிலும் ஆற்றில் வீழ்ந்து மடிவது நல்லதாகும்; வெள்ளத்தில் வீழ்ந்தால் ஒரு சமயம் பிழைத்துக் கொள்ளவும் கூடும்," என்ற யோசனை அவர்களுக் குண்டாயிற்று. அந்த எண்ண முதிக்கவே கேசவன் சுப்பனை நோக்கி, "மகனே! வேறு யோசனை செய்யாதே; விரைந்து வெள்ளத்திற் பாய்ந்து விடு," என்று சொல்லிக்கொண்டே, கொந்தளித்தோடும் அவ்வெள்ளத்தில் தான் முன்னே பாய்ந்தான்; சுப்பனும் அப்பனுடன் குதித்துவிட்டான். மறு நிமிடம் அவர்களுடைய தோற்றமே யில்லாமல் மறைந்து விட்டது. அவர்களின் நிலைமையை அப்போது பார்த்தவர்கள் இறந்தொழிந்தார்களென்றே நிச்சயமாக நினைப்பார்கள்.

அந்த நரமாமிச பக்ஷணிகள், குறுக்கில் ஆற்று வெள்ள மிருப்பதால், கேசவனும், சுப்பனும் அதைத் தாண்டி யோட முடியாமல் அகப்பட்டுக் கொள்வார்கள் என்று கருதியே அவர்களை அவ்வாறு துரத்திவந்தார்கள். அவர்கள், தங்கள் எண்ணத்திற்கு முற்றும் விரோதமாக

வெள்ளத்தில் வீழுவே மனந்திகைத்து நின்றுவிட்டார்கள். ஏனெனில், நீர்ப்பெருக்கென்றால் அவர்களுக்குப் பொல்லாத பயம்; நீந்தத் தெரியாததால் அதன் சமீபத்திற் சென்றாலும் மரணம் சம்பவிக்குமென்று தண்ணீருக்கருகில் கூடச் செல்லமாட்டார்கள். ஆதலால், கேசவனும், சுப்பனும் திகைத்து, ஐயோ! இனி இவர்களை நாம் காணமுடியாது; இவர்கள் இறந்துவிட்டாலும் இவர்களுடைய உடம்பைக் கூடக் கண்டெடுத்துத் தின்ன முடியாது; நாம் அன்றைக்கே மற்றவர்களுடன் சேர்த்து இவர்களை அறுத்துத் தின்றிருக்கலாம்; அறிவில்லாத சிலர், 'பண்டிகைக்கு வைத்துக் கொள்ளலாம்' என்று சொல்லி இனிய கொழுப்புணவைக் கெடுத்துவிட்டார்கள்; மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள்தாம் மிகுந்த கொழுப்புள்ளவர்கள்; இப்படிப்பட்ட மாமிசம் இனிக் கிடைப்பதரிதாகும்," என்று வயிற்றெரிச்சலுடன் திரும்பி ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

41-வது அத்தியாயம்

இனி, ஆற்றில் குதித்த கேசவனும், சுப்பனும் என்ன கதியானார்களென்பதைப் பற்றிக் கவனிப்போம். அவர்கள் அவ்வாறு உயிர் போனாலும் போகட்டுமென்று வெள்ளத்திற் பாய்ந்தவுடன் அவர்களுக்குண்டான அவஸ்தையை ஆண்டவனே அறிவான்! வெள்ளம் மிகவும் பள்ளத்தாக்கான இடத்தை நோக்கி அம்பினுங் கொடிய வேகமாகப் பாய்ந்து சென்றதனால் நீர் கொந்தளித்து ஒரு பனை உயரத்தில் மேலே கிளம்புவதும், பொறிவாணங்கள் போல நாலாப் பக்கங்களிலும் நீர்த்துளிகளைச் சிதறுவதும், பின்பு பூமியைத் துளைத்துக்கொண்டு

கீழிறங்குவதும், இரு கரைப் பக்கங்களிலும் சுழன்று மோதுவதுமாய் மிக்கபயங்கரமாகச்சென்றுகொண்டிருந்தபடியால் அவர்களைப் பந்துபோல் எடுத்து மேலே எறிந்தும், நரிக்குழிகளில் அமிழ்த்தியும், நீர்ச்சுழிகளில் இழுத்துச் செக்கிவிட்டு ஆட்டுவதுபோல் சுழற்றியும், மேடுகளிலும், கற்பாறைகளிலும், கரைப்பக்கங்களிலும் மோதியும், தலைகீழாகப் புரட்டியும், மணலிற்செருகி மேலே கிளம்பியும் படாதபாடெல்லாம் படுத்திற்று. அவர்களுக்கு நீந்தத் தெரிந்திருந்தும் அதனால் ஒன்றும் பயன் ஏற்படவில்லை. நீரின் போக்கின்படி அவர்கள் போகக்கூடியவர்களாயிருந்தார்களே யன்றி நீந்துதலின் உதவியால் தங்கள் நோக்கம்போல் போகக்கூடியவர்களா யில்லை. அதனால். பலவிதமான உபத்திரவங்களோடு வெள்ளத்தால் சிறிது நேரத்துக்குள் வெகுதூரம் கொண்டுபோகப் பட்டார்கள். அவர்கள் எப்படியும் கொஞ்ச நாழிகைக்குள் இறந்து போகக் கூடியவர்களா யிருந்தார்களே தவிர எவ்விதத்தும் பிழைக்கக் கூடியவர்களா யில்லை, அப்படி யிருந்தும், அவர்கள் விழுந்த இடத்திற்கு அரை மைல் தூரத்துக்கப்பால் கேசவன் மறு கரையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்தான். அவனுடம்பு சவம்போல் விறைத்துப் போயிருந்தது; அவனுக்குக் கொஞ்சம் கூடப் பிரக்ஞை கிடையாது. வெள்ளத்தால் பட்ட அவஸ்தையால் அவன் மிகவும் மயங்கிப் போயிருந்தான். ஆனால் அவனுடைய உயிர் நீங்கவில்லை. சிறிது சுவாசம் நாசியில் அசைந்தோடிக் கொண்டிருந்தது. மிக்க குளிரினாலேயே அவனுக்கு இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. உடம்பிற் கொஞ்சம் உஷ்ணம்பட்டால் அந்த விறைப்பும், மயக்கமும் நீங்கித் தெளிவுண்டாகும். ஆனால் அங்கே யார் அவனுடைய உடம்பில் உஷ்ணத்தை ஏற்றுகிறவர்கள்? ஒருவருமில்லை.

அவன் அத்தகைய பரிதாப நிலையுடன் கிடக்கும் போது தெய்வ கிருபையால், இராத்திரி நீங்கிச் சூரியோதயமாயிற்று. சிறிது நேரத்திற்குள் ஆகாயம் களங்கமற்றிருந்தபடியால் காலைச் சூரிய வெப்பம் கேசவன் மேல் தாக்கிற்று. அது அதிகமாகத் தாக்கத் தாக்க அவன் தேகத்தில் உஷ்ணம் மிகுதியாகப் பரவிற்று. அந்த உஷ்ணத்தால் குளிர்ச்சியும் விறைப்பும் நீங்கி அவனுக்குத் தெளிவுண்டாயிற்று; சிறிதுசிறிதாக உலகஞாபகம் உண்டாயிற்று. அவன் சற்று தடுமாற்றத்தோடு எழுந்து உட்கார்ந்தான். ஆற்றோரமாக ஒரு அடர்ந்த காட்டிலிருக்கிறான். அவன் ஆற்றில் வீழ்ந்தபோதே இறந்து விட்டோமென்றே நினைத்தான். சிறிது நேரம் அவஸ்தை அடைந்த பின் அவனுக்கொன்றுமே தெரியாது. அந்நிலைமையை அடைந்த அவன் இப்போது உயிருடன் ஆற்றங்கரையிலிருப்பதைப்பற்றி அளவற்ற ஆச்சரியமடைந்தான்; இது தெய்வச் செயலென்றே நினைத்தான். உடனே தன் மகனுடைய ஞாபகம் அவனுக்குண்டாகி விட்டது. எப்பேர்ப்பட்டவர்களுக்கும் புத்திரவாஞ்சை உண்டாவது இயற்கை அன்றோ? அவ்வாறு மகன் நினைவு வந்த உடனே அவன், "அந்தோ! நம் மைந்தன் என்ன கதியாயினனோ? நம்மைப் போல் அவனும் பிழைத்திருப்பானா? வந்து, ஒரு போதும் பிழைத்திருக்கமாட்டான்; நாம் தான் ஏதோ நல்ல காலத்தால் பிழைத்துக்கொண்டோம்; அவனும் அப்படிப் பிழைத்திருப்பானென்பதில் நம்பிக்கை இல்லை. அவன் நிச்சயமாக இறந்தே இருப்பான்; இந்த ஆபத்தான வெள்ளத்திலாவது அவன் பிழைக்கிறதாவது! ஐயோ! நம் அருந்தவப் புதல்வன் அடியோடு போய்விட்டான்; அவனுடைய பிரிவு நமக்கு ஒரு கை போனது போலாயிற்று. எத்தனையோ ஆபத்துகளில் சிக்கி அவ

னும் நாளும் தவறி வந்தும் கடைசியில் அவன் இந்த ஆற்று வெள்ளத்தில் மடியலானான். புத்திரியைப் பார்ப்பதற்கும் நான் யோக்கியதையற்றவனாய் விட்டேன்; மகனையும் இழந்துவிட்டேன்; திக்கற்றுத் திகைக்கின்றேன்; சொந்த நாட்டிற்கும் போகக் கூடாதவனாய் விட்டேன்; நடுக்காட்டிலிருக்கின்றேன்; இனி அண்டிப் பிழைக்கும் இடமெதுவும் அருகிலிருப்பதாகத் தெரியவில்லை; பசியோ தாங்கமுடியவில்லை; இளைப்போ அதிகமாயிருக்கின்றது; தேறுதல் சொல்வார் யாருமில்லை; எழுந்து நடக்கவும் சக்தியில்லை கடவுள் நம்மைக் காப்பாற்றியும் இத்துன்பங்களை நீக்காமல் போயினார்; நாம் ஆதியில் செய்த அக்கிரமங்களாலேயே இப்போது இவ்வித பரிதாப நிலையை அடைந்திருக்கின்றோம்; இன்னும் என்னென்ன துன்பங்கள் நேரவிருக்கின்றனவோ? இனி அவற்றையெல்லாம் நினைப்பதில் பயனில்லை. நாம் இந்தக் காட்டைக் கடப்பதற்குள் பசியினாலோ மிருகத்தாலோ, வேறெதனாலோ இறந்து போவது நிச்சயம்; ஆயினும் மெதுவாக எழுந்து பையப்பைய இந்த ஆற்றினோரமாகவே நடந்து புத்திரனைத் தேடிப் பார்ப்போம்; அவன் உடம்பாவது அகப்பட்டால் அதைப் பார்த்து விட்டாவது மகனுடைய முகத்தில் விழித்தோமென்ற திருப்தியுடன் இறந்து விடலாம்; அப்படி அவன் தேகம் அகப்படாவிட்டாலும் ஏதேனுமொரு வகையால் மடிவோம்," என்று கண் கலங்கியபடியே தள்ளாடி எழுந்து, உடைகளெல்லாம் ஈரமாயிருந்தபடியால் அவற்றைக் கழற்றி ஒவ்வொன்றாக வெயிலிற் காட்டி உலர்த்திக்கொண்டே அசைந்தசைந்து ஆற்றின் கரையோரமாக நடந்து சென்றான். அவன் அதிகமாக இளைப்படைந்திருந்தபடியால் கொஞ்ச தூரம் செல்வதும், ஓரிடத்தில் சிறிதுநேரம் உட்கார்ந்து இளைப்பாறுவதும், மீண்டும் எழுந்து செல்வதுமாகவிருந்தான்.

இப்படி அவன் மயக்கத்தோடு போய்க் கொண்டிருக்கும்போது, சிறிது தூரத்திற்கப்பால் ஆற்றின் கரையில் தண்ணீர் ஓரத்திலிருந்த மரத்தினடியில் வெள்ளையுடை யொன்று ஒரு நீண்ட கட்டையில் சுற்றப்பட்டதுபோல் கிடந்தது. கேசவன், அதைக்கண்டதும், "இங்கே மனிதர் தரிக்கும் உடைகிடப்பதற்குக் காரணமென்ன ?" என்று வியப்புடன் அதனருகே சென்று அதை நன்றாக உற்றுநோக்கினான். அவ்வாறு பார்த்த உடனே 'ஆ கடவுளே,!' என்று கதறிக்கொண்டு அதன்மேல் விழுந்தான். ஏனென்றால், அவன் மகன் சுப்பனே பிரக்ஞையற்றுத் தண்ணீரால் ஒதுக்கப்பட்டு அங்கே கிடந்தான். அவன் உடம்பின்மீது அணிந்திருந்த உடைதான் கேசவனுக்கு அவ்வாறு தெரிந்தது. கேசவன் நெருங்கிப் பார்த்தபோது அவ்வுருவம் தன் மகனென்பதைத் தெரிந்துகொண்டான். அதனாலேயே அவன் இறந்து விட்டானென்று அவ்வாறு கதறிக்கொண்டு அவன்மேல் வீழ்ந்தான். அப்படி வீழ்ந்ததும் அவன், "ஐயோ! மகனே நீ இத்தகைய மனித சஞ்சாரமில்லாத இடத்தில் இறந்து பிணமாய்க் கிடக்கின்றாயே ; உனக்குச் சவச்சடங்கு செய்வதற்குக் கூட வேண்டிய சௌகரியங்கள் இவ்விடத்திலில்லையே; உன்னை இழந்து தனிப்பட்ட நான், இனி எவ்வாறுய்வேன் ? என் செய்வேன் ? எங்கு செல்வேன்," என்று புலம்பினான். அவ்வாறு புலம்பிக்கொண்டே அவன் முகத்தை நன்றாக உற்று நோக்கினான். ஆனால், அது, உயிருள்ள மனிதரின் முகம் போலிருந்ததேயன்றிச் சவக்குறி ஒன்றும் அதில் காணப்படவில்லை. அந்தக் குறிப்பைப் பார்த்தவுடன் கேசவன், சந்தேகமுற்று அவன் நாசித் துவாரங்களில் விரலை வைத்துப் பார்த்தான். சிறிது சுவாச ஓட்டம் மந்தமாகப் புலப்பட்டது. உடனே கேசவன் முகத்தில் தைரிய

மான பிரகாசம் உண்டாயிற்று. அவன், "புத்திரனுக்கு உயிர் இருக்கிறது; அதிகக் குளிர்ச்சியால் உடம்பு விறைத்து ஆவி சோர்ந்திருக்கிறது; இது நமக்கேற்பட்டிருந்த நிலைமையே; நம்மீது இயற்கையாகவே சூரிய வெப்பம் தாக்கியபடியால் நாம விரைவில் விறைப்பு நீங்கப் பெற்றோம்; இவன் நிழலில் சேர்ந்திருந்ததனால் இவனுக்கதுவில்லை; இன்னும் சற்றுநேரம் இப்படியே இருந்தால் இவன் இறந்தே போவான்; நல்ல காலத்தால் நாம் முந்தியே இவனைப் பார்த்துவிட்டோம்; விரைவில் இவனைச் சூரிய கிரணத்தில் காட்டினால் இவன் பிழைத்துக்கொள்வான்," என்று உடனே அவனைத் தூக்கிச் சூரியப் பிரகாசம் பரவியிருந்த இடத்தில் போட்டு ஈரமாயிருந்த அவன் உடைகளைக் களைந்து வெளியிற் போட்டுவிட்டு உலர்த்தப் பட்டிருந்த தன்னுடை ஒன்றை அவன்மீது போட்டு ஈரத்தைத் துடைத்துச் சூடுண்டாக்கிக்கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் சூடுதாக்கவே சுப்பனுடைய உடம்பில் கொஞ்சம் இரத்த ஓட்டம் ஆரம்பித்தது. உடனே அவன் கண்ணைத் திறந்துபார்த்தான். தன் தகப்பன் எதிரிலிருப்பதைப் பார்த்தான். அவனுக்கு தைரியமும் தெளிவும் உண்டாயின. அவன் ஆவலுடன், "அப்பா! நீ இருக்கின்றாயா? எப்படிப் பிழைத்து வந்தாய்?," என்று எழுந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டான். அவனும், மகனைத் தழுவிக்கொண்டு முதுகைத் தடவினான். இருவரும் சந்தித்தபடியால் அவர்களுக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் தைரியம் சற்று அதிகமாயிற்று. எனினும், அவர்கள் உடம்பெல்லாம் வெள்ளத்தோடு கலந்து வந்த முட்செடிகளால் கிழிக்கப்பட்டும், கற்களால் மோதப்பட்டும் பற்பல காயங்களுண்டாய் இரத்த மொழுகிக் கொண்டிருந்தது. எங்கும் எரிச்சல் அதிகரித்திருந்தது. அப்பொழுது

அவர்களுக்குத் தன்னறிவுண்டாய் விட்டபடியால் உடம்பில் உண்டாயிருக்கும் காயங்களாலேற்பட்ட வேதனை அதிகமாக உறுத்தத் தொடங்கிற்று. அதனால் அவர்கள் வேதனை சகிக்கமுடியாமல் வருந்தினார்கள். கொஞ்சம் சாராயமிருந்து பருகினால் அந்த உபத்திரவம் தெரியாமலிருக்குமென்று நினைத்தார்கள். அங்கே சாராய மேது? ஒயினேது? பசியை அடக்கிக்கொள்ளப் பிண்டத்திற்கே திண்டாட்டமா யிருக்கும்போது சாராயம் எங்கே அகப்படப் போகிறது? அவர்களுக்கு வேதனையைத் தணித்துக் கொள்ளவோ, பசியைத் தீர்த்துக்கொள்ளவோ ஒரு அனுகூலமும் ஏற்படவில்லை. அதனால் இருவரும் கண்கலங்கினார்கள்.

அப்போது சுப்பன் பேசத் தொடங்கி, "தந்தையே! நாம் ஆற்றில் வீழ்ந்தபோதே மடிந்தோமென்றே நான் நினைத்தேன்; எனினும், இன்னும் கொஞ்சக் காலம்வரை நாம் உயிருடனிருந்து சீரழியவேண்டிய விதி இருந்ததால் மீண்டும் பிழைத்திருக்கிறோம்; இப்போது உயிர் பெற்றெழுந்தும் உபத்திரவத்தையே அடையவேண்டிய நிலையிலிருக்கின்றோம்; இனி நாம் எங்கே செல்வது? எவ்வாறு பிழைப்பது?" என்று அடக்கமுடியாத வருத்தத்தோடு மொழிந்தான். கேசவன், "புத்திரனே! நாம் இப்போது பலபல யோசனைகளைச் செய்து வருந்திக்கொண்டிருப்பதில் எவ்விதப் பயனும் ஏற்படாது; விரைவில் இவ்விடத்தை விட்டுச் செல்லவேண்டும்; ஏனென்றால், அந்தக் காட்டுமிராண்டிகள் வசிக்குமிடம் சமீபத்திலேயே இருக்கக்கூடும்; ஒரு சமயம் மீண்டும் நம்மைக் கண்டுகொண்டால் வாயில் போட்டு விழுங்கிவிடுவார்கள். ஆதலால், இவ்விடத்தைவிட்டுக் கொஞ்ச தூரத்திற்கப்பால் சென்று காட்டில் அகப்படும் சாப்பிடக்கூடிய வஸ்துக்களால் பசியாற்

றிக்கொண்டு, அதன்மேல், காட்டு மிராண்டிகளல்லாத நல்ல மனிதர்கள் வசிக்கும் நாட்டைச் சேருதற்கு முயற்சி செய்யலாம்; இந்தப் பக்கங்களில் ஜனசஞ்சாரமுள்ள ஊர் தோற்றினும் அங்கே செல்லக்கூடாது; அவ்விடத்திலும் இத்தகைய நரமாமிச பக்ஷணிகளே இருக்கக்கூடும்; இனி மேல் அந்தப் பைசாசங்களிடத்தில் அகப்படாமல் வெகு ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும்," என்று சொன்னான். சுப்பன், "ஆம்; ஆம்; அப்பா! அந்தப் பேய்களை நினைக்கும் போது வயிறு குழம்புகிறது; விரைவாகச் செல்ல வேண்டியதுதான்; ஆனால் எங்கு பார்த்தாலும் காடாகவே இருக்கின்றது; திசையோ தெரியவில்லை; நாம் எந்தத் திக்கைப்பற்றிச் செல்கிறது?" என்றான். கேசவன் "நாம் திக்கைப்பற்றி ஒன்றும் கவனிக்க வேண்டாம்; அந்தக் காட்டு ஜாதி மனிதர் இருந்த ஊரோ நமக்குப் பின்புற மிருக்கிறது; ஆதலால், நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்," என்று சொன்னான்.

அதன்மேல், இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்; உடம்பில் பலமில்லாதபடியால் அவர்களால் நடக்க முடியவில்லை. கால்கள் தள்ளாடின; கண்கள் சுழன்றுகொண்டிருந்தன. அவ்வாறு நடக்க முடியாதிருந்தும் அங்கே தங்கக்கூடாதென்னும் அச்சமானது அவர்களை முன்னே தள்ளியபடியால், அவர்கள் தடுமாறிக் கொண்டே மெதுவாக நடந்து சென்றார்கள். அப்படியே ஒரு மைல் தூரம் சென்றபின், ஏதோ நல்ல காலத்தால் ஒரு குளிர்ந்த சோலை எதிர்ப்பட்டது. அதில் சில மரங்களில் தின்னக்கூடிய காய்கள் நிறைந்திருந்தன. அவற்றைக் கண்டவுடன் அவர்கள், "இவை என்ன ருசியுள்ளவையாயிருந்தாலும் சரி; என்ன குணம் செய்தாலும் சரி; விஷமுடையவையாயிருந்தாலும் சரி; இவற்றால் நாம்

இறந்தாலும் சரி; இவற்றைப் பறித்துத் தின்போம்; 'பசிக்குப் பனங்காயைத் தின்றால் பித்தம் போகிற பக்கம் போகட்டும்' என்ற பழமொழிக் கிணங்க, நாம் பசிக்கு இவற்றைத் தின்றால் பின்னால் நடக்கிறது நடக்கட்டும்," என்று துணிந்து அவற்றைப் பறித்துத் தின்றார்கள். ஆனால், அவைகள் ஒன்றும் கெடுதி செய்யக் கூடியவைகளல்ல. கெடுதி யில்லாவிட்டாலும் அவற்றில் காரச்சுவையும் உப்பும் அதிகரித்திருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் பசிக்கொடுமையால் அவற்றை வயிறுநிறையத் தின்று விட்டார்கள். அவ்வாறு தின்றுவிட்டுக் கொஞ்சதூரம் நடப்பதற்குள் அந்தக்காய்களின் காரத்தால் அவர்களுக்கு வயிறு முதல் தொண்டை வரை ஒரே காந்தலெடுத்துக் கொண்டது. தாகமும் அதிகமாகி விட்டது. அதற்குள் நடுப்பகல் நேரமும் வந்துவிட்டதால் களைப்பு அதிகரித்து விட்டது, அதனால், அவர்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ள ஜலம் எங்கேனும் அகப்படுமா வென்று தேடினார்கள். எங்கும் ஜலம் அகப்படவில்லை. எப்படியாவது ஜலத்தைக் காணவேண்டு மென்னும் ஆவலால், முன்னேக்கி வேகமாக நடந்தார்கள். நெடுந் தூரத்திற் கப்பால் ஒரு காளுறு குறுக்கே ஓடிக்கொண்டிருந்தது. அதில் செந்நிறமான ஜலம் சாந்தமாக ஓடிக்கொண் டிருந்தது. ஆனால், அது, அதிக அகலமில்லை; இருபது கஜ அகலமே யிருக்கும்; அதன் இருகரையிலும் வளர்ந்த மரங்களின் கிளைகள் படர்ந்து, அந்த ஆற்றின்மேல் பச்சைப்பந்தலிட்டது போலிருக்கும். அந்த அமைப்பைப் பார்த்தவுடனே அவர்களுக்கு ஒருவகைத் திருப்தி யுண்டாயிற்று. ஏனெனில், அந்த மரங்களில் ஒன்றிலேறி, ஆற்றின் மேற்பாகத்தில் நீண்டு சென்றிருக்கும் ஒரு கிளையின் வழியாகப் போனால் ஆற்றின் மறுபக்கம் போய்விடலாம்.

ஆதலின், அவர்கள், "இந்த ஆற்றைச் சுலபமாகத் தாண்டிவிடலாம்," என்று சந்தோஷங் கொண்டு, அந்த ஆற்றின் தண்ணீர் ஓரமாக ஒன்றரை கஜ அகலத்திலும், மூன்று கஜ நீளத்திலும் அமைந்திருந்த கற்பாறை ஒன்றின்மேல் நெருங்கி உட்கார்ந்து ஜலத்தை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகினார்கள். அக் கற்பாறையானது மேற்பாகத்தில் மூன்றங்குல அகல நீளமுள்ள பாதங்கள் போன்ற பல பள்ளங்கள் அமைந்ததாயும், கரடுமுரடானதாகவும் இருந்தது. அதனால் அவர்களுக்கு அதன் விஷயத்தில் சந்தேக முண்டாயிற்று. 'இது கற்பாறைதானோ, வேறெதுவாக வேனு மிருக்குமோ' என்று அவர்கள் நினைத்தார்கள். பின்னர், 'இது, இந்தப் பக்கத்திலுள்ள ஒரு விசேஷமான கல்' என்று மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள். அந்தோ! மனிதர்களின் எண்ணம் போல் எதுவும் நடக்குமா! சிறிது நேரத்திற்குள் அவர்களுடைய மனச்சமாதான மெல்லாம் அடியோடொழிந்து திடீரென ஒரு செய்கை உண்டாகி விட்டது. அவர்கள் பாதித்தண்ணீர் குடித்தும் குடிக்காமலு மிருக்கும்போதே அந்த நெடும் பாறைக்கல் இருவரையும் தாங்கியபடியே, சரேலென்று அம்புபோல் நழுவித் தண்ணீரின் நடுப்பாகத்திற்குப்போய் நீரோட்டத்தின் பக்கமாகவே மிதந்து கொண்டு சென்றது. அதனால் அவர்கள், அந்தக்கல், நழுவும்போதே கரையில் தாவிவிட முடியவில்லை. அப்பாறை முதலில் வேகங்கொண்டு தண்ணீரின் நடுப்பாகத்திற்கு நழுவும்போது அவர்கள் கொஞ்சம் தடுமாறி நீரில் வீழப் போனார்கள். எனினும், முதல் நாளிரவு வெள்ளத்தால் அடைந்த அவஸ்தை மனதி லிருப்பதால் மிக்க பீதி யடைந்து விழாமல் சமாளித்து அந்தக் கற்பாறையைப் பற்றிக் கெட்டியாக அசையாமல் அதன்மேல் உட்கார்ந்து

கொண்டார்கள். கற்பாறையானது தோணியைப் போல் மிதந்து சென்று கொண்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தினால் அவர்களுக்குண்டான அதிசயத்திற்களவில்லை. அஃதென்ன வென்றே ஒன்றும் விளங்கவில்லை. "இஃதென்ன கல்லா? கட்டையா? வேறே உயிர்ப் பிராணியா? கல்லாயிருந்தால் இவ்வாறு மிதந்துசெல்ல மாட்டாதே; கட்டையா யிருந்தாலும் புராணமே; ஐயோ! எதிர்புகுந்தாலும் நமக்குச் சங்கடமே முன்னிற்கின்றதே; இதனால் என்ன ஆபத்து விளையுமோ! தண்ணீரில் குதித்து நீந்தி ஓடிவிடலா மென்றால் நீர் எவ்வளவு ஆழமிருக்குமோ? வேறென்ன தீங்கு நேரக்கூடுமோ என்று அச்சமா யிருக்கின்றதே!" என்று பலவிதமான சந்தேகங்களால் மனக்கலக்க முற்றார்கள். இவ்வாறு சந்தேகத்துடன் அச்சத்துடனும் செல்லும் போது அவர்களுக்குப் பெருந்திகிலுண்டாகும்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது; அதாவது, அவர்களைத் தாங்கிச் சென்ற அந்தக் கல்லின் ஒரு பக்க முனையானது நீருக்குமேல் கொஞ்சம் தெரிந்து விட்டது. அதில், ரம்பத்தைப்போல வரிசையாக நீண்டபற்களும், பிளந்தவாயும் தெரிந்து விட்டன. அவற்றைக் கண்டவுடன் சுப்பன் ஓ வென்று கதறி. "அப்பா! முதலை! முதலை! நம்மைக் கொண்டு போகிறது; சிறிது நேரத்திற்குள் நம்மை, அது தன்னிடத்திற்குக் கொண்டுபோய் வாலால் ஒரே அடியாக அடித்து வாயில் போட்டு மென்று தின்று விடப்போகிறது நாம் சீக்கிரம் தப்ப வழி தேடவேண்டும்" என்று நடுங்கிக் கொண்டு கூறினான். கேசவனும் அது முதலை யென்று தெரிந்ததும் மனங்குழம்பி விட்டான்; எனினும், 'நாம் மரணபயத்தில் சிக்கிக்கொண்டாலும் தைரியத்தை விடாமல், இதினின்றும் தவறுவதற்கு ஏதேனும் ஓர் உபாயத்தைக் கண்டு பிடிக்கவேண்டும்," என்று பரபரப்புடன் யோசித்

தாக் கொண்டிருந்தான். அந்த யோசனையுடன் சிறிது தூரம் செல்வதற்குள், ஆற்றின் குறுக்கே வளர்ந்த மரக்கிளையொன்று அவர்களின் கைக்கு எட்டக்கூடியதா யிருந்தது. அதைக் கண்டவுடன் கேசவன், "மகனே! இந்த மரக்கிளையைப் பிடித்து மேலே தாவிவிடு" என்று சொல்லிக்கொண்டே பந்துபோற் கிளம்பி அந்தக் கிளையைப் பிடித்து மூச்சடக்கி ஒரே பாய்ச்சலில் பாய்ந்து மேலேறிக்கொண்டான். சுப்பன் அவனிலும் வேகமுடையவனாதலின் அவனுக்கு முந்தியே மரத்தில் தாவி ஏறிக்கொண்டான்.

நண்பர்களே! இங்கே அவர்களைக் கொண்டு சென்றது முதலைதான். 'முதலை இவ்வாறு மனிதரைத் தாங்கிக் கொண்டு செல்லக்கூடுமா? என்று சிலர் சந்தேகிக்கக் கூடும். ஒரு விஷயத்தின் இயற்கைத் தன்மையை உணராதவர், அவர் தங்களுக்குத் தெரியாமலிருக்கும் காரணத்தைக்கொண்டு அது நடக்கக் கூடாது என்று சொல்லி வாதமிட்டு, அதன் உண்மையை உணர்ந்தவர் உரைத்தாலும் ஒப்புக்கொள்ளாமல் மறுத்து அவர்களையும் பைத்தியக்காரர்களென்று பேசிவிடுவார்கள். உண்மை ஆராய்ச்சியுடையவர்களோ, இத்தகைய விஷயங்களை நேரில் பார்க்காவிடினும், கேள்விப்பட்டவுடன், தாங்கள் ஆராய்ந்தறிந்த வேறு விஷயங்களைக் கொண்டு அவை நடந்திருப்பதால் இதையும் நடந்திருக்கக் கூடும் என்று நம்பிக் கொள்வார்கள். இது உலக சுபாவத்தையும் மனிதர் இயற்கையையும் பொறுத்ததா யிருக்கின்றது. ஆதலின் புத்திநுட்பமுடையவர்கள் இதை நம்புவார்கள்; மந்தபுத்தி யுடையவர்கள் தங்களுக்கேற்பட்ட சந்தேகத்தால் நம்பமாட்டார்கள். இத்தகைய மந்தமதியினர், எப்பொழுதுமே அரிய பெரிய விஷயங்களை ஆராய்ந்தறியும் ஆற்றலின்றி அறிவின்மை

யென்னும் அந்தகாரத்திலேயே மூழ்கி ஞானமென்னும் பிரகாசந் தோற்றாமல் மங்கிக்கிடப்பார்.

முதலைகள், இவ்விதமாகக் கரை யோரங்களில் வந்து படுத்திருந்து, தமக்கு ஆகாரமாகும் பிராணிகளைத் தந்திரமாகக் கவர்ந்து செல்வது இயற்கை; மலாய் நாட்டில் சமுத்திரக்கரை யோரங்களிலும், சில ஆறுகளின் ஓரங்களிலும் குளிர்ந்த மரங்களிருக்குமாம். அந்த மரங்களில் அநேக குரங்குகள் விளையாடிக்கொண்டு திரியுமாம். அவற்றை தந்திரமாகப் பிடித்துண்ணும் பொருட்டுப் பெரிய பெரிய முதலைகள் அக் கரையோரங்களில் வந்து கற்பாறைகள் போல் தெரியும்படி முதுகுகளை மேலே தூக்கிக்கொண்டு அசையாமற் கிடக்குமாம். குரங்குகள் அவற்றைக் கற்பாறைகளென்றே நினைத்து அவற்றின்மேல் குதித்தும், சற்றுநேரம் தங்கியிருந்தும் விளையாடுமாம். அவைகள் அவ்வாறு விளையாடிச் சந்தேகமற்று இரண்டு மூன்று சேர்ந்திருக்கும் வரை பொறுமையோடிருந்து அங்ஙனம் சேர்ந்தவுடன் அந்த முதலைகள் வாலைச் சுழற்றி அதனால் ஒரே அடியாக அடித்து அவற்றை வளைத்துப் பிடித்துக்கொண்டே நீருக்குள் மூழ்கித்தம்மிருப்பிடத்திற்குக் கொண்டுசென்று மென்று தின்றுவிடும்; அவற்றை முதுகில் தாங்கியபடியே வேகமாக நடுத்தண்ணீரில் பாய்ந்து அப்படியே கொஞ்சதூரம் கொண்டுசென்று தங்களிருப்பிடத்திற்கு நேராகப் போனவுடன் வாலால் அடித்துக் கொன்று எடுத்துக் கொண்டு நீருக்குள் மூழ்கிவிடும். திடீரென்று நடுத் தண்ணீருக்கு நழுவிவிட்டால் அந்தக் குரங்குகள் நீரில் தாவித் தப்பித்துக் கொண்டுபோக முடியாதென்று கருதியே அவை நிர்ச்சந்தேகமாக அவ்வாறு சுமந்துகொண்டு மிதந்தபடியே நடுத் தண்ணீரில் செல்லும். ஒரு சமயம் அக் குரங்குகள் தங்கள் முதுகைவிட்டு நீரில் தாவுவதா

யிருந்தால் அவற்றை அம் முதலைகள் அப்பொழுதே அடித்துக் கொன்றுவிடும். இப்படியே ஒரு பிராணி மற்றொரு பிராணியைப் பிடிப்பதற்கு பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்வது இயற்கை. இதனை இநேக அறிஞர்கள் நேரில் கண்டிருப்பார்கள். அறிவற்ற மூடர்கள் இத்தகை அரிய செயல்களை நேரில் பார்த்தாலும் அவற்றிலுள்ள நுட்பத்தை ஆராயாமல் அஃதென்னமோ வென்று மேற்போக்காகக் கவனிக்காமல் போய்விடுவதோடு உண்மை கண்ட உத்தமர் பேச்சுக்களையும் நிராகரித்து ஒதுக்கித் தள்ளி விடுவார்.

முதலையினங்களுக்கு இவ்வகைத் தந்திரமிருப்பதனால் தான் மேற்கூறியபடி அந்த முதலையும் கேசவனையும், சுப்பனையும் கொண்டு சென்றது. தெய்வ கிருபையால் உடனே அடித்துக் கொன்றுவிடாமல் அவர்களை உயிருடன், நல்ல ஆகாரம் கிடைத்ததென்னும் உற்சாகத்தால் தாங்கிச் சென்றதனால் அவர்கள், அதன் சூழ்ச்சியை உணர்ந்து விரைவில் தப்பித்துக் கொண்டார்கள்.

அவர்கள் அங்ஙனம் மரத்திற் பாய்ந்தேறிக்கொண்டவுடன், ஏமாந்துபோன அம் முதலை கிடைத்த ஆகாரம் தவறி விட்டதே என்னும் கோபத்தால் வாலைக்கொண்டு நீரைப்பன்முறை அடித்துக் கலக்கி விட்டு மிக்க மனவருத்தத்துடன் தண்ணீருக்குள் மூழ்கிப் போய்விட்டது. கேசவனும் சுப்பனும் மரத்திலிருந்தபடியே அதன் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தவுடன், "ஐயோ! இதன் வாயில் அகப்பட்டால் நாம் என்னபாடு படுவோம்!" என்று மனந்திடுக்கிட்டு, மெதுவாக அந்த மரக்கிளையின் வழியாக அந்த ஆற்றைக் கடந்து மறுகரையில் இறங்கினார்கள்.

42-வது அத்தியாயம்

அவ்வாறு இறங்கியவுடன், சுப்பன் துக்க மனச் சோர்வோடு கேசவனை நோக்கி, "அப்பா! நாம் எந்த வழியிற் போனாலும், என்ன செய்தாலும் நமக்கு ஆபத்தே முன்வந்து நிற்கின்றது; நாம் ஏதேனுமொன்றால் இறந்து விட்டாலும் தொல்லை அடியோடொழிந்து போகும்; அப்படிச் சாவும் நேரவில்லை; ஒவ்வொன்றிலும் நாம் தப்பிவிடுகிறோம்; ஆனாலும் ஒன்றின்மேலொன்றாக வரும் ஆபத்துக்களை நினைக்குந்தோறும் ஈரல் கருகிப் போகின்றது; இனிமேலும் என்னென்ன வரப்போகின்றனவோ' நாம் மனச்சாந்தியுடனிருப்பதற்கு இதுவரையிலும் நமக்குப் புகலிடம் ஒன்றும் ஏற்படவில்லை; ஏற்படப் போவதாகவும் தெரியவில்லை; நாம் இப்படியிருந்து என்னதான் செய்கிறது" என்று கண் கலங்கி அழுதான்.

கேசவனுக்கும் அச்சமயம் மன வேதனை அதிகமாகவே யிருந்தது. எனினும் அவன் அதனை அடக்கிக்கொண்டு சுப்பனை நோக்கி, "புத்திரனே! நாமோ அளவிறந்த துன்பங்களில் மூழ்கி வந்திருக்கின்றோம்; இனி, இவற்றிற்கு மேற்பட்ட ஒரு துன்பம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. 'நிறையக் குளித்தவனுக்குக் குளிரில்லை' என்றபடி நாம் எண்ணிறந்த வேதனைகளை அடைந்தடைந்து மனம் மரத்துப் போய்விட்டபடியால் இனி என்ன துன்பம் நேர்ந்த போதிலும் அதற்காக நம் மனம் அதிகமாய்க் கலங்கமாட்டாது; ஆதலால் வரும் இடர்களைச் சகித்துக்கொண்டே செல்வோம்; இதுவரையிலும் நம்மைக் காப்பாற்றிய கடவுள் முற்றிலும் காப்பாற்றுவார்; இப்பொழுதோ பகல் பதினைந்து நாழிகைக்கு மேலாகி விட்டது; சூரியன் அஸ்தமிக்குமுன் இராத்தங்குவதற்கு அபாயமற்ற ஒரு நல்லிடத்தை அணுகவேண்டும்; நல்ல

மனிதர்களுடைய சஞ்சாரமாகிய இடம் நமக்குப் புலப்படும் வரையில் நாம் இந்தப் பக்கங்களிலுள்ள காட்டுமிராண்டிகளின் ஊர்களின் பக்கம் நெருங்கவே கூடாது; காட்டின் மார்க்கமாகவே நடந்து செல்ல வேண்டும்; இந்த ஆற்றோரமாகவே சென்றால் இது ஒரு சமுத்திரத்தின் ஓரத்திலாவது நகரத்தின் ஓரத்திலாவது கொண்டுபோய்ச் சேர்க்கும்; என்றாலும் இடையில் இரவு வந்து இந்த ஆற்றினோரம் தங்கினோமோ இதிலுள்ள பிரமாண்டமான முதலைகள் வந்து நம்மைக் கொன்று விடும்; ஆதலால் இந்த அபாயகரமான ஆற்றின் சார்பை விட்டு நாம் நெடுந்தூரம் போய்விட வேண்டும்" என்றான். சுப்பனும், "துணிந்தவருக்குத் துக்கமில்லை," என்று எழுந்து நடந்தான்.

இருவரும் சற்று விரைவாகவே நடந்து வடதிசையில் பத்துமைல் தூரம் சென்றார்கள். இடையில் மிருகங்களின் ஆரவாரத்தாலும், முட்கள் தேகத்தில் கிழியதாலும், பல துன்பங்களை யடைந்தார்கள். பிற்பகல் சூரியன் அஸ்தமிப்பதற்கு நாலைந்து நாழிகை யிருக்கும்போது ஒரு சிறு மலையடிவாரத்தில் மரங்களடர்ந்த ஓரிடத்தைச் சேர்ந்தார்கள். அங்கே குளிர்ந்த ஜலத்தையுடைய சிறிய அருவியொன்று மலையினின்றும் இழிந்தோடிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் பேரிக்காய் மரங்கள் அடர்ந்திருந்தன. அவற்றில் காய்கள் நிறைந்திருந்தன. அவற்றைக் கண்டவுடன் அவ்விருவருக்கும் தேவாமிர்தம் கையில் கிடைத்ததுபோல் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. உடனே இருவரும் இருபது முப்பது பேரிக்காய்களைப் பறித்துக் கொண்டு வந்து அந்த அருவிஜலத்தின் ஓரத்தில்உட்கார்ந்து அவற்றை வயிறுநிறையத் தின்று அருவி ஜலத்தையும் பருகினார்கள். இரண்டு தினங்களாக ரொட்டியாவது சாராயமாவது வேறு ஆகாரங்களாவது அகப்படாமல் வருந்தி

யிருந்த அவர்களுக்கு அந்தப் பேரிக்காய் அகப்பட்டது எவ்வளவோ திருப்தியா யிருந்தது. பசி யடங்கி இளைப்பும் நீங்கிற்று. அதனுல் கொஞ்சம் தூக்கம்வர ஆரம்பித்தது. சுப்பன் இரண்டு மூன்று முறை தூங்கி விழுந்தான். அதைக் கண்டவுடனே கேசவன் திடுக்கிட்டு, "மகனே! தூங்கி விழாதே; இது மிக்க அபாயகரமான விடம்; மலை யடிவாரமா யிருக்கின்றது. இராத்திரிக்கு துஷ்ட மிருகங் கள் மலைமீதிருந்து இறங்கிவரக்கூடும் ஆதலின், இருட்டாவ தற்குள் வேறே ஒரு நல்ல இடம் பார்த்துத் தங்கவேண் டும்" என்றான். சுப்பன், "அப்பா! எங்கே பார்த்தாலும் இருள் சூழ்ந்த காடாகவே யிருக்கின்றது; இதில் நமக்கு அபாயமற்ற இடம் எங்கே அகப்படப் போகின்றது; மற்ற இடங்களைக் காட்டிலும் இதுவே நல்ல இடமாக எனக்குத் தோற்றுகின்றது; இவ் விடத்தில் அருவிநீர் ஓடி கொண்டிருப்பதாலும், இளமரச்சோலை யிருப்பதாலும், ஆகாரத்திற் குபயோகமாகிய பேரிக்காய்கள் அகப்படுவ தாலும் இது தங்குவதற்குச் சௌக்கியமா யிருக்கும். மேலும் இந்தப் பேரிக்காய்கள் சேதப்படாம லிருப்பதால் இங்கே துஷ்டமிருகங்களின் சஞ்சாரமில்லை யென்பதும் தெரிகின்றது. ஆதலால் இராப்பொழுதை இங்கேயே கழிக்கலாமென்று நினைக்கிறேன்," என்றான்.

கேசவன் சிறிதுநேரம் யோசித்து, 'சரி; அப்படியே இங்கு தங்கலாம். எனினும் இவ் விடத்திலும் கூட ஒரு பாதுகாப்பான இடத்திலே யே தங்கவேண்டும்," என்று சொல்லிவிட்டு அதற்குத் தகுதியான இடம் இருக்கின்றதா வென்று நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தான். அங்கே அந்த அருவிநீர் ஓட்டத்தின் மத்தியில் ஓர் அகன்ற கற்பாறை யிருந்தது. அது, சுற்றிலும் நீர் அகழியால் சூழப்பட்ட ஒரு மேடைபோன் றிருந்தது. அதற்குப்

போவதற்கு இடையிலுள்ள ஜலமானது அதிக ஆழமா யிருக்குமோ என்று கேசவன் இறங்கி அந்தப் பாறைவரை யிலும் போய்ப்பார்த்தான். நீர் தொடையளவே யிருந்தது. உடனே கேசவன் திரும்பிவந்து சுப்பனுக்கு அந்தப் பாறையைக் காட்டி, "இந்தப்பாறை நாம் இரவில் தங்குவ தற்குத் தகுதியான விடம்; சுற்றிலும்நீர் சூழ்ந்திருப்பதால் எந்தப் பிராணியும் வந்து வருத்துவதற் கேதுவில்லை; ஆத லால் அவ் விடத்திலேயே தங்கலாம்; இரவு வரும் வரை யில் இந்த இடத்திலேயே படுத்துக் கொஞ்சம் காற்று வாங்கிக் கொண்டிருக்கலாம்," என்றான். அவ்வாறே இரு வரும் இருந்த விடத்திலேயே மணலில் சாய்ந்து, தங்களு டைய இறந்தகால நிலைமைகளையும், நிகழ்கால நிலைமைகளை யும், எதிர்கால நிலைமைகளையும் பற்றிப் பேசிக்கொண்டிருந் தார்கள்.

சிறிது நேரத்திற்குள் சூரியன் அஸ்தமித்து மங்கலான இருள் பரவிற்று. அப்போது கேசவன் மகனை நோக்கி, "இனி நாம் அந்தக் கற்பாறைக்குப் போய் விடவேண்டும். இன்னும் சில பேரிக்காய்களைத் தின்றுவிட்டு அங்கேபோய் விடலாம்" என்றான். அவ்வாறே இருவரும் சில காய் களைத் தின்றார்கள். பின்னர் எழுந்து அந்தப் பாறைக்குச் செல்வதற்கு அருவி ஜலத்தை நோக்கி நடந்தார்கள். அந் தோ! மனிதன் எண்ணப்படி எதுவுமே நடப்பதில்லை. இவர்கள், இரவில் தப்புவதற்குத் தங்களுக்குத்தகுதியான இடம் கிடைத்ததைப் பற்றித் தைரியமும் சந்தோஷமும் அடைந்தும் அவையெல்லாம் அடியோடு தொலைந்துவிடும் படியான சங்கடம் உடனே நேர்ந்துவிட்டது. இவர்கள் இரண்டடி எடுத்துவைத்தது தான் தாமதம்; இவர்களுக்குப் பின்னால் யாரோ இருவர் வந்து இவர்களுடைய கழுத்தைப் பிடித்து இறுக்குவது போன்றிருந்தது. "அடே சுப்பா!

ஏதோ மோசம் வந்துவிட்டது!" என்று இருவரும் கதறிக் கொண்டு பின்பக்கம் திரும்பிப்பார்க்க முயன்றார்கள். பின்னேவந்து இவர்கள் கழுத்தைப் பிடித்திருந்தவர்கள் இவர்களைத் திரும்பவிடவில்லை; அதனால், அவ்வாறு பற்றி யிருப்பவர்கள் யாரென்று இவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள், "ஐயோ! நம்முடைய ஜன்மந் தான் என்ன ஜன்மமோ! கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் நாம் பெரிய ஆபத்திலிருந்து நீங்கினேம்; அதற்குள் வேறொரு விபத்து நேர்ந்துவிட்டது. அடடா! கழுத்து நெரிகிறதே; நம் கழுத்தைப்பற்றி யிருப்பவைகள் என்ன? மனிதரா? இராக்ஷதரா? பூதமா? பிசாசா? காட்டு மனிதனா? காடுக்குரங்கா? ஒன்றுந் தெரியவில்லையே! இவற்றால் என்ன தீங்கு நேருமோ? நம் உயிரே போய்விடுமோ? அந்தோ! நாம் ஏன்தான் அந்த ஜயிலை விட்டு ஓடி வந்தோம். பூமியே! நீ வெடித்து எங்களை விழுங்கி விடமாட்டாயா? நாங்கள் எத்தனை நாளைக்குத்தான் இத் துன்பங்களை யடைவோம்," என்று கதறினார்கள். என்ன கதறியும் அவர்கள் விட வேயில்லை. இவர்களை அவை அந்த அருவிநீர் ஓரத்தை விட்டுக் காட்டின் பக்கம் செல்லுமாறு கழுத்தைப் பிடித்தபடியே திருப்பினார்கள். இவர்கள் அந்தப்பக்கம் செல்லப் பயந்து இஷ்டமில்லாமல் நின்றார்கள். இவர்கள், அவர்களின் நோக்கத்திற்கு மாறாக நடக்கவே, அவர்கள், தாங்கள் நினைத்த திக்கிற்செல்லும்படி ஜடைகாட்டி கையை மடித்துக் கொண்டு இவர்களின் கன்னத்தில் ஓங்கி நாலைந்து குத்துவிட்டார்கள். அந்தோ! அந்தக் குத்தினால் இவர்களுடைய கன்னமே நொறுங்கி விட்டது போலிருந்தது. "ஐயோ! இது என்ன வேதனை யடா அப்பா!" என்று இவர்கள் ஆவென்று வாயைத் திறந்து முகத்தைச் சுளித்தார்கள். மேலும் மேலும் அவர்

கள் கன்னத்திலும் தலையிலும் குத்தி வருத்தினார்கள். அதனால் இவர்கள், "சரி! சரி!! இவர்கள் நம்மை இந்தக்காட்டின் பக்கம் செல்லச் சொல்லியே குத்துகிறார்கள்; அவர்கள் நோக்கம்போல் நாம் செல்லாவிடில், இவர்கள் நம்மை வதைத்து விடுவார்கள்," என்று அவர்களுடைய நோக்கத்தைத் தெரிந்துகொண்டு, "ஐயோ! இவர்கள் நம்மை எங்கே கொண்டு போகின்றார்களோ!" என்று திகிற்பட்டுக்கொண்டு அவர்கள் ஜாடையாகக் காட்டின் திக்கே சென்றார்கள்.

அவ்வாறு சிறிது தூரம் போய் மரங்களும் செடிகளும் அடர்ந்த காட்டிற்குள் நுழைந்தவுடன், கேசவனுக்கும் சுப்பனுக்கும் மேலும் திகிலும், சிரமமும் அதிகரிக்கும்படி, அவர்களுடைய கழுத்தைப் பிடித்திருந்தவர்கள், அவ்வாறு பிடித்தபடியே பந்துபோல் மேலே கிளம்பி, அவர்களின் பிடரியில் உட்கார்ந்து, கால்களைக் கழுத்தின் இரண்டு பக்கத்திலும் முன்பக்கம் மார்புக்கு நேராகத் தொங்கவிட்டு அக் கால்களால் கழுத்தைப் பின்னிக் கொண்டு, தலையைக் கையாற் பற்றிக்கொண்டு குதிரைமேலேறிச் சவாரி செய்வது போற் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனோடு வேகமாக நடந்து செல்லும்படி கன்னத்தில் அடிக்கடி குத்தி இவர்களை வருத்திக்கொண்டுமிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவருடைய பாரமும் ஒரு பெரிய கனத்த ஆளின் பளுவு எவ்வளவிருக்குமோ அவ்வளவிருந்தது. அந்தப் பாரத்தினால் இவ்விருவரும் பெரு மூச்சு விட்டுத் திணறிப்போனார்கள். பாரம் ஒரு பக்கம், அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு நடப்பது ஒரு பக்கம், தலையில்' கை முடியால் குத்துவிழுவது ஒரு பக்கம் இவர்களுக்கு அளவற்ற வேதனையைச் செய்து கொண்டிருந்தன. அந்த வேதனையால் மிக்க வருத்தத்

தோடு இவர்கள் வேகமாக நடந்து சென்றுகொண் டிருந் தார்கள்.

அப்படிச் செல்லும்போதே, தங்கள் பிடரிமேலிருந்து கழுத்தைச் சுற்றிக்கொண்டு மார்பின் பக்கமாகத் தொங் கும் அந்த ஆசாமிகளுடைய கால்களைப் பார்த்தார்கள்; பாதங்கள், மனிதரின் அடிகளைப் போலவே யிருந்தன. ஆனால், அக்கால்களில் தொடை வரையிலும் நீண்டு கருமை யாயிருக்கும் உரோமங்கள் நிறைந்திருந்தன. தோல் நிறம் மிகக் கருமையாயிருந்தது. இவற்றைப் பார்த்தவுடனே கேசவனும், சுப்பனும் "இத் தோற்றங்களைப் பார்த்தால் மனிதர் ரூபங்களாகத் தெரியவில்லை," என்று சந்தேகமுற் றுத் தங்கள் தலைக்குமேல் நிமிர்ந்து பார்த்தார்கள். அப்போது அதிக இருள் பரவாதிருந்த படியால் தங்களைச் சவாரி செய்கின்றவர்களுடைய முகங்கள் நன்றாய்த் தெரிந்து விட்டன. ஐயோ! இருவர் பாடும் விலவி லத்துப் போய்விட்டது. அப்பொழுதே கேசவனுக் கும், சுப்பனுக்கும் உயிர் போய்விட்டது போலிருந்தது; இருதயம் வெடிப்பது போலிருந்தது; உடம்பெல்லாம் நடுக் கம் எடுத்துக் கொண்டது. நாவறண்டு போயிற்று; கால் கள் ஓய்ந்து போயின; பலம் கொண்டு நடக்கமுடியவில்லை. ஏனென்றால் அவர்களுடைய தலைக்குமேல், இரண்டு ஆப் பிரிக்கா தேசத்துப் பெரிய காட்டுக் குரங்குகள் இருக்கின் றன. அவைகள் மனிதர்களைப்போல வந்து அவர்களைப் பிடித்து மேலேறிக் கொண்டன. அவைகளை அவர்கள், முன்னே மனிதர்களென்று கருதி யிருந்தார்கள். இப் பொழுதுதான் குரங்குகளென்று தெரிந்து கொண்டார் கள். அந்தக் குரங்குகள் காய்கனி கிழங்கு முதலியவை களைத்தான் உண்ணக்கூடியவைகள். மனிதர்களைக் கொல் வதில்லை. ஆனால் அவர்களைக் கண்டால் விடுவதில்லை. அவர்

கள் மேலேறிச் சவாரிசெய்வதும், அவர்களால் பல வேடிக்கைகளைச் செய்வித்தும், அவர்களை அங்குமிங்கும் பற்பல விடங்கட்குச் செலுத்தி வருத்திப் பலவிதமான வேடிக்கைகளைச் செய்வது அவற்றிற்கு வழக்கம். அவைகள், அவ்வாறு வேடிக்கைகள் செய்தாலும் மனிதருக்கு அச்செய்கைகள் பெருந் துன்பமாகவே யிருக்கும். அவற்றைப் பார்த்தால் மிகுந்த பயங்கரமாகவே இருக்கும். அவற்றின் கையினின்றும் தப்புவது மாத்திரம் கஷ்டம்; அவைகளிடம் அகப்பட்டுத் தப்பியோட முடியாமலிருப்பவர் இவ்வகைக் கஷ்டங்களால் மடிந்து போவதுமுண்டு. ஆனால், குரங்குகள், இவ்வாறு மனிதர்மீதோ வேறு பிராணிகளின் மீதோ ஏறிச் சவாரி செய்து விளையாடுவது நடக்காத காரிய மன்று; இந்நாட்டிலேயே குரங்குகள் மிகுந்து சஞ்சரிக்கு மிடங்களில் ஊர்ப் பன்றிகளின் மீது ஏறி உட்கார்ந்து ஒய்யாரமாகச் சவாரி செய்வதைப் பார்க்கலாம்.

மேற்கூறிய காட்டுக் குரங்குகளைத் தூரத்தில் பார்த்தாலே மனிதர் நடுங்கிப் போவார்கள்; அப்படியிருக்க அவை தாங்கள்மீதே ஏறி யிருப்பதைப் பார்த்தபோது கேசவனுக்கும் சுப்பனுக்கும் எவ்விதமான பயமுண்டாகி யிருக்குமென்பதை, இக்கதையை வாசிக்கும் நண்பர்களே உணர்ந்து கொள்ளலாம். அவர்கள் அவ்வாறு அவற்றைக் கண்டு நடுங்கியவுடன், "அட கடவுளே! இதென்ன சனியன்! பெரிய எமன்களிடம் அகப்பட்டுக் கொண்டோமே; இந்த ஆப்பிரிக்கா தேசத்துப் பெரிய குரங்குகளைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறோம்; இவை தங்களிடம் சிக்கிய மனிதரைக் கசக்கிவிடக் கூடியவையல்லவா! இனி இவற்றின் கையினின்றும் நாம் எப்படித் தப்பப் போகின்றோம்; இவற்றால் என்ன துன்பம் நேருமோ

தெரியவில்லையே" என்று தள்ளாடிக் கொண்டுச் சென்றார்கள். இரவு அதிகமாக அதிகமாக அவர்களுக்கு வழியும் தெரியவில்லை, செடியும் தெரியவில்லை. ஐயோ! கல்லிலும் முள்ளிலும், மேட்டிலும், பள்ளத்திலும், மரத்திலும், செடியிலும் மூக்கு போன வழிக்கு நேரே அவர்களை வருத்தி நடத்திச் சென்றன. அவர்கள் அன்றிரவு பட்டபாடு கடவுள் ஒருவனுக்கே தெரியும். காடெல்லாம் முட்கள் நிறைந்துவிட்டன; மேற் சட்டைகளெல்லாம் செடிகளாலும், மரக்கிளைகளாலும் பற்றி யீர்க்கப்பட்டுக் கிழிந்து விட்டன. களைப்போ அதிகம்; அந்தக் கற்பாறையில் போய் நிர்ப்பயமாய் படுத்துறங்கலாமென நினைத்த இவர்கள் இளைப்பால் கொஞ்சம் நின்றார்களோ எட்டு பத்துக் குத்துகள் ஒன்றின்மேல் ஒன்றாகத் தலையில் வீழ்கின்றன. இதனால் அவர்கள் இரவெல்லாம் அந்தக் குரங்குகளைச் சுமந்துக் கொண்டே அவை செலுத்திய விடங்களெல்லாம் நடந்துகொண்டே திரிந்தார்கள். அவைகள் எந்த விஷயத்திற்கும் அவர்களை விட்டுக் கீழே இறங்குவதாகத் தெரியவில்லை. ஆகார மூன்றும் வேலையைக்கூட அவர்கள் பிடரியிலிருந்தபடியே காய்கனிகளைப் பறித்துத் தின்று முடித்துக் கொள்கின்றன. ஆதலால், அவைகள் தங்களை விட்டு இறங்குமென்னும் விஷயத்தில் நம்பிக்கையேயில்லை. அவைகளுக்கு எப்பொழுது உற்சாகம் குறையுமோ, அவை எப்போது தம் பிடரியை விட்டிறங்குமோ என்பது அவர்களுக்குத் தெரியாது. தங்களுடைய நிலைமை எதிர்காலத்தில் என்னவாகு மென்பதையும் அவர்களால் உணர்ந்துகொள்ளக் கூடவில்லை.

இத்தகைய விஷயங்களால் ஏற்பட்ட பலவகைச் சந்தேகங்களினாலே அவர்கள் கண் கலக்கப்படும் சமயத்தில். சுப்பன் கண்ணீர் வடித்துக்கொண்டு " தந்தையே!

இஃதென்ன உயிரோடு நமக்கு நாகவேதனை ஏற்பட்டு விட்டதே; பெரிய வில்லங்கத்தில் நாம் சிக்கிக் கொண்டோமே இனி, நம்முடைய முடிவுதான் என்ன?" என்று கேசவனிடம் கேட்டான். அவன், "சுப்பா! இவை மிக்க உபத்திரவம் செய்யக்கூடிய குரங்குகள்; சவாரி செய்யும் உற்சாகம் தீரும்மட்டும் நம்மைவிடமாட்டா; நம்மைக் கொல்லுந் தன்மை இவைகளிடத்திலில்லை; என்றாலும், இவைகள் இரண்டு தினங்கள் வரையிலும் நம்மை விடாமலிருந்தால் நாம் பசியாலும், இளைப்பாலும் இறந்தே போவோம்; ஆதலால் இவைகளாக நம்மை விடுமட்டும் நாம் பொறுத்திருக்க முடியாது; நாமே இவற்றின் பிடியினின்றும் நீங்குவதற்கு ஏதேனுமொரு உபாயம் தேடவேண்டும்; விடிந்தால் ஏதேனும் ஏற்படும்; நீ என்ன வந்தாலும் அஞ்சாமலிரு; கடவுள் அனுக்கிரக மிருந்தால் நாம் பிழைத்துக் கொள்வோம்" என்று சமாதானம் கூறினன்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டே அந்தக்குரங்குகள் செலுத்திய வழியே கொஞ்சதூரம் நடந்துபோனார்கள். அந்தச் சமயத்தில் இரவு நீங்கி விடியற்காலமாயிற்று. சூரிய வெளிச்சம் எங்கும் பரவிற்று. அப்படி வெளிச்சமானவுடனே, அவர்கள் இரவெல்லாம் கண்விழித்து வழி நடந்த இளைப்பால், எதிரில் கொஞ்சம் நீரும் சேறுமாயிருந்த ஒரு பள்ளத்தில் தடுமாறி வீழ்ந்தார்கள். அப்பொழுதும் அந்தக் குரங்குகள் அவர்களை விடவில்லை. அத்தருணத்தில் அவர்கள் வீழ்ந்த அதிர்ச்சியால் அந்தப் பள்ளத்தில் நாலைந்து பெரிய நீர்ப் பாம்புகள் இருந்து வெளியேறி ஓடின. அவற்றைக் கண்டவுடனே அந்தக் குரங்குகள், அவர்களை விட்டுப் பளீரென்று தாவி ஒரு பக்கத்தில் ஓட்டம் பிடித்தன. அவர்கள், அந்தக் குரங்குகள் நீர்ப்பாம்புகளுக்குப் பயந்தே ஓடுகின்றனவென்

பதைத் தெரிந்துகொண்டார்கள். குரங்குகள் பாம்புகளைக் கண்டால் மிகுதியும் பயந்தோடுமென்பதும், நீர்ப்பாம்புகள் மனிதரைக் கடிக்கமாட்டா என்பதும் அவர்களுக்குத் தெரியுமாதலால், அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பாம்புகளை வாலிற் பிடித்துத் தூக்கிக்கொண்டு வேகமாக ஓடி அந்தக் குரங்குகளை நெருங்கி அவற்றின் முதுகில் எறிந்தார்கள். இரண்டு மூன்று பாம்புகள் அவற்றின் முதுகிற் பட்டுக் கீழே விழுந்தன. பாம்புகள் முதுகின் மேற்பட்டதுதான் தாமதம்; அந்தக் காட்டுக் குரங்குகள் மிகுதியும் பயங்கொண்டு, கீச்சுக் கீச்சென்று கத்திக்கொண்டு அம்பினுங் கடிய வேகங்கொண்டு திரும்பிப் பாராமல ஒரே ஓட்டமாய் ஓடி மறைந்துவிட்டன. அவைகள் அவ்வாறு பயந்தோடுவதை பார்த்தவுடனே கேசவனுக்கும் சுப்பனுக்கும் ஏற்பட்டிருந்த வருத்தங்களெல்லாம் எங்கோ பறந்தோடி விட்டன. அவர்களுக்கு அடக்க முடியாத சிரிப்புண்டாகி விட்டது. அதனால் அவர்கள் கீழே வீழ்ந்து வீழ்ந்து சிரித்தார்கள்,

அதன்மேல் சுப்பன், தந்தையை நோக்கி, "அப்பா! இப்பேர்ப்பட்ட பயந்த குரங்குகள் தாமே நம்மை இரவெல்லாம் துன்பப்படுத்தி விட்டன. இப்பொழுதவைகள் ஒரு சிறிய பிராணிக்குப் பயந்தோடுகின்றனவே!" என்று வியப்பாகக் கூறினான், அதற்குக் கேசவன், "மகனே! உள்ளத்தில் எத்தகைய வல்லமைசாலிகளும் ஒரு அற்பவிடத்திலும் அடங்கி விடுவார்கள்; கடவுள். இப்படியே ஒவ்வொருவருடைய கர்வமும் அடங்கும் மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கிறான்; இந்த உண்மையை அறியாத மூடர்கள் தாம் வீணே கர்வங்கொடு அலைவார்கள்," என்று சொல்லிவிட்டு, "சரி, இனிமேல் நாம் இத்தகைய ஆபத்துக்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் வெகு ஜாக்கிரதை

யாகச் சென்று, நல்ல மனிதர்கள் சஞ்சரிக்கு மிடத்தை யணுகவேண்டும்; இந்தப் பிரதேசங்களெல்லாம் ஆப்பிரிக் காவைச் சேர்ந்த பெருங்காடுகள் மலிந்தவிடம்; இந்தப் பக்கங்களிலுள்ள காடுகளில் மகா துஷ்ட மிருகங்கள் வசிக்கு மென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆத லால் நாம் விரைவில் இந்தக் காட்டுப் பிரதேசத்தைக் கடந்துவிட வேண்டும்; இனியும் நாம் ஆபத்துக்களில் சிக்கி ஞல் சகிக்க முடியாது; நாம் இதுவரை பட்டபாடு போதும்! போதும்!!" என்று சொன்னான். சுப்பனும் 'ஆம்; விரைந்து செல்லவேண்டும்', என்றான். பின்னர் இருவரும், அந்தப் பெரிய குரங்குகள் சஞ்சரிக்கும் அந்தக் காட்டின் எல்லையைச் சீக்கிரம் கடந்து சென்றுவிடவேண் டும் என்னும் எண்ணத்தால் வட திசை நோக்கி மிக்க விரைவாகச் சென்றார்கள்.

43-வது அத்தியாயம்

அங்ஙனம் சென்ற அவ்விருவரும் நெடுந்தூரம் நடந்து காலை பத்து மணிக்கு மேல் காட்டின் எல்லையைக் கடந்தார்கள். அதற்கப்பால், எங்கும் சமவெளி யாயிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவர்கள் மனதில் அச்சம் நீங்கிச் சிறிது அமைதியுண்டாயிற்று. அதனால் சுப்பன் மிகவும் வருந்திக் கேசவன் முகத்தைநோக்கி, "தந்தையே! நாம் திருட்டு முதலிய கொடுந்தொழில்களைப் புரிந்து திரிந்தாலும் முன்னே நல்ல ஆகாராதிகளை உண்டு சௌக்கியமாகவே இருந்தோம்; இப்போது வயிற்றுக்கு ஆகாரம்கூட அகப்படாமல் மிகுந்த கஷ்டப்படுகின்றோம்; இஃதென்ன காலவித்தியாசமோ தெரியவில்லையே; காலை யில் காப்பி உண்டா? ரொட்டியுண்டா? எதுவும் கிடைக்

காமல் நாம் தளர்ச்சியடைகின்றோமே," என்று மொழிந்தான். அதைக்கேட்டுக் கேசவன், "புத்திரனே நாம் மூந்தி எண்ணத்தொலையாத அக்கிரமங்களைச் செய்து கொண்டு திரிந்ததனாலேயே இக்கதிக் காளாயினோம்; அப்படியிருந்தாலும் தெய்வ சிந்தனையே இல்லாதிருந்த நாம், அந்தக் காட்டு மிராண்டிகளிடம் அகப்பட்டிருந்தபோது கடவுளைச் சிந்தித்தபடியால் பல ஆபத்துகளில் சிக்கியும் உயிராவது தப்பியிருக்கின்றோம்; இப்போது ஆகாரம் கிடைக்காததற்காக வருந்தவேண்டியதில்லை. ஆபத்துக்களில் தவறியதற்கு மிகுந்த சந்தோஷப்படவேண்டும். ஆகாரம் அகப்படாவிட்டாலும் எதையோனும் தின்று ஜீவித்துக்கொள்ளலாம்; உயிர் போய்விட்டால் அதை மீண்டும் பெறமுடியாது; ஆதலால், நம்மை ஆபத்துக்களினின்றும் நீக்கிக் காப்பாற்றிய கடவுளைச் சிந்தனைசெய்து கொண்டே வா; அவர் கிருபையால் நாம் சீக்கிரத்தில் ஒரு ஆதரவை அடையலாம்; இங்கே காடு நீங்கிச் சமவெளி தோன்றுவதால் சமீபத்தில் ஜனசஞ்சாரமுள்ள இடம் அகப்படக்கூடும், ஆனல், இனி இந்தப் பக்கத்திலிருக்கும் ஜனங்கள், அந்தக் காட்டு மிராண்டிகளைப் போன்றவர்களாக இருக்கமாட்டார்கள்; இங்கே தின்பதற்குரிய காயோ, கிழங்கோ, கனியோ அகப்படுமாவென்று தேடிப்பார்; ஏதேனும் அகப்பட்டால் அதைத் தின்று விரைவில் வழி நடக்கலாம்," என்று சொன்னான். சுப்பன் நான்கு பக்கங்களிலும் திரும்பிப் பார்த்தான். ஒரு பக்கத்தில் பசுமையான குத்துச் செடிகள் அடர்ந்து தோன்றின. அவற்றைப் பார்த்ததும் சுப்பன், கேசவனிடத்தில், "அப்பா! அதோ பசுமையான செடிகள் தோன்றுகின்றன; அங்கே சென்றால் ஆகாரப் பொருள்கள் கிடைக்கக்கூடும்," என்றான்.

இருவரும் அங்கே சென்றார்கள். அதிர்ஷ்ட வசமாய் அந்தச் செடிகள் ஆள் வள்ளிக்கிழங்குச் செடிகளாயிருந்தன. அவை எவராலும் வைத்து உண்டாக்கப்படாமல் இயற்கையாக உண்டானவைகள். அவற்றைக் கண்டவுடன் அவர்கள் ஆவலோடு அடியிற் பறித்தார்கள். பெரிய பெரிய ஆள் வள்ளிக் கிழங்குகள் அகப்பட்டன. அவர்கள் இரண்டு வீசைக் கிழங்களுக்குமேல் தோண்டி எடுத்து அங்கே ஓடிக்கொண்டிருந்த சிறு கால்வாயிலுள்ள ஜலத்தில் போட்டுக் கழுவி எடுத்து அவற்றை நெருப்பில் சுட்டுத் தின்னலாமா வென்று யோசித்தார்கள். அங்கே நெருப்பேது? அதனால் பச்சைக் கிழங்குகளையே வயிறு நிறையத்தின்று தண்ணீரைக் குடித்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. மீதிக் கிழங்குகளை மூட்டைகட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அங்ஙனம் புறப்பட்டு போனவர்கள் வெகு சீக்கிரமாகவே பன்னிரண்டு மணிக்குள் அந்தச் சமவெளியைக் கடந்து விட்டார்கள். அதற்கப்பல் மணல் பிரதேசம் தெரிந்தது. அதில் நெடுந்தூரம்வரை மரமோ செடியோ புல்லோ பூண்டோ இல்லை. சுமார் மூன்று மைலுக்கப்பால் குளிர்ந்த மரச்சோலை இருப்பதாகத் தெரிந்தது. அது பன்னிரண்டு மணி நேர மாகையால் அந்த மணல்வெளி அக்கினிமயமாகவே இருந்தது. அதில், அவர்கள் போகலாமா போகக்கூடாதா என்று யோசித்தார்கள். போகாவிட்டால் வேறுவிதியில்லை. அங்கே தங்கியிருந்து இராத்திரி வந்த பின் போகலாமென்று நினைத்தாலோ ஏதேனும் அபாயம் நேரக்கூடுமென்று அச்சமாய் இருக்கிறது. ஆதலால், எப்படியேனும் கொஞ்சம் சிரமப்பட்டாவது அந்த மணல்வெளியைத் தாண்டிவிட்டால் சௌக்கியம்உண்டாகுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்

தால் அவர்கள் துணிந்து அந்த மணல் வெளியில் நடக்கத் தொடங்கினார்கள். சிறிது தூரம் வரை அவர்களுக்குச் சிரமம் தோற்றாமலிருந்தது. அதனால் அவர்கள் விரைந்து சென்று அந்தப் பாலை நிலத்தில் பாதி தூரத்தைக் கடந்து விட்டார்கள்.

அதற்குமேல் அவர்களுக்குக் கஷ்டம் தோற்ற ஆரம்பித்துவிட்டது. மத்தியானம் ஒன்றரை மணிநேரம், சூரிய கிரணமோ நெருப்பை வாரி வீசுவதுபோல் வீசுகின்றது; நிழலும் சுடுகின்றது, மேலும் சுடுகின்றது. வியர்வை ஒழுகி அவர்களுடைய உடைகளெல்லாம் நனைந்துபோய் விட்டன; நாவறண்டு போயிற்று. பிரமாண்டமான நெருப்புக் கோழிகள் ஆங்காங்கே குறுக்காக ஓடிக்கொண்டிருக்கின்றன. நெருப்புமயமான விஷத்தைக்கக்கும் பாம்புகள் பற்பல விடங்களில் சஞ்சரித்துக் கொண்டு திரிகின்றன. இன்னும் பல கொடிய விஷ ஜந்துக்கள் நாலாபக்கங்களிலும் ஓடுகின்றன. இவற்றால் அவர்களுக்குச் சகிக்கமுடியாத துன்பமுண்டாய் விட்டது. அவர்களால் எரிச்சல் தாங்க முடியவில்லை, தாகம் சகிக்கக்கூட வில்லை; தண்ணீரும் கிடைக்கவில்லை. சுப்பன் கஷ்டம் சகிக்க முடியாமல் "ஐயோ! இறந்தேன்," என்று கத்தினான். கேசவனும் அத்தகைய துன்பத்தை அடைந்தான் எனினும் சத்தம் போடவில்லை. பல்லைக்கடித்துக் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு மகனைத்தழுவி, "அப்பா; அழாதே; சிரமப் பட்டாவது இன்னும் சிறிது தூரம் சென்று விட்டால் அந்தச்சோலையை அடைந்து விடலாம்; அதன்மேல் துன்பம் ஏற்படாது," என்று தேறுதல் கூறி மெதுவாக அழைத்துக்கொண்டு போனான். போகப்போக அவர்களுக்கு மரணாவஸ்தை உண்டாய்விட்டது. உட்காரலா மென்றாலோ மணல் நெருப்புமயமா இருக்கிறது. நெருப்பில்

பட்ட தாமரைத் தண்டுபோல் அவர்கள் வாடிவதங்கிப் பாதி உயிர் நீங்கினவர்கள்போல் ஆகிவிட்டார்கள். முடிவில் மாலை ஐந்து மணிக்குக் கால் தள்ளாடிக்கொண்டு அந்த மணல் வெளியைக் கடந்து முன்னே தோற்றிய குளிர்ந்த மரச் சோலையை அடைந்தார்கள். அதன் ஓரத்தில் குளிர்ந்த நீர்த் தடாக மொன்றிருந்தது. அதைக் கண்டவுடனே அவ்விருவருக்கும் போன உயிர் மீண்டும் வந்ததுபோலிருந்தது. ஆவலோடு போய் அதில் வீழ்ந்தபடியே நீரைத் தொண்டை வரையிலும் பருகிவிட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு மேலுடைகளை நனைத்தபடியே ஒரு மரத்தின் நிழலிற்போய்ச் சாய்ந்துவிட்டார்கள். பசியாலும், வெப்பத்தால் வாடிய வாட்டத்தாலும், மிகுந்த களைப்பினாலும், அவர்கள் அவ்வாறு நீரைப் பருகி மரத்தின் நிழலில் படுத்தவுடனே ஒருவித ஆயாசத்தை அடைந்தார்கள். அதனால் அவர்களுக்கு ஒருவித மயக்கமும் நித்திரையும் உண்டாகிவிட்டன. சிறிது நேரத்திற்குள் அவர்கள் மெய்மறந்து தூங்கிவிட்டார்கள். தங்களுக்கு ஆபத்து வருமென்ற சிந்தனையோ, வேறெவ்விதமான நினைப்போ அவர்களிடத்தில் தோன்றவே இல்லை. அவர்கள் படுத்தது தான் தாமதம். தேகத்தை மறந்து விட்டார்கள். அவர்களுடைய ஆத்மாக்கள் வேறொரு லோகத்தில் குடி புகுந்தவை போன்று மறைவுற்றிருந்தன. அவர்களை அப்போது என்ன செய்யினும் அவர்கள் எதையும் உணரக்கூடாத நிலையிலிருந்தார்கள்.

44-வது அத்தியாயம்

அன்றிரவு கழிந்தது மறுநாட்காலையில் சூரியோதய மாகுந்தருணத்தில், கேசவனும், சுப்பனும் படுத்திருந்த சோலையில் அவர்கள் இல்லை. அதற்குப்

பக்கத்திலிருந்த ஒரு சிற்றூரில் ஒரு வீட்டின் கூடத்தில் இருவர் அலங்கோலமாய்ப் படுத்துறங்கினார்கள். அவர்களைச் சுற்றிலும் பலஜனங்கள் கூடி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் இவர் இரண்டு கத்திகளைப் பளபளப்பாகத் தீட்டிக்கொண்டிருந்தார்கள். அக் கூட்டத்தார்கள் எல்லோருமே தூங்குகின்ற அவ் விருவரையும் எழுப்ப வேண்டுமென்னும் முயற்சி யுடையவர்களாய்த் தோன்றினார்கள். ஒருவன் குளிர்ந்த ஜலத்தில் மெல்லிய துணியை நனைத்துக்கொண்டு அதனால், தூங்குகின்றவர்களுடைய முகத்தில் தட்டினான். அந்த ஈரம் பட்டவுடனே, தன்னை மறந்து மயக்கத்துடன் தூங்கிய இருவரும் விழித்துக் கொண்டார்கள். அங்ஙனம் விழித்ததும் தங்களைப் பல மனிதர் சூழ்ந்திருப்பதையும், இவரால் கத்திகள் தீட்டப்படுவதையும் பார்த்தவுடன், "ஐயோ! இன்னுமா!" என்று கதறினார்கள். நண்பர்களே! இவர்கள் யாரோ வென்று நினைக்கவேண்டாம்; அந்தச் சோலையில் படுத்திருந்த நமது கேசவனும் சுப்பனுமே. இவர்கள் எப்படி இங்கே வந்தார்களென்றால், இவர்கள் படுத்த சிறிது நேரத்திற்குள் அவ் வூரார்களிற் சிலர் அங்கே வந்தார்கள். இவர்களைக் கண்டு, "யாரோ அன்னிய நாட்டுக்காரார்கள், எக் காரணத்தினாலோ மிகுந்த அவஸ்தையடைந்து களைத்துப் படுத்திருக்கிறார்கள்; இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று எழுப்பப் பலவிதமாகப் பிரயத்தனப் பட்டார்கள். ஒரு விதத்தாலும் முடியவில்லை. அதன்மேல் அவர்கள், இவர்களைத் தூக்கிக்கொண்டுபோய் அந்த வீட்டிற் சேர்த்து இவர்கள் நன்றாகத் தூங்கித் தாமாகவே எழுந்திருக்கட்டு மென்று படுக்க வைத்து விட்டார்கள். இவர்கள், விடிந்து நெடுநேரமாகியும் எழுந்திருக்காததனால், இவர்களை எழுப்பிக் களை தெளியும்படி இவர்க

ளுக்கு இளநீர் வெட்டிக்கொடுக்க வேண்டுமென்று நினைத்தார்கள். அதனால் தான், ஒருவன், ஈரத்துணியை இவர்கள் முகத்தில் தடவி எழுப்பினான். இருவர், கத்திகளைத் தீட்டிக்கொண்டிருந்தது இவர்கட்குக் கொடுப்பதற்காகத் தென்ன மரத்தில் ஏறி இளநீர் வெட்டுவதற்கே. இவர்கள் நல்ல வகுப்பைச் சேர்ந்த ஜனங்கள்.

விஷயம் இப்படியிருக்க, கேசவனும், சுப்பனும் எழுந்தவுடன், இளநீர் வெட்டும் பொருட்டு அவர்கள் தீட்டிய கத்திகளைப் பார்த்து முந்தின காட்டுமிராண்டிகள் மனிதரை வெட்டித் தின்றதுபோலவே இவர்களும் கொல்வதற்கே நம்மைத் தூக்கி வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். அதனாலேயே இவர்கள் அவ்வாறு பெரும் பீதியுடன் கதறினார்கள். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்,' என்பதுபோல் இவர்கள் முந்தியே ஈரமாமிச பக்ஷணிகளிடம் அகப்பட்டு அவஸ்தையடைந்தவர்களாதலின், கத்திகளைக் கண்டவுடன் இவ்வாறு கத்தி விட்டார்கள்.

அவ்வாறு கதறவே, அவர்களெல்லாரும் "ஐயோ! நாம் சகாயம் செய்யும்போது ஏன் இவர்கள் இப்படிப் பயப்படுகிறார்கள்!" என்று அதிசயித்து, அவர்களிடம் நெருங்கி அவர்களின் முதுகைத்தடவிக்கொடுத்து, "நண்பர்களே! நீங்கள் என் பயப்படுகின்றீர்கள். உங்களுக்கு நாங்கள் தீங்கு செய்யமாட்டோம். நீங்கள் ஏதோ ஆபத்தில் சிக்கி வந்து மயங்கிக் கிடக்கின்றீர்களென்று நினைத்தே உங்களைத் தூக்கி வந்தோம்; நீங்கள் பயப்பட வேண்டாம்," என்றார்கள். கேசவனும், சுப்பனும், "இவர்களும் அந்தக் காட்டுமிராண்டிகளைப் போல் முதலில் நலஞ்செய்வதுபோற் காட்டிப் பின்னே கெடுதி செய்வார்களா? அல்லது உள்ளபடியே உதவி செய்யக்கூடியவர்

களா" என்ற குறிப்பு விளங்கும்படி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது இவர்கள் தங்களுக்குத் தெரிந்த பாஷையையே பேசியதால் அந்தக் காட்டு மிராண்டிகளைப் போன்ற கொடுஞ் செய்கை யுடையவரா யிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை கேசவனுக்குண்டாயிற்று. அதனால், அவன், 'இவர்களை நாம் நம்பலாம்' என்று சுப்பனுக்கு ஜாடையாகக் காட்டினான். இதன்மேல் இருவருக்கும் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று.

அங்ஙனம் மனதிடமுண்டாகவே அவ் விருவரும் அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி, "நண்பர்களே! நீங்கள் மெய்யாகவே எங்களுக்கு உதவி செய்யக் 'கூடியவர்களாயிருந்தால் உங்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கூடியவர்களா யிருப்போம்; நாங்கள் ஆகாரம் சாப்பிட்டு மூன்று தினங்களுக்கு மேலாகின்றன; அதனால் எங்களுக்குப் பசியும் களைப்பும் அதிகம்; நீங்கள் ஏதேனும் முதலில் எங்களுக்கு ஆகாரம் கொடுப்பீர்களானால் நாங்கள் எங்கள் பசியைத் தணித்துக்கொண்டு அதன்மேல் எங்கள் வரலாறுகளில் முக்கியமான சிலவற்றைக் கூறுவோம்," என்றார்கள். உடனே அங்குக் கத்திகளைத் தீட்டிக்கொண்டிருந்த இருவரும் அந்த வீட்டின் முற்றத்திலிருந்த ஒரு தென்னமரத்திலேறிப் பத்துப் பனிரண்டு இளநீர்களைப் பறித்து வந்து இருவருக்கும் சீவிக் கொடுத்தார்கள். கேசவனும், சுப்பனும் வயிறு பொரும ஆளுக்கு ஐந்தாறு இளநீர்களைப் பருகி விட்டார்கள். அவர்களுக்கு மிகுதியாக உண்டாகியிருந்த களைப்பு உடனே நீங்கிற்று. மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அதன்மேல் இவர்கள் தங்களுடைய முக்கியமான இரகசியங்களை மறைத்து விட்டுத் தாங்கள் எதி

வந்த கப்பல் நடுக்கடலில் சேதமடைந்தது முதல் அது வரையிலும் நடந்த அபாயங்களை யெல்லாம் கூறினார்கள். அவற்றை யெல்லாம் கேட்டவுடன், அவ்வூராரனைவரும் "இப்படியும் மனிதர்க்குத் துன்பங்களுண்டாகுமோ!" என்று அதிசயித்து அவர்கள் மீது மிக்க இரக்கங்கொண்டு அவர்களுக்கு நல்ல ஆகாரங்களையும் சாராயம் முதலிய வைகளையும் கொடுத்து மிக்க பயங்கரமான விடத்திற் போய்ச் சிக்கியிருக்கின்றீர்கள்! இதற்குப் தெற்கிலுள்ள அப் பகுதிகள், துஷ்டமிருகங்களும், மலைப்பாம்புகளும், முதலைகளும், நரமாமிச பக்ஷணிகளாகிய காட்டு மிராண்டி களும் மிகுந்து சஞ்சரிக்கு மிடங்கள். இவ் விடத்திற்குச் சென்றவர்கள் திரும்பி வருவதேயில்லை. நீங்கள் ஏதோ தெய்வ கிருபையால் தப்பி வந்திருக்கின்றீர்கள்; இனி நீங் கள் நிர்ப்பயமா யிருக்கலாம். ஆனால் நீங்கள் எந்தத் தேசம்? என்ன காரியத்தை உத்தேசித்து எங்கே போகப் புறப்பட்டீர்கள்? உங்களுக்கு இங்கே யிருக்க விருப்பமா வேறெங்கேனும் போக விருப்பமிருக்கிறதா? உங்களு டைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் நாங்கள் அதன் படிச் செய்வோம்" என்றார்கள்.

அப்போது, கேசவன், தன்னுடைய உண்மையான வாசஸ்தலத்தையும், மற்ற விஷயங்களையும் கூற முடியா தாதலால், அவற்றை மறைத்துக் கூறத்தொடங்கி அவர் களை நோக்கி, "உபகாரிகளே! நாங்கள் இருப்பது பல்லவ தேசம்; இந்த ஆப்ரிக்கா தேசம் வந்து ஏதேனும் தொழில் செய்து பணம் சம்பாதிக்கலாமென்று கருதிக் கப்பலேறி னோம்; எங்கள் தலைவிதியானது இப்படி முடிந்தது. இப் போது எங்களுடைய மனம் அதிக கலவரம் அடைந்திருக் கின்றன. அதனால் மனத்திலிருந்த எண்ணங்களெல்லாம் மாறிப்போயிருக்கின்றன. நாங்கள் இங்கே தங்குவதைப்

பற்றி மாத்திரம் கொஞ்சம் நிதானமாக யோசித்துச் சொல்லின்றேம்," என்று கூறினன். அவர்கள், "அப்படியே உங்களுக்கெப்பொழுது இஷ்டமோ அப்போது அபிப்ராயத்தைக் கூறலாம்; நீங்கள் இரண்டு தினங்கள் வரை இங்கே இருந்து ஸ்நானபானுதிகளும், நல்ல உணவுகளும் கொண்டு உங்களுக்கேற்பட்ட சிரமங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்," என்று அவ்விருவருக்கும் சாப்பாடு முதலிய செளகரியங்களெல்லாம் குறைவின்றி நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டுத் தங்கள் தொழில்களிற் பிரவேசித்தார்கள்.

அன்று அவ்விருவரும் நல்லுணவுண்டு பகலெல்லாம் படுத்து இளைப்பாறினர்கள். அன்றுதான் அவர்களுக்கு நிம்மதி ஏற்பட்டது. அதனல் அவர்கள் பகல் முழுவதும் கவலையற்று உறங்கினர்கள். மாலை நேரத்தில் இருவரும் எழுந்து அந்த வீட்டின் பின்பக்கத்திலுள்ள தோட்டத்திற்குள் நுழைந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, மேல் நடத்தவேண்டிய விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினர்கள். சுப்பன் கேசவனை நோக்கி, "அப்பா! நாம் ஆபத்துகளை எல்லாம் விட்டு நீங்கி ஒரு செளகரியமான இடத்தில் வந்து சேர்ந்தோம்; இனி என்ன செய்யலாம்; இங்குள்ளவர்களோ மிகுந்த உபகாரிகளாக விளங்குகிருர்கள். நாம் இவ்விடத்திலேயே தங்கி ஏதேனும் ஒரு தொழிலைப் பார்த்தால் செளகரியம் ஏற்படுமென்றுநான் நினைக்கிறேன்; நாம் இங்கேயே இருந்துவிடலாமா?" என்று வினவினன்.

ஆப்ரிக்காவின் அந்தப் பகுதியிலுள்ள ஜனங்களோ மிகுந்த கறுப்பு நிறமுடையவர்கள்; அந்தக் காட்டிலோ வெயிலின் தீக்ஷண்யம் அதிகம். செளகரியமான தொழில் இல்லை. விசேஷ வரும்படி யில்லை; தொழில் செய்பவர்கள்

ரப்பர் தோட்டங்களில்தான் கஷ்டமான வேலைசெய்து சொற்ப வரும்படி தேடவேண்டும். வேறு தேசங்களில் சற்று சுகமாயிருந்து ஜீவித்தவர்களுக்கு அந்நாட்டு வாசம் பிடிக்காது. அதிலும் இவ்விருவரும் இந்திரபுரிப் பக்கம் வாசஞ் செய்துகொண்டு, திருட்டு, கொள்ளை முதலியவற்றைப் புரிந்து ஏராளமான பொருள் சேகரித்து நினைத்தபடி குடித்துச் சுயேச்சையாகச் செருக்கி மிகுந்த சௌக்கியத்தோடு இருந்தவர்களாதலால், அங்குள்ள ஜனங்கள் நல்லவர்களாகவும், மிக்க உபகாரிகளாகவும் இருந்தாலும் அந்த அசௌகரியமான நாட்டில் இருக்க, இவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அதனால் கேசவன் சுப்பனைப் பார்த்து, "புத்திரனே, இங்குள்ளவர்கள் நல்லவர்கள் தாம்; நாம் எவ்வளவு காலம் இங்கே இருந்தாலும் இவர்கள் உதவி யுடையவர்களாகவே இருப்பார்கள். அப்படி இருந்தாலும் இந்த நாடு நாம் வசிப்பதற்கு யோக்கியமானதாகத் தோன்றவில்லை. ஆதலால் இங்கே கொஞ்சநாளிருந்தாவது கப்பல் கூலிக்குச் சிறிது பணந் தேடிக்கொண்டு கப்பலேறிப் பல்லவதேசம் போய்விட்டால் ஏதேனும் ஒழுங்கான ஒரு தொழிலைச் செய்து ஜீவிக்கலாம்," என்றான். சுப்பன், "ஐயோ! அப்பா! அந்தப் பக்கம் நாம் போகவா? அங்கே நம்மை விழுங்குவதற்குப் பெரிய பாம்பு வாயைத் திறந்துகொண்டிருக்கின்றதே; நாம் குற்றத்தின் மேற் குற்றமாகப் பல குற்றங்களைச் செய்து வந்திருப்பதால் வாரண்டு நம்மை நல்வரவேற்பதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்குமே; நம்மைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அதிகப் பரிசு கொடுப்பதாகத் துரைத்தன விளம்பரமும் எங்கும் பரத்தப்பட்டிருக்கிறது; நம் குற்றம் இந்திரபுரியில் ஏற்பட்டிருந்தாலும் பல்லவதேசம் முதலிய எல்லா நாடுகளிலும் பரவி

யிருக்கும்; நம்முடைய அங்க அடையாளங்களும் எங்கும் தெரிவிக்கப்பட்டிருக்கும்; ஆதலால், நாம் அந்தப்பக்கம் சென்றவுடனே எவரும் கண்டுபிடித்துக் கொள்வார்கள். மீண்டும் சிறைக் கூடத்திற்குப் போக நேரும்; அப்படிப் போய் அவஸ்தைப் படுவதைக் காட்டிலும், சௌகரியக் குறைவாயிருந்தாலும் இவ்விடத்திலேயே வாசஞ்செய்வது நலமாயிருக்குமே," என்றான், அதற்குக் கேசவன், "மகனே! நீ சொல்வதெல்லாம் உண்மையே; எனினும் நாம் அங்குச் சென்று வியாபாரிகளைப் போல் வேடந் தரித்து யோக்கியமான வியாபாரஞ் செய்துகொண்டிருந் தால் எவரும் நம்மைக் கவனிக்க மாட்டார்கள். நம்மு டைய முந்தி வழக்கத்தை அனுசரித்து தீயகாரியங்களைச் செய்துகொண்டு திரிந்தால்தான் ஏதேனுமொரு வகையில் சிக்கிக் கொள்வோம்; எப்பொழுதும் நன்மை உடையவர் களுக்குக் கடவுள் துணைசெய்வார். கடவுள் சிந்தனையே இல்லாதிருந்த நான், அந்தக் காட்டு மிராண்டிகளாகிய இராக்ஷஸர்களிடம் சிக்கியிருந்தபோது கடவுளை மிகவும் பிரார்த்தித்து 'இனி எப்பொழுதும் ஒரு துஷ்ட காரி யத்தை யேனும் செய்வதில்லை,' என்று பிரதிக்ஞை செய்து கொண்டேன்; அதனாலேயே நாம் பிழைத்து வந்தோம். அதிலிருந்து தீமை செய்வார்க்கு இத்தகைய துன்பங்கள் தாம் ஏற்படுமென்பதையும், நம்மை செய்தார்க்கு இத்த கைய நலங்கள் உண்டாகு மென்பதையும் விளக்கமாகத் தெரிந்து கொண்டேன்; நாம் முந்திச் செய்த தீவினைகளின் பயனாகவே இத்தனை துன்பங்களும் நமக்கு நேர்ந்திருக்கின் றன. அறிவில்லாத மூடர்களே, தெய்வத்திற் கஞ்சாம லும், பின்வரும் கெடுதியை உணராமலும் அகங்காரம் கொண்டு அடாத காரியங்களைச் செய்து அவஸ்தைக்குள் ளாவார்; இனி ஒருபோதும் நான் அவ்விதம் செய்ய மாட்

டேன்; நீயும் அப்படி நடக்கவேண்டும். இருவரும் ஒரே விதமாக நன்மையான வழியில் நடந்துவந்தால் நம்முடைய பிற்காலத்தின் வாழ்க்கை இனிதாக நடைபெறும்; அப்படி நாம் ஒழுங்காக நடந்தும் வாரண்டில் சிக்கிக்கொண் டால், அரசாங்கத்தார் இடத்தில் இனிமேல் எவ் வித குற்றத்திற்கும் உட்படாமல் ஒழுங்கான மார்க் கத்தில் நடப்பதாக வாக்குறுதி செய்து நல்ல நடக் கைக்கு ஜாமின் கொடுத்து விட்டு மன்னிப்புப் பெற்று வந்து விடலாம். எப்பொழுதும் நல்ல வார்த்தைக்குப் பொல்லாப்பில்லை. நாம் துணிந்து அங்கே சென்றால் உன்னு டைய சகோதரியையும் ஒரு சமயம் பார்த்துக்கொள்ள லாம்; என் மருமகனையும் கண்டு கொள்ளலாம்; நாம் நன் மார்க்கத்தில் திரும்பி விட்டோமென்பதை அவர்களுணர்ந் தால் மிகுதியும் மனமகிழ்ச்சி அடைவார்கள்; நமக்கும் வேண்டிய உதவி ஒத்தாசைகளைச் செய்வார்கள், இன்ன மொன்று கூட நான் நினைக்கிறேன்; என் அருமைப் புதல்வியினுடைய புண்ணியத்தாலும், மருமகன் பூபாலம் பிள்ளையுடைய நீதியாலுமே நாம் இந்த ஆபத்துகளி லிருந்து மீண்டோமென்னும் எண்ணம் எனக்கேற்பட் டிருக்கின்றது. ஆதலால், இனி நாம் அவர்களுடைய மனம்போலவே நடந்து அவர்களுக்கு மனத்திருப்தியை யும், கவலையற்ற வாழ்வையும் உண்டாக்கவேண்டும்; கன விலும் களவு, கொலை முதலியவற்றை நினைத்தல் கூடாது; இதுவரையிலும் நாம் அவற்றால் பட்டபாடுபோதும்! போதும்!!" என்று கூறினான்.

இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டவுடன் சுப் பன் சற்று யோசித்து, தந்தையே! அப்படியானால் உம திஷ்டப்படியே நாம் செய்வோம்; இப்பொழுது முதலா வது கப்பல் சார்ஜுக்குப் பணம் தேட முயற்சி செய்ய

வேண்டும்,'' என்று கூறினன். "அதைச் சுலபமாய்த் தேடிக்கொள்ளலாம்,'' என்று கேசவன் சொன்னன். இவ்வாறு இருவரும் பேசி முடித்துக்கொண்டதும் தங்கள் ஜாகைக்கு வந்தார்கள். இரவானதும், அவ்வூராரில் முக்கியஸ்தர்களெல்லோரும் இவர்களுடைய சௌக்கியத்தைப்பற்றி விசாரிப்பதற்கு அங்கே வந்து கூடினர்கள். அவர்களிற் சிலர், கேசவனையும், சுப்பனையும் நோக்கி, "நண்பர்களே! இனிமேல் நீங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்தீர்களா?'' என்று வினவினர்கள்; அதற்கவர்கள், "துணைவர்களே! உங்களுடைய உபகாரகுணத்தைக் கண்ட எங்களுக்கு உம்மை விட்டுப் பிரிய இஷ்டமில்லை. எனினும், நாங்கள் எண்ணிறந்த துன்பங்களை யடைந்தபடியால் எங்கள் சுற்றத்தார்களைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பம் எங்களுக்கு அதிகமாகஏற்பட்டிருக்கின்றது. ஆதலின், நாங்கள், எங்களுடைய சொந்த நாடாகிய பல்லவதேசம் போக உத்தேசித்திருக்கின்றோம். நீங்கள், எங்களுக்கேதேனும் ஒரு வேலை ஏற்படுத்தினல், நாங்கள் அதைச் செய்து கப்பல் சார்ஜுக்குப் பணந் தேடிக்கொண்டு புறப்பட்டுப் போய்விடுவோம்,'' என்றார்கள். எல்லோரும் யோசித்து, ஒரு முடிவு செய்துகொண்டு இவர்களை நோக்கி, "நண்பர்களே! உங்களுக்கு அவ்வாறு விருப்பமிருக்கும் பக்ஷத்தில், நீங்கள் அதற்காக ஒரு தொழில் செய்து பணம் சம்பாதிக்கவேண்டியதில்லை. பலவித துன்பங்களை அடைந்து மிகவும் இளைத்துப்போயிருக்கின்றீர்கள். உங்களால் இப்போது வேலை செய்ய முடியாது. ஆதலால் நாங்களே உங்கள் செலவுக்குப் போதுமான பணம் சேகரித்துக் கொடுக்கின்றோம். இதற்கு மூன்றாவது நாள் இத் தீவுக்கு ஒரு கப்பல் வரும். அதில் நாங்கள் உங்களை ஏற்றி அனுப்புகிறோம்,'' என்றார்கள்.

கேசவனும், சுப்பனும் மிக மகிழ்ச்சியுற்று அவர்களை நோக்கி, "நேயர்களே! நீங்கள் செய்யும் இவ்வுதவியை நாங்கள் எப்போதும் மறக்கமாட்டோம்," என்றார்கள். அவ்வூரார்கள் வீட்டிற்கு இவ்வளவென்று வரி ஏற்படுத்தி ஒரு மொத்தத் தொகைப்பணம் வசூலித்து இவ்விருவருக்கும் கொடுத்தார்கள். அதன்மேல் இவர்கள் தங்களுக்கு வியாபாரிகள் தரிப்பனபோன்ற சில உடைகளும், பிரயாணத்திற்கு வேண்டிய இதரபொருள்களும் சேகரித்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமா யிருந்தார்கள். நகரங்களிலுள்ளவர்களைக் காட்டிலும் நாடுகளில் உள்ளவர்களுக்குப் பரோபகார சிந்தை அதிகமுண்டு, அவர்கள் அன்னிய நாட்டார்களைக் கண்டால் அவர்களுக்கு மிக்க உதவியும், உபசாரமும் செய்வது வழக்கம். அதனாலேயே இந்நாட்டவர்கள், கேசவனையும், சுப்பனையும் முன்பின் அறியாதவர்களா யிருந்தும் அவர்களுக்கு இத்தகைய உதவிகளைச் செய்தார்கள்.

45-வது அத்தியாயம்

மூன்றாவது நாள், அத்தீவிற்குச் சில சாமான்களை ஏற்றிச் செல்வதற்கு ஒரு கப்பல் வந்தது. அது, பல்லவ நாட்டிற்குச் செல்வதே. அது வந்த மறுநாள் பிரயாணமாகக் கூடியதா யிருந்தது. அந்நாளில் கேசவனும், சுப்பனும் அவ்வூராரிடம் அன்பாக விடைபெற்றுக் கொண்டு கப்பலுக்குப் போனார்கள். அவ்வூரார்களில் சில பெரிய மனிதர்கள், அவர்களோடு சென்று பிரயாணச் சீட்டு வாங்கிக்கொடுத்து, அவர்களைக் கப்பலேற்றி விட்டுத் திரும்பினார்கள். கப்பல், நல்ல நேரத்தில் பிரயாணமாயிற்று. அது, ஒரு வாரம் சென்று, பல்லவதேசம் போய்ச் சேரக்கூடியதா யிருந்தது. கேசவனும் சுப்பனும் அக் கப்

பலிற் செல்லும்போது வியாபாரிகளின் உடை அணிந்திருந்தார்கள். அதனால், அவர்களை, முந்திச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்ட கள்ளர்களென்று ஒருவரும் தெரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் மூன்று தினங்கள் வரை யாதொரு விபத்துமின்றி அக்கப்பலிற் பிரயாணஞ் செய்தார்கள். அதனால், பல்லவதேசம் போய்ச் சேர்ந்ததும், மிக்க சௌக்கியத்துட னிருக்கலாமென்று நினைத்தார்கள். அந்தோ! மனிதர் எண்ணம் போல் காரியங்கள் எங்கே நடக்கின்றன. "ஒன்றை நினைக்கில் அது வொழிந்திட் டொன்றாகும்", என்றபடி, ஒருவன் நினைத்ததொன் றிருக்கத் தெய்வச் செயலால், மற்றொன்று நிகழ்வது உலகியற்கை யன்றோ? கேசவனும், சுப்பனும் சிலதினங்கள்வரை சரியான ஆகாரமின்றியிருந்தபடியாலும், பற்பல திகில்களையும் சங்கடங்களையும் அனுபவித்தபடியாலும், உஷ்ணமிகுதியான பிரதேசங்களில் சஞ்சரித்துக்கொண்டு திரிந்தபடியாலும், இரண்டு மூன்று தினங்கள்வரை கப்பலில் குளிர்ந்த காற்றுவீச சஞ்சரிக்கவே நான்காவது தினத்தில் திடீரென்று அவ்விருவருக்குமே சுரநோய்கண்டது. அன்று முழுவதும் வியாதி அகப்படவில்லை. சாதாரண நிலைமையிலேயே இருந்தது. அதனால் கப்பலிலுள்ள டாக்டர்களுக்கு அவர்கள் தங்களுடைய வியாதியைப் பற்றித் தெரிவிக்கவில்லை. ஆனால் ஐந்தாவது தினத்தில் நோய் அதிகப்பட்டு விட்டது. மனிதர்களுக்கு இருக்கவேண்டிய நிலைக்குமேல் மிகுதியாய் விட்டது. அவர்களுக்கு அதனால் அடிக்கடி நினைவு தடுமாறிக்கொண்டிருந்தது. அந்நிலைமை உண்டாய்விடவே அங்கிருந்த பிரயாணிகளில் சிலர் "இஃதபாயமான சுரமாயிருக்கிறது" என்று உடனே கப்பலிலுள்ள பெரிய டாக்டருக்கு அதைப்பற்றித் தெரிவித்தார்கள். டாக்டர் வந்து

பார்த்து அவர்களின் வியாதிக்குத்தக்க ஔடதம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

என்னமருந்து கொடுத்தும் பயன்படவில்லை. வரவர வியாதி அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஆருவது நாள் அவர்களுக்கு ஜன்னி அதிகரித்துவிட்டது. பிரக்ஞைதவறிவிட்டது. டாக்டருக்கு அவர்கள் பிழைப்பார்களென்பதில் நம்பிக்கையில்லை. கப்பலில் எவருக்கேனும் வியாதியுண்டாகி அது தீராத நிலைமைக்கு வந்துவிட்டால்—வியாதியஸ்தர் பிழைக்கமாட்டாரென்பது தெரிந்தால்—அவர்களைச் சமுத்திர ஜலத்தில் தூக்கிப் போட்டுவிடுவது அக்காலத்திய வழக்கம். ஆதலால், அவர்கள் பிழைக்கமாட்டார்களென்பது தெரிந்தவுடனே டாக்டர்களும், கப்பல் தலைவர்களும் ஒன்றாகூடி அவர்களைக் கடலில் தூக்கிப் போட்டுவிட வேண்டிய விஷயத்தைப்பற்றி அவர்கள் சமீபத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில், நினைவற்றுக் கிடந்த கேசவனுக்கு ஏதோ தெய்வ சங்கல்பத்தால் சிறிது உணர்ச்சி யுண்டாயிற்று. அங்ஙனம் தெளிவடையவே, அவர்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளில் சில, அவன் செவிகளில் வீழ்ந்தன. அவற்ருன், அவர்கள், தன்னையும், தன் மகனையும் கடலில் தூக்கி எறிந்துவிடப் போகிருர்களென்பதை உணர்ந்துக் கொண்டான். அவன் மனதில் பெருந் திகிலுண்டாகி விட்டது. அதனுல், அவன், "ஐயோ! கடவுளே! நாங்கள் எத்தனையோ ஆபத்துகளில் சிக்கி மீண்டு வந்தும் முடிவில் சமுத்திரத்திற்கு இரையாகப் போகின்ருேமே; நம்முடைய அருமைக் குமாரத்தியின் முகத்தில் விழித்து நாம் நன்மார்க்கத்தில் திரும்பிவிட்டதைத் தெரிவித்துவிட்டு அந்தப் பெண்ணின் மனத்திற்குத் திருப்தியுண்டானபின் மடிந்தாலும், நம் உயிரானது வாதனையின்றியாவது நீங்குமே;

அதற்குள் இந்த தீவினை நேர்ந்துவிட்டதே," என்று மனங்கலங்கி, டாக்டர் முதலியவர்களை நோக்கிப் பரிதாபமான முகத்தோடு, "ஐயா! எங்களுக்கு இப்போது நினைவு வந்திருக்கிறது; ஆதலால், நீங்கள், எங்களை உயிருடனே தூக்கித் தண்ணீரில் போட்டுவிட வேண்டாம்; நாங்கள் இறந்துவிட்டால் தாராளமாகத் தூக்கிப்போடுங்கள்; நாங்கள் இறந்துப்போகக் கூடியவர்களாயிருந்தாலும் எங்கள் சுற்றத்தார்களைப் பார்த்துவிட வேண்டுமென்னும் ஆவலுடையவர்களா யிருக்கின்றோம். ஆதலால், நாங்கள் சாகாமலிருந்தால் எங்களைக் கொண்டுபோய் பல்லவ நாட்டின் துறைமுகப் பட்டினமாகிய சுகுமாரபுரத்தின் தருமவைத்தியசாலையில் சேர்த்துவிடுங்கள்; உங்களுக்கு மெத்த புண்ணியமுண்டு," என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அவன் பரிதாபமான நிலையிலிருந்து தாழ்ந்த குரலுடன் அவ்வாறு மொழிந்ததைக் கேட்டவுடனே அவர்களுக்கு இரக்க முண்டாயிற்று. அதனால், அவர்கள் அப்படியே செய்யலாமென்று தீர்மானித்து கேசவனிடம் அவன் விருப்பப்படியே செய்வதாகச் சொல்லிச் சென்றார்கள். அதனால் அவனுக்கு இன்னும் கொஞ்சம் தைரியமும், தெளிவும் ஏற்பட்டன. அச்சமயத்தில் சுப்பனுக்கும் சிறிது தெளிவு உண்டாயிற்று. ஆனால், டாக்டர் முதலியவர்கள், அவர்களைச் சமுத்திரத்தில் தூக்கி யெறிய யோசித்ததை கேசவன் அவனிடம் சொல்லவில்லை. சொன்னால் அவன் பீதியால் இறந்துவிடக் கூடுமென்று நினைத்தே அப்பயங்கரமான செய்தியைத் தெரிவிக்காமலிருந்தான். அப்படி இருவர்க்கும் உணர்ச்சி யுண்டானவுடனே கண் கலங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே ஒன்றும் பேசாமல் மௌனமாய்ப் படுத்திருந்தார்கள்.

மறுநாள் கப்பல் சுகுமார புரத்தின் துறைமுகத்தை யடைந்தது. கேசவனும், சுப்பனும் அந்நகரத்தின் தரும வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்கள். அங்கே சேர்ந்து இரண்டு மூன்று தினங்களுக்குள், காற்று மாறுதலால் அவர்களுக்கு வியாதி கொஞ்சம் நீங்கினது போலிருந்தது. அவர்கள் கொஞ்சம் எழுந்து சாய்ந்து கொள்ளவும் உட்காரவும் சக்தியுடையவர்களாயிருந்தார்கள்.

46-வது அத்தியாயம்

இவர்களை இப்படியே வைத்தியசாலையில் விட்டு, இந்திரபுரியிலிருந்த, சீலாள் என்னும் இராஜாமணி, பூபாலம்பிள்ளை முதலியவர்களுடைய விஷயங்களைப் பற்றிக் கவனிப்போம்; கேசவனும், சுப்பனும் சிறைக்கூடத்தைவிட்டு வெளியேறியபின், அன்றிரவு பூபாலம்பிள்ளையிடம் பணம் வாங்கிக்கொண்டு போனவுடனே, அவரும் இராஜாமணியும், "இனி அவர்கள் அன்னிய நாட்டிற்போய் ஏதேனும் மரியாதையான ஒரு தொழிலைச் செய்து ஜீவித்துக் கொண்டிருப்பார்கள்; இங்கே வந்து நமக்கு அவமரியாதையை உண்டாக்க மாட்டார்கள் என்று திருப்தி யடைந்திருந்தார்கள். எனினும் இராஜாமணி மாத்திரம், "இனி எப்பொழுது நம் தந்தையையும், தமையனையும் பார்க்கப் போகின்றோம்," என்று மனக்கவலையுடையவளாயிருந்தாள். உலகத்தில் ஒருவருடைய தாய் தந்தையர், சகோதரர்கள் எத்தகைய தீய குணங்களை உடையவர்களாயிருந்தாலும் அவருக்கு, அவர்கள் மீது பக்ஷமிருப்பது இயற்கையல்லவா?

அப்படியிருக்கும்போது, கேசவனும், சுப்பனும், சிறையை விட்டுத் தப்பியோடிய மறுநாளே, அவ்விஷயம் பத்திரிகைகளில் எங்கும் பிரசுரிக்கப்பட்டது. அந்தப்

பிரசுரங்களைப் பார்த்தவுடன் அந்நகரத்தில் இதர பட்டணங்களிலும் உள்ள ஜனங்கள், அக்கள்ளர்களின் சாமர்த்திய செயல்களைப் பற்றி வியப்புடன் பேசிக்கொண்டார்கள். துப்பறிபவர்கள் வெகு நுட்பமாகத் தேடினார்கள். தஞ்சாவூர் ஹோட்டல்காரனாகிய இரங்காராவ் தான், அவர்கள் தப்பியோடுவதற்கு அனுகூலமாயிருந்தவனென்றும், அவன் மூலமாகவே, அவர்கள் சிறைக் கூடத்தைவிட்டு வெளியேறுவதற்கனுகூலமான சில கருவிகள் அவர்களுக்கு அனுப்பப்பட்டன என்றும் துப்பறிபவர்கள், தக்க ஆதாரங்களோடு கண்டுபிடித்தபடியால் அவன் கைதியாக்கப் பட்டான். சிறைக்கூடத்தில் பெருக்கும் வேலையிலமர்ந்து இரங்காராவுக்கும், கேசவன் முதலியவர்களுக்கும் உளவாயிருந்த அந்தப் பெண்ணுக்கும் சிறையாக்கப்பட்டாள். முன்னே கப்பல் பாறையில் தட்டிச் சேதமடைந்த தருணத்தில் கேசவனும், சுப்பனும் சில திருடர்களோடு படகிலேறிக் கடலிற் சென்றதற்கு முந்தியே கப்பித்தான் முதலிய உத்தியோகஸ்தர்களும், வேறு சில பிரயாணிகளும் அவ்வாறே படகிலேறித் தப்பித்துக் கொண்டு போனார்களென்றும், அவர்கள் மடிந்தே யிருப்பார்களென்று கேசவன் முதலியோர் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும் உரைத்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்தக் கப்பித்தான் முலியவர்கள், மிக்க உத்தமர்களாதலின், அந்தக் கடல் கொந்தளிப்பிலும் அபாயமின்றி மறுநாள் ஆப்பிரிக்கா தேசத்தின் கரையை அடைந்து அங்குள்ள மேல் உத்தியோகஸ்தர்களிடம் நடந்த விஷயங்களைத் தெரிவித்தார்கள். உடனே அவர்கள், அந்தக் கப்பித்தானோடு வேறொரு கப்பலை அனுப்பி, பாறையில் மோதிய கப்பலிருக்குமிடத்தை கண்டுபிடிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்தது; அந்தக்

கப்பலிலிருந்த பொருள்களை யெடுத்துச் செல்லவும், முக்கியமாக கேசவன் முதலிய திருடர்களை பிடித்துக் கொண்டு போகவுமே. அந்தக் கப்பித்தான் சில மனிதர்களின் உதவியோடு அக்கப்பலை நடத்திக்கொண்டு போய்ச் சேதமடைந்த கப்பலைத் தேடி அரும்பிரயாசையால் கண்டு பிடித்துவிட்டான். அது அடிப்பாகம் உடைந்துவிட்டபடியால் பலவிதமாகச் சிதைந்து கிடந்தது. கேசவன் முதலியவர்கள் அங்கே காணப்படவில்லை. சில பொருள்களும் இல்லை. அதனால் அவன், "கேசவன் முதலியவர்களையும், மற்றப் பொருள்களையும் கடலே விழுங்கிவிட்டிரு மென்று முடிவு செய்துகொண்டு, அகப்பட்ட பொருள்களை மாத்திரம் தான் கொண்டுவந்த கப்பலி லேற்றிக் கொண்டுபோய் ஆப்பிரிக்காவை அடைந்து மேலதிகாரிகளிடம் ஒப்பித்துவிட்டு அங்கே சில தினங்களிலிருந்து மற்றொரு கப்பலை நடத்திக்கொண்டு இந்திரபுரித் துறைமுகம் போய்ச்சேர்ந்து கப்பல் சம்பந்தமான தன்னுடைய வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு மேலதிகாரிகளிடம் சென்று, தான் ஆப்பிரிக்கா தேசத்துக்கு நடத்திச்சென்ற கப்பலில் ஒரு குருவும், சிஷ்யனும், வீரப்பன் என்பவனால் மரியாதையுடன் கொண்டுவந்து ஏற்றப்பட்டதையும், கப்பல் நடுக்கடலிற் செல்லும்போது அவர்கள் திருடர்களாய்க் கைதிகளாக அக்கப்பலில் அடைக்கப்பட்டிருந்த வேறு சில திருடர்களையும் சேர்த்துக்கொண்டு தந்திரமாகத் தன்னையும், மற்றவர்களையும் கட்டி போட்டு விட்டுக் கப்பலிலுள்ள பொருள்களைக் கைப்பற்ற முயன்றதையும், அத்தருணத்தில் கப்பல் அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டதையும், தாங்கள் தெய்வச்செயலாய்த் தவறிவந்ததையும், அத்திருடர் கூட்டத்தார் கப்பலிலேயே தைரியமாயிருந்ததையும், மறுபடி வேறுகப்பலோடு தேடிச்சென்றபோது

அக்கப்பல் சிதைவுண்டு, அதிலிருந்த கள்ளர்களும் காணுமற் போயிருந்ததையும் கூறி, "அந்தக் குருவும், வேலைக்காரனுமாக வந்திருந்தவர்கள், இங்கே சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய பாங்கிக் கொள்ளைக்காரர்களாகிய கேசவனும் சுப்பனுமே; அவர்கள் தானென்பதை, நான் முதலிற் கண்டுகொள்ளா விடினும், பிறகு அவர்கள், கப்பலில் திருடர் தொழிலை நடத்திய சமயத்தில், முன்னரே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த அவர்களுடைய அங்க அடையாளக் குறிப்புக்களால் தெரிந்து கொண்டேன்; அவர்களும், கப்பலில் தீவாந்தர வாசத்திற்காகக் கொண்டுசென்ற மற்ற திருடர்களும் கடலில்மூழ்கி இறந்து விட்டிருப்பார்களென்பது நிச்சயமாகத் தெரிவதால், இனி அவர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. அந்தக் கேசவனையும், சுப்பனையும் மாறுவேட மணியச்செய்து கப்பலிற் கொண்டு வந்தேற்றியவன் வீரப்பனாதலால், அவனும் அவன் மகன் ஏழுமலையுமே, அவர்கள் சிறைச்சாலையை விட்டு வெளியேறுவதற்கு அனுகூலமா யிருந்திருப்பார்கள்," என்று தக்க ஆதாரங்களோடு மொழிந்தான். அவனோடு கப்பலிலிருந்த பிரயாணிகளிற் சிலரும், கப்பல் வேலைக்காரரிற் சிலரும் அங்கே வந்திருந்தபடியால் அவர்களும், கப்பலில் நடந்த செய்திகளை எல்லாம் தெரிவித்தார்கள்.

இவ்விவரங்கள் தெரிந்தவுடனே வீரப்பனும், ஏழுமலையும் முன்னரே அவர்கள்மீது சந்தேகங்கொண்டு அவர்கள் விஷயங்களைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்த துப்பறியும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவர்களைச் சிறை செய்து விட்டார்கள். பின்னர் ஒரு தினத்தில் நியாயாதிபதியால் அவர்களுடைய குற்றங்களும், இரங்கராவ் மற்றொரு பெண் இவர்களுடைய குற்றங்களும் விசாரிக்கப்

பட்டதில், இவர்களெல்லோரும் பல பெரிய களவுகளில் சம்பந்தப்பட் டிருந்ததோடு திருடருக்கும் உடந்தையா இருந்தார்களென்பது வெளியானபடியால் அவரவர் குற் றங்களுக்குத் தக்க சிறைவாச தண்டனை அடைந்தார்கள். கேசவனும், சுப்பனும், ஈட்டிக்கந்தன் முதலிய மற்ற திரு டர்களும் இறந்தே போனார்களென்பது உறுதிப்பட்டு விட்டபடியால், துப்பறிபவர்கள் அவர்களைத் தேடும் வேலையை விட்டுவிட்டார்கள். கடலில் ஒரு சமயம் அவர் கள் உயிர்தப்பிப் பிழைத்து எங்கேனும் போய்ச் சேர்ந் திருந்தாலும் இருக்கலாமே என்று சந்தேகப்பட்ட சில துப் பறிபவர்களுங்கூட, "அவர்கள் பிழைத்தார்களென்பதை நிச்சயமாகக் கொள்ளமுடியாது; ஆதலின், எங்கேனும் அவர்கள் வெளியானல் அப்போது பார்த்துக் கொள்ள லாம்;" என்று பேசாம லிருந்துவிட்டார்கள். அதற்குத் தக்கபடியே அவர்களின் பிற்காலச் செய்தி ஒன்றும் வெளி வரவே இல்லை. இந்த விவரங்களெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரமாகி இருந்தன.

இராஜாமணியும் பூபாலப் பிள்ளையும் தினந்தோறும் பத்திரிகை படிப்பவர்களாதலாலும், கேசவன், சுப்பன் ஆகியவர்களின் செய்திகள் வெளிப்படுகின்றனவா வென்று கவனிப்பவர்களாதலாலும், பத்திரிகைகளிலிருந்து இவ்விஷயங்களைத் தெரிந்து கொண்டதும், "ஐயோ! நாம், அவர்கள் நம்மிடம் அதிகப்பணம் வாங்கிக்கொண்டுசென்ற தால் இனிமேல் எங்கேனும் ஒருநீல் சென்று மரியாதை யான தொழில் செய்து ஜீவிப்பார்களென்று திருப்தி அடைந்திருந்தோமே; அவர்கள், தங்கள் பிறவிக்குணத்தை விட்டிருந்ததாகத் தெரியவில்லையே. மீண்டும் கப்பலில் கொள்ளையடிக்கத் துணிந்திருக்கின்றார்கள்; மனிதர்களால் அவர்களைத் தண்டிக்க முடியாவிடினும் கடவுள் தண்டித்து

விட்டார். அவர்கள் அடியோடு கடலில் ஒழிந்துவிட்டதாகப் பத்திரிகை சமாசாரங்கள் எட்டுகின்றன. உலகத்தில் எவரையும் மதியாமல் செருக்குற்று அக்கிரமமான செய்கைகளையே செய்துகொண்டு திரிகின்றவர்களுக்கு முடிவில் நேர்வது இக்கதிதான். இதனை உணராமலே சில மூடர்கள் பலருக்குத் தீங்கியற்றித் திரிகின்றனர்," என்று வருந்தினார்கள்.

இராஜாமணி பூபாலப் பிள்ளையை நோக்கி, "என் அருமைக் காதலரே! இப்பத்திரிகைகள் உமக்குத் திருப்தியான சமாசாரத்தைத் தெரிவித்திருக்கின்றன; ஏனெனில் உமது குடும்ப கௌரவத்திற்கு இழிவை உண்டாக்குதற்கேதுவாயிருந்த என் தந்தையும் தமையனும் ஒழிந்தது உமக்குத் திருப்தியைத் தரக்கூடிய தல்லவா? இனிமேல் தான் உம்முடைய வாழ்க்கை, கவலையற்றதாக நடைபெறும்; உமக்கு மனச்சாந்தியை உண்டாக்கத்தக்க விஷயம் நிகழ்வது எனக்கும் சந்தோஷமே; என்றாலும், அவர்கள் அயோக்கியர்களாய் இருந்தாலும், பெற்ற தந்தையை, உடன்பிறந்த தமையனை இழப்பதென்றால் யாருக்குத்தான் மனம் சகிக்கும்! இனி எக்காலத்தில் அவர்களை நான் பார்க்கப் போகிறேன்; ஐயோ! கடவுளே! இத்தகைய இழிவான குடும்பத்தில் நான் ஏன் பிறந்தேன்? எனக்கந்த மரணம் வரக்கூடாதா?" என்று முகத்தில் துணியை வைத்துக்கொண்டு தேம்பி அழுதாள்.

பூபாலப் பிள்ளைக்கு, கேசவனும், சுப்பனும் இறந்துவிட்டதாகச் சமாசாரம் எட்டியதைப் பற்றி வருத்தமில்லை. இராஜாமணி கண்கலங்குவதற்கே மனங்கலங்கினார். இராஜாமணியின் கரத்தைப் பற்றிக்கொண்டு கண்ணீரைத் துடைத்துவிட்டு அன்புடன் அவள் வதனத்தை நோக்கி,

"என் உண்மைக் காதலியே! நீ இவ்வாறு கண்கலங்குவதால் என் மனத்தைப் புண்படுத்துகின்றாய்; 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல எத்தகையினர்க்கும் தங்கள் சுற்றத்தார்மீது அன்பு அதிகரித்திருப்பது உலக இயற்கை. ஆதலின், உனக்கும் தந்தை தமையன்மீது பக்ஷமிருக்கும். எனக்கும் அவர்களைப்பற்றி இரக்கமில்லாமலில்லை. உன்பொருட்டாகவேனும் பக்ஷம் வைத்துத்தானிருக்கிறேன். நமக்கு அன்பு இருப்பதற்குத் தகுந்தபடி அவர்கள் யோக்கியதை உடையவர்களாயிருந்து நமக்குக் கௌரவத்தை உண்டாக்கி இருப்பார்களானால் எவ்வளவோ பெருமையா இருக்கும். அவ்வாறின்றி அவர்கள் இழிவையே உண்டாக்கக் கூடியவர்களாய் இருந்தார்கள். அதுபற்றி அவர்கள் ஒழிந்து போகமாட்டார்களா என்றும் நான் ஒரு சமயம் நினைத்ததுண்டு; நீயும் அவ்வாறே நினைத்திருப்பாய்; என்றாலும், இப்போது அவர்கள் ஒழிந்து போனார்களென்பது தெரிந்தவுடனே அவர்களைப்பற்றி மனம் வருந்துகின்றது; எனக்கே அப்படியிருந்தால் அவர்களுடைய சுற்றத்தாளாகிய உனக்கு எவ்வித கவலையிருக்கும்! ஆயினும் நம்மாலாவதொன்றுமில்லை. தெய்வச் செயலால் நேர்ந்ததற்கு வருந்துவதிற் பயனில்லை. உலகத்தில் பிறப்பவர்களெல்லோரும் இறப்பவர்களே; நமக்கும் அதே கதிதான். ஆதலின், நீ வருத்தத்தை விடு; உன்னுடைய விசனகரமான முகத்தைப் பார்த்திருக்க என்னால் முடியவில்லை; இனி அவர்களுடைய ஞாபகத்தை மறந்துவிடு;" என்று தேறுதல் கூறினார். அந்த இனிய வார்த்தைகள் அவளுடைய விசனத்தை மாற்றிவிட்டன. உடனே அவள், "நம் உண்மைக் காதலர்க்கு மனவேதனை யுண்டாகும்படியான காரியத்தை நாம் செய்யலாகாது," என்று விசனம் நீங்கி யிருந்தாள்.

அத் தருணத்தில் துப்பறியும் நிபுணர்களாகிய ஆனந்த சிங்கும், ஜெயசிங்கும் பூபாலப்பிள்ளை வீட்டிற்கு வந்தார்கள். இராஜாமணியும் பூபாலப்பிள்ளையும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். அவர்களை நோக்கி,

ஆனந்தசிங்கு:—நாங்கள், உங்கள் கௌரவத்தை அவர்கள் கெடுத்து விடாமலிருப்பதற்கான சில வாக்குறுதிகளை அவர்களிடம் பெற்றுக்கொண்டு அவர்களைச் சிறைச்சாலையில் சேர்த்தோம்; அப்படிச் செய்தும் அவர்கள் தப்பித்துக்கொண்டு போய் விட்டார்கள்; அதனால் உங்களுக்கு கௌரவக் குறைவையுண்டாக்கி விடுவார்களென்றே நாங்கள் நினைத்தோம்; ஆனால் அவர்கள், தெய்வச் செயலால் சமுத்திரத்தில் இறந்தொழிந்தார்கள்; அவர்களுக்குத் துணையாயிருந்தவர்களும் தண்டிக்கப்பட்டு ஒடுங்கினார்கள். இனி உங்கள் குடும்பத்திற்கு எவ்வளவும் இழிவு வராதென்று நாங்கள் நினைக்கிறோம்.

பூபாலப்பிள்ளை:—இனி எங்களுக்கு எவ்வித இழிவும் ஏற்படமாட்டாது. ஆனால் அவர்கள் சுற்றத்தார்களென்ற பாசத்தால், அவர்களுடைய பிரிவு குறித்து மிக்க மனக் கவலையுண்டாகின்றது; இராஜாமணிக்கு அவர்கள் தந்தையும் தமையனுமாதலின் அவள் என்னைக் காட்டிலும் பதின்மடங்கதிகமாக வருந்துகிறாள்.

ஆனந்தசிங்கு:—அவர்கள் உமது மனைவியின் சுற்றத்தார்களென்று நினைத்தே நாங்களும் அவர்களுடைய கொலைக் குற்றத்தை வெளிக்குக் கொண்டு வராமல், அவர்களால் உங்களுக்குக் கௌரவக் குறைவு நேராதிருக்கும்படி அவர்களிடம் வாக்குறுதி பெற்று, அவர்களின் மற்ற குற்றங்களை மட்டும்வெளிப்படுத்தி அவர்களைக் கைதியாக்கிச் சிறைப்படுத்தினோம். அம்

மட்டில் உங்களுக்குத் தொந்தரவில்லாமலிருக்குமென்று நினைத்தோம்; ஆனால் மீண்டும் அவர்கள் சிறைச்சாலையை விட்டுத் தப்பித்துக்கொண்டு போகவே அப்பேர்ப்பட்டவர்கள் இனி எப்பொழுதும் அவமரியாதையையே மேலும்மேலும் உண்டாக்கிக்கொண்டிருப்பார்களென்று கவலை கொண்டோம். முடிவில் அவர்கள் கடலில் ஒழிந்தார்கள் என்றதைக் கேட்டதே எல்லாக் கவலையும் ஒழிந்ததென்று மகிழ்ந்தோம். சுற்றத்தார்கள் என்ற வகையில் எவருக்கும் கவலையுண்டாவது இயற்கைதான். ஆயினும், எவர்களாயிருந்தாலும் துஷ்டர்கள் ஒழியும் விஷயத்தில் சந்தோஷமடைவதுதான் புத்திசாலிக்கழகு.

இராஜாமணி:—நான், தந்தை தமையன் என்ற விஷயத்தில் கவலைகொண்டாலும் மற்றொருவகையில் தங்கள் அபிப்பிராயப்படி திருப்தியே அடைந்தேன்.

இவ்வாறு சொல்லிய பின்பு ஆனந்தசிங்கும், ஜெயசிங்கும் சந்தோஷமுற்று, பூபாலம்பிள்ளையையும் இராஜாமணியையும் நோக்கி "இனி உங்களுடைய வாழ்க்கை கவலையற்றதாய் நடைபெறும்; உங்களுக்கு கடவுள் துணை செய்வார்," என்று சொல்லி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

இராஜாமணி, சில தினங்கள் வரை, தன் தந்தை தமையன் மரணத்தைப்பற்றிச் சிறிது கவலை கொண்டிருந்து பின்னர் அவர்களுடைய ஞாபகத்தை மறந்துவிட்டாள். அவர்கள் சுகுமாரபுரத்தின் வைத்தியச்சாலையில் உயிருடன் இருப்பது அவளுக்குத் தெரியாது. இப்படி இருக்கும்போது ஒருநாள், இராஜாமணி, தன் வாசகசாலையிலிருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். அத்தருணத்தில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு

வந்து இராஜாமணியிடம் கொடுத்தான். அதை, அவள் பிரித்துப் பார்த்ததும், ஆ! என்று ஓர் அதிசயக் கூச்சல் போட்டுக்கொண்டு விரைந்தோடி பக்கத்தறையிலிருந்த பூபாலப்பிள்ளையிடம் கொடுத்தாள். அவர் அதைப் பார்த்ததும், "ஆ! ஆ! இஃதென்ன இது? உன் தந்தை! உன் தமையன்! இதை எப்படி நம்புவது? இறந்தவர்கள் பிழைத்ததெப்படி? யாரோ பரிகாசக்காரர்கள் வேடிக்கை செய்திருக்கிறார்கள்; மூட்டாள்கள்," என்றார்.

இராஜாமணி:—ஐயோ! என் காதலரே! இதில் சந்தேகமில்லை; இஃதென்ன தந்தை கையெழுத்தே; எனக்கு நன்றாகத் தெரியும். அவரே இக்கடிதத்தை எழுதினவர்.

பூபாலப்பிள்ளை:—உன் தந்தைதானா? அப்படியானால் அவர்கள் எப்படிப் பிழைத்து வந்தார்கள்?

இரா:—அது தெய்வச் செயலால்தான் நடந்திருக்க வேண்டும்; கடவுள் நினைத்தால் எதைத்தான் செய்ய மாட்டார்?

இராஜாமணிக்கு வந்த அக்கடிதம் சுகுமாரபுரம் வைத்தியசாலையிலிருந்த கேசவனால் எழுதப்பட்டதே. அவன், தானும், தன் மகனும் மிகுந்த நோய்ப்பட்டிருந்தபடியால், 'இனி நாம் பிழைப்போமோ பிழைக்க மாட்டோமோ' என்று சந்தேகங்கொண்டு தன் மகளையும் மருமகனையும் பார்க்கவேண்டுமென்னும் ஆவலால் அவர்கட்கு உடனே புறப்பட்டு வரும்படிக் கடிதம் எழுதினான். அக்கடிதத்தில் "என் அருமை குமாரத்திக்கு, நாங்கள் கப்பலேறிச் சென்று எண்ணிறந்த ஆபத்துகளில் சிக்கி மீண்டும் பிழைத்து வந்து சுகுமாரபுரியின் வைத்தியசாலையில் மிகுந்த சீக்கா யிருக்கின்றோம்; இனி சன்மார்க்கத்திலேயே இருக்கவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டோம்.

என்றாலும் இனி நாங்கள் பிழைப்போமென்பதில் நம்பிக்கையில்லை. ஆதலால், நீயும், உன் கணவனும் உடனே வந்து எங்களைப் பார்த்துச் செல்ல வேண்டும்; இங்ஙனம் கேசவன்," என்று எழுதப்பட்டிருந்தது. அதனால்தான் இராஜாமணியும், பூபாலப்பிள்ளையும் அவ்வாறு பேசிக் கொண்டார்கள்.

அதன்மேல் பூபாலம்பிள்ளை, இராஜாமணியை நோக்கி "அப்படியானால் நாம் சுகுமாரபுரிக்குப் போகத்தான் வேண்டுமோ?

இராஜாமணி:—ஆம், போய்ப் பார்த்துவரத்தான் வேண்டும்; அவர்கள் ஒரு சமயம் இறந்துபோய் விட்டால் பின்னர் அவர்களைப் பார்க்கவாபோகிறோம்.

பூபா:—இச்சமயத்தில் போய்ப் பார்க்கவேண்டியது அவசியந்தான். ஒரு காரியத்திற்காகத்தான் நான் யோசிக்கின்றேன்.

இரா:—என்ன காரியத்திற்கு யோசிக்கின்றீர்கள்.

பூபா:—ஒரு சமயம் நாம் அவர்களுக்குச் சொந்தக்காரர்களென்பது வெளியாகி விடுமோ என்பதற்காகத்தான் நான் பயப்படுகிறேன்.

இரா:—அது அன்னிய நாடாயிருப்பதால் அவர்களையும் இன்னவர்களென்று எவரும் அறிய மாட்டார்கள்; நம்மையும் ஒருவரும் உணர்ந்துகொள்ள மாட்டார்கள்; ஆதலால் நாம் போய் விரைவில் அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடலாம்.

இதைக்கேட்டதும் பூபாலம்பிள்ளை சம்மதித்தார். பின்னர் இருவரும் சுகுமாரபுரத்திற்குப் பிரயாணமானார்கள். புகை வண்டியில் இரண்டு நாட்கள்வரை பிரயாணஞ் செய்து பல்லவ நாட்டிலுள்ள சுகுமாரபுரத்தை அடைந்தார்கள்.

47-வது அத்தியாயம்

அங்கு போய்ச் சேர்ந்ததும், பூபாலம் பிள்ளையும், இராஜாமணியும் ஓர் ஹோட்டலில் தங்கித் தங்கள் சமான்களை அங்கே வைத்துவிட்டு ஆகாரம் உண்டு ஒரு வண்டி பிடித்துக்கொண்டு வைத்தியசாலைக்குப் போய் உத்தியோகஸ்தர்களின் அநுமதி பெற்று உட்சென்று கேசவனும் சுப்பனும் படுத்திருந்த அறைக்குட் போனார்கள். அங்கே அவ்விருவரின் நிலைமையைப் பார்த்தபோது இராஜாமணி அடக்க முடியாத துக்க முடையவளாய் முகத்தில் துணியை வைத்துத் தேம்பித்தேம்பி அழுது கொண்டு, "அப்பா! அப்பா!!" என்று கேசவன் பக்கத்திற் போய் உட்கார்ந்தாள். பூபாலம் பிள்ளையும் அருகில் அமர்ந்தார். அப்போது கேசவன், பரிதாபமான முகத்துடன் இருவரையும் தழுவிக்கொண்டு "பாவிகளாகிய எங்களைப் பார்க்கவந்தீர்களா! ஐயோ! என் மகன் சுப்பன்—பரலோகஞ் சேர்வதற்கு இப்போதோ பின்னையோ வென்றிருக்கின்றான்; அவனைப் பாருங்கள்," என்று கண்ணீர் விட்டழுதான். உடனே இராஜாமணியும், பூபாலம்பிள்ளையும் அவனருகில் போய் உட்கார்ந்தார்கள். அவனுக்குப் பிரக்ஞையே கிடையாது. வைத்தியசாலையிற் சேர்ந்த இரண்டு தினங்களுக்குள் அவனுடைய வியாதி மீறிவிட்டபடியால் அவன் அந்நிலைமைக்கு வந்துவிட்டான். உடம்பில் இரத்தப் பசையே யில்லை; எலும்பும் தோலுமே யிருந்தன. அந்நிலைமையைப் பார்த்தவுடனே இராஜாமணி மனங்கரைந்து, "அண்ணா! அண்ணா!!" என்று அவன் மார்பின் மேல் கையை வைத்தாள். அவன் பிரக்ஞை யற்றுக் கிடந்தபோதிலும் அத்தருணத்தில் சிறிது தெளிவுண்டானபடியால், இராஜாமணியுடைய வார்த்தைகள், யாரோ கிண

றக்குள் பேசுவதுபோல் அவன் செவிகளில் விழ்ந்தன. அதனால் அவன், தன் தங்கையென்று தெரிந்துகொண்டான். உடனே கண்ணைத் திறந்து பார்த்தான். பேசலாமென்று நினைத்தான்; நாவெழவில்லை. ஆயினும், தனக்குண்டான அதிக ஆவல் மிக்க சிரமத்தோடு மெல்லிய குரலால், "தங்கையே! நான் மிக்க பாதகங்களைச் செய்தேன்; உனக்கு அளவிறந்த மனவேதனையை உண்டாக்கினேன். முடிவில் எனக்கு நல்ல புத்தி வந்தது; இனி நான் பிழைக்கமாட்டேன்; எனக்கு பாவ மன்னிப்பு கிடைக்கும்படி நீயும் உன் கணவரும் கடவுளைப் பிரார்த்திப்பீராக," என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்டான். அப்போது பெரிய டாக்டர் வந்து அவனைப் பார்த்துவிட்டு, இனி இந்த 'ஆளை நம்புவதில் பயனில்லை,' என்று சொல்லிப் போய்விட்டார். இராஜாமணியும் பூபாலம்பிள்ளையும் விசாரத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். கேசவனும் தன்னுடைய படுக்கையில் படுத்திருந்தபடியே அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்குள் சுப்பனுக்கு மேல்மூச்சு வாங்கிற்று; கண்கள் சுழன்றன. அவன் தன் தகப்பனையும், தங்கையையும் பார்த்தபடியே உயிர் விட்டான். இராஜாமணி தேம்பித் தேம்பி அழுதாள். கேசவன், தன் மகன் இறந்து விட்டானென்று தெரிந்தவுடனே ஆவி சோர்ந்து விட்டான். ஆனால் தன் மகனிடம் வருவதற்கு எழுந்திருக்க முயன்றான் அவனால் முடியவில்லை. அதனால் அவன் படுத்திருந்தபடியே, "ஆ கடவுளே! என் மகனையும் பிரித்துவிட்டாயா? இனி எதற்காக நான் பூமியிலிருக்கின்றேன்," என்று கலங்கினான். பூபாலம் பிள்ளை, 'இனி விசனிப்பதில் பயனில்லை,' என்று இராஜாமணிக்கும், கேசவனுக்கும் தேறுதல் கூறினார்.

பின்னர் வைத்தியசாலையின் உத்தியோகஸ்தர்கள் வந்து சுப்பன் சவத்தை எடுத்து அடக்கஞ் செய்யத் தொடங்கினார்கள். இராஜாமணியும், பூபாலம்பிள்ளையும் அவர்களுடன் கூடவிருந்து பிரேதச் சடங்கை நிறைவேற்றினார்கள். அதன்மேல் கேசவனிடத்தில் வந்து, "இனி மகனைப்பற்றிச் சிந்தித்து நீர் வருந்தலாகாது; அத்தகைய கவலையை அடைந்தால் உமக்கும் அபாயம் உண்டாகும்; ஆதலால், நீர் சாந்தமான மனதுடன் இருக்கவேண்டும்," என்று தைரிய வார்த்தைகளை உரைத்தார்கள். அவன், "நாங்கள் உலகத்தில் எண்ணைத் தொலையாத அக்கிரமங்களைப் புரிந்ததால் கடவுள் எங்களை உயிருடனே வைத்துக் கொடுந்தண்டனைக்குள்ளாக்கி விட்டார்; நாங்கள் பட்ட பாடு போதும் போதும்; எங்கள் அனுபவத்தில், அக்கிரமஞ் செய்பவர்கள் ஒருபோதும் தலையெடுக்க மாட்டார்களென்பதை உணர்ந்து கொண்டோம்; எங்களோடு சேர்ந்த கெடுந் தொழிலைப் புரிந்தவர்களெல்லோரும் அடியோடு ஒழிந்தார்கள்; நாங்களும் உயிரோடு அடைந்த ஹிம்சைகளை நினைக்கும்போது என் ஈரற்குலை இப்பொழுது நடுங்குகின்றது," என்று தாங்கள் முன்னே அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு சென்றது முதல் திரும்பி அந்த வைத்தியசாலைக்கு வந்தவரையில் அடைந்த பயங்கரமான ஆபத்துகளை எல்லாம் ஒன்றொழியாமற் சொல்லி, மேலும் "அவ்வாறு துன்பங்களை அடைந்ததால் எங்களுக்கு நல்ல புத்தி வந்தது; அதன்மேல் நாங்கள் இனி ஒழுங்கான நடையில் திரும்பித் தெய்வசிந்தனையோடிருந்து உங்களுக்கும் திருப்தியை உண்டாக்க வேண்டுமென்று உறுதி செய்து கொண்டோம்; அதனாலேயே இந்த நாட்டிற்குத் திரும்பிவந்தோம்; வந்ததும் எங்கள் நோக்கம் நிறைவேறாமல் போய்விட்டது. அதுதான் என்மனத்திற்கு வேதனையைச் செய்கின்றது.

என் அருமை மகனே இறந்து விட்டான்; இனி நானும் பிழைக்கப்போகிற தில்லை," என்று வருந்தினான். இராஜாமணி, "அப்பா! நடந்துபோன விஷயங்களைப்பற்றி இனி வருந்துவதிற் பயனில்லை; நீர் தெய்வ சிந்தனையோடிரும்; உமக்குக் கடவுள் கிருபை செய்வார்," என்று கூறினாள். அவன் அவ்வாறே செய்வதாகச் சொன்னான். பின்பு இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் மறு நாள் வந்து பார்ப்பதாகச் சொல்லி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் ஜாகைக்குப் போய்விட்டார்கள்.

அவர்கள் போனபின்பு கேசவன் தனியே படுத்து இருந்தபடியால் அவன்மனதில் எண்ணத்தொலையாத கவலைகள் கிளம்பி இருதயத்தை எரிக்க ஆரம்பித்தன. அதனால் அவனுடைய நிலைமை மாறுபட ஆரம்பித்தது. கொஞ்சம் சௌக்கியமான நிலையிலிருந்த அவனுக்கு வியாதி அதிகரித்தது. அவன் ஏதோ புலம்பிக்கொண்டு படுக்கையில் அங்குமிங்கும் புரண்டுகொண்டு கிடந்தான். மறுநாள் காலையில். இராஜாமணியும் பூபாலப்பிள்ளையும் அவனைப் பார்க்க வந்தார்கள். அப்போதும் கேசவன் புலம்பிக்கொண்டே கிடந்தான். இராஜாமணி திடுக்கிட்டு சமீபத்தில் போய் உட்கார்ந்து, "அப்பா! அப்பா!!" என்று கூப்பிட்டாள். அவன் மறுமொழி கூறவுமில்லை. அவளைப் பார்க்கவுமில்லை; அவனுக்கு ஜன்னி அதிகரித்திருந்தபடியால் உலக ஞாபகமே யில்லை. அவன் புலப்பத்திலேயே யிருந்தான். இவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குள் அப்புலப்பம் நின்றுவிட்டது. நின்ற ஐந்து நிமிஷத்தில் அவன் ஆவியொடுங்கி விட்டது. இராஜாமணி அதிகமாக விசனித்து அழத்தொடங்கினாள். அப்போது பூபாலம்பிள்ளை அவளை நோக்கி, "காதலி! நம்முடைய கௌரவம் நிலைப்பதற்காக

இவர்கள் நம்முடைய பந்துக்கள் என்பது வெளிவராமல் நாம் கூடியவரை ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்பது உனக்குத் தெரியும்; ஆதலால் இப்போழுது நீ அதிகமாக வருத்தத்தைக் காட்டிக்கொள்ளக் கூடாது," என்றுர் தன்னுடைய நாயகனது கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டி அவள் உடனே விசனத்தை அடக்கிக் கொண்டாள். அதன் மேல் அவன் சவம் எடுத்து அடக்கம் செய்யப்பட்டது.

இராஜாமணியும், பூபாலம் பிள்ளையும் மறுநாளே புறப்பட்டு இந்திரபுரி வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சுகுமாரபுரத்துக்குப் புறப்படும்போது ஏதோ ஒரு காரியமாகச் செல்வதாய் இந்திரபுரியில் பிரஸ்தாபித்துச் சென்றபடியால் அவர்கள் இவர்களைப் பார்ப்பதற்குச் சென்றுர்களென்பது அங்குள்ள எவருக்கும் தெரியாது. கேசவனும் சுப்பனும் சுகுமாரபுரத்தில் வந்திறந்தது இந்திரபுரி வாசிகளுக்கு எவருக்குந் தெரியாது. ஆனந்தசிங்கும், ஜெயசிங்கும், கேசவனும் சுப்பனும் முந்தியே கடலில் கப்பல் உடைந்து இறந்து விட்டார்களென்று கருதியிருப்பதால் அப்படியே அவ்விஷயம் உறுதிப்பட்டு விடட்டுமென்று அவர்களிடத்திலும் இந்த இரகசியத்தை பூபாலம் பிள்ளையும், இராஜாமணியும் வெளியிடவில்லை. ஆனல், தங்களுக்கு மிக்க உதவியாயிருப்பவளாகிய தங்கம்மாளுக்கு மாத்திரம் தெரிவித்தார்கள். அவள் "இனியேல்தான் இவர்கள் துன்ப மற்று வாழ்வார்கள்," என்று சந்தோஷமடைந்தாள். கேசவனும் சுப்பனும் ஒழிந்தது நல்லதாயிருந்தும் இராஜாமணி இரத்தக்கலப்புடையவளாதலின் அவர்கள் சாவை நினைத்துக் கவலையடைந்துக் கொண்டே வந்தாள். அவளுடைய உள்ளக் கருத்தை யுணர்ந்த பூபாலம்பிள்ளை ஒரு நாள் அவள் முகத்தை

நோக்கி, "என் பிரிய நாயகியே! நீ, தந்தை, தமையன் என்ற உரிமை குறித்து விசனத்தை அடைந்தாலும் எனக்கது மிக்க மனவேதனையை உண்டாக்குகின்றது. நாம் அவர்களுக்காக வருந்த வேண்டியவர்களே; எனினும் அவர்கள் தூர்செய்கைகளை யுடையவர்களாய் இருந்தபடியால் அவர்களை முன்னிட்டு நம்முடைய வாழ்க்கை நிம்மதியற்றதாய் இருந்தது. அவர்கள் நல்வழிக்குத் திரும்பினுல் அல்லது ஒழிந்தால் மாத்திரமே நம்முடையக் கவலை நீங்கக் கூடியதாயிருந்தது; அதற்கனுகூலமாகவே நல்ல காலத்தால் அவர்களுக்கு கடைசியில் நற்குணம் ஏற்பட்டு நீதி மார்க்கத்தில் நடப்பதாக உறுதிபூண்டு இங்கே வந்திருக்கிருர்கள். அந்நிலைமையுடனே அவர்கள் பிழைத்திருந்தாலும் பிற்பட்ட காலத்தில் நமக்கு மனத் திருப்தி உண்டாகியிருக்கும். அங்ஙனமின்றி அவர்கள் அடியோடு அழிந்தே போனுர்கள். அது தெய்வச் செயலால் நடந்தது. அதுவும் நடக்கு அனுகூலமாகவே நடக்கிறது. ஆதலின், இனி நாம் கவலையொழிந்து வாழப் பிரயத்தனப்படவேண்டும். நமக்கு மணம் முடிந்த நாளிலிருந்து இதுகாறும் நாம் மனக் கவலைக்குள்ளேயே மூழ்கிவந்திருக்கின்ரேம்; இனிமேலாவது சொற்பக் காலமாவது சந்தோஷமாகக் காலங்கழிக்க வேண்டாமா? நீ என்னை உத்தேசித்தாவது விசனத்தை விட்டுவிட வேண்டும்; என்னுடைய கௌரவத்தையும், சௌகரியத்தையும் கருதி நீ முந்தியே பல துன்பங்களை யெல்லாம் அனுபவித்திருக்கின்ருய் யாதலின் உனக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை," என்ருன். தங்கம்மாளும் அவ்வாறே கூறினுள்.

இவர்களுடைய வார்த்தைகளை யெல்லாம் இராஜாமணி யோசித்தாள். எப்படியும் தன் கணவனுக்கு மனத் திருப்தியை உண்டாக்குவதே நலமென்று அவள் புத்தியிற்

பட்டது. அந்த நிமிஷத்திலேயே அவள் தன் மனத்தில் தோன்றியிருந்த விசனங்களை யெல்லாம் ஒழித்து விட்டாள். உடனே பூபாலம் பிள்ளையை நோக்கி, "என் நாதரே! தங்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கத்தக்க எதையும் நான் இனிச் செய்யமாட்டேன்; என் விசனத்தை யெல்லாம் இப்பொழுதே ஒழித்து விட்டேன்; கடவுள் செய்த தெல்லாம் நன்மைக்காகவே, 'வினை நட்டான் வினை யறுப்பான், தினை நட்டான் தினை யறுப்பான்' என்றபடி அவர்கள் செய்த தீவினைப் பயனை அவர்கள் அனுபவித்தார்கள்; அதற்காக நாம் விசனிப்பது மதியீனம் தான்," என்று முக மலர்ச்சியுடன் பேசினாள். சில தினங்களில் அவர்களுடைய ஞாபகத்தையே அவள் மறந்து விட்டாள்.

அதன்மேல் இராஜாமணியும், பூபாலப் பிள்ளையும் மலரும் மணமும் போலவும், பாலும் நீரும் போலவும் மனமொருமித்து மகிழ்ச்சி யதிகரித்து இவ் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையானது ஆனந்தமாகவே நடைபெற்றது. செல்வம் ஓங்கி வளர்ந்தது. அவர்கள் நற்சந்ததிகளைப் பெற்று நாடோறும் இன்புற்று வாழ்ந்து வந்தார்கள். இராஜாமணி பல மேற்பட்ட குணங்களோடு விளங்கி வந்தமையால் அந் நகரத்திலுள்ள எல்லோரும் அவளைப் பலவாறு கொண்டாடினார்கள். அவள், இந்திராணிபோல மிக்க கௌரவ முடையவளாய் விளங்கி வந்தாள். இவ்விருவருக்கும் கடவுள் அனுக்கிரகம் பூரணமாக உண்டாகி யிருந்தது.

நண்பர்களே! இந் நாவலால் முக்கியமாக நாம் தெரிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள் உண்டு. மிக்க உத்தம குணம் பொருந்திய இராஜாமணி, கெட்ட கூட்டத்தார்களுடைய குடும்பத்தில் பிறந்ததால் தன்னு

டைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், தன் தந்தை, தமையன் முதலியவர்களை நல்வழிக்குக் கொண்டு வரவும் எண்ணிறந்த துன்பங்களை யடைந்தாள். தான் பெரிய கௌரவஸ்தனை மணந்து கொண்டும் தன் தந்தையாலும், தமையனாலும் அக் கௌரவத்தை அடைய முடியாமலும், இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவ ளென்று வெளிக்குக் காட்டிக்கொள்ள முடியாமலும் அவஸ்தைப்பட்டாள். பூபாலப்பிள்ளை தந்தை சொல் தட்டாமல் நடந்ததோடு உத்தமமான மனைவியாகிய இராஜாமணியைக் கண்டு பிடித்து நல்ல நிலைமையில் வைப்பதற்கு எவ்வளவோ பிரயாசப்பட்டார். இராஜாமணி தன்னுடைய கணவனின் கௌரவத்தைக் காப்பாற்றுதற்குத் தன் சௌகரியங்களையெல்லாம் இழக்கத் துணிந்தாள். கேசவன் முதலிய போக்கிரிகள் தங்களுடைய அக்கிரமச் செய்கைகளால் அடியோ டழிந்தார்கள். இராஜர்மணியும் பூபாலப் பிள்ளையும் சத்தியத்தோடு நடந்து வந்தமையால் முதலில் சில கஷ்டங்களை யடைந்தாலும் முடிவில் பெரிய கௌரவத்தையும், ஐசுவரியத்தையும் அடைந்தார்கள், இவற்றைக் கொண்டு முடிவாகக் கெட்ட குடும்பங்களில் பிறக்கும் உத்தமிகளும், உத்தமர்களும் அக் குடும்பத்தார்களால் பலவித கஷ்டங்களை அடைவார்களென்பதும், அங்ஙன மடைந்தாலும் கடவுள் அவர்களை வாழ்வித்துத் தீயவர்களை ஒழித்துவிடுவாரென்பதும் உணரப்படும். சத்தியமே தலைகாக்கும் செவ்விய குணமுடையார்க்குத் தெய்வம் துணைசெய்யும்.

03:206

ஓம் தத்ஸத்

முற்றுப் பெற்றது.

"ஆனந்தபோதினி" பிரஸ், சென்னை:—1948.